

கலையழகு மிகு காஞ்சீபுரம் பட்டுப் புடவைகளுக்கு

ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

○ 121, ராஜவீதி, கோயமுத்தூர்—1 போன்: 25859 ○ 59, கடைவீதி, சேலம்—1 போன்/ 63345

santha

TILTING TYPE WET GRINDERS





சிறப்பு அம்சங்கள்:

கிரைண்டரை சாய்த்து மாவை கை படாமல் எடுக்க வசதி உள்ளது.

குறைந்த நேரத்தில் அரைப்பதால் மின் செலவு குறைவு

அதிக சுகாதாரம், அரவை செய்யப்படும் பகுதியின் உட்பாகங்களை எளிதாக எடுக்கும்படி தயாரிக்கப்பட்டிருப்பதால் நீங்கள் துப்புரவாக கழுவ வசதி உள்ளது.

உட்பாகங்கள் அனைத்தும் துருப்பிடிக்காத (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) எவர்சில்வரினாலானது.

அரவை செய்யும் கீழ்பகுதியும், மேல் பகுதியும் சேர்ந்து சுழல்வதால் தேய்மானம் இல்லை.

குறைந்த எடை, சப்தமில்லாத ஓட்டம்.

உதிரி பாகங்களின் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டவை.

அளவுகள்:

- ¼ லிட்டர் முதல் 1 லிட்டர் வரை
- ½ லிட்டர் முதல் 2 லிட்டர் வரை

சாந்தா

இண்டஸ்ட்ரியல்ஸ்

158, அவிநாசி ரோடு, பீளமேடு,
கோயமுத்தூர் 641 004.
போன்: 32429

**REGD. DESIGN NOS :
152396, 152397 & 152398**

கிளைகள்: 6/4, IIA கிராஸ், JC ரோடு, பெங்களூர்-560002. போன் : 228507.
10, முனிசிபல் மார்க்கெட்டிங் பில்டிங், கோக்கலை, திருச்சூர்-680 001.
போன்: 25429.
மனசில் சஃபியா, 50, ஆர்மீனியன் தெரு, சென்னை-600001.
போன்: 20779.

கலைமகள்

தீபாவளி மலர், 1984

பல வண்ண ஓவியங்கள்

வங்கப் புலியை அடக்கிய வனிதை — வீர காவியம்
பிறவிக்கு ஏங்கும் புதுமை — குந்தி வேண்டிய வரம்
பொன் மாடத்துக் கன்னி — கலம்பகக் காதல்
கிரகங்களின் ஆற்றல் — விஞ்ஞானமும் மெய்ஞ் ஞானமும்

அருளாளர் வரிசை

காளி மாதாவைத் தரிசித்த கவி — வாழ்வும் வாக்கும்

மும்மூர்த்திகளின் திவ்விய தரிசனம்

ஸ்ரீகாஞ்சி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
21850

புகைப்படக் கோவை

யோக நிலையும் திருக்குறளும்

அட்டைப்படம்

கண்ணனைக் களிப்பிக்கும் சத்தியபாமை

சிறப்புச் சிறுகதைகள்	23
சிறந்த கட்டுரைகள்	20
கவிதைகள்	12
நாடகங்கள்	
சிறுவர் பகுதி	
நகைச்சுவைப் பகுதிகள்	

வண்ணப்படங்கள்

ஸ்ரீகாஞ்சி பெரியவர்கள்: — திரு ஆர். நடராஜன்

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
— ஓம் சுப்பிரமணியம்

முகப்புப் படம்

வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியர்
— திரு சிவக்கொழுந்து

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஆறுமுகன் துதி

'ஜோதி'

கூறுநலம் எல்லாமும் தந்து காப்பான்;
குறைகளெலாம் நீக்கிஅருள் செய்வான்; சீர்கொள்
ஆறுமுகம் உடையபிரான் வள்ளி யோடே
அமைந்ததெய்வ குஞ்சரியாம் மகள்தன் னேடே.
தேறுமுகம் அடியவருக் கருளு மாறு
திருவுருவம் காட்டுகின்ருன்; சிந்தை வைப்பாய்.
சீறுமுகப் பகைவரெலாம் தேய்ந்து போவார்.
சேயுயிர்போல் அடியாரைக் காக்கும் அப்பன்.

நல்லார்க்கு நல்லவனுய் அருளை ஈவான்;
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நடுவே நிற்பான்;
எல்லார்க்கும் பொதுவாக நடம்பு ரிந்தான்;
ஈந்தருளும் ஆறுமுகப் பெருமான் பாதம்
சொல்லாக்கப் பாடிஅன்பிற் போற்றி நாடிச்
சுற்றியே வலம்வந்து வணங்கு நெஞ்சே;
அல்லார்க்கும் மாயையினை அகற்றி முத்தி
ஆந்தலத்தை நல்கியருள் தருவான் அன்றே!



தீபாவளி

ஸ்ரீஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ சுவாமிகள்.

ஞான நூல்களில் எப்படிப் பகவத்கீதை எல்லாவற்றையும் விடத் தனிக் கியாதி அடைந்திருக்கிறதோ, அப்படியே தீபாவளி எல்லாப் பண்டிகைகளைக் காட்டிலும் அதிகக் கியாதி அடைந் திருக்கிறது. ஒரு பண்டிகை வடக்கே தெரியும்; தெற்கே தெரி யாது. ஒரு ஜாதிக்காரர் ஒரு பண்டிகை கொண்டாடுவார்கள்; இன்னொரு ஜாதிக்காரர் கொண்டாட மாட்டார்கள். ஓணம் என்று மிகவும் விசேஷமாக மலையாளத்தில் ஒரு பண்டிகை கொண்டாடுகிறார்கள். நமக்கு அது தெரியாது. விஷு என்று அதே மாதிரி இன்னொரு பண்டிகை அங்கே உண்டு. நமக்கு அதுவும் தெரியாது. வடக்கே இருக்கிறவர்கள் ஹோலிப் பண்டிகை என்று கொண்டாடுகிறார்கள். சாயத் தண்ணீரை ஒருத்தர் மேலே ஒருத்தர் வீசிக்கொண்டு கூத்தாடுகிறார்கள். அதைப்பற்றியும் நமக்கு ஒன்றும் தெரியாது. இப்படி ஒவ்வோர் ஊரில் ஒவ்வொரு பண்டிகை முக்கியமாக இருக்கிறது. ஆனால் தீபாவளி ஒன்றுதான் நம் தேசம் முழுவதும் எல்லா ஜாதிக்காரர் களாலும் கொண்டாடப்படுகிறது. பிற தேசத்திலிருந்து வந்த மதங்களைத் தவிர நம் தேசத்திலேயே பிறந்த புத்த ஜைன மதஸ் தர்கள்கூட இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். ராமேசுவரம் முதல் ஹிமாசலம் வரையில் எல்லாரும் கொண் டாடுகிறார்கள். நாம் எல்லாரும் பட்டாசு வெடிக்கிறோம். வடக்கே தீப ஆவளி என்று விளக்குகளை அலங்காரமாக வரிசை யாக வைக்கிறார்கள். அதைப் பார்த்துவிட்டுத்தான் நானும் இருபது முப்பது வருஷமாகத் தீபாவளி அன்று மடத்தில் விளக்கு நிறைய ஏற்றச் சொல்லி வருகிறேன். வடக்கே இருக்கிற வர்களுக்குக் கார்த்திகை மாதம் பௌர்ணமிக்கு மறுநாள் ஆரம் பம் ஆகிவிடுகிறது. எப்படி இருந்தாலும் வடக்கே இருக்கிறவர் கள், தெற்கே இருக்கிறவர்கள் எல்லாருக்கும் தீபாவளி ஒரே நாளில்தான். 'எத்தனையோ பண்டிகைகள் இருக்கின்றன. கர்மாக்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும்விட இந்தத் தீபா வளிக்குக் கியாதி, சிரேயஸ் ஏன் ஏற்பட்டன? தீபாவளிக்குப் பெயர் வந்தது எதனால்?' என்று இதைப் பற்றியும் யோசனை பண்ணிக்கொண்டிருந்தேன்.

அஸ்ஸாம் என்ற தேசத்தில் பிராக்ஜோதிஷம் என்ற நகரத் தில் பௌமன் என்று ஒருத்தன் இருந்தான். அவனுக்குத்தான் நரகாசுரன் என்று பெயர். அவன் ஸ்திரீகள், சாதுக்கள் போன்ற வர்களுக்கு அநேக அக்கிரமங்கள் பண்ணிக்கொண்டிருந்தான். அதிகமான தபஸ் பண்ணினவன்தான் என்றாலும் தாமச வரங் களை வாங்கிக்கொண்டு எல்லாரையும் ஹிம்சை பண்ணிக் கொண்டிருந்தான். அக்கினிக் கோட்டை, வாயுக்கோட்டை என்று பல கோட்டைகளைக் கட்டிக்கொண்டு மகா ஹிம்சை செய்து லோக கண்டகனாக இருந்தான். சுவாமியே அவதாரம் பண்ணி, அவன் எத்தனையோ பந்தோபஸ்துகள் செய்துகொண்டு இருந்தாலும் பல யுக்திகளைக்கொண்டு அவனைச் சம்ஹாரம் பண்ணினார். சம்ஹாரம் பண்ணினபோது அவன் தாயாகிய பூமிதேவி பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டாளாம்.

புத்திர சோகத்தைக் காட்டிலும் ஸ்திரீகளுக்கு வேறு பெரிய சோகம் ஒன்றும் இல்லை. பர்த்தா மரணமடைகிறான் என்றால், 'நமக்கு இதுவரையிலும் கிடைத்து வந்த சௌகரியம் போகிறதே; இனி நம்மை யார் ரக்ஷிப்பார்கள்? பர்த்தா இல்லாததனாலே பல காரியங்களை நம்மால் செய்ய முடியாது போகுமே; அபசகுனம் மாதிரி ஆகிவிடுமே' என்ற பல காரணங்களினாலே ஸ்திரீகளுக்கு அதிகமான துக்கம் உண்டாகலாம். இந்தத் துக்கத்திற்குக் கொஞ்சம் சுயநலம் காரணம். ஆனால் புத்திரன் விஷயத்தில் அப்படி இல்லை. எத்தனைக்கு எத்தனை பிள்ளையின் வயசு அதிக மாகிறதோ, அத்தனைக்கு அத்தனை அவன் பிரிவினால் மாதாவின் துக்கமும் அதிகமாகிறது. லோகம் முழுக்கச் சக்கரவர்த்தியாக நரகாசுரன் ஆண்டு வந்திருக்கிறான். இப்படி ஏக சக்கராதிபதி யாக ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்த புத்திரன் பகவானால் சம்ஹாரம் செய்யப்பட்டுவிட்டானே என்ற துக்கம் அந்தத் தாய்க்கு அப்போது உண்டாகவில்லை. புத்திரன் போனான் என்று நினைக்காமல், 'பகவான் கையாலே அவனுக்கு

மோக்ஷம் ஏற்பட்டதே; அவனுக்குப் பகவானை நேரில் காணுகின்ற பாக்கியம் கிடைத்ததே, பெரிய தபஸ் பண்ணி அல்லவா பகவானைப் பார்க்க வேண்டும்? தபஸ் ஒன்றும் பண்ணுமல் அவனுக்கு இந்த பாக்கியம் கிடைத்ததே' என்று மிகவும் சந்தோஷப்பட்டு உடனே ஒரு பிரார்த்தனை பண்ணிக்கொண்டாள். 'என் பிள்ளை போனது இருக்கட்டும். எனக்குப் பிள்ளை போன துக்கம் ஏற்பட்டாலும் லோகத்தில் இருக்கிறவர்களுக்கு ஒரு துக்கமும் ஏற்படக்கூடாது. என் பிள்ளை போன இன்றைக்கு எல்லாரும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு, புத்தாடைகளை உடுத்துக்கொண்டு நல்ல விருந்துச் சாப்பாட்டைச் சந்தோஷமாகச் சாப்பிடவேண்டும்' என்று அவள் பிரார்த்தனை பண்ணிக் கொண்டதாக ஒரு கதை இருக்கிறது. சாகப்போகிற சமயத்தில் பகவானுடைய தரிசனத்தால் ஞானம் பெற்ற நரகாசுரனே, 'இந்த மாதிரி, என் நினைவாக ஜனங்கள் செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டதாகவும் சொல்கிறுர்கள். எண்ணெய் தேய்த்துக்கொண்டு வெந்நீரிலே ஸ்நானம் செய்கிறது இருக்கட்டும். 'இப்படி ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்குக் கங்கையில் ஸ்நானம் செய்தால் எவ்வளவு புண்ணியமோ, அவ்வளவு புண்ணியம் வரவேண்டும். மகாலக்ஷ்மியின் அநுக்கிரகம் பொங்க வேண்டும்' என்றும் வேண்டிக் கொண்டானும்.

ஒவ்வொரு மாசத்திற்கும் ஒரு புராணம் இருக்கிறது. சைத்திர மாஹாத்மியம், வைசாக மாஹாத்மியம் என்று ஒவ்வொரு மாசத்திற்கும் இருக்கிறது. துலா மாச மாஹாத்மியம் இருக்கிறது. அது முப்பது அத்தியாயம் உள்ளது. முப்பது நாளைக்கும் படிக்கலாம். அதிலே தீபாவளியைப்பற்றிச் சொல்லப்படும் அத்தியாயத்தில்,

தைலே லக்ஷ்மீ: ஜலே கங்கா

என்று வருகிறது. கங்கை இல்லாத ஊர்களில் எந்த இடத்தில் அன்றைக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்தாலும், கங்கா ஸ்நானம் செய்த புண்ணியம் வருகிறது என்று புராணம் சொல்கிறது. எல்லா ஆசிரமக்காரர்களும், வைராக்கியசீலர்களுங்கூடத் தீபாவளியன்று ஸ்நானம் செய்ய வேண்டும் என்பதாகவும் துலாபுராணத்தில் இருக்கிறது.

அப்யங்கனம், வபனம் எல்லாம் இந்தக் காலத்தில்தான் செய்துகொள்ள வேண்டும் என்று சாஸ்திரம் இருக்கிறது. ஒரு நாளைக்கு ஐந்து காலம்; உதய காலம், சங்கவ காலம், மாத்தியான்ன காலம், அபரான்ன காலம், சாயங்காலம் என்ற ஐந்து. ஒரு காலத்திற்கு ஆறு நாழிகை. ஒரு நாழிகைக்கு இருபத்து நான்கு நிமிஷம். ஒரு காலத்திற்கு 144 நிமிஷம்; அதாவது இரண்டு மணி 24 நிமிஷம் ஆகிறது. சூரிய உதயத்திலிருந்து *8—24 வரையில் உதய காலம். 8—24—இலிருந்து 10—48 வரையில் சங்கவ காலம். 10—48—இலிருந்து 1—12 வரையில் மாத்யான்ன காலம். 1—12—இலிருந்து 3—36 வரையில் அபிரான்ன காலம். 3—36—இலிருந்து 6* மணி வரையில் சாயங்காலம். இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன கர்மாக்களைப் பண்ண வேண்டுமென்று தர்ம சாஸ்திரம் விதிக்கிறது. அப்யங்கனம், உதயகாலத்தில் பண்ணிக்கொள்ளக்கூடாது. பிராயச்சித்தம், காயத்ரி ஜபம் ஆகியவை சங்கவ காலத்தில் பண்ணவேண்டும். உஷக் காலத்தில் எண்ணெய் தேய்த்துக்கொண்டால் கள் போன்றவற்றைத் தேய்த்துக்கொண்ட பாவம் என்று தோஷம் சொல்லியிருக்கிறது. ஆனால் இதற்கு நேர் விபரீதமாகத் தீபாவளி அன்றைக்கு உஷக் காலத்திலேயே எண்ணெய் தேய்த்துக் கொண்டுவிடவேண்டும். யாராக இருந்தாலும் தேய்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. கொஞ்சங்கூட ஜீவஹிம்சை செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டு யாகத்தில் தோஷம் இல்லை என்று சொல்லியிருப்பது போல, இது நேர் விரோதமாக இருக்கிறது. 'உஷக் காலத்திலேயே தேய்த்துக் கொள்பவர்களுக்குப் புண்ணியமும் வர வேண்டும்' என்று நரகாசுரனுடைய அம்மா பிரார்த்தித்துக்கொண்டாள். இதைவிட உயர்ந்த மனப்பான்மை இருக்க முடியுமா? யாராவது இறந்தால் எண்ணெய் தேய்த்துக்கொள்வோமா? புதிய

ஆடைகளை அன்றைக்கு உடுத்துக்கொள்வோமா? விருந்துதான் சாப்பிட மனசு வருமா? தன் பிள்ளையைப் பறி கொடுத்து விட்டு, 'பகவானே, எனக்கு இருக்கிற துக்கம் இருக்கட்டும். லோகம் துக்கப்படக்கூடாது. இன்றைக்கு எல்லாரும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு சந்தோஷமாகப் புது ஆடைகளை உடுத்துக் கொண்டு பண்டிகை கொண்டாட வேண்டும். அப்படி எண்ணெய் தேய்த்துக் கொள்கிறவர்களுக்குக் கங்கையில் ஸ்நானம் செய்கிற புண்ணியம் வரவேண்டும். மகாலக்ஷ்மியின் கடாக்ஷம் ஏற்பட வேண்டும்' என்று அவன் அம்மா பூமாதேவி பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறாள். ரணகளத்திலே பகவான் கீதை உபதேசம் பண்ணினாற்போல, இவள் பிள்ளையைப் பறிகொடுத்துவிட்டுப் புத்திர சோகத்தால் அழும்போது லோக க்ஷேமத்தை வேண்டிக்கொண்டிருக்கிறாள்!

'ஊரெல்லாம் நன்றாக இருக்கிறதே; ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் நன்றாக இருக்கிறார்களே! நம் பிள்ளை இப்படி இருக்கிறானே!' என்று நமக்குத் தோன்றுமே தவிர, 'நம் பிள்ளை எப்படிப் போனாலும் போகட்டும், ஊர்ப்பிள்ளைகள் எல்லாம் சந்தோஷமாக இருக்கட்டும்' என்ற நினைப்பு வருமா?

நரகாசுரனுடைய தாய்க்கு வந்திருக்கிறது. அதனால்தான் தீபாவளியைக் கொண்டாடுகிறோம். மற்றப் பண்டிகைகளையெல்லாம் விட இதற்கு அதிகக் கியாதி.

ஏதோ புராணக் கதை இது என்று தள்ளிவிடாமல் தலைமுறை தலைமுறையாக இதை ரக்ஷித்துக்கொண்டு இந்தப் பண்டிகையையும் நம் நாட்டவர்கள் கொண்டாடி வந்திருக்கிறார்களே; அதனால் நமக்கு என்ன பயன்? இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதால் நாம் அடையக்கூடிய ஆத்ம லாபம் என்ன என்று பார்க்கவேண்டும். எதற்கும் மூலத்தைச் சூக்ஷ்மமாக அறிந்து கொண்டால்தான் நிறையப் பலன் கிடைக்கும்.

நமக்கு அநேக துன்பங்கள் இருக்கின்றன. பல தப்புகள் பண்ணுகிறோம். அதற்கு ஏற்ற துக்கத்தை அநுபவிக்கிறோம். 'இந்தத் தப்பைப் பண்ணினோம். அதனால்தான் இந்தக் கஷ்டம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது' என்று சில சமயங்களில் நமக்கே தெரிகிறது. இன்னும் சில கஷ்டங்கள் ஏற்படும்போது, 'ஐயோ, நான் ஒரு தப்பும் ப்ண்ணவில்லையே! எனக்குச் சிரமம் உண்டாகியிருக்கிறதே!' என்று வருத்தப் படுகிறோம். காரணம் தெரியும்போது நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறோம். தெரியாதபோது இன்னும் அதிகத் துக்கத்தை உண்டாக்கிக்கொள்கிறோம். எல்லாக் காரியங்களுக்கும் நமக்குக் காரணம் தெரிந்திருக்க வேண்டுமா என்ன? காரணம் தெரியாமல் பல துன்பங்கள் உண்டாகலாம். தெரிந்து உண்டாகலாம். எப்படி இருந்தாலும் நமக்கு ஏற்படுகிற துன்பம் ஏற்பட்டே தீரும். இருக்கிற துன்பம் இருந்துகொண்டுதான் இருக்கும். நாம் துன்பப்படுகிறோமே என்பதற்காக மற்றவர்களும் துன்பப்படட்டும்; லோகமும் துன்பப்படட்டும் என்ற நினைவு நமக்கு வரக்கூடாது. நாம் துன்பப்பட்டாலும் லோகம் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்ற ம்னப்பான்மையை வளர்த்துக் கொள்வதுதான், இந்தத் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதன் பயன், நாம் அதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய நீதி; இந்தப் பண்டிகை விட்டுப்போகாமல் இவ்வளவு காலமாக இது சம்பந்தப்பட்ட புராணக் கதையையும், இந்தப் பண்டிகையையும் காப்பாற்றி வந்திருப்பதற்குக் காரணம் இதுதான்.

நம்முடைய சுக துக்கங்கள் எல்லாம் என்றைக்கும் இருக்கிறவை. இவற்றையே பெரிதாக நினைத்துக்கொண்டிருக்காமல் நம்மால் இந்த உலகத்திற்குச் சிறிதாவது சந்தோஷம், சுகம் உண்டாகும் என்றால் அதையே பிரார்த்தித்துக் கொள்கிற மனோபாவமுள்ள கொள்கைதான் மிகச் சிறந்தது. தீபாவளி போன்ற பண்டிகைகளின் மூலமான கருத்து இதுதான். 'நமக்கு கஷ்டம், நமக்குத் துக்கம்' என்பதைப் பாராட்டாமல் லோகம் எல்லாம் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்று நாம் எல்லாரும் பிரார்த்தித்துக் கொள்வோமாக! *

சுதந்தர இந்தியாவில் பொருளாதார முன்னேற்றம்

துணை ஜனாதிபதி மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன்

எழுபத்தைந்து கோடி மக்களைக் கொண்ட நம் பாரத நாடு உலகில் ஒரு மிகப் பெரிய குடியரசு. விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிய பெருமை காந்தியடிகளுக்கே உரியது. சுதந்தர இந்தியா வறுமையை ஒழிப்பதற்கும், எளியவர் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் பாடுபடும் என்ற உறுதியைக் காந்திஜி அளித்தார். எனவே, சுதந்தரம் பெற்றவுடன், நாம் மேற்கொண்ட முதல் நடவடிக்கை, 'நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு திட்டம் தீட்டியது தான்'. எல்லாத் துறைகளிலும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் சீரிய வழிமுறைகளை நாம் மேற்கொண்டோம். சுதந்தரம் அடைவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, திட்டமிட்ட முன்னேற்றத்திற்கு வழிவகைகள் காண வேண்டி, பல கட்டங்களில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. விடுதலை பெற்றபின், நம்முடைய எண்ணங்களுக்கெல்லாம் முழு வடிவம் கொடுக்கப்பட்டு, வலுவான அடித்தளம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டது தான் நம்முடைய 'முதலாவது ஐந்தாண்டுத் திட்டம்'.

எந்த ஓர் அலுவலை மேற்கொண்டாலும், அதற்குத் திட்டம் அவசியமாகிறது. வீடானாலும், நாடானாலும், முறைப்படி திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டால், வளம் காண்பது எளிது. திட்டமின்றிப் பொருளாதார முன்னேற்றம் காண முடியாது என்பதை நன்குணர்ந்து, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய வகையில் திட்டங்களைத் தீட்டிய நம்முடைய அருமைத் தலைவர், மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை ஒரு 'தீர்க்கதரிசி' என்று சொன்னால் மிகையாகாது.

திட்டக் கமிஷனின் அமைப்பு நமக்குக் கிடைத்த ஒரு மகத்தான பரிசு. அதனுடைய சிற்பி நேருஜி அவர்கள் தாம். நமது வளர்ச்சிக்கு கலப்புப் பொருளாதாரம் ஒன்றுதான் சீரிய வழி என்று தேர்ந்தெடுத்து, அதன் அடிப்படையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. 'முன்னேறும் நாடுகள்' என்று இப்போது அழைக்கப்படுகிற பல குடியரசுகள், நம்முடைய நாட்டில், நாம் ஏற்றுக்கொண்ட செயல் முறைகளை, 'முன்னோடியாக'க் கொண்டு அவற்றைப் பின்பற்றி வருகின்றன என்று சொல்வது மிகவும் பொருந்தும்.

'சமூக நீதி' அடிப்படையில், 'தன்னிறைவை' வளர்ச்சியின் அளவுகோலாக ஏற்றுக்கொண்டு செயல்பட்டதால், நம்முடைய திட்டங்களில் கணிசமான அளவு முன்னேற்றம் காண முடிந்தது. பெருவாரியான பொருள்களுக்கு அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியை எதிர்நோக்கியிருந்த நாம், அந்த நிலையிலிருந்து விடுபட்டு, இந்த முப்பத்தைந்தாண்டுகளில் தன்னிறைவு அடைந்ததுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணியைக் கணிசமாகப் பெருக்க முடிந்தது.

திட்டங்களில் குறைபாடுகளே இல்லை என்று வாதிடுபவனல்ல நான். எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும், அதில் சிற்சில குறைகள் இருக்கத்தான் செய்யும். குறைபாடுகளைப் பெரிதுபடுத்தி, சாதனைகளை மூடி மறைப்பதைத்தான் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற குறள் வாக்குக்கு இணங்க, யார் சொல்லுகிறார்கள் என்று பாராமல், தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்குச் சிறிதும் இடங்கொடாமல், திட்டங்களை நிறைவேற்றியதால், திட்டக் குறியீடுகளை நாம் கணிசமான அளவில் எட்ட முடிந்தது.

ஒவ்வொரு திட்டத்திலும் நம்முடைய வழிமுறைகளில் சிற்சில மாற்றங்கள் ஏற்படுத்திக்கொண்ட போதிலும், நம்முடைய குறிக்கோளினின்று இம்மியளவும் வழுவவில்லை. நாட்டு மக்களின் தேவைகளை அடித்தளமாக அமைத்துக்கொண்டு திட்டமிட்டுச் செயல்பட்டதால், நம்மால் ஓரளவு வெற்றி காண முடிந்தது. திட்டமிட்டபடி எல்லாம் நாம் அடைந்து விட்டோம் என்று நான் சொல்லத் தயாரில்லை. மக்களின் தேவைகளையும், நம்முடைய சாதனைகளையும் எடைபோடும் பொழுது இடைவெளி அதிகமானது என்பதை ஏற்றுக் கொண்டாலும், நாம் கண்டிருக்கிற முன்னேற்றம் கணிசமானது என்பதை மறுக்க முடியாது.

அரை நூற்றாண்டுக் காலமாகத் தேக்க நிலையில் இருந்த இந்தியப் பொருளாதாரம், சுதந்தரம் பெற்றபின், மெல்ல மெல்ல, அதே நேரத்தில் மிகவும் உறுதியாக, முன்னேற்றம் அடைந்துள்ளது என்று சொல்லுவது மிகவும் பொருந்தும். தனிநபர் வருமானமும் பெருகியுள்ளது. தேசீய வருமானம் மூன்று முதல் நான்கு சதவிகிதம் அளவில் ஆண்டுதோறும் உயர்ந்துள்ளது. சுதந்தரம் அடைவதற்கு முன் தேக்க நிலையிலிருந்த நாம், அதனின்றும் விடுபட்டு, பற்பல துறைகளில் பல மடங்கு உற்பத்திப் பெருக்கத்தை அடைந்துள்ளோம். விடுதலை பெற்றபோது உணவு உற்பத்தி ஐந்து கோடி டன்களாக இருந்தது, இன்று மும்மடங்காகப் பெருகி, 15 கோடி டன் அளவுக்கு உயர்ந்துள்ளது. உணவுப் உற்பத்தியில் நாம் தன்னிறைவை எட்டி விட்டோம். பொருளாதார வளர்ச்சியிலும், நாம் பாராட்டத்தக்க, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளோம். பதப்படுத்தப் பட்ட எஃகு உற்பத்தியில் ஆறு மடங்கும், சிமென்ட்டில் பத்து மடங்கும் நாம் அதிக உற்பத்தி செய்துள்ளோம். இவை எல்லாமே நாம் பெருமை கொள்ளக்கூடிய சாதனைகள் இல்லையா? நிலக்கரி உற்பத்தியில் நான்கு மடங்கு அதிக உற்பத்தி ஏற்படுத்தியுள்ளோம். மின் உற்பத்தியில் நாம் இருபத்தைந்து மடங்குகள் அதிக உற்பத்தித் திறனை அடைந்துள்ளோம்.

சுதந்தரம் அடைவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கொடுமையான பஞ்சத்தின் விளைவாக ஏறத்தாழ முப்பது லட்சம் வங்க மக்கள் உயிரிழந்தனர். சுதந்தரம் பெற்றபின், பஞ்சத்தினால் உயிரிழந்தனர் என்ற சொல் இல்லை. உணவுப் பண்டங்கள் உற்பத்தியில் தன்னிறைவை எட்டியதோடல்லாமல், கஷ்டமான காலங்களில் நிலைமையைச் சமாளிக்கக்கூடிய அளவிற்கு நம்மிடம் தானியச் சேமிப்பும் கணிசமான அளவில் சேகரித்துள்ளோம். சுதந்தரம் அடையும்போது தனிநபர் சராசரி வயது 33. இன்று அது 52—ஆக உயர்ந்துள்ளது. கனிவள உற்பத்தியிலும், எண்ணெய் உற்பத்தியிலும் நாம் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். உலகத்தின் பல பகுதிகளில் பொருளாதார நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது முன்னேற்றம் கணிசமானது, பெருமைதரக் கூடியது. தேசிய வருமானம் (G.D.P.) ஏழு சதவீதம் அதிகரித்துள்ளது ஒரு சாதாரண சாதனை அல்ல. 11 சதவீதத்திலிருந்து மூலதனத்தை 25 சதவிகிதமாக உயர்த்தி, ரெயில்வே, சாலைகள், துறைமுகங்கள், தொலைபேசி இணைப்பு ஆகிய துறைகளில் நாம் குறிப்பிடத்தக்க, பெருமைப்படக்கூடிய சாதனைகள் புரிந்துள்ளோம். நம்முடைய சேமிப்பு சதவீதம் பத்திலிருந்து இருபத்து மூன்றாக உயர்ந்துள்ளது. தனிநபர் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், வளர்ந்துவரும் நாடுகளில் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்





வெள்ளிடை மலேயென விளங்கும்.

வேளாண்மைத் துறைக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். உர உற்பத்தியில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் கணிசமானது. உபரித் தண்ணீர் கடலில் கலந்து வீணுகிறது என்ற நிலே மாறி, பாசனத்துக்குப் பயன்படுத்தி வருகிறேம். சுதந்தரம் அடைந்தவுடன் நம் நாட்டில் உர உற்பத்தி 18,000 டன்கள்தான். 1979—80—ஆண்டில் உர உற்பத்தித் திறன் [illegible] லட்சம் டன் அளவுக்கு உயர்ந்து, இன்று 45 லட்சம் டன்களுக்கும் மேலாக உற்பத்தி கண்டுள்ளோம்.

நகரங்களின் நலனே மட்டும் கருத்தில் கொண்டு நாம் செயலாற்றவில்லே. அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் ஆணேயை ஏற்று, கிராமப்புற வளர்ச்சிக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து முன்னேற்றம் கண்டுள்ளோம். சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் நலிவுற்றேரின் மேம்பாட்டுக்குத் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வருகிறேம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, சுதந்தரம் பெற்றதன் பின்னர் தொழில் துறையில் நாம் கண்டுள்ள வளர்ச்சி மகத்தானது. சுதந்தரம் அடைந்தபோது நம் நாட்டில் இருந்த தொழிற்சாலேகளின் எண்ணிக்கையையும், இன்றுள்ள நிலேமையையும் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். விஞ்ஞான ரீதியில், தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, ஊக்கம் கொடுத்ததின் விளேவு, இன்று நாம் கணிசமான அளவுக்குத் தொழில் துறையில் முன்னேற்றம் காண முடிந்தது. மனித உழைப்பின் மூலம் முன்னேற்றம் கண்ட பல நாடுகளில் பாரதத்துக்குத் தனி இடம் உண்டு.

1979—80—ஆம் ஆண்டில் ஒரு கோடி 18 லட்சம் டன்கள் அளவிலிருந்த பெட்ரோலியப் பொருள்களின் உற்பத்தி, இன்று இரண்டு கோடி 90 லட்சம் டன்களேயும் மிஞ்சக்கூடிய அளவுக்கு உயர்ந்துள்ளது. நமது தேவையில் மூன்றில் இரண்டு பங்கு இறக்குமதி செய்த நிலேயிலிருந்து, மூன்றில் ஒரு பங்கு இறக்குமதி நிலேமைக்கு நாம் வந்துள்ளோமே? இது முன்னேற்றம் இல்லேயா? ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டு இவ்வாண்டு. இன்னமும், இறக்குமதியைக் குறைக்க வேண்டும் என்பதே நமது இலக்கு. 28,000 மெகோவாட் (MW) அளவில் இருந்த மின் உற்பத்தி, இவ்வாண்டு இறுதியில் 42,000 மெகோவாட் (MW) அளவையும் மிஞ்சும். இதனுல், சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு நாம் தொழில்துறையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முன்னேற்றம் காண முடியும்.

இவ்வளவு சாதனேகள் புரிந்தும் மக்களின் ஏழைமை தீரவில்லே என்ற குறை நியாயமானதே. தேசிய வருமானம் பன்மடங்கு உயர்ந்தும், தலா வருமானம் குறைவாக நிற்பதற்குக் காரணம் மக்கள் பெருக்கம் என்பதை யாவரும் உணரவேண்டும். அதிலும் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்களிடையே அதிகமான குழந்தைகள் பிறப்பதால் அன்னுர் வாழ்க்கைத் தரம் மேலும் குன்றிவிடுகின்றது. எனவே, குடும்ப நலத் திட்டங்களே மக்கள் ஏற்பது தங்கள் நல்வாழ்வுக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமானது.

ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களே வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள நாம், வருகிற ஏப்ரல் மாதம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடியெடுத்து வைக்கும் நிலேயிலுள்ளோம். உணவு, வேலே வாய்ப்பு, உற்பத்தித் திறன் இவை இத்திட்டத்தின் அடிப்படை இலட்சியங்கள். இவற்றைச் செவ்வனே நிறைவேற்ற இயலும் என்பதில் ஐயமில்லே. எந்தத் திட்டமும் வெற்றி பெற மக்கள் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

தீமைகளுக்கெல்லாம் முடிவு கட்டும் தீபாவளித் திருநாளாகிய இப்புனித நன்னுளில் அனேவரையும் நான் விரும்பி வேண்டிக்கேட்டுக்கொள்ளுவதெல்லாம், நாட்டுப் பணியில் நம் ஒவ்வொருவருடைய பங்கினேயும் உணர்ந்து செயலாற்றிட வேண்டும் என்பதுதான்.

அனேவருக்கும் என் அன்பு கலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள். *

ஒளி படைத்த உலகம் நோக்கி!

பேரா. டாக்டர்.
பி.எஸ். மணிசுந்தரம்
துணை வேந்தர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருமகளின் வெற்றியைப் போற்றும் திருநாளில் 'கலைமகளி'ன் வாசகர்களுடன் கருத்துப் பரிமாறிக்கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஒளித் திருநாளன்று, ஒளி படைத்த உலகம் நோக்கி நம்மை இட்டுச் செல்லும் உயர்கல்வி குறித்துச் சில கூற விழைகிறேன்.

வாழ்வின்மூலம் ஒளி. இந்திய மரபுப்படி இறைவன் ஒளி வடிவில்தான் இருக்கிறான். மேலைநாட்டு மரபுப்படியும் ஒளி வந்த பின்புதான் உலகம் துவங்கியது. '**Let there be light**" என்றுதான் இறைவன் முதலில் சொல்வான். கல்விதான் கண் என்றார் திருவள்ளுவர். அறியாமையைத் தவிர இருள் இல்லை என்றார் ஷேக்ஸ்பியர்; (**There is no darkness but ignorance**). கல்விதான் அக வழி; ஆத்ம ஒளி. எனவே, ஒளி படைத்த உலகம் உருவாக, '**Let there be Light of knowledge**' என்றுதான் நாம் கூற வேண்டும்.

அக இருள் போனால்தான் புற இருள் போகும்; எல்லாரும் இன்பமாய் வாழும் புதிய உலகம் பிறக்கும். அதற்கான கல்வியின் இரு அம்சங்கள்: சிந்தனையைத் தூண்டுதல், செயல்களுக்கு ஆக்கம் தருதல்.

நம்முடைய இன்றைய கல்வி பெரும்பாலும், வெறும் செய்திகளைத் தரும் மனச்சுமையாகவே அமைந்துவிட்டது. அதை விடுத்து, மாணவர்தம் பார்வையை அகலப்படுத்தும், பண்பை உயர்வுபடுத்தும் கல்வி வேண்டும். கல்வி, மாணவர் மனத்தை மையமாகக் கொண்டு வாழ்வை நோக்கி இயங்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு நம்முடைய பாட நூல்களும், பயிற்று முறைகளும் பெரிதும் மாற்றப்பட வேண்டும். பாட நூல்கள் சிக்கல்களை அவிழ்க்கும் சக்தியினை வலுப்படுத்தும் துணைக் கருவிகளாக அமைந்து, பயிற்சி செயல்முறையாக மாற வேண்டும். புதிய அறிவியல்கள், பழைய கலைகள் ஆகியன இணைந்த நோக்கு வேண்டும். அப்போதுதான் அறிவுசார்ந்த பண்பு படைத்த ஒருங்கிணைந்த ஆளுமை பெற்ற மனிதர்களை (**Integrated personality**) உருவாக்க இயலும்.

பண்புசார்ந்த அறிவினை ஊட்டும் கல்வி செயலில்தான் முழுமை பெற முடியும் ஏட்டுக் கல்வி வாழ்வுக் கல்வியாக வேண்டுமானால், மாணவர்கள் உழைப்பின் அருமையை உணர்ந்து, கலைஞானம் படைத்த தொழிலாளர்களாக, 'பிரம்ம தேவனின் கலைஞர்களாக உருவாகவேண்டும். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்றார் பாரதி. செய்யும் தொழிலே கலையும், கல்வியுமாகும். உழைப்புக்கும் அறிவிக்குமுள்ள இடைவெளியைக் குறைத்து, அறிவு உழைப்பால் உரம் பெறவும், உழைப்பு அறிவால் ஒளி பெறவும் வகை செய்யவேண்டும். அதற்குக் கல்வி செயலாக்கத்தை (**Project**) மையமாகக் கொண்டு இயங்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் குமாஸ்தாக்களை உருவாக்கும் கல்விமுறை போய், விஞ்ஞானிகளை, சிந்தனையாளர்களை, தொழில்வல்லுநர்களை, கலைஞர்களை உருவாக்கும் கல்வியாக மாறும். அப்போதுதான் ஒளி படைத்த உலகம் உருவாகும்.

*

மூன்று குருமார்கள்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

உலகிலுள்ள சமயங்களில் இந்து சமயம் மிகப் பழமையானது. அநாதி காலந்தொட்டு வருகிற மதம் இந்து மதம். அநேக பண்டிகைகளும் விரதங்களும் இந்து மதத்தில் கொண்டாடுகிறோம். சிவராத்திரி, ஸ்ரீ ராமநவமி, கோகுலாஷ்டமி, விநாயக சதுர்த்தி போன்றவை இறைவனுடைய வழிபாடாக அமைகின்றன.

இந்து சமயத்தில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நான்குபேரையும் வழிபடச் சொல்லியிருக்கிறது. நாம் எல்லாம் இந்த உலகில் பிறப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள் தாயும் தகப்பனும். வெறும் உணவு உட்கொண்டு, உத்தியோகம் பார்த்து, மனைவி மக்களுடன் வாழ்வது மட்டும் பிறப்பின் நோக்கம் அல்ல. மீண்டும் பிறவியே ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் பகவான் நமக்கு இந்தப் பிறவியைக் கொடுக்கிறார். அப்படிப் பிறப்பே இல்லாமல் சம்சாரத்திலிருந்து விடுதலை அடைவதற்கு முக்கிய காரணமாக விளங்குவது இந்த மனிதப் பிறவி. அத்தகைய உன்னத நிலைமைக்குக் காரணமாக விளங்குவதால் தான் தாய் தந்தையரைத் தெய்வமாக நினைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

மனிதப்பிறவி எடுத்தால் மட்டும் போதாது, சன்மார்க்கத்திலும் தத்துவ வழியிலும் நாம் செல்ல வேண்டும். அதற்கு நல்ல குரு வேண்டும். அவருடைய அருள் இருந்தால் தான் இந்தப் பிறவியிலேயே, மீண்டும் பிறவியில்லாத பெரும் பேற்றை அடைய முடியும். பொதுவாக, உலக வாழ்க்கையிலே மூவரைக் குருவாகப் பாவிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

நாமெல்லாம் பள்ளியில் படிக்கும்போது ஆசிரியரைக் கௌரவமாகக் குரு போன்று பாவிக்கிறோம். அடுத்தபடியாக நம்முடைய வீட்டில் பண்டிகைகளையும் பூஜைகளையும் நடத்திக் கொடுப்பதற்கு வாத்தியார் (சாஸ்திரிகள்) வருவார். நாம் அந்தப் பண்டிகை அல்லது பூஜையின் போது நடைபெற வேண்டிய காரியங்களை எல்லாம் அவர் மூலம் நடத்திக் கொண்டு கடைசியில் நமஸ்காரம் செய்து அவரிடம் ஆசீர்வாதம் பெறுவது என்பது பழக்கமாக இருந்து வருகிறது. ஆகவே அவரையும் நாம் கௌரவமாகக் குரு பாவனையோடு பூஜிக்கவேண்டும் என்ற நியதி நம்மிடையே இருக்கிறது.

மூன்றுவதாக, நம்முடைய வாழ்க்கையிலே உள்ள அறியாமையெல்லாம் அகன்று ஆன்மிக வழியில் உயர்வதற்குத் தத்துவ ஞானி, சந்நியாசி, மகான் போன்றவர்களையெல்லாம் நாம் வழிபட்டு அவர்களுடைய அருளைப் பெற வேண்டும்.

இப்படி மூன்று வகையாகக் குருமார்கள் அமைந்தாலும் நிஜமான குரு யார்? இந்தப் பிறவியிலிருந்து இனிமேல் பிறவாமல் இருப்பதற்கு உபாயம் சொல்லிக்கொடுத்து நல்ல சாதனை முறைகளைக் கற்றுக்கொடுத்து நல்வழியில் யார் இட்டுச் செல்கிறாரோ, அவர்தாம் நிஜமான குரு; அவரைத்தான் நிஜமான குருவாகப் பாவிக்கவேண்டும். மற்றவர்களெல்லாம் பரம்பரையாக, தொடர்ச்சியாக நமக்கு உதவியாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் குருவுக்கான கௌரவத்தை அளிக்க வேண்டுமென்ற முறை இருந்து வருகிறது.

இப்படிப்பட்ட ஆன்மிக குருமார்களில் முதல் முதலாக வந்த குரு, தஸ் மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே – என்று சொல்லக்கூடிய தக்ஷிணாமூர்த்தியே. பேசாமல், மௌனியாய் கையிலுள்ள சின்முத்திரையின் மூலம் ஆன்மிக மார்க்கத்துக்கு நம்மையெல்லாம் அழைத்துச் செல்கிறார் அவர்.

அடுத்தபடியாக வந்தவர் அதற்கு நேர்மாறாக நிறையப் பேசி நமக்கு அருள் புரிகிறார். 'ஸ்ரீ கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்.' பகவத் கீதையில் பதினெட்டு அத்தியாயத்திலும் சரி மற்றும் எந்த நிலையிலும் சரி, நிறையப் பேசிப் பேசி நம்மையெல்லாம் நல்வழிப் படுத்தியிருக்கிறார் ஸ்ரீ கிருஷ்ணபகவான். 'கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்' என்று ஜகத்குருவாக அவரையும் சொல்லப்பட்டிருக்கிறது. அவருக்கும் அந்த அடைமொழி இருக்கிறது.

மூன்றாவதாக, ஆதிசங்கரரை, 'சங்கரம் லோக சங்கரம்' என்று சொல்கிறது. 'லோக சங்கரம்' என்றால் உலகுக்கெல்லாம் நல்லதைச் செய்யும் குரு – ஜகத் குரு என்று தான் பெயர். அவர் பேசியும் பேசாமலும் இரண்டு வழியிலும் நமக்கு அருள் பாலிக்கிறார். கையில் தக்ஷிணாமூர்த்தி போன்று சின்முத்திரையை வைத்துக்கொண்டு பேசாமலும் அருள் புரிகிறார். அதே சமயம் நிறைய நூல்கள் எழுதி, உபதேசம் செய்து, பல ஊர்களுக்கு யாத்திரை சென்று பல சிஷ்யர்களையும் பக்தர்களையும் தயாராக்கிப் பேசியும் நமக்கு அருள் பாலிக்கிறார். இரண்டு வகையிலும் நமக்குக் குருவாக விளங்குகிறார்.

இப்படிப்பட்ட குருமார்களுள் பகவானாகவும் குருவாகவும் இருப்பவர் யார்? ஸ்ரீ கிருஷ்ண பகவான். அவர் பிறந்ததை ஜன்மாஷ்டமி, கோகுலாஷ்டமி அன்று நாம் கொண்டாடுகிறோம். ஆனால் பகவானே தொடக்கி வைத்தது தீபாவளி. 'கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்' என்று ஸ்ரீ கிருஷ்ணன் பகவானாகவும் குருவாகவும் இருந்து நமக்கெல்லாம் வழிகாட்டியாகத் தொடக்கி வைத்தது தீபாவளி. அறியாமையும் அகல வேண்டும், நாட்டிலுள்ள துன்பமும் நீங்க வேண்டும் என்று இரண்டு வகையிலும் சேர்ந்து வந்தது தீபாவளி. நரகாசுரனை அழித்ததன் மூலம் நாட்டிலுள்ள துன்பம் நீங்கிற்று. தீப ஒளியின் மூலமாகக் கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும் என்ற சொல்லுக்கு ஏற்றவாறு இந்தப் பண்டிகையைத் தொடக்கி வைத்ததன் மூலம் புற இருள் மட்டும் அல்ல, அக இருளும் அகலுவதற்கு வழியாக இந்தத் தீபாவளி ஆகிறது.

ஆகவே புற இருள், அக இருள் இரண்டு விதமான இருளையும் அகற்றுவதுதான் குருவினுடைய முக்கியமான கடமை. அந்த வகையிலே கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும் என்று சொல்லக்கூடிய கிருஷ்ணபரமாத்மா நரகாசுரனைக் கொல்வது மாத்திரம் அல்லாமல், நரகாசுரனைப் போன்ற நம்மிடமுள்ள — ஒவ்வொரு மனிதரிடமும் உள்ள அத்தனை தீய குணங்களையும் அகற்ற வேணும் என்பதற்காகவே தீபாவளிப் பண்டிகையை ஏற்படுத்தியிருக்கிறார். தீப—ஆவளி என்ற பெயருக்கேற்றபடி அன்று மங்களகரமான தீபத்தை ஏற்றி வைத்தால் எப்படி வெளிப்புற இருள் எல்லாம் அகலுமோ அதுபோல, 'ஞான தீபேன பாஸ்வர' என்றவாறு ஞான தீபத்தையும் நம்முடைய மனத்திலே ஏற்றி வைத்துப் புற இருளோடு அக இருளும் அகலுவதற்கு வழிகாட்டியவர் கிருஷ்ணபரமாத்மா.

மற்ற எல்லாப் பண்டிகைகளும் இறைவனைக் கொண்டாடக் கூடிய பண்டிகைகளாக, விரதங்களாக அமைந்திருக்கின்றன. ஆனால் தீபாவளி இறைவனாகவும் குருவாகவும் உள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவானால் தொடக்கப்பட்ட ஒரு பண்டிகையாக அமைந்துள்ளது மிகவும் விசேஷம்.

ஆகவே ஒவ்வொருவரும் இந்தத் தீபாவளிப் பண்டிகைக் காலத்தில்—கிருஷ்ண பரமாத்மா தொடக்கி வைத்த இந்தப் புண்ணிய சுப தினத்தில், புனிதமான கங்கையை நினைத்துக் கொண்டு ஸ்நானம் செய்யவேண்டும். தீமையையும் அறியாமையையும் போக்குவதற்கு அறிகுறியாகவுள்ள தீபவரிசையையும் ஏற்றி வைக்க வேண்டும். இந்தப் பண்டிகை மங்களகரமானது என்பதற்காகப் புத்தாடை உடுத்திக் கொள்ளவேண்டும். இத்தனைக்கும் மேலாகக் கண்ணபிரான் பகவத்கீதையில் உபதேசித்தவற்றை நாம் நினைத்து, மனசிலேயுள்ள தீயவை அகலுவதற்கும் நல்லவை உண்டாவதற்கும் பிரார்த்தனை செய்ய வேண்டும். இதுதான் தீபாவளியின் முக்கிய தத்துவம்.

இறைவனாலும் குருவாலும் இரண்டு விதத்தாலும் தோற்றுவித்த தீபாவளி மிகச் சிறந்த நன்னாள். அந்த நன்னாளிலே நாமெல்லாம் ஸ்நானம் செய்து, கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று நம்மிடையே பரஸ்பரம் கேட்டுக் கொண்டு, புனிதமான கங்கையையும் கிருஷ்ண பரமாத்மா உபதேசித்த புனிதமான பகவத்கீதையையும் நினைத்து, அந்தப் பகவத் கீதையில் சொல்லப்பட்ட நல்ல அறங்களையெல்லாம் கடைப்பிடித்து, பிரார்த்தனையும் செய்ய வேண்டும். அன்றைய தினம் இந்தப் பணியைச் செய்வதுதான் தீபாவளியின் முக்கிய லட்சியம்.

ஏதோ தீபாவளியென்றால் புத்தாடை உடுத்துவது, பட்சணம் சாப்பிடுவது என்பது மட்டும் முக்கியமல்ல. அவையெல்லாம் புறச் சந்தோஷத்துக்கு அறிகுறி. ஆனால் அன்றைக்கே நாம் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் அக இருளையும் போக்குவதற்கு வேண்டிய பகவானுடைய உபதேசம் எது உண்டோ, அதையும் நினைவு படுத்திக்கொண்டு அதன்படி வாழ உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் கிருஷ்ண பரமாத்மாவின் பரிபூரண அருள் நமக்குக் கிடைக்கும். கிருஷ்ண பரமாத்மாவாகவும் குருவாகவும் உள்ள இறைவனைத் துதித்து அவன் அருள் பெற்று, தீபாவளி நன்னாளில் நாம் எல்லா மங்களங்களையும் பெறுவோமாக!



கவிஞனின் குமுறும் உள்ளம்

நீதிபதி ச. மோகன்



'கவி' என்ற சொல்லுக்கு 'அழகு' என்று ஒரு பொருள் உண்டு.

கவிஞன் அழகைப் போற்றுகிறவன்.

அந்த அழகு இயற்கையின் அழகாகவோ, இதயத்தின் அழகாகவோ, வாழ்வின் அழகாகவோ, வளமையின் அழகாகவோ இருக்கலாம்.

அழகு எங்கே சிதைந்து அலங்கோலம் காணப்படுகிறதோ, அங்கே கவிஞனின் சீற்றத்தைக் காணுகிறோம். சமுதாயத்தின் அழகமைப்புக்கு மாறான அநீதிகளைக் காணும்போது உண்மைக் கவிஞனின் உள்ளம் சினத்தால் பொங்குகிறது. அவ்வாறு பொங்கவில்லை எனில் அவன் உண்மைக் கவிஞன் ஆவதில்லை.

அநீதியை அகற்ற வேண்டும் என்ற ஆர்வக் குரலைத் தான் கவியரசர் பாரதியிடமும் பாவேந்தர் பாரதிதாசனிடமும் கேட்கிறோம்.

அரசியல் அநீதிக்கு எதிராக முழங்குகிறது, பாரதியின் குரல். சமுதாய அநீதிக்கு எதிராக முழங்குகிறது பாவேந்தரின் குரல். அந்த அந்தக் கால நிலைக்கு ஏற்றவாறு, சூழ்நிலைக்குத் தக்கவாறு, நாட்டு இனம் விடுதலை பெற வேண்டுமென ஒலிக்கின்றன பாரதியின் பாடல்கள். மொழி இனம் விடுதலை பெற வேண்டுமென்று முழங்குகின்றன பாவேந்தரின் பாடல்கள்.

சமுதாய அநீதிகளையும் பாரதியார் சாடியுள்ளார். அரசியல் அநீதிகளையும் பாரதிதாசன் எதிர்த்துள்ளார். இருப்பினும் ஒருவர் உள்ளத்தில் ஓங்கி நிற்பது நாட்டுப் பற்று; மற்றொருவர் உள்ளத்தில் நிறைந்து நிற்பது மொழிப் பற்று. இருவருமே புதுமைக் கவிஞர்கள்; புரட்சிக் கவிஞர்கள்.

'இருக்கும் நிலையை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனும்' என்று தெளிவாகக் கூறுகின்றார் பாவேந்தர்.

புரட்சி மனப்பான்மையை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்; அது எழுத்தாளர்களின் கடமை என்பது அவர் தம் அடிப்படைக் கொள்கை.

காலத்தின் தேவைக்கு ஏற்பக் கவிஞன் தோன்றுகிறான் என்பார்கள்.

ஆம். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நம் நாடும் சமுதாயமும் இருந்த நிலை மாறுவதற்கும் பாரதியைப் போல் பாரதிதாசனைப் போல் புரட்சிக் கவிஞர்கள் தேவைப்பட்டனர்.

அரசியலில் அந்நியர் ஆட்சிக் கொடுமை, சமுதாயத்தில் சாதிக் கொடுமை, தாய்மொழியான தமிழ் தாழ்த்தபட்ட கொடுமை - இவை அனைத்தும் கவிஞர்களின் இதயத்திலே எரிமலைகளை ஏற்படுத்தின. குமுறும் நெஞ்சங்களில் கொதித்தெழுந்தன, கவிதைகள்.

''திங்களொடும் செழும் பரிதி
தன்னோடும், விண்ணோடும்,
உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும்
பிறந்த தமிழ்''

என்று தமிழின் தொன்மையைக் கூறுகின்றார்.

'தமிழுக்கு அமுதென்று பேர்' என்பது அவருடைய அமுத வாக்கு.

''சொந்த நாட்டில் பிறர்க்
கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி
அஞ்சிடோம்''

என்று முழங்கும் பாரதி,

''நாங்கள் முப்பது கோடி
ஜனங்களும்
நாய்களோ? பன்றிச்
சேய்களோ?''

என்று குமுறுகின்றார்..

''நாயினும் கீழாய்ச் செந்தமிழ்
நாட்டார்
நலிவதை நான் கண்டும்,
ஆயுதம் இன்றி அவர் நலம்எண்ணி
உழைத்திட நான் தவறேன்''
(தமிழன்)

என்று உறுதிக் கனலைக் கக்குகிறது பாவேந்தரின் பாடல்.

தமிழ் மொழியினை உயர்தனிச் செம்மொழி (Classical Language) என்று உலகம் ஒப்புக் கொண்டிருந்தாலும் தமிழ் நாட்டில் அது எந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தது?

இசையரங்குக்குத் தமிழ் ஆகாது,

இறைவனைத் துதிக்கத் தமிழ் கூடாது என்ற நிலை. இது வீட்டு மொழியாகக் கருதப்பட்டது. நாட்டு மொழியாக ஏற்கப்படவில்லை.

இந்த நிலை கண்டு எவரது நல்ல உள்ளந்தான் துடிக்காது? எவரது நெஞ்சந்தான் குமுறாது?

எனவேதான், தமிழின் திறம் பாடி, தமிழரின் மானத்தைக் காக்க முற்பட்டார் கவிஞர் பாரதிதாசன்.

ஒரு நாட்டின் உயர்வினை நாகரிகத்தை; நல்ல பண்பாட்டைக் காட்டும் உரைகல் எது? அந்த நாட்டின் மொழிதான்.

மக்களின் பண்பட்ட சிந்தனையால் அவர்கள் மொழி பண்படுகிறது. பண்பட்ட மொழியைப் பயில்வதால் வருங்கால மக்களின் பண்பாடு உயர்கின்றது. இவ்வாறு, மக்களின் வாழ்வும் வளமும் அவர்கள் மொழியின் சிறப்பைச் சார்ந்தே உள்ளன. இது பொதுவான உண்மையாகும். எனவேதான்—

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கேமுழங்கு'

என்று முழங்குகிறார் கவிஞர்.

'செந்தமிழே! உயிரே! நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தாயெனில் நைந்து போகுமென் வாழ்வு
நல்நிலை உனக்கெனில் எனக்குந் தானே.''

என்ற பாட்டில் எத்துணை உண்மை அடங்கியுள்ளது.

தமிழ் வளர்ந்தால் தமிழ் பேசும் மக்கள் வளர்கின்றனர். ஆதலால், தமிழ் மொழிக்குச் செய்யும் தொண்டு தமிழ் மக்களின் நல்வாழ்வுக்குச் செய்யும் தொண்டாகிறது. எனவே,

'அமைவினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே
அன்பினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே'

என்று நம்மையெல்லாம் தமிழ்த் தொண்டுக்கு அழைக்கிறார் பாவேந்தர்.

'இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்'
இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய்'

என்பது அவர் இடும் கட்டளை.

'எங்கள் உடல் பொருள் ஆவியெல்லாம் —எங்கள்
இன்பத்தமிழ் மொழிக்கே தருவோம்'

என்பது அவர் எடுக்கும் சூளுரை.

வேறு எந்த நாட்டிலும் தாய் மொழிமீது பற்று வைக்க வேண்டும் என்று எவரும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. மக்களுக்கு இயல்பாகவே அந்தப் பற்று உதிரத்தில் ஊறியுள்ளது.

ஆனால், நம் தமிழ் நாட்டில் புரிந்து கொள்ள முடியாத ஒரு புன்மை நிலை, தமிழை அடுக்களை மொழியாக அடக்கப் பார்த்தனர், அந்த நாட்களில். பண்டைச் சிறப்புடைய பண்பட்ட தமிழ் மொழி, உலக இலக்கியங்களோடு ஒப்பிடத் தக்க சங்க இலக்கியத்தைக் கொண்ட தமிழ் மொழி, ஐம்பெரும் காப்பியங்கள் கண்ட தொல்மொழி, கல்வி மொழிக்குத் தகுதியற்றது என்றும், அறிவியல் கூறுவதற்கு அருகதையற்றது என்றும் ஒரு சாராரால் ஒதுக்கித் தள்ளப்பட்டது. இந்நிலை கண்டு தான் பாரதியும், பாரதிதாசனும் பதைத்து எழுந்தனர்.

'புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே— அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.'
'சொல்லவும் கூசுவதில்லை — அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக் கில்லை'
'மெல்ல தமிழ் இனிச் சாகும்
மேற்கு மொழிகள் புவியிசை ஓங்கும்'
'என்றந்தப் பேதை உரைத்தான்— ஆ!;
இந்தவசை எனக்குஎய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்.'

என்று தமிழ்த் தாய் கூறுவதாகப் பாரதியார் பாடுகின்றார். இது அன்று போல் இன்றும் பொருத்தம் உடையதுதானே;

வானமளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே' என்றும்,
வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே'

என்றும் தாய் மொழி தமிழைப் போற்றுகின்றார் கவியரசர் பாரதியார்.

தமிழை வளமுள்ள மொழியாகவும், வளரும் மொழியாகவும் போற்றும் பாரதி, தெள்ளுற்ற அமுதமாகத் தமிழைக் காணுகிறார்.

தெள்ளுற்ற தமிழமுதின்
சுவை கண்டார் இங்கு அமரர்
சிறப்புக் கண்டார்'

என்பது பாரதி வாக்கு.

இவ்வாறு தமிழ் வளர்ப்பே, பாரதி, பாரதிதாசன் ஆகிய இரு பெரும் புலவர்களின் மூச்சாக இருந்தது.

'பாரதியின் உள்ளம்' பற்றிப் பாடும் பாவேந்தர் கூறுகிறார்:

'சாதி ஒழித்திடல் ஒன்று— நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று,
பாதியை நாடு மறந்தால்—மற்றப்
பாதி துலங்குவ தில்லை.'

என்று பாரதி தம்மிடம் கூறியதாக நம் கவிஞர் கூறுகிறார்:

பாவேந்தருக்கும் இவை இரண்டுமே இலட்சியங்களாக இருந்தன. அறிவியல் நூல்கள் எல்லாம் ஊரறியும் தமிழில் பெருகிப் பரவ வேண்டும் என்றார் அவர்.

'உலகியலின் அடங்கலுக்கும் துறை தோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சல சலென அவ்விடத்தும் பாய்ச்சி விட வேண்டும்'

என்று ஆர்வத்தைக் கூறுகின்றார்.

'தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்
இமயம் போலுயர்ந்த ஒரு நாடும்
தன் மொழியில் தாழ்ந்தால் விழும்'

என்று உறுதிபட உரைக்கின்றார்.

சாதிமத பேதங்களை அழித்துப் புதிய உலகைச் சமைக்க வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஒலிக்கின்றது?

'சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்று வரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்பு போல் அலக் கழிப்போம்—பின்னர்
ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்!'

என்கிறார்.

இவ்வாறு, சாதியை ஒழிக்கவும், தமிழை வளர்க்கவும் எழுச்சிப் பண் பாடி ஏற்றம் பெற்ற கவிஞர், தம்மை ஒரு போர் வீரன் என்று கூறுகின்றார். புவியிலே தீமைகளை ஒழிப்பதற்குப் போர் செய்யும் வீரர் அவர். கவிதை என்ற கைவாள் கொண்டு, வாய்மை என்ற கவசம் பூண்டு, தீமைகளை ஒழிப்பதற்குத் தீராத போரைத் திடமாக நடத்திய தீரர் நம் கவிஞர்.

'கவிதை எனக்கொரு கைவாள்— மார்பில்
கவசம் எனக்கு வாய்மை,
புவியில் தீமைகள் விழ —நான்
போர் செய்யும் ஓர் படை வீரன்'

ஆம்; பாவேந்தர் ஒப்பற்ற ஒரு படை வீரர்தாம். இதில் ஐயம் இல்லை.

போரிட்டார் அவர்; கவிதை என்ற கைவாள் ஏந்திப் போரிட்டார். ஆயினும் இன்னும் சாதித் தீமைகள் மறையவில்லை; மூடப் பழக்கங்கள் ஒழியவில்லை.

ஏன்?

நமது 'முடிவற்ற கண்ணுறக்கம்' என்று கவிஞரே கூறுகின்றார்.

தாம் படைத்துள்ள 'சஞ்சீவி பருவதச் சாரல்' இயற்றப்பட்ட நோக்கத்தைக் கூறுகின்றார்.

'மீளாத மூடப் பழக்கங்கள் மீண்டும் உமை
நாடாது இருப்பதற்கு நான் உங்களை இன்று
சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்குக் கூப்பிட்டேன்'

மேலும் மனம் நொந்து பாடுகின்றார்.

'இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந் தென்ன?
மூடப் பழக்கம், முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவது என்றோ? உயர்வதென்றோ?'

எத்தகைய ஏக்கக் குரல்?

நம்மூடப் பழக்கங்களும் முடிவற்ற கண்ணுறக்கமும் ஓடுவது என்றோ நாம் உயர்வது என்றோ? கவிஞுதிகளின் குமுறும் உள்ளங்கள் அமைதி பெறுவது எந்நாளோ?

❖

மேன்மை பெறுவோமாக!

ஜகத்குரு ஸ்ரீசங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

நம் பெரியோர்கள் எல்லாரும், நாம் சாஸ்திரப்படி நடக்க வேண்டும் என்று சொல்வார்கள். ஏன்? சாஸ்திரம் நமக்கு ஒரு நாளும் கெடுதலைச் சொல்லாது. சாஸ்திரப்படி நடந்தோமானால் நாம் சௌக்கியமாக வாழலாம். 'சாஸ்திராய ச சுகாய ச' என்று தான் சொல்லியிருக்கிறது.

சாஸ்திரத்தில் எல்லோருக்கும் பொதுவான சில தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டும்.

'அஹிம்ஸா ஸத்யம் அஸ்தேயம் சௌசம் இந்த்ரிய நிக்ரஹ:'

அஹிம்சை, சத்யம், அஸ்தேயம் அதாவது திருடாமல் இருப்பது, சௌசம் — உள்ளும் புறமும் சுத்தமாக வைத்திருப்பது, இந்திரிய நிக்ரஹம் அதாவது புலனடக்கம் இந்த ஐந்தையும் எல்லாரும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பது நல்லது.

இவற்றுள் முதலாவது அஹிம்சை. ஓர் எறும்புக்குக்கூடச் சிரமத்தைக் கொடுக்கக் கூடாது என்பதுதான் அஹிம்சை. புழு, பூச்சிக்குக் கூடத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதால் தான், சந்நியாசிகள் மழைக் காலத்தில் சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொண்டு ஒரே இடத்தில் தங்குகிறார்கள்.

சந்நியாசிகள் மட்டுந்தான் இந்த விரதத்தைக் கொண்டாட வேண்டும் என்பதில்லை. வடக்கேயுள்ள பிரதேசங்களில் கிருஹஸ்தர்கள் கூட, மழைக் காலத்தில் புழு, பூச்சிகள் அதிகம் வெளியே சஞ்சரிப்பதால் நான்கு மாதங்கள் அவர்கள் ஒரே இடத்தில் தங்கி வெளியூர் செல்லாமல் பஜனை போன்ற இறை வழிபாடுகளை நடத்தி வருகிறார்கள். இந்த அஹிம்சையை எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் நம் கொள்கை. அஹிம்சையை யோகத்துக்கும் ஒரு சாதனமாகச் சொல்லியிருக்கிறது. 'யோகஸ் சித்த வ்ருத்தி நிரோத;' — மனசை அடக்குவது தான் யோகம். அடுத்தது ஸத்தியம்.

'யதா த்ருஷ்டஸ்ய யதா ச்ருதஸ்ய ச ஆத்மாநுபவஸ்ய பரபுத்தி ஸங்க்ராந்தயே ததைவ உச்சார்ய மாணு வாக் ஸத்யம் இத்யுச்யதே'

ஸத்யம் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று நம் ஆசார்யர் ஆதி சங்கரர் தம் பாஷ்யத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதைத்தான் சொன்னேன். எப்படிப் பார்க்கிறோமோ, எப்படிக் கேட்கிறோமோ, மனசில் நமக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படியே அதைப் பிறர் புத்தியில் படும்படி சொல்வதுதான் சத்தியம் என்கிறார். இதைத்தான் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாமை வேண்டும் என்று தமிழில் சொல்வார்கள்.

மூன்றாவது அஸ்தேயம். திருடாமல் இருப்பது. பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. அந்த ஆசையை ஒழித்து விட்டால் திருட்டு எண்ணமே நமக்கு ஏற்படாது.

அடுத்தது சௌசம். அது இரண்டு வகை.

'சௌசம் த்விவிதம் ப்ரோக்தம்
பாஹ்யம் ஆப்யந்தரம் ததா
ம்ருத் ஜலாப்யாம் ஸ்ம்ருதம் பாஹ்யம்
பாவ சுத்திஸ் ததாந்தரம்'.

வெளியே சரீரம் சுத்தமாக இருக்கவேண்டும். ஜலத்தில் ஸ்நானம் செய்வது அதற்காகத்தான். சரீர சுத்திக்குச் சில சமயம் மண்ணை உபயோகப் படுத்தவும் சொல்லியிருக்கிறது சாஸ்திரம்.

கடைசியில் இந்திரிய நிக்ரஹம் — புலன் அடக்கம். கண், காது, நாவு, நாசி, ஸ்பர்சம் அதாவது தொடு உணர்ச்சி. பொதுவாக, புலன்களெல்லாம் நம்மை வேண்டாத விஷயத்துக்குத் தான் இழுத்துச் செல்லும். கோயிலுக்குப் போய் இறைவனைப் பார்ப்பதைவிட, வேறு எங்காவது போய்க் கண்ணைக் கெடுத்துக் கொள்ளத்தான் தோன்றும்.

அப்போதெல்லாம் நாம் சற்றுப் புத்தியை உபயோகித்து நல்லவழிக்கு அவற்றைத் திருப்ப வேண்டும். இதற்கெல்லாம் தெய்வ பக்தி, இறைவழிபாடு நமக்கு மிகவும் முக்கியம்.

இறைவன் இல்லாத இடம் இல்லை. தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார். எல்லா உயிர்களிடத்திலும் அவர் இருக்கிறார். இருக்கிறாரா, இல்லையா என்ற சந்தேகமே உண்டாகக்கூடாது. பிரஹ்லாதனைப்போல உறுதியான பக்தி வேண்டும்.

கீதையில் பகவானே சொல்லியிருக்கிறார்:

'ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம்!
விநச்யத்ஸு அவிநச்யந்தம் ய: பச்யதி ஸ பச்யதி!!'.

சாதாரணமாக நாம் எல்லாரும் ஒருத்தர் இறந்துவிட்டால் உயிர் போய்விட்டது என்கிறோம். ஜீவன் அழிந்துவிட்டது என்று யாராவது சொல்கிறோமா? சொல்வதில்லை. அதாவது ஜீவன் அழிவது இல்லை. வேறு கூட்டுக்குப் போய்விட்டது என்றுதானே அர்த்தம். அப்போது ஜீவனும் அழிவதில்லை. இறைவனுக்கும் அழிவு கிடையாது. இந்தக் கருத்தைத்தான் இந்தச் சுலோகம் சொல்கிறது:

அழியக்கூடிய இந்தச் சரீரங்களில் அழியாமல் இருக்கக் கூடிய பரமேசுவரனை யார் ஒருத்தர் பார்க்கிறாரோ, 'விநச்யத்ஸு' என்றால் அழியக்கூடிய சரீரங்களில் 'அவிநச்யந்தம்' — அழியாமல் இருப்பவரான பரமேசுவரனைப் பார்ப்பவர்தான் உண்மையிலேயே காண்பவர் ஆவார். மற்றவர் கண் இருந்தும் காணாதவரே.

இப்படி எல்லா உயிர்களிடத்திலும் பகவான் இருக்கிறார் என்ற இந்த உயர்ந்த எண்ணம் வந்துவிட்டால் நாம் எந்த ஜீவனுக்கும் கொஞ்சங் கூட ஹிம்ஸையே செய்யமாட்டோம். செய்யவே தோன்றாது. இதுதான் எல்லாவற்றையும் விட உயர்ந்த தர்மம்.

அஹிம்சை முதலான இந்தச் சாமான்ய தர்மங்களை, கடைப்பிடித்து இறைவன் அருளால் நாம் எல்லாரும் மேன்மை அடைவோமாக!



குருஞானசம்பந்தர்

சௌந்தரா கைலாசம்

பார்போற்றும் இனியதிருப் பாவை செய்த
  பைந்தொடியாள் வந்துதித்த கார ணத்தால்
சீர்பூத்து வளமோங்கி விளங்கி நின்ற
  ஸ்ரீவில்லிப் புத்தூரில் திகழ்ந்தி ருந்த
கார்காத்த வேளாளர் மரபில் வந்த
  கற்றறிந்த சுப்ரமண்ய பிள்ளை யாரும்
பேர்காக்கும் மீனாட்சி அம்மை யாரும்
  பெற்றமகன் ஞானசம் பந்தர் வாழ்க!

திங்களெனும் திருநாளில் பிறப்பெ டுத்துச்
  செந்தமிழும் சிவநெறியும் பதினா ராண்டு
பங்கமறக் கற்றதுடன் ஆக மங்கள்,
  பயன்மிகுந்த வடமொழிநூல் யாவும் தேர்ந்து
பொங்கிவரும் நல்லறிவுப் புனல்வெள் ளத்தில்
  பொழுதனைத்தும் திளைத்திருந்த புதல்வன் தன்னை
அங்கயற்கண் ணம்மையுடன் சொக்கர் வாழும்
  அழகுநகர் திருமதுரைக் கழைத்துச் சென்றார்.

நல்லுயிருக்குத் தாய்தந்தை எனவி ளங்கும்
  நாயகியை, நாயகனைக் கண்டு நெஞ்சக்
கல் லுருகிக் கண்வழியே நதியாய் ஓட,
  காசினியில் தான்கருதும் பெற்றோ ராகச்
சொல்லரிய அன்பருளும் கயற்கண் ணம்மை
  சொக்கலிங்கர் தமைவரித்துக் கொண்ட பின்னர்
புல்லுடலின் தாய்தந்தை யோடு மீண்டும்
  போவதற்கு மறுத்துரைத்தார் ஞானச் செல்வர்!

மாமதுரைக் கோயிலுக்குள் அமைந்த பொற்றா
  மரைக்குளத்தில் நீராடி நாளும் தெய்வ
நாமமெலாம் பக்தியுடன் ஓதி நின்ற
  நம்மருமைக் குருஞான சம்பந் தர்க்கே
ஆம்.ஒருநாள் அசரீரி வாக்குக் கேட்க
  அக்குளத்துள் அவர்மூழ்கிப் பெட்டி ஒன்றை
ஏமமுடன் வெளிக்கொணர்ந்தார்! அதற்குள் ஈசன்
  இருப்பிடங்கொண் டிருந்திட்டான்! வியப்பே அன்றோ.

செந்தமிழின் பண்பாடி உலக மெங்கும்
  சிவநெறிநன் றோங்கிடவே தொண்டு செய்த
சுந்தரரால் புகழ்விரியும் திருவா ரூரில்
  தூயவராய்த் திகழ்ஞானப் பிரகா சர்பால்
அந்தமிலாச் சிவஞான உபதே சத்தை
  அடைகவென எம்பெருமான் எடுத்துச் சொல்ல,
சிந்தையிலே நிறைந்திருந்த பக்தி யோடு
  சென்றடைந்தார் குருவாழ்ந்த திருப்ப திக்கே!

குருஞான சம்பந்தர் வருகை பற்றிக்
  கூறியநல் அசரீரி மொழியைக் கேட்ட
அருள்ஞானப் பிரகாசர் அன்பு காட்டி
  அஞ்ஞான இருள்நீக்கச் சித்தம் கொண்டே
ஒருதிங்கள் கிழமையிலே கோயி லுக்குள்
  உயர்தெட்சி ணாமூர்த்தி திருமுன் நின்று
பொருளோங்கும் சிவஞான சித்தி யாரால்
  போதித்தார் முப்பொருளின் இயல்பை எல்லாம்.

பதியோடு பசுபாச இயல்ப னைத்தும்
  பழுதறவே உணர்ந்தறிந்த ஞானப் பிள்ளை
அதிஅன்போ டாசானின் அளவில் லாத
  அருளினையும் உயர்வினையும் வியந்து போற்றி
விதிமுடியும் நிலைவரினும் குருபி ரானின்
  மேன்மைமிகு திருப்பெயரே அன்றி வேறு
கதியறியேன் எனத்தமிழில் முப்பத் தாறு
  கவிமணிகள் கோத்தரிய மாலை செய்தார்.

வித்தையிலே உயர்ஞானா சிரியர் சொன்ன
  மேலான நல்வசனம் உணர்ந்த தாலே
முத்திதனக் குறுதியென முடிவு செய்தார்!
  முதல்வனவன் தனையன்றி வேற னைத்தும்
மித்தையெனக் கண்டின்ப வாரி யுள்ளே
  மிகத்திளைத்தார்! மேன்மேலும் மேன்மை எய்திச்
சித்தியெலாம் கைவரவே பெற்று ஞானச்
  செல்வரவர் புவிவாழத் தாமும் வாழ்ந்தார்.

குருநாத ரோடுதிரு வாரூர்க் கோயில்
கும்பிட்டுத் திரும்புகையில் விளக்கை ஏந்தி
வரும்ஆள்அங் கில்லாத கார ணத்தால்
வளர்ஞானச் செல்வரதை ஏந்திச் சென்றார்!
திருவாசல் அருகினிலே சென்ற போது
'நிற்க'எனக் குருநாதர் செப்பக் கேட்ட
குருஞான சம்பந்தர் விளக்கை ஏந்திக்
கொண் டங்கே அசையாமல் நின்று விட்டார்.

இரவெல்லாம் வான்பிளந்து மழைபெய் தாலும்
இடம்பெயரா தப்படியே நின்றி ருந்த
குருஞான சம்பந்தர் மேற்ப டாமல்
கோலளவுக் கப்பாலே பெய்த தாலே
ஒருசிறிதும் நனையாமல் விடியும் மட்டும்
ஒளிகாட்டும் விளக்கோடு நின்றி ருந்த
அரியவொரு மாணவனின் திறத்தை எண் ணி
ஆசிரியர் மனம்விம்மி அதிச யித்தார்.

எல்லார்க்கும் அருளொளியை வழங்கு கின்ற
ஏற்றமிகு குருநாத ராகும் தன்மை
நல்லவிதம் நீரடைந்தீர் ஆத லாலே
நாடிவரும் பக்குவம் சேர்அன்ப ருக்குத்
தொல்லுலக வினை நீங்கி உய்யும் மார்க்கம்
சொல்லுதற்குத் திருத்தரும புரத்தை நோக்கிச்
செல்லுகவென் றுரைசெய்து விடைகொ டுக்கச்
சித்தமது நற்பேறென் றிவரும் சென்றார்.

தருமமது புரக்கும்எம தரும ராஜன்,
தமிழ்தந்த குறுமுனிவன், தேவர் வேந்தன்
அருமையுள எழுமாதர் களில்ஒ ருத்தி
ஆண் டவனை வழிபட்ட சிறப்பு மிக்க
திருநகரம் தருமபுரம் அடைந்து ஞானச்
செல்வரவர் தெய்வதரி சனம்செய் தாங்கே
ஒருமடத்தை அழகுறவே அமைத்துக் கொண் டிவ்
வுலகத்தில் அருளொளியைப் பரவச் செய்தார்.

நற்றமிழில் அருங்கவிதை பாடிச் சொக்க
நாதரவர் திருவடியைப் பரவி நின்றார்.
சிற்பரனின் திருவருளை விளக்கு தற்குச்
சிந்தையிலே தெய்வமணம் கமழும் வண் ணம்
அற்புதநல் நிகழ்ச்சிகளை உலக மக்கள்
அதிசயிக்கும் விதமாகக் காட்டி நின்றார்
முற்றுமுணர்ந் தொளிபெருக, ஆதீ னத்தின்
முதற்குரவ ரெனவிளங்கி வளர்ச்சி கண் டார்.

எட்டினிய அருள்ஞான நூல்கள் ஆக்கி
எட்டாத இறைவனடி எளிதில் யார்க்கும்
கிட்டுதற்கு வழியுரைத்த ஞானச் செல்வர்
கிழக்குதிக்கும் கதிரவனாய் ஒளிசேர்த் திட்டார்!
அட்டியின்றி உபதேச நெறிவி ளங்க
ஆனந்த பரவசதே சிகஸ்வா மிக்குத்
திட்டமுடன் பீடாதி பத்யம் தந்து
சிவபதத்தின் கீழ்ஜீவ சமாதி யா ,ர்.

ஆனந்த பரவசரோ ஞான பீடம்
அமர்ந்திட்ட அந்நாளே சிவயோ கத்தில்
தான்ஒன்றி ஒருஜீவ சமாதி கூடித்
தம்குருவின் கோயிலுக்கு மேற்குட் கார
ஞானந்தான் வடிவான குருபி ரானார்
நற்சீவ சமாதிதனில் இருந்து போந்தோர்
ஈனம்தான் இல்லாமல் மரபு காக்க
இன்னொருவர்க் குபதேசம் செய்து வைத்தார்.

குருஞான சம்பந்தர் தொடங்கி வைத்த
குருசீட பரம்பரையால் இந்த மண்ணில்
அருள்ஞானம் எப்பொழுதும் ஒளியைச் சிந்தும்!
அஞ்ஞானம் மறைந்தோடும்! தமிழ்மே லோங்கும்!
திருவாழும்! கலைவாழும்! வீரம் வாழும்!
சிந்தையிலே தெய்வநெறி பெரிதும் சூழும்!
பெருமானின் அருளாலே மேலும் மேலும்
பெருமையுடன் தருமபுர மரபு வாழ்க!



HEARTY DEEPAVALI GREETINGS

37th year of our dedicated service to the nation

G.E.M

FULFILS ALL YOUR ELECTRICAL NEEDS



GANAPATHY ENGINEERING MANUFACTURERS PRIVATE LIMITED

POST BOX NO. 2006 ● GANAPATHY POST ● COIMBATORE-641006
PHONE: 23024 & 30808 ● TELEX No. 855 - 338 GEM.

—B.P.

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



40 வருடங்களுக்கு மேலாக
நம்பகமான சேவை

- ★ மானோ பிளாக் பம்பு
- ★ பெல்ட் பம்பு
- ★ டொமெஸ்டிக் பம்பு
- ★ ஆயில் இன்ஜின் பம்பு
- ★ ஜெட் பம்பு
- ★ மோட்டார் பம்பு
- ★ மின்சார மோட்டார்
- ★ கரும்பு ஆலை
- ★ மின்சங்கு (Siren)
- ★ சப்மெர்சிபிள் (Submersible) பம்பு

நீடித்த உழைப்புக்கும், சிறந்த சேவைக்கும் "சுப்பையா" பம்புகளையும், மோட்டார்களையும் வாங்கிப் பயனடையுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

சுப்பையா பவுண்டரி

(ஸ்தாபிதம் 1944)
பாப்பநாயக்கன்பாளையம்
கோயமுத்தூர் - 641037.

தந்தி: பவுண்டரி" ★ போன்: 22935, 35390

Subbiah Foundry,
Coimbatore 641037.

வியாபார விசாரணைகள்
வரவேற்கப்படுகின்றன.

— B.P.

அடைக்கலம்

கிருபானந்தவாரி



அடைக்கலம் புகுந்தவரை ஆதரிப்பது ஆன்றோர்களின் கடன். குற்றம் புரிந்தவனாக இருப்பினும், தான் செய்த குற்றங்களை நினைத்து வருந்தி, உள்ளந் திருந்தி, அடைக்கலம் எனப் பொருந்துவானாயின் அவனை ஆன்றோர் ஆதரிப்பர்.

குற்றமே புரியாத குணக்குன்றாக விளங்கிய அப்பர் பெருமானை மகேந்திர பல்லவன் அமணருடைய சொற்களுக்கு இணங்கி நீற்றறையில் இட்டான். நஞ்சினை இட்டான். மதயானையை ஏவினான். கல்லிலே கட்டிக் கடலில் இட்டான். அப்பர் பெருமானுடைய பொறுமையின் பெருமையையும், அவருடைய தவ வலிமையையும் உணர்ந்து தான் செய்தது பெரும் பிழையென்று கருதி அப்பரை அடைக்கலம் புகுந்தான்.

இணரெரி நோய் வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

என்ற தெய்வப் புலவருடைய திருவாக்குக்கு இலக்கியமாக அப்பர் பெருமான் மகேந்திர பல்லவனை வாழ்த்தி அருள் புரிந்தார். அடைக்கலம் புகுந்தவனை அவன் புரிந்த அளவற்ற இமயம் போன்ற குற்றங்களைக் குறியாது ஆசீர்வதித்தார்.

அ ஆ! எத்தனை பெருந்தன்மை! என்னே கருணையின் திறம்? எண்ணுந் தொறும் எண்ணுந் தொறும் உள்ளம் உருகுகின்றது.

இன்னோர் எடுத்துக் காட்டு!

இராவணனால் விரட்டப்பட்ட விபீஷணர் இராமபிரானிடம் வந்து அடைக்கலம் புகுந்தார். சுக்ரீவன், சாம்புவந்தர், நீலன் முதலிய தோழர்கள், ''எம்பெருமானே, விபீஷணன் அரக்கன்; இரக்கம் இல்லாத இராவணனுடைய தம்பி. அசுரர்களை நம்புதல் தீது. இவனுக்கு அடைக்கலம் தருவது கூடாது'' என்று எல்லாரும் ஏக மனதாகக் கூறினார்கள்.

அநுமார், ''விபீஷணன் உத்தம குணம் பொருந்தியவன். தூயவன். அடைக்கலம் தரக்கூடியவன். இவனுடைய புதல்வி திரிசடை, சீதா பிராட்டியாருக்கு இன்னுரை கூறி உதவுகின்றாள். இராவணன் என்னைக் கொல்ல வந்தபோது 'மாதரையுந் தூதரையும் கொல்வது பழிபாவம்' என்று கூறி மறுத்தார். ஆதலால் விபீஷணன் அடைக்கலத்துக்கு உரியவன்'' என்று கூறினார்.

''இராமர் வானர வீரர்களைப் பார்த்து நீங்கள் என் மீது வைத்த அன்பினால் இவ்வாறு கூறினீர்கள். யாராக இருப்பினும் அடைக்கலம் என்றோரை ஆதரிப்பதுதான் அறம்'' என்று கூறி, வானர வீரர்களிடம் ஒரு சிறுகதை கூறுவாராயினார்.

ஒரு கானகத்தில் வானளாவிய மரத்தில் கணவனும் மனைவியுமான இரு புறாக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தன.

ஆண் புறாவுக்குச் சிறிது உடல் நலம் குன்றியபடியால் பெண் புறா இரை தேடப் புறப்பட்டது. ஆண் புறா, ''பெண்ணே! நீ சூதுவாது இல்லாதவள். நெடுந்தூரம் போகாதே. நம்மைப் பிடித்துத் தின்கின்ற கொடியவர்கள் கையில் சிக்கிக் கொள்ளாதே. உனக்குத் தெய்வம் துணை செய்யும். போய் வா!'' என்று கூறி விடை கொடுத்தது.

பெண் புறா இரை தேடிச் சென்றது. ஒரு மரத்தடியில் பொரி கடலைகளைச் சிந்தி ஒரு கொடிய வேடன் ஒளிந்திருந்தான். அந்த உணவையருந்தச் சென்ற பெண் புறாவை வேடன் லபக்கென்று பிடித்துக் கூட்டில் அடைத்துக் கொண்டு புறப்பட்டான்

திடீரென்று கருமேகங் கூடி இடித்து மழை பொழிந்தது. வேடன் மழையில் நனைந்து குளிரால் நடுங்கி அந்த மரத்தடியில் பசி தாகத்தால் களைத்து விழுந்தான்.

அந்த மரத்தில் வாழும் ஆண் புறா தன் மனைவியை நினைத்துப் புலம்புகின்றது. ''என் ஆருயிர் மனைவியே! பொழுது போயும் நீ வரவில்லையே? என் மனத்துக்கு இசைந்த மாணிக்கமே! உன்னைப் போன்ற உத்தமியைக் காணமுடியாதே. நீ எனக்கு முன் உணவருந்தமாட்டாயே! எனக்கு அன்புடன் உணவு ஊட்டி அன்பு செய்வாயே. எங்கே சென்றனையோ!



உன்னை எந்தப் பாவி பிடித்துக் கொண்டானோ?'' என்று கூறிப் புலம்பியது.

கூட்டில் இருந்த வெண் புறு தன் கணவனுடைய புலம்பலைக் கேட்டு இன்புற்றது. ''பிராணபதி! என்னை இந்த வேடன் பிடித்துக் கூட்டில் அடைத்து வைத்திருக்கின்றான். இவன் நமது வீட்டுக்கு வந்த விருந்தாளி. விருந்தோம்புவது இல்லறத்தானுடைய கடமை. கடமை நமது உடைமை. இந்த அன்பனுக்கு உணவு தந்து உபசரிப்பீராக!'' என்று கூறியது.

தன் மனைவியின் இன்னுரையைக் கேட்ட ஆண் புறு மகிழ்ச்சியடைந்தது.

காய்ந்த சுள்ளிகளை வேடனுக்கு முன் குவித்தது. அருகில் எரிகின்ற காட்டிலிருந்து கொள்ளியுடன் கூடிய சுள்ளியை வைத்து, தன் சிறகினால் விசிறி தீ மூட்டியது. வேடன் அந்த அக்கினியில் குளிர் நீங்கி இன்புற்றான்.

ஆண் புறு, ''ஐயா! உனக்கு நல்வரவு. கூட்டில் அடைபட்டுள்ள புறு என் மனைவி. இது நான் குடியிருக்கும் இல்லம். வீட்டுக்கு வந்த விருந்தினனுக்கு உணவு தந்து ஆதரவு காட்டுமாறு என் மனைவி எனக்குக் கட்டளையிட்டாள். விருந்தோம்புதல் இல்லறத்தானுடைய தலையாய கடமை. நீ புலால் உண்பவன். புறுக்களாகிய நாங்கள் புலால் உண்ண மாட்டோம். நான் இந்த நெருப்பில் விழுவேன். தீயில் வெந்த என் உடம்பைத் தின்று பசியாறுங்கள்'' என்று கூறி, நெருப்பில் வீழ்ந்து விட்டது.

வேடன் பெரிதும் வருந்தினான். உள்ளந் திருந்தினான். 'இந்தப் புறுவுக்கு உள்ள குணம் ஆறறிவு படைத்த மனிதனாகிய எனக்கு இல்லையே? நானும் ஒரு மனிதனா?' என்று கூறி, வில்லையும் அம்பையும் வீசி எறிந்தான். கூட்டைப் பிய்த்து எறிந்தான்.

பெண் புறு வெளியே வந்து கணவனைப் பிரிந்து வாழ விரும்பாது, ''வேடனே! என் கணவன் உடம்பு உன் பசிக்கு நிரம்பாது. என்னையும் உண்ணுக!'' என்று கூறி நெருப்பில் விழுந்தது.

இந்தப் புறுக்களின் அளவற்ற தியாகத்தின் உயர்வைக் கண்ட வேடனும் வெந்தீயில் வீழ்ந்தான். மூன்று உயிர்களும் பொன்னுருவம் பெற்று நற்கதியடைந்தன.

ஆதலால் புறுவுக்குள்ள நற்குணம் நமக்கு இருக்க வேண்டாவோ? பேடையைப் பிடித்துத் தன்னைப்

பிடிக் கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
விறகிடை வெந் தீமூட்டிப்
பாருது பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற்று யர்ந்த காதை
வேதத்தின் விழுமி தன்றோ!

இவ்வாறு இராமர் அடைக்கலத்தின் உயர்வை உணர்த்தினார். ❋



நல்ல அக்காள்

கி.வா.ஜகந்நாதன்

மணிநகரத்தில் கோதண்டபாணி செட்டியார் சிறிய பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார். அவருக்கு வரும் லாபம் வாழ்க்கையை நடத்தப் போதுமாக இருந்தது. அவருக்குச் சுந்தரி என்றும் கல்யாணி என்றும் இரண்டு பெண்கள் இருந்தார்கள். பிள்ளை இல்லை. தன் மூத்த பெண்ணாகிய சுந்தரியை மணியன் என்ற ஓர் ஏழைப்பிள்ளைக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்.

நாளடைவில் அவருடைய வியாபாரம் ஓங்கிச் செழித்து வளர்ந்து வந்தது. லாபமும் அதிகமாகக் கிடைத்தது. அதனால் தன் இளைய பெண் கல்யாணியைப் பெரிய பணக்காரனாகிய வேலாயுதனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. உறவினர்களும் நண்பர்களும் வந்துகூடித் திருமணத்தைப் பார்த்து மகிழ்ந்து சிறப்பான விருந்தை உண்டு சென்றார்கள்.

செட்டியாருக்கு மூத்த பெண்ணின்மேல் அவ்வளவு வாத்ஸல்யம் இல்லாமல் இருந்தது. இளைய பெண்ணாகிய கல்யாணியிடம் மிகவும் அன்பு பாராட்டி அடிக்கடி வீட்டுக்குமாப்பிள்ளையோடு அழைத்து வந்து, விருந்தளித்துப் பரிசுகளையும் தந்து வந்தார். அதனால் அவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள்.

ஒரு சமயம் செட்டியாருக்கு உடல் நலம் இல்லாமல் போயிற்று. அதனால் மிகுந்த துன்பத்துக்கு ஆளானார். மூத்தவள் சுந்தரி அடிக்கடி வந்து தன் தந்தையின் உடல் நலத்தை விசாரித்து விட்டுப் போவாள். எப்படியாவது தன் தந்தைக்குக் குணம் ஆகவேண்டும் என்ற கவலை அவளுக்கு அதிகமாக இருந்தது. என்ன செய்வது என்று யோசித்தாள். ஒரு டாக்டரிடம் போய், அவரை அழைத்து வந்து தன் தகப்பனாருக்குச் சிகிச்சை செய்ய வேண்டிக்கொண்டாள். அவர் செய்த சிகிச்சையில் அவருக்கு மெல்ல மெல்லக் குணம் ஆகிவந்தது. இளைய பெண் கல்யாணி தன் தகப்பனாரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மூத்த பெண்ணால் தமக்குக் குணம் ஏற்பட்டதை அறிந்து அவருக்கு அவள் மேல் அன்பு உண்டாகத் தொடங்கியது.

எத்தனையோ செல்வமாக வளர்த்துப் பல பொருள்களைக் கொடுத்துப் பாராட்டி வந்த இளைய பெண் இப்படிப் பராமுகமாக இருக்கிறாளே என்ற தாபம் அவருக்கு உண்டாயிற்று. பெரிய பெண் சுந்தரி டாக்டரை அழைத்து வந்து குணமாக்கியதால் அவள்மீது இப்போது அன்பு உண்டாகத் தலைப்பட்டது. 'இவளை நாம் இதுகாறும் கவனிக்கவில்லையே' என்ற பச்சாத்தாபம் அவருக்கு மனத்தில் தோன்றியது. அதனால் அதுகாறும் இருந்ததுபோல இல்லாமல் அவளிடத்தில் தனியான அன்பு பிறந்தது. அவள் வரும்போதெல்லாம் அவளுடைய க்ஷேமலாபங்களை ஆதரவுடன் விசாரிக்கத் தொடங்கினார். தன் தகப்பனாருடைய அன்பைக் கண்டு அவள் வியப்பை அடைந்தாள்.

செட்டியார் இப்போதெல்லாம் சுந்தரியைப் புறக்கணிக்காமல் அன்பு காட்டி வந்தார். அவளுக்கு ரூ.1000 பரிசு அளித்தார். ''அப்பா, இதெல்லாம் எனக்கு எதற்கு? நான் செய்ய வேண்டிய கடமையைத்தானே செய்தேன். இதற்காகக் கூலியைப் போல இந்தப் பணத்தைத் தருகிறீர்களே! இதை நான் வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன்?'' என்றாள்.

''இல்லை அம்மா, இவ்வளவுகாலம் உன்னுடைய அன்பை அறியாமல்

ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டேன். எனக்கோ பிள்ளை இல்லை. என் சொத்து உங்கள் இருவருக்குத் தானே சேரும்? சின்னவளுக்கு ஒரு பைசாவும் தரப் போவதில்லை. அப்படியே உயில் எழுதி விடுகிறேன். நீ சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து மிகவும் திருப்தி அடைகிறேன். கல்யாணி என்னை வந்து இப்போதெல்லாம் பார்ப்பதில்லை. நான் பணம் கொடுக்கக் கொடுக்க வாங்கிக் கொண்டாளே தவிர, கொஞ்சமாவது என்னிடத்தில் நன்றி விசுவாசம் இல்லாமல் இருக்கிருள். அவளுக்குச் செய்த உபகாரம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீரைப் போல ஆயிற்று. உன்னுடைய நல்ல குணத்தை அறிய, அறிய, இதுவரையில் உன்னைப் புறக்கணித்தேனே என்ற எண்ணம் என் மனத்தைக் குடைகிறது. இந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு நல்ல புடைவை, நகைகள் எல்லாம் வாங்கிக்கொள், அம்மா!'' என்று செட்டியார் சொன்னுர்.

எத்தனை மறுத்தாலும் தன் தகப்பனுர் பணத்தை வாங்கிக்கொள்ளும்படி வற்புறுத்தியதனுல் அவருடைய மனம் திருப்தி அடைய வேண்டும் என்று அதை வாங்கிக் கொண்டாள். அந்தப் பணம் முழுவதையும் தானே வைத்துக் கொள்ள விரும்பவில்லை. 'பாவம்! கல்யாணியும் இவருடைய பெண் தானே? அவளுக்கும் இந்தப் பணத்தில்உரிமை இருக்கிறது அல்லவா? அவளுக்கும் இந்தப் பணத்தை பாதி பகிர்ந்து கொடுக்க வேண்டும். அவள் சந்தோஷப்பட்டா எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கும்' என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது.

ஒரு நாள் கல்யாணியையும் அவளுடைய கணவனையும் வீட்டுக்கு அழைத்து வந்து விருந்து போட்டாள். சாப்பிட்டு முடிந்த பிறகு, ''இரு, தங்கச்சி, உனக்கு ஒரு பரிசு தரப் போகிறேன்'' என்று சொல்லித் தன் தகப்பனுர் கொடுத்த பணத்தில் பாதியான ரூ. 500ஐ அவளிடம் கொடுத்தாள். அதைக் கண்டு கல்யாணி ஆச்சரியப்பட்டுப் போனுள். ''என்ன அக்கா இது? உனக்கென்று அப்பா வழங்கிய பணத்தில் எனக்குப் பாதி தருகிருயே! உன்னைப் போல நல்ல அக்காளை எங்கும் நான் பார்த்ததில்லை. தமக்குக் கிடைத்த பணத்தைத் தாங்களே வைத்துக் கொள்ளுவார்களே அல்லாமல், ஒரு பைசா மற்றவர்களுக்குத் தருவதற்கு மனம் வராது. நீயோ உனக்காகவே அப்பா தந்த பணத்தை எனக்கும் பகிர்ந்து கொடுக்கிருய். கடவுள் உனக்குச் சகல சௌபாக்கியங்களையும் வழங்குவார் என்பது திண்ணம்'' என்று சொல்லி அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டாள்.

''உன்னைப் போல நல்ல அக்காள் எனக்குக் கிடைத்தது என் பாக்கியம்'' என்று அவளை வணங்கி எழுந்தாள். அந்த நல்ல அக்காள் அவளை, ''நீ நன்ருகக் குடும்பத்துடன் வாழ்வாயாக!'' என்று ஆசிர்வாதம் செய்தாள்.

அந்த நல்ல அக்காளை வாயாரப் புகழ்ந்தபடியே வீட்டுக்குத் திரும்பினுள். அவளுக்குத் தான் பெற்ற பணத்தில் பாதி கொடுத்ததனுல், 'இவளைப் போல நல்ல அக்காள் இருந்தால் எல்லாக் குடும்பங்களும் சந்தோஷமாக இருக்கும்'' என்ற எண்ணம் அவள் மனத்தில் தோன்றியது. ''என் அக்காள் மிகவும் நல்ல அக்காள்'' என்று அடிக்கடி தன் தோழிமார்களுடன் சொல்லி மகிழ்ந்தாள்.

உலகத்தில் இப்படிச் சகோதரிகள் இருந்தால் குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவு ஏது? ❋

புகையிலை போடுபவர்கள் விரும்புவது

தங்கபஸ்பம் புகையிலை

காரைக்குடி - 623001

பெண்களின் நிஜம்

சரோஜினி வரதப்பன் (சென்னை நகர ஷெரீஃப்)

பெண்களுக்குச் சமூகத்திலுள்ள அந்தஸ்து அல்லது நிலை என்பதுபற்றிச் சொல்லப் போனால் அது பெரும் பரவலான அம்சமாகும். மனித சமுதாயம் தோன்றிய நாள் முதல் உலகம் எங்கும் பெண்களின் நிலைமை பல வேறு கோணங்களில் மாறி வந்துள்ளது. நமது பாரத நாட்டுப் பெண்களின் நிலைமையும் அதை ஒட்டியே அமைந்திருக்கிறது.

1981 சென்சஸ் கணக்குப்படி பெண்களின் எண்ணிக்கை 48.4 சதவீதம் என்று கூறப்படுகிறது. அதில் பெரும்பாலான பெண்கள் கிராமங்களில் வசிப்பவர்கள். நமது தேசத்தில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையில் பெண்கள் பங்கு 17·4 சதவீதந்தான். அதில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 25 சதவீதந்தான். பாரத நாடு சுதந்தரம் பெற்று 38 ஆண்டுகள் ஆனபின்பும் பெண்களின் அறியாமை முற்றும் அகற்றப்படவில்லை என்பது பெண்மைக்குப் பெருத்த பலவீனமும், அவமானமும் ஆகும் என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

பாரத நாட்டின் சாசனத்தில் பெண்களுக்குச் சம உரிமை, சம வேலை வாய்ப்புகள் யாவும் தரப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைச் செயலாக்க முடியாத நிலைக்குக் காரணம், நமது நாட்டுப் பெண்களின் அறியாமையும், அலட்சிய மனப்பான்மையுமே.

உலக மகளிர் ஆண்டு என்று 1975-ஆம் ஆண்டு ஐக்கிய நாட்டுச் சபை பிரகடனப் படுத்தியதன் மூலம் ஓரளவு பெண்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவருகிறது. அரசு நிறுவனங்களும் ஏற்ற திட்டங்களை வகுத்துப் பெண்களும் அரசுப் பணியில் ஈடுபட முன் வந்ததை நாம் வரவேற்கிறோம். ஆனால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் அடிமைகளாக இருந்தவர்களை ஒரே ஆண்டில் முன்னேற்றுவது துர்லபமான காரியம் என்பதை உணர்ந்து ஐக்கிய நாட்டுச் சபை உலக மகளிர் ஆண்டினை ஒரு பத்தாண்டுத் திட்டமாக (Decade) பிரகடனப்படுத்தியது. அந்தப் பத்தாண்டும் 1985-ஆம் ஆண்டில் முடிய இருக்கிறது. எனவே பெண்கள் சங்கங்களும், அரசு ஸ்தாபனங்களும் தீவிரமாக இதில் தங்கள் கவனத்தைச் செலுத்தினால் அன்றிப் பெண்களின் நிலை உயர முடியாது,

பெண்கள் அந்தஸ்து உயர மூல காரணம் அறியாமை ஒழிப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனைய நாடுகளுடன் நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியப் பெண்களில் பெரும்பாலோர் இன்னும் கை நாட்டுபோடும் நிலையிலேதான் இருக்கிறார்கள். நிலைமை மாற, கற்றவர் ஒவ்வொருவரும் தம் கடமையைச் செய்ய முன் வர வேண்டும், பெண்கள் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதை ஒரு பெரும் இயக்கமாக ஏற்றுக்கொண்டாலன்றி நாம் வெற்றி காண முடியாது. நம்மைப் போலவே அதிக மக்கள் தொகை கொண்ட, ஏழைமை நாடான சீனா எவ்வளவு சீக்கிரம் அறியாமையை நீக்கியுள்ளது என்பதைப் பார்க்கும்போது 'நாமும் ஏன் இதில் வெற்றிபெற முடியாது' என்ற கேள்வி எழுகிறது? அரசு மட்டும் எதையும் சாதிக்க முடியாது. மக்களின் ஒத்துழைப்பும் தேவை.

அடுத்த பத்தாண்டுக்குள் நாம் யாவரும் சேர்ந்து, அரசு ஸ்தாபனங்கள், நகராண்மைக் கழகங்கள், பஞ்சாயத்து நிறுவனங்கள், கல்வி ஸ்தாபனங்கள், வியாபார நிறுவனங்கள், தொழிலாளர் இயக்கங்கள், மாதர் சங்கங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பொதுமக்களின் ஆதரவுடன் இதை மாபெரும் இயக்கமாகச் செய்து, பெண்களின் அறிவுக் கண்களைத் திறக்கும் பணியில் ஈடுபட வேண்டும். அறியாமை நீங்கினால்தான் அரசின் ஏனைய பல க்ஷேம நலத் திட்டங்களான சுகாதாரம், சமூக நலம், விவசாயம், பொருளாதாரம் ஆகிவற்றில் உயர்வு காணும். மற்றத் திட்டங்களின் முழுப்பலனையும் காண முடியும்.

வேகமாக வளர்ந்து வரும் நாகரிக சமுதாயத்தில் இன்று சமூக சேவை செய்வதுகூடச் சற்றுக் கடினமாக உள்ளது. சுதந்தரம் பெறுமுன் மக்களிடையே இருந்த தேசபக்தி, தியாக சிந்தனை, பகிர்ந்து வாழும் [illegible] இன்று நாளடைவில் குறைந்து, சுயநலம் தலைதூக்கி, தேவைகளும் அதிகமாகி விட்டதைப் பார்க்கின்றோம். எவ்வளவு இருந்தாலும் திருப்தி ஏற்படுவதில்லை. அதற்கேற்ப விலைவாசிகள் உயர்ந்து நேர்மையாக வாழ்பவர்களுக்குச் சங்கடமான நிலைமை உண்டாக்கியுள்ளது. க்ஷேம நல அரசும், சமூகநல இலாகாக்களுமே மக்களின் சமூக நலனைப் பேணிக் காக்கட்டும் என்ற மனப்பான்மை வளர்ந்துவிட்ட போதிலும், மக்கள் ஈடுபாட்டையும், சேவை மனப்பான்மையையும் அறவே நீக்க முடியாது என்பதைக் கற்றறிந்தவர் அறிவார்கள்.

நம நாட்டின் மற்றொரு குறைபாடு, புதிதாகப் பல ஸ்தாபனங்களை உருவாக்கி அவரவர் பெருமை தேட முற்படுவது. பழமையான சமூக நல நிறுவனங்களை ஒருங்கிணைத்து மக்களின் தேவையை அறிந்து செயல்பட்டால்தான் பலன் சிறப்பாக இருக்கும். குறிப்பிட்ட பகுதிகளில், ஏன், வீதிதோறும் சமுதாய நலக் குழுக்களை அமைத்து, அங்கே உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க முயற்சி செய்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்!

செலவினமும் குறையும். வண்டி தேட வேண்டாம். வீதிக்கு ஒரு குழு அமைத்து அங்குள்ளவர்களுக்கு முதியோர் கல்வி அளித்து நூற்றுக்கு நூறு சதவீதம் வெற்றி பெறச் செய்வது, குடும்பநலத் துறையில் மக்கள் பெருக்கத்தைப் பூஜ்ய சதவீதத்துக்குக் குறைப்பது, வேலை வாய்ப்பு, சுய வேலை தேடித் தருவது, சுகாதாரம், சுற்றுப்புறச் சுகாதாரம் ஆகியவற்றைக் கவனிப்பது, முக்கியமாகப் பெண்களுக்கு ஏற்படும இன்னல்களுக்குத் தீர்வு காண்பது, ஒரு சிறு சட்ட உதவிக்குழு அமைப்பது என்று செய்ய முற்பட்டால் தமிழ் நாடே சுபிட்சம் அடைந்து விடும். மனம் இருந்தால் நடக்காதது ஒன்றுமே கிடையாது.

1985-ஆம் ஆண்டில், ஆக்கபூர்வமான திட்டங்களைத் தமிழக மாதர்கள் ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும். சமூகக் கேடுகளைக் களைந்து பெண்கள் படும் வேதனைகளுக்கு முடிவு காண வேண்டும். வேலைக்குச் செல்லும் மகளிர்க்கு ஹாஸ்டல் வசதி, தாய்மார்களின் குழந்தைகளுக்குக் காப்பகங்கள், அவதியுற்ற பெண்கள் தங்கப் புகலிடம், அவர்களுக்குச் சுலபமாகச் சட்ட உதவி ஆகியவை இன்று மிக மிகத் தேவை. எத்தனை சகோதரிகள், படித்த சகோதரிகள், மாமியார் கொடுமை, குடிகாரக் கணவனின் துன்புறுத்தல், வரதட்சிணைக் கொடுமை ஆகிய துன்பங்களை ஏற்று, வாழ வகை தெரியாமல் தவிக்கிறார்கள். ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா? தவறு செய்தவருக்குத் தகுந்த தண்டனை வேண்டாமா? பெண்கள் விழித்தெழ வேண்டும். தங்கள் உரிமைகளைப் பெறப் பெண்கள் போராட வேண்டும். அதே நேரத்தில் நம் பாரதப் பண்பாடு, பாரம்பரியம், நாகரிகம் ஆகியவற்றையும் காப்பாற்ற வேண்டும். பாரதி கண்ட புதுமைப் பெண் உருவாகட்டும். வாழ்க, பாரதம்! ❋

ஒரு ரூபாயில் நீங்கள் என்னென்ன வாங்கமுடியும்?

சற்று சிந்தியுங்கள். தினமும் ஒரு ரூபாய்க்கும் குறைந்த செலவில் நீங்கள் உங்கள் குடும்பத் தினரின் பாதுகாப்பையும் மன நிம்மதியையும் வாங்க முடியும், நியூ இந்தியாவின் டொமெஸ்டிக் இன்சூரன்ஸ் பேக்கேஜ் ஸ்கீம் உதவியினுல்.

1. சொந்த ஆபத்து இன்சூரன்ஸ்
2. மருத்துவமனைச் செலவு பாலிஸி
3. நெருப்பு மற்றும் திருட்டு இன்சூரன்ஸ்
4. மின்சார சாதனங்கள் உடைந்துபோதல்
5. டி.வி செட் பழுதடைதல்
6. பெடல் சைக்கிள் இன்சூரன்ஸ்
7. பயணம் செய்யும் போது சாமான்கள் தொலைந்துவிட்டால் அதற்கு இன்சூரன்ஸ்
8. சொந்த கடன் களுக்கு இன்சூரன்ஸ்

NEW INDIA ASSURANCE
A subsidiary of the General Insurance Corpn. of India.

எவ்வளவு கொஞ்சம், எத்தனை அதிக பாதுகாப்பு.

Contour Ads-NIA-960A/83 Tam

இளந்தலைமுறை இந்திய வீரர்கள் —

உலக விளையாட்டரங்கில் இந்தியா பின்தங்கியிருக்கிறது என்று சொன்னால் நாம் ஒப்புக்கொள்ள லாம். ஆனால் தேசிய அளவிலான விளையாட்டுக்களில் தமிழ் நாட்டின் பணி மிகவும் சிறப்பாக அமைந் திருக்கிறது என்பது உண்மை.

குமார் ஆறடி உயரம் இருந் தால் எல்லோருமே கூடைப்பந் தாட்டம் ஆட அழைப்பார்கள். இன்று ஸ்ரீமதியோ கைப்பந்தாட் டம் ஆடிப் பெயரையும், புகழை யும் பெற்றிருக்கிறார். சாரதா வித்யாலயாவில் பதின்மூன்றாவது வயதில் பயிற்சியாளர் குருநாதனின் கீழ்க் கைப்பந்தாட்டம் போட்டி யில் பங்குபெற ஆரம்பித்த ஸ்ரீமதி ஒரே ஆண்டில் தமிழகப் பள்ளிக் குழுவில் இணைந்தார். இவர் பிளஸ் டூ படிக்கும்போதே தமிழ் அணிக்கு விளையாட ஆரம்பித்தார்.

கல்லூரியில் படிக்க ஆம்பித்த பிறகு இந்த விளையாட்டில் ஆர்வம் அதிகமாகியது. சியோலில் நடந்த ஜூனியர் ஏஷியன் விளையாட்டுப் போட்டியில் இந்திய அணியில் இவர் இடம் பெற்று விளையாடி யது, இவரைப் பொறுத்தவரை மறக்க முடியாத ஒன்று. காரணம், இதுதான் இவருடைய முதல் வெளி நாட்டுப் பயணம்.

மெக்ஸிகோவில் நடந்த உலக ஜூனியர் போட்டியில் கலந்து கொண்டு பலருடைய பாராட்டுதல் களைப் பெற்றார். இந்தியாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இவர் ஆறாவது இடத்தைப் பெற்று இந்திய அணியில் இருந்தார்.

''இன்று பல நாடுகளில் பெண் கள் விளையாட்டுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகிறார்கள். ஆனால் இந்தியாவில் அந்த அள வுக்கு இல்லை என்பதை வருத்தத் துடன் சொல்லிக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இந்த அளவுக்கா வது நாங்கள் உயர்ந்திருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் இந்தியக் கைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் சிவந்தி ஆதித்தனும் செயலாளர் முருகனுந்தான்'' என்று கூறும் ஸ்ரீமதி, இந்திய அரசாங்கத்தின் விளை யாட்டுக்கான உதவித் தொகையைத் தொடர்ந்து ஐந்து வருடங்களாகப் பெற்று வருகிறார். பட்டப் படிப்பை முடிக்குமுன்பே, விளையாட்டு வீரர் என்ற காரணத்தினால் தென்னக ரெயில்வேயில் இவருக்கு வேலை கிடைத்தது.

விளையாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்தினர் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக 1981-ஆம் வருடம் இவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கினார்கள்.

தம் உயரத்தையே உறுதுணை யாகக்கொண்டு இன்று கைப்பந் தாட்டத்தில் உயர்ந்திருக்கும் ஸ்ரீமதி மேலும் பல வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துவோம்,

கைப் பந்தாட்டத்தில் ஸ்ரீமதி

மூளைக்கு வேலை தரும் விளையாட்டு செஸ், தமிழ்நாட்டு இளைஞர் ரவிகுமார் பதினொரு வருடங்களுக்கு முன் செஸ் ஆடத் தொடங்கி, இன்று வெவ்வேறு நாடுகளிலுள்ள செஸ் விளையாட்டு மேதைகளை வென்று சாதனையும் புரிந்து வருகிறார்.

தம் சிறு வயதில் தம் தகப்ப னார் வைத்தியநாதனிடம் செஸ் விளையாட்டை ஓரளவு கற்றார். சென்னையில் இவர் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த சோலார் சுப்ர மணிய ஐயர் செஸ் ஆட்டத்தில் தேர்ந்தவர். தம் வீட்டுக்கு வரும் இளைஞர்களுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்களை நல்ல விளை யாட்டு வீரர்களாக உருவாக்குவதில் விருப்பம் கொண்டவர்.

அதிருஷ்டவசமாக ரவிகுமாருக் கும் ஊக்கம் அளித்து அவர் ஆரம்பித்து வைத்த 'செஸ்' விளையாட்டு இன்று வரை தொடர் கிறது.

இவர் அதிக வெற்றிகளைக் குவித்த வருடம் 1977—84தான். தேசிய அளவிலான ஜூனியர் பட்டத்தைப் பெங்களூரிலும், சென்னையில் தேசிய அளவிலான 'ஏ' பிரிவுப் போட்டியில் இரண்டாவது இடத்தையும் பெற்றார். இந்தச் சமயத்தில்தான் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு வந்தது.

டெஹ்ரானில் நடந்த ஆசிய நாடு களுக்கான போட்டியில் இவர்முதலில் ஆறாவது இடத்தையும், பின்னர் முதல் இடத்தைப் பெற்று வெற்றி பெற்றதால் தங்கப் பதக்கத்தையும் அமெரிக்க டாலர்களையும் பரிசாகப் பெற்றார். இவை எல்லாவற்றையும் விட மறக்க முடியாத பரிசான 'இண்டர்நேஷனல் மாஸ்டர்' என்ற பட்டத்தை இந்த வெற்றியின் விளை வால் இவர் பெற்றதுதான்.

இந்த வருடம் லண்டனில் நடந்த லாயிட்ஸ் பேங்க் செஸ் போட்டியில் முன்னாள் உலகச் செஸ் சேம்பியனான போரீஸ் ஸ்பாஸ்கியை இவர் தோற் கடித்தார். ஆனால் இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டர் என்ற விருதை இரண்டே புள்ளிகள் வித்தியாசத்தில் இவர் பெற முடி யாமல் போய் விட்டது.

ஏழு வயதுச் சிறுவன் ஆனந்த், எல்லாச் சிறுவர்களையும் போலப் பள்ளிக்குச் சென்றுவிட்டு மாலை வீடு திரும்பினான். புத்தகங்களை ஒரு புற மாக வைத்துவிட்டுத் திரும்பியபோது தன் சகோதரனும் சகோதரியும் ஓர் ஓரமாக உட்கார்ந்து கொண்டு செஸ் விளையாடியதைப் பார்த்தான். அவர்கள் அருகே சென்று நின்றான். அவர்கள் ஆடுவதைக் கூர்ந்து கவ னித்தான் ஆனந்த். விவரங்கள் முழுமையாகப் புரியாவிட்டாலும்,

ஆட்டத்தில் ஆர்வம் எழுந்தது சிறுவனுக்கு. அப்போது எதிர் காலத்தில் செஸ் ஆட்ட நிபுணனாக வரப் போகிறான், அந்த 64 கட்டங்களைக் கொண்டு உலகப் புகழ் பெறப் போகிறான் என்பதை ஆனந்தேகூட அறிந்திருக்கமாட்டான்.

அந்தச் சிறிய வயதில் செஸ், ஆனந்தை ஆட்கொண்டதால்தானோ என்னவோ, இன்று இந்தியாவிலேயே மிகக் குறைந்த வயதில் (14) இன்டர்நேஷனல் மாஸ்டர் பட்டம் பெற்றுச் சாதனை புரிந்திருக்கிறான். சில மாதங்களுக்கு முன் லண்டனில் நடைபெற்ற லாயிட்ஸ் பாங்க் செஸ் போட்டியில் 6½ புள்ளிகள் பெற்று



ஆனந்த்

ரவிகுமார்

முதல் இடத்தை அடைந்தார். இவருக்கு முன்னால் இந்தப் போட்டியில் வென்றவர்கள் எல்லாரும் கிராண்ட மாஸ்டர் பட்டம் பெற்ற செஸ் விளையாட்டு விற்பன்னர்கள் தாம்.

கடந்த பதினைந்து மாதங்களாகவே ஆனந்த் பல்வேறு வகையான செஸ் போட்டிகளை வென்று பரிசுகளையும் பதக்கங்களையும் பெற்றவண்ணம் இருக்கிறார். அவற்றில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் தேசிய ஸப்-ஜூனியர் போட்டி, தேசிய ஜூனியர் போட்டி, ஆகிய இரண்டிலும் முதலிடத்தையும், பதினாறு வயதுக்குட்பட்ட 'உலக காடட்' செஸ் போட்டியில் (பாரிஸ் நகரத்தில் நடைபெற்றது) மூன்றாவது இடத்தையும் ஆனந்த் பெற்றார். இந்தியக் கோப்பைக்கான போட்டியில் நான்காவது இடத்தையும், ஃபின்லாந்தில் நடைபெற்ற உலக ஜூனியர் பட்டத்துக்கான போட்டியில் பத்தாவது இடத்தையும் அடைந்தார். ஆனந்தைப் பொறுத்தவரை மிக மகிழ்ச்சியான நேரம், லாயிட்ஸ் பாங்க் ஜூனியர் போட்டியில் முதலிடத்தைப் பெற்றது தான்.

டான் பாஸ்கோ பள்ளியில் பத்தாவது வகுப்புப் படித்து வரும் ஆனந்த், செஸ் போட்டியில் எப்படி வெற்றி வீரராகத் திகழ்கிறாரோ, அதே அளவுக்குப் படிப்பிலும் முதல் நிலையை அடையத் தவறுவதில்லை. படிப்பும் செஸ்ஸும் நேரத்தை எடுத்துக் கொண்டாலும் அவ்வப்பொழுது டென்னிஸ் விளையாடவும், நீச்சல் பயிற்சியை மேற்கொள்ளவும் தவறுவதில்லை.

அடுத்து ஆனந்த் எதிர்பார்த்துக் காத்திருக்கும் செஸ் போட்டி கிரீஸில் நடைபெற இருக்கும் செஸ் ஒலிம்பியாட்தான். ஆனந்த் பெற்று வரும் செஸ் வெற்றிகளைப் பார்க்கும்பொழுது இன்டர்நேஷனல் மாஸ்டரான ஆனந்த் கூடிய விரைவிலேயே இன்டர்நேஷனல் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தையும் பெறுவார் என்று எதிர்பார்க்கலாம். வாழ்க ஆனந்த், வளர்க!

ஒலிம்பிக் போட்டிகள் விமரிசையாக நடந்து கொண்டிருந்த நேரம். பத்து வெவ்வேறு விளையாட்டுக்களில் வெற்றி வாகை சூடி, உகாத்லின் போட்டியில் சாதனை வீரராக டாலி தாம்சன் வெற்றி பெற்றதைப் பார்த்தவுடன் பலர் பூரித்துப் போனார்கள். வேறு சிலர் தங்கள் வீட்டிலிருந்தே மானசிகமாக வாழ்த்துச் செய்தி அனுப்பினார்கள். ஆனால் பலருக்குத் தெரியாத ஒன்று, சென்னையிலும் இம்மாதிரி உகாத்லின் போட்டியில் தேசிய அளவில் மூன்றாவது இடத்தைப் பெற்ற ஒருவர் இருக்கிறார் என்பதுதான்.

ஆறடி இரண்டங்குலம் உயரமுள்ள எரால்ஹார்ட் ஆரம்பத்தில் இருந்த இடம் திருச்சி. அங்கு அவர் அதிகமாக விளையாடிய விளையாட்டுக்கள் கிரிக்கெட்டும் ஹாக்கியுமே.

மாவட்ட அளவில் இந்த இரண்டு விளையாட்டிலுமே இவர் அன்று பங்குகொண்டார். இந்தச் சமயத்தில்தான் இவருடைய தந்தையாருக்கு வேலை மாற்றம் ஏற்பட்டது. அதனால் குடும்பமே சென்னைக்குக் குடியேறியது. அதே வருடம் இவரே ஏ. ஜே. டி. ஸூஸாவின் தலைமையிலான டான்பாஸ்கோ தடகளப் போட்டியாளர் சங்கத்தில் சேர்ந்தார். அன்றிலிருந்து இவருக்கு நல்ல நேரம் தொடங்கிவிட்டது என்று கூறலாம்.

லயோலாக் கல்லூரியில் படிக்க ஆரம்பித்தது இவருடைய வாழ்நாளில் மறக்க முடியாத திருப்பம். ஒவ்வோர் ஆண்டும் கல்லூரிகளுக்கிடையே நடைபெறும் ஏ.எல். முதலியார் கோப்பைக்கான போட்டியில் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரிக்கும், லயோலாக் கல்லூரிக்குமே அதிகப் போட்டி இருந்தது. இதே நிலை 1980-ஆம் வருடம் ஏற்பட, லயோலாக் கல்லூரியின் உடல் பயிற்சியாளர் ஹார்ட்டை அழைத்து உகாத்லின் போட்டியில் பங்கு கொள்ளச் சொன்னார்.

அதுவரை ஓட்டப் பந்தயத்திலும் தடை ஓட்டப் போட்டியிலும், குத்திட்டி எறிதல் போட்டியிலுமே பங்கு பெற்று வந்த ஹார்ட், உகாத்லின் போட்டியில் பங்கு பெறச் சந்தர்ப்பம் கிடைத்ததை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார்.

அன்று எல்லோரும் எதிர்பார்த்த ஸலீமுல்லாவைத் தோற்கடித்து முதலிடத்தைப் பெற்றார். அன்று ஆரம்பித்த வெற்றிப் பயணம் கொஞ்சம் கொஞ்சமாகத் தொடர்ந்து, 1980—83ஆம் வருடத்தில் தேசிய அளவில் ஜெம்ஷெட்பூரில் நடைபெற்ற போட்டியில், (6,201 புள்ளிகள்) மூன்றாவது இடத்தைப் பெற்று ஹார்ட் சாதித்தார். பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டியில் 6.148 புள்ளிகளைப் பெற்று புதிய சாதனையை உருவாக்கினார் ஹார்ட்.

நரேந்திரசிங் 1978-ஆம் ஆண்டு இதே பல்கலைக் கழகங்களுக்கான போட்டியில் 6.044 புள்ளிகளைத்தான் பெற்றிருந்தார். அந்தச் சாதனையை ஹார்ட் முறியடித்தார். இந்த ஆண்டு பம்பாயில் நடைபெற்ற தேசியப் போட்டியில் ஹார்ட் மூன்றாவது இடத்தை, 5.878 புள்ளிகளைப் பெற்றுத் தக்க வைத்துக்கொண்டார். இன்று ஹார்ட்டின் எண்ணமெல்லாம் 7,000த்

கும் மேல் புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுதான்.

இவர் அதிகக் கவனம் செலுத்திப் பயிற்சி செய்யும் விளையாட்டுக்கள், உயரத் தாண்டுதல், 1500 மீட்டர் ஓட்டப்பந்தயம், போல்வால்ட். சமீபத்தில் இந்தப் போல்வால்ட் போட்டியில் உபயோகிக்க ஃபைபர் நார்க் கண்ணாடியாலான நீண்ட கொம்பை வாங்கியிருக்கிறார் ஹார்ட். அது இவருக்கு மிகுந்த நன்மை பயக்கும என்றும் நம்புகிறார்.

'ஹார்ட் இன்று நான்கு மணி நேரம் தொடர்ந்து பயிற்சி செய்கிறார். ஆனால் அது போதாது. ஆறு மணி நேரம் பயிற்சி செய்தால்தான் வெற்றிகளைக் குவிக்க முடியும் என்று ஹார்டே கூறுகிறார்.

'பணக்காரர்களின் விளையாட்டு கால்ஃப் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. எந்த வயதினராக இருந்தாலும், ஆடும் திறமை மட்டும் இருந்தால் போதும். அவர்கள் இந்த ஆட்டத்தில் முதலிடத்தைப் பெற்று முன்னேறலாம்' என்று கூறாமல் கூறுபவர் ஓம் பிரகாஷ்.

தம்முடைய சிறு வயதிலேயே ஓம் பிரகாஷ் இந்த விளையாட்டில் பங்கு கொண்டார் என்று சொன்னால் பலர் நம்ப மறுக்கலாம். இவருடைய தாத்தா வி.ஜி. சரவண பவாநந்தம் கால்ஃப் மைதானத்துக்கு விளையாடச் செல்லும் போதெல்லாம் பேரனும் அவருடனேயே சென்றிருக்கிறான். கொஞ்சம் கொஞ்சமாகத் தாத்தாவின் சிறப்பான விளையாட்டைப் பார்த்துத் தானும் இந்த விளையாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் சிறுவன் மனத்தில் பதிந்திருக்கிறது.

இவருடைய மாமா தனசேகரோ, சர்வ தேசப் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக விளையாடியவர். இப்படி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் ஒரே விளையாட்டில் விளையாடும் போது தங்கள் வீட்டிலுள்ள சிறுவன் ஓம்பிரகாஷ் சும்மா இருக்க முடியுமா என்ன? மெல்ல மெல்லச் சிறுவன் ஓம் பிரகாஷ் இந்த விளையாட்டில் ஆர்வம் கொண்டு விளையாடத் தொடங்கினான். மற்றச் சிறுவர்களைப் போல் இல்லாமல் ஓம்பிரகாஷின் ஆர்வம் உண்மையானதாக இருந்ததால் கடுமையான பயிற்சிக்கு உட்பட்டு விளையாட ஆரம்பித்தான்.



ஓம் பிரகாஷ்



நம்பிக்கை நட்சத்திரம் ஹார்ட்

ஏழு வயதில் விளையாட ஆரம்பித்த ஓம்பிரகாஷ், இன்று, பத்தொன்பது வயதிலும் சளைக்காமல் விளையாடி, இவரால் முடிந்த நற்பெயரை வாங்கிக் கொடுத்து வருகிறார்.

செட்டிநாடு கோப்பைக்கான போட்டியில் 1982-ஆம் ஆண்டு முதலாவதாக வந்த ஓம்பிரகாஷ் அடுத்த ஆண்டே தங்கப் பதக்கத்தைப் பெற்றார். சென்ற ஆண்டு மட்டுமே இவர் 31 சங்கங்கள் நடத்திய போட்டிகளில் பங்கு கொண்டார். அமெரிக்காவிலுள்ள சான்டியாகோவில் நடைபெற்ற உலக ஜூனியர் கால்ஃப் போட்டியில் பங்கு கொண்டு 1982-இல் சிறப்பாக விளையாடினார். இதனால் உலக ஜூனியர் விளையாட்டு வீரர்களில் எழுபதாவது இடத்தை இவர் அன்று பெற்றார். சென்ற ஆண்டு தம்முடைய சொந்தச் செலவில் திரும்பவும் சான்டியாகோ சென்றார். இந்த முறை 400க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களில் ஓம்பிரகாஷ் 53-ஆவது இடத்தை அடைந்தார்.

சுமார் ஐந்தடி எட்டு அங்குல உயரமுள்ள ஓம்பிரகாஷ், முதல் ஆண்டு மருத்துவக் கல்லூரியில் படித்து வருகிறார். கால்ஃப் ஆட்டத்தில் மூளையுடன், உடல் உழைப்பும் தேவை. அதற்கேற்ப உற்சாகமான வரவேற்பும் இருந்தால் விளையாட்டு வீரர்களுக்குத் தனி ஆர்வம் ஏற்படும். இதை எல்லாரும் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார், புகழ் பெற்ற மருத்துவரான டாக்டர் ரங்கபாஷ்யத்தின் மகனான ஓம்பிரகாஷ்.

கிரிக்கெட் ஆட்டத்துக்கு இருக்கும் புகழ், வளரும் இளம் விளையாட்டு வீரர் - வீராங்கனைகளை அதிகமாக இழுக்கும் சக்தி பெற்றது. ஆனால் இன்று தமிழ் நாட்டு அணிக்கு விளையாடும் சுமதி ஐயர் தம்முடைய ஆரம்ப நாட்களில் ஒரு தடகள விளையாட்டு வீராங்கனையாகத்தான் இருந்தார். ரோஸரி மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கும் போது தம் பள்ளி மாணவர்களுடன் டென்னிஸ் பந்தில் கிரிக்கெட் ஆட ஆரம்பித்தார். இவர் கிரிக்கெட் விளையாட்டில் தேர்ச்சி பெறுவதற்கு மற்றொரு காரணம், இவருடைய சகோதரரும் ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரர்தாம்.

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் சேர்ந்தபொழுது அங்குள்ள கிரிக்கெட் குழுவுக்கு இவரை நேராகவே சேர்த்துக் கொண்டார்கள். அதே வருடம் கல்லூரிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டியில் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றது. கல்லூரி கிரிக்கெட் அணிக்கு 1977-ஆம் வருடம் தலைமைப் பொறுப்பேற்று பல்வேறு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறார். இப்படிச் சிறப்பாக விளையாடியதன் விளைவு தமிழ்நாட்டுப் பெண்கள் கிரிக்கெட் அணியில் இவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். கர்நாடகத்துக்கு எதிராகக் கோயம்புத்தூரில் ஒரு கண்காட்சி கிரிக்கெட் போட்டி நடந்தது. அதுதான் இவர் தமிழ்நாடு மாநிலத்துக்காக விளையாடிய முதல் கிரிக்கெட் போட்டி,



கிரிக்கெட் வீராங்கனை

தடை ஓட்டப் பந்தயத் தாரகை

இதன் நடுவில் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெண்கள் கிரிகெட் அணியில் சேர்ந்து 1975லிருந்து 80-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து விளையாடினர்.

ஐந்து வருடங்களில் சென்னைப் பல்கலைக் கழகப் பெண்கள் கிரிக்கெட் அணி விளையாடிய எல்லாப் போட்டிகளிலும், இவரும் விளையாடியது ஒரு சாதனைதான். மற்றொரு இந்தியச் சாதனை ஒரே 'போட்டி'யில் ஆறு 'கேச்'சுகளைப் பிடித்தது. பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டி. கோழிக்கோட்டில் 1976-ஆம் வருடம் நடைபெற்றது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக, ரவீந்திர பாரதி பல்கலைக்கழகத்துக்கு எதிராக இவர் விளையாடிய பொழுதுதான் இந்தச் சாதனையை இவர் நிகழ்த்தினர்.

இன்று இவர் தமிழ்நாடு பெண்கள் கிரிக்கெட் அணியின் உதவித் தலைவியாக இருக்கிறார். தென்னக அணியில் சிறப்பாக விளையாடியதற்காக 1979-ஆம் ஆண்டு பாராட்டுப் பத்திரமும் பெற்றவர் இவர். ஸ்ரீலங்காவுக்குத் தமிழகப் பெண்கள் விளையாட்டு அணியினர் விளையாடச் சென்றபொழுது ஒரு போட்டியிலேயே ஏழு 'கேட்சு'களைப் பிடித்துச் சாதனை ஏற்படுத்தினர். இதே போல் மாநிலங்களுக்கிடையேயான பெண்கள் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணிக்கெதிராக 23 ரன்னுக்கு 5 விக்கெட்டுகளை எடுத்தது மறக்க முடியாதது. இன்று இந்தியாவிலேயே முதல் பெண் அம்பயராகப் படித்துப் பட்டம் பெற்றதும் இவரே.

இங்கிலாந்திலுள்ள அம்பயர்கள் சங்கத்திலும் இவர் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

வலக்கை ஆட்டக்காரரான இவர், மேலும் உயர இன்று நிறையப் பெண்கள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற வேண்டும்" என்று விரும்புகிறார். இவர் விளையாடும் மற்ற விளையாட்டுக்கள் கூடைப்பந்தாட்டம், பால் பேட்மிண்டன் ஆகியவை. சென்னைச் சட்டக் கல்லூரியில் படித்து 1981-ஆம் ஆண்டு வக்கீலாகப் பயிற்சி பெறத் துவங்கினர் என்றாலும் இன்று இவரது முழு நேரத்தையும் கிரிக்கெட்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டியில் தடை ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு உஷா நான்காவது இடத்தைப் பெற்று இந்தியாவைக் காப்பாற்றினர். அதே தடை ஓட்டப் பந்தயத்தின் மூலம் இன்று புகழ் பெற்று வருபவர்தாம் யாஸ்மின் ஸைஃபுதின். தம்முடைய பதினேராவது வயதில், தாம் படித்த பள்ளியின் தலைவி சிஸ்டர் ஜெராட் தம் மீது அக்கறை கொண்டு விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டச் சொன்னாராம். அந்த ஆண்டேதான் பாஸ்கோ அதலிடிக் கிளப் ஆண்டுதோறும் நடத்தும் குழந்தைகள் விளையாட்டுப் போட்டியில் இவரும் சேர்ந்தார். அன்று ஏ. ஜே. டிஸௌஸாவின் கீழ், பயிற்சி பெற ஆரம்பித்ததன் விளைவு இன்று நூறு மீட்டர் தடை ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவின் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளவர் யாஸ்மின். முதலிடத்தைப் பெற்றுள்ளவர் யார் தெரியுமா? வலசம்மாதான்.

சிறு வயதில் கண்ணாமூச்சி விளையாட்டுக்காக ஓடி ஓடிப் பழக்கப் பட்ட கால்கள் இன்று ஓட்டப் பந்தயத்தில் ஓடி, உலகச் சாதனை ஏற்படுத்த முனைந்து வருகிறது. யாஸ்மினைப் பொறுத்தவரை பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டியில் 100 மீட்டர் தடை ஓட்டப் பந்தயத்தில் 15.1 விநாடியில் கடந்து சாதனை புரிந்துள்ளார். அதேபோல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் விளையாட்டுப் போட்டியின் போது 14.8 விநாடிகளில் இதே நூறு மீட்டரைக் கடந்து சாதனையை உருவாக்கினர். இவர் 1982—83இல் உருவாக்கிய இந்தச் சாதனையை இதுவரை யாரும் முறியடிக்கவில்லை.

ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் இரண்டாவது வருடம் எம். ஏ. படித்துவரும் யாஸ்மின் சென்ற வருடம் பெண்கள் விளையாட்டுப் போட்டிகளிலும், ஆசிய விளையாட்டிலும் பங்கு பெற்றார். விளையாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் 1982-83-ஆம் வருடம் சிறந்த பெண் விளையாட்டு வீராங்கனையாக இவரைத் தேர்ந்தெடுத்து விருது வழங்கியது.

மூன்று சகோதரிகளையும், மூன்று சகோதரர்களையும் பெற்ற யாஸ்மின் கடுமையான பயிற்சிக்குத் தம்மை உட்படுத்தி வருகிறார். இந்த ஆண்டிலாவது நூறு மீட்டர் தடை ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவில் முதல் இடத்தைப் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் பயிற்சி செய்து வருகிறார்.

*



ஸ்பிக்கின் மனநிறைவான தீபாவளி

ஒரு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குத் தீபாவளி புரட்டாசியிலேயே ஆரம்பமாகி விட்டது...

எப்படி?

எப்படியென்றால் அவர்கள் சுமார் 2.55 கோடி ஸ்பிக் உரமூட்டைகளை வாங்கி, சிறப்பான சாகுபடி செய்து அமோக் அறுவடைக்கு வழி வகுத்துள்ளனர்.

ஸ்பிக் இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் விற்பனை செய்துள்ள பன்னிரண்டு இலட்சம் டன் உரங்களை மூட்டைகளாக ஒன்றன்னருகே ஒன்ருக வைத்தால் பூமியின் சுற்றளவில் பாதியை எட்டும்!

விவசாயப் பெருமக்களுக்கு இந்த வருடம் நிமிடத்திற்கு 240 மூட்டைகள் வீதம் உரங்களை உடனுக்குடன் கிடைக்குமாறு செய்த ஸ்பிக் நிறுவனம், உழவர்களின் நண்பன், அனைவருக்கும் தம் தீபாவளி வாழ்த்துக்களை மன நிறைவுடன் தெரிவிக்கிறது.

ஸ்பிக் இந்த தீபாளியை விவசாயிகளுக்கு மேலும் இனிமையானதாக்குகிறது.

SPIC

சதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்பொரேஷன் லிமிடெட்

97, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-600 032.

PADA-SPIC 1062

திருவடியின் திருவருள்

துவாரகாபுரிவாசனான கண்ணன், தன் அத்தை குந்தியைக் காண வருகிறான். பாரத யுத்தம் முடிந்து அநீதி அழிந்து நீதியும் வாய்மையும் வெற்றி கொண்ட சமயம். அரச வாழ்க்கையிலும் குந்தி அநுபவித்த வேதனையும் துன்பங்களும் சொல்லில் அடங்கா. எல்லாருக்கும் இனியனான கண்ணனைக் கண்டதும் குந்தியின் உள்ளம் ஆனந்தப் பெருக்கால் நிறைகிறது. பவளவாய்க் கமலச் செங்கண்ணனான கண்ணனின் மந்தகாசத்தைப் பார்த்ததும் குந்திக்கு, தான் பட்ட துயரங்கள் எல்லாம் தீயிற் பட்ட நீராய் மறைந்து போகின்றன. அவன் பல சந்தர்ப்பங்களில் தனக்கும் தன் குழந்தைகளுக்கும் செய்த செயல்கள், ஆபத்திலிருந்து காத்த உதவிகள் அவளது சிந்தையில் குமிழியிட்டுப் பெருகுகின்றன.

''கண்ணா வா, முகுந்தா வா'' என்று வரவேற்கிறாள் குந்தி. மேலே வார்த்தை வராமல் தடுமாறுகிறது. அவன் புரிந்த மாயங்கள் ஒன்றா, இரண்டா? திரைப் படக் காட்சிபோல் அவ்வளவு வேகமாக அவன் செய்த உபகாரங்கள் மனத்தில் ஓடுகின்றன.

குந்தியின் அப்போதைய மனநிலையை ஸ்ரீமத் பாகவதம் மிக அழகாகச் சொல்கிறது:

ததா பரமஹம்ஸானாம் முனீனாம் அமலாத்மனாம்
பக்தியோக விதானார்த்தம் கதம் பச்யேமஹி
ஸ்த்ரிய:

''கண்ணா, நான் ஒரு சாதாரணப் பெண். ஞான யோகம், பக்தி யோகம் எதையும்பற்றி அறியாதவள். நிர்மலமான மனசுடன் புற அக ஒழுக்கங்களுடன் வாழும் துறவிகளுக்கு உன் பக்தி போதனைகள் புரியும். அவற்றின் மகத்துவத்தை நான் எப்படி அறிவேன், கண்ணா! உன் திருவடித் தாமரையில் பல தடவை நமஸ்காரம் செய்கிறேன்.

''ஆனால் என்னை ஒன்றும் அறியாதவள் என்று எண்ணிவிடாதே. நீ எனக்கும் என் குழந்தைகளுக்கும் எவ்வளவு உதவியிருக்கிறாய்! அவற்றை எல்லாம் நான் மறக்கவில்லை.

''ஹே, ஹ்ருஷீகேசா! உன் தாயான தேவகியைக் காத்ததுபோல் என்னையும் காத்தாய். அப்படிச் சொல்வதுகூடத் தவறு. கம்சனால் சிறையில் அடைக்கப்பட்ட தேவகியைமட்டும் நீ காத்தாய். ஆனால் என்னை, என் குழந்தைகளுடன் காத்தருளியிருக்கிறாய். 'கம்ஸேன ருத்தா அதிசிரம் சுசார்ப்பிதா விமோசிதாஹம்..ஸஹாத்மஜா விபோ!'

''அப்படி என்னைக் காத்தது ஒரு தடவையா, இரண்டு தடவையா?

''துரியோதனன் பீமனுக்கு விஷம் அளித்தான்; அரக்கு மாளிகைக்கு நெருப்பு வைத்தான்; இடும்பன் என்ற அரக்கன் கொல்ல வந்தான்; சூதாட்ட சபையில், துகிலுரியப்பட்டபோது பாஞ்சாலியின் மானத்தைக் காத்தாய்; காட்டில் அஞ்ஞாதவாசம் செய்தபோது நிகழ்ந்த ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றினாய்; ஆசார்ய புருஷர்கள் மந்திர உரு ஏற்றி எய்த பாணங்களிலிருந்து என் குழந்தைகளைப் பிழைக்கவைத்தாய்; அசுவத்தாமாவின் அஸ்திரத்திலிருந்து மீட்டுக் காத்தாய்; தனஞ்ஜயனின் இன்னுயிரைக் காக்க, அவனுக்குத் தேரோட்டியாகப் போனாயே, கண்ணா, அதைவிட உன் கருணைக்கு எல்லை ஏது?''

குந்தியின் புகழாரங்களைக் கண்ணன் புன்முறுவலுடன் கேட்கிறான். புகழாரங்களா அவை? கருணைக் கடல் அவன்! அவன் புகழைக் கூறி உள்ளம் நையத் துதிக்கிறாள் குந்தி.

தன்னைச் சரணடைந்தவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளல் அவன்.

''சரி, என்னைப் புகழ்ந்தது போதும். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள், தருகிறேன்!''

'விபத: ஸந்து ந: சச்வத் தத்ர தத்ர ஜகத்குரோ
பவதோ தர்சனம் யத்ஸ்யாதபுனர்பவதர்சனம்'

குந்தி, தன்னை முதலில் சாதாரணப் பெண், ஒன்றும் அறியாதவள், 'கதம் பச்யேமஹி ஸ்த்ரிய:' என்றாள். ஆனால் கார்மேக வண்ணனின் லீலைகளை அறிந்து வியந்து பாராட்டுகிறாள். ஒரு கணம் அவன் புரிந்த லீலைகள் அவளுடைய மனக்கண்ணில் நிழலாடுகின்றன.

'உலகத்துப் பொருள்களை எல்லாம் காப்பவன்' என்ற தத்துவத்தைக் காட்ட, கோவர்த்தனகிரியைத் தன் சுண்டு விரல் நுனியால் குடையாகத் தூக்கிப் பிடித்து ஆநிரைகளை ஒரு நாள் காத்தான். காலாக்கினி போன்ற நஞ்சை உமிழ்ந்த காளிங்கனை அடக்கி, காளிங்க நர்த்தனம் செய்த வித்தக தோரணையைத்தான் மறக்க முடியுமா?

ஜீவாத்ம-பரமாத்ம ஐக்கியத்தை விளக்குமுகத்தால் யமுனையில் கோபிகைகளுடன் ஜலக்ரீடை செய்த எழிற்கோலத்தைக் காண இந்த ஒரு பிறவி போதுமா?

தர்மத்தையும் சத்தியத்தையும் நிலைநிறுத்த யுகந்தோறும் அவதாரம் செய்யும் அவனது அவதாரத் திருவிளையாடலின் கருத்தைத்தான் நம்மால் பூர்ணமாக அறிந்துகொள்ள முடியுமா?

ஆம்; இந்த ஒரு பிறவி போதாது, பல பிறவிகள் வேண்டும், கருணைப் பிரவாகத்தில் நீந்திப் போய் அவனைத் தரிசிக்க.

குந்தி கணப்போதில் இவை எல்லாவற்றையும் எண்ணுகிறாள்.

கண்ணனிடம் கூறுகிறாள்: ''அப்பா, கிருஷ்ண பகவானே! உன் தரிசனம் மறு பிறப்பை உண்டாக்காது. மாயப் பிறப்பறுக்கும் மன்னன் நீ. ஆனால் உன்னையே, தாமாக எண்ணி வேண்டி வழிபடும் அன்பர்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தால், நீ ஓடோடியும் வருவாய்; அந்தத் துயர் களைவாய். அதனால் கண்ணா, எனக்கு ஆபத்துக்களைக் கொடுத்துக்கொண்டே இரு. நீ வந்து தரிசனம் கொடுத்துக் கொண்டே இரு. நீ வந்து தரிசனம் அளிக்கும் அளவுக்கான ஆபத்துக்கள் எனக்கு வந்துகொண்டே இருக்க அருள் புரி, கண்ணா!'' உலகியல் மக்கள், 'துயரைத் துடை, செல்வத்தைக் கொடு' என்று இறைவனை வேண்டுவார்கள். அதுவே இயற்கை. குந்தி துன்பத்தை வரவேற்கிறாள்! ஆபத்தை ஆலாலம் சுற்றி அழைக்கிறாள்!

உலகியலை நன்கு அறிந்த அநுபவசாலி குந்தி. ''உலகியல் மக்கள் செல்வத்தையும், நற்குடிப் பிறப்பையும், கல்வியையும் அதிகமாகப் பெற்றால், 'ஹரே முகுந்தா, வாசுதேவா, முராரி' என்றெல்லாம் உன் பெயரைக் கூட நினைக்கமாட்டார்கள். ஆனால் ஏழை ஒரு போது இல்லாவிட்டால் ஒரு போதாவது உன்னை வாயார அழைப்பான்; நீயும் அவனுக்கு உதவ ஓடிப் போவாய்.

''ஏழைபங்காளன் நீ. தர்மம், அர்த்தம், காமம் என்ற புருஷார்த்தங்கள் இல்லாத பூர்ண மோட்சத்தைத் தரவல்லவன் நீ. அதனால் உன்னைப் பலமுறை நமஸ்கரிக்கிறேன், கண்ணா! பல திருநாமங்களிட்டு உன்னை அழைக்கிறேன், முகுந்தா!''

கீதையில் பகவான் சொல்கிறான்:

'அனன்யா: சிந்தயந்தோ மாம் யேஜனா:
பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தானாம்
யோகக்ஷேமம் வஹாம்யஹம்.'

'இறைவன் வேறு, நான் வேறு' என்று என்னை அந்நியனாக நினைக்காமல், என்னையே சிந்தித்து வழிபடும் பக்தர்களின் யோக க்ஷேமத்தை நானே கவனித்துக் கொள்கிறேன்.'

கர்ப்பத்திலிருக்கும் சிசு, தாய்க்கு அந்நியமானதல்ல; அதனால் சிசுவின் போஷணை முழுதும் தாயிடத்திலிருந்தே இயல்பாய்க் கிடைக்கிறது. பிறந்த பிறகும் தாயைத் தஞ்சமடைந்திருக்கும் அளவு, அவளே வேளை அறிந்து உணவைத் தேடி ஊட்டுகிறாள். இந்தப் பக்தியை அனன்ய பக்தி என்பார்கள்.

இறைவன் ஒருவனே சாசுவதமானவன். அவன் வழங்கும் அருளும் சாசுவதமானது. தாயினும் சாலப் பரிந்தூட்டும் தயாளன் அவன்.

குந்திக்கு வரம் அளித்த கிருஷ்ண பரமாத்மாவின் திருவடித் தாமரை நமக்கெல்லாம் தோன்றாத் துணை! தீபாவளித் திருநாளில் அவன் பாதம் பணிவோம்; குந்தி, மனத்தில் எண்ணி, சொற்களைத் துதியாக்கிப் பரந்தாமனைப் பரவிய காட்சிகளை அடுத்துக் கண்டு களிப்போம்.


லதா





லதா.y

செம்பின் பெருமை

நீ.ரா. ஸ்ரீநிவாசன்

உலகிலேயே மிகத்தொன்மை வாய்ந்ததாகப் போற்றப்படுவது செம்மை தோய்ந்த இந்த உலோகம். மனித சமுதாயம் வளர்ந்து ஓங்குவதற்கு இது உதவியிருக்கிறது. தெய்வப் பணியில் தன்னை அர்ப்பித்துக் கொண்டு பூசைப் பாத்திரங்களாகவும், தூய தெய்வச் சிலைகளாகவும் உருவெடுத்திருக்கிறது. தனியாகவும் மற்றும் சில உலோகங்களோடு சேர்ந்தும் கலை, தொழில் ஆகிய துறைகளில் பயன் படுகிறது. ஏடுகளாகத் திகழ்ந்து சரித்திரப் புகழ் பெற்றிருக்கிறது. நாணயமாகப் பவனி வந்ததும் உண்டு. இவ்வளவு பெருமை வாய்ந்த பொருளே தாமிரம் அல்லது செம்பு ஆகும். இதன் சிறப்பைச் சற்றே காணலாம்!

தொன்மை: தாமிரம் மிகவும் தொன்மை வாய்ந்த உலோகம். எட்டாயிர ஆண்டுக்கு முன்பு ஆதிமனிதன், ஆதவனின் செங்கிரணம் போன்ற வண்ணத்துடன், இயற்கையில் இந்த உலோகத்தைக் கண்ணுற்றான். கற்காலம் என்று சொல்லப்படும் மனித வளர்ச்சியின் அடிப்படைக் காலத்தில் வதிந்த மனித இனம், இந்த உலோகத்தைக் கையாண்டு, சமுதாய வளர்ச்சி என்ற ஏணியின் முதல் படியான செப்புக் காலத்தில் கால் எடுத்து வைத்தது.

சுமார் கி.மு. 4,000 ஆண்டு அளவில், எகிப்து நாட்டில் தான் முதல் முதலாக, இயற்கைக் கனிமப் பொருள்களிலிருந்து செம்பை உலோகமாகப் பிரித்தெடுத்தார்கள். அனலில் காய்ச்சி அடித்தும் வார்த்தும் பல வேலைகளுக்குப் பயன் படுத்தினார்கள். வெள்ளி ஈயத்துடன் தாமிரத்தைக் கலந்து வெண்கலம் உருவெடுத்தது சுமார் கி.மு. 3,500—ஆம் ஆண்டில். ரோம சாம்ராஜ்யத்தின் புகழ் பரப்ப, சைப்ரஸ் என்ற அண்டை நாட்டிலிருந்து செம்பின் மூலப் பொருள்கள் வந்தன.

கிரேக்க நாட்டில் சுமார் கி.மு. 3,000 ஆண்டு அளவிலே தாமிரம் உலவத் தொடங்கியது. ஆனால் வெகு கிழக்கில் உள்ள சீனாவுக்குள் செம்பு பரவிய காலம் கி.மு. 1,800 என்று கருதுகின்றனர். கி.மு. 1,000 ஆண்டு அளவில் இரும்பு வெகுவாக உபயோகத்துக்கு வந்தது. அதன் பிறகே மனித வளர்ச்சி மடமடவென்று முன்னேறியது. சுமார் பத்தாயிரம் ஆண்டுகளாக உலகில் பவனி வரும் இந்த உலோகம், நம் நாட்டில் எப்போது உலவத் தோன்றியது?

சிந்து சமுதாயம்: மனித சமுதாயச் சரித்திரத்திலே மிகவும் பெருமை சுமார் கி.மு. 2,000 ஆண்டு அளவில், சிந்து சமுதாயம் மிகவும் முன்னேறிச் சீரும் சிறப்புடன் விளங்கியிருக்கிறது. இதனைப் பற்றிய புது விவரங்களை, தொல்பொருளாராய்ச்சி வல்லுநர் டாக்டர் எஸ்.ஆர். ராவ் என்பவர் வெளியிட்டிருக்கிறார். அங்கு வதிந்த மக்கள் உலோகத் தொழிலின் முக்கியத்தை முற்றும் உணர்ந்திருந்தனர். குறிப்பாகச் செம்பைப் பிரித்தெடுத்துச் சுத்தம் செய்தனர். அதனுடன் மற்ற உலோகங்களைச் சேர்த்துக் கலவையாக்கிப் பித்தளையையும் வெண்கலத்தையும் உருவாக்கி உபயோகப் படுத்தியிருக்கின்றனர். மேலும் செம்புடன் மற்ற உலோகங்களைக் கலக்கும் முறைகளையும் கண்டறிந்திருந்தனர். செம்பை உருக்கி வார்க்கவும் செய்தனர். லோதால் என்ற இடத்தில் கண்டெடுத்த பல மிருக உருவங்களின் வார்ப்பே இதற்குச் சிறந்த சான்றாகும்.

ஆடலழகனின் திருமேனி

சிந்து நதிச் சமுதாயம் மிக உன்னத நிலையில் திகழ்ந்து, தாமிரத்தைப் பல வகைகளிலும் பயன் படுத்தியிருக்கிறது. இந்தச் சமுதாயத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது என்பதே ராவ் அவர்களின் முடிவான அபிப்பிராயம்.

உற்பத்தி: தாமிரம் என்ற பெயர் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்தது. வடமொழியில் இந்த உலோகத்தைக் குறிக்க லோஹம், கனீயஸம், மிலேச்சமுகம் போன்ற பல பதங்கள் உள்ளன. லத்தீன் மொழியிலுள்ள "குப்ரம்" என்ற சொல்லிலிருந்து தான் ஆங்கிலத்தில் "காப்பர்" என்று வந்தது. ஆதிகாலத்தில் தாமிரம் ஏராளமாகக் கிடைத்தமையால், "சைப்ரியம்" எனும் சொல்லிலிருந்து சைப்ரஸ் நாடு தன் பெயரையே பெற்றது. தமிழில் செம்பு, தாமிரம் என்று இந்த உலோகத்தைக் குறிக்கின்றனர்.

தாமிரம் இயற்கையில் தனி உலோகமாக அரிதாகவே கிடைக்கிறது. ஆனால், பிற பொருள்களுடன் சேர்ந்த கூட்டுப் பொருளாக ஏராளமாகக் கிடைக்கிறது. முக்கியமாக, கந்தகத்துடன் சேர்ந்த கனிமப் பொருளாகப் பல இடங்களிலும்

கிடைக்கிறது. ஆஸ்திரேலியா, பெரு போன்ற நாடுகள் செம்பு உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றன. நம் நாட்டிலும் ஓரளவு தாமிரக்கனி கிடைக்கிறது. ராஜஸ்தானில் கேத்ரி, மத்தியப்பிரதேசத்தில் மலஞ்ஜ்கண்டு, கர்நாடகத்தில் சித்லதுர்க்கம் ஆகிய இடங்களில் கந்தகம் தோய்ந்த செம்புக் கனி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பிஹாரில் காட்சிலா என்ற இடத்தில் தான் முதல் முதலாகத் தாமிரக்கனி வெட்டியெடுக்கப்பட்டு உலோகம் தயாரிக்கப்பட்டது. இப்போது செம்பு உற்பத்தி அரசினர்த்துறையில் இயங்கி வருகிறது.

செப்புக்கனி பூமிக்கு அடியில் வெகு ஆழத்தில் பாறைகளின் ஊடே உறைந்து காணப்படுகிறது. சுரங்கம் அமைத்து, பாறையை வெட்டி, கனிமத்தை மேலே கொண்டு வர வேண்டும். இதனைப் பொடி செய்து, நீரில் குழம்பாக்கி, இரசாயனப் பொருள்களுடன் கலந்து காற்றைப் பாய்ச்சி, செப்புக் கனிமத்தை நுரையாகப் பிரித்தெடுக்கின்றனர். பிறகு இதனை அனலில் வாட்டுவதன் மூலம் கந்தகம் வெளியாகிறது. அதன் பிறகு கரிப் பொருளுடன் கலந்து சூடேற்றுவதன் பயனாக, தாமிரம் தனி உலோகமாக வெளி வருகிறது. இதனைச் சுட்ட செம்பு என்று குறிப்பிடுவார்கள். செம்பில் சிறிது வெள்ளியும் கலந்திருக்கும். செம்பை அமிலத்தில் கரைத்து, மின்சக்தி பாய்ச்சி மிகவும் சுத்தமான தாமிரத்தைப் பெறுகிறார்கள். இதன் சுத்தத் தன்மை 99.98 சதவீதம் ஆகும். இதுவே பல வேறு வேலைகளுக்குப் பயன் படுகிறது. செப்பு உற்பத்தியில் உபரிப் பொருள்களாகக் கிடைப்பது வெள்ளியும், ஸெலீனியமும் ஆகும்.

தூய செம்பு மென்மையானது. மென் சிவப்பு வண்ணம் உடையது. இதனைத் தகடாக அடிக்கலாம்; கம்பியாக நீட்டலாம். மெல்லிய காகிதத்தைப் போன்றும், மயிரை விட நுண்ணியதான கயிறுகவும் செய்யலாம். தனி உலோகம் சூட்டை இழுக்கும்; மின் சக்தி பாயச் செய்யும். அதனால் பல தொழில் வேலைகளுக்கு உதவுகிறது. தனிச் செம்புடன் துத்தநாகச் சேர்க்கை பித்தளையாகப் பரிணமிக்கிறது. தாமிரமும் வெள்ளீயமும் சேர்ந்த கலவையே வெண்கலம். செம்பு, துத்தநாகம், நிக்கல் ஆகியவற்றின் கலவைக்கு ''நிக்கல் வெள்ளி'' எனப்பெயர். இது வெள்ளியைப் போலவே பளபளப்பாக இருப்பதால் இப்பெயர் கிட்டியது. இதைத்தான், ''ஜெர்மன் வெள்ளி'' என்று சொல்லுவர். ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாயிருந்து பல பொருள்கள் செய்ய உதவியது. ஆனல் ''ஸ்டெயின்லஸ் ஸ்டீல்'' வந்த பிறகு ஜெர்மன் வெள்ளியின் மவுசு குறைந்து விட்டது. இன்னும் தாமிரத்தை அடிப்படையாகக் கொண்ட பல கலப்பு உலோகங்கள் உண்டாக்கப்பட்டு, பல தொழில்களிலும் உதவுகின்றன.

தூய திருப்பணி: நம்மை ஆட்டிப் படைக்கும் இறைவனின் பணியில் தம்மை அர்ப்பித்துக் கொள்வதையே தூய திருப்பணி எனச் சொல்வர். தாமிரம், பலவகையில் இறைவனுக்கு உபயோகமாகிறது. செம்பு உருக்கி வார்க்க ஏதுவானது. மென்மையாக இருப்பதனல் உருவங்களின் பாகங்கள் அழகாக அமைந்து மிளிர்வதற்கு ஏற்றது.

புத்தர் வெண்கலச் சிலை

இறைவனின் திருவுருவங்களைச் சிலைகளாக வடிக்கும் பணியில் தாமிரத்துக்குத் தனி இடம் உண்டு. சில சமயம் சிலையில் செம்போடு சிறிது பொன்னும் சேர்ப்பார்கள். எழிலோடு திகழும் ஆனந்தக்கூத்தனும் ஆடலரசனின் செப்புச் சிலை கண் கொள்ளாக் காட்சி! கலை பரிணமிப்பது, பக்தி பரவசம் ஊட்டுவது. உற்சவ மூர்த்திகள் செப்பு வார்ப்படங்களாகும். வில்லேந்தி நிற்கும் வீர வடிவம் கோதண்ட ராமன். வலப்புறம் ஜானகி நாணி நிற்க, இடப்புறம் இளைய பெருமாள் லட்சுமணன் தமையனைக் காப்பதே தன் கடன் என்பது போல் நிற்கும் சிலைகள் பார்ப்போர் மனத்தை ஈர்க்கின்றன. புல்லாங்குழலூதி ஆனிறை மேய்க்கும் கண்ணனும், காளிங்க நர்த்தனம் செய்யும் கிருஷ்ணனும் செப்புச் சிலை வடிவில் காட்சியளிக்கின்றனர். வேல் முருகன், அன்னை துர்க்கா என்று எண்ணில் அடங்காத சிலைகளில் தாமிரம் உபயோகமாகிறது.

''பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்'' என்பது போல், அலகிலா விளையாட்டுடையான் அன்னவனது திருமேனியாகத் திகழ்வதன் மூலம் மற்ற உலோகங்களுக்குக் கிட்டாத தனிப் பெருமையைத் தாமிரம் பெற்றிருக்கிறது. ஆலயப் பணிகளிலும் தாமிரம் இடம் பெறுகிறது.

கோவில்களின் நுழைவாயிலுள்ள ''த்வஜஸ்தம்பம்'' எனும் கொடி மரத்தை உருவாக்கப் பயன்படுவது செப்புத் தகடுகளேயாகும். கோபுரத்தின் மேலே திகழ்வன செப்புக் கலசங்கள். மிகவும் வசதி வாய்ந்த கோயில்களில் தாம் பொற் கலசங்கள் உள்ளன. கர்ப்பக்கிருகத்தில் பூஜா விதானத்துக்கு உதவுவன செப்புப் பாத்திரங்கள். அபிஷேக நீர் வைக்க செப்புக் கங்காளங்கள், செப்புச் செம்புகள். அர்க்கிய பாத்திரங்களும் செம்பாலானவையே. செப்புப் பாத்திரத்தில் தண்ணீர் வைத்தல் உடலுக்கு நல்லது என நம் முன்னேர் கண்டிருக்கின்றனர். புனித கங்கை நீரைச் சங்கமத்திலிருந்து யாத்திரையின் பொழுது வீட்டுக்குக் கொண்டு வர உதவுவது கங்கைச் செம்பு.

வீடுகளில் பூஜை செய்வதற்கென சிறிய செப்பு விக்கிரகங்களும் உண்டு. மேலும், பூஜைப் பாத்திரங்களாக நீர் சுமக்கும் செம்பு, பஞ்சபாத்திரம், பல்வகை உத்தரிணி, ''ஸம்பத்னி'' என்று சொல்லப்படும், பூ வைக்கப்படும் பெருங்கிண்ணம், குழிவான இலைவடிவுள்ள நீர்வார்க்கும் ''அர்க்ய பாத்திரம்'', பழம் வைக்கும் தட்டுகள் ஆகியவை நெடு நாளாக வழக்கில் உள்ளன.

கலைப்பொருள்: கலைப்பொருள்கள் செய்வதிலும் செம்பு பயன் படுகிறது. நுண்மையான வேலைப்பாடு பொருந்தி, புத்தர்பிரானின் வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரித்துக் காணும் ஒரு செப்புச் செம்பு கூலுவில் மூடியிருந்த ஒரு புத்தவிகாரத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது. இந்தக் கலைப் பொக்கிஷம் கி.பி இரண்டாம் நூற்றுண்டைச் சார்ந்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இது இப்போது இங்கிலாந்தில் கண் காட்சிச் சாலையில் இருக்கிறது. செப்பு விக்கிரகங்களிலே மிகவும் பெயர் போனது புத்தர்பிரானின் திருவுருவம். இது சுல்தான்கஞ்ச் என்ற இடத்தில் கண்

டெடுக்கப்பட்ட ஏழரை அடி உயர புத்தரின் செப்புச் சிலை. உலகிலேயே மிக அற்புதமானது. இந்தச் சிலையும் இன்று நம் நாட்டில் இல்லை!

இங்கிலாந்திலுள்ள பர்மிங்ஹாமில் தனியார் கலைக்களஞ்சியத்தில் இருந்து வருகிறது! செம்பாலான பல்வேறு வார்ப்படங்களும் பொருள்களும் உள்ளன.

மிக நேர்த்தியான நுண்வேலைப் பாடமைந்த செப்புச் செம்புகள் செய்யும் கைத்தொழில் தஞ்சாவூரில் வெகு காலமாகச் செய்யப்பட்டு வந்திருக்கிறது. செம்பின் வெளிப் புறத்தைப் பக்குவமாக அடித்துப் பல ''டிசைன்''களுடன் அழகுறச் செய் வது ஒரு வகை. மற்றொரு வகையில் தகடை அடித்துப் பதியவைத்து, அவ்விடத்தில் வெள்ளித் தகடை அழுத்திப் பதியவைத்தல். இப்படிச் செய்வதால் செம்பின் மேல் வித விதமான பூ, இலை, மற்ற ''டிசைன்'' கள் தோன்றி, பார்ப்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கும். இது செப்புச் செம்புக்கு அழகூட்டும் கலை. இந்தப் புராதனக் கலையைப் பேணி வளர்த்தல் வேண்டும்.

அணிகலன்: தாமிரம் அணிகலன் களாகவும் பயன்படுகிறது. நாட்டின் பல்வேறு பாகங்களில் வசித்து வரும் பழங்குடி மக்கள் செம்பாலான பல அணிகலன்களை விரும்பி அணிந்து மகிழ்கின்றனர். வசதி இல்லாமல் அன்றாடம் காய்ச்சிகளாகக் காலம் தள்ளும் ஆதிவாசிகள் வெள்ளிக்கும் தங்கத்துக்கும் எங்கே போவார்கள்? எனவே தான் செப்பு நகைகளை நாடு கின்றனர். செப்புக் காசுகளைக் கோத்து மாலையாக அணிகின்றனர். வட்டச் செப்புத் தகடுகளை மாட்டிக் கொள் கின்றனர். பூதான் தேசத்து மக்களும் செப்பு நகைகளை விரும்புகின்றனர். நாகரிகம் ததும்பும் பட்டணவாசி களில் சிலரும் செப்புக்காப்புப் போட்டுக் கொண்டிருப்பதைக் காண லாம். செப்பு மோதிரங்களும் அணி கின்றனர். செப்புக்காப்பு, மோதிரம் அணிவது இரத்த அழுத்த வியாதிக்கு நல்லது என்றும், ரக்ஷை என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

செப்புக்காசு: செம்பு, நாணயம் செய்வதற்கு ஏற்ற உலோகம். இதனில் எண்கள் மற்றும் உருவங்களை எளிதில் பதிக்க முடியும். புழக்கத்தில் சீக்கிரம் தேயாது; பளபளவென்று நாணயம் உருவாக்கப்பட்டவுடன் தோன்றும். நாளடைவில் பளபளப்பு குன்றுமே யொழியக் கருக்காது. அதிக மதிப் பில்லாததும் ஆனால் மிகவும் தேவைப் படுவதான நாணயங்களுக்கே செம்பு உபயோகிக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் செப்பு நாணயம் ஏராளமாகப் புழக்கத்தில் இருந்தது. உதாரணமாக, இந்தியா சுதந்தரம் அடையுமுன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் காலணா என்ற செப்பு நாணயம் நிலவியது. அன்றாடச் சிறு தேவைகளுக்குக் காலணாவே அதிகம் பயன்பட்டது. அரையணாவும் இருந் தது. மிகச் சிறிய மதிப்புள்ள நாண யம் சல்லி; மூன்று சல்லிகள் ஒரு காலணா. ரூபாய்க்கு 192 சல்லிகள். அன்று ஒரு சல்லிக்கு வாங்கக் கூடிய சிறு சாமான் இன்று பத்துப் பைசா வுக்குக் கிடைக்குமா என்பது சந்தேகம்!

அந்நாளில் ஹைதராபாத் , மைசூர், திருவாங்கூர், பரோடா, குவாலியர் என்ற பல சுதேச சம்ஸ்தானங்கள் இயங்கின. இவை தங்களது பிரத்தி யேக நாணயங்களை அச்சிட்டு வெளி

மல்லாத செப்புக்காசுகளும் வழக்கில் உண்டு. அம்மன் காசு என்ற சின்னச் செப்புக் காசுகளை வாங்கி, கோவிலில் உண்டியில் போடுவதுண்டு. இது போல் இன்னும் சில செப்புக் காசு களும் உண்டு.

செப்பேடு: தாமிரத்தில் எழுத்துக் களையும் எண்களையும் எளிதில் பதிக்க முடியும். எனவே தான் நிரந்தரமான பிரகடனம் செய்வதற்குச் செம்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. மாமன்னர் களின் வெற்றிகள், அருஞ்செயல்கள், மானயங்கள் வழங்குதல் ஆகிய வற்றைப் பிரகடனப் படுத்தவும் வரும் சந்ததியர்களுக்கு அறிவிக்கவும் செப்பேடுகள் பயன் படுத்தப்பட்டன. செப்புத் தகடுகளில் விஷயத்தைப் பொறித்து என்றென்றும் நிலையாக இருக்கச் செய்தனர். இந்தச் செப் பேடுகள் சொல்லும் கதையே சரித்



மைக்கூடுப் பெட்டி

யிட்டன. இவற்றில் செப்பு நாணயங் களே மிகுதி. உதாரணமாக, திருவாங் கூர்ச் சம்ஸ்தானத்தின் ''சக்ரம்'' பெயர் பெற்றது. ''சக்ரமே'' நாணயச் சக்கரத்தின் மையமாக அமைந்திருந்தது.

வடக்கே குவாலியர்ச் செப்பு நாணயங்கள் பெரும் புழக்கத்தில் இருந்தன. சுதந்தரப் பாரத சர்க்கார் நாணய நிர்ணயத்தைச் சீரமைத்து, ரூபாய்க்கு நூறு ''நயா பைசா'' என்று கொணர்ந்தனர். இந்தக் காசு செம்பாலானது; சிறு அளவில் இருப் பது. இன்றும் நயா பைசா நாணயச் செலாவணியில் இருப்பினும் ஒரு வரும் கையாளுவதில்லை; காரணம் அதற்கு மதிப்பே இல்லை. நாணய

திரமாகும். சரித்திர ஆராய்ச்சி யாளர்கள் செப்பேடுகளைக் கண்டு பிடித்துக் கணித்து, நாட்டின் வரலாறு, மன்னர்களின் ஆட்சிக் காலம், மக்களின் வாழ்க்கை ஆகியவற்றை அறிந்து வெளிக்கொணருகின்றனர்.

சோழ சாம்ராஜ்ய வரலாற்றிலே, அருஞ் செயல்கள் புரிந்து, தஞ்சைப் பெரிய கோவிலைக்கட்டி இமயப் புகழ் பெற்றவன் ராஜராஜசோழன். ராஜராஜனின் வரலாற்றைப் பறை சாற்றுவது செப்பேடுகளே. இவற்றிலே முக்கியமானதாகக் கருதப்படும் ஆனைமங்கலச் செப்பேடு, கலைப் பொக்கிஷங்கள் பலவற்றைப் போலவே, இன்று நம் நாட்டிலேயே இல்லை! ஹாலந்தில் உள்ள லெய்டன்

கண்காட்சிச் சாலையில் இருக்கிறது! ராஜராஜனைப் பெருமையோடு நினைத்துப் பார்க்கும் இந்நாளில், தமிழக அரசு ஆனைமங்கலச் செப்பேட்டைத் திரும்பப் பெற முயலுமா?

இன்று, எந்தத் துறையிலாயினும் அரிய சாதனை என்று கருதப்படுவதற்கு, விவரங்கள் பதிந்த செப்பேடு வழங்கப் படுகிறது. உதாரணமாக, பத்திரிகை அச்சுத் தொழில் சம்பந்தப்பட்ட வகையில், ஒவ்வொரு வருடமும், போட்டி வைத்து, அச்சுத் தொழில், பத்திரிகை வெளியீடு ஆகியவற்றில் மிக நேர்த்தியானவை எனத் தேர்ந் தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்கு, அரசு முத்திரை பதித்த செப்பேடு வழங்கப்படுகிறது. இதனைப் பெறுதல் தகுதிக்கோர் அத்தாட்சி யாகும். பத்திரிகைகளில் படங்கள் வெளியிட உதவுவன செம்பாலான பிரதிமைகள்.

தொழில் துறைகள்: பல தொழில் துறைகளில் தாமிரம் இன்றியமை யாததாகத் திகழ்கிறது. சுத்தச் செம்பு மின் சக்தியைப் பாய்ச்சும் தன்மை யுடையது. அதனால் மின் சக்தி சம்பந் தப்பட்ட பல வேலைகளிலும் தாமிரம் பயன்படுகிறது. முதலில் மின் சக்தி உற்பத்தி. இதனைத் தோற்றுவிக்க அனல் நிலையங்களும் நீர் வீழ்ச்சி நிலையங்களும், உள்ளன. இவற்றின் கருவூலம் டர்பைன்' எனப்படும் இயந்திரம்.

இதிலே மிக மெல்லிய செப்புக் கம்பி கள் பொருத்தப்பெற்று மின் சக்தி யைத் தோற்றுவிக்கின்றன. மின் சக்தியை எடுத்துச் செல்ல உதவுவதும் செப்புக்கம்பியே யாகும். அதிக மின் சக்தியைத் தாங்கிச் செல்லப் பரும னை செப்புக் கம்பிகளே பயன்பட் டன. எனினும் இந்நாளில் அலுமினி யக் கம்பிகள் வந்து விட்டன. ஆனால், மின்வண்டி ஓட்டத்துக்குத் தேவை யானவை செப்புக் கம்பிகளே. பூமிக்கு அடியில் போடப்படும், "கேபிள்"களில் செப்புக் கம்பிகளையே காணலாம். பல்வகை மோட்டார்களை இயக்கச் செப்புக்கம்பியே தேவை. மேலும் ரேடியோ, டி.வி., ஆகியவை இயங்க நுண் செப்புக் கம்பிகள், தகடு கள் தேவை. தாமிரம் இந்நாளில் நல்ல விலை விற்பதால், செப்புத் திருட்டு நடை பெறுகிறது. அதிக மின் சக்தி பாய்ந்து செல்லும் செப் புக் கம்பிகளை, திருடர்கள் லாவக மாக, உயிரையும் பணயம் வைத்து, வெட்டி எடுத்துச் சென்று, உருக்கி, திருட்டுத்தனமாக விற்கின்றனா. இதனால், போக்குவரத்து மற்றும் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன.

பீர்' அருந்தப் பயன்படும் பாத்திரம்

பூஜைக்கு உபயோகமாகும் திருவிளக்கு - (மதுரை)

செம்பு சூட்டை ஈர்க்கும் தன்மை யுடையது. எனவே சூட்டைக் குறைக் கும் வேலைகளில் செம்பு பயன்படு கிறது. உதாரணமாக கார்களின் எஞ்சின் சூட்டைத் தணிக்க உதவும் பாகமே "ரேடியேட்டர்" எனப்படுவது. இது செப்புத் தகடுகளாலானது. சூட்டை இழுத்து வெளிப் படுத்துவதன் மூலம் வண்டி ஓடுவது சாத்தியமாகிறது. பெரும் உலைகளில் சூட்டைத் தணிக்கச் செம்பிலான பாகங்களை உப யோகிக்கின்றனர். செம்பு, சீக்கிரம் மாசு படாததால் உப்பு நீரில் இயங்கும் கப்பல் பாகங்களுக்குப் பயன்படு கிறது. இன்னும் எவ்வளவோ துறை களிலும் தாமிரம் பயன்பட்டுத் தொழில் வளத்துக்கு அடி கோலுகிறது.

தாமிர பஸ்பம்: தாமிரப் பாத் திரத்தில் தண்ணீர் வைத்தால் கெடாது. ஆனால், புளி, எலுமிச்சம் பழம் போன்ற உணவுப் பதார்த்தங் களில் உள்ள அமிலம் செம்புடன் கூடிக் களிம்பாக மாறும். களிம்பு விஷம். ஈயம் இல்லாத பாத்திரத்தில் சமையல் செய்து, களிம்பு தோன்று வது தெரியாமல் உண்டு மரணம் அடைந்தவர் பலர். ஆனால், செம்பு மருந்தாகவும் உபயோகப்படுகிறது. நம் நாட்டு வைத்திய முறையில் தாமிர பஸ்பம் செய்கின்றனர். இப் பொடி பல நோய்களுக்கு உற்ற மருந் தாய்த் திகழ்கிறது.

தாமிரம் தொன்மை வாய்ந்து, சமுதாயத்தை வளர்த்துப் பலதொழில் களிலும் பயன் தருகிறது. தெய்வத் திருப்பணியில் உபயோகமாவதே இந்த உலோகத்தின் சிறப்பு. ஈசனுடன் ஒன்றுபட்ட மாசு மறுவற்ற நிலையை நமக்கு ஒவ்வொரு விநாடியும் மனக் கண் முன் கொணர்வது செம்பு! தன்னைப் போல், இறைவனுடன் ஒன்றித்தோய நம்மையும் அழைக்கிறது!



கத்தி - முள் - செம்புப் பிடிமேல் 'எனமல்'

‘தர்மம் குறைந்து அதர்மம் மேலிடும்பொழுது, அதர்மத்தை அழிப்பதற்காகவும் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகவும் நான் அவ்வப்பொழுது அவதரிக்கிறேன்’ என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறியிருக்கின்றார். உலகில் அநாசாரங்கள் மலிந்து அக்கிரமங்கள் மேலிட்டு ஆணவமும் அகங்காரமும் மிகுந்து உலகினர் பாபத்தையே பெரிதெனப் பாராட்டுங் காலத்தில், ஈஸ்வரனானவர் உலகினரைத் தடுத்தாட்கொள்ளக் கருதி மானிட வடிவெடுத்து ஜீவராசிகளை ஈடேற்றுகின்றார். எல்லாத் தேசங்களிலும் எக்காலத்திலும் தர்மம் க்ஷீணிக்கும்பொழுது ஈஸ்வரன் அவதரிக்கின்றார் என்பது உண்மை. ஆனால் நாம் ஈஸ்வராவதாரத்தை யறிந்து கொள்கிறோம்; மற்றத் தேசத்தினர் அறிந்து கொள்கிறதில்லை. இதுதான் வித்தியாசம்.

கீழ் நாட்டினராகிய நமக்கும் மேல் நாட்டினராகிய ஐரோப்பியர், அமெரிக்கர்கட்கும் உள்ள வித்தியாசம் நமது ஜீவித நோக்கத்திலும் நடையிலும் இருக்கின்றது. நமது பழமையான நாகரிகமோ சைதன்ய நாகரிகம்: அவர்களுடைய நாகரிகமோ ஜட நாகரிகம். நம்முடைய மனபோக்கெல்லாம் அந்தர்முகம்; அவர்களுடைய மனப்போக்கெல்லாம் பகிர்முகம். நம்முடைய நடையுடை பாவனைகளெல்லாம் இகசுகம், பரசுகம் இரண்டிற்கும் சாதகமானவை; அவர்களுடைய நடையுடை பாவனைகளெல்லாம் இகசுகத்துக்கே சாதகமானவை. நாமோ நம்முடைய விஷயசுகங்களைச் சுருக்குகிறோம்; அவர்களோ அவர்களுடைய விஷயசுகங்களைப் பெருக்குகிறார்கள். நாம் பார்ப்பவற்றையெல்லாம் ஞானக்கண்களால் ஈஸ்வரனாக, ஞானமயமாகப் பார்க்கிறோம். அவர்கள் பார்ப்பவற்றையெல்லாம் ஊனக்கண்களால் உலகப் பொருள்களாகப் பார்க்கின்றார்கள். நமக்கும் அவர்களுக்கும் இத்தகைய வித்தியாசங்கள் இருப்பதினாலே, நாம் ஈஸ்வராவதாரத்தை யறிந்துகொள்வதும் அவர்கள் அறிந்து கொள்ளாமற்போவதும் ஆச்சரியமன்று.

புண்ணிய பூமியாகிய இப்பாரத நாட்டில் ஈஸ்வராவதார புருஷர்கள் அடிக்கடி பிறந்து வருகிறார்கள். பாரத நாட்டிலே பாபம் அதிகரித்துக் கொடுமை மிகுந்து எங்கும் இருள் சூழ்ந்துகொண்ட பொழுதெல்லாம் மகாபுருஷர்கள் பலர் அவதரித்து, எண்ணற்ற ஜீவராசிகளுக்கு ஒளி கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் விஜயம்

சுப்பிரமணிய சிவம்

ஸ்ரீ ராமர், ஸ்ரீகிருஷ்ணர், புத்தர், சங்கரர், ராமானுஜர் முதலியவர்களெல்லோரும் அவதார புருஷர்களே. சாந்த குணமும் நன்னடத்தையும் சமாதானமும் ஜனங்களிடத்தினின்றும் அகன்று, தேசமானது தியங்கித் தவிக்கும் காலத்தில் அதிதீவிர வைராக்கியசாலிகளாய், உயிர் போயினும் ஒரு பொய் சொல்லாத உத்தமர்களாயுள்ள ‘கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்’கள் சிலர், தேசபீடை நீங்கி ஸமஸ்தகோடி ஜீவராசிகளுக்கும் க்ஷேமமுண்டாக வேண்டும் என்று ஒரே காலத்தில் சங்கற்பித்துக்கொள்ள, அவர்களுடைய பரிசுத்தமான, வைரம் போன்ற மனத்தினின்றும் ஒரே முகமாகக் கிளம்பிய சங்கற்பங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மகாபுருஷனுடைய அவதாரத்துக்குக் காரணங்களாகின்றன. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்ய வல்லதன்றோ மனம்?

சொல்லொன்றும் செயலொன்றுமாகச் செயல்படும் இன்றைய அரசியல்வாதிகளை, எழுபது ஆண்டுகளுக்கு முன்பே, தம் ஆன்மிகச் சாதனையால் உணர்ந்து சாடியிருக்கிறார், இந்தப் ‘பாரதீய’ தியாக சீலர். நூற்றாண்டு விழாக் கண்ட இந்த ‘சிவ’த்தைத் தீபாவளிப் பொன்னாளில் நினைவில் கொண்டு போற்றுவோம்!

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY.
BESANT NAGAR. MADRAS-90.

இங்ஙனம் அவதாரமான ஒரு மகா புருஷனே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர். இவர் 1833-ஆவது வருஷத்தில் கல்கத்தா மாநகரின் அருகேயுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர். இப்பொழுது இவரது ஜீவித சரித்திரத்தை நாம் விரிவாக எழுத விரும்பவில்லை. ஆனால் இவர் அதிபால்ய முதற்கொண்டே பிரபஞ்சத்தில் விரக்தியடைந்து ஜகன்மாதாவின் தர்சனத்தில் ஆசை மிகுந்து, இரவு பகலாகக் கண்ணீர் பெருக்கிக் கரைந்து அழுது, மாதாவின் அருள்பெற்று மாயையைக் கடந்து ஸ்வாநுபவியாக விளங்கினார். அப்பொழுது அவரிடத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் போவதுண்டு. தம்மைச் சுற்றி உட்கார்ந்திருக்கும் அவர்களை நோக்கி அவர் பற்பல பழுத்த சாந்தமொழிகள் உரைப்பார். அவ்வமிர்த வசனங்களினால் அநேகர் துக்க நிவிருத்தியடைந்தனர். அம்மொழிகள் சிலரால் குறிக்கப்பட்டுப் புஸ்தகரூபமாக வெளிவந்திருக்கின்றன.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம் என்னும் நூலில் 'உபதேச ரத்தினமாலை' என்னும் பெயருடன் அவருடைய உபதேச மொழிகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மேற்படி புஸ்தகம் இப்பொழுது கிடைப்பது வெகு அரிதாயிருக்கின்றது. இப்புத்தகம் எத்தனை பதிப்புக்கள் வந்தாலும் தமிழ் நாட்டிற்கு நன்மையே செய்யும். ஆயினும் இப்புத்தகம் மறுமுறை பதிப்பிக்கப்படாமல் இருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது.

இவர் தமது கையெழுத்து இடவும் அறிந்திராதவர்; நிரட்சர குட்சி - எழுத்தறிவில்லாதவர் என்று சொல்லலாம். ஆயினும் இவருடைய சிஷ்யர் ஒருவர் அந்நிய நாடுகட்கும் சென்று ஆரிய மதத்தைப் பிரகாசிக்கச் செய்து உலகிலொரு பெருங்கிளர்ச்சியை உண்டுபண்ணி விட்டாரென்றால், இந்த நிரட்சர குட்சி இப்பொழுது இங்கும் அந்நிய நாடுகளிலும் ஆயிரக்கணக்கான ஜனங்களால் பூஜிக்கப்படுகிறாரென்றால், இந்த நிரட்சர குட்சி எண்ணற்ற ஜனங்களுக்கு உயிரையும் ஊக்கத்தையும் அளித்து மனமொடுங்கும்படியான மார்க்கத்தை உபதேசித்து மனச்சாந்தியை உண்டுபண்ணி ஈடேற்றுவித்தாரென்றால், உலகில் இதுவரையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் புஸ்தகங்களையெல்லாம் கற்று, சகல வேத சாஸ்திர மேதை, சதாவதான ஜயபேரிகை, பிரசண்ட மாருத வரகவியென்று ஒரு முழுநீளத்திற்கு மேல் பட்டப்பெயர்கள் தாங்கிப் பலரையும் ஏமாற்றி ஸ்வய நலத்தையே பெரிதாகப் பாராட்டி, தேகமே ஆத்மா போகமே மோட்சம் என்று திடமாக நம்பிக்கொண்டு, வாதிட்ட எவரையும் வாயடக்கி அகங்கரித்துத் திரியும் மனிதர்களினும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸராகிய நிரட்சரகுட்சி பல்லாயிரம் மடங்கு பெரியவர் என்பதில் ஐயம் சிறிதும் உண்டோ?

தாழ்ந்த வகுப்பினரை உயர்த்தப் பாடுபடும் தற்காலத்தவர்கள் தாழ்ந்த வகுப்பினரெனப்படுபவர்களைத் தாழ்ந்தவர்களாகவே நினைத்துக்கொண்டு, அவர்களை உயர்த்துவதற்குத் தாங்கள் என்னவோ ஈஸ்வரனிடத்திலிருந்து அதிகாரம் பெற்று வந்திருப்பவர்கள்போல நடித்துக்கொண்டு கர்வத்துடன் வெளிக்குச் சில பிரிய வசனங்களைப் பேசுகிறார்கள். இச்செய்கை தாழ்ந்தவர்களை உயர்த்தி விடுமா?

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு ஹரிஜனுடைய குடிசைக்கு இரவில் சென்று தமது தலையிலுள்ள ரோமங்களால் பெருக்கி, சுத்தம் செய்து விட்டு வந்து விடுவாராம். இப்படித் தழைந்து போகிறவர்களல்லவா தாழ்ந்தவர்களை உயர்த்துபவர்கள்?

இதனால் தற்காலத்திய சீர்திருத்தக்காரர்கள் ஒவ்வொருவரும் இழிப்பட்ட மக்களின் குடிசைகளைச் சுத்தம் பண்ணிக் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்ல வரவில்லை. ஆனால், இந்திய நாட்டிற்குப் புதிய உயிர் அளித்த, நம் பெருமைகளையும் மேன்மைகளையும் நமக்கென்றே ஸ்திரப்படுத்தி வைத்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரே ஹரிஜனுடைய குடிசையைச் சுத்தம் செய்வதை ஒரு பாக்கியமாகக் கொண்டாராதலால், இச்சீர்திருத்தக்காரர்கள் அங்ஙனம் செய்தால் இழிவையடைந்துவிட மாட்டார்கள்.

''தீரத்தினால் துறவு சேராமல் இவ்வுலகில்
பாரத்தனம் பேசல் பண்போ பராபரமே!''

என்றார் ஸ்ரீ தாயுமானவர். துறந்து விடுதல், சகல பற்றுக்களும் அற்றுச் சர்வ ஸ்வதந்திரனாதல், சர்வ சங்க பரித்தியாகம் செய்தல் எல்லோர்க்கும் எளிதன்று. தீரர்களாலேயே பிரபஞ்சப் பற்றை விட்டுவிடுவதற்கு முடியும். சோம்பேறிகளாலும் பயங்காளிகளாலும் முடியுமா? அக்கருத்தைத் தழுவியேயன்றோ மஸ்தான் சாயபு அவர்களும்,

''மீசை முளைத்த ஆண்பிள்ளைச் சிங்கங்களானுக்கால் வெளியே வாருங்கள் காணும்'' என்றார்.

உலக பந்தங்கட்குட்பட்டு ஓயாமல் கவலையும் துக்கமும் குடிகொண்டு உழலும் மானிடர்களைப் பெண்பிள்ளைகளென்றே கூறிவிட்டார் போலும்! ஒருவேளை ஆண்பிள்ளைகளென்று இவர் ஒப்புக்கொண்டாலும், ஆண்பிள்ளைச் சிங்கங்களல்லரென்று தெளிவாகக் கூறிவிட்டார்.

அநந்த கோடி ஜன்மங்களாக மேன்மேலும் நீண்டுகொண்டே தொடர்ந்து வரும் வாசனைச் சங்கிலிகள் ஜீவனைக் கையைக் காலை அசைக்க ஒட்டாதபடி நிர்ப்பந்தமாகப் பிணைத்துக் கட்டியிருக்கின்றன. ஈரேழு பதினான்கு உலகங்கட்கும் ஏகச்சக்ராதிபத்தியம் செலுத்தும் சக்கரவர்த்தியாயினும் சரியே, லட்சக்கணக்கான பெரும் படைகளை ஒரே காலத்தில் போர் முனையில் எதிர்த்து வெற்றி கொள்ளவல்ல வீராதி வீரனாயினும் சரியே மன்மதனையும் பின்னிடச் செய்யும் அழகு படைத்தவனாயினும் சரியே, உலகையெல்லாம் பிரமிக்கச் செய்கின்ற அதிமேதாவியாயினும் சரியே, எல்லோரும் வாசனைச் சங்கிலிகளினால் கட்டுப்பட்டேயிருக்கின்றனர். இச்சங்கிலிக் கட்டுக்களினின்றும் திமிறிக்கொண்டு இவற்றை உடைத்தெறிந்து ஸ்வதந்தரமாக வெளிக் கிளம்புபவன் எவனோ, அவனே துறவி; அவனே தீரன்.

ஸ்ரீராமகிருஷ்ணர் இத்தகைய துறவி. அவருடைய சிஷ்யராகிய ஸ்ரீ விவேகாநந்தர் இத்தகைய தீரர். இத்தன்மையோர் நமது நாட்டில் என்றும் இடைவிடாது அவதரித்துக்கொண்டிருத்தலினால்தான் நமது நாடு என்றும் சிரஞ்சீவியாகி எத்தேசத்தினராலும் புகழப்பட்டு விரும்பப்படுகிறது. ஆதலால் இவ்விரு தீரர்களும் என்றென்றும் வாழி. ❋

(தேசியப் போராட்ட வீரர், ஆன்மிகச் செல்வர், அருந்தியாகி சுப்பிரமணிய சிவம் பண்பட்ட பத்திரிகாசிரியராகவும் இருந்தார். பத்து நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். 'ஞான பாநு' போன்ற சில பத்திரிகைகளை நடத்தியிருக்கிறார். பாரத மாதாவுக்குத் தாம் பிறந்த பாப்பாரப் பட்டியில் கோயில் கட்ட முனைந்த பாரதியச் செல்வர் இவர். இந்தக் கட்டுரை 'ஞான பாநு' பத்திரிகையிலிருந்து எடுத்தது.)

[கட்டுரையைப் பிரதி செய்து உதவியவர்
திரு சீனி. விசுவநாதன் அவர்கள்:
ஆதாரம்: ஞான பாநு, மார்ச்-1916;
பக். 305-309; தொகுதி-3; பகுதி-12]

மாப்பிள்ளை வாழ்க!

பி.வி.ஆர்.

சர்மா அவருடைய இயல்பான குஷியில் இல்லை. சதா கலகலவென்று பேசுகிறவர், கடந்த ஒன்றரை மாதங்களாக வார்த்தைகளை அளக்கிறார். மனைவி மீனாட்சி அவரைப் புரிந்துகொண்டதோடு நிற்கவில்லை, தன்னுடைய மன நிலைமையையும் விளக்கி விட்டாள். அவரும் அவளும் இந்த விஷயத்தில் மனம் இணைந்திருப்பது அதிசயம் இல்லை.

ஆளோடியில் நின்று கொண்டு, வெறிச்சோடுமீ தெருவை டென்னிஸ் ஆட்டம் பார்க்கிறவரைப் போல இருமருங்கும் பார்த்தாள். சாதாரணமாக இந்த வேளையில், பகல் பன்னிரண்டு, அவர் 'ஹிந்து' தினசரியை இரண்டாம் முறை பார்த்துவிட்டு அது மௌனமாகப் பாடும் தாலாட்டில் கண் அயர்ந்து விடுவார். இப்போதெல்லாம் ஹிந்து பேப்பரே அவர் கைக்கு அவ்வளவு எளிதில் வருவதில்லை. மாப்பிள்ளை நடராஜன் காலை ஐந்தே முக்காலுக்கு மாடிக்கு எடுத்துக் கொண்டு போனால் மாலை ஐந்தரைக்குத்தான் திருப்பி அனுப்புகிறான். அதுவும் மாலதியிடம், மீனாட்சி ஆயிரம் தடவை சொன்னபிறகு.

சர்மா தம் நிலைமையை ஆராய்ந்து பார்த்தார். கடந்த இரண்டு மாதங்களாகப் பெண்ணும் மருமகனும் வீட்டோடு இருக்கிறார்கள். பெண் மீது அன்பும் பாசமுந்தான். ஆனால் மருமகனிடம் ஒரு பயமும் மரியாதையும் உண்டாகிறது. மாமனாருக்கும், மாப்பிள்ளைக்கும் பரஸ்பர பாசம் இருக்க முடியாது. இயற்கைக்கு விரோதம். கட்டிக் கொடுத்த பெண்ணை அவன் நன்றாக வைத்துக் கொள்ளவேண்டும் என்ற அச்சத்தில் ஏற்படுகிற மரியாதைதான் ஒரு மாமனாருக்கு மருமகனிடம் ஏற்படுகிறது இப்போது சர்மாவுக்கு மருமகன் மீது பயமோ மரியாதையோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அவருடைய அறுபத்து நாலு வயதில் நடராஜன் முப்பத்தெட்டு வயது மாப்பிள்ளை. கல்யாணமாகிப் பன்னிரண்டு வருடங்களாகி விட்டன. நிலைமை இப்படி இருந்தபோதிலும் பரம்பரை பரம்பரையாக வந்த பண்பும் நாகரிகமும் அவருடைய வாயையும் கையையும் கட்டிப் போட்டன. 'மாப்பிள்ளை என்னிக்கு அமெரிக்கா திரும்பறதா உத்தேசம்?' என்று ஒரு நிமிடத்தில் அவர் நடராஜனிடம் கேட்டு விடலாம். ஆனால் விளைவுகள்? தாலி கட்டின மறுநாளே பெண்டாட்டியுடன் அமெரிக்காவுக்குப் பறந்தவன் அவன். இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் ஒருமுறை கூட அவருடைய வீட்டுக்கு வந்தது இல்லை. அப்படிப்பட்டவனிடம் நேரடியாகக் கேட்டால் என்ன நடக்குமோ?

மாப்பிள்ளை நடராஜன் வெளிப் பார்வைக்குச் சிரித்த முகமும் கலகலப்பான பேச்சுமாகவே இருக்கிறான். இருந்தாலும் அவனுடைய சுயமரியாதையைக் கேள்வி பாதித்து விட்டால்? அப்புறம், அவ்வளவு தான்! மாலதி அழுது கொண்டே கணவனுடன் வீட்டை விட்டு வெளியேறுவாள், என்ன செய்ய? வந்திருக்கிற மாப்பிள்ளை, தானாகக் கிளம்பா விட்டால் சுமுகமாக அவனை எப்படி அனுப்புவது?

சர்மா உள்ளூற அழுது தீர்த்துக் கொண்டார். காலையில் எழுந்ததும் ஒரு கையில் காபியும் இன்னொரு கையில் பேப்பருமாகச் சோபாவில் உட்காரவும், இப்போது கூடத்தில் சோபா இல்லை. மாப்பிள்ளை உபசார விழாவுக்காக அவன் வருவதற்கு முன்தினமே மீனாட்சியின் உத்தரவில் மாடிக்குப் போய் விட்டது. நடராஜன் அதிகாலையில் எழுந்து வாசலுக்கு வந்து நிற்கிறான். 'ஹிந்து' பேப்பர் அவனைத் தாண்டி இதுவரையில் விழுந்ததில்லை. சர்மாவால் இன்னொரு பேப்பர் வாங்க முடியும். வசதி இருக்கிறது. ஆனால் அப்படி வாங்கி விட்டால் அவருடைய மானமும் மரியாதையும் போய் விடும் என்று நினைத்தார். பேப்பர் விஷயந்தான் இப்படி என்றால் குளியல் சாப்பாடு எல்லாமே விபரீதமாகப் போய் விட்டன. மருமகனுக்கு மேஜையில்லாமல் சாப்பிடத் தெரியாது. அவருக்குக் கீழே உட்கார்ந்தால்தான் இறங்கும். அவன் குளியலறைக்குள் பிரவேசித்தால் காலை விவிதபாரதி ஆரம்பித்து முடிந்து விடும். ஆனால் விவிதபாரதி பாட்டு எதுவும் கேட்காது. ஒரே அமெரிக்க ஜாஸ் மியுசிக் தான்; காதுக்கு நாராசம்.

நடராஜன் குளியல் அறையில் அப்படி என்னதான் செய்கிறான்? உடம்புத் தோலையே உரித்து எடுத்துத் துவைத்து மாட்டிக் கொள்ளுகிறானா? சர்மா எவ்வளவு நேரந்தான் காத்திருக்க முடியும்? எப்போது குளித்து, எப்போது பூஜையை ஆரம்பித்து முடிந்து இலை முன் உட்காருவது?

ஆளோடியில் இன்னும் நின்று கொண்டிருந்த சர்மா, தம் முன் ஒரு கார் திடீரென்று வந்து நிற்பதைக் கண்டதும் திடுக்கிட்டார். மறு கணமே மனம் சாந்தி அடைந்தது.

ஃபர்னிச்சர் கடை ராமசாமி தம் பூதாகார உடலைச் சிரமத்துடன் சிறிய காரிலிருந்து வெளிய கொண்டு வந்து, அவரை நோக்கி வந்தார்.

''வாப்பா ராமசாமி!'' என்று சொல்லிச் சர்மா நகர்ந்து வழி விட்டு விட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார்.

''என்ன சர்மா, ஒரு மாதிரியா இருக்கே, என்ன ஆச்சு?''

''எல்லாம் சரியாத்தான் இருக்கேன், என்ன திடீர்னு?''

''மறந்துட்டியா?''

''எதைப்பத்திக் கேக்கிறே ராமசாமி?''

''க மெ மே எல்லாம் என்னுங்க?''

''மெ மே ன் னெல்லாம் பேசினு புரியலே ராமசாமி. ஆடு பேசற பாஷை பேசாம விஷயத்துக்கு வா.''

''கட்டில் மெத்தை மேஜை... க மெ மே ரெண்டு மாசமா உன் கிட்டே இருக்கு.''

''ஓ, அதுவா? பதினைந்து நாள் வாடகைதான் தந்திருக்கேன், இல்லையா? என்னை மன்னிச்சுடுப்பா, ராமசாமி. பாக்கி வாடகையை இப்பவே தந்துடறேன்.''

''வாடகை இருக்கட்டும். எப்ப திரும்பும்?'' என்றார் ராமசாமி.

''திரும்பலையேப்பா!''

''கட்டிலும் மேஜையும் தானு திரும்பாது. சர்மா, நீ தான் எடுத்து டெம்போவில் போட்டுத் திருப்பி அனுப்பணும். இல்லாட்டா எனக்குச் சொல்லி அனுப்பணும்.''

''என் பொண்ணும் மாப்பிள்ளையும் இன்னும் திரும்பிப் போகலேன்னு சொல்ல வந்தேன்.''

''அவங்க வந்து ரெண்டு மாசமாச்சே?''

''உனக்குத் தெரியாது. ஏன்னு உன் கடையிலேந்து வாடகைக்கு அனுப்பியிருக்கே. எனக்குத் தெரியறது. ஏன்னு வாடகை நான் கொடுக்கறேன். ஆனு என் மாப்பிள்ளைக்குத் தெரியலையே, ராமசாமி.''

''உன் மாப்பிள்ளைக்குக் காலண்டர் பார்க்கற வழக்கம் இல்லியோ?''

''விசாரிச்சுத்தான் சொல்லணும்.''

''ஒரு வாரம். பத்து நாள் இருக்கிறதுதான் மாப்பிள்ளைக்கு அழகு.''

''என் மாப்பிள்ளை அழகான



மனுஷன் தான் ராமசாமி.''

''சர்மா, உனக்கு உடம்பு சரியில்லே. நான் ஒண்ணு சொன்ன, நீ ஒண்ணு புரிஞ்சுக்கறே. இன்னிக்குச் சாயங்காலம் கடையிலேந்து ஒரு டெம்போவை அனுப்பறேன். சுமெமேயை ஏத்தி விடு.''

''ராமசாமி !''

''ஏன் சர்மா அலர்றே? ஏழெட்டு, பத்து நாள் இருக்கிற மாப்பிள்ளென்னு உபசாரம் வேண்டியதுதான். ரெண்டு மாசமா டேரா அடிக்கிறவன் இன்னும் எத்தனே மாசம் இருப்பான்னு யாருக்குத் தெரியும்? நான் டெம்போவை அனுப்பறேன்.''

''அவசரப்படாதே, ராமசாமி.''

''உனக்குப் புத்தி சாதுரியம் போதாது சர்மா. கட்டிலும் மெத்தையும் வெளியேறினுலே உன் மாப்பிள்ளே புரிஞ்சுப்பான்.''

''புரிஞ்சுக்கற மாப்பிள்ளேயாப் படலே எனக்கு.''

''அப்ப, உன் மாப்பிள்ளேக்கு இனிமே எந்த உபசாரமும் தேவை இல்லே, . சர்மா. தரையிலேயே படுத்துக்கட்டும். ஜமக்காளத்தைப் போடு, போதும்.''

'' நீ ரொம்பச் சுளுவாச் சொல் லிட்டே. என் கவலையும் குழப்பமும் உனக்கு என்ன தெரியும் ராமசாமி? வரவர எனக்குப் புதுசு புதுசா பயம் பொறந்துண்டேயிருக்கு.''

'' என்ன பயம்?''

'' அமெரிக்காவிலே நல்ல வேலை யில இருந்தவன் லீவு முடிஞ்சு திரும்பிப் போகலேன்னு என்ன அர்த்தம்? சாயங்காலம் இருட்டின துக்கு அப்புறம் வெளில போறான். மத்தபடி வெளியிலே தலைகாட்ற தில்லே. இதுக்கு என்ன அர்த்தம்?''

'' புரியலே.'' என்றார் ராமசாமி.

'' அங்கே, அமெரிக்காவில ஏதானும் தப்பா நடந்திருக்குமா? மறுபடியும் அங்கே உள்ளே விட மாட்டாளோ?''

'' எது என்னவானு உனக்கு என்ன சர்மா? நீ பேசாம, மௌனமா நடவடிக்கை எடு. டெம்போவை அனுப்பறேன்.''

'' வேண்டாம் ராமசாமி.''

''நீ அதிக சுகங்களைக் கொடுத்தா, விருந்தாளிக்குத் திரும்பிப் போக மனசு வராது. நான் வரேன். சரியா அஞ்சரை மணிக்கு டெம்போ வரும்.''

சர்மா மறுத்துப் பேச முயன்றார். வார்த்தைகள் நாவில் எழவில்லை. ராமசாமி தம் பூதாகார உடம்பை சிரமத்துடன் காரினுள் நுழைத்துக் கொண்டார்.

சர்மா மெல்ல மாடிப்படியை நோக்கி நடந்தார். மாடியில் ஒரே அறைதான். அதில் பெண்ணும் மருமகனும் இருக்கிறார்கள். என்ன தான் பகல் வேளையானாலும், ஒரு தம்பதி தனியாக இருக்கும் போது போகக்கூடாது என்று அவருக்குத் தெரியும். ஆனால் அவருடைய நிலை மையில், இங்கிதம் சர்மாவைக் கைவிட்டது.

நான்காம் படியில் கால் வைக்கும் போது, மாப்பிள்ளை நடராஜ னுடைய குரல் கணீரென்று கேட்டது. சர்மா நின்றார்.

'' நீ என்ன சொன்னாலும் நான் கவலைப்படமாட்டேன், மாலு. எனக்கு இந்த இடம் பிடிச்சுப் போயாச்சு.''

'' மாமனார் வீட்லே மாப்பிள்ளை அதிகமாகத் தங்கறது முறையில் லீங்க.''

''இது உன் அம்மா வீடுதானே?''

''அதனாலே?''

''நீ இங்கே தானே இருக்கே?''

'' அதனாலே?''

'' நான் உன்னோடு இங்கே இருக் கிறதா வைச்சுக்க. அது சரி, பாங்குக்குப் போய் நம்ப லட்சத்துப் பன்னண்டாயிரம் டாலருக்கு வந்த அட்வைஸ் என்னாச்சுன்னு விசாரிக் கச் சொன்னேனே, செஞ்சியா?''

'' இன்னிக்கு மத்தியானம் போய்க் கேக்கறேன்.''

'' கேளு. ஆனா, மாலு.''

'' என்ன?''

'' இந்த நிலைக்கண்ணாடியில பார்த்தா மாடிப்படி தெரியறது. மாடிப்படியில உன் அப்பா நிக்கறார். அவர் முதல்லே போகட்டும். அப்புறம் பேசிக்கலாம்.''

சர்மா மெல்ல, பூனை போல இறங்கினர். தாம் மாடிப்படியில் நின்று கொண்டிருந்ததை மாப்பிள்ளை கண்டு பிடித்து விட்ட தில் அவமானம் பிடுங்கித் தின்றது. அதே சமயத்தில் மாப்பிள்ளையை விரைவிலேயே வெளியேற்றிவிட வேண்டும் என்ற வைராக்கியமும் பிறந்தது.

மூன்றும் நாள் மாலை.

நடராஜன் கூடத்துக்கு வந்தான். சர்மா கண்களை மூடியவராய்ச்சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

'' என்ன மாமா, தூக்கமா?''

கண் விழித்த சர்மா, '' ஓ, மாப்பிள்ளையா!'' என்றார்.

''ஏன் மாமா, நான்தான் ரெண்டு மாசமா இங்கே இருக்கேனே; ஏன் இன்னும் மாப்பிள்ளே, மாப்பிள் ளேன்னு கூப்பிடறேள்? நட ராஜன்னு கூப்பிடுங்க.'' நடராஜன் நாற்காலியில் உட்கார்ந்து கொண் டான்.

சர்மா அவனை ஏறிட்டுப் பார்த் தார். பிறகு மெதுவாகத் தாழ்ந்த குரலில், '' பழக்கம் இல்லேப்பா. மத்த ரெண்டு மாப்பிள்ளைகளும் அபூர்வமாத் தலையைக் காட்டுவா. காபி டிபனுக்குக் கூட நிக்காமப் போயிடுவா. அவங்களைப் பேர் சொல்லிக் கூப்பிடற அளவுக்கு அவங்க இருந்ததில்லை.''

''புரியறது, மாமா.''

''புரிஞ்சா சரி.''

''ஆனா நீங்க ஒரு விஷயத்தை மறந்துட்டீங்க, மாமா.''

''என்ன சொல்றேள், மாப் பிள்ளை?''

''நானா இங்கே வந்து ஆணி அடிச்சு உட்காரலே.''

''என்ன சொல்றேள், புரிய லையே!'' என்றார் சர்மா.

''பன்னண்டு வருஷத்திலே நீங்க ளும் மாமியாரும் எங்களுக்கு வருஷா வருஷம் லெட்டர் போடுவேள், ஒரு மாசமாவது நானும் மாலதியும் வந்து தங்கணும்னு.''

''ஆமாம், அதுக்கு இப்ப என்ன?''

''எங்களாலே இதுவரையில் வர முடியலே, அதனாலே...''

நடராஜன் நிறுத்தினான்.

சர்மாவுக்கு வயிறு கலக்கியது. எதற்கு இந்த மாப்பிள்ளை அஸ்தி வாரம் போடுகிறார்?

''வருஷத்துக்கு ஒரு மாசம்னா பன்னண்டு வருஷத்துக்குப் பன் னண்டு மாசம். புரியறதா மாமா?''

''புரியறது, மாப்பிள்ளை.''

''நீங்க வாடகைக் கட்டிலைத் திருப்பி அனுப்பிச்சிட்டீங்க. பரவா யில்லை. தரையில படுத்தாலும் சுக மாகத்தான் இருக்கு. நீங்க கவலைப் படாதீங்க. நிச்சயம் இன்னும் பத்து மாசம் இருக்கத்தான் போறேன்.''

சர்மாவின் தைரியம் கை கொடுக் காமல் கவிழ்த்துவிட, '' சரிப்பா'' என்றார்.

'' இன்னொன்று...''

'' என்ன மாப்பிள்ளே?''

'' மாடிப்படியில நின்று ஒட்டுக் கேக்கறது ரொம்ப அற்பக்குணம்.''

'' நான் ஒட்டுக் கேக்கணும்னு வரலே ...''

'' சரி, இன்னொரு சமாசாரம் தெரியுமா, மாமா?''

'' என்ன மாப்பிள்ளை?''

'' மாப்பிள்ளைன்னா என்னிக்கும் மாப்பிள்ளைதான்! அவனுக்குக் கிழட்டுத்தனமே கிடையாது. இதை என் பாட்டி அடிக்கடி சொல் லுவா.''

'' நானும் ஒரு மலையாளப் பழ மொழி கேள்விப்பட்டிருக்கேன், மாப்பிள்ளே! எருமைக்கும் மாப் பிள்ளைக்கும் கிழட்டுத்தனம் கிடை யாதுன்னு. நாளைக்குச் சாகப் போற எருமை இன்னிக்குக் கன்று போடு மாம்.''

'' இதை ஏன் மாமா மறந்து போயிட்டீங்க?''

'' எதை?''

'' நீங்களும் ஒருத்தரோட மாப் பிள்ளேங்கறதை.''

'' ஆமாம். என் மாமனார் தொண் ணுத்திரண்டு வயசில குண்டுக்கல்லா இருக்கார். நான் அவரோட மாப் பிள்ளைதான்.''

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி
ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி
இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ் ஜோதி
ஈனமின் றிகபரத் திரண்டின்மேற் பொருளாய்
ஆனலின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி
உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசுசெய் தோங்கும் அருட்பெருஞ் ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ் ஜோதி

—திரு அருட்பிரகாச வள்ளலார்

விளம்பர உதவி :

சக்தி சுகர்ஸ் லிமிடெட்,
180, ரேஸ் கோர்ஸ் சாலை,
கோயம்புத்தூர் - 641 018.

“புரிஞ்சா சரி!” என்றான் நடராஜன்.

அடுத்த வாரம் ஒரு நாள்.

கூடத்தில் பெட்டி, படுக்கை, புத்தகங்கள், ஒரு மரப்பெட்டியில் பாத்திரங்கள்.

சர்மாவும் மீனாட்சியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கள்ளத்தனமாய்ச் சிரித்துக் கொள்ள, நடராஜனும் மாலதியும் மாடியிலிருந்து இறங்கி வந்தார்கள்.

“மாலதி சொன்னா, சந்தோஷம்” என்றான் நடராஜன்.

“அன்னிக்கு நீங்க சொன்னது என் சிந்தனையைத் தூண்டிவிட்டது, மாப்பிள்ளே!”

மாலதி விழித்தாள்.

“என்னப்பா, இவர் என்ன சொன்னார்? அதுவும் உங்க சிந்தனையைத் தூண்டற அளவுக்கு?”

“மாலு, மாப்பிள்ளை அன்னிக்குச் சொன்னார், ஒரு மாப்பிள்ளைன்னு உருவாகிவிட்டா, அவனுக்குக் கிழடு தட்டறதில்லையாம்.”

“அதனால் தான் மாலு, உன் அப்பா, அம்மாவை அழைச்சுட்டு மாமனார் வீட்டுக்குப் போனார்.”

“தாத்தா வீடு புரசைவாக்கத்திலேதானே இருக்கு? ஏன் பெட்டி படுக்கையெல்லாம் எடுத்துண்டு போகணும்?” என்றாள் மாலதி.

“உன் அப்பா இதுவரையில் அங்கே ஒரு ராத்திரி தங்கினது இல்லை, மாலு. இப்பப் போய் நிரந்தரமா தங்கிடறதுன்னு முடிவு எடுத்திருக்கோம்.”

“அப்ப எங்க கதி?” என்றாள் மாலதி.

நடராஜன், “கவலைப்படாதே, மாலு. அமெரிக்காவிலே சமைச்சுண்ட மாதிரி இங்கே சமைச்சுப் போம்.”

“மன்னிக்கணும் மாப்பிள்ளை. என் மாமனார் வீட்லே காஸ் அடுப்பு இல்லே” என்றார் சர்மா.

“அதனாலே...?” மீனாட்சி இழுத்தாள்.

“சரி, மாமா. நான் எலக்ட்ரிக் ஹாட் பிளேட் வாங்கிக்கறேன்.”

“மாப்பிள்ளே, எலக்ட்ரிக் பில் ரெண்டு மாசமா கட்டலே. எப்ப வேணும்னாலும் கட் பண்ண வருவான்.”

“கவலைப்படாதீங்க மாமா. நான் பழம் பாக்கியைக் கட்டிக்கிறேன். நீங்க நிம்மதியாப் போயிட்டு வாங்க. எங்களைப் பத்திக் கவலைப்படாதீங்க!”

“வளையல் போட்ட கரம் தந்தால் தான் டிபன் சாப்பிடுவேன் என்றீர்களாமே! அவள் மாட்னிக்குப் போயிருக்காள்.”

“இன்னொரு முக்கியமான சமாசாரம் மாப்பிள்ளை!”

“என்ன மாமா?”

“என் மாமனார் அவர் வீட்டை, இதோ இவருக்குத்தான் எழுதி வைச்சிருக்கார். அதனாலே...?”

“அதனாலே இதை வாடகைக்கு விடப் போறீங்களா அப்பா? எத்தனை வாடகை?”

“வாடகைக்கு விடலேடீ!” என்றாள் மீனாட்சி.

“அப்பாடீ! பயந்தே போயிட்டேன்!”-மாலதி.

“பர்னிச்சர் கடை ராமசாமிக்கு விக்கப் போறேன். அவன் மூணு லட்சந்தான் தருவேன் என்கிறான். நான் மூணேகால் லட்சத்தில் நிக்கறேன்” என்றார் சர்மா.

“மாலு, விஷயம் ரொம்ப முத்திப் போயிடுத்து.” -நடராஜன்.

“இப்ப என்ன செய்யறதாம்?” என்றாள் மாலதி.

“பழம் நழுவிப் பாலில் விழுந்திடுச்சு” என்றான் நடராஜன் சிரிக்காமல்.

“என்ன சொல்றீங்க?”

“பழம் நழுவிப் பாலில் விழுந்ததுன்னு மாப்பிள்ளை சொல்றார்” என்றார் சர்மா.

“நானா எப்படிப் பேச்சை எடுக்கறதுன்னு தயங்கிண்டிருந்தேன். நல்ல வேளையா உன் அப்பாவே இந்த வீடு விக்கற விஷயத்தை ஆரம்பித்தார். மாலதி, நீ மாடிக்குப் போய் என் செக் புக்கைக் கொண்டு வா.”

“மாப்பிள்ளே!” சர்மா அலறினார்.

“மூணும் மனுஷனுக்கு உங்க வீடு போவானேன், மாமா? மூணேகால் லட்சத்தை நானே தர்றேன்.”

“இது ரொம்பப் பழைய வீடு மாப்பிள்ளே. எழுபது வயசாச்சு.”

“பரவாயில்லே மாமா. இடிச்சுப் புதுசாக் கட்டிக்கறேன். மொட்டை மாடியிலிருந்து பார்த்தா கோவிலும் கோபுரமும் தெரியறது. சமுத்திரமும் தெரியறது. இன்னிக்கே வக்கீல்கிட்டப் போவோம்.”

“கிணறு வெட்ட பூதம் பொறப்பட்ட கதையாயிருக்கு” என்றாள் மீனாட்சி.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை. மீனாட்சி, நம்ப மாப்பிள்ளை உள் நோக்கத்தோடுதான் இத்தனை நாளா இங்கே இருந்திருக்கிறார்னு இப்ப நன்னாப் புரிஞ்சுடுத்து. இனிமே நாம இங்கே இருக்கிறது நாகரிகம் இல்லே; புறப்படு!” என்றார் சர்மா. அவருடைய வீட்டுக்கு மூணே கால் லட்சமா? அவரால் நம்பவே முடியவில்லை.

“யாரும் எங்கேயும் போகவேண்டாம். இந்த வீடு என்னோடு வீடு. நீங்களும் மாமியும் எங்களோடயே இருக்கப் போறீங்க. நான் புதுசா ஒரு வியாபாரம் ஆரம்பிக்கப் போறேன். ஊர் ஊரா அலைய வேண்டியிருக்கும். மாலுவை நீங்கதான் பார்த்துக் கொள்ளணும்” என்றான் நடராஜன்.

பிரமை பிடித்துப் போன சர்மாவால் பேச முடியவில்லை.

“மாமா, சந்தோஷமா இருங்கோ. இந்த மாமனார் — மாப்பிள்ளை உறவெல்லாம் இனிமே கிடையாது. வீட்டுக்குப் பெரியவரா லட்சணமா எந்தக் கவலையும் இல்லாம இருங்கோ.”

“புறப்பட்டதுதான் புறப்பட்டோம், புரசைவாக்கம் போய் வந்துடலாம்” என்றாள் மீனாட்சி.

“அமெரிக்காவிலேந்து அனுப்பின கார், கப்பல்லே நாளைக்கு வந்து சேர்றது. டெலிவரி எடுத்ததும் அதிலே எல்லாருமாப் போகலாம்” என்றான் நடராஜன்.

கடந்த இரண்டு மாதங்களை மறந்து போய்ப் பரவச நிலையில் சர்மா ஆழ்ந்தார். ★

குற்றம் குற்றமே!

கமலா சடகோபன்



"**அ**ம்மா, எனக்குக் கூட்டு வேணும்."

"ஐயோ, காரம், சீக்கிரம் தண்ணி கொடும்மா."

"இருங்கடா; சும்மா விரட்டாதீங்க. ஒவ்வொருத்தர், ஒவ்வொண்ணு ஒரே சமயத்திலே கேட்டா, எனக்குக் கையும் காலும் ஓடமாட்டேங்கறது."

"டேய் சுந்தர், லட்சுமி சரஸ்வதி படத்திலே இருக்கிற மாதிரி பெண்களுக்கும் நாலு கைகள் இருந்தா, சாப்பாடு போடற சமயத்திலே லகுவா இருக்கும். நாமும் கல்லூரிப் பஸ்ஸைச் சீக்கிரம் பிடிச்சுடலாம்."

"ராஜு, ஒண்ணை மறந்துட்டியே? தங்கம் விக்கற விலையிலே ரெண்டு கைக்கு வளையல் பண்ணிப் போடறதுக்குள்ளே விழி பிதுங்கிடறது. நீ சொல்ற மாதிரி நாலு கைகளையும் நிறைக்கணுமே? அந்தப் பயங்கரத்தை விட இந்த மசமசப்பைப் பொறுத்துக்கலாம்."

பிள்ளைகளுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்த அம்புஜத்துக்குச் சிரிப்பு வந்தது. கையிலிருந்த கரண்டியைத் திருப்பிக் காம்பு ஓரத்தினால் சுந்தரின் தலையில் செல்லமாகத் தட்டினாள்.

"இந்த வாய்க்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே. ராஸ்கல்" என்று கடிந்து கொண்டே கூட்டை அவனுக்குப் பரிமாறினாள்.

அதே சமயம், "அம்மா" என்று வராந்தாவிலிருந்து குரல் கேட்டது. சமையலறையை ஒட்டி இருந்த வராந்தாவில் முரளி தட்டுடன் காத்திருந்ததை அம்புஜம் எட்டிப் பார்த்து உணர்ந்து கொண்டாள்.

"முரளி, ரொம்ப நேரமாக் காத்திண்டிருக்கியா?"

"இல்லேம்மா, பத்து நிமிஷந்தான் ஆறது. நீ அவா ரெண்டு பேருக்கும் போட்டுட்டு வருவேன்னு காத்திண்டிருக்கேன்."

அவள் எரிச்சலுடன் கூறினாள்: "மணிக் கணக்கிலே இந்த வராந்தாவிலே காத்திருந்தாலும் காத்திருப்பியே தவிர, அப்பா சொன்னதைக் கேட்டு நடக்கிறது மட்டும் உனக்குப் பிடிக்கலே, இல்லியா?"

"நன்னாக் கேளும்மா." சுந்தர் உள்ளேயிருந்து கத்தினான்.

முரளி அடர்த்தியாக வளர்ந்திருந்த தன் மீசையைப் பெருமையுடன் தடவிக் கொண்டான்.

"அம்மா, அப்பாவுக்குப் பிடிக்காத இந்த மீசையை எடுக்க எனக்கு நேரமாகாது. இது ஒண்ணும் பெரிய விஷயமில்லே. ஆனா அவர் அதைச் சொன்ன விதந்தான் எனக்குப் பிடிக்கல்லே. என் சுய கௌரவத்தைப் பாதிக்கிற விதத்திலே சொல்லிட்டார்."

"என்னடா, பெரிசா சொல்லிவிட்டார்? மீசையை எடுக்கற வரையிலும் உன்னை வராந்தாவிலே உக்கார்த்தி வைச்சு சாப்பாடு போடணும்னு என்கிட்டே சொன்னார். அவருக்குப் பிடிக்காததை வெளிப்படையா அப்படிச் சொல்லிக் காண்பிச்சுண்டார்."

"தீண்டத் தகாதவன் மாதிரி ஒதுக்கற அளவுக்கு இந்த மீசைங்கறது அவ்வளவு மட்டம் இல்லே. அந்த மாதிரியே வராந்தாவிலே சாப்பிடாமல் அடுக்களைக்கு வந்து சாப்பிடறதுனாலே, பெரிய சாம்ராஜ்யப் பதவியும் வந்துடப் போறதில்லேம்மா."

"டேய், என் வேதனையைத் தெரிஞ்சுக்காம விதண்டவாதம் செய்யறியே? நீ இப்படி நடந்துக்கறது நன்னாவேயில்லை."

"இதிலே உனக்கு என்னம்மா வேதனை? மூணு மாசம் நான் வராந்தாவிலே உட்கார்ந்து சாப்பிடறதினாலே என் உடல்கனம் ஒண்ணும் குறைஞ்சுடல்லே."

"சீ, போ! அப்பா சொன்னவுடனே காதும் காதும் வெச்சாப்பல, மீசையை எடுத்துத் தொலைச்சுட்டு உள்ளே வந்து எல்லாரோடும் உட்கார்ந்திருந்தா பிரச்னையே இருந்திருக்காது. அதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம். இப்போ மூணு மாசமாப் பிரச்னையை வளர்த்துட்டு, இப்பொ மாறணும்னு நீயே நெனைச்சாலும், உன் சுய கௌரவம் அதுக்கு இடம் கொடுக்கல்லே இல்லியா?"

முரளி சிரித்தான். அம்புஜம் தொடர்ந்தாள். "முரளி, உன் கௌரவம் உனக்குப் பெரிசா இருந்தா, உன்னைப் பெத்தவர் கௌரவம் பார்க்கமாட்டாரா?"

அதே சமயம் சாப்பிட்டு முடித்து வெளியே வந்த பத்து வயசு ராஜு, "முரளி அண்ணா, உன் பக்கத்திலே எனக்கும் இடம் வைச்சு வை. எனக்கு மீசை முளைச்சதும் நானும் இந்த வராந்தாவுக்கே வந்துடறேன்.

தன்னை அடிக்க வந்த அம்புஜத்திடமிருந்து தப்ப, எச்சல் தட்டுடன் வேகமாக ஓடிய அவன், முழுகிவிட்டு, எதிரே ஈரத் துண்டுடன் வந்த தன் தந்தை ராமனின்மேல் மோதிக் கொண்டான்.

அதன் பலனாக அவரிடமிருந்து கன்னத்தில் சூடாக ஓர் அறையையும் பெற்றுக் கொண்டான். அவர் முணுமுணுத்துக் கொண்டே மறுபடியும் குளிக்கக் கிணற்றங்கரைக்குத் திரும்பினார்.

கோவிலிலிருந்து விசாலம் வரும்போது, அவளுடைய மாட்டுப் பெண் ரமா முகத்தை முழங்கால்களில் புதைத்து உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

மணி உரத்த குரலில் அவளைத் திட்டிக் கொண்டிருந்தான். பழைய காரணந்தான் இருக்கும் என்று ஊகித்த விசாலம் மணியைக் கடிந்து கொண்டாள்.

"அவளைத் திட்டி என்ன பிரயோஜனம்? நடக்க வேண்டியதைக் கவனி. யாராவது மனோதத்துவ டாக்டரைக் கேட்டுப் பாரேன். கல்யாணம் முடிஞ்சு மூணு மாசம் ஆச்சு. இன்னுமா ஒரு பொண்ணுக்கு, அதுவும் இந்தக் காலத்திலே, பயம், வெட்கம் எல்லாம் இருக்கும்?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா? தேனிலவு போன சமயத்திலே இல்லியே. அவ வீட்டுக்குப் போனாலும் வரதில்லையே! இந்த அறையிலேதான் அவளுக்கு எல்லாப் பயமும் வருது. கண்ணாடியிலே முகம்

தெரியறதாம். பாதி ராத்திரியிலே எந்தத் திருடன் கூரை மேலே உட்கார்ந்துண்டு தினமும் இந்தச் சுந்தரியை எட்டிப் பார்க்கிறான்?''

''உங்க மாமனார்கிட்டே சொல்லிப் பார்க்கறதுதானே? சின்ன வயசிலே எங்கேயாவது பயந்திண்டிருப்பாளோ என்னவோ?''

''அவர் நம்ம குடும்பத்திலே தான் என்னவோ தெய்வக் குத்தம் இருக்கும்னு சொல்றார்.''

''எனக்குத் தெரிஞ்சு ஒண்ணும் இல்லேனுதான் நினைக்கிறேன்.''

''நீ ஏம்மா வேதனைப்படறே? இந்த ஒண்டுக் குடித்தனம், ரெண்டு அறையிலே சம்சாரம் செய்யறது அவளுக்குப் பிடிக்கலேன்னு நினைக்கிறேன், அதனாலே நம்மை எல்லாம் இப்படிப் பயமுறுத்தறா: புதுசா வேற இடம் என்னாலே தேடி அலைய முடியாது. அப்படிக் கிடைச்சாலும் வாடகை இதைவிடப் பலமடங்கு அதிகமாயிருக்கும். என்னாலே அவ்வளவு கொடுக்க முடியாது. விருப்பம் இருந்தா இங்கே ஒழுங்கா இருக்கட்டும். இல்லேனா அப்பன் வீட்டுக்கே போகட்டும்.''

அவன் சொல்வதிலும் உண்மை இருப்பதை விசாலம் உணர்ந்தாள். அவளுக்குத் திருமணம் முடிந்ததும், கணவனுடன் புதுக் குடித்தனம் வைத்து நடத்தியது, இதே திருவல்லிக்கேணியில், இதே வீட்டில் தான்

வீட்டுக்காரர் ராவும் அந்த ஒரு காரணத்துக்காகவே வாடகையை அதிகமாக ஏற்றாமல், பழைய வாடகையையே வாங்கிக் கொள்கிறார். வெளியில் போனால் இதே மாதிரி சின்ன இடமாக இருந்தாலும் மூன்று மடங்கு வாடகையைக் கொடுக்க வேண்டும். போதாத குறைக்கு அட்வான்ஸ் என்னும் பெயரில் ஆயிரக் கணக்கில் கேட்பார்கள்.

ரமா வந்ததிலிருந்து இந்த மூன்று மாதங்களாகத்தான் விசாலம் சமையலறையில் படுத்துக் கொள்கிறாள். அதற்கு முன் அம்மாவும் பிள்ளையுமாக இதே அறையில் படுத்துக் கொள்வார்கள். இத்தனை நாட்களாக இவளுடைய கண்களில் பயப்படும்படியாக எதுவும் பட்டதில்லை. ரமாவுக்கு மட்டும் பயம் வருவானேன்?

''மணி, பக்கத்தாத்து யக்ஞராமன்

உனக்குப் பரிசயம் உண்டா?''

''யாரு?' புதுசா வீடு வாங்கிண்டு வந்திருக்காரே அவரா?''

''புதுச என்னடா? ஏழெட்டு வருஷமாயிடுத்து, அவர் வீட்டை வாங்கி, அவர் தெய்வம் தேவாதினு எதையோ வெச்சுண்டு, விபூதி மந்திரிச்சுக் கொடுக்கிறாராம். ரமா எங்கேயாவது பயந்திருந்தாலும் அவர் கிட்டே விபூதி வாங்கிக் கொடுத்தால் சரியாகிடும்னு நான் நினைக்கிறேன்.''

''எதையோ செய்'' என்று அலுத்துக் கொண்டு ஆபீசுக்குப் புறப்பட்டவன் திரும்பி வந்தான்.

''அம்மா, அந்த விபூதி இவ பார்வையிலே படற முகத்தை மட்டும் விரட்டினா போதும். என்னையே விரட்டிடப் போகிறது. கொஞ்சம் அதைக் கவனிச்சு விபூதியைக் கொடுக்கச் சொல்லு'' என்று பரிகாசமாகக் கூறி ரமாவைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினான்.

பிள்ளை, மனைவியைச் சமாதானப் படுத்தும் முயற்சி இது என்று புரிந்து கொண்ட விசாலம் சிரித்துக் கொண்டே நழுவினாள்.

ரமா அவன் ஆபீசுக்கு போனதும் விசாலத்திடம் கூறினாள். ''அம்மா, நீங்களாவது நான் சொல்றதை நம்புங்கம்மா'' என்று மாமியாரை, தாங்கள் படுக்கும் அறைக்கு அழைத்துச் சென்று மேலே ஓடுகளில் வெளிச்சத்துக்காகப் பதித்திருந்த கண்ணாடியைக் காட்டினாள்.

''இராத்திரி வேளையிலே கண்ணாடி மேலே யாரோ குனிஞ்சு பார்க்கிற மாதிரி இருக்கு. கண்ணு மூக்குனு பளிச்சினு தனித்தனியாத் தெரியுது. ஒரு சமயம் நிழலாத் தெரியறது.''

விசாலம் சிந்தனையுடன் மேலே நிமிர்ந்து பார்த்தாள். பிற்பகலில் தான் மட்டும் அம்புஜத்தைப் பார்க்கப் புறப்பட்டாள். ரமாவுக்கு மந்திரிக்கலாம் என்று பிள்ளையிடம் யோசனை கூறியவள், ரமா இல்லாமலேயே புறப்பட்டுவிட்டாள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. முரளி தந்தை சாப்பிட்டதும், சாப்பிட வருவதாகக் கூறிவிட்டு ஹாலிலேயே உட்கார்ந்திருந்தான்.

யக்ஞராமன் பூஜையை முடித்துக் கொண்டு சாப்பிட வந்தவர், தம் தட்டு முரளி சாப்பிடும் இடத்தில் வராந்தாவில் போடப்பட்டிருப்பதைப் பார்த்ததும் கோபத்துடன் மனைவியை முறைத்தார்.

அம்புஜம் அவருடைய கோபத்துக்குப் பயபபடவில்லை. அறையிலிருந்த முரளிக்குக் கேட்காமல் இருக்க வேண்டும் என்ற கவனத்துடன் மெல்லிய குரலில் பேசினாள்.

''இந்த வீட்லே அந்த வராந்தா தான் குற்றவாளிக் கூண்டு. நீங்களும் ஒரு விதத்திலே குற்றவாளின்னு தெரிஞ்சதும், உங்க பிள்ளைக்கு ஒரு சமயத்திலே நீங்க கூறின தீர்ப்பையே உங்களுக்கும் நான் கொடுத்துட்டேன்.''

''என்ன, நாக்கு ரொம்ப நீள்றது? என்கிட்டே என்ன குத்தத்தைக் கண்டுட்டே?''

''முரளி மீசை வளர்த்ததினாலே யாருக்கும் எந்த உபத்திரவமும் இல்லே. அப்படியும் அவன் பெரிய தப்புச் செய்துட்டதா நினைச்சு ஒதுக்கி வச்சுச் சாதம் போடச் சொன்னீங்க. குழந்தையும் தண்டனையை ஏத்துண்டு நேத்து வரையிலும் ஒதுங்கியே இருக்கான். சில பேர் செய்யற தவறுகள் அக்கம்பக்கத்துக் குடும்பங்களில் கலக்கத்தை உண்டாக்கி, உபத்திரவத்தைக் கொடுக்கறது. அது மட்டும் இல்லே. ஒரு பாவமும் அறியாத முரளியின் தலையிலே அந்தப் பழி விழுந்து அவனைப் பத்தித் தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருக்கு. அவன் வயசுப் பிள்ளேங்கற ஒரே காரணந்தான் அந்தப் பழிக்கு அவன் ஆளாகிவிட்டான்.''

!

''அம்.புஜ..ம்.'' யக்ஞராமன் தடுமாறினார்.

''நமக்குக் கல்யாணம் ஆன புதுசிலே அருவருப்பான படங்களை வச்சுண்டு ரகசியமாப் பார்த்து ரசிப்பீங்கனு எனக்குத் தெரியும். ஆனா அது எனக்குத் தெரிஞ்சதாகவே உங்ககிட்டே நான் காண்பிச்சுண்டதில்லே. இவ்வளவு வயசாகியும் இன்னும் அந்த அசட்டுச் சபலம் உங்களை விட்டுப் போகல்லேங்கறது பக்கத்து வீட்டு விசாலம் மாமி முரளி மேலே நாசுக்காகக் குற்றம் சுமத்திப் பேசினதும் தெரிஞ்சது. பின் பக்கத்து மொட்டை மாடியிலே யோகாசனம் செய்யறதா சொல்லிண்டு நீங்கதான் ராத்திரி வேளையில ரொம்ப நேரம் இருக்கிறதுண்டு. நம்ம வீட்டுக் கைப்பிடிச் சுவரை ஒட்டினாப் போல அவா' வீட்டுப் படுக்கை அறையின் கூரையும், அதிலே கண்ணாடியும் இருக்கும்னு எனக்கு நினைவு இருந்தாலும், உங்களுடைய பார்வை நம்ம வீட்டுச் சுவரைத் தாண்டிப் போகுங்கறதை நான் எப்படி நினைச்சுப் பார்க்க முடியும்? இவ்வளவு வருஷங்கள் உங்களுடன் பழகின நானே நினைக்காதபோது, விசாலம் மாமி மட்டும் உங்களைச் சந்தேகப்

படுவாளா? முரளியைச் சந்தேகப்படறா.''

பார்வையினாலேயே மனைவியை உருட்டி மிரட்டி ஆட்டி வைத்துக் கொண்டிருந்த யக்ஞராமன், தம்மிடம் இருந்த பலவீனம் மனைவிக்குத் தெரிந்து விட்டதே என்று அவமானத்துடன் உடல் குறுகத் தலை குனிந்து நின்றார்.

படபடவென்று பொரிந்து கொட்டிய அம்புஜம் சற்று நிதானத்துக்கு வந்தாள். வராந்தாவில் இருந்த தட்டை எடுத்து வந்து வழக்கமாக அவர் சாப்பிடும் இடத்தில் வைத்தாள்.

''இதோ பாருங்க, உங்க நிழல்லே இருந்துண்டு, அந்தப் பலத்திலே உங்க பிள்ளைகளோட நான் போராடிண்டு அவர்களை ஒரு நல்ல பாதையிலே கொண்டு போக நினைக்கிறேன். அவர்களுடைய மதிப்பிலே நீங்க விழுந்துட்டா, உங்க நிழலில் இருக்கும் எனக்கும் எல்லாமே போயிடும். நம்ம குழந்தைகளும் கடிவாளம் அறுந்து தறிகெட்டு ஓடும் குதிரைகளாகச் சித்தம் போனபடி ஓடுவா.''

யக்ஞராமன் குழப்பத்துடன் அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

''உங்க தட்டை நான் வெளியிலேயே வைச்ச காரணமே, உங்களை நான் தண்டிக்கிறதாக நினைச்சுண்டு செய்யலே. முரளியின் தட்டை உள்ளே கொண்டு வர உங்களுடைய உத்தரவைக் கேட்கத்தான் அப்படி நான் துணிஞ்சு செய்தேன்.''

''அம்புஜம் முரளியைச் சாப்பிடக் கூப்பிடு. ரெண்டு பேரும் ஒன்றாகவே உள்ளே உட்கார்ந்து சாப்பிடறோம். அதுக்கு முன்னே நான் செய்ய வேண்டியது ஒன்று இருக்கு'' என்று கூறி மறுபடியும் பூஜை அறைக்குச் சென்றார்.

அம்புஜம் அவர் குறிப்பிட்டதைப் புரிந்து கொண்டாள். யக்ஞராமன் பூசை அறையில் கர்ப்பூரத்தை மறுபடியும் ஏற்றி அந்த ஜோதியை அங்கே வீற்றிருந்த எல்லாத் தெய்வங்களுக்கும் காட்டிக் கீழே நெடுஞ்சாண்கிடையாகத் தன் உடலை நீட்டி வணங்கினார்.

அம்புஜம் முரளியை அழைத்து வந்து இருவருக்கும் மகிழ்ச்சியுடன் தானே உணவு பரிமாறினாள்.

முரளிக்குத் தந்தையின் இந்தத் திடீர் மாறுதல் அதிர்ச்சியாக இருந்தது. தன் தந்தைக்கு எப்படி மனம் தன் விஷயத்தில் மாறியது என்று புரியாமல் குழம்பினான்.

சாப்பாட்டின் இடையில் வெட்கத்துடன் அவரிடம் கூறினான்:

''அப்பா, இன்னிக்கு ஒரு நாள் மன்னிச்சிடுங்க. நாளைக்கு இதை எடுத்துடறேன்'' என்று மீசையைக் கையால் மூடிக் கொண்டான்.

பதில் எதுவும் கூறாமல் யக்ஞராமன் தலையை மட்டும் அசைத்தார்.

*

விழிப்பு

மதுரம் ராமமூர்த்தி

"கௌரி, கௌரி!"

அரைத் தூக்கத்திலிருந்த கௌரியின் காதுகளில் அம்மாவின் குரல் எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து கேட்பது போல் ஒலித்தது.

"என்னம்மா?" என்று ஈனஸ்வரத்தில் முனகிக்கொண்டே மெதுவாக எழுந்திருக்க முயற்சிப்பதற்குள் அம்மாவே அங்கு வந்து விட்டாள்.

"கௌரி, யார் வந்திருக்கா தெரியுமா?"

"யாரும்மா?"

"அவர்தாண்டி, நம்ம வீட்டு மாப்பிள்ளை."

கௌரிக்குத் தன் காதுகளை நம்பவே முடியவில்லை. இந்த ஆச்சரியமான அதிர்ச்சியிலிருந்து விடுபட அவளுக்குச் சில விநாடிகள் பிடித்தன. பத்து வருடங்களாகத் தன்னைத் திரும்பிக்கூடப் பார்க்காதிருந்த தன்னுடைய கணவனின் திடீர் வருகை அவளுக்குச் சற்று மகிழ்ச்சியை அளித்ததென்றாலும், அம்மகிழ்ச்சி மிகப் போலியான மகிழ்ச்சி என்பதை அவளுடைய உள்ளுணர்வு உடனடியாக உணர்த்தியது.

ஓராண்டுக் காலமாய் அவளைப் படுக்கையில வீழ்த்தியிருந்த காச நோயால் அவளது உடல்தான் நலிந்திருந்ததே தவிர, அவளது இயற்கையான புத்திக் கூர்மை இன்னும் சற்றும் மழுங்கவில்லை. வெறும் எலும்புக்கூடாய் மரணப் படுக்கையில் கிடக்கும் தன்னைத் தேடிவர வேண்டியதின் அவசியம்? கதைகளில் வருவதுபோல் மனம் திருந்தி மன்னிப்புக் கேட்பதற்காக வந்திருக்கிறாரோ? அப்படியே இருந்தாலும் அது காலங்கடந்த செயல். காசு பணத்தை எதிர்பார்த்தும் தன்னிடம் வரமுடியாதே! தன்னுடன் வாழ்ந்த அந்த இரண்டு மாதக் காலத்திற்குள்தான் தன்னிடமிருந்த தங்கம் முழுவதையும் கடைசிக் குந்துமணி வரை பிடுங்கிக்கொண்டு விட்டு, தன் அம்மா தனக்கு ஆசை ஆசையாய்க் கொடுத்திருந்த வெள்ளிப் பாத்திரங்கள், பட்டுப் புடைவைகள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டுதானே தன்னைப் பிறந்த வீட்டுக்கு விரட்டிவிட்டார்? மாப்பிள்ளையையும், பெண்ணையும் எதிர்பார்த்து, தன் சக்திக்கு மீறித் தலைதீபாவளியைக் கொண்டாட அம்மா ஏற்பாடு செய்து கொண்டிருந்த வேளையில் தன்னுடைய வாழ்க்கையே வெறும் புஸ்வாணமாகிவிட்ட நிலையில், தான் பிறந்த வீட்டிற்கு வந்து சேர்ந்த அந்த அவலக்காட்சி அவளது மனத்திரையில் ஓடியது. தலைதீபாவளிக்கு அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுக்க அப்பாவால் முடியவில்லை என்பது தான் அவளை விரட்டியதின் காரணம். ஆனால் உண்மைக் காரணம் அதுவல்ல என்பதும் பிறகுதானே ஒரு மாதிரியாகப் புரிந்தது. எதற்காகத் தன்னை இப்பொழுது தேடி வரவேண்டும்? கௌரியின் மனம் சிந்தனையில் சிக்கித்தவித்தது.

"சௌக்கியமா இருக்கியா கௌரி?"

அருகில் ஒலித்த ராதாகிருஷ்ணனின் குரல் கௌரியை உலுக்கியது. மூடியிருந்த கண்கள் மெதுவாகத் திறந்து எதிரில் நின்ற உருவத்தின் மேல் ஒரு நிமிடநேரம் லயித்து மீண்டும் மூடிக்கொண்டன. அவள் முகத்தில் வறண்ட, உயிரற்ற புன்னகை இழையோடியது. பத்து வருட இடைவெளிக்கப்புறம் இப்பொழுது தான் தன்னுடைய கணவன் என்ற ஸ்தானத்தை வகித்த அம்மனிதனைப் பார்க்கிறாள்.

"என்ன கௌரி, பேசமாட்டேங்கறயே? சௌக்கியமா?"

'அதான் பார்க்கிறீர்களே?' என்பது போல் கண்களாலேயே பதில் கூறிய கௌரி, "உட்காருங்கள்" என்று சமிக்ஞை செய்தாள்.



'' எங்கேயி ருந்து வருகிறீர்கள் ?''

'' சென்னையிலிருந்து தான். ராக் போர்ட்டில் வந்து ஸ்ரீரங்கத்தில் இறங்கி ஆட்டோவில் வந்தேன். இரண்டு நாட்களுக்கு முன் தான் கேள்விப் பட்டேன்.''

'' என்ன கேள்விப்பட்டீர்கள் ?''

'' உனக்கு உடம்பு சரியில்லை யென்று.''

அந்தப் பலவீனமான நிலையிலும் கௌரி சற்று உரக்கவே சிரித்து விட்டாள்.

'' என்ன சிரிக்கிறே ?''

'' நான் படுக்கையில் விழுந்து ஒரு வருடமாகப் போகிறது. அச்செய்தி உங்கள் காதுகளுக்கு வர இவ்வளவு காலமாகியிருக்கிறதே என்று நினைத்துக்கொண்டேன். சிரிப்பு வந்தது.''

''ஆனால் உன்னை இவ்வளவு மோசமான நிலையில் பார்க்கப் போகிறேன் என்று நான் நினைக்கவேயில்லை.''

கௌரி விரக்தியாகச் சிரித்தாள். இதற்குள் அம்மாவின் குரல் கேட்டது. ''கௌரி, அவரைப்பல் தேய்ச்சுட்டு வரச்சொல்லேன். அதற்குள் காபியைக் கலக்கறேன்.''

ராதாகிருஷ்ணன் எழுந்திருந்து உள்ளே போனான். கௌரியின் மனம் மீண்டும் கடந்த காலத்தை நோக்கிப் பாய்ந்தது.

கௌரியின் அப்பா வைத்தியநாதனுக்கு ரெயில்வேயில் வேலை. சாதாரண வேலைதான். திருவானைக் கோவில் தெற்குத் தெருவில் ஒரு வீடும் உத்தமர் கோவிலுக்கருகில் கொஞ்சம் நிலமும் இருந்ததால் ஓரளவுக்கு வசதியாகவே வாழ முடிந்தது. கௌரியை பி. எஸ்ஸி வரைப் படிக்க வைத்தார். தங்கை பிரேமா ஐந்தாம் வகுப்பிலும், தம்பி சங்கர் மூன்றும் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்த பொழுது தான் கௌரிக்குக் கல்யாணம் நடந்தது

மாப்பிள்ளை ராதாகிருஷ்ணனுக்குச் சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை. சுமாரான சம்பளம் தான். என்றுலும் பிக்கல் பிடுங்கல் இல்லை அவனுக்கு இருந்ததெல்லாம் அவனுடைய தாயார் ஒருத்தி தான்.

மாப்பிள்ளையின் தாயார் போட்ட நிபந்தனைகள் எல்லாம் அப்பாவின் சக்திக்கு மீறியவைதாம். இருந்தாலும் ஒரு நல்ல வரன் கையை விட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காக அம்மாவின் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்திஞர். நிலத்தையும் விற்றுப் போதாதற்குக் கடனையும் வாங்கிக் கல்யாணத்தை ஜாம் ஜாமென்று நடத்தி விட்டார். பின்னல் இன்னெரு பெண் இருக்கிறுள் என்பதையும் மறந்துதான் அப்பா கௌரியின் கல்யாணத்தில் தம்மிடமிருந்த எல்லாவற்றையும் அநேகமாகக் கரைத்துவிட்டார்.

ஆனல் இவ்வளவு செய்தும் மாப்பிள்ளையும், அவருடைய தாயாரும் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. மீண்டும் தீபாவளிக்கு அவர்கள் கொடுத்த பட்டியல் அப்பாவைப் பெரிய அதிர்ச்சிக்கு ஆளாக்கிவிட்டது. தம் நிலையை எடுத்து விளக்கி எவ்வளவோ மன்ருடியும் நிர்த்தாட்சண்யமாய்ப் பெண்ணைக் கொண்டு வந்து விட்டு விட்டுப் போய்விட்டார்கள்.



வேறு வழியில்லாமல் எஞ்சியிருந்த ஒரே சொத்தாகிய வீட்டையும் அப்பா விற்க முன் வந்த பொழுதுதான் சிற்றப்பா ராமநாதன் குறுக்கிட்டார். மாப்பிள்ளை வீட்டாரிடம் அப்பாவின் சார்பாகச் சென்று பேசிவிட்டு வந்த ராமநாதன் வேறு பல அதிர்ச்சியான தகவல்களையும் சேகரித்து வந்திருந்தார். வந்தவுடன் அவர் கௌரியிடம் கேட்ட முதல் கேள்வி :

''ஏம்மா கௌரி, நான் கேட்பதற்கு ஒளிவுமறைவில்லாமல் பதில் சொல்லணும். நீ குழந்தை பெறத் தகுதியற்றவள், ஏன் மனைவியா இருப்பதற்கே தகுதியற்றவள் என்று கூறுகிறானே உன் புருஷன்? அதைச் சொல்லி விவாகரத்துக் கோரப் போகிறானாம். இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?''

இவ்வளவு பெரிய அபாண்டம் தன் தலையில் சுமத்தப்படும் என்பதைச் சற்றும் எதிர்பார்க்காத கௌரி அதிர்ச்சியில் வாயடைத்து நின்றாள். கௌரியின் அம்மாதான் பெண்ணின் சார்பாகப் பேசினாள் :

''தங்கச் சிலை மாதிரி மனைவியை வீட்டில் வைத்துக்கொண்டு ஒரு புருஷன் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் இருந்திருக்கிறான். அவள் குடித்தனம் நடத்திய இரண்டு மாதமும் கௌரிக்குப் படுக்கை அவளுடைய மாமியாரின் அறையில் தான். இந்த அசட்டுப் பெண் இப்பொழுதுதான் என்னிடமே விஷயத்தைச் சொன்னாள்.''

இதைக் கேட்டு அப்பாதான் அதிர்ச்சியடைந்தாரே தவிர, சிற்றப்பா அதிர்ச்சியடையவில்லை. அவர் மேலும் தொடர்ந்தார்: ''மன்னி சொல்வதுதான் உண்மை. நம்முடைய மாப்பிள்ளை மாத்திரம் இல்லை. அவனுடன் பிறந்த அண்ணாவின் கதையும் இதேதான். இவர்களுடைய தோற்றத்தையும் உத்தியோகத்தையும் பார்த்துப் பெண்ணைக் கொடுத்து, இதேபோல் ஏமாந்து விட்டார் அவருடைய முதல் சம்பந்தி. ஆனால் அந்தப் பெண் துணிச்சலானவள். அவனோடு வாழ முடியாது என்று கூறி, பிறந்த வீட்டுக்கு வந்து ஏதோ ஒரு வேலையில் சேர்ந்து இரண்டு வருடங்களில் வேறொருத்தனைக் கல்யாணமும் பண்ணிக் கொண்டு விட்டாளாம். இவற்றையெல்லாம் மறைத்துத்தான் இவனுக்குக் கல்யாணம் பண்ணிவிட்டார்கள். நாமும் சரியாக விசாரிக்காமல் அவசரப்பட்டுப் பெண்ணைக் கொடுத்துவிட்டோம்.''

சிற்றப்பா சரியான சமயத்தில். இந்த உண்மைகளைத் தெரிந்து கொண்டு வராமலிருந்தால் அவர்களிடம் எஞ்சியிருந்த ஒரே சொத்தான வீடும் பறி போயிருக்கும். கௌரியின் வாழ்க்கை அதனால் சீரடைந்தும் இருக்காது. தன்னுடைய பலவீனத்தை மறைப்பதற்கு அவன் மேலும் மேலும் கௌரியைத் துன்புறுத்தி இருப்பானே தவிர, அவளை மனிதாபிமானத்தோடு நடத்தியிருக்கமாட்டான்.

''காபி சாப்பிட்டீர்களா?''

''சாப்பிட்டேன். எங்கே பிரேமா, சங்கர் ஒருத்தரையும் காணோம்?''

''பரவாயில்லையே? அவர்களைக்கூட நினைவு வைத்துக் கொண்டிருக்கிறீர்களே? கௌரி என்று ஒருத்தி இருக்கிறாள் என்பதையே மறந்து விட்டீர்கள் என்றே நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.''

''இல்லை, கௌரி! உன்னை எப்பொழுதும் நினைத்துக் கொண்டு தான் இருக்கிறேன்.''

'அப்படியா ?' என்பது போல் கௌரி அவனை ஏறிட்டு நோக்கினாள். அப்பார்வையைச் சந்திக்க முடியாதவன் போல் ராதாகிருஷ்ணன் தலையைக் குனிந்து கொண்டான்.

''ஆங். பிரேமா, சங்கரைப் பற்றிக் கேட்டீர்கள் அல்லவா? பிரேமா B.H.E.L-இல் வேலை பார்க்கிறாள். சங்கர் காட்டூர்ச் சர்க்கரை ஆலையில் வேலை பார்க்கிறான். இரண்டு பேரும் காலையில் ஆறு மணிக்கெல்லாம் புறப்பட்டுப் போய் ராத்திரி ஏழு மணிக்குத்தான் வருவார்கள்.''

''பிரேமா எதுவரை படித்தாள்?''

''பிரேமா பி.எஸ்.ஸி முதல் வகுப்பில் பாஸ் செய்தாள். சங்கர் பி.யூ.சியில் மிக உயர்ந்த மார்க்கோடு பாஸ் பண்ணினான். இரண்டு குழந்தைகளுக்கும் நல்ல மேற்படிப்பு அளிக்க வேண்டுமென்றுதான் திட்டமிட்டோம். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் ஒருவிதமாக விளையாடிய விதி இவர்கள் வாழ்க்கையில் வேறுவிதமாக விளையாடிவிட்டது. அப்பாவின் திடீர் மரணம், தொடர்ந்து நான் படுத்த படுக்கையானேன். ஆறு மாதம் மெடிக்கல் லீவ் கிடைத்தது. அப்புறம் சம்பளம் இல்லாத லீவ். ஒரு வருஷமாக இந்த நிலைதான். ஏதோ அப்பாவின் நண்பர்கள் தயவில் இரண்டு குழந்தைகளுக்கும் வேலை கிடைத்தது. ஓடாய் உழைத்துச் சம்பாதித்து வீட்டை நடத்துகிறார்கள். என்னுடைய வைத்தியத்துக்காகக் கடன் மேல் கடனாக வாங்கியிருக்கிறார்கள். போதாதற்கு அம்மா வேறு உழைத்துச் சம்பாதிக்கிறாள். என்ன சம்பாதித்து என்ன? எல்லாவற்றையும் என்னுடைய வைத்தியம் சாப்பிட்டு விடுகிறது.''

மேலும் ஏதோ சொல்ல விரும்பிய கௌரி சட்டென்று நிறுத்திக் கொண்டாள்.

''நீங்கள் ஏதோ ஒப்புக்குக் கேட்ட கேள்விக்கு நான் மடமடவென்று இப்படிக் கொட்டியிருக்க வேண்டாம். என்னவோ எனது பலவீனம், பேசிவிட்டேன்.''

''இல்லை கௌரி, நான் ஒப்புக்குக் கேட்கவில்லை சிரத்தையுடன் தான் கேட்கிறேன் ஆமாம், அப்பா எப்படித் திடீரென்று?''

''அதற்கும் நான்தான் காரணம். நான் என்றைக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தேனோ, அன்றிலிருந்து அவருடைய திடமான உடம்பில், இரத்த அழுத்தம் அது இது என்று எல்லாக் கோளாறுகளும் வந்து விட்டன. என்னுடைய கண்ணீர் தான் அவரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்து விட்டது. நான் மனசைத் திடப்படுத்திக் கொண்டு விட்டேன். அவரால் முடியவில்லை.''

கௌரிக்குத் துக்கம் நெஞ்சையடைத்துக் கொண்டது. சற்று நேரம் அழுதாள். பலவீனமான உடல் சோர்ந்து விடவும் பேச்சை நிறுத்திக் கண்களை மூடிக்கொண்டாள்.

இதற்குள் அம்மாவின் குரல் கேட்டது. ''வெந்நீர் தயாராகி விட்டது. அவரை ஸ்நானம் செய்துவிட்டு வரச்சொல்றயா?''

கௌரி மீண்டும் பேசினாள்: ''காலம் கடந்து வந்திருக்கிறீர்கள். இப்பொழுது இதையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறீர்கள் ? போய் ஸ்நானம் செய்துவிட்டு வாங்கோ.''

''இல்லை கௌரி. ஏதாவது செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் வந்திருக்கிறேன்.''

'என்ன செய்யப் போகிறீர்கள்?' என்பது போல் அவனை ஏறிட்டுப் பார்த்த கௌரியின் பார்வையைத் தவிர்த்து விட்டு ராதாகிருஷ்ணன் எழுந்திருந்து உள்ளே சென்றான். கௌரி மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

ராதாகிருஷ்ணனால் என்ன செய்ய முடியும்? இனி செய்யத்தான் என்ன இருக்கிறது? அவளது இளமைப் பருவமெல்லாம் மொட்டிலேயே உலர்ந்து கருகி விட்டது. இப்பொழுது மரணத்தோடு போராடும் நிலை வந்துவிட்டது. தவிர, அவள் கேள்விப்பட்ட இன்னொரு விஷயம் உண்மையாயிருந்தால்? அவன் மறுமணம் செய்து கொண்டு விட்டதாக ஒரு செய்தி, இரண்டு வருடங்களுக்கு முன் அவள் காதுக்கு எட்டியது. அப்படியென்றால் அவள் என்ன ஆனாள்? தன்னை விரட்டியது போல் அவளையும் விரட்டிவிட்டாரா? அல்லது அவளே ஓடிப்போய் விட்டாளா? அப்படியே இருந்தாலும் சாகப் போகும் நிலையிலிருக்கும் தன்னுடைய உறவைப் புதுப்பித்துக் கொள்வதால் அவருக்கு என்ன லாபம்? கௌரியின் மனம் குழம்பியது.

Dear Passengers!

Southern Railway Wishes you a HAPPY DEEPAVALI

AND

Solicit your co-operation in

Eradicating Fire Accidents in Trains

* Don't carry Fire Works, Crackers and other inflammable Goods along with you.

It may endanger not only your life, But the lives of other Co-passengers as well.

** Further, carriage of explosives by passenger trains is punishable under sections 59 and 107 of Indian Railways Act.

Protect the Railway property as your own

Help the Railways to serve you better!

Issued by: Chief Public Relations Officer
Southern Railway, Madras-600 003

PUB 4/II/I/R/344

"கௌரி, நீயும் மெதுவாக எழுந்திருந்து குளித்துவிடுகிறாயா? குளித்து நான்கு நாட்களாகிறதே? இரண்டு பேருமாகச் சேர்ந்தே சாப்பிட்டு விடலாமே!"

கௌரி மெதுவாக எழுந்திருந்தாள்.

அம்மா இருவருக்கும் பக்கத்தில் பக்கத்தில் இலை போட்டிருந்ததைப் பார்த்துக் கௌரிக்குச் சிரிப்பு வந்தது. அவரோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டது ஒரே ஒரு முறைதான். அது கல்யாணத்தன்று.

ராதாகிருஷ்ணன் அம்மாவிடம் பேசினார்: "நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களென்றால் நான் ஒன்று சொல்லுவேன். நீங்கள் எதற்காக இவ்வளவு பெரிய வீட்டை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"பெரிசா வேணும்னு நாங்களா கட்டினோம்? ஏதோ அந்தக் காலத்திலே பெரியவர்கள் கட்டி வைத்தார்கள். இன்னிக்கு ஆலமரம் மாதிரி எங்களுக்குப் புகலிடமா இருக்கு. இந்த வீடும் இல்லேன்னா நாங்க இன்னிக்குச் சிரிப்பாச் சிரிச்சிருப்போம்."

'இல்லை. நான் அதற்குச் சொல்லவில்லை. இந்த வீட்டை விற்றால் இன்னிக்குக் குறைந்தது ஒன்றரை லக்ஷமாவது கிடைக்கும். நீங்க வேறே சின்னவீடாப் பார்த்து வாங்கிண்டு, பாக்கிப் பணத்தைப் பாங்கிலே போட்டு வச்சிண்டா, பிரேமாவுக்குக் கல்யாணம் பண்ணும்போது உதவியாயிருக்கும் இல்லையா?"

"வீட்டை விக்கற எண்ணம் எங்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. பிரேமாவுக்கும் கல்யாணமே பண்ணப் போறதில்லை."

"ஏன்?"

"காரணம் அவளைத்தான் கேட்கணும். நீங்கள் வேண்டுமென்றால் கேட்டுப் பாருங்கள். ஆனால் அவள் கொடுக்கும் பதில்களை உங்களால் தாங்க முடியாதுன்னு நினைக்கிறேன்."

மாமியார் ஊற்றிய நாலு கரண்டி பாயசத்தையும் உறிஞ்சி விட்டு ராதாகிருஷ்ணன் பேச்சை வேறு திசையில் திருப்பினான்.

"கௌரி டீச்சராயிருக்கான்னு கேள்விப் பட்டேன்."

"ஆமாம். அரியமங்கலத்திலே வேலை பார்க்கறா. பத்து வருஷம் சர்வீஸ்-ஆச்சு. பி. டி. கூடப் பாஸ் பண்ணிட்டா. இப்போ ஒன்றரை வருஷமா லீவிலே இருக்கா. ஆறு மாதம் சம்பளத்தோடு லீவு கிடைச்சுது. இப்போ சம்பளம் இல்லாத லீவுதான். கார்த்தால ஐந்தரை மணி ரெயிலைப் பிடிச்சுப் போனால் வரும்போது ராத்திரி மணி ஏழாயிடும். அப்புறம் ட்யூஷன் வேறு. இப்படி உழைச்சு உழைச்சுத்தான் வியாதியை வரவழைச்சுண்டா. இப்போ இவ படுத்துட்டா. அந்தக் குழந்தைகள் உழைக்கிறது. அதுகளுக்கும் வேலை நிரந்தரமாகலே. அன்றாடக் கூலி மாதிரிதான் சம்பளம் வாங்கறா."

இதற்குள் கௌரி குறுக்கிட்டாள்: "எங்களைப் பத்தியே பேசிண்டிருக்கேளே. உங்களைப் பத்தி ஒண்ணுமே சொல்லல்லியே? அம்மா எப்படிருக்கா?"

"அம்மா போய் இரண்டு வருஷம் ஆகிறது."

"அப்படியா? என்ன உடம்பு?"

"புற்றுநோய். இரண்டு வருஷம் கிடந்து ரொம்ப அவதிப்பட்டா. கடைசிக் காலத்திலே உன்னைப் பாக்கணும்னு தவிச்சா."

'அடபாவமே' என்று சொல்ல வாயெடுத்த கௌரி வார்த்தைகளை வாய்க்குள்ளேயே நிறுத்திக்கொண்டு ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்து விட்டு கையலம்புவதற்காக எழுந்து விட்டாள்.

சற்று நேர ஓய்வுக்குப் பிறகு ராதாகிருஷ்ணன் வெளியில் புறப்பட்டுப் போய் இரவு எட்டுமணிக்குத் திரும்பி வந்த பொழுது கையில் அகிலாண்டேசுவரி கோயில் பிரசாதத்தோடும், பழம், பூ, பக்ஷணங்கள் நிரம்பிய ஒரு பெரிய பையோடும் வந்தான். அதற்குள் பிரேமாவும், சங்கரும் வீடு வந்து சேர்ந்திருந்தனர்.

"என்ன பிரேமா, என்னைத் தெரியறதா?"

"தெரியலையே!"

"நான் உன் அத்திம்பேர்?"

'அப்படியா!' என்பது போல் அவனைப் பார்த்துவிட்டு அவள் உள்ளே போய் விட்டாள். சங்கர் அவன் எதிரில் வருவதையே தவிர்த்தான். சூழ்நிலை அனைவருக்குமே தர்மசங்கடமாகத்தான் இருந்தது. ஆனால் ராதாகிருஷ்ணன் அதனால் பாதிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. சாப்பாட்டை முடித்துக் கௌரிக்கு அருகில் சென்று உட்கார்ந்து எதை எதையோ பேசிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலையில் ராதாகிருஷ்ணன் கௌரிக்கு வைத்தியம் பார்த்துக் கொண்டிருந்த டாக்டரைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்தான். கௌரியின் நிலைமை இப்பொழுது எவ்வளவோ தேவலையென்றும், அவர் எழுதிக் கொடுத்திருந்த மருந்துகளை விடாமல் சாப்பிட்டு வந்தால் இன்னும் ஆறு மாதத்தில் பூரண குணம் பெற்றுவிடலாம் என்று டாக்டர் கூறியதைக் கேட்டுக் கொண்டான். வீட்டுக்கு வந்ததும் கௌரியிடம் பேச்சை ஆரம்பித்தான்:

"கௌரி, எனக்கு ஒரு சிறிய ஆசை."

ஏறிட்டு நோக்கினாள் கௌரி.

"உன்னை என்னுடன் சென்னைக்கு அழைத்துச் சென்று ஒரு நல்ல டாக்டரிடம் காட்டி வைத்தியம் செய்ய விரும்புகிறேன்."

கௌரிக்கு இது இலேசான அதிர்ச்சியைத் தந்தது.

"இந்த மாதிரி எண்ணம் உங்களுக்கு எப்போது ஏற்பட்டது?"

"இது என்ன கேள்வி கௌரி? ஏதோ விதிவசத்தால் பிரிந்துவிட்டோம், அல்லது பிரிக்கப்பட்டு விட்டோம் என்றாலும் நான் உன்னை மறக்கவில்லை உன்னைப் பற்றி அவ்வப்போது விசாரித்துக்கொண்டுதான் இருந்தேன். நீ படுத்த படுக்கையாகி விட்டாய் என்று கேள்விப் பட்டவுடன் மனசு கேட்கவில்லை. ஓடி வந்தேன்"

கௌரி மௌனத்தில் ஆழ்ந்தாள்.

"என்ன கௌரி, என்னோடு வருவதில் உனக்கு என்ன யோசனை? உனக்கு வைத்தியம்பார்த்துக் குணப்படுத்தும் பொறுப்பை முழுதாக நான் ஏற்றுக்கொள்கிறேன். உனக்கு ஏன் கவலை?"

"நான் குணமடைந்து பழைய நிலைக்கு வந்துவிடுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு?"

"அப்புறம் நீ என்னுடன்தான் இருக்கப் போகிறாய்."

"அதில் என் விருப்பம் என்று இருக்கு இல்லையா?"

"கௌரி, உன்னுடைய மனசு எனக்குப் புரிகிறது. ஏதோ நடந்தது நடந்துவிட்டது. எல்லாவற்றையும் மறந்துவிட்டு நீ என்னுடன் வர வேண்டும் என்று உள்ளன்போடு உன்னை அழைக்கிறேன்."

"ஆனால் அதற்குமுன் ஒரு முக்கியமான கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டுமே?"

"தாராளமாகக் கேள், கௌரி!"

"உங்களுக்கு மீண்டும் திருமணம் நடந்ததாகக் கேள்விப்பட்டேனே!"

இந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பாராத ராதாகிருஷ்ணன் அதிர்ந்து வாயடைத்து நின்றான். ஆனால் அடுத்த நிமிடம் சமாளித்துக் கொண்டு, "ஆம்கௌரி, நீ கேள்விப் பட்டது உண்மைதான். சந்திரா மிக நல்லபெண், அவளுடைய தூண்டுதலால்தான் நான் இந்த முடிவையே எடுத்தேன்."

"எந்த முடிவு?"

"எங்களோடு நீயும் சேர்ந்து வாழ வேண்டும் என்று."

கௌரிக்கு இது நம்பும்படியாக இல்லை. எந்தப் பெண்தான் தன் புருஷனை இன்னொரு பெண்ணுடன் பங்கிட்டுக் கொள்ள விரும்புவாள்?

"அவள் உங்களை மணக்கும் போது உங்களால் தள்ளிவைக்கப் பட்ட ஒரு மனைவி இருக்கிறாள் என்பது அவளுக்குத் தெரியுமா?"

"முதலில் தெரியாமல்தான் இருந்தது. சமீபத்தில்தான் தெரிந்

தது. அவள் உனக்காக வருத்தப்பட்டாள். உன்னை அழைத்து வரும்படி வற்புறுத்தியதும் அவள்தான்.''

கௌரியால் இதை நம்ப முடியவில்லை.

''எனக்குச் சிந்திக்க அவகாசம் வேண்டும். அதற்குமுன் இன்னொரு கேள்விக்கும் பதில் வேண்டும்.''

''என்ன அது?''

''நீங்கள் இருவரும் சந்தோஷமாக வாழ்கிறீர்களா?''

''ஏன்? உனக்கு அதில் என்ன சந்தேகம்?''

கௌரி எப்படித் தன் மனத்திலிருந்த சந்தேகத்தை வெளிப்படையாகக் கேட்பாள்? சிற்றப்பா சொன்னது நிஜமென்றால் சந்திரா மாத்திரம் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடியும்?

''என்ன கௌரி, யோசனை?''

''இல்லை. நீங்கள் இருவரும் சந்தோஷமாக இருப்பது நிஜமென்றால் அதில் நான் ஒருத்தி எதற்குக் குறுக்கிட வேண்டும்?''

''கௌரி, தயவு செய்து நான் சொல்வதைக் கேள். நீ என்னோடு சேர்ந்து இருப்பதா, இல்லையா என்பதையெல்லாம் பிறகு தீர்மானித்துக் கொள்ளலாம். முதலில் நல்ல வைத்தியம் செய்து கொண்டு உடம்பைச் சரி செய்துகொள். இப்போது என்னோடு சென்னைக்கு வர ஒப்புக் கொண்டால் போதும்.''

கௌரி மௌனமாகக் கண்களை மூடிக் கொண்டாள். செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாக நினைத்துத் தனக்கு உதவ முன் வருகிறானா அல்லது வேறு ஏதாவது நோக்கத்தோடு தன்னை அழைத்துச் செல்கிறானா என்று புரியாமல் கௌரி குழம்பினாள். அதே சமயத்தில் தன்னிடம் இவ்வளவு அன்பைக் காட்டும் அவன்பால் பழைய வெறுப்புக் குறைந்து மனம் நெகிழ்வதையும் உணர்ந்தாள். இரண்டு நாள் மனப் போராட்டத்துக்குப் பிறகு கௌரி அகிலாண்டேசுவரி மீது பாரத்தைப் போட்டுவிட்டு ராதாகிருஷ்ணனின் அழைப்புக்கு அரை மனதோடு இணங்கினாள்.

இதற்கிடையில் ராதாகிருஷ்ணன் அவள் வேலைப் பார்க்கும் பள்ளிக்குச் சென்று அவளுக்குத் தொடர்ந்து விடுப்புக் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். அவனுடைய செய்கைகள் பிரேமா உள்பட அனைவருடைய மனத்தையுமே சற்று நெகிழத்தான் வைத்தன. எல்லாரும் ஒரு மாதிரி ஒப்புதல் தந்தனர்.

ராதாகிருஷ்ணன் கூறியது போல் சந்திரா நல்லவளாகத்தான் தெரிந்தாள். அவளை அன்புடன் வரவேற்றாள். கௌரிக்காக ஓர் அறை ஒழித்துக் கொடுத்தார்கள். அவளை ஒரு பெரிய நிபுணரிடம் அழைத்துச் சென்றனர். வைத்தியம் தொடங்கியது. நாட்கள் ஓடின. ஆனால் கௌரியின் உடல்நிலையில் அபிவிருத்தி ஏற்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, அவளுக்குத் தன் உடல்நிலை மோசமாவது போல் தோன்றியது.

முன்பை விட இப்பொழுது நீண்ட நேரம் தூங்கினாள். கண் விழித்தாலும் எழுந்திருக்க முடியாதபடி ஓர் அயர்வு, கைகால்களில் சோர்வு. நாளின் பெரும்பகுதி தூக்கத்திலேயே கழிந்ததால் அவளைச் சுற்றி நடப்பது அவளுக்கு எதுவுமே தெரியவில்லை. டாக்டர் வந்து போனதாகவும், இன்னும் சில புதிய மருந்துகள் கொடுத்திருப்பதாகவும் அவ்வப்போது ராதாகிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருப்பதுதான் தெரிந்தது.

நாட்கள் செல்லச் செல்ல அவளுடைய மனசில் இனம் புரியாத கிலி பிடித்துக் கொண்டுவிட்டது. அம்மாவைப் பார்க்க வேண்டும், பிரேமாவையும், சங்கரையும் பார்க்க வேண்டும் என்று தோன்ற ஆரம்பித்தது. அவர்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று கூறியதற்கு, 'உன்னால் முடியாது. நானே எழுதி விடுகிறேன்' என்று ராதாகிருஷ்ணன் சொல்லியதை நம்பிப் பேசாமல் இருந்து விட்டாள். ஆனால் திருச்சியிலிருந்து எந்தக் கடிதமும் வந்ததாகத் தெரியவில்லை. ராதாகிருஷ்ணனை மீண்டும் கேட்டதற்கு, ''பேசாமல் கிட. கடிதம் வந்து என்ன செய்யப் போகிறாய்?'' என்று எரிந்து விழுந்தான் தன்னைத் திருச்சிக்கு அழைத்துப் போய் விடும்படி இரண்டு மூன்று முறை கேட்டதற்கும் அவன் பதில் கூறவில்லை. நாட்கள் செல்லச் செல்லக் கௌரியின் உடல் பலவீனமடைந்தது. அத்துடன் ராதாகிருஷ்ணன் - சந்திரா இருவரின் அலட்சியப் போக்கும் அதிகரித்து வருவதாகத் தோன்றியது.

ஹார்லிக்ஸ், பழரசம் போன்றவை கொடுக்கப்படுவதும் மிகக் குறைந்துவிட்டது. ஒரு முறை, 'ரொம்பப் பசிக்கிறது, ஏதாவது கொஞ்சம் ஆகாரம் கொடேன்' என்று சந்திராவைக் கேட்டதற்கு அவள் எரிந்து விழுந்தாள். 'சாகப் போகிறவளுக்கு ஹார்லிக்ஸ் ஒரு கேடா?'' என்று முணுமுணுத்தது காதில் கேட்டுவிட்டது. அப்பொழுதுதான் அவள் மனத்தில் முதல்முதலாகச் சந்தேகத்தின் வித்து விழுந்தது. உடனே தனக்கு மூன்று வேளையும் விடாமல் கொடுக்கப்படும் காப்ஸ்யூல்களை எடுத்துப் பார்த்தாள். திருச்சியில் தனக்கு ஒன்றரை வருடங்களாகக் கொடுக்கப்பட்ட மருந்துகள் எதுவும் அவற்றில் இல்லை. அதுவரை கேட்டிராத புதிய பெயர் கொண்ட மருந்து அது.

கௌரி சிந்திக்கத் தொடங்கினாள். உடனடியாக அவள் எடுத்த முடிவு அவளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளைச் சாப்பிடுவதை நிறுத்தி விட வேண்டும் என்பதுதான். நல்ல காலம், அவள் படுக்கை ஜன்னலுக்குப் பக்கத்திலிருந்ததால் மாத்திரைகளை ஒருவருக்கும் தெரியாமல் வீட்டையொட்டி ஓடிய சாக்கடைக்குள் வீசியெறிய முடிந்தது. மருந்தை நிறுத்தியவுடன் இரண்டு நாட்களுக்குள் அவளுடைய தூக்கமும் மயக்க நிலையும் குறைந்தது நன்றாகத் தெரிந்தது. அவளுக்குத் தன் நிலை தெளிவாகப் புரிந்துவிட்டது. தூங்குவதைப் போல் இருந்து கொண்டே தன்னைச் சுற்றி நடப்பவற்றை மிக உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினாள். பல புதிய விஷயங்கள் அவளுக்குப் புரிய ஆரம்பித்தன. தான் இரண்டாவது முறையாக, அதுவும் மிகக் கேவலமான முறையில் வஞ்சிக்கப் படுகிறோம் என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது. ஆனால் அதன் காரணந்தான் புரியாமல் தத்தளித்தாள்.

அப்பொழுதுதான் அவள் நினைவில் ஒரு சிறிய நிகழ்ச்சி மின்வெட்டாகப் பளிச்சிட்டது.

சில தினங்களுக்கு முன் ஒரு நாள் இரவு ராதாகிருஷ்ணன் டைப் செய்த பல தாள்களை அவளிடம் கொடுத்து எல்லாவற்றிலும் அவளுடைய கையெழுத்தை வாங்கிக் கொண்டான். அப்போது அவள் மிக பலவீனமான அரை மயக்க நிலையில் இருந்தாள். அவள் கேட்டதற்கு, அவள் வேலை பார்க்கும் பள்ளியிலிருந்து விடுப்பு சம்பந்தமாகச் சில படிவங்களை அனுப்பியிருந்தார்கள் என்றும், அவற்றையெல்லாம் நிரப்பி, தனித்தாள்களில் அவள் சார்பில் புதிய விண்ணப்பங்களைத் தானே எழுதி டைப் செய்து நகல்கள் எடுத்து விட்டதாகவும் கூறினான்.

கௌரி எப்போதுமே விழிப்பானவள். ஒரு சிறு தாளில் கூட அவளிடம் கையெழுத்து வாங்குவதென்பது மிகக் கடினம். அப்படிப்பட்டவள் எப்படி அத்தனை தாள்களில் படிக்காமலே கையெழுத்திட்டாள்? அவளுக்குக் கொடுத்திருந்த மருந்து சிந்திக்கும் திறனையும், தன்னிச்சையையும் அந்த அளவுக்குச் சிதைத்திருக்க வேண்டும் என்பது இப்போது தான் அவளுக்குப் புரிந்தது. தான் ஒரு பயங்கரமான சிறையில் சிக்கியிருக்கிறோமென்ற உண்மை அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

சந்திராவும் ஒரு பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் வேலைக்குச் செல்லும்போது வெளிக்கதவைப் பூட்டிக் கொண்டு சென்றனர். அவள் தூங்கிக் கொண்டிருந்தால் எழுந்து வந்து கதவைத்

திறக்க முடியாது என்பதால் பூட்டிக் கொண்டு செல்வதாகச் சந்திரா அவளிடம் சொன்னபோது அவளுக்கு அது சரியென்று பட்டது. ஆனால் அவர்களுடைய உண்மையான நோக்கம், கௌரிக்கு வெளியுலகத் தொடர்பு எதுவுமே ஏற்படக் கூடாது என்பதுதான் என்று இப்போது புரிய ஆரம்பித்தது.

வந்து சேர்ந்தவுடன் ஒரு கடிதமும் தொடர்ந்து இரண்டு கடிதங்களும் அம்மாவுக்கும் பிரேமாவுக்கும் எழுதியும் அவர்களிடமிருந்து எந்தப் பதிலும் இதுவரை வரவில்லை. ஒரு வேளை தான் எழுதிய கடிதங்களைத் தபாலில் சேர்க்கவே இல்லையோ! அப்படித்தான் இருக்க வேண்டும்.

கௌரிக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அன்று பிற்பகலில் வீட்டில் யாரும் இல்லாத போது எப்படியோ சிரமப்பட்டு ராதாகிருஷ்ணனின் காத்ரெஜ் அலமாரியின் சாவியைக் கண்டுபிடித்து அதைத் திறந்து பார்த்தாள். லாக்கருக்குள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த அந்தத் தாள்களைத் தேடியெடுத்துப் பார்த்தவளுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. தன்னுடைய சேமநிதியில் இருந்த பணம் பத்தாயிரம் ரூபாய், ஆயுட்காப்பு மூலம் தனக்கு வரக்கூடிய இருபதாயிரம், என். ஜி. ஓக்களும் ஆசிரியர்களும் வேலையிலிருக்கும் காலத்தில் இறந்து போனால் அரசு அவர்களுக்கு அளிக்கும் பத்தாயிரம், இவையனைத்தும் தன் மறைவுக்குப் பிறகு தன் கணவன் ராதாகிருஷ்ணனுக்குச் சேர வேண்டும் என்று எழுதப்பட்ட பல பத்திரங்களில் அவள் கையெழுத்திட்டிருந்தாள்.

அவன் திருச்சிக்கு வந்திருந்த பொழுது அவள் வேலை பார்க்கும் பள்ளிக்குச் சென்று எல்லா விவரங்களையும் சேகரித்துச் சாமர்த்தியமாகத் திட்டமிட்டு எல்லாவற்றையும் செய்திருக்கிறான் என்பதை நினைக்க நினைக்கக் கௌரிக்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்தன. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அலமாரியை மேலும் குடைந்து பார்த்தாள். அதில் அவளுடைய பழைய நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பட்டுப் புடைவைகள் எல்லாம் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. அவள் நெஞ்சே வெடித்துவிடும் போல் இருந்தது. இன்னொரு பகுதியில் இருந்த நகைகள் சந்திரா கொண்டு வந்த சீதனங்கள் போலும்.

இன்று தன்னை ஒழித்துக் கட்டி அதனால் லாபமடைய அவன் செய்துவரும் முயற்சிகளில் ஒத்துழைக்கும் சந்திராவுக்கும் நாளைக்கு இதே கதி ஏற்பட்டால்? சந்திராவிடமே மனம் விட்டுப் பேசி விட்டால் என்ன? கௌரியின் மனம் குழம்பியது. அலமாரியில் தான் எடுத்ததையெல்லாம் பழைய படியே வைத்துப் பூட்டிச் சாவியை இருந்த இடத்திலேயே வைத்த பிறகு ஓசைப்படாமல் மீண்டும் படுக்கையில் படுத்தாள்.

சில நிமிடங்களில் வாயிற் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. தொடர்ந்து சந்திராவின் குரலும் அவளோடு வேலை பார்க்கும் உடற் பயிற்சி ஆசிரியர் ராஜதுரையின் குரலும் கேட்டன. அவர்களுடைய உரையாடலை கௌரி உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டாள்.

"என்ன சந்திரா, உன்னுடைய சக்களத்தி என்ன சொல்றா?"

"என்ன சொல்லுவா? சீக்கிரம் சாகாமக் கழுத்தை அறுக்கிறா."

"ஏன், நான் வாங்கிக் கொடுத்த மருந்தை மூணு வேளையும் கொடுக்கவில்லை?"

"கொடுக்கறேனே...!"

"கவலைப்படாதே! அந்த மருந்து சக்தி வாய்ந்த தூக்க மருந்து. விரைவிலே அது நிரந்தரத் தூக்கத்திலே கொண்டு விட்டுடும்."

"எனக்கு என்னவோ பயமாயிருக்கு."

"பயப்படவேண்டியது நாம் இல்லை. உன் கணவன் தான். மறந்திட்டேனே! இன்று பம்பாயிலிருந்து கடிதம் வந்திருக்கு."

"என்ன கடிதம்?"

"நம்ப இரண்டு பேரும் விண்ணப்பம் போட்டிருந்த பள்ளியிலிருந்து இரண்டு பேருக்குமே வேலை கொடுக்கத் தயாராக இருப்பதாகப் பதில் வந்திருக்கு. கௌரியுடைய கதை சீக்கிரமா முடிஞ்சுதுன்னா நம்முடைய மூன்று அம்சத் திட்டம் வெற்றிதான்."

"மூன்று அம்சத் திட்டமா?"

"கௌரியுடைய பணம் கிட்டத்தட்ட நாற்பதாயிரம் வரும் இல்லையா? அதில் பாதிக்குமேல் நம்ம கைக்கு மாறிடும்."

"எப்படி?"

"ராதாகிருஷ்ணன் செய்தது ஒரு திட்டமிட்ட கொலைங்கறதுக்கு ஆதாரங்கள் எங்கிட்டே இருக்கு. மருந்துக்கடை பில்களையெல்லாம் அவன் பேரிலேதானே வாங்கியிருக்கேன்! அதைச் சொல்லி மிரட்டினால் தானே வழிக்கு வருகிறான்."

"பாவம்! அவரை மோசம் செய்யறதுக்குத் தயக்கமா இருக்கு."

"அவன் செய்துள்ள மோசத்தை விடவா? அவன் இரண்டு பேர் வாழ்வைப் பாழடிச்சிருக்கானே? அதிலே ஒருத்தி சாகப்போறா. இன்னொருத்தியாவது வாழணும்னா இதைச் செய்துதான் ஆகணும்."

"உங்களுடைய திட்டத்தின் இரண்டாவது அம்சம்?"

"உன் வீட்டுப் பீரோவில் இருக்கும் நகைகள், வெள்ளிப் பாத்திரங்



கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஓசைப்படாமல் பம்பாய்க்குப் புறப்பட வேண்டியதுதான்.''

'' அப்புறம்? ''

'' அப்புறம் என்ன? நாம் இருவரும் இப்படிப் பயந்து பயந்து சந்திக்காம, கணவன் மனைவியா வாழ்க்கையை ஆரம்பிக்கிறது.''

இதைத் தொடர்ந்து சிரிப்பொலியும் சிணுங்கல்களும் கேட்டன.

கௌரி கண்களையும் காதுகளையும் இறுக்க மூடிக்கொண்டாள். சற்று நேரத்தில் ராஜதுரை போய்விட்டான். வீடு மீண்டும் அமைதியில் ஆழ்ந்தது. கௌரி இப்போது ஆழ்ந்து சிந்தித்தாள் அவள் எடுத்துக் கொண்ட உறுதியான முடிவு அவளுக்கு ஒரு புதுத் தெம்பையும் சக்தியையும் கொடுத்தது.

மறுநாள் ராதாகிருஷ்ணன் அலுவலகத்துக்குப் புறப்படு முன் கௌரியிடம் வந்து, '' வழக்கமாக மருந்துகளையெல்லாம் சாப்பிட்டாயா? உடம்பு இப்போது எப்படியிருக்கிறது?'' என்று கேட்டான். ''நான் இனி அதிக நாட்கள் இருக்க மாட்டேன் எனத் தோன்றுகிறது. தயவு செய்து என்னை என் அம்மாவிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்களேன் '' என்று மீண்டும் கேட்டாள் கௌரி. அவன் பதில் எதும் சொல்லாமல் போய்விட்டான். சற்று நேரம் கழித்துச் சந்திரா பள்ளிக்குப் புறப்பட்டவள் எதையோ தேடிக்கொண்டு இருந்தாள். அவள் தேடுவது என்ன என்று கௌரிக்குத் தெரியும். கடைசியில் அவள் கௌரியிடம் வந்து. '' வெளியில் பூட்டும் பூட்டைக் காணோம். எங்கு வைத்தார் என்று தெரியவில்லை. எனக்குப் பள்ளிக்கு நாழியாகிறது. கொஞ்சம் எழுந்து வந்து வாயிற்கதவைத் தாளிட்டுக் கொள். யார் வந்தாலும் கதவைத் திறக்காதே '' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

மெதுவாக முக்கி முனகிக் கொண்டு எழுந்து வந்த கௌரி வாயிற் கதவைத் தாளிட்டாள். உள்ளே வந்தவுடன் மடமடவென்று செயல்பட்டாள். என்றும் இல்லாத ஒரு புதிய தெம்பும் சக்தியும் அவளுக்கு எங்கிருந்தோ வந்துவிட்டன. ஒரு மணி நேரத்துக்குள் அவள் ஊருக்குப் புறப்படத் தயாராகிவிட்டாள். புறப்படு முன் மளமளவென்று ஒரு கடிதத்தை எழுதினாள்:

'' அன்புள்ளவருக்கு,

'' இப்படி உங்களை அழைப்பதற்கு உள்ளம் கூசுகிறது. புனிதமான வார்த்தையைக் களங்கப்படுத்துகிறேனே என்று.

'' பத்து வருடங்களுக்கு முன் என் வாழ்க்கையில் புகுந்து என் இளமைப் பருவக் கனவுகளையும் ஆசைகளையும் எடுத்த எடுப்பிலேயே அழித்து என்னைக் கைவிட்டீர்கள். என் விதியை நொந்து கொண்டு நான் எனக்கென்று ஒரு பாதையை வகுத்துக் கொண்டு அதில் சென்றேன். மீண்டும் அந்தப் பாதையில் குறுக்கிட்டு என் உள்ளத்தில் ஒரு புதிய நம்பிக்கையை ஊட்டி ஆசை காட்டி அழைத்து வந்தீர்கள் நானும் நம்பி ஏமாந்து விட்டேன். இருந்தாலும் இவ்வளவு பயங்கரமான திட்டத்தோடு நீங்கள் செயல்படுவீர்களென்று நான் சற்றும் நினைக்கவில்லை. நான் கடிதத்தை வளர்க்க விரும்பவில்லை. இவ்வளவு சாமர்த்தியமாகத் திட்டங்கள் போட்ட உங்களுக்கு, உங்களுக்கு எதிராக வேறொரு திட்டம் இந்த வீட்டிலேயே உருவாகிக் கொண்டிருப்பது தெரியவில்லை. எல்லாரும் கௌரிகளாகவே இருந்துவிடுவார்களா? உங்கள் அண்ணாவின் மனைவி ஒருவிதமாகச் செயல்பட்டுத் தனக்கு வாழ்வு தேடிக்கொண்டாள். இன்று சந்திரா வேறுவிதமாகச் செயல்படுகிறாள். ராஜதுரையைப் போன்ற ஒரு கயவனை நம்பி அவள் செல்லும் பாதையும் இருள் நிரம்பிய பாதைதான் என்று எனக்குப் படுகிறது. வினைகளின் பலனை அவரவர் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்?

'' மன்னிக்க வேண்டும். நீங்கள் என்னிடம் கையெழுத்து வாங்கினீர்களே, அந்தத் தாள்கள் அனைத்தையும் என்னுடன் எடுத்துச் செல்கிறேன். நீங்கள் எனக்கும் என் குடும்பத்துக்கும் இழைக்க நினைத்த தீங்குகளுக்கு ஏதாவது ஒரு சாட்சி வேண்டும் அல்லவா? அத்துடன் என்னுடைய உடைமைகளான நகைகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும் எடுத்துச் செல்கிறேன். இவற்றை நான் எடுத்துச் செல்லாவிட்டால் அவற்றைச் சந்திராவும் ராஜதுரையும் தங்களுடைய புது வாழ்வைத் தொடங்கும்போது எடுத்துச் சென்று விடுவார்கள்.

நான் அதிக நாட்கள் உயிர் வாழ முடியுமென்று தோன்றவில்லை. என் வாழ்வு அது ஆரம்பித்த புனிதமான அந்தப் புண்ணியத் தலத்தில், அன்னை அகிலாண்டேசுவரியின் சந்நிதானத்திலேயே முடிய வேண்டும் என்பதே என் ஆசை. தவிர, நான் நீங்கள் இருக்கும் இடத்தில் இறந்தால் அது உங்களுக்குத்தான் ஆபத்து. உங்களைக் கொலைக் குற்றத்துக்கு ஆளாக்கத் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியாது. நான் வீட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் உங்களுக்கு நான் பெரிய நன்மையையே செய்கிறேன்.

''நீங்களும் சந்திராவும் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்ள என்னுடைய கடிதம் உதவினால் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைவேன்.

இப்படிக்கு,
கௌரி''

கடிதத்தை உறையிலிட்டுத் தன் படுக்கையில் வைத்து விட்டுப் புறப்பட்ட கௌரி, ஏதோ யோசித்தவளாய் அவ்வுறையில் ராதாகிருஷ்ணனின் அலுவலக விலாசத்தை எழுதி ரெஜிஸ்தர் தபாலில் சேர்த்து விட முடிவு செய்தாள் வாயிற் கதவை இழுத்துப் பூட்டிச் சாவியை வாசலிலிருந்த சாக்கடையில் விசிறியெறிந்தாள். கையில் சூட்கேஸும் தோளில் பையுமாகத் தள்ளாடிக் கொண்டே தன் முழுப் பலத்தையும் திரட்டிக் கொண்டு வீதியில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள். பின்னாலிருந்து வேகமாக வந்த ஆட்டோ ரிக்ஷா ஒன்று அவளைக் கண்டதும் சட்டென்று வேகம் குறைந்து நின்றது. அதில் ஏறிக்கொண்டாள். எக்மோர் ஸ்டேஷனை நோக்கி விரைந்தது அந்த வண்டி. ★

செல்வந்தர்கள் மட்டும்தான் பணத்தை இரட்டிப்பாக்க முடியுமென்று நினைப்போருக்கு ஒரு நற்செய்தி!

குறைந்த முதலீடு செய்பவர்களும் முதலீட்டை இரட்டிப்புக்கு மேல் ஆக்கலாம் — 6 வருடங்களில்!

தேசிய சேமிப்புப் பத்திரம் VI-வது வெளியீட்டில் முதலீடு செய்தால்.

உங்களுடைய முதலீடு ஆறே ஆண்டு களில் இரட்டிப்புக்கும் மேலாகிறது.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அருகிலுள்ள அஞ்சலகத்தில் தேசிய சேமிப்புப் பத்திரம் வாங்க வேண்டியது தான். அவை ரூ. 10, 50, 100, 500, 1000, 5000 மற்றும் ரூ. 10,000 வகைகளில் கிடைக்கிறது.

நீங்கள் வருமானவரி செலுத்துபவராக இருந்தால் அவசியம் தேசிய சேமிப்புப் பத்திரம் வாங்க வேண்டும். ஏனென்றால் இதில் முதலீடு செய்யப்படும் தொகை முழுவதற்கும் (அனுமதிக்கப்பட்ட வரம்பு வரை) வருமான் வரிச் சட்டம் 80-சி பிரிவின் கீழ் வரி விலக்கு பெறலாம்.

நீங்கள் எதிர்காலத்திற்கு சேமிப்பதோடு வருமான வரி விலக்கு பெற தேசிய சேமிப்புப் பத்திரங்களை வாங்கிடுவீர்! அது உங்கள் முதலீட்டை இருமடங்கு ஆக்கும்.

முதலீடு செய்யுங்கள்

தேசிய சேமிப்புப் பத்திரம்

VI-வது வெளியீட்டில்

ஒவ்வொரு
ரூ. 1000/-ம்
ரூ. 2015/-
ஆகிறது!

அணுகவும் :

சிறு சேமிப்பு இயக்குநர்,
143, அண்ணா சாலை,
சென்னை - 600 002

அல்லது மாவட்ட ஆட்சியர்கள் /
மாவட்ட சேமிப்பு அலுவலர்கள் அல்லது
உங்களுக்கு அருகாமையிலுள்ள அஞ்சலகம்.

யாருக்காவது இரட்டிப்புத் தொகை வேண்டுமா?

DIPR-213-84 EP



தமிழகத்தில் சர்க்கரைத் தொழில்

நா. மகாலிங்கம்

நம் நாட்டின் பல பாகங்களில் விவசாய வளர்ச்சிக்குப் பாதகமான சூழ்நிலையே நிலவி வருகிறது. இந்தப் பாதகமான சூழ்நிலையிலும், கடந்த பத்து ஆண்டுகளில் விவசாயத் துறையில் நாம் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறோம். அவை இந்தியப் பொருளாதாரத்தை வளர்க்கும் பாதையில் செல்ல உதவியிருக்கின்றன.

அரிசி, கோதுமை, இன்னும் பணப் பயிர்களான பருத்தி, கரும்பு, சணல் போன்றவற்றில் நாம் ஓரளவு நல்ல சாதனைகளைச் செய்திருக்கிறோம்; செய்து வருகிறோம்.

ஆனால் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் முன்னேற்றத்துக்கான அறிகுறி இன்னமும் தென்படவில்லை. நாட்டில் இந்தப் பொருள்களின் தேவை அதிகரித்து வருகிறது.

தொழில் துறையின் வளர்ச்சியும் உற்சாகம் அளிப்பதாக இல்லை. சில தொழில்கள் வரவேற்கத்தக்க வகையில் வளர்ந்து வருகின்றன. மூலதனச் சந்தையும் உற்சாகம் அளிப்பதாக இருக்கிறது. இருந்தும் தொழில் வளர்ச்சியில் மந்த நிலைமையே காண்கிறது.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் பொதுத் துறையில் ஓரளவு முன்னேற்றம் தென்படுகிறது. இதுவும் நாட்டு நிலைமையோடு ஒப்பிடும்போது மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. நம் நாட்டு எண்ணெய் உற்பத்தி காரணமாக எண்ணெய் இறக்குமதி குறைந்து வருவதற்கான சூழ்நிலை உருவாகி வருகிறது. இதை நாடு நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது வெளிநாட்டு வர்த்தகம் எவ்வளவோ சலுகைகள் பெற்றிருக்கின்றன. இருந்தாலும் கடன் பாக்கியைத் திருப்பியளிப்பதில் இன்னும் வெற்றி பெறவில்லை.

உணவு தானிய விளைச்சல் அமோகமாக இருக்கிறது. பொருள் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. இருந்தும் பணப்பெருக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறது. இதைப்பற்றி பொருளாதார நிபுணர்கள் சிந்தித்துச் செயல்படவில்லை.

தொழில் துறையில் உற்பத்தி பெருகுவதற்குத் தடையாக இருப்பது என்ன? அதற்கு வேண்டிய அடிப்படையான மூலப்பொருள்களின் பற்றாக்குறைதான். குறிப்பாக நிலக்கரியும், மின்சாரமும் வேண்டிய அளவு கிடைப்பதில்லை. கிடைக்க வேண்டிய சமயத்திலும் கிடைப்பதில்லை.

தரக்குறைவான கரி, அவற்றின் எடைகளில் தரக் கட்டுப்பாடு இல்லாமை, அந்தக் கரியில் இருக்கும் கலப்படம் எல்லாமாகச் சேர்ந்து மின்சார வாரியங்கள் சிறப்பாகச் செயல்பட முடிவதில்லை.

ஆறாவது திட்டம் அதன் பொருளாதாரக் குறிக்கோளை அடையவில்லை. காரணம் என்ன? பணப்புழக்கம் அதிகரித்ததே! இதனால் தொழில் துறையில் புதிய முதலீடு செய்வதற்குத் தடையாகிவிட்டது. அரசின் திட்டத்திலோ அதன் நிருவாகச் செலவினங்கள் அதிகரித்துவிட்டன. வருவாய்க்கு வழியிருந்தும், சேமிப்பைக் கணிசமாகக் குறைத்துவிட்டது. மாநிலங்கள் தங்களுக்கு இன்னும் அதிகமான பொருளாதார அதிகாரங்களைக் கோருகின்றன. மத்திய அரசின் வருவாயில் இப்போது உள்ளதைவிட இன்னும் அதிகப் பங்கு கேட்கின்றன.

இவற்றின் விளைவால் தொழில் துறையின் நிலையான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. பல துறைகளில் சிறப்பாகப் பணிபுரிந்து அவற்றை வளர்த்திருக்கிறார்கள். சேமிப்பும் உயர்ந்திருக்கிறது. முதலீடுகளும் அதிகரித்திருக்கின்றன. இருந்தும் நம் நாட்டுத் தொழில் வளர்ச்சியில் அது அடையவேண்டிய குறிக்கோளை அடையவில்லை என்பதைக் காண்கிறோம்.

இத்துடன் அரசுத் துறையில் சிவப்பு நாடாக்கள் தொழில்துறை வளர்ச்சியை மிகவும் பாதிக்கின்றன. திட்டங்கள் அதன் குறிக்கோளை அடையமுடியாமல் தாமதப்படுத்துகின்றன. பணப்புழக்கம் அளவுக்கு மீறி அதிகரித்து வருகிறது. இது தொழில் வளர்ச்சியை மிகவும் பாதித்திருக்கிறது.

பல தொழில் துறைகளில், உதாரணமாகச் சர்க்கரை, சிமண்ட், எஃகு முதலியவற்றில் பெரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இந்தத் துறையில் தொழில் நுட்பம் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. இவற்றால் பயன்பெற வேண்டிய பொதுமக்கள் அதன் நன்மைகளை இன்னும் முழுமையாக அடையவில்லை.

தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்திருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். இருந்தாலும் மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. அவற்றில் தட்டுப்பாடு இருந்துகொண்டே வருகிறது.

கிடைக்கிற அடிப்படைத் தேவைக்கான பொருள்களைக்கூடப் பெரும்பாலான மக்களுக்கு வாங்கப் போதுமான வருமானம் இல்லை. மக்களுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்கள் போதுமான அளவு இல்லை. அதே சமயம் இருக்கும் அடிப்படைப் பொருள்களை வாங்கும் பொருளாதார நிலையும் மக்களிடம் இல்லை. இந்த இரண்டு பிரச்னைகளையும் தீர்க்கும் சூழ்நிலை நாட்டில் உருவாகவே இல்லை. இந்த இரண்டு பிரச்னைகளும் தீர்ந்தால்தான் நாடு தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் முன்னேற்றமடைந்ததாகச் சொல்ல முடியும்.

என்னைப் பொறுத்தவரை இந்தியப் பொருளாதாரப் பிரச்னை ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

எனக்குச் சர்க்கரைத் தொழிலில் ஓரளவு அநுபவம் இருக்கிறது. அதைப் பற்றிய பிரச்னைகளைச் சொல்கிறேன். நாம் நாட்டிலேயே கடுமையான கட்டுப்பாட்டுக்கு உள்ளாகியிருக்கும் துறைகளில் சர்க்கரைத் தொழிலும் ஒன்று.

1967-ஆம் ஆண்டு முதல் நாட்டில் 'இரட்டை விலை' திட்டம் அமலில் இருக்கிறது. இந்த அடிப்படையில் இந்திய அரசாங்கத்தின் விற்பனைக்காகச் சர்க்கரை உற்பத்தியில் 65 சதம் சர்க்கரையை அதற்கு அளித்துவிடவேண்டும்.

மீதமுள்ள சர்க்கரை, அதாவது 35 சதம் சர்க்கரையைத்தான் உற்பத்தியாளர்கள் மார்க்கெட்டில் விற்கலாம். இதையும் அவர்கள் இஷ்டத்துக்கு விற்க முடியாது. மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு விற்பனைக்கு என்று அரசு உத்தரவின் கீழ் விடுவிக்கப்படுகிறது. நான்கு வாரங்களில் ஒவ்வொரு வாரமும் இவ்வளவு சர்க்கரை விற்கலாம் என்ற உடன்படிக்கையின்படி சர்க்கரை உற்பத்தியாளர்கள் விற்பனை செய்து வருகிறார்கள்.

ஒவ்வொரு சர்க்கரைத் தொழிற்சாலைக்கும், கரும்பின் விலையை ஒவ்வொரு சர்க்கரைத் தொழில் மண்டலத்துக்கும் ஏற்பக் கட்டுப்பாட்டுச் சர்க்கரையின் (வெளிச் சர்க்கரை) விலையையும் மத்திய சர்க்கார் நிர்ணயிக்கிறது.

மாநில அரசோ சர்க்கரையின் மார்க்கெட் விலையையும் அதன் உற்பத்திச் செலவைப் பற்றியும் சிந்திக்காமல் கரும்பு விவசாயிகளுக்கு, கரும்புக்கு அதிக விலை கொடுக்க 'ஆலோசனை' கூறுகிறது. மாநில அரசின் ஆலோசனையைச் சர்க்கரைத் தொழில்துறை அலட்சியப்படுத்த முடியாது.

சர்க்கரைத் தொழிலின் உபபொருளான மொலாசசைக்கூட அரசு விதிக்கும் கட்டுப்பாட்டு விலைக்கே விற்கவேண்டும்.

சர்க்கரைத் தொழில் கிராமப்புற விவசாயத்தின் வளர்ச்சிக்கு உரிய ஓர் உன்னதமான தொழில். இதில் கொஞ்சம் தொலை நோக்கும் கிராம மக்களின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு சர்க்கரைத் தொழிலை அரசு வளர்க்கவேண்டும். காரணம், கிராமப்பகுதியில் சமூகப் பொருளாதார வளர்ச்சியின் மிகப் பெரிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

கிராமப் பகுதியின் சமூகப் பொருளாதார வளர்ச்சியென்றால் அங்கு உள்ள விவசாயப் பொருளின் உற்பத்தியின் வளர்ச்சி என்பதே பொருள். இதற்காகவே சர்க்கரைத் தொழிலில் கூட்டுறவுத் துறையை அரசு ஏற்படுத்தியது. அது வேகமாக வளர்ந்து அபிவிருத்தியடைந்துள்ளது.

இந்தத் தொழிலில் கூட்டுறவு துறையின்வளர்ச்சியைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் கூட்டுறவுச் சர்க்கரைத் தொழிற்சாலைகள் தங்கள் கரும்பு உற்பத்தியாளரின் நன்மைகளைப் பற்றிச் சிந்தித்துச் செயல்பட்டு வரவேண்டி இருக்கிறது.

இந்தக் காரணத்தாலேயே கூட்டுறவுச் சர்க்கரைத் துறை வித்தியாசமான லைசென்ஸ் வழங்கும் முறையை அமல் செய்து வருகிறது. கூட்டுறவுச் சர்க்கரைத் தொழிலுக்கு மாநில அரசு அதன் மூலதனப் பங்கில் கணிசமான அளவு பொருளாதார உதவி செய்வதையும், மத்தியப் பொருளாதார உதவிக் கார்ப்பரேஷன் மூலமாக நீண்ட காலத் தவணைக் கடன் அளிப்பதையும் ஆதரிக்கிறது.

தமிழ் நாட்டில் சர்க்கரைத் தொழிலகங்களை விரிவுபடுத்துவதில் சிரமம் இருக்கிறது. அதன் தொழிற்திறனை முழுவதையும் சிறப்பாகப் பயன்படுத்த முடிவதில்லை. சர்க்கரைத் தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடிவதில்லை. இதற்குத் தடையாக இருப்பது என்ன? மாநில அரசின் அரசியல் ரீதியான கரும்பின் விலை நிர்ணயக் கொள்கை. சர்க்கரைத் தொழிற்சாலைகள் தங்கள் சக்திக்கு மேல் கரும்புக்கு விலை கொடுக்க வேண்டிய நிலைமையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

அரசாங்கம் சர்க்கரைக்கு இரட்டை விலைக் கொள்கையை ஏற்படுத்தியதின் உண்மையான நோக்கம் என்ன? கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டும். அதன் மூலம் கரும்பு உற்பத்தியாளரை ஊக்குவிக்க வேண்டும். இப்போதைவிட இன்னும் அதிக நிலத்தில் கரும்பு உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும் என்பதேதான். இதனால் நாட்டின் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம். இதன் மூலமாகக் கிராமப் பகுதியின் சமூகப் பொருளாதாரத்தை வளர்க்க முடியும் என்ற நோக்கந்தான்.

ஆரம்ப காலத்தில் கரும்பின் குறைந்தபட்ச விலையே கரும்பு விவசாயிகளுக்குச் சாதகமாக இருந்தது. ஆனால் சர்க்கரைத் தொழிற்சாலையில் சர்க்கரை உற்பத்தி குறைந்த காலத்தில் கரும்பு விவசாயிகளுக்குக் கரும்புக்குக் கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச விலையைக் கூடக் கொடுக்க முடிவதில்லை. இந்தச் சூழ்நிலையில் கரும்பின்விலை அதிகரித்து விட்டது. கரும்பின் குறைந்தபட்ச உண்மையான விலைகளுக்கும் சர்க்கரை உற்பத்திக்கும் இடையே தோன்றிய இடைவெளி விரிவடைந்தது.

கரும்புக்கும் மற்ற விவசாயப் பொருள்களுக்கும் கிடைக்கவேண்டிய விலை பணப்புழக்கம் அதிகரித்ததன் விளைவாக நிலை தடுமாற ஆரம்பித்து விட்டது. விலை நிர்ணயத்தில் சாதகமற்ற நிலை உருவாயிற்று. அதனாலேயே சர்க்கரைத் தொழிலில் கிடைக்கும் அதிகப்படியான வருமானத்தை இருசாராரும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

1975-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பார்க்கவா கமிஷன் என்னும் நிபுணர் கமிட்டி அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்படி கரும்புக் கட்டுப்பாட்டையும் கொண்டு வந்து மாநிலங்களின் ஆலோசனை விலையைப் பின்பற்றக் கேட்டுக் கொண்டது.

1975-ஆம் ஆண்டிலிருந்து அது சிறுகச் சிறுக வளர்ந்து இன்று உயர்ந்த நிலையை எய்தியுள்ளது. கரும்பு உற்பத்தியாளரைத் திருப்திப்படுத்தும் வகையில் மாநில அரசுகள் கரும்புக்கு மிக உயர்ந்த விலையை நிர்ணயித்து அதைக் கொடுக்கும்படி 'ஆலோசனை கூறி வந்தனர்.

கரும்பின் நியாயமான (சர்க்கரையின் அடக்க விலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட, விலைக்கும் மேலாக அதிகப்படியாகக் கரும்பு விலையை மாநிலங்கள் நிர்ணயிப்பதை மத்திய சர்க்கார் ஆசீர்வதித்தது மாத்திரம் அல்ல. 74—75லிருந்து 79—80 வரை தொடர்ந்து ஊக்குவித்தும் வந்தது. இதன் காரணமாக ஆலைகளின் அபிவிருத்திக்குத் தேவையான பொருளாதார வசதிகள் குன்றிவிட்டன.

இந்தக் காரணத்தால் சென்ற ஐந்து ஆண்டுகளில் சர்க்கரை ஆலைத் தொழில் நடைமுறையில் குன்றியுள்ளது.

இந்திய அரசாங்கம் ஒரே ஒரு முறை 1980—81-ஆம் ஆண்டு, மட்டும் பழைய முறைக்கு மாற்றி, நிர்ணயிக்கப்பட்ட கரும்பின் குறைந்தபட்ச விலையின் ஆதாரத்தின் மீது ஒரு விலையை (லெவி பிரைஸ்) நிர்ணயித்தது.

ஆனால் இதனால் எந்த நிவாரணமும் கிடைத்துவிடவில்லை. உதவி என்ற வகையிலேயே கரும்பின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அதாவது, குறைந்த விலையில் மக்களுக்குச் சர்க்கரையைப் பகிர்ந்தளிப்பதற்காக லெவி சர்க்கரையின் விலையை வேண்டுமென்றே குறைவாக வைத்திருக்கிறார்கள்.

அரசாங்கம் வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரித்தால் தன் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி அதிகமாகக் கொடுக்கவேண்டும். இதற்காகச் சர்க்கரையின் விலையைக் குறைத்து நிர்ணயிக்கிறார்கள். சர்க்கரை ஒன்றுக்கு மட்டுமே இந்தக் குறைந்த விலையை நிர்ணயிக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டி இருக்கிறது. இது எப்படி நியாயம் என்று தெரியவில்லை.

ஆனால், அவர்கள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். சர்க்கரையின் இரட்டை விலைக் கொள்கையைச் சரியாகக் கையாண்டால், அதாவது அரசாங்கம் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கக் கேட்டுப் பெறும் சர்க்கரையில் ஏற்படும் இழப்

பையே, லெவி விலையிலுள்ள பற்றுக்குறையை, தொழிற்சாலை சுயேச்சையாக விற்கும் சர்க்கரை மூலமே சரிக்கட்ட வேண்டியுள்ளது.

தற்போதைய கரும்புக்காக நிர்ணயிக்கப்படும் விலைக்கும் கரும்பு உற்பத்திச் செலவுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. மேலும் கரும்புக்கு நிர்ணயிக்கும் மாநில அரசின் 'ஆலோசனை' விலை மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுகிறது.

தொழிற்சாலையின் சக்திக்கு அப்பாற்பட்டதாகக் கரும்பு விலை இருந்தாலும் கரும்பு உற்பத்தியாளருக்கு உயர்ந்தபட்ச விலையைக் கொடுப்பது என்ற மாநில அரசுகளின் ஆலோசனையால் சர்க்கரைத் தொழிற்துறையின் லாபம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது.

அரசாங்கம் லெவி சர்க்கரைக்கு நிர்ணயிக்கும் விலைக் கொள்கை குறைபாடுடையது. சர்க்கரை உற்பத்தி செய்யும் காலத்திலும், விவசாயப் பருவநிலை மாறுபட்டால் திரும்பப் பெறுவதிலுள்ள மாறுபட்ட அளவு, மாறுபட்ட முதலீடுகள் முதலியவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ளாமலே சர்க்கரைக்கு விலையை நிர்ணயம் செய்கிறது.

ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் கரும்பின் குறைந்தபட்ச விலையை நிர்ணயிப்பது அவசியம் என்று தீர்மானிக்கிறது இந்திய அரசு. எனினும் பல தொழிற்சாலைகளின் சராசரிச் செலவை மனதில் கொண்டு ஒவ்வொரு மாநிலத்துக்குமாக லெவி சர்க்கரைக்கு ஒரே மாதிரியான விலையை நிர்ணயிக்கிறது.

இதனால் ஏராளமான, சராசரிக்கும் குறைவான சர்க்கரைச் சத்துக் குறைந்துள்ள கரும்பை வாங்கி அறைக்கும் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டன. சுமார் 60 சதம் தொழிற்சாலைகள் வாங்கும் கரும்புகளில் சர்க்கரைச் சத்து சராசரிக்கும் குறைவாக இருப்பதாகக் கணிக்கப்படுகிறது. இவற்றில் நாற்பது சதம் தொழிற்சாலைகளை நோய் வாய்ப்பட்டுள்ள தொழிற்சாலை என்ற கணக்கில் சேர்க்கப்படவேண்டும்.

நம் நாட்டில் இரண்டு விதமான சர்க்கரைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒன்று வெண்படிகச் சர்க்கரைத் (வேக்யூம் பேன் சர்க்கரை) தொழிற்சாலை. மற்றது கண்டசாரி சர்க்கரைத் தொழிற்சாலை.

கண்டசாரி சர்க்கரைத் தொழிலுக்கு அரசாங்கக் கட்டுப்பாடுகள் ஒன்றும் கிடையா.

வெண்படிக (வாக்யூம் பேன்) சர்க்கரைத் தொழிற்சாலையே அரசின் எல்லாச் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டுள்ளது.

இதனால் ஒன்று மற்றொன்றின் மீது எதிர்விளைவை ஏற்படுத்துகிறது.



கரும்பு எடை போடுதல்

கண்டசாரி தொழிற்சாலையாளர்கள் கரும்பு விலையில் பெரிய வித்தியாசங்களை ஏற்படுத்துகிறார்கள்.

கரும்பு அதிகமாக உற்பத்தியான காலத்திலும் கரும்பு உற்பத்தி குறைந்த காலத்திலும் (வாக்யூம் பேன்) வெண்படிகச் சர்க்கரைத் தொழிற்சாலைகள் இரண்டு வகையிலும் பாதிக்கப்படுகின்றன.

கரும்பு உற்பத்தி அதிகமாகும் ஆண்டு கரும்பு உற்பத்தியாளரை (வாக்யூம் பேன்) வெண்படிகச் சர்க்கரைத் தொழிற்சாலைகள் காப்பாற்ற முன் நிற்கவேண்டும்.

கரும்பு உற்பத்தி குறைவாகவுள்ள ஆண்டுகளில் அவர்களால் கண்டசாரி தொழிற்சாலையாளரை மிஞ்சமுடியாது.

வெண்படிகச் சர்க்கரைத் தொழிற்சாலையின் கரும்பு உற்பத்திக்கு வேண்டிய விதைக் கரும்புகூடக் கிடைக்காமல் அவதிப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

சர்க்கரை உற்பத்தித் தொழில், உற்பத்தியில் அளவு மீறி ஏற்ற இறக்கத்தாலும் அவதிப்படுகிறது. 78—79லிருந்து 80—81 ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி ஒரேயடியாகக் குறைந்தது. அதைத் தொடர்ந்து 81—82, 82—83 ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி ஒரேடியாக அதிகரித்தது. மீண்டும் 83—84-ஆம் ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி குறைந்துபோய்விட்டது.

வேக்யூம் பேன் முறையில் இயங்கும் சர்க்கரைத் தொழிற்சாலைக்கு என்ன வேண்டும்? இதை எப்படி வளர்க்க முடியும்?

1. பசுமைப் புரட்சிக்குப் பிறகு உணவுப் பொருள் விலைக்கு மிகவும் பின்தங்கிய நிலையில் கரும்பின் விலை இருந்ததைக் கவனத்தில் கொண்டு, கரும்பு உற்பத்தியாளருக்கு உற்சாகமூட்டும் வகையில் எல்லாவற்றையும் உள்ளடக்கிய குறைந்தபட்ச விலைக் கொள்கையை மேற்கொள்ளவேண்டும். இந்த விலையின் அடிப்படையில் உடனடியாக லெவி சர்க்கரையின் விலையை நிர்ணயிக்கவேண்டும்.

2. லெவி சர்க்கரை விலை நிர்ணயம், தொழிற்சாலையின் முதலீட்டுக்கு நியாயமான வருவாய் கிடைப்பதாகவும், தொழிற்சாலைகள் விரிவுபடுத்தவும் நவீனமயமாக்கவும் போதுமான அளவு பொருளாதார வசதி பெறவும் நியாயமான லாபம் பெறவும் அனுமதிக்க வேண்டும்.

3. சர்க்கரையின் விலையை நிலையாக வைக்க அரசாங்கம் போதுமான அளவு சர்க்கரையை எப்போதும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும்.

4. ஏற்றுமதிச் சர்க்கரைச் சந்தையை நிரந்தர அடிப்படையில் அபிவிருத்தி செய்யவேண்டும்.

5. சர்க்கரைத் தொழிலைப் பயனுள்ளதாகச் செய்யவேண்டும். அதற்கு ஏற்ப இந்தத் தொழிலில் முதலீடு செய்தால் அது லாபம் அளிக்கக் கூடியவகையில் குறைந்த வட்டிக்குக் கடன் வசதிபெற வழி செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டுச் சர்க்கரைத் தொழிலைப் பற்றி ஒரு வார்த்தை. நாட்டின் மற்றப் பகுதிகளைப் போலவே கடந்த பத்தாண்டுக் காலத்தில் பொதுத் துறை,

கூட்டுறவுத் துறை, தனியார் துறை, வளர்ச்சிக்கேற்ப சர்க்கரைத் தொழில் கணிசமாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டின் ஆண்டு சர்க்கரை உற்பத்தி 28,000 டன் தான். 81—82 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி ஏழு லட்சத்து ஐம்பத்தாறு ஆயிரம் டன்களாக உயர்ந்து இந்தியாவின் உற்பத்தியில் ஒன்பது சதத்தை எட்டியுள்ளது.

தமிழ்நாடு தற்போது கரும்பு உற்பத்தியில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் கரும்பில் சர்க்கரைச் சத்து கீழ் நோக்கிப் போய் விட்டது. சிலவகைக் கரும்பில் சர்க்கரைச்சத்து சிறிது உயர்ந்திருந்தாலும் 71-72 ஆண்டில் இருந்த அளவுகூட இல்லை. தமிழ் நாட்டின் பல இடங்களில் கரும்பின் தரத்தை உயர்த்தி, அதில் சர்க்கரைச் சத்தை அதிகப் படுத்தும் நிலைக்குப் பருவ நிலை ஏற்றதாக இல்லை. இந்த மாதிரி நிலங்கள் உள்ள பகுதிகளில் சர்க்கரைச் சத்து அதிகமாக உள்ள கரும்பு உற்பத்தி செய்ய வாய்ப்பில்லை. இதனால் சர்க்கரை உற்பத்திச் செலவின் உயர்வைத் தவிர்க்க இயலாது போய்விடுகிறது.

பொருளாதாரச் சூழலோ மிகவும் ஏமாற்றம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. 74—75லிருந்து 83—84 ஆண்டுகளில் தமிழ் நாட்டிலுள்ள ஜாயிண்ட் ஸ்டாக் பிரிவில் மாத்திரம் மொத்த நஷ்டம் 984.33 கோடி ரூபாயாகும். 77—78லிருந்து 82—83 வரை கூட்டுறவு, பொதுத் துறை, இரண்டுக்குமாகச் சேர்ந்து 86.5 கோடி ரூபாய் நஷ்டமாகும். இந்த நிலைமை சர்க்கரைத் தொழிலில் தொடர்ந்து நீடிக்கிறது.

மாநில அரசு ஒரு குவிண்டால் சர்க்கரைக்குக் கரும்பு வாங்குவதிலிருந்து கிட்டத்தட்ட முப்பது ரூபாய் வரியாக வசூலித்து வருகிறது. தமிழ் நாட்டைத் தவிர மற்ற மாநிலங்களில் இந்த வரி சராசரி பதினாறு ரூபாய்தான். தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களைப் போல வரியைக் கணிசமான அளவு குறைக்கும்படி தமிழ் நாட்டில் இருக்கும் ஆலை நிர்வாகத்தினர் வேண்டி வருகின்றனர்.

தமிழ்நாட்டுச் சர்க்கரைத் தொழில் கூடங்களுக்குக் குறைந்த பட்ச லாபமே கிடைக்கிறது. உற்பத்திச் செலவோ மிகவும் அதிகரித்திருக்கிறது. இந்த நிலையில் கரும்புக்காகத் தமிழ் நாடு அரசு வலியுறுத்தும் அதிக விலையையும், அதன் மேல் கூடுதல் வரியையும்தொடர்ந்து சர்க்கரைத் தொழிற்கூடங்கள் கொடுத்து வருகின்றன. இது தொழிலின் மீதான கூடுதல் சுமையாகும்.

வட மாநிலத்தவருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, தமிழ் நாட்டுச் சர்க்கரைத் தொழில்கூடங்களின் சர்க்கரைக்கும் குவிண்டால் ஒன்றுக்குச் சராசரி 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய் குறைவாகவே விலை கிடைக்கிறது.

விவசாய விளைபொருளை அடிப்படையாகக் கொண்டது சர்க்கரைத் தொழில். மற்ற மாநிலங்களைப் போல் இல்லாமல் தமிழக மாநிலத்தில் எல்லா விவசாயிகளுடனும் நேரடித் தொடர்புகொண்டு அறிவியல் அடிப்படையில் கரும்பு அபிவிருத்தி செய்வதற்கு உரிய முறையில் ஆலைகள் பாடுபட்டு வருகின்றன.

இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரையில் தமிழ் நாட்டின் பங்கு பத்துச் சதவீதத்துக்குக் குறையாமல் இருப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு சரியான முறையில் சிந்தித்துச் செயல்பட வேண்டும். ❋

வாசகர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்.

ஒளிமயமான எதிர்காலத்திற்குச் சேமிப்பே சிறந்த வழி
இன்றே எங்கள் வங்கியின் கிளையொன்றில்
உங்களது சேமிப்புக் கணக்கைத் தொடங்குங்கள்
உங்கள் தேவைக்கேற்ற சேமிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்

எமது பயனுள்ள பல சேமிப்புத் திட்டங்களாவன :

- குழந்தைகள் நலனுக்கான சேமிப்பு
- தனித்தன்மை வாய்ந்த முதலீட்டுச் சேமிப்பு
- நீண்டகாலச் சேமிப்பு
- தொடர் சேமிப்பு
- ரொக்கப் பத்திரங்கள்

விவரங்கட்கு அருகாமையிலுள்ள எங்களது கிளையினை அணுகுங்கள்:

பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிட்.

(ரிஜிஸ்டர்டு ஆபீஸ் : ஆக்ஸ்போர்ட் ஹவுஸ், அண்ணா சதுக்கம், சென்னை - 600 006)

"குலிங்கத்துப் பரணி பாடிச் சோழர்களின் வீரத்தைச் செதுக்கிய ஜயங்கொண்டார் போல, தக்கயாகப் பரணி பாடி எம்மை மிகவும் சிறப்பித்து விட்டீர் குருநாதரே!'' என்று கண்களில் வெற்றிக் களிப்பு நர்த்தனம் செய்யக் கூறினான், சோழமன்னன் இரண்டாம் இராஜராஜன்.

தன் பொக்கை வாயைத் திறந்து மெல்ல நகைத்தார் கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர். ''இராஜராஜா, உன் பாட்டனார், உன் தந்தையார், உன்னுடைய ஆட்சிக் காலம் என்று மூன்று தலைமுறைகளை காணும் பேறு எனக்குக் கிட்டியது. சோழர்களின் வீரத்தை வடிக்கச் சொற்களைத் தேடும் ஆயாசம் புலவர்களுக்கு ஏற்படும். மேலும் ஜயங்கொண்டார் மாபெரும் புலவர்'' என்றார்.

அருளானந்தரை என்னுடன் கூட்டி வந்தேன்'' என்றான் மன்னன்.

வெண் நுரைத் தாடியை நீவிய கவிஞர் பெருமான், ''சிறை எடுத்து வந்து விட்டாய் என்று கேள்விப் பட்டேன்'' என்றார்.

''அவர்கள் சொற்படி பார்த்தால் அப்படித்தான் குருநாதரே!''

''ஆனால், உனது அவையில் ஓயாது தமிழ் ஒலிப்பதை நான் அறிவேன், மன்னா. உன்னுடைய தமிழ்ப் பற்றே என் உடல் தளர்வடைந்தாலும் அறிவு தளர்வுறாமல் என்னைக் காப்பாற்றுகிறது. இதுதான் சத்தியமான உண்மை. நீ கவிஞனையும், சிற்பியையும் எப்படி உயர்வாய்க் கருதுவாய் என்பது எனக்குத் தெரியும்.''

நீண்ட பெருமூச்சை இழுத்து விட்டான் மன்னன்.

சிற்பியின் காதல்

லட்சுமி ராஜரத்தினம்

''தாங்கள் என் ஆட்சிக் காலத்தில் வாழ்வது நான் பெற்ற பெரும் பேறு குருநாதா'' என்றான் இராஜராஜன்.

மெல்ல நகைத்தார் கவிச் சக்கரவர்த்தி.

''இந்தத் தள்ளாமையைச் சுமந்து கொண்டு இன்னும் நீண்ட காலம் வாழ வேண்டும் உன் குருநாதர் என்று ஆசைப்படாதே, ராஜராஜா! இம்மையில் பெற வேண்டிய பேற்றை எல்லாம் பெற்று விட்டேன். இனி மறுமையில் பெற வேண்டிய பேற்றுக்கானவற்றைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.''

''தங்களுடைய உள்ளக்கிடக்கை புரிகிறது. ஆனால் நான் எடுக்கப் போகும் திருக்கோயிலைக் கண்டு தாங்கள் களிக்க வேண்டும். அதற்காகத் தாங்கள் நீண்ட காலம் வாழ வேண்டும் கவிப் பெருமானே'' என்று கூறினான் மன்னர் மன்னன்.

''திருக்கோயிலா? உன் முன்னோர்கள் தஞ்சையில் அரண்மனையைவிட அரனுக்கு ஆலயம் அமைத்துப் பேரும் புகழும் பெற்று விட்டார்கள். உன்னையும் அந்தப் பேராசை விடவில்லையா?''

குருபிரானுடைய காலைத் தொட்டு வணங்கிய மன்னன், ''அரனுக்கு மனை அமைக்கும் பேராசை எனக்கும் இருக்கிறது. அதற்காகத்தான் கல்யாணபுரத்தை வெற்றி கொண்டபோது பொன்னையும், பொருளையும்விடச் சிற்பி

''தங்கள் நம்பிக்கைக்கு உரியவனாக என்றும் இருப்பேன். சிற்பி அருளானந்தரை அவருடைய விருப்பத்துக்கு மாறாக அழைத்து வந்தது தவறுதான். ஆனால் அந்தச் சிற்பியின் சிற்பத் திறமையே எனக்குச் சிறந்த ஆலயம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற ஆசைக்கு வித்திட்டது கவிஞர்பெருமானே! உத்தரவு பெறுகிறேன். பிறகு சந்திப்போம்.'' என்று கிளம்பிவிட்டான் மன்னன்.

காட்டாற்று வெள்ளத்தைக் கூடத் தடுத்து நிறுத்தலாம். ஆனால் சோழர்களின் புகழையும், புகழ் பெற அவர்கள் செயலாற்றும் வேகத்தையும் நிறுத்த முடியாது என்று நகைத்துக் கொண்டார் ஒட்டக் கூத்தர்.

தலைநகராம் இராசராசபுரத்தின் (பழையாறை) வடக்குப் பகுதியில் தாராசுரம் எனும் பெயரில் மாமன்னன் எடுக்கப் போகும் கோயிலின் சிறப்பைப் பற்றிய செய்தி விரைவில் அந்தப்புரம் வரையில் பரவிவிட்டிருந்தது. இரண்டாம் இராஜராஜனுடைய நான்கு மனைவிகளும் ஒன்றாகக் கூடி இருந்தனர். மன்னனுடைய காதலைப் பங்கு போடுவதில் நால்வருக்கும் என்றைக்குமே போட்டா போட்டி தான்.

பட்டத்தரசி புவனமுழுதுடையாள் சற்றுத் தூக்கலான பெருமையை உடையவள். அதனால் அவளே பேச்சை ஆரம்பித்தாள்.

''தரணி, உனக்குத் தெரியுமா? மன்னர் என்னிடம் சொன்னார். கல்யாணபுரத்திலிருந்து சிற்பி ஒருவரை அழைத்து வநதுருககிறார் அல்லவா? சப்த ஸ்வரங்கள் ஒலிக்கும் சிலை ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறாராம் அந்த மாதிரி சப்த ஸ்வரங்கள் ஒலிக்கும் படிகளை மாமன்னர் தாம் எடுக்கும் ஆலயத்தில் அமைக்கப் போகிறாராம்.''

தரணி முழுதுடையாளின் முகம் செந்தூரக் குழம்பாகக் குழம்பியது

‘‘மாமன்னர் திருக்கோயிலின் அமைப்பையே என்னிடம் வரைந்து காட்டினார். கோயின் முன் அமைப்பு சம தரையைவிட ஓர் ஆள் உயரத்துக்குக் கீழாக இருக்கப் போகிறது’’ என்றாள்.

‘‘அது மட்டுமா? கோயில் தேர் அமைப்பாக இருக்கும். முன் பக்க அமைப்பு பள்ளமாக இருப்பதால் மழை நீர் தங்காமல் ஓட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்’’ என்றாள் தென்னவன் கிழானடி.

‘‘மாமன்னரின் கலைத்திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக இத்திருக் கோயில் அமையும. அக்காமார்களே, உங்களுக்கெல்லாம் இன்னும் ஓர் உண்மை தெரியுமா? சிற்பி அருளானந்தரின் திருக் குமாரத்தி குமுதினி தேவியாரை மாமன்னர் வரவழைக்கப் போகிறார். ஆடற்கலையில் தேர்ந்த அம்மாதரசி, கலையரசி மட்டும் இல்லை, எழிலரசியும் கூட. மாமன்னரின் திருவுள்ளத்தில் அவள் தன் எழிலைச் சித்திரம் தீட்டினால் நாம் அவளுடன் ஐவர் ஆவோம்’’ என்று கூறிய உலகுடை முக்கோக் கிழானடிகள் கலீரென்று நகைத்தாள்.

இரண்டாம் இராஜ ராஜன் தன் முன்னோர்களைப் போலவே தில்லைக் கூத்தனிடம் மாறாத காதல் கொண்டவன். இவனது மூன்றாவது மனைவியான முக்கோக் கிழானடிகள் திருக்கோயிலூர் மலையமானாட்டுச் சிற்றரசன் ஒருவனின் மகள். இவள் இசைக்கும் தேவாரப் பதிக இன்னிசையைக் கேட்டு இவளை மணந்தான் மன்னன். கலைத்துறையில் தன் சிறந்த தோழியாகக் கருதி மனத்தில் ஓர் தனி இடத்தை ஒதுக்கியிருந்தான்.

தன் சிறப்பை இவள் சில சமயங்களில் மற்ற ராணிகளின் முன்பு வெளியிட நேரிடும்.



இரண்டு தினங்களுக்கு முன்பு பொன்னொளி பரப்பும் பௌர்ணமி முழு நிலவைக் காவேரி நதிப் பரப்பில் ராஜ ஹம்சப்படகில் அநுபவிக்க விரும்பினான் இராஜராஜன். சில சமயங்களில் தன் ஏகாந்தத்தை மிகவும் பிடித்த முக்கோக் கிழானடிகள் ஒருத்தியிடம் மட்டுமே பகிர்ந்து கொள்வான். பௌர்ணமி தினத்தையும் அவளுடைய இன்னிசையில் துய்த்து உணர்ந்தபோதே குமுதினி பற்றி அவளிடம் சொல்லி வைத்திருந்தான்.

தாராசுரத்தில் வேலைகள் தொடங்கி விட்டன. கற்கள் இல்லாத தஞ்சையம்பதியில் கற்கள் வந்து குவிந்தன. சிற்பி அருளானந்தர் சிற்பம் வடிப்பதற்கு உகந்த கற்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார். அருமை மகள் குமுதினி வந்து விட்டது அவருக்குப் பெருத்த நிம்மதிதான். ஆனால் குமுதினி அடிக்கடி அந்த அமைதியைக் குலைத்து வந்தாள்.

''நம்முடைய நாட்டை விட்டு நாம் ஏன் இங்கு வந்து அடிமை வேலைசெய்யவேண்டும் தந்தையே?'' என்று ஆத்திரப்பட்டாள்.

''கல்யாணபுரத்து அருமைச் சிற்ப வேலைப்பாட்டை நாம் எதற்காகச் சோழ மண்டலத்துக்குத் தாரை வார்க்க வேண்டும்?'' என்று குமுறினாள்.

''எங்கள் நாட்டுச் சிற்பங்களைச் சூறையாடி வந்த மன்னனைப்பார்த்து நாலு வார்த்தை சுடச் சுடக் கேட்க வேண்டும்.'' என்று குமுறினாள்.

''குழந்தாய்! போர் என்று வந்தால் வெற்றியும் தோல்வியும் சகஜந்தான். சோழ மன்னன் வெற்றி பெற்று விட்டார். ஆனால் அதற்காக நமது கலையை அவன் அவமதிக்கவில்லையே? சோழ மன்னன் இரண்டாம் இராஜராஜன் கலைகளின் காவலர், ராஜ பண்டிதர் எனும் சிறப்பைப் பெற்றவர்.

நம்மைக்கொண்டு ஓர் அற்புதப் படைப்பினை இங்கு ஆக்கப் போகிறார்.''

செல்வியின் முகத்தைக் கண்டு பேச்சை நிறுத்தினார் அருளானந்தர்.

''நாம் இங்கு அடிமை வாழ்வு வாழவில்லை என்று கூறுகிறீர்களா தந்தையே?''

''இல்லை தாயே! நமக்கு இங்கு எந்தவிதக் கட்டுக் காவலும் இல்லையே? நீ அபிநய வல்லி. உன் நிருத்தங்களை வடிக்க வேண்டும். நடனக் கலையின் அரிய முத்திரைகளை நீ பிடிக்கவேண்டும். அவற்றைப்பார்த்து மாமன்னர் பாராட்ட வேண்டும். காலங் காலத்துக்கும் அவை அழியாமல் நிற்க வேண்டும்'' என்று கண்கள் இமைகளில் செருகக் கூறினார் அருளானந்தர்.

''மாமன்னர்!'' பற்களைக் கடித்தாள் குமுதினி. ''அந்த மாமன்னர் என்னைக் காண இன்னும் வரவில்லையே தந்தையே?'' என்று எகதாளமாகக் கேட்டாள்.

''அம்மா குமுதினி, மாமன்னர் சிறந்த மதியூகி. எப்பொழுது எங்கே தோன்ற வேண்டும் என்று அவருக்குத் தெரியும். புவன முழுவதையும் ஆளும் ஒரு சக்ரவர்த்தி உன்னை வரவேற்க அரண்மனை வாயிலில் வந்து பூர்ண கலசத்துடன் நிற்க வேண்டும் என்று நீ எதிர்பார்க்கலாமா? கல்யாணபுரத்தின் ஒரு சாதாரண குடிமகள் நீ. என் சிற்பத் திறமையும், உன் நடனத் திறமையும் ஒரு மேன்மையைக் கொடுத்திருக்கின்றன.

''அதற்காக இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். வெற்றி பெற்ற மன்னவன் நமது திறமையை மதித்துத்தானே இங்கு அழைத்து வந்திருக்கிறான்! மாமன்னர் இராஜராஜனது தனிப் பெருமையை நீ உணர வேண்டும் தாயே? இந்தத் தமிழ்த் திரு சோழநாட்டில், தந்தையில்லார்க்குத் தந்தையாகி, தாயில்லார்க்குத் தாயாகி, மைந்தரில்லார்க்கு மைந்தருமாகி, மன்னுயிர் கூட்கு உயிராகியும் இருப்பவன்'' என்று கூறினார் அருளானந்தர்.

''மிகவும் அழகாக மன்னர் பெருமானது சிறப்பினை எடுத்துச் சொன்னீர்கள் சிற்பியாரே! தூர தேசத்திலிருந்து வந்துள்ள தாங்கள் புகழும் அளவுக்கு எங்கள் மன்னரது புகழ் பரவி யுள்ளது என்றால் அது நாங்கள் பெற்ற பெரும் பேறு!'' என்று சொல்லியபடியே வந்த அந்த இளைஞனைக் கண்டு திகைத்தனர், அருளானந்தரும் குமுதினியும்.

அவனோ இவர்களது திகைப்பைப் பொருட்படுத்தாது, ''கரும்புக் காடு அழிவுபட்டுக் கிடந்தால் களிறு ஒன்றின் பலத்தைச் சொல்லியா தெரிய வேண்டும்? இவர்தாம் தங்களது புதல்வியாரோ? தாங்கள் உணர்ந்த அளவு இவர் மன்னரைப் பற்றிப் புரிந்து கொள்ளவில்லை'' என்று கூறினான் அந்த இளைஞன்.

தங்களது பேச்சினால் ஏதேனும் அபசாரம் நேர்ந்துவிட்டதோ என்று அஞ்சிய அருளானந்தர், ''இவள் தான் என் புதல்வி. எங்கள் நாட்டிலிருந்து இப்போதுதான் வந்திருக்கிறாள். அந்த ஏக்கம் இன்னும் தீரவில்லை'' என்றார்.

''புரிகிறது. பேச்சில் கனல் பறக்கிறது'' என்று புன்னகை பூத்தான் அவ்விளைஞன்.

''நீ யாரப்பா?''

''நானும் ஒரு சிற்பி. இவ்வாலய எழிற்கூடத்தை நிர்மாணிக்க என்னையும் மாமன்னர் நியமித்திருக்கிறார்'' என்றவன், கண் கொட்டாமல் தன்னைக் கவனிக்கும் இளம் கன்னிகை குமுதினியைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

''உன் பெயர் என்னவோ?''

''புத்தராஜன்.''

குமுதினி கலீரென நகைத்தாள்.

''பெண்ணே, உன் காற் சதங்கை ஒலிக்கும் லயம், உன் சிரிப்பில் தவறாது கணக்காக ஒலிக்கிறது. எதற்காகச் சிரித்தாய்? சிரிக்கும்படியாகவா என் பெயர் இருக்கிறது?'' என்று சற்றுக் கடுமை கலந்த குரலில் கேட்டான் புத்தராஜன்.

'ஏற்கனவே மன்னரைப் பற்றிக் குறைவாகப் பேசி இருக்கிறாள். இந்த இளைஞன் மாமன்னருக்கு மிகவும் நெருங்கியவனாக இருந்து ஏதாவது சொல்லிக் கொடுத்துவிட்டால்? இந்தப் பெண்ணுக்கு ஏன் இதெல்லாம் புரியவில்லை. பெயரைக் கேட்டு என்ன சிரிப்பு வேண்டி இருக்கிறது?? என்று மனத்தினுள் மெல்ல சினந்து கொண்டார் அருளானந்தர்.

''ஐயா, இளம் சிற்பியாரே, தங்கள் பெயரின் பொருத்தத்தைக் கண்டு சிரித்தேன். புத்தரோ, ராஜ வாழ்க்கை வேண்டாம் என்று துறந்து புத்தர் என்ற பெயரில் போதி மரத்தின் அடியில் ஞானத்தைப் பெற்றவர். நீர் என்னடா வென்றால் ராஜ வாழ்க்கையையும் சேர்த்து 'புத்தராஜன்' என்ற நாமத்தைச் சுமந்து கொண்டிருக்கிறீர்கள்'' என்று கூறி மேலும் சிரித்தாள்.

இதைக் கேட்டுப் புத்தராஜனும் நகைத்தான்.

பதாகம், த்ரு பதாகம், அர்த்த பதாகம், கர்த்தமுகி, அர்த்த சந்த்ரி, சர்வாங்கே.

புத்தராஜன் செதுக்கிய சிற்பங்களைப் பார்த்தார் அருளானந்தர். ''ஆடற்கலையின் சாஸ்திரங்கள் உனக்குத் தெரியுமா புத்தராஜா?'' என்று மெல்ல வினவினார்.

''ஓரளவு தெரியும். தங்கள் புத்திரி தங்களுக்கு ஆடிக் காட்டிய பொழுது இத் தூண்களில் இவற்றை நான் செதுக்கினேன் சிற்பியாரே!''

அருளானந்தர் அவற்றைக் கூர்ந்து நோக்கினார். முன் மண்டபத்துக் கான தூண்கள் ஐந்தும் வழ வழ வென்று, நடுவில் ஒன்றிரண்டில் நாட்டிய முத்திரையைக் காட்டும் பெண்ணின் சிற்பங்கள், சின்னப் பிள்ளையார்! ஓ! இவன் சாதாரண சிற்பி இல்லை.

''தங்கள் உத்தரவு பெறாமல் குமுதினியின் ஆடலைச் சிற்பமாக வடித்ததற்கு மன்னிக்க வேண்டும், சிற்பியாரே!''

சிற்பியாரின் மனமோ வேறு விதமான சிந்தனையில் ஈடுபட்டது. இவன் தன் மகளுக்குப் பொருத்தமானவனோ?

''என்ன சிற்பியாரே? எம்மை மன்னித்தருளமாட்டீரா?''

''மன்னிப்பதா? இத்தனை கலைத் திறமை உள்ள உன்னைப் போன்ற கலைஞனை வைத்துக்கொண்டா, மன்னர்பிரான் எங்களை அழைத்து வந்துள்ளார்? விந்தையாக உள்ளது!''

கலகலவென்று நகைத்தான் புத்தராஜன்.

''சப்த ஸ்வரப் படிகளை நீங்கள் தானே அமைக்கப் போகிறீர்கள்? அற்புத ஸ்வரப் பதுமைகளை ஸ்வர இலக்கணப்படி செதுக்கிய தங்களின் திறமை மாமன்னரை மயக்கி இருக்கிறது சிற்பியாரே! தூண்களை வழ வழவென்று வடித்திருப்பது ஒன்றும் பெரிய விந்தை இல்லை'' என்றான் புத்தராஜன் பணிவாக.

ஒயிலாக அப்பொழுதுதான் அங்கு வந்த குமுதினி, ''மாமன்னர் மாமன்னர் என்கிறீர்களே? அவரை நான் இன்னும் காணவில்லையே? தங்கள் மன்னர் எப்படி இருக்கிறார் என்பதைக் காண ஆவலாக இருக்கிறேன், புத்தராஜரே'' என்றாள் மயக்கும் புன்னகையுடன்.

இளம் சிற்பியின் புருவங்கள் வளைந்தன.

''ஏன் காணவில்லை என்பது மன்னருக்குத்தான் தெரியும் குமுதா. நீ மன்னரைக் காணவில்லையே தவிர மன்னர் உன்னை எங்கிருந்தாவது கண்டிருப்பார். கலைகளின் மேல் உள்ள பிரேமையைக் கலாவல்லிகளிடமும் காட்டத் தயங்க மாட்டார்'' என்றான், அதே மோகனச் சொற்களைக் குழைத்து.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது சிற்ப வெளியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஒரு காவலன் ஓடிவந்து, ''மாமன்னரின் திருத்தேவியார் அவனி முழுதுடையாள் சிற்ப வெளிக்கூடத்தைப் பார்க்க வருகிறார்'' என்ற செய்தியை வெளியிட்டான்.

குமுதினியின் முகம் பளீரென்று ஒளிர்ந்தது.

''உடன் மாமன்னர் வருகிறாரா?'' என்று விசாரித்தார்.

''இல்லை; மூன்றாவது தேவியார் மட்டும் வருகிறார்'' என்ற காவலன் மற்றவர்களிடம் செய்தியைப் பரப்ப விரைந்தோடினான்.

''நீங்கள் வேலையைக் கவனியுங்கள். நான் ஸப்த ஸ்வரப் படிகளை அமைக்கப் போகிறேன்'' என்று விரைந்தோடினார் அருளானந்தர்.

குமுதினியின் புருவங்கள் வளைந்தன.

''மன்னரது மூன்றாவது தேவி என்றால்?'' என்று வினவினாள்.

''மன்னர் நான்கு பெண்களை மணந்துள்ளார். இப்பொழுது வரும் தேவியார் அவனி முழுதுடையாள். அவருக்கு உலகுடை முக்கோக் கிழானடிகள் என்ற பெயரும் உண்டு. திருக்கோயிலூரில் வாழ்ந்து வரும் மலையமானாட்டுச் சிற்றரசரின் மகள். மன்னரின் கலை சாம்ராஜ்யத்தின் ராணி இவர்தாம். மாமன்னரிடம் மிகுந்த செல்வாக்கு உள்ளவர்'' என்றான் புத்தராஜன்.

குமுதினியின் முகத்தைப் பார்த்தவன் திடுக்கிட்டான்.

''புத்தராஜரே, உங்கள் மாமன்னருக்கு ஒரு மனைவி போதாதா? நான்கு மனைவிகளா? பெண்கள் என்ன போகப் பொருளா?'' என்று வெடித்தாள்.

''நீ கேட்பது வேடிக்கையாக இருக்கிறது குமுதா? மன்னர் குலத்தை முதல் முதலாகப் பார்ப்பது போலல்லவா பேசுகிறாய்? மன்னர்கள் பல காரணங்களுக்காகப் பல பெண்களை மணக்கிறார்கள். இது நீ அறியாத இரகசியமா? தம் மனைவிமார்கள் மனத்தில் மன்னர் பவனி வருகிறான். அவர் மனத்தில் பவனி வரும் பெண்ணைப் பற்றியல்லவா பெருமை கொள்ள வேண்டும்?''

''பெருமை! யாருக்கு வேண்டும்?'' என்று கூறிய சொற்கள் புத்தராஜனின் காதுகளில் விழும்முன் அரசியார் வருகை புரியவே அவரவர் தமது பணிகளில் ஈடுபட்டனர்.

புத்தராஜன் தன் தலைத் துணியை உதறிக் கட்டிக்கொண்டு சிற்பத்தை வடிக்கத் தொடங்கினான். அவனி முழுதுடையாள் தன் பின்பக்கத்தில் நிற்பதைக் கவனித்தும் கவனிக்காத மாதிரி செதுக்கத் தொடங்கினான்.

''சிற்பியாரே, இது நாட்டியக் கலையில் எந்த நிலை என்று பெயரைக் குறிப்பிட முடியுமா?''

புத்தராஜன் தன் முகத்தைக் காட்டவில்லை. ''குமுதினி, பதாகத்தை ஆடிக் காட்டு.''

அபிநயம் பிடித்தாள் குமுதினி.

''இது த்ருபதாகம், இது அர்த்த பதாகம், இது கர்த்தமுகி.''

இப்படித் தொடங்கிய குமுதினி ஒரு பெரிய நாட்டிய நிகழ்ச்சியையே நடத்திவிட்டாள். ஆடல் முடிந்ததும் அரசியார் ஒரு மகர கண்டிகையைப் பரிசளித்தாள் குமுதினிக்கு.

''உன் ஆடலைப் பார்த்தால் எனக்கும் கற்றுக்கொள்ள ஆசையாக இருக்கிறது குமுதினி'' என்றாள் அரசமாதேவியார்.

''என்னைப் போல, தாங்கள் வயதில் இளையவர்தானே தேவி. நன்றாகக் கற்றுக்கொள்ள முடியும்'' என்றாள் குமுதினி.

''அப்படியா? ஒரு நல்ல நாளைக் குறித்துச் சொல்லி அனுப்புகிறேன்.

மன்னவர் எல்லாக் கலைகளிலும் வல்லவர். அவருடைய மனத்தில் தனி இடம் பெற வேண்டுமானால் கலைகளில் தனிச் சிறப்பு பெற்றிருக்க வேண்டும்'' என்று மெல்லிய குரலில் குமுதினியிடம் கூறினாள் அரசியார்.

மெல்ல நகைத்தாள் குமுதினி.

''என்ன குமுதினி நகைக்கிறாய்? உனக்கு இப்படி எல்லாம் பிரச்னை இல்லையில்லையா?''

''இல்லை தேவியாரே! ஒரு பெண், ஓர் ஆண் மகனின் இதயத்தில் இடம் பிடிக்க எப்படித் துடிக்கிறாள்! இதை நினைத்தேன். சிரிப்பு வந்தது தேவி. எனது ஆசையைச் சொன்னால் தாங்கள் நகைப்பீர்கள். என் மணாளன் என் ஒருத்திக்குத்தான் சொந்தமாக இருக்க வேண்டும்.''

''அப்படியா, குமுதா! உன் பதில் எனக்குப் பெருத்த நிம்மதியைத் தருகிறது.''

''ஏன் தேவி?''

''சொல்ல வேண்டாத விஷயம். இது போதும்'' என்று விடைபெற்ற அந்த ராஜகுலத் திலகம் விடைபெற்றுச் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு நின்றாள் குமுதா.

கரையைத் தொட்டு விளையாடும் காவிரிக் கன்னியைக் கண்டு களித்தபடி அமர்ந்திருந்தாள் குமுதா. அன்று காலையில் அவனிமுழுதுடையாளின் சந்திப்பே அவள் நெஞ்சை நிறைத்திருந்தது. இந்தப் பேரழகியை மணந்த மாமன்னன் எப்படி இருப்பான்! அவனிசுந்தரியை ஆளும் நாயகனின் பேரழகைக் காணத் துடித்தாள் அவள்.

''குமுதா, உன் சிந்தனைக்கு இடையூறு விளைவிக்கிறேனா!

''புத்தராஜன் அவர்களா? வருக வருக'' என்று புன்னகை பூத்தாள் அவள்.

புத்தராஜன் அவள் அருகில் உட்கார்ந்தான்.

''இன்று தேவியிடம் ஏதேதோ பேசினாயே? உன்னை வெகுளியானவளா, இல்லை எல்லாம் அறிந்தவளா என்று தீர்மானிக்க முடியவில்லை. ஆனால் என்னைப் புரிந்துகொண்டாயா குமுதா?''

''புரிந்து கொண்டதாகத்தான் நினைக்கிறேன், புத்தராஜரே.''

''இந்த ஏழைச் சிற்பியின் இதய சிம்மாசனத்தில் நீ இருக்கிறாய். உன் அரியாசனத்தில் வீற்றிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா?''

குமுதா மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டாள். ''என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானா சிற்பியாரே?''

புத்தராஜன் அவளுடைய கரத்தைப் பற்றிக் கொண்டான். ''இந்தச் சிற்பியின் காதலை அபிநயவல்லி ஏற்றுக் கொண்டுவிட்டாள் என்பதே போதும்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

''தந்தையே, என்னைக் கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பெரு

மான் அழைத்திருக்கிறார். எதற்கு என்று தெரியவில்லை. தாங்களும் உடன் வருகிறீர்களா?'' என்று அருளானந்தரை அழைத்தாள் குமுதினி.

வியப்பால் இமைகள் உயர மகளைப் பார்த்தார். சிற்பியார். ''மகளே, இந்தச் சோழ வளநாட்டில் உன் எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையப் போகிறது. அதற்கான அறிகுறியே ஒட்டக்கூத்தர் பெருமானின் அழைப்பு என்று எண்ணுகிறேன். நாம் இப்போது உருவாக்கும் இப் பகுதிக்கு மாமன்னர் 'இராஜ ராஜேச்சுரம்'னு (இப்போதைய தாராசும்) பெயரிடப் போகிறாராம். இவ்விழாவின் பொழுது ஒட்டக் கூத்தர் தாம் இயற்றும் காவியத்துக்கு உன்னை ஆடும்படி கேட்கலாம்.

''அப்படியா தந்தையே?''

''ஒட்டக் கூத்தர் இராஜராஜ சோழனுலா என்னும் நூலை அரங்கேற்றிய போது மாமன்னர் பெருமகிழ்வெய்தி ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் பரிசிலாக வழங்கி அந்நூலை ஏற்றுக் கொண்டாராம்.''

''இதெல்லாம் தங்களுக்கு எப்படித் தெரியும் தந்தையே? மாமன்னரைத் தரிசித்தீர்களா?''

''இல்லை மகளே, இங்கு வந்த பின்பு மாமன்னரைப் பார்க்கவே இல்லை. புத்தராஜன் சொல்லித்தான் அறிந்தேன்.''

''தந்தையே, ஒன்றைக் கவனித்தீர்களா?''

''என்னம்மா?''

''புத்தராஜர் தாம் வடித்த தூண்கள் ஐந்தின் மேலும் இராஜகம்பீரன் என்று பெயரைப் பொறித்துள்ளார்.'

''மாமன்னரின் சிறப்புப் பெயருள் இராஜகம்பீரன் என்ற பெயரும் ஒன்று. பெயருக்கு ஏற்ற கம்பீரம் உள்ளவர். சோழேந்திர சிங்கன், தெய்வப்பெருமாள், கண்டன், சொக்கப்பெருமான்னு எத்தனையோ பெயர்கள் அவருக்கு உண்டு.''

''சரி தந்தையே. நான் வரட்டுமா?''

''போய் வா குழந்தாய். தண்டமிழ் வளர்க்கும் தவச் சான்றோர் ஒட்டக்கூத்தர். பெருமானிடம் வணக்கமாக நடந்து கொள். எக்காரணம் கொண்டும் சோழ நாட்டைப் பற்றித் தாழ்வாகப் பேசாதே. அரியணை முதல் அந்தப்புரம் வரை அவர்களுக்குச் செல்வாக்கு உண்டு. நம் நாட்டைப் போல் அல்ல'' என்று சொல்லி அனுப்பினார் அருளானந்தர்.

அபிநய பாணியில் தன்னை வணங்கிய இள நங்கையைக் கண்டு கணக்கெடுத்தார் ஒட்டக் கூத்தர். இவளைப் போல் எத்தனை கலா வல்லிகளைக் கண்டவர்! அந்த அனுபவம் மிகத் துல்லியமாக எடை போட உதவுகிறது.

''அமர்ந்துகொள் மகளே!''

''என்னிடம் கோபம் கொண்ட மனைவியைச் சமாதானப்படுத்த மூன்று முழம் மல்லி வாங்கிட்டுப் போகச் சொன்னியேடா, பாவி!''

''என்ன ஆச்சு? பிறந்த வீடு போயிட்டாளா?''

''ஊகும்! பாப் வெட்டிக்கொண்டு நிக்கறா!''

''அடிகளார் அழைத்த அழைப்பை ஏற்று வந்துள்ளேன்.''

''நான் தண்டமிழ் ஆசான்தான். அனைத்தையும் துறந்த துறவியல்ல'' என்று நகைத்தார் கவிஞர்.

''தவறாக இருந்தால் மன்னித்தருள வேண்டும்.''

''தவறு நேரக்கூடாது என்பதற்காகத்தான் உன்னை அழைத்தேன், மகளே.''

''ஐயா!''

கையை அமர்த்தினார் கவிஞர் பெருமான்.

''உன்னால் அந்தப்புரத்தில் சலசலப்பு ஏற்படுகிறது மகளே!''

''ஐயா, தேவியார் அவனிமுழுதுடையாள் அவர்களைத் தவிர வேறு யாரையும் சந்திக்கவே யில்லை.''

''மாமன்னரை?''

''இல்லவே இல்லை. இந்த ஏழைப் பெண்ணை அவர் சந்திக்க விரும்பவில்லை.''

கலகலவென்று நகைத்தார் கூத்தர் பெருமான்.

''சந்திக்க விரும்பாமலா புத்தராஜன் என்ற பெயரில், உன் அருகில் இரவும் பகலுமாகச் செங்கோல் பிடிக்கும் கரத்தில் சிற்றுளி பிடித்து, உன் சிலாரூபத்தை வடித்துக்கொண்டிருக்கிறான்? அவனி முழுதுடையாள் சொன்னதுபோல் அவன் உள்ளத்தில் நீ பவனி வருகிறாய். ஒரு நாட்டியக்காரப் பெண்ணை அந்தப்புரம் தன்னுள் சேர்க்காது.''

துடித்துப் போனாள் குமுதினி. விருட்டென்று எழுந்துவிட்டாள். ''வருகிறேன் ஐயா. இந்தக் குமுதினி சாதாரண பெண் அல்ல. அவளுக்கென்று வரும் ஒருவன்தான் வேண்டும். வருகிறேன்.''

அவனி முழுதுடையாளின் ரதம் ஒட்டக்கூத்தரின் இல்லத்துக்குப் பின்னால் நிற்பதைக் குமுதினி காணவில்லை. விர்ரென்று புயலாகச் சிற்ப வெளியைத் தேடி ஓடினாள்.

''இங்கே தட்டிப் பார், புத்தராஜா!''

''ஸா...ஷட்ஜமம் பேசுகிறது, சிற்பியாரே!''

''இங்கே பதுமையைத் தட்டு.''

''இங்கேயும் ஷட்ஜமம் பேசுகிறது. ஒரு பதுமைக்குள் ஸப்த ஸ்வர ஜாலங்களைப் புகுத்திவிட்டீர்கள்.''

''உனக்கும் இதைக் கற்றுத் தருகிறேன்.''

ஸப்த ஸ்வரப் படிகள் மேல் அந்த ஸ்வர அற்புதச் சிலை சுமார் மூன்றடி உயரத்தில் வீற்றிருந்தது.

''நான் பெரும் பேறு பெற்றிருக்கிறேன் சிற்பியாரே!''

ஆனால் விர்ரென்று பறந்து வந்த பெரிய கல் ஒன்று புத்தராஜனின் தலைத் துணி மீது உராய்வது போல் பறந்து வந்து, சிலையின் தலையைக் கொய்தது. காளி ரூபத்தில் நின்றாள் குமுதினி.

''குமுதினி, என்ன இதெல்லாம்?'' வீரிட்டான் புத்தராஜன்.

''செங்கோல் ஓச்சும் கரம் சிற்றுளி பிடித்தது எதனால் மன்னா? சிற்பியின் காதல்! ஒரு பெண்ணுக்காகச் சிற்பியாக வேடமிட்டீர்கள்! தாங்களா ராஜகம்பீரன்?'' கத்தினாள் குமுதினி.

''குமுதினி, அமைதியாக இரு. கவிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் உள்ள மென்மை உன்னிடம் இல்லை. காதல் எங்கு வேண்டுமானாலும் தோன்றலாம்.''

''இது காதல் இல்லை. நான்கு பெண்களை மணந்த தாங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள் இல்லையா?''

''என் ராணி அவனி முழுதுடையாள் என்ன சொன்னாள்? அந்தப்புரத்தில் அழகுப் பதுமைகளாகப் பவனிவர ஆயிரமாயிரம் பெண்கள் அணி வகுத்து நிற்பார்கள். ஆனால் என் மனத்தில் பவனி வர, ஆடலரசியே! ஆரணங்கே! என் காதலை நீ சிதைத்துச் சிதை மூட்டிவிட்டாய். அதன் ரணம் என்றும் ஆறாது. நான் என்றும் இராஜ கம்பீரன்தான்.''

''மன்னா?''

''அருளானந்தரே! தாங்கள் புதல்வியுடன் கல்யாணபுரத்துக்குச் செல்லலாம்.''

''இந்த ஸப்த ஸ்வரப் படிகள், ஆலய நிர்மாணம்?''

''காலம் காலமாக இராஜகம்பீரனின் புகழைப் பாடும். ஆனால் அவன் உள்ளமோ? ஓ! சிற்பி தன் இழந்த காதலைப் பாடுவான்.'' ❋

கறுப்பும் வெளுப்பும் ஏன் ?

"வேடிக்கையான ஒரு செய்தி நிகழ்ந்திருக்கிறது, பாருங்கள்! கன்னங்கரிய நஞ்சை உண்கிறவனுக்கு உடம்பில் நீலம் பாரிக்கும் என்பர்; வெண்ணெய் போல் வெளுத்த அமுதம் உண்பவனுக்கு மேனிவெளுக்கும் என்பர். ஆனால், கடலைக் கடைந்த போது நடந்தது என்ன? விஷமும் அமுதமும் ஒரே கடலில்தான் தோன்றின. நஞ்சையுண்டான் மகாதேவன்; மேனி கறுத்தது திருமாலுக்கு! அமுதமுண்டான் திருமால்; திருமேனி முழுக்க வெளுத்தது சங்கரனுக்கு! சிவன் உயர்ந்தவனா, விஷ்ணு உயர்ந்தவனா என்று சச்சரவிடும் மூடர்களே! இது ஏன இப்படி ஆயிற்று, சொல்லுங்கள்'' என்று கேட்கிறார் ஒரு பக்தர்.

சண்டைக்காரர்கள் திகைக்கிறார்கள். அடியவரே இந்தக் கேள்விக்கு விடையளிக்கிறார்: ''அரன் வேறு, அரி வேறு அல்ல, நண்பர்களே! இருவரும் சேர்ந்து ஒருவரே. திருமால் அமுதம் உண்ணக் கண்டு களித்தான் பரமசிவன்; அவன் மேனி முழுவதும் வெளுத்தது. கொடிய ஹலாஹல விஷத்தைச் சிவபெருமான் விழுங்கியதுமே, திருமாலின் நெஞ்சம் கலங்கித் துடித்து வருந்தியது; நஞ்சின் விளைவு, அரியின் மேனியில் ஏற்பட்டது. அவன் கரிய திருமேனியன் ஆனான். எனவே, நான் சொல்வதைக் கேளுங்கள்—'ஹரிஹரா, நாரயண, சிவசங்கரா!' என்று போற்றுங்கள்'' என்கிறார். இப்படிச் சொன்னவர் மகாராஷ்டிர மாநிலத்திய விட்டல பக்தரான நாமதேவர்.

பஜன கரா ரே ஹரிஹரா, நாராயண சிவசங்கரா!
மாஜே போலணே அவதாரா, பேத ந கரா
தோகாஞ்சா!!
தும்ஹாஸி ஸாங்கேன ஸத்ய வ்ருத்தாந்த, பாஹோ
பாங் தேதிஞ்சா த்ருஷ்டாந்த!
நாராயணே ஸேவிலே அம்ருத, ஜாலா ச்வேத
மஹாதேவ!
சம்புனே கிளிலே ஹலாஹல, ம்ஹணுநி விஷ்ணு
ஜரலா நிளா!!

திருநாமம் காக்கிறது

பண்டரபுரத்தில் நாமதேவர் தோற்றுவித்த பாகவத சம்பிரதாயத்தில் சிவ-விஷ்ணு-பேதத்துக்கு இடம் இல்லை. ஆண்டவனுடைய அடியார் அனைவரும் ஒரே குலத்தினர்; இது தொண்டர் குலம்; இறைவனைத் தொழுகிற குலம்; இங்கு எவ்வகையான வேறுபாட்டுக்கும் இடம் இல்லை.

இறைவனின் நாம மகிமையில் பெரிதும் ஈடுபட்டவர் நாமதேவர். 'நாம கீர்த்தனமே பக்திக் கோவிலின் கோபுர வாசல்; இது முழுமதி போல மகிழ்ச்சி தருவது; புண்ணிய தீர்த்தங்கள் அனைத்துக்கும் மேலான தீர்த்தம்; மந்திரங்களுக்குச் சிகரமான மந்திரம்; குறைவற்ற இன்ப இல்லம்; விடுதலைக்குப் பிறந்தகம்; இதை விஞ்சும் ஜப தபம் ஏதுமில்லை' என்பது நாமதேவரின் கொள்கை.

நாம கீர்த்தனத்தினால் நாம் மட்டுமல்ல; தேவனும் களிக்கிறான். தேவனுக்கும் சில சமயம் இல்லாத வல்லமை அவன் திருநாமத்துக்கு உண்டு. எனவே, ''ஆண்டவனே! நீ ஒளிந்து கொண்டு எங்களுக்குத் தரிசனம் தராவிட்டாலும் கவலையே இல்லை. உன் பெயரை நீ எங்கே கொண்டு ஒளிப்பாய்? உன் நாமங்களையே நாங்கள் அல்லும் பகலும் பாடுவோம்'' என்கிறார் நாமதேவர். 'லபலாஸி தரீ நாம கோடே நேஸி? ஆம்ஹீ அஹர்நிசி நாம காவூம்!!'

இறைவன் பெயரை யாரும் போற்றலாம். இதனால் ஐயமும் அச்சமும் துயரமும் நீங்கி, ஆன்மிகப் பேரின்பம் கிடைக்கும்.

கடவுளைக் கண்டவர்

கி. பி. 1270-இல், பண்டரபுரத்தில், தையற்காரர் குலத்தில் உதித்தவர் நாமதேவர். வழிவழியாக விட்டலனிடம் பேரன்பு கொண்ட குலம் அது. எனவே, அறியாக் காலம் முதல், அவரிடம் அன்பு செய்வித்து அவரை ஆட்கொண்டான் பரமன். கோவிலில் கடவுள் நைவேத்தியத்தைப் புசிப்பதாக அவர் கருதியிருந்தார். தந்தை ஒரு நாள் வெளியூர் சென்றிருந்த போது, நாமதேவர் தாமே பூஜை செய்து, விட்டலனுக்கு நைவேத்தியம் அர்ப்பித்தார். அவன் உண்ணாமலிருக்கவே, அழுது

அழுது, அவன் காலில் உயிரை விடுவதாக ஆணையிட்டு, அவனை உண்ணச் செய்தார் பக்தச் சிறுவர். இறைவன் இவரிடம் ஆவலுடன் தானே வந்து போவதுண்டு என்பர்.

பஞ்சாபில் நினைவுக் கோவில்

இத்தகைய பெருமை வாய்ந்த நாமதேவர், கடவுளைக் கண்டும் திருப்தி பெறவில்லை. பதின்மூன்று-பதினான்காம் நூற்றாண்டுகளில், மதவேறுபாடுகள் எங்கும் தலை தூக்கியிருந்தன. அலாவுதீன் கில்ஜி தெற்கே படையெடுத்த காலம் அது. நாட்டினரிடையே ஒற்றுமை இல்லை; சைவ-வைணவ பேதங்கள்; பௌத்த-சமணப் போராட்டம். இத்தகைய தருணத்தில், போக்குவரவு வசதிகளே இல்லாத காலத்தில், மராட்டிய மாநிலத்தில் நாமதேவர் ஒருவரே, பண்டரிபுரத்திலிருந்து ஊரூராக நடந்து, பஞ்சாப் வரையில் யாத்திரைசெய்து, பக்தி நெறியைப் பரப்பினார். பஞ்சாபில் அவர் நெடுங்காலம் தங்கினார். தாய்மொழியான மராட்டியில் ஆயிரக்கணக்கான அபங்கங்களைப் பாடியதோடு நில்லாமல், அவர் ஹிந்தியிலும் பல கீர்த்தனைகளைப் பாடினார். பஞ்சாபில் கோமான் என்ற ஊரில், 'தேஹுரா ஸாஹேப்' என்ற பெயரில் நாமதேவருடைய நினைவுக் கோவில் இன்றும் விளங்குகிறது. பஞ்சாபில் தையற்கார இனத்தவர் பலர் இன்றும் தம்மை நாமதேவரது குலத்தவராகக் கூறிக் கொள்கிறார்கள். நாமதேவர் பாடியுள்ள அறுபத்திரண்டு கீர்த்தனைகள், சீக்கியரின் தெய்விகத் திருமறையான 'குரு க்ரந்த ஸாஹேபி'ல் இடம் பெற்றிருப்பது இவருக்கே உரிய பெருஞ் சிறப்பாகும்.

எங்கும் சிவன்!

பெயரும் உருவமும் வாய்ந்த சகுணப் பிரம்மத்தினிடம் முதலில் பற்றுக் கொண்டிருந்த நாமதேவர், பிறகு நிர்க்குணப் பிரம்மத்தை வழிபடலானார். 1291-இல் அவர் ஆனந்தி என்ற ஊருக்கு வந்தபோது, விஸோபா கேசர் என்ற சித்தரைச் சந்தித்தார். நாகநாதரது கோவிலில், சிவலிங்கத்தின் மீது காலை வைத்துக் கொண்டு, விஸோபா படுத்திருந்தார். இந்த அபசாரத்தைக் கண்டு திடுக்கிட்ட நாமதேவர், அவரை எழுந்திருக்கச் சொன்னார்.

"நான் கிழவன்; கால் துவண்டிருக்கிறது. சிவன் இல்லாத பக்கமாக நீயே என் காலை எடுத்து வை" என்றார் விஸோபா.

நாமதேவர் அவருடைய காலை வேறிடத்தில் நகர்த்த முயன்றபோது, எங்கும் சிவலிங்கங்களே புலப்பட்டன. அன்றையிலிருந்து, "ஆண்டவன் எங்கும் பரந்தவன்" என்ற உண்மையை நாமதேவர் உணர்ந்தார். பக்தியுடன் ஞானமும் கலந்தது. மண்ணிலும், நீரிலும், மரத்திலும், கல்லிலும் எங்கும் கடவுள் கரந்து பரந்திருப்பதை அவர் கண்டார். "விட்டலன் இங்கும் இருக்கிறான்; அங்கும் இருக்கிறான். விட்டலன் இன்றி உலகம் இல்லை. காணும் இடமெங்கும் அவன் வியாபித்திருக்கிறான். ஆகையால், நாமதேவனை அடியேன் அவனை எல்லா இடத்தும் வணங்குகிறேன்" என்று ஒரு கீர்த்தனத்தில் அவர் பாடுகிறார்.

எங்கும் ஆண்டவனைக் காண்பவனுக்கு, அனைத்து உயிரும் சமமே அல்லவா? எனவே, அவர் எல்லாரையுமே பிரம்ம தரிசனத்துக்குக் கூவி அழைக்கிறார்: "அடே தம்பி! உயர்ந்த அரிய மானிடப் பிறவி பெற்றிருக்கிறாய். இதை நல்ல வழியில் பயன்படுத்து. ஏன் இப்படி முட்டாளாக ஏமாறுகிறாய்? அடே குருடனே! சம்சாரமாகிய இந்தக் காட்டில் தீப்பற்றி எரிகிறதே! எதை நம்பி நீ தூங்குகிறாய்? மனம் என்னும் பறவையே! இந்த உலகம் மாய வலை; இதில் சிக்கித் தவித்து நீ துயருற வேண்டாம்."

நாமதேவர் படி

வட நாடு முழுவதும் சுற்றி, பாகவத பக்திச் செல்வத்தை வாரி வழங்கிய நாமதேவருக்கு, எண்பதாவது வயதில், தம் குலதெய்வமான விட்டலனது நினைவு வருகிறது; அவனைக் காணத் துடிக்கிறார்.

"பண்டரிபுரத்தில் வாசம்; சந்திரபாகையில் ஸ்நானம்; விட்டலின் அரிய தரிசனம்—இதுவே பிறவி தோறும் நான் வேண்டுவது. ஸ்ரீஹரி! உதட்டில் உனது நாமஜபம்; கண்ணில் பக்தர்களின் தரிசனம்; 'மக்களிடம் மாதேவன் இருக்கிறான்' என்ற உணர்வு உள்ளத்திலே, இதுவே நான் வேண்டுவது" என்கிறார் நாமதேவர்.

வயது எண்பது முடிந்து விட்டது. உடல் கூளமாயிற்று. விட்டலனின் கோவில் வாசலில் கடைசி மூச்சை விடும் ஆர்வத்துடன் திரும்பி வருகிறார் நாமதேவர். கோவில் நெருங்கியது.

'வேங்கடவா! நின் கோவிலின் வாசல் அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே!' என்று வேண்டினார் குலசேகரப் பெருமாள். இன்றும் திருமால் கோவிலில் கருவறை வாசலில் இருக்கும் படிக்குக் 'குலசேகரன் படி' என்றே பெயர்.

நாமதேவர் சொன்னார்: "கோவிலுக்குப் போய் வருகிற தொண்டர்களின் திருவடிப்பொடி என் மேல் விழும்படி, கடைசிப் படியில் என் உயிர் நீங்க வேண்டும்" என்று இறைவனைக் கேட்டுக் கொண்டார்.

பண்டரபுரத்தில் விட்டலன் கோவில் முன்புள்ள கருங்கற் படியை இன்றைக்கும் 'நாமதேவர் படி' என்றே வழங்குகிறார்கள்.

பாரத நாடெங்கும் ஆன்ம நேய உணர்வை உணர்த்தி, கடவுளன்பில் ஒற்றுமையை விளைவித்த நாமதேவரின் பெரும்புகழ் இன்றும் வாழ்கிறது. ✻



செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம் — அவன்
எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக — மகாகவி பாரதியார்



உயிர்களையும் உலகையும் காத்து
வழிநடத்திச் செல்வது சூரியனின் ஒளி.
வையம் தகளியாகவும், வார்கடலே
நெய்யாகவும், வெய்ய கதிரோன்
விளக்காகவும் உள்ளான் என்பர். பகல்
நேரத்து விளக்கான ஆதவன், ஒளிதந்து
உயிர் காக்கிறான்.

இதுபோன்று இரவு நேரங்களில் உங்கள்
பாதைக்கு ஒளிபாய்ச்சி வழிகாட்டுவது
மில்லர் டைனமோ விளக்கு.

ஒளிவிழாவான தீபாவளித் திருநாளில்
அனைவருக்கும் எங்களது நல்வாழ்த்துகள்.



MILLER®

மில்லர் சே:.ப்டி லாம்ப் செட் - ஒளி தந்து உயிர் காக்கும்

TIM-1521

வங்கப் புலியை அடக்கிய வீர வனிதை

திப்பு சுல்தானுக்கு மைசூர்ப் புலி என்ற சிறப்புப் பெயரும் உண்டு. உயிருள்ள புலிகளையும் அவன் வளர்த்து வந்தான். திப்புவின் நண்பனான வங்காள நவாபு, அனுப்பிய வெள்ளைப் புலியைத் திப்பு மிகவும் கண்காணிப்புடன் வளர்த்து வந்தான். இரவு முழுவதும் மூர்க்கத்தனமாகக் குதித்தது; சங்கிலி அறுபட்டு, அந்தப் புலி தப்பி ஓடி விட்டது. அந்தப் புலியைச் சுட்டுக் கொல்லாமல் பிடிக்க முயற்சி செய்தான் திப்பு.

காரிகிரி மலைச் சரிவில், ராகி வெள்ளாமை செய்து வந்த பசவையா என்ற விவசாயிக்கு, வீராஜி என்ற மகனும் இருபது வயதில் வீரம்மா என்ற பெண்ணும் இருந்தனர். வீரம்மா மிகுந்த தைரியசாலி, வாளிப்பான தேகம் கொண்டவள்.

தகப்பனுக்கு உணவு கொடுத்துவிட்டுத் திரும்பிய வீரம்மாவைத் துரத்தி வந்தது புலி. கால் ஒடிந்த ஆட்டுக் குட்டியைத் தோளில் சுமந்தபடி வந்தவள், புலி ஆக்ரோஷத்துடன் பாய்ந்து வருவதைக் கண்டதும், பாதையில் இருந்த தண்ணீர்ப் பந்தல் கட்டிடத்துக்குள் புகுந்து நாதாங்கியைப் போட்டுக் கொண்டாள். ஆனால் புலி நாதாங்கியைப் பெயர்த்துவிட்டது. தைரியத்தை இழக்காமல், அவள் உள் கதவை இழுத்துப் பிடித்து, தன் கழுத்திலிருந்த கனமான வெள்ளிச் சங்கிலியால் சேர்த்து முடிந்து, புலியைச் சிறைப்படுத்தி விட்டாள்.

டணாய்க்கன் கோட்டைப் பாளையக்காரன், திப்புவின் நண்பன்; பாலராஜா புலியைப் பிடிக்க வந்தவன், வீரம்மாவின் சாகசத்தைக் கண்டு வியந்தான். வீரம்மாவின் மேல் பாலராஜாவுக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் ஏற்பட்டன.

சங்கிலியால் ஆன வலை கொண்டு வந்து புலியைப் பிடித்துப் போய்விட்டார்கள், திப்புவின் ஆட்கள். திப்பு, வீரம்மாவை மெச்சிப் பல்லக்கும் கில்லெட் சேலையும் அளித்து அரண்மனைக்கு அழைத்தான்.

வீரம்மாவைப் பாராட்டி, தன் கழுத்து முத்து மாலையைக் கொடுத்து, தன் ஜனானாவில் தங்கும்படி கூறினான் திப்பு. அதைக் கேட்ட வீரம்மா, பரிசை அவன் முகத்திலேயே வீசி எறிந்து, காமக் கிழத்தியாக வாழ முடியாது என்றும் கூறினாள்.

தன்னை மீறிய கோபம் வந்தாலும், வீரம்மாவின் அழகும் கட்டுடலும் அவனைச் சாந்தப்படுத்தின. 'விட்டுப் பிடிக்கலாம்' என்று அவளை அனுப்பிவிட்டான். திப்புவைப் போலவே, சேனாதிபதி யாசின்கானும், திவான் மீர்சடக்கும், மைத்துனன் அமல்கானும் அவளை அடைய விரும்பினர்.

மறுநாள் திப்பு மங்களூர் புறப்பட்டான்.

திப்புவின் திட்டப்படி யாசின்கான், தன் ஆட்களுடன் வீரம்மாவின் வீட்டுக்குப் போய், அவள் தகப்பனைக் கொன்று, வீரம்மாவைப் பல்லக்கில் ஏற்றி அரண்மனைக்குக் கொண்டு வந்தான். தனக்கு அம்மை போட்டியிருப்பதாகக் கூறியிருந்ததால், வீரம்மாவைத் தனியறையில் வைத்தான்.

இதனை அறிந்த அமல்கான், இரவு நடுச்சாமத்தில், நல்ல குடி போதையில் தனியறையில் புகுந்து வீரம்மாவைக் கடத்திச் செல்ல உள்ளே போனான். மூலையில் மூட்டைபோல் தெரிந்த உடலைத் தொட்டதும், அந்த உருவம் அவன் மேல் பாய்ந்தது. போதையில் நினைவிழந்து விழுந்தான் அமல்கான். அரச உடுப்புக்களை உடுத்துக் கொண்டு, கில்லெட் சேலையால் அவனைப் போர்த்துவிட்டு, அந்த உருவம் வெளியேறியது.

பின் காலைப் போதில் வந்த யாசின்கான், சேலை போர்த்தியிருந்த அமல்கானைப் பல்லக்கில் வைத்துக் கொண்டு புறப்பட்டான். வீரம்மாவே தூங்குகிறாள் என்ற நினைப்பு. பொழுது விடிந்தது. அமல்கான், பல்லக்குள்ளிருந்து வருவதைப் பார்த்துத் திடுக்கிட்டான் யாசின்கான். பல்லக்கில் முதல் நாள் இரவு வீரம்மாவின் சகோதரன், வீராஜிதான் பெண்ணுடையில் வந்தது.

தன்னை ஏமாற்றி விட்டதை அறிந்து யாசின்கான் மிகுந்த கோபம் அடைந்தான். இதற்கிடையில் மீர்சடக், வீரம்மாவைத் தூக்கி வரத் தன் ஆட்களை அனுப்பினான். யாசின்கான், அவளைச் சிறை செய்து மங்களூருக்குப் பல்லக்கில், திப்புவிடம் எடுத்துச் சென்றான்.

போகும் வழியில் குன்றின் சரிவில் ஒரு சத்திரமும், மேலே சாமுண்டீசுவரி கோயிலும் இருந்தன. மீர்சடக்கின் ஆள் இடையில் புகுந்து, வீரம்மாவைக் கடத்திச் செல்ல திட்டம் தீட்டுவதை அறிகிறாள், அந்தச் சத்திரத்து நிர்வாகியின் மனைவி சீதம்மா. இரவு, ஜன்னல் அடிக்கம்பியைப் பெயர்த்து வீரம்மா தப்பியோட உதவி செய்கிறாள். சாமியார் வேஷத்தில் அங்கே வந்த பாலராஜாவின் உதவியால், குன்னம்மா மலையடிவாரத்தில் முகாமிட்டிருந்த நாடோடிக் கும்பல் வேட்டுவ மல்லனிடம் வீரம்மா சேர்ந்து விடுகிறாள். வேட்டுவ மல்லன் மனைவி ஜக்கம்மா, வீரம்மாவை நாடோடிப் பெண்ணைப் போலவே உருமாற்றிவிட்டாள்.

நாடோடிக் கும்பலில் வீரம்மா சேர்ந்திருக்கலாம் என்ற வதந்தி பரவவே, வேட்டுவமல்லன், தன் கூடாரத்தை டணாய்க்கன் கோட்டைப் பக்கம் மாற்றி விட்டான்.

இந்த நிலையில் திப்பு சுல்தான் மதுப்பழக்கத்தை ஒழிக்க, பாளையக்காரன் பாலராஜா தலைமையில் ஒரு படையை நிறுவியிருந்தான். மீர்சடக்கும் யாசின்கானும் குடியர்களாதலால், திப்பு, சீரங்கப்பட்டணத்தில் இல்லாத சமயத்தில் டணாய்க்கன் கோட்டையை இடித்துப் பாளையக்காரன் பாலராஜாவையும் கொல்லப் படையுடன் சென்றனர்.

நாடோடிக் கும்பலில், வீரம்மா வந்திருப்பதை அறிந்து, பாலராஜா அவளைக் காப்பாற்ற முனைந்தான்.

கோட்டையைத் தகர்க்க, சிப்பாய்கள் முனைந்தனர். அனல் கங்குகளை உள்ளிருந்து விட்டெறிந்தனர். தீப்பந்தக் கணைகளால் யாசின்கான் கால்களில் புண் ஏற்பட்டு விடுகிறது. வேட்டுவ மல்லன், வீரம்மா (ஆண் வேஷத்தில்) வுடன் வந்து, யாசின்கான் புண்ணுக்கு மருந்திடுவதுபோல், நஞ்சைக் கலந்து கட்டி விடுகிறான். யாசின்கான் உயிர் துறக்கிறான். இதை அறிந்த சிப்பாய்கள் மல்லனையும் வீரம்மாவையும் பிடித்துக் கட்டி விடுகின்றனர்.

இந்த இடத்துக்குப் பக்கத்திலிருந்த பிள்ளையார் கோயிலிலிருந்து திடீரென்று சந்நியாசி ஒருவர் தோன்றி, சிப்பாய்களைக் கொன்று, இருவரையும் மீட்டு, பிள்ளையார் கோயிலுக்கும் டணாய்க்கன் கோட்டை அரண்மனைக்கும் இடையே உள்ள சுரங்கப் பாதை வழியாக, அழைத்துச் சென்று விடுகிறார். உள்ளே போனதும் சந்நியாசி பாலராஜா என்று தெரிகிறது. வீரம்மாவைப் பாலராஜா மணக்கிறான். வேட்டுவமல்லன், வீரம்மா முன்பு கொடுத்த இரட்டை வடச் சங்கிலியைப் பரிசாகக் கொடுக்கிறான். அடுத்து, இந்தக் கதைக் காட்சிகளை வண்ணத்தில் பார்க்கிறீர்கள்.











காக்கைச் சிறகினிலே...

சு. சமுத்திரம்

வானம், மப்பும் மந்தாரமுமானது; பூமி, ஈரப்பசையானது. காற்று, முழுச் சுற்றில் வீசும் மின் விசிறியின் வேகமானது. சூரியன், மேக விழியை அவ்வப்போது விலக்கிக்கொண்டு கண் சிமிட்டும், ஆகாயத்தின் அந்திம ஒற்றைக் கண்ணாடியாயிற்று. அப்போது..

அந்தக் குடியிருப்புப் பகுதிக்கு முன்னால், கண் கண்ணாய்த் தோன்றிய முள்வேலிக்கு அப்பால், காட்டு வாகை மரத்தின், மலைப்பாம்புக் குட்டி போல் தோன்றிய வேரைப் பார்த்தபடியே, மரக்கிளைகளில் கால் படாத தோரணையில் இருந்த ஏழெட்டுக் காகங்கள், ஒப்பாரி வைப்பதுபோல் கத்தின.

மரத்தையடுத்து இருந்த ஒரு பள்ளிக் கட்டிடத் தாழ்வார விளிம்பிலும், வேலிச் சுவர் மீதும் பத்துப் பதினைந்து காகங்கள், 'கா, கா, கா' என்று கத்தியபடி, எம்பிக் குதித்ததும், தாழப் பறப்பதுமாகி, தாங்காத் துயரத்துடன் தவிப்பது போல் தோன்றின. இறக்கைகளை உடம்பின் இரு பகுதியிலிருந்தும் விடுவித்து, அவற்றை மண் பட விட்டு, அவை மங்கிப் போவதுபோல், கண்ணைச் சாய்த்தும், காலைத் தூக்கியும் படபடத்து, பதைபதைத்துப் பரபரத்தன.

கீழே ஐஸ்கிரீம் வண்டி ஒன்றைப் பார்த்தபடி பால்கனிச் சுவரின் கீழ் நோக்கமாய்ச் சாய்ந்து நின்ற கார்த்தி, சத்தம் கேட்டு நிமிர்ந்தான். காகங்களின் சத்தத்தின் தோற்றுவாய் இடத்தை, கண்ணையே குறியாக்கியவன் போல் பார்த்தான். அந்த வாகை மரத்தின் அடிவாரத்தில், ஏதோ டயர் செருப்பு மாதிரி தெரிந்தது. 'இவ்வளவுதானா?' என்கிற பார்வையை மீண்டும், ஐஸ் வண்டிப் பக்கம் திருப்பப் போனவன், கீழே மாரடிப்பதுபோல் சுழன்று சுழன்று கத்திய இரண்டு காகங்களின் அவலத்தைப் பார்த்துவிட்டு, பார்வையை ஒருமுகப் படுத்திப் பார்த்தான்.

டயர் செருப்பு மாதிரியான உருவம். ஒரு காக்கைக் குஞ்சு என்பதைக் கண்டு, பால்கனிச் சுவரில் எம்பி 'எக்கிப்' பார்த்தான். அவன் அப்பாவின் கைமுஷ்டியை நேர்கோடாய்ச் சாய்த்துப் பெருவிரலை மட்டும் நீட்டினால் எப்படி இருக்குமோ, அப்படிப்பட்ட உருவத்திலான குஞ்சு; கன்னங் கறுப்பானாலும், பொன் கருப்பாய் மின்னிக்கொண்டிருந்தது குஞ்சு. விறகுச் சுள்ளிகள் மாதிரியான அதன் கால்களில், ஒரு சுள்ளி மட்டும், தடம் புரண்டிருப்பது போல் தெரிந்தது. இறக்கைகள் உடம்பின் கீழே வால் முனை வரை வியாபிக்காததால், அதன் பின்புறம் மொக்கையாகத் தோன்றியது. அருகே வந்தபடி, செய்வதறியாது திகைத்துக் குரலெழுப்பிய அந்த இரண்டு காகங்களையும் ஏக்கமாய்ப் பார்த்தபடி, அது 'கா, கா' என்று வாயைத் திறந்து கூக்குரலிட்டது.

அதன் உள்வாய், நெருப்புப் பிழம்பாய், பேரூழிக் காலத்தின் பெரு நெருப்பாய்ச் சுடர்விட்டது. பெரிய காகங்களுக்கு இல்லாத தீ நிறம். அந்தக் குஞ்சை, உள்முகமாய்ப் பற்றி யெரிப்பது போன்ற செந்தீ காட்டிய செந்தோல். ஒரு சமயம் அமர்க்களமாய் இருந்த கூட்டைப் பார்ப்பதுபோல், மரத்தின் உச்சிப் பகுதியையும், பிறகு 'அம்மா, நீ என்ன செய்யப் போகிறாய்?' என்பதுபோல் அருகே புலம்பிய காகங்களில் ஒன்றையும் மாறி மாறிப் பார்த்தான்.

கார்த்தியால், பொறுக்க முடியவில்லை.

மாடிப்படியிறங்கி ஓடினான் அவன், முள் வேலிக்கு அருகே போனபோது வேலிச் சுவர் காகங்களும், கிளைக் காகங்களும் பயங்கரமாய்க் கத்தியபடியே அவன் தலைக்குமேல் வட்டமடித்தன. கீழே சுழன்ற இரண்டு காகங்களும், அவன் முகத்துக்கு எதிராய்க் கோபத்தோடு பறந்து வந்தன. கார்த்தி முகத்தைக் குனிந்தபடி திரும்பியபோது, அவன் தலையைத் தாழ்த்தியபோது, எதிர்த்திசையில் ஒரு காகம் மீண்டும் அவன் தலைக்கு எதிராகப் பறந்து வந்தது. கார்த்தி, கைகளைச் சிலம்பு சுற்றுவதுபோல் சுற்றியபடியே ஓடினான். மாடிப்படியில் ஏறி, பால்கனியில் சிறிது நின்றுவிட்டு வீட்டுக்குள் ஓடினான். அம்மாக்காரியின், சமையல் அறைச் சந்தடி கேட்டது. அந்தச் சத்தத்தைச் சிறிதாக்குவதுபோல் கத்தினான்.

''எம்மா, எம்மா, எம்மாவ்.''

''என்னடா?''

''இங்கே வாங்களேன். வாங்களேன்னா வாங்களேன்.''

''கொஞ்ச நேரம் சும்மா இருக்க மாட்டே?''

''வாங்கம்மா, வந்து பாருங்கம்மா.''

தாய்க்காரி, என்னவோ ஏதோ என்று பதறியடித்து வந்தாள். ஜன்னலருகே அவளை இழுத்துக் கொண்டு போய், ''பாருங்கம்மா'' என்றான்.

''என்னடா கண்ணு?''

''கண்ணு தெரியலயா? அதோ, காக்கா குஞ்சு பாரும்மா.''

''அட கடவுளே! கூட்ல இருந்து குஞ்சு கீழே விழுந்துட்டுது போல. பாவம். பச்சை மண்ணு. எப்படித் துடிக்குது பாரு?''

''எல்லாக் காக்காயையும்விட அந்த ரெண்டு காக்காவும் அதிகமாய்க் கத்துதே; ஏம்மா?''

''அந்தக் குஞ்சைப் பெத்த காகங்களா இருக்கும்.''

''ஒரு காக்காதாம்மா பெறும். அப்போ ரெண்டு காக்கா எப்படிம்மா?''

''நான் தான் ஒன்னப் பெத்தேன். அதே சமயம், ஒனக்கு ஒண்ணுன்னா நான் மட்டுமா துடிக்கறேன்? அப்பாவும் துடிக்கலியா? அப்படித்தான்.''

''சரியா சொல்லுங்கம்மா.''

''சீ, போடா!''

''எது அப்பா காக்கா? எதும்மா அம்மா காக்கா?''

''டேய், எனக்கு அடுப்புல வேல இருக்கு. ஒன் பிலாக்கணத்தை அப்பா கிட்டே வச்சுக்கோ.''

''அந்தக் குஞ்சைப் பாக்கப் பாவமா இருக்குதும்மா.''

''எனக்கும் பாவமாத்தான் இருக்குது. என்ன செய்யுறது?''

''அது பிழைச்சுடுமாம்மா?''

''ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். எத்தனையோ பூனைங்க வருமே.''

''பூனைங்க கொன்னுடுமா?''

''பின்னே விடுமா என்ன?''

''அப்போ மரத்துல தூக்கி வச்சால்?''

''பழையபடியும் பொத்துன்னு விழும். விழாட்டியும் பூனைக்கு மரம் ஏறத் தெரியுமே!''

''அப்போ அதோட கூட்ல கொண்டு விட்டால் பிழைச்சுக்குமா?''

''பிழைச்சுக்கும். ஆனால் அதோ, உச்சாணிக் கொம்புல கூடு இருக்குது, பாரு. இப்போதாவது தெரியுதா? அம்மா அப்பா பேச்சைக் கேட்காத பசங்களும் இப்படித்தான் ஆவாங்க.''

எடுத்துக் கூட்ல வைக்கலாம்மா.''

''எப்படிடா முடியும்? பூனை யாலேயே அந்தக் கிளை ஏற முடியாது. நம்மால எப்படி முடியும்?''

''அப்போ என்னம்மா செய் யுறது?''

''அதோட தலைவிதிப்படி விட்டுட வேண்டியதுதான்.''

''ஹூம். அந்தக் குஞ்சை எப்படி யாவது காப்பாத்தணும்.''

''ஒனக்கு வேற வேல இல்ல? பாடத்தை எடுத்துப் படி. நாளைக்குப் பரீட்சையாச்சே?''

கார்த்தி திடீரென்று வாயை அகல மாக்கினான். மூச்சு நின்று போகும் போல் இருந்தது. அம்மாக்காரி, மகனையே வாயகலப் பார்த்தபோது, கார்த்தி, கூப்பாடு போட்டான்.

''காக்கா குஞ்ச காப்பாத்தணும்'' என்று கரைந்தான். அம்மா, தன் பத்து வயது மகனையே அதிசயித்துப் பார்த்தாள். அந்த நிர்மலமான கருஞ்சிவப்பு முகத்தில், பன்னீர் தெளித்ததுபோல் பரவிய கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றையும் அன்புத் துளிகளாய் அநுமானித்துப் பார்க்கப் பார்க்க, அவளுள் மனிதாபிமானம் சிலிர்த்தெழுந்தது. அதே சமயம், என்ன செய்ய முடியும் என்ற இயல் பான இயலாமை உணர்வுடன் பேசினாள்:

''நாம் என்னடா செய்யமுடியும்?''

''வீட்டுக்கு எடுத்துட்டு வந்து வளர்க்கலாம். ரெக்கை முளைச்சதும் விட்டுடலாம்.''

''சரி, அப்பா வரட்டும், யோசிக்க லாம்.''

''அப்பா எப்போம்மா வருவார்?''

''ராத்திரிதான் வருவார். அதுக் குள்ளே, அந்தக் குஞ்சு சோறு தண்ணி இல்லாமச் செத்துட்டா என்ன பண்ணுவே?''

''சோறு கொடும்மா, போட்டுட்டு வர்றேன்.''

அவள், ஒரு கவளம் சோற்றை எடுத்துப் பையனிடம் நீட்டினாள், அவன், உள்ளங்கையில் ஏந்தியபடி கீழே இறங்கி முள்வேலியை நோக்கி நடந்தான். அப்போது சிறகு முதிராத அந்தச் சின்னக்குஞ்சு தத்தித் தத்திக் குதித்தும், இரண் டடி உயரத்துக்கு விட்டுவிட்டுப் பறந்தும் ஒரு கற்குவியலில் போய் விழுந்து, தடுமாறி எழுந்தது. கூடவே அந்த இரண்டு காகங்களும் போய் அலைமோதின. திடீரென்று மரக் கிளைக் காகங்கள் தெருவோரக் குப்பைத் தொட்டிக்கு மேலே பறந்த படி கத்தின. குப்பைத் தொட் டிக்குள் வாய் விட்டுக்கொண்டிருந்த ஒரு நாயின் முதுகில் கால்கள் படும் படி தாழப் பறந்து வட்டமிட்டன.

கார்த்தி புரிந்துகொண்டான். அது அவனைப் பார்த்து வாலாட்டுகிற நாய்தான். ஆனாலும், அவன் ஒரு கல்லை எடுத்து அதன்மேல் வீசினான். திரும்பிப் பார்த்த நாயை நோக்கி ஓடினான். ஒன்றும் புரியாமல் பார்த்த அந்தச் சிநேகித நாய், அவனை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு, பிறகு, அவனின் ஆவேசத்துக்குப் பயந்து ஓடியது. ஆனாலும் பிரச்னை தீரவில்லை. திடீரென்று காகங்கள் பயங்கரமாகக் கத்தின. கார்த்தி



பூனை வந்துகொண்டிருந்தது. அவன் மீண்டும் ஒரு கல்லை எடுத்தபடி ஓடினான். பம்மிப் பார்த்த பூனை, அவன் இடக்கையை அலட்சியமாகப் பார்த்தது. பிறகு அவன் வலக் கையிலிருக்கும் கல்லுக்குப் பயந்து ஓடியது. கார்த்திக்குப் பயம் போன பாடில்லை. ஒருவேளை குஞ்சு இருப் பதை நாயோ பூனையோ பார்த் திருக்குமோ? நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பி வர லாமோ?

கார்த்தி காவலுக்கு இருந்தான்.

கற்குவியல் இடிபாடுகளுக் கிடையே, கால்கள் சிக்கி, இப்போது கத்தக்கூடத் திராணியற்றுக் கிடந்த குஞ்சைப் பார்த்தான். தாய்க் காகம் எதையோ ஒன்றை எடுத்து அதன் வாய்க்குள் வைத்தது. பிறகு அதைச் சேய்க்குக் கொடுக்கப் பயந்ததுபோல் துள்ளிக் குதித்து விலகி நின்றது. கார்த்தி யோசித்தான். 'அம்மா சொன்னாங்களே, சோறு தண்ணி இல்லாமக் குஞ்சு செத்துடக்கூடாதே? அபபா வரும்வரை உயிரோடு இருக்கணுமே?'

கார்த்தி மெள்ள நடந்து கற் குவியல் அருகே போனான். கையி லிருந்த உணவுக் கவளத்தைக் குனிந்து வைக்கப் போனான். திடீரென்று வீரிட்டுக் கத்தினான். இரண்டு காகங்கள், அவன் தலையைக் காலால் அடித்தன. ஒரு காகம் அவன் கழுத்தைக் கொத்தியது. எஞ்சிய காகங்கள் அவனைச் சரமாரியாய்த் தாக்கின. அவன் அலறினான். சத்தம் கேட்டு அலறியடித்துக் கொண்டு அம்மா வந்தாள். மகனை மார்போடு அணைத்தபடி, காகங்களைக் கோபமாய் நோக்கியபடி, அவனை வீட்டுக்குள் கொண்டு போனாள். காகங்கள் அவளை யும் தாக்கின. எப்படியோ அவற்றி லிருந்து விடுபட்டுக் கதவைப் பின் புறமாய்ப் பூட்டினாள். பிறகு மகனிடம் எரிச்சலோடு பேசினாள்.

''இதுக்குத்தான் பாத்திரம் அறிந்து பிச்சை போடணும் என் கிறது. நான் மட்டும் வராட்டி நீ, காக்கா குஞ்சு மாதிரி ஆயிருப்பே!''

''கதவைத் திறம்மா, இதோ பூனை போகுது.''

''டேய், சும்மா இருக்கியா? உதைக்கணுமா? அப்பா வரட்டும்.''

கார்த்திக்கு ஒரு சந்தேகம்; 'அப்பா வரட்டும்' என்றால் உதைக்கச் சொல்கிறேன் என்ற அர்த்தமா? இல்லே, காக்கா குஞ்சைக் கொண்டு வரலாம் என்ற அர்த்தமா? ஒன்றும் புரியவில்லை. அம்மா, அடுப்பறைப் பக்கம் போனதும், ஜன்னல் பக்கம் வந்தான். கம்பிகளில் சாய்ந்தபடியே வெளியே பார்த்தான்.

இப்போது அந்தக் குஞ்சுத் தாவித் தாவி ஒரு வேப்ப மரத்தின் பக்கம் போயிற்று. ஐய்யோ! அங்கே எறும்பு மொய்க்குமே? நேற்றுக்கூட அவனைக் கடிச்சுதே. அவன் கைகால்களை ஆட்டினான். நல்லவேளையாக அந்தக் குஞ்சு மேலும் மேலும் தாவி ஒரு காருக்கு அடியில் போய்ப் பதுங்கிக் கொண்டது. எல்லாக் காகங்களும் வாகை மரத்திலிருந்து வேப்ப மரத்தில் உட்கார்ந்தன. பெற்ற காகங்கள் மட்டுமே கார் முகட்டில் ஏறி உட்கார்ந்தன.

திடீரென்று கதவு தட்டப்பட்டது. அம்மா கதவைத் திறந்தாள். காலையில் நறுக்குத் தெறித்தாற்போல் மடிப்புக் கலையாத உடையோடு சென்ற அப்பா, கசங்கிய ஆடையோடும் கசங்கிப் போயும் வந்தார். நெற்றிப் பொட்டைத் தடவிவிட்டபடியே மனைவியைக் காபிக்குப் பார்க்க, அவள் பேசப் போகும் முன்பே, கார்த்தி பேசினான்:

"அப்பா, அப்பப்பா."

"என்னடா?"

"தோ காக்கா குஞ்சு அதிக நேரமா தரையில் கிடந்து கஷ்டப்படுதுப்பா. வீட்டுக்கு எடுத்துட்டு வரலாம்பா. வாங்கப்பா!"

கார்த்தி அப்பாவின் சட்டையைப் பிடித்து, அவரைப் பின்புறமாகத் தள்ளினான். அவர் மனைவியைக் குறிப்பாய்ப் பார்த்தார். அவள் விளக்கினாள்: "ஒரு காக்கா குஞ்சு, பாவம் கீழே விழுந்து துடிக்குது. வீட்டுக்குக் கொண்டு வந்து காப்பாத்தணும்னு நினைக்கிறான். ஒரேடியா அடம் பிடிக்கிறான். நீங்க வரட்டும்னு நான் சொன்னேன்."

"ஒனக்கு மூளை இருக்குதா கமலா? குஞ்சை எடுக்க காக்கா விடுமா? அப்படியே எடுத்துட்டு வந்தாலும், அப்புறம் தினமும் அடையாளம் பார்த்துக் கொத்துமே. காக்காகிட்ட அடிப்பட்டால் அப்புறம் வாழ்க்கையில் அடிபடணும்னு பெரியவங்க சொல்றது ஒனக்குத் தெரியாதா? வழியில கிடக்கிற சனியை வீட்டுக்கா கொண்டு வரது?"

"இவன் சொன்னால் கேக்கலயே?"

"அவன்தான் சின்னப் பையன். நீயுமா? மூணு வருஷத்துக்கு முன்னாடி வீட்டுக்குள்ள காக்கா வந்ததே, ஞாபகம் இருக்குதா? அப்போ பட்ட அடி இன்னும் வலிக்குதே. மறந்திட்டயா? ஏற்கனவே எனக்கு ஏழரை நாட்டுச் சனி. இது வேற வம்பா?"

கார்த்திக்கு, அப்பா பேசுவது புரியவில்லை. அதே சமயம் அவர் காக்காக் குஞ்சை எடுத்துவரமாட்டார் என்பது மட்டும் புரிந்தது. அது புரியப் புரிய அவன் கலங்கிப் போனான். அப்பாவையே அகல வாய் திறந்து பார்த்தவன், திடீரென்று குலுங்கிக் குலுங்கி அழுதான். கீழே விழுந்து புரண்டான். அவரோ எதிர்பாராதவிதமாய் மகன் மேல் பாய்ந்தார். படுத்துப் புரண்ட மகனைத் தூக்கி நிமிர்த்தித் தலையைப் பிடித்து ஆட்டினார். கன்னத்தில் இரண்டு போட்டார். தலையில் குட்டினார். குட்டியபடியே கத்தினார்:

"அயோக்கிய ராஸ்கல். நான் ஆபீஸ் தகராறுலே அல்லாடறேன். கோர்ட் வழக்குன்னு திண்டாடறேன். ஒனக்குக் காக்கா குஞ்சு கேட்குதாக்கும்? வாயை மூடடா. மூடடா வாயை. ஏய், மிளகாய் வத்தலை எடுடி."

கார்த்திக்கு அப்பாவின் கோபம் தெரியும். வாயை ஒன்றுக்கி ஆள்காட்டி விரலால் அதைத் தாளிட்டான். அந்தச் சாக்கில் வராந்தாப் பக்கம் வந்து, ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தபடி நின்றான்.

மாலை இரவாகி, இரவு இருளாகியது. எல்லாரும் தூங்கிப் போய் விட்டார்கள். கார்த்தியால் தூங்க முடியவில்லை. ஜன்னலில் எம்பி நின்றபடி வெளியே பார்த்தான். ஒரே இருட்டு. 'பூனை இந்நேரம் குஞ்சைத் தின்னுருக்குமோ? நாய் கவ்வியிருக்குமோ?'

அவன் யோசித்துக் கொண்டிருந்த போது, திடீரென்று காகங்கள் அந்த வாகை மரத்தைவிட்டு உயரப் பறந்து பயங்கரமாய்க் கத்தின. கரு மேகத் தூண்கள் வானில் சிதறி வட்டமிடுவதுபோல் தோன்றின. கல் மேட்டின் பக்கம் இரண்டு கண்கள் மட்டும் வைரக் கற்களாய் மின்னின. கார்த்தி ஜன்னலோரம் இருந்த ஒரு பேப்பர் வெயிட்டை எடுத்துக் கீழே எறிந்தான். ஏதோ ஒன்று ஓடுவது போலிருந்தது. பிறகு படுத்துப் பார்த்தான். தூங்க முடியவில்லை. புரண்டு பார்த்தான். தூக்கம் திரவில்லை. எழுந்து நோக்கினான். எல்லாமே இருள் மயம். எதுவுமே தெரியவில்லை.

காலையில், கார்த்தி கண் சிவக்க எழுந்தான். வெளியே போகப் போனவனை அப்பா குளியலறையிலிருந்தே அதட்டினார். அம்மா வீட்டை உள்புறமாகப் பூட்டினாள். கார்த்தி ஜன்னலோரம் நின்று வெளியே கண்களால் துழாவினான். குஞ்சைக் காணவில்லை. அப்பா அலுவலகம் போவதற்காகக் காத்திருந்தான். அப்பா போனதும், புத்தக மூட்டையைத் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

சரல் மேட்டருகே வந்தான். காகங்களைக் காணோம். குஞ்சையும் காணவில்லை. காருக்கடியில் பார்க்கலாம் என்றால் அந்தக் காரையே காணவில்லை. கறுப்பாகத் தோன்றிய தார்க் குவியலை குஞ்சென்று நினைத்து ஓடினான். ஒரு கறுப்புக் கிழிசலைக் காக்கை உருவமாகப் பார்த்துப் பரபரப்பாய் நடந்தான். ஊகும், குஞ்சைக் காணவில்லை. எப்படியாவது அந்தக் குஞ்சைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு பள்ளிக்குப் போவதில்லை என்பதுபோல் அவன் கால் போன போக்கில் நடந்தான்,

அந்தக் குடியிருப்புப் பகுதியைத் தாண்டி, ஒரு தொழில் நிறுவனக் காலனியைக் கடந்து, ஒரு குறுக்குத் தெருவில் புதர்களைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தான். குஞ்சைக் கண்டுபிடிக்க முடியாதோ என்ற ஏக்கம். எந்த நிலையில் கண்டுபிடிக்கப் போகிறோமோ என்ற கலக்கம். அரை மணி நேரம் அங்குமிங்கும் அலைந்துவிட்டு அதைக் கண்டுபிடிக்க முடியாமல், அவன் மீண்டும் கால் போன போக்கிலே நடந்து கொண்டிருந்தான்,

குறுக்குத் தெரு பிரதானச் சாலையுடன் முடிச்சு போடும் இடத்தில் ஒரு புதருக்குக் கீழே இறக்கைக் குவியல் கிடைத்தன. ஒரே கறுப்பு மயம். அதை ஒட்டியிருந்த காம்பவுண்டுச் சுவரில் ஒரு காகம் ஓல ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது. அங்குமிங்குமாகப் பார்க்காமல் அந்த இறக்கைக் குவியலையே சாய்த்துப் பார்த்தபடி அது உயிரொடுங்கி, உடல் ஒடுங்கி ஓலமிட்டபடி இருந்தது. இறக்கைக் குவியலில் ரத்தக் கறைகள்!

கார்த்தி புரிந்து கொண்டான். ஓலமிட்ட காகத்தையே, இரண்டு நிமிடம் உற்றுப் பார்த்தான். அவனுக்கு அழுகை அழுகையாய் வந்தது.

கார்த்தி, திடீரென்று அந்தக் காகம் போலவே ஓலமிட்டான். முகத்தைக் கைகளால் அடித்துக் கொண்டான். அந்த இறக்கைக் குவியலைப் பார்த்தபடியே தலையில் அடித்துக் கொண்டான். நேற்று அவனைத் தாக்கிய அந்தக் காகம், இப்போது தாக்கவில்லை. திரும்பி நடக்கப் போன அந்தச் சின்னப் பையன், தாய்க் காகத்தின் தாங்க முடியாத ஓல ஒலியில் கட்டுண்டு, அதற்கு ஆறுதல் சொல்வதுபோல், அதன் அருகே போய் நின்றான். ஆள் அரவம் கேட்டவுடனேயே ஆகாயத்துள் பாயும் இனத்தைச் சேர்ந்த அந்தக் காகமோ, தன் சேயின் இறக்கைக் குவியலைப் பார்த்துவிட்டு, அவனைப் பார்த்தது. கத்தாமலும், பறக்காமலும் இருந்த இடத்தில் இருந்தபடியே பார்த்தது, 'என்னையும் கொன்றுவிடு' என்ற பாவனையோடு. ❋



நேற்று நெருஞ்சிப்பூ, இன்று குறிஞ்சிப்பூ!

ராஜேஷ்குமார்

பம்பாய் வி.டி. ஸ்டேஷனின் ஏழாவது பிளாட்பாரம். இரைச்சலோடு உள்ளே வந்து நின்றது ஜனதா எக்ஸ்பிரஸ். சின்னப் பெட்டியோடு இறங்கினேன். பார்வை பிளாட்பாரத்தில் சிதறியிருந்த மனிதக் கும்பலினூடே ஊர்ந்து தியானேசுவரன் வந்திருக்கிறானு என்று அலசியது. காணவில்லை. கடிதம் கிடைத்ததோ இல்லையோ என்ற கவலையோடு நடக்க ஆரம்பித்தேன்.

பம்பாய் வாசனை எனக்குப் புதிது. என்னுடைய இருபத்தேழாவது வயதில் இப்போதுதான் பம்பாயைப் பார்க்கிறேன். கல்யாண் ஸ்டேஷனிலிருந்து ஆரம்பித்த அந்த அசாதாரண கட்டிடங்களும், எல்லாரையும் தொற்றியிருந்த அந்த யந்திரப் பரபரப்பும் என்னைப் பிரமிக்க வைத்தன. போய்க் கொண்டிருந்த மின் வண்டிகளில் கொத்துக் கொத்தாய்க் காய்த்திருந்தார்கள். வந்து நின்ற ரெயில்களிலிருந்து திட்டுத் திட்டாய் இறங்கிப் போனுர்கள். சேலை கட்டின பெண்கள் அபூர்வமாய்க் கண்ணுக்குப் பட்டார்கள். அவர்களும் வெட்கத்தை விட்டிருந்தார்கள். பாதி மார்பும், நாபிச்சுழியும் இலவசக் காட்சியாய்த் தெரிந்தன.

டிக்கெட்டைக் கொடுத்து விட்டு வெளியே வந்தேன். தியானேசுவரனை மறுபடியும் தேடிப் பார்த்தேன்.

ஊஹூம்! பயல் வரவில்லை.

டாக்ஸி நிறுத்தத்தை நோக்கி நடந்தேன். கடந்த முப்பத்தாறு மணி நேரமாய் ரெயிலில் பயணித்த என் உடம்பு, களைத்துப் போயிருந்தது. நெற்றிப் பொட்டின் இரண்டு பக்கத்திலும் தாங்காத தலைவலி.

எதிரில் பாபுலால் தேநீர்க்கடை தெரிந்தது. நான் ஸ்டாலை நோக்கிப் போனேன்.

''க்யா வோனு?''

அழுக்குக் குல்லாயில், தேய்க்காத பல்வரிசையில், கடைச் சிப்பந்தி கேட்டான்.

''ஏக் சாய்!'' அந்த இரண்டு வார்த்தைகளை இந்தியில் சொல்லி விட்டு, இந்தியில் ஏதோ பாண்டித்தியம் பெற்றுவிட்ட பூரிப்போடு, அங்கே நின்றிருந்தவர்களை அமர்த்தலாய்ப் பார்த்தேன். அழுக்குப் படிந்த சிப்பந்தி அவனைவிட அழுக்குப்படிந்த கோப்பையில் தேநீரை நீட்ட, நான் கைப் பெட்டியைக் கீழே வைத்துவிட்டுத் தேநீரை வாங்கி உறிஞ்சினேன்.

தேநீரில் லேசாய்க் கழுநீர் வாசமும், மண்ணெண்ணெய் வாசமும் கமழ்ந்து மூக்கைச் சுளிக்க வைத்தன. இருந்தாலும் விடாப்பிடியாக உறிஞ்சிவிட்டு, 'எவ்வளவு பைசா தரவேண்டும்?' என்பதற்கு இந்தியில் என்ன என்ன வார்த்தைகள் போட வேண்டுமென்று யோசித்தேன்.

''சாலீஷ் பைசா தேவ்.'' கடைக்காரனே என் மொழிப் பிரச்னையைத் தீர்த்து வைக்க, காசைக் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

'பக்'கென்றது அதிர்ந்தேன்!

என் கால்களுக்குப் பக்கத்தில் வைத்திருந்த கைப்பெட்டியைக் காணவில்லை.

உடம்பு பூராவும் வியர்த்தது. பக்கத்தில் நின்றிருந்தவர்களில் யாரிடம் கேட்பது என்று புரியாமல் திணறினேன்.

''மிஸ்டர்!''

குரல் கேட்டுத் திரும்பினேன்.

எனக்குக் கொஞ்சம் தள்ளி அந்தப் பெண் நின்றிருந்தாள். அழகாய் இருந்தாள். அளவான பௌடர் பூச்சில் முகம் பிரகாசமாய்த் தெரிந்தது. நெற்றியில் வைத்திருந்த சாந்து ஜொலித்தது. உதடு சாயத்தில் மினுமினுத்தது. மூக்கிலும் காதுகளிலும் தங்கத் துணுக்குகள் மஞ்சள் பொட்டுகளாய்த் தெரிந்தன. உடம்பு முழுதும் ஒழுங்காய்ச் சுற்றியிருந்த கருநீல நிற ஷிபான் சேலையில் ஆரஞ்சு நிறப் பூக்கள் சிரித்தன. வலக்கையில் டம்பப் பையையும் இடக் கையில் தேநீரையும் தாங்கியிருந்தாள். அவளுடைய கால்களுக்குப் பக்கத்தில் என்னுடைய கைப்பெட்டி இருந்தது.

நான்கே எட்டில் அவள் அருகே வந்தேன்.

''இது என் பெட்டி'' என்று சொல்லிக் கொண்டே எடுத்தேன்.

அவள் புன்னகை செய்தாள். பல் வரிசை சரம் மாதிரி தெரிந்தது.

''நீங்க தமிழா?'' அவள் தமிழில் கேட்க நான் அதிர்ந்தேன்.

''ஆமாம்.

''பம்பாய்க்கு இப்பத்தான் மொத தடவையா வர்றீங்களா?''

''ஆமாம்

''அதான் தெரியலே

''எது?''

''முன் ஜாக்கிரதை. சூட்கேஸை உங்களுக்குப் பின்னுடி வெச்சுட்டுத் தேநீர் குடிக்கறீங்களே? நான் மட்டும் இந்நேரம் பார்க்காம இருந்திருந்தா இந்தப் பெட்டி காணுமப் போயிருக்கும். உங்க பின்னுடி நின்னுட்டிருந்த ஆள் இதையே பார்த்துட்டிருந்தான். அதான் எம்பக்கமா நகர்த்தி வெச்சேன்.''

''ரொம்ப நன்றி.''

''நீங்க சென்னையா?''

''இல்லே, கோயம்புத்தூர்.''

நானும் அவளும் பேசிக் கொண்டிருந்த அதே நேரம் எனக்குப் பின்னுல் அந்தக் குரல் கேட்டது. ''டேய், பரமேஸ்!''

திரும்பினேன்.

தியானேசுவரன் வேகமாய் வந்து கொண்டிருந்தான். இந்த ஒரு வருஷத்தில் தலையின் முன்புறம் கொஞ்சம் வழுக்கையடித்து ஏராளமாய்த் தொப்பையை வளர்த்திருந்தான்.

''மன்னிச்சுக்கோடா. நேரத்துக்குப் புறப்பட்டேன். குர்லா கிட்ட வர்றப்போ ஸ்கூட்டர் மக்கர் பண்ண ஆரம்பிச்சுடுச்சு. சரி பண்ணி எடுத்துக்கிட்டு வர்றேன். ரொம்ப நேரமாச்சா?''

தியானேசுவரன் என் கையைப் பற்றிக்கொண்டு பேசினுலும் அவனுடைய பார்வை அந்தப் பெண்ணின்மேல் பட்டு மீண்டது.

அந்தப் பெண் காசைக் கொடுத்துவிட்டு, டம்பப் பையையும் தோளுக்கு ஏற்றிக்கொண்டு என்னைப் பார்த்தாள். ''உங்க சிநேகிதர் வந்துட்டார் போல் இருக்கு. நான் புறப்படறேன். பம்பாய்க்கு நீங்க எப்போ வந்தாலும்,

கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கப் பழகிக்கீங்க.''

அவள் ஒரு டாக்சியை நோக்கி நகர்ந்தாள். தியானேசுவரன் என் விலாவில் செல்லமாய்க் குத்தினன்.

''யார்ரா அது? கண்ணைச் சுண்டற மாதிரி இருக்கா?''

''தெரியல்லேடா.''

''தெரியாமத்தான் அவகிட்ட இவ்வளவு நேரம் பேசிக்கிட்டிருந்தியாக்கும்?''

''அட பாவி! நிஜம்மாவே எனக்கு அவ யார்னு தெரியாதுடா. இப்பத்தான் அறிமுகமானு. யாரோ எடுத்துட்டுப் போக இருந்த என்னோட பெட்டியைப் பத்திரமா என்கிட்ட குடுத்தா. பரஸ்பரம ஒருத்தரையொருத்தர் விசாரிச்சுட்டுருந்தப்பதான் நீ வந்தே.''

''அவ பேரைக் கேட்டியா?''

''இல்லே.''

''அமர்க்களமாஇருக்கால்லே?''

''நம்ம ஊர்க்காரிதான்.''

பேசிக்கொண்டே தியானேசுவரன் தன் ஸ்கூட்டரை நிறுத்தியிருந்த இடத்துக்குக் கூட்டி வந்தான். விக்டோரியா டெர்மினசுக்கு எதிரே தெரிந்த அகலமான சாலையில் போக்குவரத்து ததும்பி வழிந்தது.

தியானேசுவரன், ''ஆமாம், பம்பாய்க்கு என்ன விஷயமா திடீர்னு புறப்பட்டு வந்திருக்கே?''

சட்டையின் மேல் பையில் இருந்த அந்தச் சின்னப் பழுப்பு நிற உறையை உருவி, அதிலிருந்து சிறு போட்டோவை எடுத்து நீட்டினேன்.

தியானேசுவரன் போட்டோவை உற்றுப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

''போட்டோவில் இருக்கிறவன் யார்ரா?''

''என்னோட தங்கச்சியைக் கட்டிக்கப் போறவன். பம்பாய் நாரிமன் பாயிண்ட்ஸ்ல சூபர் எக்ஸ்போர்ட் கம்பெனியிலே வேலையில் இருக்கானும். கோயம்புத்தூர்லே

நடந்த ஒரு கல்யாண வரவேற்பில என்னோட தங்கையும் இவனும் சந்திச்சிருக்காங்க. ரெண்டு பேருக்குமே காதல் பிறந்துடுச்சு. எங்க வீட்ல அப்பாவும் அம்மாவும் பச்சைக் கொடி காட்டிட்டாங்க. அவங்க வீட்லேயும் ஒத்துக்கிட்டாங்க. வர்ற மாசம் பதினைஞ்சாம் தேதி கல்யாணம். எம் மனசுல மட்டும் ஒரு உறுத்தல். பையன் வேலை செய்யற இடத்துல அவனைப் பத்தி விசாரிச்சா, அவனோட நடத்தையைப் பற்றித் தெரியும்னு.''

''பையன் பேர் என்ன?''

''ஜோயல் பிரேம்சந்த்.''

''கிறிஸ்டியனா?'' தியானேசுவரன் அதிர்வது எனக்கு அதிசயமாகப் பட்டது

''ஆமாம்.''

''உங்க பெற்றோர் இந்தக் கல்யாணத்துக்கு எப்படிச் சம்மதிச்சாங்க?''

நான் மெல்லச் சிரித்தேன்.

''எங்க அப்பா அம்மாவைப் பத்தி உனக்கு மொதல்லேயே சொல்லியிருக்கேண்டா. அவங்க ரெண்டு பேருமே கலப்பு மணம் செஞ்சுக்கிட்டவங்க. அவங்க ரெண்டு பேர் சாதியிலிருந்தும் மாப்பிள்ளைங்க யாரும் வரமாட்டாங்க. அதனால இந்தக் கல்யாண விஷயத்துல எனக்கும் தங்கச்சி மீனாவுக்கும் முழுச் சுதந்தரம் குடுத்திருக்காங்க. அவ இஷ்டப்பட்டு எந்த மாப்பிள்ளையையும் தேர்ந்தெடுத்துக்கலாம். அதேமாதிரி நானும் எனக்குப் புடிச்ச பொண்ணைக் கட்டிக்கலாம்.''

தியானேசுவரன் முகத்தைச் சொறிந்து கொண்டு என்னையே பார்த்தான்.

''அந்த ஜோயல் மேல உனக்கு ஏதாச்சும் சந்தேகமா?''

''லேசாச் சந்தேகம் இருக்கு அந்த ஜோயல், தான் ஒரு டெக்னிகல் சூபர்வைசர்னு எங்கிட்ட சொல்லியிருக்கான். அது உண்மையான்னு பார்க்கணும். அவனோட நடத்தை பற்றியும் தெரியணும். பம்பாய்ல ஒருத்தன் கெட்டுப் போறதுக்கு நிறைய விஷயம் இருக்கு. அவனைப் பத்தி விசாரிக்கத்தான் வந்தேன்.''



''நாரிமன் பாயிண்ட்தானே? சாயந்தரமாப் போய் விசாரிச்சுக்கலாம்.''

''ஏன் மத்தியான்னம் போனா என்னடா?''

ஸ்கூட்டர் புறப்பட்டது. ''பின்னால உட்காருடா. போய்க்கிட்டே சொல்றேன்.''

கூட்டத்தோட கூட்டமாய் ஸ்கூட்டர் பறந்தது.

''இன்னிக்கி மத்தியான்னம் ரெண்டு மணிக்குப் பிலிம் டிவிஷன் சார்பா ஒரு டாகுமெண்டரி பண்ணப் போறோம். 'நாங்கள் ஏன் இதைச் செய்கிறோம்?' என்ற தலைப்புல சிவப்பு விளக்குப் பகுதி பத்தின படம். பம்பாய் க்ராண்ட். ட்ரங்க் சாலைல படப்பிடிப்பு. ரெண்டு மணி நேரத்துல முடிஞ்சுடும். அப்புறமா நாம நாரிமன் பாயிண்ட் வந்து அந்த ஜோயலைப் பத்தி விசாரிக்கலாம்.''

''சரி. அந்தப் படப்பிடிப்பைப் பார்க்க நானும் வரலாமா?''

''வாயேண்டா! காசா பணமா?''

மத்தியான்னம் இரண்டு மணி. படப்பிடிப்பு வண்டியில் தியானேசுவரனோடு போனேன்.

கிரேண்ட் டிரங்க் சாலை அந்த நேரத்துக்கே வெகு சுறுசுறுப்பாய் இருந்தது. சாலையில் வாகனங்கள் இயல்பாய் ஊர்ந்து கொண்டிருக்க, சாலையின் இருபுறமும் இருந்த அழுக்கான வீடுகளில் பெண்கள் வாசல்தோறும் எதிர்பார்ப்போடு காத்திருந்தார்கள்.

''ஏ, மோட்டா வாலா! கிதர் ஆவ்னா. அச்சா மால் சஸ்தா பாவ் மே மிலேகா.'' கீச்சுக் குரலில், பாவாடையும், ஜாக்கெட்டும் அணிந்த அந்தப் பெண் சாலையோரமாய்ப் போன ஒருத்தரைக் கூப்பிட, அருகே நின்றிருந்த மற்றப் பெண்கள் சிரித்தார்கள்.

கிட்டத்தட்ட எல்லா வீட்டின் வாசல்களிலும் பெண்கள்.

அரையும் குறையுமான உடைகளில், கொச்சைத்தனமான பேச்சுக்கள் மலிவாய்க் கொட்டிக் கிடக்க நான் அதிர்ச்சியோடு தியானேசுவரனைப் பார்த்தேன்.

''என்னடா, இது இப்படி?''

அவன் சிரித்தான். ''பொள்ளாச்சிச் சந்தை மாதிரி இதுவும் ஒரு சந்தைதாண்டா. பொள்ளாச்சி சந்தையிலே பேரம் பேசுவாங்க. அங்கே பார்த்தியா? நம்ம ஊர்க் காபிக் கடையில் காபி சாப்பிடப் போறவன் மாதிரி அங்கே ஒருத்தன் எவ்வளவு சகஜமா வீட்டுக்குள்ளே போறான் பாத்தியா?''

நான் அதிர்ச்சியில் உறைந்து போய்ச் சுற்று முற்றும் பார்த்தேன். பெண்களைத் தேடி வருபவர்கள் மிகவும் இயல்பாய்ச் சொந்த வீட்டுக்குள் நுழைவதைப் போல் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். படப் பிடிப்புக் காமிரா அந்தத் தெருவையும், வீட்டின் வாசலில் நின்றிருந்த பெண்களையும் பிலிமில் சுருட்டிக் கொண்டிருந்தது. தியானேசுவரன் சொன்னான்:

''இந்தத் தெருவுல மட்டும் சுமார் பத்தாயிரம் பேர் இந்தத் தொழில்ல ஈடுபட்டிருக்காங்க. அரசாங்கமே இவங்க தொழிலுக்கு அங்கீகாரம் குடுத்திருக்கு.''

தியானேசுவரன் தன் சட்டைப் பையிலிருந்த ஒரு சின்ன டயரியை எடுத்து, பக்கங்களைப் புரட்டி நான்கைந்து விலாசங்களைப் பார்த்தான். அனிதா, அஷ்மா, யோகிதா, சபீதா, கீதா.

''இந்த அஞ்சு பேருமே இந்தத் தொழில்ல இருக்கிறவங்கதான். அவங்களைப் பேட்டி கண்டு, அவங்க அநுபவங்களையும் படத்துல சேர்க்கணும். நான் இப்போ அங்கே போறேன். நீ வர்றியா?''

''வர்றேன்.''

காமிரா வண்டியுடன் நடந்தோம். தெருவே வேடிக்கை பார்த்தது.

''இப்போ நாம பார்க்கப் போறவங்க கொஞ்சம் ஒசத்தி. கார் வந்து வாசல்ல நின்னாத்தான் கதவையே திறப்பாங்க!''

ஐம்பதடி தூரம் வந்ததும் தியானேசுவரன் அந்த வீட்டு முன்பு நின்றான்.

தியானேசுவரன் கதவின் மேல் இருந்த காலிங்பெல்லை அழுத்தினான்.

ஒரு நிமிஷத்துக்கு அப்புறம் கதவு லேசாய்த் திறந்தது.

மிக அதிக ஒப்பனையுடன் அந்தப் பெண் தெரிந்தாள். புருவத்தைச் சுழித்தாள்.

''கோன்?''

''ஹம் பிலிம் டிவிஷன்ஸே ஆயா. ஆப் கே பாஸ் ஏக் இண்டர்வ்யூ கர்னே சாகியே?'' தியானேசுவரன் சொல்ல அந்தப் பெண் புன்னகை செய்தாள்.

''அந்தர் ஆவ்னா, பைட்டியே!''

உள்ளே போனோம்.

சின்ன வீடானாலும் துப்புரவாய் இருந்தது. ஏதோ வாசம் அடித்தது. வண்ண டி.வி. செட்டும் வீடியோ டெக்கும் தெரிந்தன. ஜன்னல்கள் முழுதும் நீலநிறத் துணிகள் சூரிய வெளிச்சத்தை வடி கட்டிக் கொண்டிருந்தன.

''பூச்சோனா.''

அந்தப் பெண் சொல்ல, அவளுக்கு முன்னால் தன் கையிலிருந்த மைக்கை நீட்டினான் தியானேசுவரன். காமிரா ஒரு கோணத்தில் பொருத்தப்பட்டுச் சுழல, கேள்விகளைக் கேட்டான்.

அவள், தான் இந்தத் தொழிலுக்கு வந்த புண்ணிய வரலாற்றைப் புன்னகையோடு சொல்ல ஆரம்பித்தாள். ''ஐ.ஏ.எஸ் படித்துக் கலெக்டர் வேலை பார்த்துச் சம்பாதிப்பதைக் காட்டிலும் பத்து மடங்கு இந்தத் தொழிலில் சம்பாதிக்க முடிகிறது'' என்று சொன்னாள். ''ஒவ்வொருத்தருக்கு மூளை மூலதனம். எனக்கு இந்த உடம்பு மூலதனம். என்னால் ஒருத்தருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்க முடிகிறது என்பதே ஒரு பெரிய விஷயந்தானே?'' என்று கூறி உடம்பு குலுங்கச் சிரித்தாள்.

பதினைந்து நிமிஷ பேட்டிக்குப் பின், ''சுக்ரியா'' என்று கூறி எழுந்து கொண்டான் தியானேசுவரன்.

அடுத்தடுத்துள்ள சில வீடுகளுக்குப் போய் அஷ்மாவையும், சபீதாவையும், யோகிதாவையும் பார்த்துப் பேசினான். அவர்களையும் காமிராவில் அடக்கிக் கொண்டு கடைசியாய் அந்த வீட்டுக்கு வந்தோம்.

வாசலில் பாமரேனியன் நாய், பஞ்சு உருண்டையாய் உருண்டபடி குரைத்தது. பூக்காத தாவரங்கள் மண் தொட்டியில் புஷ்டியாய்த் தெரிந்தன.

கதவைத் திறக்கிற சத்தம் கேட்டது.

நானும் தியானேசுவரனும் பார்வைகளை அங்கே போட்டோம். பத்து வயதுச் சிறுமி வெளிப்பட்டாள்.

''ஆப் கோன்?''

''கீதா கர் மே ஹை க்யா?''

''ஹாங்.''

''புலாவ்.''

சிறுமி உள்ளே போனாள். சில விநாடிகள் கழித்து அந்தப் பெண் வெளியே வந்தாள்.

நானும் தியானேசுவரனும் திடுக்கிட்டோம்.

காலையில் விக்டோரியா டெர்மினஸில், தேநீர்க் கடை அருகே பார்த்த அதே பெண். அதே சேலையில் வந்தாள். என்னைப் பார்த்ததும் சிநேக பாவமாய்ச் சிரித்தாள். ''ஓ நீங்களா?''

''நீங்க இங்கே?'' நான் தடுமாற்றத்துடன் கேட்டேன்.

''இதான் என் வீடு.''

நானும் தியானேசுவரனும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டோம். அவள் காமிராவையும் எங்களையும் மாறி மாறிப் பார்த்தபடி கேட்டாள்:

''என்ன விஷயமா வந்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''மிஸ் கீதா நீங்கதானே?'' தியானேசுவரன் தயக்கமாய்க் கேட்டான்.

''ஆமாம்.''

''கால்கேர்ள் மிஸ் கீதா!''

''நானேதான்!''

நான் அவள் வார்த்தையில் அடிபட்டு அவளை ஏறிட்டேன். அவள் முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமல் தியானேசுவரனைப் பார்த்தாள்.

''நீங்க?''

''எம் பேர் தியானேசுவரன். பிலிம் டிவிஷன் யூனிட்ல இருக்கேன். ஒரு டாக்குமெண்டரி பிலிம் பண்றோம். வாழ்க்கையிலே திசை தவறிப் போன பெண்களைப் பத்தின பிலிம் இது. இந்த வாழ்க்கையைப் படம் பிடித்து மக்களுக்குச் சொல்லப் போறோம்.''

அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

விருந்துக்கு மேல்...

விருந்து...

மற்றுமொரு...

நல் விருந்து.

சேமியா . நூடில்ஸ் . ஸ்பகட்டி . மெக்கரோனி

யுனைடெட் இந்தியா மெக்கரோனி
யுனைடெட் இந்தியா ரோலர் ப்ளவர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் ஒரு பிரிவு
131, திருச்சி ரோடு, திண்டுக்கல்–624 310

வழங்குவோர் TTK

Sista-TTK-1227/84-Tam

''அதுக்காகத்தான் என்னைத் தேடிட்டு வந்தீங்களா?''

சொல்லிவிட்டுச் சிரித்தாள் கீதா.

தியானேசுவரன் அவள் சிரிப்பில் முகம் இருண்டான்: ''தயவு பண்ணி தப்பா எடுத்துக்காதீங்க. நீங்க பிரியப்பட்டா பேட்டி தரலாம். இது ஒண்ணும் கட்டாயமில்லை.''

''கண்டிப்பா பேட்டி தர்றேன்; உள்ளே வாங்க.''

நான் உடம்பு முழுதும் தெறிக்கிற ஊமைக்காய வலியோடு தியானேசுவரனைத் தொடர்ந்தேன். காமராமேனும் உள்ளே வந்தான். வீடு சாதாரணச் சுண்ணும்புப் பூச்சோடு, டி.வி. இல்லாமல் ப்ரிஜ் இல்லாமல், மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்த 'மங்களம்' வீடு மாதிரி இருந்தது.

''உட்காருங்க!''

நாற்காலிகளைக் காட்டினாள் கீதா.

உட்கார்ந்தோம்.

அவளும் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து, காதோரம் வந்து விழுந்த முடிக்கற்றையைக் கோதிக்கொண்டே, ''என்ன கேட்கணுமோ, கேளுங்க!'' என்றாள். தியானேசுவரன் மைக்கை அவள் முன்னே நீட்டினான். காமிரா 'ஹம்' என்ற ஒலியுடன் சுழல ஆரம்பித்தது.

''உங்க பேர்?''

''சீதா.''

''சீதாவா? கீதான்னு சொன்னீங்க?''

''அந்தப் பேர் நானாக வெச்சுக்கிட்ட பேர். அம்மா, அப்பா வெச்ச பேர் சீதா. இந்தத் தொழிலுக்கு வந்ததுமே கீதான்னு பேரை மாத்திக்கிட்டேன். நான் ஒருத்தனுக்குப் பதிவிரதையா வாழ்க்கை நடத்துவேன்னு நினைச்சு என்னைப் பெத்தவங்க தெரியாத்தனமாச் 'சீதா'ன்னு பேரை வெச்சுட்டாங்க. இப்ப நான் பல பேர்க்குப் பதிவிரதையா வாழறதனாலே பேரைக் கீதான்னு மாத்திக்கிட்டேன்.''

''இந்தத் தொழிலுக்கு வரக் காரணம்?''

''நீங்கதான்!''

கீதா சொன்ன பதிலில் எல்லாருமே அதிர்ந்தோம்.

கீதா சிரித்தாள். ''நீங்கன்னு சொன்னதுமே பயந்துட்டீங்களா? நீங்கன்னா உங்க மாதிரி ஆண் வர்க்கம்னு சொல்ல வந்தேன்.''

தியானேசுவரன் நிம்மதியாய்ச் பெருமூச்சு ஒன்றை விட்டான்.

''நீங்க அதிகமா உணர்ச்சி வசப்படறீங்க கீதா! இந்தத் தொழிலுக்கு நீங்க வந்ததுக்குக் காரணமே ஆண் வர்க்கந்தான்னு சொல்றீங்களே, எப்படி?''

''கொஞ்சம் பச்சையாச் சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே, மிஸ்டர் தியானேசுவரன்?''

''இல்லே, சொல்லுங்க!''

''எனக்கு இந்தப் பெண் ஜன்மங்கிற உடம்பைக் கொடுத்ததே அப்பா என்கிற உறவுல ஒரு ஆண். நான் கல்யாண வயசுக்கு வந்ததுமே புருஷன்கிற உறவுக்காக ஒரு ஆணைத் தேட ஆரம்பிச்சாங்க, என்னைப் பெத்தவங்க. என்னைப் பெண் பார்க்க வந்த எல்லா ஆண் மகனோட கழுத்திலேயும் ஒரு விலை அட்டை, நான் பத்தாயிரம், நான் பதினைஞ்சாயிரம், நான் இருபதாயிரம்னு. எங்கப்பாவால அவ்வளவு விலை கொடுத்து ஒரு புருஷனை எனக்காக வாங்க முடியலே. இந்த வருத்தத்திலேயே ரெண்டு பேரும் கொஞ்சம் கொஞ்சமா நெஞ்சுபோய்ச் செத்தாங்க. ஊர்ப் பண்ணையாரும், மணியக்காரரும் தனித்தனியா என்னைச் சந்திச்சு, 'எனக்கு வைப்பாட்டியா இருந்துடு. மாசம் மாசம் நெல்லும் பணமும் தர்றே'ன்னு சொன்னாங்க.''

நான் கீதாவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

முடிக்கற்றையைக் கோதிக் கொண்டே சொன்னாள்: ''பம்பாய் ஆஸ்பத்திரியில நர்ஸ் பயிற்சிக்கு ஆள் எடுக்கிறாங்க. எனக்குத் தெரிஞ்ச டாக்டர் ஒருத்தர் அங்கே இருக்கார். வர்றியா சேர்த்துடறேன்னு என் சொந்தக்காரப் பெரியவர் ஒருத்தர்



என்னைப் பம்பாய்க்குக் கூப்பிட்டப்போ, அதை நிஜம்னு நம்பி அவர் கூடப் புறப்பட்டேன். தாதர் ஸ்டேஷன்ல இறங்கிக் காபி சாப்பிடறப்பவே அந்தக் கிழவன் என்னை ஒருத்தனுக்கு வித்துட்டுப் போயிட்டான். அவனோட குரூரமான சித்திரவதைக்குப் பயந்து ரெண்டு மாசம் வேண்டா வெறுப்பா விபசாரம் செஞ்சேன். மூன்றுவது மாசம் அவன் ஒரு விபத்திலே செத்துட்டான். அவன் செத்ததும் பழைய வாடிக்கையாளர்கள் என்னையே சுத்திச் சுத்தி வர ஆரம்பிச்சாங்க. மாட்டேன்னு சொன்ன, அடிக்கிறாங்க. வலுக்கட்டாயமா என்னோட உடம்பை எடுத்துக்கறாங்க. அடிக்கும் உதைக்கும் பயந்துட்டு தான் இந்தத் தொழிலைப் பண்ணிட்டு வர்றேன். இப்போ சொல்லுங்க, மிஸ்டர் தியானேசுவரன்! நான் இந்தத் தொழிலுக்கு வந்ததுக்குக் காரணம் ஆண் வர்க்கந்தானே?''

''ம்.''

''நான் இந்த தொழிலுக்கு வந்து ஆறு மாசமாச்சு. இதிலே எனக்கு எந்தவிதமான பிடிப்பும் இல்லே. எங்கப்பாவும் எங்கம்மாவும் உயிரோடு இருந்த காலத்துல எந்த ஆண் மகனாவது பணத்தைப் பெரிசா நினைக்காம, என்னோட கழுத்துல தாலியைக் கட்டியிருந்தான்னா, நானும் இன்னைக்கு ஒரு சராசரி மனைவியா, ஒருத்தனுக்கு மட்டும் உண்மையானவளா இருந்திருப்பேன். கல்யாணம் என்கிற அந்தச் சம்பவமே என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு கனவா போயிடுச்சு. இப்போ தினசரி ஒரு தடவை எனக்குக் கல்யாணம் நடந்திட்டிருக்கு.''

''வேற எந்த வேலைக்கும் நீங்க முயற்சி பண்ணலையா?''

''பண்ணினேன். அங்கேயும் ஒரு ஆண்தானே மானேஜர், என்னோட புத்திசாலித்தனத்தைச் சோதிச்சுப் பார்க்கிறதுக்குப் பதிலா உடம்பைச் சோதிச்சுப் பார்க்கத்தான் ஆசைப்படறாங்க. விபசாரம் பண்ணிக்கிட்டு ஆபீஸ்ல வேலை பார்க்கிறதுக்குப் பதிலா முழுநேரம் இதுல ஈடுபடறது என்ன தப்பு?''

''பெண்கள் இந்த நிலைமைக்கு வர்றதுக்குக் காரணம் ஆண்தான்னு சொல்ல வர்றீங்களா? பெண்களுக்கு அதுல பங்கு கிடையாதா?''

''கிடையாது. ஒவ்வொரு பெண்ணோட கண்ணீருக்குப் பின்னாடியும் ஒரு ஆண் சிரிச்சுக்கிட்டிருப்பான். மாதராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்னு ஒரு பாட்டு சொல்லுவாங்க. அதைப் பாடினவங்க இப்போ இருந்தா மாதராய்ப் பிறப்பதற்கே மாபாவம் செய்திருக்க வேண்டும்னு பாடி கண்ணீர் விடுவாங்க. இந்தத் தேசத்துக்கு இன்னொரு காந்தியும், இன்னொரு பாரதியும் பொறந்து வரணும்.''

கீதா ஆவேசமாய்ப் பேசப் பேச நான் அவளையே பிரமிப்பாய்ப் பார்த்தேன்.

கீதாவின் வாயருகே இருந்த மைக்கை விலக்கிக் கொண்டான் தியானேசுவரன். காமிரா தன்னுடைய 'ஹம்' ஒலியை நிறுத்திக் கொண்டது.

''மிக நன்றி, கீதா.''

''படம் என்னிக்கு வெளியே வரும்?''

''எப்படியும் பதினைஞ்சு நாள் ஆயிடும். உங்க பேச்சு பல பேரை உலுக்கப்போவுது.''

''என்னோட பேச்சைக் கேட்டுத் தினத்துக்கு ரெண்டு பேர் திருந்தினா கூடப் போதும். இந்தப் பகுதிக்கு வர்ற பொண்களோட எண்ணிக்கை குறையும்.''

அவள் கண்ணீர் நிரம்பிய விழிகளோடு, தழுதழுத்த குரலில் சொல்ல, மனசில் ஏகமாய்க் கிழிபட்டு எழுந்தேன். வாசலை நோக்கி நடக்கத் தொடங்கிய தியானேசுவரனைத் தொடர்ந்தேன்.

அன்றைக்கு ராத்திரி தூக்கம் வராமல் புரண்டேன்.

தியானேசுவரனின் அறை ஜன்னல் கம்பிகள் வழியே பார்க்கையில் நிலாத் துண்டு மேகங்களுக்கிடையே இழுபட்டுக்கொண்டிருந்தது. காற்று வீசாமல் உறைந்து போயிருந்தது.

''என்னடா தூக்கம் வரலையா?''

தியானேசுவரனின் குரல் கேட்டு திரும்பிப் படுத்தேன். ''என்னமோ வரலை.'' முனகினேன்.

''அந்த ஜோயலைப் பத்தித்தான் நன்னு விசாரிச்சுட்டோமேடா. பையன் சொக்கத் தங்கம். வேலையும் நெசம். தண்ணி விஷயமோ, பொண்ணு விஷயமோ பயல் கிட்டக் கிடையாதுன்னு தெரிஞ்சுக்கிட்டோமேடா.''

''நான் அதைப் பத்தி நினைக்கலே, தியானேசுவரன்!''

''பின்னே?''

''இந்தக் கீதாவைப் பத்தி நினைச்சுட்டிருந்தேன். அவ பேசின ஒவ்வொரு வார்த்தையும் எவ்வளவு நிஜம் புதைஞ்சிருக்குனு கவனிச்சியா? ஒவ்வொரு பெண்ணோட கண்ணீருக்குப் பின்னாடியும் ஒரு ஆண் சிரிச்சுட்டிருப்பான்னு அவ சொன்னது எவ்வளவு உண்மையான வார்த்தை!''

தியானேசுவரன் கொட்டாவி விட்ட வாயோடு சிரித்தான். ''கெட்டுப் போன எவளுமே இப்படித்தாண்டா வேதாந்தமும் தத்துவமும் பேசுவா. ஒவ்வொரு ஆணோட மரணத்துக்குப் பின்னாடியும் ஒரு பெண்ணோட சிரிப்பு இருக்குன்னு ஆங்கிலப்பழமொழி ஒண்ணு இருக்கு. அது உனக்குத் தெரியுமாடா? பேசாமே தூங்குடா. தப்பு செய்யற எவளுமே அந்தத் தப்பை நியாயப் படுத்த எதையாவது சொல்லுவா!''

நான் எழுந்து உட்கார்ந்தேன்.

''என்னால அப்படி நினைக்க முடியலைடா! அவளை..''

''என்ன செய்யப்போறே? அவளுக்குக் கோயில் கட்ட ஏதாவது நிலம் வாங்கப் போறியா? அவளை நினைச்சு ஏண்டா உன்னோட தூக்கத்தைக் கெடுத்துக்கறே? பேசாம தூங்கு. நான் காலையில் எழுந்து சீக்கிரமா வேலைக்குப் போகணும்.''

தியானேசுவரன் திட்டினான். நான் மறுபடியும் படுத்தேன். கீதா மனசின் மையத்துக்கு வந்தாள்.

'என்னையும் எவனாவது பொண்ணு

மதிச்சுக் கழுத்துல தாலியைக் கட்டியிருந்தான்னா நானும் இப்போ ஒரு சராசரி இந்திய மனைவிபோல ஒருத்தனுக்கு மட்டும் உண்மையுள்ளவளாக இருந்திருப்பேன்.'

'இந்தத் தேசத்துக்கு இன்னொரு காந்தியும், இன்னொரு பாரதியும் பிறந்து வரணும்.'

கீதாவின் வார்த்தைகள் சாணை தீட்டிய புதுக் கத்தியின் கூர்மையோடு என் மனசை அறுக்க ஆரம்பித்தன. குப்புறப்படுத்து ஜன்னல் வழியே வானத்தைப் பார்த்தேன்.

அந்த நிலாத்துண்டு இன்னமும் மேகத்துணுக்குகளுக் கிடையே எக்கியிருந்தது.

மறுநாள் மாலை.

ஆபீஸிலிருந்து திரும்பிய தியானேசுவரன் என் தீர்மானத்தைச் சொன்னபோது அதிர்ந்து போனான்.

''என்னடா பேத்தறே? கீதாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா?''

''ஆமாம்.''

''புத்தி பிசகிப் போச்சாடா உனக்கு? அவ நித்திய சுமங்கலி.''

''தெரியும்.''

''நிறைய பேரை அவ தொட்டிருக்கா.''

''அதுவும் தெரியும்.''

நான் புன்னகையோடு பதில் சொல்லச் சொல்ல அவன் எரிச்சல் அடைந்தான். ''கொன்னுடுவேன், ராஸ்கல்! இந்த மாதிரியான தியாகமெல்லாம் சினிமாவில வர்ற கதாநாயகன்தான் பண்ணுவான். சினிமா ரெண்டு மணி நேரத்துல முடிஞ்சுடும். வாழ்க்கை அப்படியில்லே. அவகூட நீ வருஷக் கணக்கா வாழணும்.''

''வாழ்ந்துட்டாப் போவுது.''

''கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவே பண்ணிட்டியா?''

''ஆமாம்.''

''அவ ஒத்துக்குவாளா?''

''ஒத்துக்கிட்டாச்சு.''

''உங்க வீட்ல இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்குவாங்களாடா?''

நான் சிரித்தேன். ''கண்டிப்பா ஒத்துக்குவாங்க. கீதா ஓர் அநாதை ஆசிரமத்துல டீச்சரா இருந்த பொண்ணுன்னு பொய் சொல்லப் போறேன். எந்தப் பொண்ணை வேணுமின்னாலும் தேர்ந்தெடுத்துக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு எங்கப்பா ஏற்கெனவே சொல்லியிருக்கார். கீதாவோட கசப்பான கடந்த கால வாழ்க்கையை மறந்துட்டுப் புதுசா அவளோடு வாழ்க்கையை ஆரம்பிக்கப் போறேன்.''

''நீ சொல்ற காரியம் எம்மனசுக்குச் சரியாப் படலே. இப்போ ஒரு வேகத்துல இந்தக் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டுப் பின்னாடி சங்கடப்படப் போறே.''

''நல்லா யோசிச்சு பார்த்துட்டுத்தான் இந்த முடிவுக்கே வந்தேன். அடுத்த மாசம் என் தங்கை மீனாவுக்குக் கல்யாணம் நடக்கிற தேதியிலேயே என் கல்யாணமும் நடக்கப் போகுது. நீ அவசியம் வர்றே. பத்திரிகை அனுப்பறேன்.''

''அதுவரைக்கும் கீதா பம்பாய்லதான் இருப்பாளா?''

''இல்லே. நாளைக்கு ஜனதாவில நானும் அவளும் ஊருக்குப் புறப்படறோம். டிக்கெட் கூட வாங்கியாச்சு. நாளைக்குக் காலையில ஏழு மணிக்கெல்லாம் ஸ்டேஷனுக்கு வந்துடுவா கீதா.''

தியானேசுவரன் தன் மோவாயைத் தடவிக்கொண்டு யோசித்தான்.

''நீ செய்யப்போற காரியம் சரியான்னு யோசிக்கிறேன்.''

''நூத்துக்கு நூறு சரி. கற்புங்கிற விஷயம் உடம்போடு சம்பந்தப்பட்டதுன்னு நீ நினைக்கிறே. அது மனசோடு சம்பந்தப்பட்டதுன்னு நான் நினைக்கிறேன். இந்த வித்தியாசத்தை நீ புரிஞ்சுகிட்டா நான் செய்யப் போற காரியம் சரின்னு உம் மனசுக்குப் படும்.''

அந்தச் சமயத்தில்—

அறையின் மூலையிலிருந்த டெலிபோன் சிணுங்கியது. தியானேசுவரன் போய் ரிசீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான். சில விநாடிகளுக்குப் பிறகு என்னிடம் நீட்டினான்.

''கீதா பேசறா.''

ரிசீவரை வாங்கி ''ஹலோ'' என்றேன்.

''நீங்க சொன்னது நிஜந்தானே, மிஸ்டர் பரமேசுவரன்?''

நான் சிரித்தேன் மெல்ல. ''நிஜந்தான் கீதா. ஏன் நம்ப மாட்டேங்கிறே?''

''நம்ப முடியலை. நீங்க பேசிட்டுப் போனப்புறமும் ரொம்ப நேரம் பிரமை பிடிச்சு உக்காந்துட்டிருந்தேன். நான் சொல்ற கதையைக் கேட்டு உதட்டளவில பரிதாபப்பட்டு மறுநாளே என்னோட உடம்பைக் கேட்டு வர்றவங்களைத்தான் நான் சந்திச்சுப் பழக்கம். நீங்க அபூர்வமா தெரியறீங்க. பின்னாடி நீங்க வருத்தப் படமாட்டீங்களே?''

''சுத்தமா மாட்டேன்.''

''உங்க வீட்ல உங்கப்பா, உங்கம்மா?''

யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க கீதா. நீ ஏன் இப்படிப் பயப்படறே? காலையில உனக்கு எவ்வளவு நேரம் தைரியம் சொல்லிட்டு வந்தேன்.

''பேசாம நாளைக்குக் காத்தாலே ஏழு மணிக்கு...''

''வி.டி. ஸ்டேஷனுக்கு வந்துடறேன். ஸ்டேஷனுக்கு முன்னாடியே நில்லுங்க. ரெண்டு பேரும் சேர்ந்தே உள்ளே போவோம்.''

''ம்..சரி.''

ரிசீவரைக் கீழே வைத்தேன். தியானேசுவரன் மார்புக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு என்னையே பார்த்தான்.

நான் அவனை மிதப்பாகப் பார்த்துச் சிரித்தேன்.

மறுநாள் காலை ஏழு மணி.

வி.டி. ஸ்டேஷன்.

தியானேசுவரனுடன், நான் கையில் சூட்கேஸையும், கண்ணில் எதிர்பார்ப்பையும் வைத்துக் கொண்டு கீதாவுக்காகக் காத்திருந்தேன்.

''என்னடா வந்துடுவாளா உன்னோட ஆளு..?'' தியானேசுவரன் கேட்டான்.

''நிச்சயமா வந்துடுவா!''

''எத்தனை மணிக்கு ஸ்டேஷன் வர்றேன்னு சொன்னா?''

''சரியா ஏழு மணிக்கு.''

''மணி ஏழு அஞ்சு ஆகுது.''

''வந்திட்டிருப்பா. அப்புறம் தியானேசுவரா, நான் நேத்து ராத்திரி சொன்னதை ஞாபகம் வச்சுக்கடா. மறந்துடாதே!''

''நீ எதைச் சொல்றே?''

''பிலிம்ஸ் டிவிஷனுக்காகக் கீதா கொடுத்த பேட்டியையும், அவ வர்ற அந்தக் காட்சியையும் டைரக்டர் கிட்டே சொல்லி நறுக்கிடு.''

''ஆபீஸ் போனதும் முதல் காரியம் அதுதான்!''

''மறந்துடாதே!''

''மறக்கமாட்டேன்.''

நானும் தியானேசுவரனும் பேசிக் கொண்டிருந்த அதே நேரம் சாலையின் எதிர்ப்புறத்தில் டாக்ஸியிலிருந்து மஞ்சள் நிற ஷிபான் சேலையில் ஒரு சாமந்திப் பூவாய் இறங்கினாள் கீதா.

''டேய், உன்னோட ஆளு சொன்ன மாதிரியே வந்துட்டா! தியானேசுவரன் சொல்ல நான் அவளைப் பார்த்துச் சந்தோஷமாய்க் கையசைத்தேன்.

அவளும் கையை ஆட்டினாள். டாக்ஸிக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டுச் சின்னப் பெட்டியோடு சாலையைக் கடக்க ஆரம்பித்தாள்.

அப்போதுதான் அந்த லாரி ராட்சதத்தனமாய் உறுமிக்கொண்டு வெறி பிடித்த மிருகம் மாதிரி, தலை தெறிக்கிற வேகத்தில் எதிர்ப்புறத்திலிருந்து வந்தது. மகா வேகம்!

''கீதா, லாரி லாரி!''

நான் வீரிட்டேன்.

என் கத்தலில் கீதா முன்னால் ஓட முயன்று முடியாமல் பின்னுக்கு நகர்ந்த விநாடி, லாரி அவள் மேல் மோதியது. கைப்பெட்டி எகிறியது.

''கீதா... கீஈஈதா..!''

நான் மூச்சிரைத்து ஓடிப்போய்க் கீதாவைத் தூக்கியபோது அவள் இதயத் துடிப்பு நின்றிருந்தது. நெற்றிப் பொட்டின் ஆழமான காயத்திலிருந்து ரத்தம் மட்டும் லேசாக வழிந்து கொண்டிருந்தது. ✱

கல்லூரி நாட்களில் திருச்சி புனித ஜோஸப் கல்லூரிக்குத் தினசரி காலையில் சீரங்கம் ஸ்டேஷனுக்கு நடந்துபோய் ஒன்பது மணி 'ஆபீஸர்ஸ் ரெயிலை'ப் பிடித்து டவுன் ஸ்டேஷனில் இறங்கி, அங்கிருந்து ஆண்டார் தெரு அல்லது பட்டர் வொர்த் சாலை வழியாக மண்டபங்களையெல்லாம் தாண்டிப் போய், பத்து மணிக்குள் போய்ச் சேருவதற்குள் தினசரி அவசரந்தான். இருந்தாலும் உற்சாகமாகவே இருந்தது. மஞ்சளாகச் சீஸன் பாஸ் எடுத்துத் திருப்புகழ் பஜனையும் சீட்டாட்டமுமாக, அந்த வண்டியில் சன்னலோரமாக, காலரில் கைக் குட்டையைச் செருகிக் கொண்டு காவேரி வரும்போது எட்டிப் பார்ப்பதெல்லாம் குஷிதான். ஒரு விஷயந்தான் சரிப்பட்டு வரவில்லை. பாட்டி தினப்படி கைச் செலவுக்கு என்று கொடுக்கும் காசு.

நாலணாவுக்கு மேல் கொடுத்தால் பேரன் கெட்டுப் போய் விடுவான் என்று பாட்டிக்குத் தளராத நம்பிக்கை. பெற்றோர்களை விட்டு அவளிடம் வளர்ந்ததால் என்னுடைய நற்பெயருக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் கல்லூரியிலிருந்து தாமதமாக வந்தால் ஊரைக் கூட்டிவிடுவாள். என் நண்பர்களில் யார் படிக்க வருவான், யார் கொக்கோகப் புத்தகங்கள் கொண்டு வருவான் என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரியும். என் புத்திசாலித்தனத்தைப் பற்றி அவளுக்குச் சந்தேகம் இல்லை. இறந்துபோன தாத்தா, (அவள் கணவர்) பி.ஏ. படித்தபோதே எம்.ஏக்குப் பாடம் எடுத்தாராம். இது எந்த வகையிலும் சாத்தியமில்லை என்று சொல்லிப் பார்த்துப் பிரயோசனம் இல்லை.

அவர் புத்திசாலித்தனத்தில் கால் பங்கு எனக்கு இருந்தால் போதும். ஆனால் அம்மா வழித் தாத்தா சினிமா எடுத்துத் தேர்தலுக்கு நின்று சீரழிந்தவர். அவர் சுபாவம் என்னிடம் தலை காட்டாமல் பாதுகாக்கத்தான் கைச் செலவுக்கு நாலணா எல்லை!

நாலணாவுக்கு அந்த நாட்களில் சுமாராக 'வாங்கும் பலம்' இருந்தது என்று சொல்லத்தான் வேண்டும். தெப்பக் குளத்தை ஒட்டி இருந்த 'பெனின்சுலர் கபே'யில் ஒரு சாதா தோசையும் காபியும் கிடைக்கும். அவ்வளவுதான். சாப்பிடும் அயிட்டத்தை மாற்ற முடியாது. இனிப்புப் பட்சணம் எல்லாம் பேச முடியாது. சினிமா போக முடியாது. எட்டு நாளைக்குக் காபி அல்லது தோசை என்று ஒன்றைத் தியாகம் செய்து சேர்த்துவைத்துத்தான் போக முடியும். இது சிரமம். எனவே தக்க சமயங்களில் கல்லூரிக்குச் சென்று தக்க சமயங்களில் திரும்பி வந்து நல்ல பிள்ளையாகவே இருந்தேன். இப்படிப் பட்டவனுக்கு மூன்று ரூபாய் முழுசாய்க் கிடைத்தால் சபலம் ஏற்படும் இல்லையா?

மூன்று ரூபாய்க்கு உரியவள் செவ்ளா என்கிற வேலைக்காரி. அவளுக்கு அப்போது முப்பது வயசுக்குள்தான் இருக்கும். விதவை.

சின்னராசு என்ற அழுக்கு டிராயர் பையனை எப்போதும் உடன் வைத்திருப்பாள். காலை ஐந்து மணிக்கு வருவாள். திண்ணையில் படுத்திருக்கும் என்னைப் பாயோடு தள்ளி வைத்துவிட்டுப் பெருக்குவாள். என்மேல் நீர்த் திவலை படும்படியாகச் 'சளக் சளக்' என்று வாசல் தெளிப்பாள்.

'ரங்கராசு, ரங்கராசு' என்று என்னை இருமுறை கூப்பிட்டுப் பார்ப்பாள். அப்படியும் நான் எழுந்திருக்கவில்லை என்றால் பாயோடு சேர்த்து இழுத்துத் திண்ணையிலிருந்து கவிழ்த்து என்னை எழுப்பிவிடுவாள். நான் வேடர்கள் துரத்துவதுபோல் எல்லாம் கனவு கண்டு இறுதியில் பாழுங்

கிணற்றில் விழுவதற்கு முன் எழுந்திருந்து அவளை, 'மூதேவி முண்டம்' என்றெல்லாம் திட்டுவேன்.

அவள் சிரித்துக் கொண்டு, ''என் ராசா, பள்ளியோடத்துக்கு நேரமாவுதில்லே'' என்று மறு படுக்கையைப் பற்றிச் சிந்திக்க நேரம் தராமல் சுருட்டி விடுவாள். உடனே குளித்தும் ஆக வேண்டும். இல்லையேல் பல் தேய்க்கும்போதே இடுப்பு வேட்டியை உருவிக் கொண்டுபோய் விடுவாள். இவளைப் பற்றிப் பலமுறை புகார் செய்தும் பாட்டி இவளை அதட்டியதில்லை.

அதிகாலைப் புயல். முப்பது நிமிஷத்தில் வாசல் தெளித்து வீடு பெருக்கிப் பற்றுப் பாத்திரம் பாய்லர் தேய்த்து முடித்துவிடுவாள். வாரத்தில் சில தினங்களில் மாவு அரைக்கும் கடைக்குப் போவது போன்ற உபரி வேலைகள் எல்லாம சேர்த்துச் சம்பளம் மூன்று ரூபாய்.

இந்த மூன்று ரூபாயைத் தான் நான் ஒருமுறை திருடினேன்.

தற்செயலாகத்தான் நிகழ்ந்தது. கல்லூரியில்லாத ஒரு நாள் லாலி ஹாலில் வழக்கம் போல் நண்பர்களுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தபோது, குல்ஸா என்கிற ரங்கநாதன் ''ஏய், நீ அவ்வளவு பணக்காரனடா?'' என்று கேட்டது எனக்குப் புரியவில்லை.

''பார்டா, புஸ்தகத்தில் என்ன அலட்சியமா ரூபாயைச் சொருகி வெச்சிருக்கான்?''

பார்த்தபோது எனக்குத் திக்கென்றது. 'ஜூலியஸ் சீஸர்' புத்தகத்தில் மூன்று ஒரு ரூபாய் நோட்டுக்கள் செருகியிருந்தன.

''வேண்டாம்னு குடுத்துடுப்பா, கெயிட்டில மாட்னி போய்க்கறேன்.''

என் மனத்தில் எண்ணங்கள் ஓடின. எப்படி இந்த ரூபாய் என் புத்தகத்துக்குள் வந்திருக்க முடியும்? யோசித்ததில் புரிந்தது. இந்தச் செவளா கிறுக்கு. சம்பளப் பணத்தை வேலை செய்யும் போது பத்திரமாக இருக்கட்டும் என்று அலமாரியில் என் புத்தகத்தில் செருகியிருக்கிறாள். நான் கவனியாமல் எடுத்து வந்துவிட்டேன். 'டேய், இந்தப் பணம் என்னுது இல்லேடா. எங்க வீட்டு வேலைக்காரி சம்பளப் பணம்' என்று சொல்வதற்குப் பதிலாக, ''வாடா, ஐ.ஸி.எச் போகலாம்'' என்றேன்.

''ஏதுடா பணம்?''

''அதெல்லாம் கேக்காதே. வரயா இல்லையா?''

ஐ.ஸி.எச் என்பது விசிறித் தலைப்பாகை வைத்துக்கொண்டு வெயிட்டர்கள் பீங்கான் கோப்பைகளில் காபி கொண்டுவரும் 'ஒஸ்தி' ஓட்டல். டிப் எல்லாம் வைக்க வேண்டி வரும். கப் காபியே நாலணா, அங்கே போய் நான், குல்ஸா, பாபு மூவரும் காபி சாப்பிட்டோம். ஸ்பென்ஸர் பக்கமாகப் பெட்டிக் கடை இருக்குமே, அங்கே போய் 'ப்ளேயர்ஸ்' சிகரெட் பிடித்தோம். 'பருவ மங்கை' என்ற புத்தகத்தை எட்டணாவுக்கு வாங்கினேன். கெயிட்டியில் ராஜ்கபூர் ஆவாராப் படம் இரண்டாவது தடவை பார்த்தோம். இருட்டில் இன்னொரு சிகரெட் பிடித்தோம். குல்ஸா மட்டன் கட்லெட் சாப்பிடலாம் என்றான். நான்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். ஒரு நாளைக்கு இத்தனை பாவங்கள் போதும் என்று தோன்றியது. மூன்று ரூபாயில் ஆறு மணி வண்டியில் திரும்பும் போது இரண்டணாதான் பாக்கியிருந்தது. அதையும உப்புக் கடலை வாங்கித் தீர்த்துவிட்டான் பாபு. வீடு திரும்பும் போது வயிற்றுக்குள் கடபுடா.

தேர்முட்டி திரும்பியதுமே பாட்டி வீட்டு வாசலில் தெரிந்தாள். கண்ணைச் சுருக்கிக்கொண்டு நான் வருகிறேனா என்று பார்த்துக் கொண்டிருந்தாள். அருகில் செவளாவும் காவேரி மாமியும் நின்றார்கள். அருகில் வந்ததும் காவேரி மாமியும, செவளாவும் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். அதாவது, நானே, பணத்தைக் கொண்டுபோய்ப் 'புஸ்தகத்தில் செருகி வைத்து விட்டாயே? இந்தா' என்று நிச்சயமாகத் திருப்பிக் கொடுத்து விடுவேன் என்கிற எதிர்பார்ப்பில் சிரிக்கிறார்கள். நானா? முகத்தை ரொம்ப ஒன்றுமறியாதவனாக வைத்துக்கொண்டு, ''ப்ராக்ட்டிகல் இருந்ததா? அஞ்சு மணி வண்டியை விட்டுட்டேன். அதான் தாமதம் பாட்டி!'' என்றேன்.

''தாமதமானது கிடக்கிறது. இவ பணம் என்ன ஆச்சு சொல்லு?''

''என்ன பணம்?''

''சம்பளப் பணம்டா! செவளா உன் பொஸ்தகத்தில் செருகியிருந்தாளாம்.''

''என்ன? என் பொஸ்தகத்திலயா?'' என் புத்தகங்களை எடுத்து நிதானமாகப் புரட்டிப் பார்த்தேன்.

''இல்லையே?''

''இஸ்கோலுக்குப் போவையில பாக்கலையா ராசா?'' என்றாள் செவளா கலவரமாக.

''இல்லையே!''

''போக்கணங்கெட்டவளே, புஸ்தகத்தில கொண்டு செருகுவாளோ? எங்க விழுந்ததோ?''

''என்ன பாட்டி? என்ன சொல்றா இவ! எனக்குப் புரியவே இல்லையே.''

''ராசா, என் விதி. காலையிலே அச்சாபீஸ் ஓட்ல சம்பளம் வாங்கினேனா? நம்ம வீட்லே செய்துக்கிட்டு இருக்கையிலே பத்திரமா இருக்கட்டும்னுட்டு அலமாரில பொஸ்தகத்தல செருகி வெச்சுட்டேன். அதைப் பாக்காம அப்படியே எடுத்துட்டுப் போயிருக்கே நீ? எங்க விழுந்திச்சோ?'' எப்படித் தேடுவேன்?''

''நான் பாக்கலையே செவளா! பாத்திருந்தா எடுத்துக் கொடுத்திருப்பேனே. எத்தனை ரூபா?''

''மூணு ரூபாடா ராசா! என் தலையெழுத்து. ரேசன் அரிசியும் புள்ளைக்குக் கால்சராயும் எடுக்கலாமுனுட்டு.. இந்த முறையும் இல்லையா? என் விதி'' என்று அழத் துவங்கியவளை என்னால் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை.

''பணம் போயிருச்சு. கொலுசை வெச்சுத்தான் கடன வாங்கணும்.''

''இத பாரு செவளா, எம பேரன் இருக்கானே, அதுக்குத் திரிசமன் எல்லாம் தெரியாது. பணத்தைப் பாத்திருந்தா நிச்சயம் கொடுத்திருப்பான். நீதான் எங்கயோ கவனம் இல்லாமப் போட்டிருக்கே!''

''ஐயோ! நம்ம ராசாவை எடுத்ததா சொல்லலாமா? என்னா வம்சம் இது! எடுக்குங்களா? என் ரங்கராசாவை எனக்குத் தெரியாதா? என் தலைவிதி'' என்று மூலையில் உட்கார்ந்து அவள் அழுதது தீட்டின ஈட்டியை என் உள்ளத்தில் பாய்ச்சியதுபோல இருந்தது.

'சே! என்ன காரியம் செய்துவிட்டோம். மூணு ரூபாயை மூணு மணி நேரத்தில் வேட்டு விட்டு என்ன சாதித்துவிட்டோம்? மாசம் முழுக்க முழுக்க ஓடியாடி உழைத்துச் சம்பாதித்த பணம்.. கொல்லைப் பக்கம் முகம் கழுவிக்கொண்டிருந்த போது பாட்டியிடம் போய், 'பாட்டி, நான்தான் எடுத்தேன். செலவழித்து விட்டேன்'' என்று உடனே ஒப்புக் கொள்ளும் தைரியம் வரவில்லை. பாட்டி அடித்திருக்க மாட்டாள். திட்டியிருப்பாள். திட்டட்டுமே என்ன போச்சு? ஏன் அந்தத் தைரியம் வரவில்லை?

இது நிகழ்ந்து முப்பது வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. என் வாழ்வில் பல கட்டங்களில் அந்த மறுவைப் பற்றி யோசித்ததுண்டு. செவளா என்ன ஆனாள் என்று தெரியாது. அவளைத் தேடிப் போய் மூன்று ரூபாயைத் திருப்பிக் கொடுக்கலாமா என்று யோசித்ததுண்டு, ஆடிட்டர் நண்பனிடம் ஒருமுறை கேட்டதற்குச் சுமாரான வட்டி வீதத்தில் கூட அவளுக்கு 1044 ரூபாய் தரவேண்டும் என்றான். ஆயிரம் ரூபாய் பெரிது அல்ல. நான் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளவேண்டும். அதற்குரிய தைரியம் பாபநாசத்தில் ஒரு மே மாதம் பாட்டி செத்துப் போவதற்கு முன்தான் வந்தது. அத்தனை வருஷங்களாயின. படுத்த படுக்கையாக என்னைக் கண்கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தவளை, ''பாட்டி ஞாபகம் இருக்கா உனக்கு? நான் காலேஜ்ல படிக்கறப்ப செவளான்னு வேலைக்காரி இருந்தாளோ?'' என்று கேட்டு நிறுத்தினேன்.

''ஏன் ஞாபகம் இல்லாம? அவகூட ஒரு தடவை உம் புஸ்தகத்தில் ரூபாய் நோட்டை. வெச்சுட்டு அதை நீ தொலைச்சுட்டயே?''

''பாட்டி, ரொம்ப நாளா உங்கிட்ட சொல்லணும்னு இருந்தேன். அன்னிக்கு அதை நான் தொலைக்கலே. வேணும்னுட்டே திருடிச் செலவழிச்சுட்டேன், பாட்டி'' என்றேன்.

''எனக்குத் தெரியுமே!'' என்றாள் பாட்டி. ❋

மாவடு மணிகண்டன்

கோமதி ஸ்வாமிநாதன்

எழுத்தாளர் பஞ்சாமிர்தம், தம் முழுக் கவனத்தையும் ஒரு சிறுகதையை எழுதி முடிப்பதில் ஈடுபடுத்தியிருந்தார். அவருடைய கதாநாயகன் மேற்கு மாம்பலத்திலுள்ள அயோத்தியா கல்யாண மண்டபத்தின்முன் நின்று கொண்டிருந்தான். அவனை மாம்பலம் ரெயில் நிலையத்துக்கு அனுப்பலாமா அல்லது அங்கேயே வந்து நிற்கும் பல்லவன் பேருந்துவில் ஏற்றிவிடலாமா என்ற பிரச்னையில் ஒரு கணம் லயித்து, பேனாவைக் கீழே வைத்தபோதுதான் டெலிபோன் மணி அடித்தது. போய் எடுத்தார்.

''ஹலோ!''

''மாவடு மணிகண்டன் ஸார் இருக்கிறாரா?'' மறுமுனைக் குரல் கேட்டது.

''உங்களுக்கு என்ன நம்பர் வேண்டும்?''

''ஒன்பது நாலு, ஒன்பது நாலு, ஒன்பது நாலு.''

''நம்பரைச் சரியாத்தான் சொல்றீங்க. ஆனால் மாவடு, மாம்பழம் வகையெல்லாம் இங்கே இல்லை.''

''நீங்க யாரு?''

''நானா? இந்தத் தொண்ணூற்று நாலு, தொண்ணூற்று நாலு, தொண்ணூற்று நாலு நம்பர் உள்ள டெலிபோனுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை முந்நூறு நானூறு பில் கட்டித் தொலைக்கிறவன்.''

பஞ்சாமிர்தம் கோபத்தை டெலிபோன் ரிசீவர் மீது காண்பித்து, 'டங்' என்று வைத்துவிட்டு, தம் சிறுகதை நாயகனிடம் வந்தார். அவனை மாம்பலம் ரெயில் நிலையத்துக்கு அனுப்பி வைத்தார்.

மீண்டும் தொலைபேசி கிணுகிணுத்தது.

''ஹலோ!''

''தொண்ணூற்று நாலு, தொண்ணூற்று நாலு, தொண்ணூற்று நாலுதானே?''

''ஆமாம்! யாரு வேணும்?''

''கொஞ்சம் மாவடு மணிகண்டன் சாரைப் பேசச் சொல்லுங்க!''

''யாரு அந்த மாவடு மணிகண்டன்?''

''மேடவாக்கம் சக்தி விநாயகர் தெருதானே அது?''

''ஆமா!''

''அப்படீன்னா அவர் அங்கேதான் இருக்கார்.''

''இந்தத் தெரு ரொம்ப நீளம்.''

''இல்லே சார். 'கொஞ்சும் குரல்கள்' படத்திலே நடித்திருக்கிறாரே! புகழ்பெற்ற நடிகர் சார் அவர்.''

''மாவடு கீவடுன்னு இங்கே யாரும் இல்லே! எங்க வீட்டு ஊறுகாய் ஜாடியிலே கூட மாவடு கிடையாது. ஏன்? எலுமிச்சங்காய் ஊறுகாய்கூட இல்லை.''

''மாவடு சார் இந்த எண்ணைத்தான் கொடுத்திருக்கிறார்.''

''அவரைப் பார்த்தீங்கன்னா கொத்தவால் சாவடி நம்பர் எதையாவது கேட்டு வாங்கிக்குங்க! அங்கேதான் மாவடு எந்த நேரத்திலும் கிடைக்கும். போனைக் கீழே வையுங்க.''

பஞ்சாமிர்தம் மீண்டும் தம் கதாநாயகனிடம் வந்தார். அவனை ஏற்கனவே ரெயில் நிலையத்துக்கு அனுப்பியதை மறந்து பல்லவன் பேருந்துவில் ஏற்றிவிட்டார். அந்தப் பேருந்து இரண்டு ஸ்டாப்புகளைக் கூடத் தாண்டியிருக்காது. அவருக்கு நினைவு வந்துவிட்டது. கதாநாயகனை இறக்கிவிடுவதற்காக முன்பு எழுதிய காகிதங்களைக் கிழித்தார்.

மீண்டும் தொலை பேசி ஒலித்தது. பஞ்சாமிர்தத்தின் மனைவி பெரிய நாயகி அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்தாள்.

''இந்தா! யார் கூப்பிடுகிறார்கள், பார்!'' என்பதைக் கேட்கும் வகையில் மனைவியைப் பார்த்துக் கையால் சைகை காட்டினார். அம்மையார் தொலைபேசி ரிசீவரைத் தூக்கிப் பேசினாள்.

''யாரோ பண்டாரம் ஃபிலிம்ஸாம்! நீங்களே பேசிக்குங்க! எனக்குச் சரியாப் புரியலே'' என்று சொன்ன அம்மையார் ரிசீவரைப் பக்கத்தில் வைத்துவிட்டு நகர்ந்தாள்.

''பண்டாரம் ஆவதற்குத்தான் பல பேர் ஃபிலிம் கம்பெனி ஆரம்பிப்பார்கள். அப்படி ஆனபிறகு இவர்களுக்குப் போர்டு மாட்ட எங்கே இடம் கிடைக்கும்? பாண்டுரங்கா ஃபிலிம்ஸாக இருக்கும்!'' என்று தமக்குத்தாமே இரைந்து பேசியபடி எழுந்திருந்தார்.

வாசற்படியைத் தாண்டிய பெரிய நாயகி திரும்பிவந்து, ''பாண்டுரங்கனோ நாதசுர ரங்கனோ?'' டெலிபோன் குழாய் வழியாக ஊதுவதை நீங்களே ரசித்துக் கேளுங்களேன்'' என்றாள்.

''நானே பேசிக்கிறேன். பாண்டுரங்கா ஃபிலிம்ஸாகத்தான் இருக்கும். அங்கேதான் எனக்குத் தெரிந்த குருராஜன் ஏதோ எடுபிடி வேலை செய்யறான். அவன் என் நாவல் எதையாவது படித்துவிட்டு 'ஆஹா ஓஹோ'ன்னு தயாரிப்பாளர் கிட்டே சொல்லியிருப்பான்.''

பேசிக்கொண்டே போய்ப் பஞ்சாமிர்தம் தொலைபேசி ரிசீவரை எடுத்தார்.

''ஹலோ! பஞ்சாமிர்தம் பேசறேன்.''

''பஞ்சாப் நேஷனல் பாங்கா?''

''சாரி! ராங் கனெக்ஷன். பஞ்சாமிர்தம் சார்! எழுத்தாளர் பஞ்சாமிர்தம்.''

''தொண்ணூத்தி நாலு, தொண்ணூத்தி நாலு, தொண்ணூத்தி நாலா?''

''ஆமாம் சார்! அதுவேதான்! சொல்லுங்கோ.''

''மாவடு மணிகண்டன் சார் இருக்காரா?''

''இது பஞ்சாப் நேஷனல் பாங்க்! பாட்டியாலா பாங்க்! ஜலந்கர் பாங்க்! கீழே வை ஐயா போனை!''

படுகோபத்துடன் தாம் எழுதும் மேஜைக்குத் திரும்பிய பஞ்சாமிர்தம் படு ஆத்திரத்துடன் தன் கதாநாயகனைத் துரத்த ஆரம்பித்தார். அவனும் மின்சார ரெயிலில் ஏறி எழும்பூர் ரெயில் நிலையத்தில் வந்திறங்கி அப்புறம் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தான்.

வாசல் பக்கம் போன பெரிய நாயகி சாவகாசமாகத் திரும்பி வந்து, ''என்னவோ 'பாண்டுரங்க விட்டலா! பாண்டுரங்க விட்டலா!' என்று பஜனை பண்ணிக் கொண்டே போனை எடுத்தீர்களே. கடைசியிலே பஞ்சாப்கோஷம் போட்டுக் கொண்டு திரும்பினீர்களே? என்ன கூத்து?'' என்று விசாரித்தாள்.

''வயித்தெரிச்சல்! நம் வீட்டு போனுக்குப் பிசாசு பிடித்து விட்டது. அது திரும்பத் திரும்ப என்னை பயமுறுத்துகிறது. யாரோ மாவடு மணிகண்டனும்..''

''அவன் எதுக்கு உங்களைப் பயமுறுத்துகிறான்? அவனிடம் நீங்கள் எதற்காவது வம்பு தும்புக்குப் போனீர்களோ? உங்களுக்கு ஏதாவது தொல்லையை விலை கொடுத்து வாங்குவதே தொழிலாகப் போயிடுத்து. இப்படித்தான் வண்ணாரப் பேட்டைக் கைலாசத்தை வைத்துக் கதை எழுதப் போக..'' வாய்ப்புக்குக் காத்திருந்த பேச்சாளர் போல ஆரம்பித்தாள் பெரிய நாயகி.

''ஐயோ. நிறுத்து, உன் பழைய கதையை! எனக்கு இந்த மணிகண்டன் யாருன்னே தெரியாது. அவனுக்காக இந்த வீட்டுப் போனில் விடாமல் கூப்பாடுகள் வருகின்றன.''

''ஆனால் ஆசாமிதான் யார்னு தெரியலே. அப்படித்தானே! அதோ உங்க பிள்ளை ராஜு வரான். அவனுக்கு ஏதாவது இந்தப் போன் பிசாசு பற்றித் தெரியுமான்னு கேளுங்கள்'' என்று முத்தாய்ப்பு வைத்தாள் பெரியநாயகி.

பஞ்சாமிர்தம் சற்று நேரம் தம் கதாநாயகனை நடுத்தெருவில் நிறுத்தி விட்டு மணிகண்டன் விவகாரத்தை விளக்கமாகச் சொன்னார்.

''ஆமா அப்பா! நேற்றுக்கூட இரண்டு தடவை மணிகண்டன் என்கிற ஆசாமியை இந்த நம்பரில் கூப்பிட்டார்கள். 'அவர் இங்கே இல்லை'ன்னு சொல்லிப் பேச்சை முடிச்சுட்டேன். நேத்தே நான் ஒரு பாய்ச்சல் பாய்ந்திருந்தால் தேவலை என்று தோன்றுகிறது.''

பஞ்சாமிர்தம் குறுக்கிட்டார்! ''அது சரி! மாவடு, கிடாரங்காய், என்று என்னவோ சேர்த்துச் சொல்லுகிறீங்களே? அது என்ன ஊர்ப் பெயரா? மாவடுன்னு ஊர் இருக்கா? ஏதோ சினிமாவிலே நடித்த ஆசாமி என்று வேறு சொன்னீர்களே!''

''அப்பா! ஞாபகம் வறது. ஒரே ஒரு திரைப்படத்திலே சம்சாரத்தின் மசக்கை ஆசையைத் தீர்க்க மாவடு வாங்க அலையும் கணவன் வேஷத்தில் நடித்த ஆசாமி. வெறும் மணிகண்டன் என்பதற்குப் பதிலாக மாவடு மணிகண்டன் என்று கூப்பிடும்படி தம் சிநேகிதர்களையெல்லாம் வேண்டிக் கொண்டாராம். ஒரு சினிமாப் பத்திரிகை ஓரத்தில் இந்தத் துணுக்கு வந்திருந்தது. அந்த ஆசாமியாகத்தான் இருக்கும்.''

''மாவடு இல்லே! மல்கோவா மாம்பழம்னே பேரோடு இணைச்சுக் கட்டும். எப்படியோ தொலையட்டும்! ஆனாக்க இந்த மாமரம் நம்ப வீட்டு டெலிபோனுக்குள்ளே ஏன் நுழைஞ்சுக்கணும்? தெரியலியே! நீ உடனே டெலிபோன் இலாக்காவுக்குப் புகார் அனுப்பு!'' பஞ்சாமிர்தம் தம் சிறு கதை நாயகனை மறந்து போய் விட்டார்.

''முடியாதப்பா! முதலாவது கூப்பிடுபவர்கள் சரியான நம்பரைத்தான் குறிப்பிடுகிறார்கள். அநாவசிய ராங் நம்பர் தொந்தரவு என்று புகார் செய்ய முடியாது. மேலும் கூப்பிடுபவர்கள் பயமுறுத்தவோ திட்டவோ முயற்சி செய்யவில்லை. மரியாதையாகத்தான் பேசுகிறார்கள்.''

பஞ்சாமிர்தம் இடை வெட்டினார்: ''நீயே அந்த மகாபாபி மணிகண்டன் பக்கம் சாய்ந்து விட்டாயேடா? உன் இரண்டாவது காரணம் என்ன?'' என்றார் குரோதமாக.

''அது நம்ப வீட்டு வியவகாரம். அதாவது டெலிபோன் டயலில் ஒண்ணும் நம்பர் சந்நியாசம் வாங்கிக் கொண்டு விட்டது. அதாவது அதற்கு எதிலுமே பற்று இல்லை. நாம் எப்படி எத்தனை தடவை சுத்தினாலும் அது ஒத்துப் போகாது. மூணு எண்களைச் சுத்திவிட்டு

நாலாவதாக நமக்குத் தேவைப்படும் அந்த ஒண்ணும் நம்பரைச் சுற்றினால் அதுவும் வேலை செய்யாது. அதுவரை சுற்றிய முயற்சியும் வீண். டயல் சத்தம் வந்துவிடும்! இது ஒரு வியாதி அந்தப் போனுக்கு. மணிகண்டன் மாவடுவைப் பற்றி டெலிபோன் இலாக்காவுக்குப் புகார் செய்ய வேண்டுமானால் முதல் சுற்றே பலிக்காது. ஒண்ணும் நம்பர் ஆரம்பம்.''

''போச்சுடா! நாம இந்த மணிகண்டப் பிசாசுகிட்டே மாட்டிக்கணும் என்பதற்காகவே நமது வீட்டு டெலிபோன் இப்படி மக்கர் பண்ணுகிறதா? ஏதோ சதி! இதை எப்படித்தான் ரிப்பேர் செய்வது? என் நண்பர்கள் பல பேர் டெலிபோன் எண்களில் ஒண்ணும் நம்பர் அங்கே இங்கே புகுந்து உட்கார்ந்திருக்கிறதே! நான் இன்றைக்கே சம்பந்தப்பட்ட எக்சேஞ்ச் அதிகாரிக்குக் கடிதம் எழுதுகிறேன்! அப்போவாவது..'' பஞ்சாமிர்தம் கடிதம் எழுத உட்கார்ந்தார். கடிதத்தை மேஜை டிராயரிலிருந்து எடுத்தார்!

''ஒன்றும் நடக்காது! முதலாவது, கடிதம் போய்ச் சேர வேண்டும், இரண்டாவது அவர்கள் பார்க்க வேண்டும்; அப்புறம் நடவடிக்கை எடுக்க வேண்டும்....கவனிக்கிறோம் என்பார்கள். நாம் படும் அல்லல்களை மாதக் கணக்கில் கவனித்துக் கொண்டிருப்பார்கள்! நீங்க போன வாரம் முழுதும் ஊரிலில்லையே! உங்களுக்கு நடந்தது தெரியாது. உங்க நண்பர் பரசுராமன் வீட்டு போனிலிருந்து இந்த ஒண்ணும்



நம்பர் ஒத்துழையாமையைப் பற்றிப் புகார் பண்ணினேன்.''

''என்ன ஆச்சு?''

''மறு நாளே ஒரு டெலிபோன் மெக்கானிக் வந்தார். தட்டினார், கொட்டினார், போய் விட்டார். சிறிது நேரம் கழித்து நான் என் சினேகிதன் வீட்டுக்கு டெலிபோன் பண்ண முயற்சி செய்தேன். ஒண்ணும் நம்பர் பழையபடியே அலட்சியமாக இருந்தது.

''மீண்டும் புகார் செய்தேன். மறுநாள் ஒரு மெக்கானிக் வந்தார். முதல் தடவை வந்தவர்தான்! தட்டினார், கொட்டினார், உதட்டைப் பிதுக்கினார். எக்சேஞ்ச் கோளாறும், சில நம்பர்களின் வேலைப்பாடு பற்றாக் குறையாம். இன்னும் ஒரு மாசத்தில் சரியாகப் போகுமாம்! போய் விட்டார்.''

''அவர் டெலிபோன் மெக்கானிக்கா? கிளிஜோசியமா? பரசுராமன் வீட்டு ஒண்ணும் நம்பர் மாத்திரம் சமர்த்தான நம்பரா?''

''நான் கேட்டேன்! அவர் வீட்டிலே வேறு ஏதாவது எண் மக்கார் பண்ணுமாம்! அந்த மெக்கானிக்குக்கு ரிப்பேர் செய்ய முடியவில்லை. அதை ஒப்புக் கொள்ளத் தைரியம் இல்லை.''

''ரொம்ப சரி! முதலில் நமக்கு வேண்டியவர்கள் நம்பர்களையெல்லாம் குறித்து எவற்றிலெல்லாம் ஒண்ணும் நம்பர் குறுக்கிடுகிறதோ, அவர்களுக்கெல்லாம் இன்னும் கொஞ்ச நாளைக்கு என்னிடமிருந்து டெலிபோன் காலை எதிர்பார்க்காதீர்கள். நீங்க பேசினால் நான் பதில் சொல்கிறேன் என்று கார்டு எழுதிப் போடுகிறேன்.''

பெரிய நாயகி எழுந்து வந்தாள். ''டேய் ராஜு! உங்க அப்பாவுக்கு இப்படி ஏதாவது வந்து மாட்டிக் கொள்ளும். அவர் கல்யாணக் கடுதாசி அடிச்ச கதை தெரியுமோ? கேள் அவரையே'' என்று தூண்டி விட்டாள்.

''சொல்லுங்கப்பா!'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டான ராஜு.

''டேய்! எங்க வீட்டிலே திடீர்னு கல்யாண முகூர்த்தத்தை வைத்து விட்டார்கள். உங்க அம்மா ஊரிலே ஒரே ஒரு அச்சாபீஸ்; உங்க மாமா, கல்யாண அழைப்பு அடிக்க அந்த அச்சாபீசுக்குப் போயிருக்கிறார். அச்சாபீஸ்காரர் எவ்வளவு நழுவியும் உங்க மாமா விடவில்லை! எப்படியாவது நீங்கதான் மூன்று நாட்களில் அடிச்சுக் கொடுக்கணும். புரூஃப் எல்லாம நீங்களே பார்ததுக்குங்க? என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்துட்டு வந்துட்டார்.''

''மூணு நாளில் முத்து முத்தா அடிச்சுக் கொடுத்துட்டானே, ஐந்நூறு கடுதாசிகளையும'' என்றாள் பெரியநாயகி.

''நீ குறுக்கே மூக்கை நீட்டாதே! நான்தான் சொல்றேனே! மாப்பிள்ளை பேரு 'ஞ்சாமிர்தம. மணப் பெண் பெயா 'ரியநாயகி' திருமணத்துக்கு அழைத்த என மாமனார் பெயர் 'லராமன்'. அதாவது, அந்த அச்சாபீசிலே அந்தச் சமயம 'ப' எழுத்து ஸ்டாக இல்லை. அந்த எழுதது இல்லாம, கல்யாண அழைபபு அடிதது வந்துவிட்டது.''

''என் தமபி சிதம்பரத்துக்குத் தண்டனை. எல்லாக் கடுதாசிகளிலும் ஒரு ராத்திரிப் பூரா உட்கார்ந்து பேனாவால் 'ப' எழுத்தை எழுதினான். அப்புறம் ஒரு வாரம, எங்கே பார்த்தாலும ப, ப, ப, ப,ன்னு எழுத ஆரம்பிச்சுட்டான்.''

''ப, ப, ப,ன்னு ஆடு மாதிரி கத்தலியே! இப்போ நம்ப வீட்டு டெலிபோனும ஏறத்தாழ அந்த அச்சாபீஸ் மாதிரி ஆய்டுத்து.''

''கல்யாண அழைப்பிலே கையாலே எழுதிச் சமாளிச்சீங்க! இங்கே டெலிபோனிலே உங்க கைவரிசையைக் காட்ட முடியாதே!'' என்றான் ராஜு.

சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த டெலிபோன் மீண்டும் கிணுகிணுத்தது.

''டேய் ராஜு! நிச்சயமாய் அந்த மாவடுக்குத்தான். விடாதே! ஒரு போடு போடு! மறு முனையிலே இருக்கிறவன் இனிமேல் டெலிபோன்லே பேசவே பயப்படணும்! போ!'' என்று உற்சாகப்படுத்தினார் பஞ்சாமிர்தம்.

ராஜு, இல்லாத மீசையை ராஜபார்ட் பாணியில் முறுக்குவதாகப் பாவனை செய்துகொண்டு டெலிபோன் ரிசீவரை எடுத்தான். சில விநாடிகள் இடைவெளி கொடுத்தான். பிறகு சீறினான்:

''என்னையா நெனைச்சுக்கிட்டு இருக்கீங்க?.. இங்கே மாவடு மணிகண்டன் கொய்யாப்பழம் கோவிந்தன், பேரிக்காய் பெரியசாமின்னு யாருமில்லை! இது சந்தைக் கடையுமில்லை. இந்த வீட்டுக்கும் அந்த மணிகண்டனுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. உங்களையெல்லாம் ஏதோ கிண்டல் பண்ண அந்த

ஆசாமி இந்தப் போன் நம்பரைக் கொடுத்திருக்கிறார். இனிமேல் அந்த நம்பரை இங்கே கூப்பிடாதீங்க! என்ன? என்ன சொல்றீங்க? என் அப்பாவைக் கூப்பிடறீங்களா?.. ஓஹோ.... எஸ்.வி.எஸ். சாரா! இருங்கோ! கூப்பிடுகிறேன். நான் யாரோன்னு நினைச்சுட்டேன். ஒன் மினிட்.''

ராஜு ரிசீவரைப் பக்கத்தில் வைத்துவிட்டுப் பஞ்சாமிர்தத்தைப் பார்த்தான்.

''இப்படித்தான் எக்கச்சக்கமாக அவசரப்பட்டு எதையாவது செய்கிறாய்! அந்த மனுஷன் மூணு நாளைக்கு முகத்தை உர் என்று வைத்துக் கொண்டிருப்பார். சரி! சரி! நான் சமாதானப்படுத்தப் பார்க்கிறேன்'' என்று டெலிபோனை அணுகினார்.

'' ஓய்! இங்கே ஒரு ராங் கால் குழப்பம்! திருப்பித் திருப்பி ஒரு ஆளைக் கூப்பிடறாங்க! இப்படியே போனால் அந்த ஆசாமி வீட்டில் நான் வந்து தங்கியிருப்பதாக உணர்ச்சி வந்துடும் போலிருக்கு'' என்று தாஜாப் பண்ணினார் பஞ்சாமிர்தம்.

''உம்ம பாடு தேவலை ஐயா! சென்ட்ரல் ரெயில் நிலையம் என்குயரிக்குப் போக வேண்டிய 'கால்'கள் எல்லாம் என் வீட்டுப் போனில்தான் நுழைகின்றன.

''தாதர் எக்ஸ்பிரஸ் கரெக்ட் டயமா? ஜி.டி. எந்தப் பிளாட்பாரத்திலிருந்து கிளம்புகிறது என்றெல்லாம் விசாரணைகள்!.. காலை நாலு மணிக்கு விழுந்தடித்து எழுந்து போனை எடுத்தால் 'கல்கத்தா மெயில் கரெக்ட் டயமா?' என்ற விசாரணை. உம்ம பாடு தேவலை.. நேரம் கெட்ட நேரத்திலே இப்படி எழுப்பமாட்டாங்களே!'' நண்பர் எஸ். வி. எஸ். தம் தொல்லையை விளக்கினார்.

'' புகார் செய்தீரா ?''

''மூன்று தடவை செய்தாயிற்று? என்னவோ கேபிள் துண்டிப்பாம. சாவகாசமாகத்தான் ரிப்பேர் நடக்குமாம். அப்புறம்....நாளைக்கு நம்ப இலக்கியக் கூட்டம் இருக்கு. நேரத்தோடு வந்து சேரும்'' என்று சொல்லிப் போனை வைத்தார்.

இப்போது தான் பஞ்சாமிர்தத்துக்கு தம் சிறுகதை நாயகனைப் பற்றிய நினைவு வந்தது. கதையில் ஒரு சிறு திருப்பம் கொடுக்க, அவனை எழும்பூர் ஸ்டேஷனில் உள்ள பப்ளிக் டெலிபோன் பூத்துக்கு அனுப்பி ஒரு நபரைக் கூப்பிடத் தூண்டினார். அதை வைத்துக் கதையை வளர்க்கலாம்!

''சார்'' என்று குரல் ரேழியில் ஒலித்தது.

பஞ்சாமிர்தம் நிமிர்ந்து பார்த்தார். சற்றுக் கச்சலான உருவம். பொருந்தாத ஜிப்பா. பெரிய குங்குமப் பொட்டு. முப்பது வயது நபர். முற்றிலும் புதியவர்.

''வாங்க! யாரு வேணும்?'' என்றார் பஞ்சாமிர்தம்.

'' நீங்க..'' என்று நீட்டினார் வந்தவர்.

பஞ்சாமிர்தமும் அவர் சிறுகதை நாயகனும் டெலிபோனையே நினைத்துக்கொண்டிருந்ததால் பஞ்சாமிர்தம் பட் என்று பதில் சொன்னார்!

''நானா? மாவடு மணிகண்டன்.''

வந்தவருக்கு முகம் என்னவோ போல் ஆயிற்று.

''சார், மன்னிக்கணும். இந்த வீட்டிலே வேறே யாராவது..'' நீட்டினார்.

''இல்லை. நான்தான் இருக்கிறேன். நீங்க யாரைத் தேடி இங்கே வந்திருக்கீங்க?''

''இங்கே பஞ்சாமிர்தம் சார்னு.''

''இருக்கார்! நீங்க யாரு?''

''உங்க பேர்தான் என் பேரு! அதனாலேதான் திகைச்சுப் போய் நிற்கிறேன்.''

''நீரும் பஞ்சாமிர்தமா?''

''இல்லே சார்! நீங்கதான் பஞ்சாமிர்தமா?''

''என்னையா! என் வீட்டிலே நுழைந்து என்னையே கேள்வி கேட்கிறாய்?''

''என் பேரு மாவடு மணிகண்டன் சார்!''

பஞ்சாமிர்தத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. எழுந்து நின்றார். இரண்டெட்டு முன்னால் வந்தார்.

''இந்தாயா மாவடு! இங்கே எங்கே வந்தீர்? என் வீட்டு டெலிபோன் சரியாக இருக்கிறதா என்று பார்க்கத்தானே? உம்ம மனசிலே என்னையா நினைப்பு?'' சீறினார்.

''நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். உங்ககிட்டே ஒரு தகவல் கொடுக்கணும். நான் இந்தத் தெருவிலே உங்க வீட்டுக்கு ஐந்து வீடுகள் தள்ளி..''

'' நிறுத்தையா! எவனாவது சோணகிரி உம்மை என் வீட்டு டெலிபோனில் கூப்பிட்டுக் கொண்டே இருப்பான்! நான் லொங்கு லொங்கென்று ஐந்து வீடுகள் தாண்டி வந்து உமக்கு அறிவிப்பும் அழைப்பும் கொடுக்கணுமோ? என் வயசு என்ன தெரியுமா?''

''டெலிபோன் வைத்திருக்கிறவர்கள் வயசுகளையெல்லாம் டெலிபோன் டைரெக்டரியில் போடுவதில்லையே! அதனாலே தெரியாது.''

''என்னையா கிண்டல்? நேத்தும் இன்றைக்கும் ஏன் ஐயா, யார் யாரோ உம்மைக் கூப்பிட என் போனில் மணி அடிக்கிறான்?''

''என்னைப் பேச விடுகிறீர்களா ?''

''எவன் எவனோ உம்மோடு பேச டெலிபோனில் பிராணனை வாங்குகிறான். நீர் நேரில் வந்து பேசி என் பிராணனை வாங்கப் போகிறீர். செய்யும்.''

''இந்தத் தெருவுக்கு நூற்றுப் பதினைந்தாம் நம்பர் வீட்டுக்குத் திருவான்மியூரிலிருந்து குடிவருவதாக ஏற்பாடு. கலை உலக நண்பர்கள் என்னை டெலிபோனில் கூப்பிடுவார்கள் அடிக்கடி! ஆகையால் டெலிபோன் டைரெக்டரியை அலசி இந்தத் தெருவில் நூற்று இருபதாம் நம்பர் வீட்டிலிருக்கும் உங்கள் போன் நம்பரை அவர்களிடம் கொடுத்தேன்.''

''உமக்குத் திமிர் ஜாஸ்தியா? துணிச்சல் ஜாஸ்தியா? தெரியலியே?''

''முன்யோசனை! வேறு ஒன்றுமில்லை. நேற்று காலையிலேயே இங்கே வந்து உம்மிடம் கெஞ்சிக் கதறி விஷயத்தைச் சொல்லி உங்க ஒப்புதலை வாங்க நினைத்திருந்தேன். வெளியூர் டிராமா ஒன்றில் மாட்டிக் கொண்டேன். வரமுடியவில்லை.''

''நீர் என் வீட்டு வாசலில் ஒன்றரை வருஷம் உண்ணாவிரதம் இருந்தாலும், நான் உம்மை அழைத்து என் போனில் பேச அனுமதிக்கமாட்டேன்! நான் ஒண்ணும் அவ்வளவு ஏமாளியில்லே! நீங்க போகலாம். பிறத்தியான் தலையிலே எவ்வளவு அகலமாய் மிளகாய் அரைக்கலாம்னு நல்லாப் படித்து வைத்திருக்கிறீர்! இப்படியே போனாக்க, உம்ம வீட்டிலே நான் வந்து ஒண்டியிருப்பது போன்ற நிலையை உருவாக்குவீர்! கெட்அவுட்! யாராவது கூப்பிடட்டும், இனிமேல் மணிகண்டன் என்று! நான் பார்த்துக்கறேன்!'' பஞ்சாமிர்தம் சிலிர்த்தெழுந்தார்.

''அவசியம் இல்லை! கூப்பிடமாட்டாங்க. நான் இந்த நூற்றுப் பதினைஞ்சுக்குக் குடி வறலே. என் சமசாரத்துக்குப் பிடிக்கலே. திருவொற்றியூரிலே இன்னொரு இடம் காலியாக இருக்கு. அங்கே போறேன்.''

''அங்கே ஓசி டெலிபோனுக்கு என்ன பண்ணுவீர்?''

''பண்ணிட்டேனே! நான் போகும் வீட்டுக்கு மூன்றாவது வீட்டில் ஒண்ணு ஒண்ணு ஒண்ணு ஏழு ஏழு ஏழு நம்பர் போன் இருக்கு. அந்த நம்பரை எனக்கு வேண்டப்பட்டவர்கள் கிட்டே கொடுத்து விடுவேன். இதை முன்கூட்டியே சொல்லத்தான் திருவொற்றியூராரைப் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறேன்! என்னை உங்கள் வீட்டுப்போனில் யாராவது கூப்பிட்டால்...''

பஞ்சாமிர்தம் கை தட்டினார். ''ஒண்ணு ஒண்ணு ஒண்ணு ஏழு ஏழு ஏழுக்குப் போன் பண்ணுங்கன்னு சொல்றேன். சரிதானா மாவடு சார்! என்னதான் உம் மேலே எனக்குக் கோபம் வந்தாலும் நீர் பிழைக்கத் தெரிந்த மனிதன் என்று பாராட்டறேன். திருவான்மியூரிலிருந்து திருவொற்றியூர் வரை, இப்படி ஓசி டெலிபோன் கம்பி மேலே நடந்தே வாழ்க்கைச் சர்க்கஸை நடத்துறீர். பேஷ்! குட் பை மாடு. சாரி, மாவடு மணிகண்டன் சார்.''

மணிகண்டன் வாசலில் போனார்.

பஞ்சாமிர்தத்தின் சிறுகதை நாயகன் எழும்பூர் டெலிபோனில் ஒண்ணு ஒண்ணு ஒண்ணு ஏழு ஏழு ஏழு நம்பரைச் சுற்ற ஆரம்பித்தான்.

அம்மா, அம்மா!

அனுராதா ரமணன்

"அவளுக்குக் குழந்தை மனசு. சின்னச் சின்ன விஷயங்களிலேயே திருப்தியடைஞ்சுடற சுபாவம். ஆனா, அந்தச் சூட்சுமம், ஏனோ மன்னி ரெண்டு பேருக்கும் தெரியல்லே."

மைதிலியை மணந்த புதிதில், ராகவன் கூறிய வார்த்தைகள்!

இதை மட்டுமா கூறினான்? இவர்கள் இருவரும் என்றைக்கு, ஒரு வண்டியில் பூட்டிய மாடுகளாய்ச் சேர்ந்து வாழத் தீர்மானித்தார்களோ, அன்றிலிருந்து இன்று வரையில் ராகவனது பேச்சும், மூச்சும் இதுதான்.

"என்னை நீ ஸ்பெஷலா கவனிச்சுக்கணுங்கறதெல்லாம் இல்லே, மைதிலி. எங்கம்மாவைக் கவனிச்சுக்கோ. போதும்."

ஒரு நாள் கடற்கரையில் பிறந்த வார்த்தைகள் இவை.

மைதிலி, புன்னகையுடன் கேட்டுக் கொண்டாள். அவளுக்கு, அவனுடைய தவிப்பு புரிந்தது. அண்ணாக்களும் மன்னிகளும் அம்மாவை நடத்தும் விதத்தில் அவன் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதும் புரிந்தது..

ஒரே அலுவலகத்தில் ஒன்றாக வேலை பார்த்தும், மைதிலியை மணக்க வேண்டும் என்கிற நினைப்பு, கொஞ்சங்கூட ராகவனுக்குக் கிடையாது.

மைதிலிதான் கேட்டாள்.

அதுவும் எப்படி?

ஒரு நாள், அவள் தனக்கு வரும் ஜாதகங்களைப் பற்றியும், தன் சகோதரர்கள், தங்கள் சக்திக்கு மீறிச் செலவழிக்கத் தயாராக இருப்பதைப் பற்றியும், கல்யாணத்துக்குப் பிறகு வேலை பார்க்கத் தனக்கு விருப்பம் இல்லாதது பற்றியும், திருமணமான பிறகும் தன் வயசான அப்பாவை, அடிக்கடி போய்ப் பார்த்து விட்டு வர, கணவர் அனுமதிப்பாரா என்பது பற்றியும், பேசிக்கொண்டே, பேருந்து நிலையம் நடந்தவள் 'சட்'டென நின்று அவனை ஏறிட்டுப் பார்க்கிறாள்.

விழி முனையில் குறும்பு சுடர் விட்டுப் பிரகாசித்தது.

"நீங்களும், நானும் ஏன் கல்யாணம் பண்ணிக்கக்கூடாது?"

ஸ்தம்பித்து நின்று விட்டான் ராகவன்.

"அம்மாவைக் கேட்கணும் மைதிலி. இதுவரைக்கும், இப்படியொரு நினைப்பே தோணினது கிடையாது எனக்கு."

அப்போதும் அவள் புன்னகை செய்தாள்.

"அவசரமில்லே. அம்மாவைக் கேட்டுப் பதில் சொல்லுங்கோ. அம்மா கிட்ட எதையும் மறைக்க வேண்டாம். என் வயசு, படிப்பு, விருப்பம், வயசான அப்பா இதுலே எதையும் விட்டுட வேண்டாம்."

அவள் தன் பஸ் வந்ததும் ஏறி விட்டாள்.

ராகவன் வீடு போய்ச் சேர்வதற்குள் மைதிலி போட்ட சின்ன விதை விருட்சமாகிவிட்டது.

மறுநாள் விடிகாலையில், அம்மாவின் கையால் காபி வாங்கிக் குடிக்கும்போது, தயங்கித் தயங்கிச் சொல்ல ஆரம்பித்தான் ராகவன்.

அவன் முழுசும் சொல்லி முடிக்கும் வரையில் பேசாமல் இருந்தாள் அம்மா.

"ரொம்பப் படிச்ச பொண்ணோ?"

"உம். டபுள் டிகிரி. ஆனா, கொஞ்சம்கூடப் படிச்ச கர்வம் கிடையாது."

"எதுக்குக் கேட்கறேன்னா பி.யு.சி.யும், பி.ஏ.வும் படிச்சுட்டே என்னைச் செக்குல வச்சுத் திரிக்கிறா. நீதான் பார்த்துண்டேயிருக்கியே? உன் கல்யாணத்துக்கு அப்புறமாவது, எனக்கு ஓய்வு கிடைச்சா சரி. நீ யாரை வேணுமானாலும் பண்ணிக்கோ. நம்ம குலமா இருக்கணும். அதுதான் முக்கியம். உன் கல்யாணத்துக்கு அப்புறம், தனியாப் போறச்செ, உங்ககூட என்னையும் அழைச்சுண்டு போயிடுங்கோ. கஞ்சியோ, கூழோ—நீங்க போடறதைச் சாப்பிட்டுண்டு ஒரு மூலையில விழுந்து கிடக்கேன்."

இதைச் சொல்லும்போதே அவள் அழுது விட்டாள்.

ராகவனுக்குத் தெரிந்து, அந்த வீட்டுக்கு மருமகளாக வந்த இருவருமே அம்மாவை மதிக்கவில்லை தான்.

மதிப்பதில்லை என்றால், எடுத்தெறிந்து பேசுவதெல்லாம் கிடையாது. மாமியாருக்கு உதவியாய்க் காய் நறுக்கித் தரக்கூட ஒருத்தியும் முன் வரமாட்டாள்.

புருஷன்மார்களும் இதைக் கண்டு கொள்ள மாட்டார்கள்.

அம்மா சமைத்துக் கொண்டேயிருப்பாள். பெரியவன் வாசலில் மோட்டார் சைக்கிளை மிதித்துக் கொண்டே சொல்லுவான்.

"அம்மா, நான் அவளைக் கொண்டு போய் மாம்பலத்துல விட்டுட்டு, அங்கேயே சாப்பிட்டுட்டு ஆபீசுக்குப் போறேன்."

மாம்பலம், அவன் மாமனார் இருப்பிடம். இவன் இதைச் சொல்லும்போது, இவன் பெண்டாட்டி இடுப்பில் குழந்தை, சின்னப் பிளாஸ்டிக் பையில் ஃபீடிங் பாட்டில் சகிதம், மோட்டார் சைக்கிளின் பின்னால் ஏறியிருப்பாள்.

"சாப்பிட்டுட்டுக் கிளம்புங்களேன். சமையலாயிடுத்து."

"எங்கே சாப்பிட்டா என்ன?"

"சரி, அவ மறுபடி எப்போ வருவா?"

அம்மா, மருமகளைக் கேட்காமல் பிள்ளையின் முகத்தைப் பார்த்துக் கேட்பாள். இதற்குள், பிள்ளையின் முகம் தக்காளிப் பழமாய்ச் சிவந்து விடும்.

"எப்ப வந்தா என்ன? இங்கே வந்து என்ன புரட்டப் போறா?"

"அதுக்கில்லேடா. கார்த்திகை வர்றது. வீட்டுல விளக்கேத்த வேண்டியவ."

"ஆமா. பெரிய விளக்கு ஏத்தணும். நீயே ஏத்திட்டுப் போ." முனகிக் கொண்டே போய்விடுவான் அவன்.

இரண்டாவது மருமகள், இதை விடவும் ஒரு படி மேலேயே போய் விடுவாள்.

இவளைப் புருஷன்தான் கொண்டு போய்ப் பிறந்த வீட்டில் விடவேண்டும் என்கிற அவசியம் இல்லை. அவளே கிளம்பி விடுவாள். மாதம் மாதம் வரும் மூன்று நாள் வைபவத்துக்காகப் போவாள். அது முடிந்ததும்,

பிறந்தகத்தில் அவளுடைய தங்கையோ, அம்மாவோ இதே வைபத்தைக் கொண்டாடுவார்கள். இதிலேயே பதினைந்து நாட்கள் ஓடிவிடும். இதற்குப் பின் இவள் புகுந்த வீட்டுக்குக் கிளம்புகிற அன்றைக்குப் பார்த்து, இவளுடைய இரண்டு வயசுப் பிள்ளை கீழே விழுந்து காலை ஒடித்துக்கொள்ளும்; இல்லாவிட்டால் கொதிக்கிற எண்ணெயில் விரலை விட்டு அமர்க்களப்படுத்தும்; சைக்கிளை மேலே தள்ளிவிட்டுக் கொள்ளும்; வீட்டில் சிறங்கு, சொறிக்கு வைத்திருக்கும் களிம்பை வழித்து விழுங்கி ஊரைக் கூட்டும்.

இந்தக் கல்யாணங்களுக்காக மாதம் மாதம் இருபது நாள் ஓடிவிடும்.

ஆக மொத்தம் கரண்டி அம்மாவின் கையில்தான். ராகவனிடம் அவள் எதிர்பார்ப்பது எல்லாம், தன்னை உட்கார வைத்துச் சோறு போடும் ஒரு மருமகளைத்தான்.

இதுபற்றிச் சில முறை தன் சகோதரர்களிடம் பேசியிருக்கிறான் அவன்.

''கார்த்தாலே எழுந்துண்டா ராத்திரி படுக்கற வரைக்கும் அம்மா செக்குமாடா உழைக்கறப்ப, எப்படி மன்னியாலே..''

''த்சு.!''

பெரியவன் கையை வீசித் தம்பியை அடக்கினான்.

''இத பாரு. நீயும் நானும், இவனும் ஆபீசுக்குப் போயிடறோம். அப்புறம் நாள் முழுக்க அம்மாவோட தொண தொணப்பைச் சகிச்சுக்கறதெல்லாம் உன் மன்னிகள்தான். அம்மா பேசறதைக் கேட்டுண்டு குதிக்காதே! அவளுக்கு எப்பவுமே யாரை யாவது குறை சொல்லிண்டே இருக்கணும். இவா, சமைக்கறதுக்காக உள்ளே புகுந்தாலும் மடி, ஆசாரம்! சமைக்க வரல்லேன்னாலும் 'நானே செய்ய வேண்டியதாயிருக்குன்னு அலுத்துப்பா.' நாட்டுப் பெண்கள் எல்லாம் வர்றதுக்கு முன்னாடி இருந்த அம்மா வேற, இப்ப வேற.''

''எப்படியும் உனக்குக் கல்யாணம் ஆகத்தானே போறது? பார்க்கறோம், உன் பொண்டாட்டியாலே அம்மாவை அனுசரிச்சுண்டுப் போக முடியுதான்னு.''

அவன் சவால் விடுவது போலச் சொன்னான். ராகவன், அப்போதே தீர்மானித்து விட்டான்; தனக்குக் கல்யாணம் ஆன பிறகு, அம்மாவை அவள் விருப்பப்படி உட்கார வைத்துக் கோவில், குளத்துக்கு அனுப்பி, நிம்மதியாக இருக்கவிட வேண்டும் என்று.

முன் பின் தெரியாதவளை மணந்து கொண்டு, அவள், தன் தாயை மதிக்க வேண்டுமே என்று கவலைப்படுவதை விடப்பழக்கமான மைதிலியிடம் தன் நினைப்பைப் பகிர்ந்து கொள்வது எத்தனையோ மேல் என்றுதான் தோன்றியது அவனுக்கு.

அம்மாவின் சம்மதத்துக்குப் பிறகு, திருமணத்துக்கு முதல் நாள் வரையில் ராகவன், மைதிலியிடம் சின்னதாய் ஒரு காதல் வசனம் கூடப் பேசவில்லை. அம்மா, அம்மா, அம்மாதான்.

''அண்ணாக்கள் சொன்னார்கள், அம்மா மாறிட்டான்னு. அம்மா சொல்றா, என் பிள்ளைகள் மாறிட்டான்னு. நிஜமாவே, கல்யாணத்துக்கு அப்புறம் இவனுங்கதான் மாறிட்டான்கள்.''

''அப்பா இருந்தவரைக்கும் அம்மாவை ஒரு குழந்தை மாதிரியே பார்த்துண்டார். அம்மாவுக்குப் புடைவையிலேயிருந்து, ஒரு முழம் பூ வாங்கிண்டு வர்றது வரைக்கும் எல்லாமே அப்பாதான்.

''இத்தனை பெரிய குடும்பத்துல மூணு பொண்களுக்குக் கல்யாணம் பண்ணி, மூணு பிள்ளைகளைப் படிக்க வச்சு, நடுவுல எத்தனையோ பிரச்னைகள்! எல்லாத்தையும் அவர் ஒண்டியாய்ச் சமாளிச்சார். அம்மாவை ஒரு நாள் கூடக் கண் கலங்க விட்டதேயில்லை அவர்.''

''அவர் போனதுக்கு அப்புறமே அம்மாவுக்கு ஒரு பயம் வந்துடுத்து, தன்னை இனிமே யார் கவனிச்சுக்கப் போறான்னு? இந்தப் பசங்களும் எடுத்தெறிஞ்சு பேசிடறான்களா? தினமும், நான் ஆபீசுலேயிருந்து வந்ததும், அவ பக்கத்துல உட்கார்ந்து அவ சொல்றதையெல்லாம் பொறுமையாக் கேட்டு, சமாதானமா நாலு வார்த்தையாவது சொன்னாத்தான் பாவம், அவளுக்கு நிம்மதி..''

மைதிலி அப்பொழுதே தீர்மானமாகக் கூறினாள்:

''என்னாலே, உங்க அம்மா மனசு கஷ்டப்படாதபடி பார்த்துக்க முடியும். மாமியாரை, மாமியாராப் பார்த்தாத்தானே கஷ்டம்? அம்மாவா பாவிச்சுட்டுப் போறேன்.



எனக்கும் 'அம்மா'ன்னு கூப்பிட யாரு இருக்கா?''

''சமையல் ஒண்ணும் பெரிய விஷயமில்லே. எனக்கு நன்னுச் சமைக்கணும், நாலு பேர் நம்ம சமையலைச் சாப்பிட்டுட்டு நன்னுயிருக்குன்னு பாராட்டணும்னு எல்லாம் ரொம்ப ஆசை. எங்க வீட்டுல கூடப் என் சமையலுக்கு ரொம்பவும் பாராட்டுக்கள் உண்டு.

''நான் வேலைய விடறதே, ஒரு பொறுப்பான குடும்பத் தலைவியா இருக்கணும்கற ஆசையிலதான். அம்மாவும் இத்தன நாள், அடுப்பங்கரையைக் கட்டிண்டு அழுதாச்சு; இனிமே நான் பார்த்துக்கறேன். எங்க வீட்டுல பத்துப் பேருக்குச் சமைக்கறேன். நம்ம மூனு பேருக்குச் சமைக்க மாட்டேனு என்ன?''

ராகவனுக்குப் பெரிய மலையை இறக்கி வைத்தாற்போல இருக்கிறது. ஒவ்வொரு முறையும் மைதிலி சொன்னதையெல்லாம், அம்மாவிடம் வந்து சொல்லும்பொழுது, அவள் சின்ன தாய்ப் புன்னகை செய்வாள்.

''இப்பவே பிடிச்சு ஆகாசக் கோட்டை கட்ட நான் தயாரா இல்லே. ஏற்கனவே ரெண்டு தடவை அடி பட்டுட்டேன். கல்யாணமாகட்டும் பார்க்கலாம்.''

''கல்யாணத்துக்கு முன்னலேயே வேற ஜாகை பார்த்துடடா. இங்கே அவ வந்தா, பெரியவ ரெண்டு பேரும் நடந்துக்கறதைப் பார்த்து, அவளும் அப்படியே என்னை அலட்சியப்படுத்த ஆரம்பிச்சுடுவா.''

ராகவன் அம்மா சொன்னபடி செய்தான்.

சின்னதாய், சிமிழ் மாதிரி வீடு; புத்தம் புதிது. கல்யாணத்துக்கு முன்பே, மைதிலி அடிக்கடி அந்த வீட்டுக்கு வந்து, ராகவனின் தாயிடம் பேசிவிட்டுப் போவாள். அப்படிச் சில நாள் அவள் தொடர்ந்து வராமலிருந்தாலும் அம்மா தவித்துப் போவாள்.

''ஏண்டா அவ வரல்லே?''

''புடவை வாங்கப் போகணும்னு சொல்லிண்டிருந்தா. போயிருக்காளோ என்னவோ?''

அடுத்த நாள், அவள் வரும்போதே, குறும்பாய்க் கண்களைச் சிமிட்டியபடி சொல்வான் அவன்:

''ரெண்டு நாளா, நீ வரல்லையேன்னு அம்மா தவிச்சுப் போயிட்டா.''

அவளும் அந்தக் குறும்பில் எள்ளளவும் குறையாமல் கேட்பாள்:

''அம்மா மட்டும்தானா? நீங்க இல்லையா?''

''நானுந்தான், அம்மாவும்தான்.''

இந்தச் சிரிப்பும், குதூகலமும் மைதிலி இந்த வீட்டில் மருமகளாய்க் காலடி எடுத்து வைத்த பின் எங்கே ஓடி ஒளிந்தன?

கல்யாணத்துக்கு முன் வரையில் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த அம்மா, ஏன் இப்படி முகத்தைத் துக்க வீட்டில் இருப்பது போல வைத்துக் கொண்டிருக்கிறாள்?

இத்தனைக்கும் மைதிலி சொன்ன சொல் தவறாமல், எல்லாக் காரியங்களையும் தானேதான் செய்கிறாள். மாமியாரை, 'அம்மா' என்று வாய் நிறையக் கூப்பிட்டு, அவள் என்ன சொல்கிறாளோ அதன்படிதான் செய்கிறாள்.

திருமணமாகி, இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே சின்னதாய் ஒரு சலசலப்பு.

எங்கோ வெளியே போய்விட்டு வீடு திரும்பிய ராகவன், மைதிலியின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

''என்ன மைதிலி?''

''ஒண்ணுமில்லே.''

''இல்லே. உன் முகமே சொல்றதே. என்ன ஆச்சு சொல்லு?''

''நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி நம்ப ரெண்டு பேருக்கும் நடுவுல மூணு வயசுதான் வித்தியாசம் இருக்குன்னு அம்மாகிட்ட சொல்லலியா?''

''சொன்னேனே. அதுக்கு என்ன இப்ப?''

''உங்களுக்கு, உங்களைவிட ஏழெட்டு வயசு சின்னப் பொண்களோட ஜாதகமெல்லாம் வந்ததாமே?''

''இது என்ன கூத்து? என்னோட கல்யாண சம்பந்தமான பேச்சே, நீ என்னைக் கேட்டதுக்கு அப்புறந்தான் ஆரம்பமாச்சு. அப்பா இருந்தப்ப ஒண்ணு ரெண்டு ஜாதகம் வந்திருக்கலாம். நான்தான் 'கல்யாணத்துக்கு அவசரம் இல்லை இப்ப'ன்னு சொல்லிட்டேன்.''

''வேலைக்குப் போற பெண்தான் வேணும்னு சொல்லிண்டிருந்தேளா?''

ராகவன் சற்றுத் தயங்கினான். பிறகு, மெல்ல அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ரெண்டு பேருமாச் சம்பாதிச்சா இன்னும் கொஞ்சம் வசதியா இருக்கலாமோன்னு நினைச்சதுண்டு. ஆனா, ஒரு சில குறைகளை நினைச்சுண்டே, எனக்குக் கிடைச்சிருக்கிற பெரிய புதையலை நான் இழக்க விரும்பல்லே மைதிலி.''

''நீங்க என்னைப் புதையலா நினைக்கலாம். ஆனா அம்மா நினைக்கலே. வந்தவுடனேயே நான் அம்மாவைப் பத்திப் புகார் சொல்றதா நினைக்காதிங்கோ. இன்னிக்குக் கல்யாணம் விசாரிக்க வந்தவா முன்னாடி அம்மா அப்படிப் பேசியிருக்கக் கூடாது.''

''என்ன பேசினா?''

''இதைவிட ஓசத்தியான ஜாதகங்கள் எல்லாம் வந்ததாம். ஒருத்தர் இருபத்தஞ்சு பவுன் போடறேன்னு ஒத்தைக் கால்லே நின்னாராம். அந்தப் பொண் வேலைக்குப் போறாளாம், ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளமாம். சிவப்பா ஒல்லியா, போட்டோவுல பார்க்கவே பொண் ரொம்ப நன்னாயிருந்தாளாம். நீங்க அப்ப எல்லாம் எதுவுமே பிடி கொடுத்துச் சொல்லலையாம்.''

''பிறகு?''

''கல்யாணத்தின்போது கூட, எங்க மனுஷா, உங்க சொந்தக்காராளைச் சரியாக் கவனிக்கலையாம். 'ஆடம்பரமாக் கல்யாணத்தைப் பண்ணிட்டாப்பல ஆச்சா? ராகவனோட அப்பா ஒவ்வொரு கல்யாணத்தையும் பண்ணிய நேர்த்திய விடவா? மனுஷாளை மதிக்கத் தெரியணும். முகூர்த்தத்தின்போது, உறவுன்னு சொல்லிக்கக்கூடிய முக்கியப்பட்ட மனுஷா ஒருத்தர்கூடச் சாப்பிடலேன்னு சொல்லிண்டேயிருந்தா அம்மா.''

''அப்படியா, நான் கேட்கறேன் அம்மாவை.''

''ஐயோ, வேண்டாம். அப்புறம் நான் சொல்லித்தான்னு கேக்கறேள்னு நினைப்பா, அப்புறம் என்னைக் கண்டாப் பிடிக்காமலேயே போயிடும்.''

ராகவன் இதைக் கேட்டுக்கொண்டு சும்மாயிருக்கவில்லை. அன்றிரவு முழுக்கத் தூக்கம் வராமல் தவித்தான்.

எல்லாரையும் போல, அவன், ஒரு தாயிடம் மகன் பழகுவது மாதிரியா பழகியிருக்கிறான்?

அவன் அம்மா அவனுக்கு நல்ல குரு. நல்ல சிநேகிதி. இவனிடம் மாத்திரமே, தன் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் சுத்த ஆத்மா.

அந்த ஆத்மாவினால், இன்னொரு மனசை, அதுவும் நேற்றுத்தான் புதுசாக இந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்திருக்கும் பெண்ணை, இப்படியெல்லாம் பேசி, துன்புறுத்த முடியுமா?

மறுநாள்—

அம்மா தனியாக இருக்கும்போது கேட்டுவிட்டான்.

''நேத்துக் கல்யாணம் விசாரிக்க யார் வந்திருந்தா?''

''ரகுபதி சம்சாரமும், அவ நாத்தனாரும்.''

''அவாகிட்டே என்ன சொன்னே?''

''என்ன சொன்னேன்?''

அவன் மைதிலி சொன்னதை அப்படியே சொல்கிறான். அவள் மவுனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

''ஏம்மா இப்படிப் பேசினே?''

''நன்னாயிருக்கே? நான் ஏதோ விளையாட்டா, மனசுல கல்மிஷம் இல்லாமப் பேசிண்டிருந்தேன். அது பெரிய விஷயமாய்ப் போயிடுத்தா உன் பொண்டாட்டிக்கு? இப்ப, உன் கிட்டயும்தான் சொல்றேன். எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. உங்கப்பா இருந்தப்ப, உனக்கு ஒரு வரன், ஆபீசுக்குப் போறவ வரல்லே? நீதான் வேண்டாம்னே. அதைத்தான் சொல்லிண்டிருந்தேன். குத்தம்னா எல்லாமே குத்தமாத்தான் படும்!''

''அம்மா, நீ''

''அதே மாதிரி, கல்யாணத்தின் போது, நம்ம வீட்டு மூத்த மாப்பிள்ளைக்கு எவ்வளவு அவமானம் தெரியுமோ? சமையல்காரா சரியா கவனிக்கவே இல்லே. அவர் சாப்பிடாமலேயே எழுந்துட்டார். அவர் சாப்பிடாததாலே உங்க அக்காவும் சாப்பிடல்லே. பொண்ணையும், மாப்பிள்ளையும் விட்டுட்டு எனக்கு மாத்திரம் எப்படிச் சாப்பாடு இறங்கும்? நானும் சாப்பிடல்லே. உனக்கு எங்கே இதெல்லாம் தெரியும்? நீதான், பொண்டாட்டியைச் சேர்ந்த மனுஷாகிட்ட சிரிச்சுண்டு பேசிண்டிருந்தியே.''

ராகவன் விக்கித்து நின்று விட்டான்.

அம்மாவின் இத்தனை நிஷ்ரேத்தை அவன் பார்த்ததே இல்லையே!

''சரி, கல்யாணத்துல நடந்த தகராறுக்கெல்லாம் இவ எப்படிப் பொறுப்பாக முடியும்? இவ இப்பத்தானே வந்திருக்கிறாள். இவளையும் வெச்சுண்டு, நீ இதையெல்லாம் பேசலாமா?''

அவ்வளவுதான். அம்மா 'மொலு மொலு'வெனப் பிடித்துக்கொண்டு விட்டாள்.

''நாம என்ன, உசத்தியாக் கல்யாணம் பண்ணாதவளா? கார் அலங்காரமும், கச்சேரியும், வாணவேடிக்கையும் அவா அந்தஸ்துக்காகச் செஞ்சா. நமக்காக என்ன செஞ்சா? அப்பவே உன் அத்திம்பேர் சொல்லிட்டார்: 'பெரிய இடத்துல சம்பந்தம் பண்ணினா இது மாதிரியான அவமானங்களையெல்லாம் வாங்கிக் கொண்டுதான் ஆகணும்னு'.''

''ஏம்மா, நம்ம வீட்டுல பொண்களுக்குக் கல்யாணம் செய்யறப்ப இதுமாதிரி பிரச்னைகள் எல்லாம் வரவேயில்லையா? அப்ப இதே அத்திம்பேர், 'பிள்ளை வீட்டுக்காரான்னா எகிறிக் குதிக்கணுமா'ன்னு கட்சி கட்டிண்டு பேசல்லியா?''

''என்னமோ எனக்குத் தோணினதைச் சொன்னேன்... உங்க அப்பா இருந்தா இந்தக் கல்யாணமே நடந்திருக்காது. உன் அண்ணாக்கள் கல்யாணத்தும்போது கூட இத்தனை அவமானப்படல்லே நாம. ஏதோ நீ ஆசைப்பட்டியேன்னு. சரின்னேன்.''

அம்மா வாயை இறுக மூடிக் கொண்டாள்.

ராகவன், பெண்டாட்டியிடம் கெஞ்சினான்.

நடைமுறையில் இந்த அம்மாவை அனுசரித்துப் போவதில்

எத்தனை சிரமங்கள் இருக்கின்றன என்பதும் போகப் போகப் புரியத் தொடங்கியது.

மைதிலி மணக்க மணக்கச் சமைக்கிற அன்று அம்மா, அதைப் பாராட்டி ஒன்றுமே சொல்லமாட்டாள். தப்பித் தவறி, ராகவன் வாய்விட்டுப் பாராட்டி விட்டாலும் அதோடு அவன் கதை தீர்ந்தது.

''என்னடா பிரமாதம்? பார்க்கப்போனா, நம்ம குடும்பத்துலேயே அவியல் பண்றதுல கெட்டிக்காரின்னு எனக்குத் தான் பேரு.''

''ஆமாம்மா. என்ன இருந்தாலும் நீ பண்ற மாதிரி வராது தான். உனக்கு அடுத்தபடி மைதிலியைச் சொல்லலாம் இல்லையா? அவளும் நன்னாத்தானே பண்ணியிருக்கா?''

''போதுமே! காயெல்லாம் சரியா வேகவே இல்லே. நீதான் மெச்சிக்கணும்.''

இத்தனை நேரமும் பேசாமல் இருக்கும் மைதிலி இப்பொழுது ஒன்று சொல்லுவாள்:

''காய்கறியை ரொம்பவும் வேக வச்சா அதில இருக்கிற சத்தெல்லாம் அழிஞ்சு போயிடும்னு டாக்டர் சொல்லுவா.''

ராகவன், இதற்குள் மனைவியைப் பரிதாபமாக ஒரு பார்வை பார்ப்பான். அவ்வளவுதான், அதற்குப் பின் அவள் பேசவே மாட்டாள்.

அண்ணாக்களின் வீட்டில், நிற்க நேரம் இல்லாமல் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்த அம்மா வேறு.

மருமகள் சமைத்துப் போட, காலையும் மாலையும் கோவிலுக்குப் போய்விட்டு, மிச்ச நேரத்தில் இப்படி எதையாவது, யாரையாவது போட்டு உருட்டிக் கொண்டிருக்கும் அம்மா வேறு.

ராகவனுக்கே இந்த மாற்றம் புரிந்தது. எத்தனையோ சகித்துக் கொண்டிருந்த மைதிலியே அன்று வெடித்து விட்டாள்.

பண்டிகைக்காக அவள் வீட்டு வாசலில் கோலம் போட, அம்மா, சும்மாயிருக்க முடியாமல், ''உன் சின்ன மன்னி கோலம் போட்டுப் பார்க்கணும். கண்ணுல ஒத்திக்கிற மாதிரி இருக்கும்'' என்றாள்.

அடுத்து வந்த பண்டிகைகளில் மைதிலி சர்வ அலட்சியமாக நாலு கோடுகளை இழுக்க ஆரம்பித்தாள்.

''என்ன மைதிலி இது? நீயா இப்படிக் கோலம் போடறே?''

ராகவன் அவளைப் பார்த்து புருவத்தைச் சுருக்க அவள், அவனை வெட்டுவது போலப் பார்த்தாள்.

''ஆமா. இங்கே கோலம் போடப் பிடிக்கலே.''

''என்னது?''

''கல்யாணமாகி வந்தப்ப எத்தனையோ ஆசையோட எல்லாத்தையும் அழகாச் செய்யணும், ருசியா செய்யணும்கற நினைப்போடதான் வந்தேன். ஆனா, உங்க அம்மா, அப்பப்போ சவுக்கால அடிக்கற மாதிரி, வார்த்தையால அடிச்சே எனக்குள்ளே இருந்த ஆசையெல்லாத்தையும் விரட்டிட்டா.''

''அவ பாவம், மைதிலி. என்ன பேசறதுன்னு தெரியாமலேயே பேசறா.''

''இத பாருங்கோ, இங்கே இத்தனை பேசறவர், மன்னிகள் கிட்ட ஒரு வார்த்தை பேசியிருப்பாரா? நான் அடங்கி அடங்கிப் போறேங்கறதாலதானே, அம்மா என்னையே குத்தறா. ஒண்ணு மட்டும் சொல்றேன், நினைப்புல வச்சுக்கோங்கோ. எந்தப் பெண்ணும் புகுந்த வீட்டுக்குள்ளே நுழையறப்ப மாமியாரைத் தன் அம்மாவாப் பாவிச்சு, ஒத்துமையாக் குடித்தனம் பண்ணி நல்ல பேர் வாங்கணுங்கற ஆசைகளோடத்தான் வருவா. அவளை நல்ல மருமகளா வச்சுக்கறதும், இது மாதிரி எதுலேயும் வெறுப்பு ஏற்படறாப்பல மாத்தறதும், சிடுமூஞ்சியா ஆக்கறதும், சண்டைக்காரியா அவளை உருவகப்படுத்தறதும், அகமுடையான் கிட்ட கோள் சொல்ற புத்தியை வளர்க்கறதும் இந்த மாமியார்கள் தான். நாங்க வேணா மாமியாரை இன்னொரு தாயாரா நினைச்சுக்க முடியுமே தவிர, இவா, தங்களுக்கு வர்ற நாட்டுப் பெண்ணைத் 'தன் பிள்ளைய தன் கிட்டயிருந்து பிரிக்க வந்திருக்கிற எதிரியாத் தான் நினைக்கறா. என்னால இனிமேயும் வார்த்தைகளைச் சுமக்க முடியாது.''

அன்று, அம்மாவிடம் ராகவன் இது பற்றிப் பேசியபோது அவள் 'கோ'வென அழுகிறாள்.

''நான் என்னடா சொல்லிட்டேன்?''

''பெரிசா, சின்ன மன்னி கோலத்தைப் பற்றிப் புகழ்ந்தயாமே? அவ எத்தனை நாள் உன் கூடச் சேர்ந்து இருந்திருக்கா. ஏம்மா நீ கூட இப்படி மாறிட்டே?''

''நான் மாறிட்டேனா? சொல்லுவேடா; சொல்லுவே. கல்யாணத்துக்கு அப்புறம் நீதான் மாறிட்டே. உனக்கு உன் பொண்டாட்டிதான் உசத்தியாப் போச்சு. இந்தக் கஷ்டங்களை எல்லாம் பார்க்காம உங்க அப்பா முன்னாடியே போயிட்டார். என்னையும் சீக்கிரமா அழைச்சுக்க மாட்டாரோ?''

அம்மா பேசிக்கொண்டேபோனாள்.

அவனைப் பெற்றபோது, டாக்டர், குழந்தை பிழைக்காது என்று சொன்னது பற்றி, குழந்தைக்காகத் தான் உப்பில்லாத பத்தியம் இருந்தது பற்றி, அந்தக் காலத்தில் தன் மாமியார் தன்னை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தியிருக்கிறார் என்பது பற்றி, அப்பாவுக்கு வரும் முன் கோபங்கள் பற்றி, அவர் 'பொக்'கென ஒரு நாள் கண்ணை மூடியது பற்றி, அப்பா கடைசிப் பிள்ளையான இவனை நம்பித்தான், தன்னை ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிறார் என்பது பற்றி, மூத்த மகன்களும் மருமகள்களும் ஏதோ விட்டேற்றியாக நடந்து கொண்டாலும் அந்த வீட்டில் தனக்குக் கிடைத்த நிம்மதியும் சுதந்தரமும் இந்த வீட்டில் தனக்கு இல்லை என்பது பற்றி, கல்யாணத்தில் பெண் வீட்டுக்காரர்கள் நடந்து கொண்ட முறையைப் பற்றி, முகூர்த்தத்தின்போது தாங்கள் யாருமே சாப்பிடாதது பற்றி, கடைசியில் பிள்ளையின் இஷ்டத்துக்காகத் தான் வளைந்து கொடுத்து, இத்தனைத் தியாகங்கள் செய்தும் தனக்கு 'மாமியார் பொல்லாதவள்' என்கிற அவப் பெயர் வந்தது பற்றி...

''அம்மா, அம்மா, நான் சொல்றதைக் கொஞ்சம் கேளேன்.''

அவனுடைய குரல் அங்கே எடுபடவில்லை.

இப்போதெல்லாம் மைதிலி, உப்போ காரமோ எதையோ ஒன்றைப் பொங்கி வைத்துவிட்டு, பிறந்தகத்துக்கு ஓடி விடுகிறாள். அங்கேயிருந்து, ராகவனுக்குப் போன் செய்து விடுகிறாள்.

''அப்பாவுக்கு உடம்பு சரியில்லே. நான் பார்த்துண்டுதான் வர முடியும்.''

''அம்மாகிட்ட சொன்னியா மைதிலி?''

''ஏன்?''

''எதுக்கும் அம்மாகிட்ட சொல்லிட்டு வந்திருக்கலாம்.''

''எனக்கு என்ன தெரியும்? இங்கே வந்ததுக்கு அப்புறந்தான் அப்பாவுக்கு உடம்பு சரியில்லாததே தெரியும்.''

''ராத்திரிக்குச் சமைச்சு வச்சுட்டியா?''

''இல்லே. காலம்பற சமைச்சது தான். இப்பவே புண்ணினா உங்க அம்மா ஏதாவது முணுமுணுப்பா. அதான் வந்துட்டேன்.''

''எப்ப வருவே?''

''......''

மைதிலி திரும்பி வருகிற வரைக்கும், அம்மாதான் சமையலறை நிர்வாகம். மூத்த பிள்ளைகள் வீட்டில் ஓடி ஓடிச் செய்ததுபோல இப்போது முடிவதில்லை. பழக்கம் விட்டுப் போனதால் மூச்சு வாங்கும். எதையோ சமைக்கப் போய் எதையோ செய்து முடிப்பாள். வீட்டு வேலைகளைப் பார்த்தால் கோவில் குளமென்று போகமுடியாது. ராகவனிடம் அழத் தொடங்குவாள், தன் கதி இப்படி ஆனது பற்றி...

''ஊரே என்னை நல்லவ நல்லவங்கறது... என் மாட்டுப் பொண்களுக்குத்தான் நான் வேண்டாதவளாய்ப் போயிட்டேன்.''

ராகவன் பாவம், நல்ல பிள்ளை, இத்தனைக்குப் பிறகும் அம்மாவை ஒரு குழந்தையாய்ப் பாவித்துத் தேற்றியும், மனைவியை ஒரு பிரியமான சிநேகிதியாய் நினைத்து, அவளைச் சமாதானப்படுத்தவும் நடையாய் நடந்து கொண்டிருக்கிறான்.

❋

ஆற்றுப் பெருக்கு

கி. ராதாகிருஷ்ணன் ஐ.பி.எஸ்.



நதிமூலம் ரிஷிமூலம் இரண்டையும் கண்டுபிடிப்பது கடினம். கங்கை, யமுனை, சரஸ்வதி, பிரம்மபுத்திரா, நர்மதா, கோதாவரி, காவேரி முதலிய நதிகளைப் பெண்களாக—தேவியாகச் சொல்வது வழக்கம். குளித்து, குடித்து உயிர் வாழ, பயிர் வளர, மின்சக்தி பெற ஆறுகளின் நீரோட்டம் மிக அவசியம்.

உயிரோட்டம் இருந்தால்தான் உணர்ச்சிகள் பெருகிடும். ஊற்றுகள் பெருகெடுத்தால் ஆறாக ஓடும். உள்ளம் உருகினால் கண்ணீர் பெருகி வழியும்' பனிக்கட்டிகள் உருகினால் நதி உருவாகும். கண்ணீர் வடிந்தால் உணர்ச்சி அலைகள் அடங்கும். மழை பொழிந்தால் ஆறு கரை புரண்டு ஓடும். பருவம் வந்தால்தான் மழை பொழியும்.

ஊற்றுகள், பனிக்கட்டிகள், மழை இவையே நதியின் மூலம். சில ஊற்றுகள் வெப்ப நீரைக் கக்கும். இவற்றை ஆங்கிலத்தில் கெய்ஸ்ஸர்ஸ் (Geysers) என்பார்கள். குளிக்கும் அறையில் வைக்கப்படும் கெய்ஸர் வேறு. அது குளிக்க வெப்ப நீரைக் கொடுக்கும் மின் கருவி. பனிக்கட்டி ஆறுகள் (Glaciers) உயர்மட்டத்தில் மெல்ல மெல்ல நகர்ந்து கீழ் மட்டத்தில் உருகி ஜீவநதிகளாக ஓடும். மழை பொழிந்தால் சிற்றாறுகள், காட்டாறுகள், மலையருவிகள் முதலியன உருவாகி ஆங்காங்கு ஒன்றோடு ஒன்று இணைந்து பெரிய ஆறாகும்.

வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்தில் ஓட்டம் சுறுசுறுப்பாக இருக்கும்; தடுமாறி விழ மேடு பள்ளங்கள் உண்டு. நதியின் ஓட்டம் மலைப் பகுதிகளில் வேகமாக இருக்கும். கரடுமுடான ஏற்றத்தாழ்வு மட்டங்களைக் கடக்கும்போது நீர் வீழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அவை மின்சக்திக்கு உதவும். மலைப் பாறைகளை அரித்து அரித்து ரசாயன உப்புக்களுடன் மணலை அடித்துக்கொண்டு திணறியபடி சம நிலப்பரப்புக்கு வந்து சேரும். அப்போது வேகம் குறையும்.

கீழ்மட்டத்துக்கு வந்தவுடன் திசை அறியாமல் அங்குமிங்குமாக வளைந்து செல்லும். இதற்கு Meandering என்று பெயர். 'யூ' எழுத்துப் போல வளைந்து செல்லும்போது சில காரணங்களை யொட்டிச் சுற்றி வளையாமல் குறுக்கே பாயும். வழக்கமாகச் சென்ற வளைவு பாதை விட்டுப் போய் அங்கே ஓர் ஏரி உருவாகும். அதற்கு Ox-Bow lake என்று பெயர். பூகம்ப அதிர்ச்சியிலும் திசை மாறும். வெள்ளம் ஏற்பட்டுச் சீறிப் புரளும். 'சீனாவின் துயரம்' என்பது அடிக்கடி தடம்புரண்டு சீறும் ஹுவாங்ஹோ நதியைக் குறிக்கும். நம் நாட்டில் சீற்றம் அவ்வளவு கிடையாது. சில ஆறுகள் பருவக் கோளாறினால் வறண்டுபோய் நம்மை வாட்டும். சில சமயம் சீறினாலும் சீக்கிரம் கட்டுப்பட்டு விடும்.

வளைந்து கொடுத்து, பெருக்கெடுத்துச் சுற்றி ஓடி ஆடிய பிறகு தளர்ச்சியடையும். சுமந்துகொண்டு வந்த வண்டல் மணலைச் சுமை தாங்காமல் அங்கங்கே பரப்பும்.

பிறகு கிளைகளாகப் பிரியும். இரண்டு கிளை நதிகளுக்கிடையே உருவாகுவதுதான் டெல்டாப் பிரதேசம்.

நதிகள் கொண்டு வந்த ரசாயன வண்டல் மண்தான் பயிர்களைச் செழிக்க வைக்கிறது. சத்து இழந்த நீர் கடலில் சங்கமாகி உருக் குலைந்துவிடும். மீண்டும் வேகமாக வானத்தை எட்டும்.

ஆகாயத்திலிருந்து பூமியில் எங்கு நீர் விழுந்தாலும் கடலை அடைவதைப் போல, மனித உள்ளங்களிலிருந்து ஊற்றுப் பெருக்கெடுத்து எழும் பக்தி அலைகள் கேசவன் ஒருவனையே அடையும். கேசவன் என்பது மனிதப் பிறவியல்ல. ஈசன் அவன். ஆற்றுடன் நீந்திச் சென்று கடலில் மூழ்கிய நாம் திரும்பிச் சற்றுக் கரையேறி நிலத்துக்கு வருவோம்!

உலகிலுள்ள பல நகரங்கள் நதிக்கரைகளில்தாம் அமைந்துள்ளன. லண்டன்—தேம்ஸ் நதி, நியூயார்க் ஹட்ஸன் நதி, பாரீஸ்—ஸோான் நதி, சென்னை கூவம், அடையாறு நதிகளின் கரைகளில் உள்ளது போல! சரித்திரக் கால நாகரிகமும் நதிக்கரையில்தான் வளர்ந்திருந்தது. சிந்து நதிப் பள்ளத்தாக்கின் நாகரிகத்தை மொஹஞ்சோதாரோ, ஹரப்பா சரித்திர ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். சிந்து நதியைப் பற்றிப் பாரதி கண்ட கனவு வேறு!

'சிந்து நதியின்மிசை நிலவினிலே சேர
நன்னாட்டிளம் பெண்களுடன்
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிகலோட்டி விளையாடி வருவோம்
சங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்'

நதிகளைக் கட்டி இணைத்துச் சமுதாய ஒற்றுமையை வளர்க்க கண்ட கனவு அது. பாரதியின் ஆசைக்கு அணை கட்ட முடியாது.

'வங்கத்தில் ஓடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்'

என்று கற்பனை வெள்ளத்தில் மூழ்கினான் பாரதி. கனவு நினைவாகாமல் சொற்ப ஆயுளுக்குள் மறைந்தான். அவன் ஆன்மா சாந்தியடையட்டும். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. ஆறில் சாவது வயதைக் குறிக்கும். ஆற்றிலும் சாகலாம், இடறி விழுந்து நீந்தத் தெரியாவிட்டால். நீந்தத் தெரிந்தும் மூழ்கி முக்திப் பெறுவோரும் உண்டு. உணர்ச்சிப் பெருக்கில் இரத்த ஆறு ஓடக்கூடாது. தோய்ந்துவிடும்!

வேதங்கள், இதிகாசங்கள், சரித்திரம், இலக்கியம் ஆகியவை நதிகளை வர்ணித்துப் போற்றுகின்றன. நதியில் நீந்தி விளையாடலாம்' ஆற்றைக் கடந்து கரையேறுவது கடினம். தோணி வேண்டும். வாழ்க்கையில் அறிவு தேவைப்படும். கிணற்று நீரை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றுவிடாது என்று கிணற்றுத் தவளையாக இருந்தால் முன்னேற முடியாது. எதிர் நீச்சல் போடத் தெரிய வேண்டும், முன்னேறுவதற்கு!

ஆறுவது சினம். சினம் பெருக்கெடுத்தால் வினை விபரீதமாகும். ஆறு மனமே ஆறு என்று சாந்தி பெறுவது நலம். இந்த ஆறு எண்ணும் அல்ல, ஓடும் நதியும் அல்ல! மனத்தை அமைதிப்படுத்துவது! *

நேர்க்கோடும் புள்ளியும்

இரா. மரியதாஸ்

விடிந்தால் தீபாவளி. வீதி முழுதும் கோலங்கள். கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள். கன்னிப் பெண்களின் கனவுலகில் உருவான காவியங்கள். கலைத்திறனை வெளிக் காட்டும் ஓவியங்கள்.

கூடத்தில் முடித்துவிட்டு வெளி வராந்தாவில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள் ராதிகா. பொன் நிறம், பூரித்த கன்னங்கள், புதுக் கவிதை எழுதும் கண்கள். பூத்துக் குலுங்கும் இளமை. பூவுடலைச் சுற்றி 'ராகமாலிகா'ப் புடைவை, கழுத்தில் டாலர் பதித்த தங்கச் சங்கிலி. தலையில் பூப்பந்து. ஒரு கையில் 'மா'க் கிண்ணம். மறு கையில் தூரிகை.

தழைய முடித்த கூந்தல் தரையைத் தொட்டது. குனிந்த நிலையில் கோலம் எழுதும் லாகவம். தங்க ரதம் தரையில் நிற்பது போன்ற காட்சி.

''எத்தனை நேரமாய்க் கோலம் போட்டிண்டிருப்பது? சீக்கிரம் முடிச்சுட்டு வந்து கொஞ்சம் கூட மாட ஒத்தாசை பண்ணக் கூடாதா?''

அடுக்களையில் காரியமாயிருந்த விசாலாட்சி அங்கலாய்த்தாள்.

''இதோ வந்துட்டேம்மா! கோலம் முடியப்போறது? இன்னும் அஞ்சு நிமிஷத்தில் வந்துடறேன்'' என்றாள் ராதிகா.

''ஆமாம். நீயும் வரேன் வரேன்னு சொல்லிட்டே இருக்கே. ஆனா வந்த பாடில்லை. எனக்கும் காலையிலேயிருந்து ஓய்வு ஒழிச்சல் இல்லை. இடுப்பெல்லாம் நோகிறது. பிழிஞ்சிப் பிழிஞ்சிக் கையெல்லாம் வலி. ம்.. உன் வேலை உனக்குப் பெரிது!''

அலுத்துக்கொண்டாள் விசாலாட்சி.

எதேச்சையாய் முன்னறைக்கு வந்த சிவராமன், ''விசாலம்! இங்கே வந்து பாரேன். என் பெண் எவ்வளவு சமர்த்து! எத்தனை அழகாக் கோலம் போட்டிருக்கா! நீயுந்தான் இருக்கே இத்தனை வருஷமாய்! இப்படி ஒரு கோலம் போடத் தெரியுமா உனக்கு?''

மகளைத் தலையில் தூக்கிக் கொண்டு ஆடாத குறையாகப் புகழ்ந்தார்.

அடுக்களையிலிருந்து வெளி வந்த விசாலாட்சி, ''ஆமாம், அழகாய்ப் போட்டிருக்கா. என் கண்ணே பட்டுடும் போலிருக்கு. அத்திம்பேர் வந்து பார்த்துட்டுக் கட்டாயம் மயக்கம் போட்டு விழத்தான் போறார், பாருங்களேன்!''

''உஸ்ஸ்' என்று உதட்டில் விரலை வைத்து எச்சரித்த சிவராமன் மனைவியை உள்ளுக்கு அழைத்துச் சென்றார். ''உனக்கு வாய் ரொம்ப நீளம். அத்திம்பேரை மயக்கி இவளுக்கு என்ன ஆகப் போகிறது? நீ கொஞ்சம் நிதானமாய்ப் பேசப் படாதோ?''

''ஏதோ தெரியாமல் வாய் தவறி வார்த்தை வந்துவிட்டது. பாவம், என் குழந்தை மனசு என்ன வேதனைப்பட்டதோ?'' என்று தன் பிழையை உணர்ந்தவளாகப் புலம்பினாள் விசாலாட்சி.

சிவராமன் தம் அறைக்குச் சென்றார். ஈஸிசேரில் உடம்பைப் போட்டார். அவருடைய உள்ளம் வேதனையால் விம்மி வெடித்தது.

அவர் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் மாவட்ட அதிகாரியாக இருந்தவர். கோவா அரசாங்கத்துக்குச் சிறப்பு ஆலோசகராக இருந்து சமீபத்தில்தான் ஓய்வு பெற்றார். தம் நீண்ட நாளையச் சேமிப்பில் கணிசமான தொகையைப் போட்டு எழுப்பிய மாளிகைதான் அந்த வீடு! பெருங்காயம் இருந்த பாத்திரமாயிற்றே? இன்றைக்கும் ஒரு குறைச்சல் இல்லை. கார், பங்களா, எடுபிடியாட்கள்! நிம்மதி நிறைந்த வாழ்க்கை.

சிவராமனுக்கு மூன்று பிறந்தன; மூன்றும் பெண் பிள்ளைகள். மூத்தவள் பெயர் ராதிகா. இரண்டாமவள் லதா. கடைக்குட்டி சுதா.

ஒரு பெண் பிறந்தாலே போதும் இந்தக் காலத்தில்! ஏதோ குடி மூழ்கி விட்டது போல் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். ஆனால் சிவராமன் அப்படியில்லை. இந்தக் கால மனிதர்களிலிருந்து சற்று மாறுபட்டவர். மூன்றும் பெண்ணாகப் பிறந்த போது கூடக் கொஞ்சமும் மனம் கலங்காதவர்.

''விசாலம், நீ எதுக்காகக் கண் கலங்கறே? பிள்ளைக் குழந்தை பிறக்கலையே என்று கவலைப்படறியா? இந்தக் காலத்தில் பிள்ளைகளைவிடப் பெண்கள்தாம் பெற்றவர்களுக்குக் கடைசி வரைக்கும் துணையிருந்து காப்பாற்றுவார்கள். ஆண்களெல்லாம் பெண்டாட்டி வருகிற வரைக்குந்தான்! அப்புறம் பெற்றவர்களை நட்டாற்றில் விட்டுட்டு, 'அவளே உலகம்' என்று சரணாகதி அடைந்து விடுகிறார்கள். ஆனால் பெண் குழந்தைகள் அப்படியில்லை. தனக்கென்று ஒரு குடும்பம், குழந்தை குட்டி என்று ஆனபிறகுங்கூடப் பெற்றவர்களை மறப்பதில்லை. அன்பு காட்டி ஆறுதல் கூறி, கை கொடுத்துக் காப்பாற்றவும் செய்கிறார்கள். அப்படியிருக்க நீ ஏன் கவலைப்பட வேண்டும்? பகவான் நமக்குக் கடைசி வரைக்கும் கைவிடாத மூன்று துணைகளைக் கொடுத்திருக்கிறாரே என்று நினைத்துச் சந்தோஷப்படு'' என்று, ஒவ்வொரு பிரசவத்தின் போதும் விசாலாட்சிக்கு ஆறுதல் சொன்னவர்.

மூத்த பெண் எம்.ஏ. இலக்கியம் முடித்தாள். அடுத்தவள் கணிதம் எடுத்து எம்.எஸ்ஸி பட்டம் பெற்றாள். மூன்றாமவள் விஞ்ஞானம் படித்து மாஸ்டர் டிகிரி வாங்கினாள்.

மூவரும் அழகிகள். சித்திரைத் தேர் போல் வீட்டில் வலம் வந்து கொண்டிருந்தார்கள்.

''பெண் பிள்ளைகளை உடுத்தி அழகு பார்க்க வேண்டிய காலம் ஒன்று இருக்கிறது. அதுதான் கல்யாணம் ஆவதற்கு முன்பு உள்ள குமரிப் பருவம். நம் குழந்தைகள்

விதவிதமாய் உடுத்திக் கொண்டு நிற்பது எவ்வளவு அழகாய் இருக்கிறது தெரியுமா?'' என்று மனைவியிடம் சொல்லிப் பூரித்துப்போவார் சிவராமன்.

ராதிகாவுக்குக் கல்யாணப் பூ மலர்ந்தது. ஸ்ரீதரன் வந்தான், பார்த்தான், பரவசமானான். அழகுச் சிலையை மனைவியாக்கிக் கொள்ள கொடுத்து வைத்திருக்க வேண்டுமே! மற்ற விஷயங்களைப் பேசி முடித்தார்கள். விரைவில் திருமணத்துக்கான ஒரு நல்ல நாளை ஏற்பாடு செய்யச் சொன்னார்கள். எல்லாப் பொறுப்புக்களையும் பெண் வீட்டாரிடமே ஒப்படைத்துவிட்டுச் சென்று விட்டார்கள்.

சிவராமனுக்கு விவரிக்க முடியாத மகிழ்ச்சி. எம். டெக். படித்த பொறியியல் பையன். பிரபல கம்பெனியில் மானேஜர் பதவி. இளமையுடன் கூடிய எடுப்பான தோற்றம், கை நிறையச் சம்பளம், கார், எடுபிடி ஆட்கள், வயதுக்கு மீறிய அறிவு விலாசம். இத்தனையும் நிரம்பிய ஆணழகன் ராதிகாவுக்குக் கணவனாக, வீட்டு முதல் மாப்பிள்ளையாக அமைந்ததைக் கண்டு பொங்கிப் பூரித்தார்.

திருமணத்துக்கான நாள் குறித்தாகி விட்டது. இன்னும் ஒரு மாதம் இருந்தது. நகை, பாத்திரம் பண்டம், சீர் செனத்தி என்று தடபுடலான ஏற்பாடுகள்!

சிவராமன் ஜவுளிக் கடையை வீட்டில் விரித்தார். பிரியப்பட்டதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி மகளுக்கு உரிமை கொடுத்தார். நகைக் கடை ஷேட்ஜி வந்தார். வைரம், புஷ்பராகம், வைடூரியம் என்று கண்ணைப் பறிக்கும் நகைகளைப் பரப்பினர். தனக்குப் பொருத்தமானதை எடுத்துப் பூட்டிக் கொண்டாள் ராதிகா.

குடும்பம் நடத்துவதற்குத்தேவையான பாத்திரம், கட்டில், காட்ரெஜ், டன்லப் என்று பெயர் பெற்ற நிறுவனப் பொருள்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன.

ஒரு நாள் இரவு எட்டு மணி இருக்கும். சாப்பாட்டு நேரம். மூன்று சகோதரிகளும் மேஜையைச் சுற்றி உட்கார்ந்து அரட்டை அடித்தார்கள்.

''ஐயையோ ஓடி வாங்களேன். ராதிகா மயங்கி விழுந்துட்டாளே! சீக்கிரம் ஓடி வாருங்களேன்'' என்று விசாலாட்சி அலறினள்.

சிவராமன் அலறிக் கொண்டு ஓடி வந்தார். ராதிகாவைக் காரில் போட்டுக்கொண்டு பிரபல நர்ஸிங் ஹோம் ஒன்றுக்கு விரைந்தார். ராதிகாவைப் பரிசோதித்த டாக்டர் நிர்மல் உடனடி நிவாரணமாக ஊசி போட்டார். தொடர்ந்து பல சோதனைகளைச் செய்தார். முடிவுகள் திடுக்கிடும் தகவல்களைத் தெரிவிக்கவே சிவராமனைத் தனி அறைக்கு அழைத்துச் சென்றார்.

''என்ன சொல்றீங்க டாக்டர்? எங்கள் தலையில நெருப்பை வாரிப் போட்டுடாதீங்க டாக்டர்!'' அலறினர் சிவராமன்.

அவரை ஆசுவாசப்படுத்திய டாக்டர், ''இந்த விஷயத்தை எவரிடமும் சொல்லாமலிருப்பது உங்களுக்கும் உங்கள் குடும்பக் கௌரவத்துக்கும் நல்லது'' என்று எச்சரித்தார்.

''இவளுக்குக் கல்யாண ஏற்பாடெல்லாம் நடந்து கொண்டிருக்கு, டாக்டர்!''

''இந்த நிலையில் கல்யாணம் வேறு? படித்த நீங்கள் பேசுகிற பேச்சா இது?'' என்று டாக்டர் நிர்மல் கேட்டபோது பேசாமல் குமுறிக்கொண்டு நின்றார் சிவராமன்.

ராதிகாவை நர்ஸிங் ஹோமில் சேர்த்துவிட்டு வீட்டை அடைந்தபோது இரவு மணி பதினொன்று.

விசாலாட்சிக்கு அரச புரசலாக விஷயம் எட்டியதும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு புலம்பினள். மற்ற இரு சகோதரிகளிடம் ஒரு விவரமும் சொல்லவில்லை. 'ராதிகாவுக்கு உடம்பு சுகமில்லை!' என்று மட்டும் சொல்லிச் சமாளித்தார்கள்.

கொஞ்சமும் எதிர்பாராத நேரத்தில் பிள்ளை வீட்டாருக்கும் சிவராமன் எழுதிய கடிதம் கிடைத்தது.

'மதிப்புக்குரிய திருவாளர் நாராயணன் அவர்களுக்கு, வணக்கம்.

'இந்தக் கடிதம் கிடைக்கும் போது கல்யாண ஏற்பாடுகள் வெகு தடபுடலாக நடந்து கொண்டிருக்கும். நாங்களும் இங்கே எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து முடித்தோம். இதனிடையே எதிர்பாராத விதமாய் ஒரு சிக்கல் ஏற்பட்டு விட்டதால் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

'நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்து விட்டது. தங்கள் பையன் ஸ்ரீதரைக் கணவனாக அடையும் பாக்கியம் என் மூத்த பெண் ராதிகாவுக்குக் கிடைக்கவில்லை. அதற்கான விளக்கங்களை எழுதித் தங்களுடைய நல்லிதயத்தை வேதனையில் ஆழ்த்த விரும்பவில்லை.

'தங்கள் பையன் எங்கள் வீட்டில் காலெடுத்து வைத்தபோது எங்கள் வீட்டு மருமகனாகவே ஏற்றுக் கொண்டு விட்டோம். மூத்தவளுக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. அடுத்துள்ள இரு பெண்களில் ஒருத்தியைத் தங்கள் வீட்டு மருமகளாக்கிக் கொண்டால் பெருமகிழ்வு கொள்வோம்.

'சில சமயம் ஆப்பிள் வாங்கக் கடைக்குச் சென்று ஆரஞ்சு வாங்கிய திருப்தியுடன் திரும்புவது உண்டு. அதுபோன்ற சூழ்நிலையை மனத்தில் கொண்டு என் வேண்டுகோளை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

'நான் ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியாக இருந்து இதுநாள் வரை உத்தரவுகளைத்தான் பிறப்பித்துள்ளேன். ஆனால் என் வாழ்நாளிலேயே முதல் முதலாக இந்த ஒரு விஷயத்தில் நான் உங்களிடம் கைநீட்டி யாசிக்கிறேன். தங்களது அன்புள்ளம் நல்லதொரு முடிவை உடனடியாக எழுதும் என்று எதிர்பார்க்கிறேன்.

—சிவராமன்.'

ஒரு வாரம் கழித்துப் பிள்ளை வீட்டாரிடமிருந்து பதில் வந்தது.

'பரந்த நோக்கும் பெருந்தன்மையான குணமும் கொண்ட தங்கள் இல்லத்தில் பெண் எடுப்பதைப் பெரும் பேருகக் கருதுகிறோம். இப்படியொரு சம்பந்தம் கிடைக்க நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

'தங்களிடம் ஒரு வேண்டுகோள். எனக்கு இரு மகன்கள். இருவரும் இஞ்சினியர். தங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்றால் தங்களுடைய இரண்டாவது பெண், மூன்றாவது பெண் இருவரையும் எங்களுடைய இரு பிள்ளைகளுக்கும் மணம் செய்து கொள்ள விரும்புகிறோம். தாங்கள் பெரிய மனசு வைத்து எங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.'

கல்யாணம் 'ஜாம்ஜாம்' என்று நடந்து முடிந்தது.

தனிக்குடித்தனம் வைத்து, இல்லற சுகம் அநுபவித்த இரு இளம் ஜோடிகளுக்கும் இது தலை தீபாவளி.

... மணி ஆறு இருக்கும். சென்னையிலிருந்து ஸ்ரீதரும் அவள் மனைவி லதாவும் வந்தார்கள்.

இரவு மணி எட்டரைக்கு மைசூரிலிருந்து சேகரும் அவன் மனைவி சுதாவும் வந்து சேர்ந்தார்கள்.

எண்ணெய் ஸ்நானம், புத்தாடை, பலவகை இனிப்புக்கள், காரங்கள், மத்தாப்பு, வெடிச் சத்தம் இவற்றுடன் தலை தீபாவளி இனிது கழிந்தது.

மறுநாள் காலை. படுக்கையை விட்டு எழுந்து வந்தாள் சுதா. முகத்தில் களையில்லை.

காபியை நீட்டிய விசாலாட்சியிடம், முகம் கொடுத்துப் பேசவில்லை. தனக்கும் சேகருக்கும் காபி எடுத்துக் கொண்டு வெடுக்கென்று திரும்பிப் போய்விட்டாள். 'என்ன வந்தது இவளுக்கு?' என்று முணுமுணுத்தபடி நின்றாள் விசாலாட்சி. மதியச் சாப்பாட்டின்போதும், மாலையிலும் அவள் முகத்தில் சிடுசிடுப்புக் குறையவில்லை. விசாலாட்சி பொறுமை இழந்தாள்.

''என்னடி வந்தது உனக்கு? என்ன குறைச்சலாய்ச் செய்து விட்டோமென்று முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டு நிற்கிறாய்?'' என்று கேட்டாள் தாய்.

''எங்களுக்குச் செய்வது இருக்கட்டும். ராதிகாவுக்கு ஒரு காரியம் எப்போ செய்வதாய் உத்தேசம்?'' என்றாள் சுதா.

''என்னடி திடுதிப்பென்று இந்தக் கேள்வி? அவளுக்கு என்ன ஏற்பாடு செய்யச் சொல்கிறாய் இப்போ?''

''ஏனும், அவளுக்கென்று ஒரு கல்யாணம், குடும்பம் வாழ்க்கை அமைத்துக் கொடுக்கிற உத்தேசம் இல்லையா? அவர் இரவு முழுதும் தொணதொணவென்று கேட்டுத் துளைத்து எடுத்து விட்டார். நான் என்னத்தைச் சொல்ல?''

''அது அவள் தலையெழுத்து என்று சொல்லிவிட்டுப் போயேன்!''

''அதெப்படி முடியும்? அவளுக்கு என்ன குறைச்சல்? படிப்பிருக்கு, அழகிருக்கு! அவள் எல்லா விதத்திலும் நல்லாத்தானேம்மா இருக்காள்?''

''வெளித் தோற்றத்திலே நல்லா இருக்கிறாள் என்கிறதுக்காக எதையும் செய்திட முடியுமா? கடையிலே விற்கிற மாம்பழம்கூடப் பார்க்க நன்னாத்தானிருக்கும். ஆனால் வாங்கி நறுக்கிப் பார்க்கும் போதுதான் நல்லதும் கெட்டதும் விளங்கும்.''

''ஏம்மா பூடகமாப் பேசறே? அவளுக்கு என்ன குறைச்சல்? மனசிலே யாரையாவது நினைச்சுண்டு கல்யாணம் வேணும் என்று நிற்கிறாளா? அப்படி ஏதாவது இருந்தாலும் எல்லாருமாய்ச் சேர்ந்து அவளுக்கு ஒரு காரியத்தைச் செய்து முடித்திடுவோம். அவள் மனம் போல் சந்தோஷமாய் வாழ்ந்துட்டுப் போகட்டுமே!''

''இத பாருடி சுதா! உன் கரிசனம் எனக்கு விளங்கறது. பகவான் ஒவ்வொருத்தரையும் படைக்கும் போது பிராப்தம்னு ஒன்றைத் தலையிலே எழுதி விடுகிறான். அவ விதி அப்படியிருக்கு!''

''விதி, தலையெழுத்து என்கிறதெல்லாம் சுத்தப் பொய்யம்மா. நாம நினைச்சா எல்லாத்தையும் மாற்றி அமைச்சிட முடியும்.''

''படிச்சவ என்கிற மமதையிலே அளவுக்கு மீறிப் பேசாதேடி! கண்ணுக்குத் தெரியற நெருப்புக்கும் வெள்ளத்துக்கும் புயலுக்கும் மனிதனாலே ஈடு கொடுத்து மீள முடியலே! கண்ணுக்குத் தெரியாத விதியை மனித சக்தியாலே மாத்திட முடியும் என்று நினைக்கிறாயா?''

''அந்தப் பிரச்னை இப்போ நமக்கு வேண்டாம். அவளுக்குக் கல்யாணம் செய்யாமல் இருக்கிற காரணம் என்ன?''

''மலர்கின்ற பூக்களெல்லாம் தலையில் சூட்டிக்கொள்ள தகுதியுடையவை என்று சொல்லிவிட முடியாது. அதேபோல் பெண்ணாகப் பிறந்தவர்கள் எல்லாம் கல்யாண வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்கள் என்று சொல்லிவிட முடியாது.''

''நீ என்னம்மா சொல்கிறாய்? உன் பேச்சு ராதிகாவின் பிறப்பையே சந்தேகப்படத் தூண்டுகிறதே?''

''நீ இதற்கு மேலே எதையாவது கேட்டு என் வயிற்றெரிச்சலைக் கிளறிவிட்டு விடாதே. என்னைக் கொஞ்சம் நிம்மதியாய் இருக்க விடு. புண்ணியம் உண்டு.''

மாலை மணி ஆறு. சுதாவும் சேகரும் சினிமாவுக்குப் போய் விட்டார்கள். தாயாருக்கு ஒத்தாசையாகக் காரியங்கள் செய்துகொண்டிருந்தாள் லதா.

திறந்த மாடியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் ராதிகா. கையில் கீதை இருந்தது.

''உங்களோடு சற்றுத் தனிமையில் பேச விரும்புகிறேன்'' என்றவாறு அருகில் கிடந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தான் ஸ்ரீதர்.

'என்னிடம் தனிமையில் பேச வேண்டுமா?' பார்வையாலேயே கேட்டாள் ராதிகா.

''உங்கள் சகோதரியின் கணவன் என்கிற முறையில் சில விஷயங்களை மனம் விட்டுப் பேச விரும்புகிறேன்.''

''பரவாயில்லை. கேளுங்களேன்.''

''உங்கள் கூடப் பிறந்தவர்கள், வயதில் சின்னவர்கள் குடியும் குடித்தனமுமாய் வாழும்போது நீங்கள் மட்டும் தனிமரமாய் நிற்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம். இப்படி நீங்கள் திருமணத்தை வெறுத்துவிட்டுப் பிடிவாதமாய் இருப்பதன் காரணத்தைச் சொல்ல முடியுமா?''

''திருமணம் ஒரு பெண்ணுக்கு மிகவும் அவசியமான ஒன்றா?''

''வேடிக்கையான கேள்வி! ஒரு பெண்ணுக்கு ஆணும், ஆணுக்குப் பெண்ணும் துணையாயிருந்து வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்க வேண்டுமென்பது இயற்கையின் நியதி. அந்தத் துணை, உறவு திருமணம் என்கிற சடங்கின்போதுதான் ஏற்படுத்தப்படுகிறது.''

''வாழ்க்கைப் பயணத்தில் சிலர் துணையுடன் செல்ல விரும்புகிறார்கள். சிலர் தனிமையில் செல்ல விரும்புகிறார்கள். அது அவரவர்களுடைய மனநிலையைப் பொறுத்தது. தனிப்பட்ட உரிமையும்கூட.''

''தனிமையில் இனிமை இருப்பதில்லை என்கிறீர்களே?''



''ஒரே ஆபிஸ்ல இவ்வளவு வருஷமா வேலை செய்றோம். ஒரு முக்கிய விஷயம் சொல்லணும்னு நெனைக்கறேன். ஆனா நீ என்ன நெனைச்சிப்பியோன்னு பயம்மா இருக்கு, ராதா!''

''சொல்லுங்க, பரவாயில்லை!''

''நான் உன்னைக் காதலிக்கிறேன்!''

''ஐய! அவ்வளவுதானே! நான் என்னமோ கடனா அஞ்சோ பத்தோ கேக்கப் போறீங்கன்னு பயந்தே போயிட்டேன்!''

''இனிமை இருக்க வேண்டும் என்பதற்காக, இனிமை சேர்க்க வேண்டுமென்பதற்காக, வேண்டா வெறுப்புடன் ஒரு துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியுமா? விருப்பம் இல்லாமல் அமைகிற துணை ஒருவருக்குக் கொடுக்கப்படும் தண்டனையாகக்கூட மாறலாம் இல்லையா?''

''நீங்கள் விரக்தியாகப் பேசுவதாகப் படுகிறது. உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் நிகழ்ந்து அது நிறைவேறாமல் போய்விட்டதா?''

''நாம் இதுவரை ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒரே பாதையில் சேர்ந்து நடப்பதாக நினைத்துப் பேசினேன். ஆனால் இப்போதுதான் புரிகிறது, நாம் இருவரும் ரெயில்வே பாதையில் நடந்து கொண்டு வந்திருக்கிறோம் என்பது!''

''நான் கேட்டதை நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள் என்று நினைக்கிறேன்.''

''நீங்கள் தவறான கேள்வியைக் கேட்டு விட்டீர்கள் என்பதும் உண்மை.''

''உங்களுடைய பேச்சும் தொனியும் வாழ்க்கையில் கசப்பான அனுபவத்தைக் கண்டவர் என்று காட்டுகின்றன. காதலில் தோல்வி கண்டவர்களும் வாழ்க்கையில் வெறுப்பை அடைந்தவர்களுமே இப்படியெல்லாம் பேசுவார்கள்.''

பொங்கி வந்த கோபத்தைப் பொறுமையுடன் விழுங்கிக் கொண்ட ராதிகா, ''நேர்க் கோட்டில் நிற்பவர் குறைந்தது இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ செல்ல முடியும். ஆனால் நீங்கள் நிற்பது ஒரே புள்ளியில்! உங்களுக்கு என் நோக்கமே புரியப் போவதில்லை. புரியவைப்பதும் சுலபமான காரியம் இல்லை. ஆகவே தயை செய்து இதற்கு மேல் எதையும் கேட்டு என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம்.''

வெடுக்கென்று எழுந்தாள். அவனுடைய எந்த விதப் பதிலுக்கும் காத்திராமல் மளமளவென்று படியிறங்கிச் சென்று விட்டாள்.

ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது.

''அம்மா, சீக்கிரமாய் ஓடி வாம்மா. ராதிகா மயக்கம் போட்டு விழுந்து கிடக்கிறா!''

படுக்கையில் சுருண்டு கிடந்த சகோதரியைப் பார்த்துவிட்டு அலறினாள் லதா.

அரக்கப் பரக்க ஓடி வந்த விசாலாட்சி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கணவன் இருந்த அறைக்கு ஓடினாள்.

வாரிச் சுருட்டிக்கொண்டு ஓடி வந்தார் சிவராமன். ராதிகாவைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு மருத்துவ மனைக்கு விரைந்தார்.

வீட்டினுள் சிவராமன் திரும்பக் காலெடுத்து வைத்தபோது இரவு மணி ஒன்பது அடித்தது. மருமகப் பிள்ளைகள் இருவரும் சோபாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் கல்லாகச் சமைந்து போய் நின்றுவிட்டார்,

எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்

''இந்த வயதுப் பெண்களுக்கு மயக்கம் என்பது சாதாரண நேரத்தில் வராது.''

''எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது. ஏதோ தப்புத் தண்டா நடந்து ஏதோ ஆகியிருக்க வேண்டும். இந்த மாதிரி விஷயத்தை எல்லாம் எத்தனை காலத்துக்கு மறைக்க முடியும்? மயக்கத்தோடு வாந்தியும் எடுக்கிறாளா?''

அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை சிவராமனால்.

''அப்படித்தான் என் பெண்ணின் மானம், மரியாதை எல்லாம் அலசப்படுகிறது இங்கே?''

சிவராமன் தொடர்ந்து கூறினார்: ''இப்படி வாய்க்கு வந்தபடி இந்தக் குடும்பக் கௌரவத்தைக் கூறு போட்டுக் கொண்டிருக்கும் எல்லாருக்கும் சேர்த்து ஒரு ரகசியத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். நீங்கள் எல்லாரும் நினைப்பது போல் ராதிகா யாரையும் காதலிக்கவும் இல்லை; இப்போது கர்ப்பமாகவும் இல்லை. அவள் கஷ்டப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பது வெண்டிரெஜல் ஸெப்டல் என்ற வியாதியால். இதய அறைச் சுவரில் துவாரம். அதனால் சுத்த ரத்தமும் அசுத்த ரத்தமும் சில சமயங்களில் பிரிக்கப்படாமல் கலந்து விடுகின்றன! இவ்விதக் கோளாறினால் ராதிகா அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து விடுகிறாள். அதிகமாகச் சிரித்தாலோ, அழுதாலோ, உணர்ச்சி வசப்பட்டாலோ இப்படியொரு நிலை ஏற்பட்டு விடுகிறது. உடம்பு முழுதும் நீலம் பூத்து விடுகிறது. இந்த நிலையில் அவளுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கவோ, பிள்ளைப் பேற்றுக்கான சூழ்நிலையை உருவாக்கவோ கூடாது என்று டாக்டர் கண்டித்துச் சொல்லி விட்டார்.

''இதை எல்லாம் ஏன் முன் கூட்டியே சொல்லவில்லை என்று நீங்கள் எல்லாரும் நினைக்கலாம். மருத்துவ நிபுணர்களில் சிலர் இதைப் பரம்பரை வியாதி என்று சந்தேகப்படுகிறார்கள். அப்படி ஒன்றை மனத்தில் வைத்துக் கொண்டு மற்ற இரு பெண்களையும் வேண்டாம் என்று நிராகரித்து விட்டால் அவர்கள் வாழ்க்கையும் பாழாகிவிடுமே என்கிற பயத்தில் தான் சொல்லவில்லை. உங்களையோ உலகத்தையோ ஏமாற்றும் எண்ணம் எனக்குத் துளிக்கூட இல்லை'' என்றார்.

''உங்கள் மனசு புண்படப் பேசி விட்டோம். எங்களை மன்னித்து விடுங்கள் மாமா!'' என்று தழுதழுத்த குரலில் பேசிய ஸ்ரீதர், ''இந்த வியாதி இதயச் சுவர்களில் உள்ள துவாரத்தினால்தான் என்பது ருசுவாகி விட்டதா?'' என்றான்.

''டாக்டர் அவசியமான சோதனைகளைச் செய்து பார்த்துவிட்டு ஊர்ஜிதப்படுத்தினார். துவாரம் அரை அங்குல விட்டம் இருப்பதாகச் சொன்னார்.''

''சரிப்படுத்த கஷ்டமான அறுவைச் சிகிச்சை தேவைப்படுமே!''

''ஆமாம். சிகிச்சையில் பிழைத்து எழுந்து என் பெண் திரும்பி வரப் போகிறாளோ என்னவோ? ஆண்டவன் அருள்தான் வேண்டும்.''

சிவராமனின் நெகிழ்ச்சியான வார்த்தைகளைக் கேட்டதும் எல்லாருடைய கண்களும் கலங்கின.

காலை மணி எட்டு. மருத்துவ நிலையத்திலிருந்து ராதிகா வந்தாள். சகோதரிகள் இருவரும் கட்டிப் பிடித்து முத்தமாரிப் பொழிந்தார்கள். கண்ணீரால் நனைத்தார்கள். மருமகன்கள் கனிவோடு பேசினார்கள். கரிசனம் காட்டினார்கள்.

இரண்டு நாட்கள் கழிந்தன.

''அறுவைச் சிகிச்சைக்கு நாள் குறித்ததும் எழுதுங்கள். நாங்கள் வருகிறோம்'' என்று கலங்கிய கண்களுடன் வந்திருந்தவர்கள் அனைவரும் விடைபெற்றுச் சென்றனர்.

ஆயிற்று! இளைய பெண்கள் இருவருக்கு இறக்கை முளைத்து விட்டது. துணை கிடைத்துவிட்டது. தலை தீபாவளியைக் கொண்டாடி முடித்து விட்டுத் தம் தம் துணையுடன் பறந்து விட்டார்கள், வாழ்க்கைப் பயணத்தைத் தொடர.

ஆனால் மூத்தவள்? அவளுக்கென்று ஒரு வாழ்க்கைத் துணை கிடைக்குமா?

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியும் பக்த மீராவும் காரைக்காலம்மையாருமே நினைவுக்கு வருகின்றனர். ராதிகா ஆண்டாளாகவும் மாறலாம், காரைக்காலம்மையாராகவும் வாழலாம். அப்புறம் துணைக்கும் வாழ்க்கைக்கும் என்ன குறைச்சல்? ❋

உங்கள் எதிர்காலத்தைத் தெளிவாக அறிய வாய்ப்பு
இதோ பிரபல ஜோதிடரை அணுகுங்கள்

பொய்யாமொழி ஜோதிட மாத இதழ் சித்தார்த்தி வருடம், மார்கழி மாதம் 16-12-1979 தேதியிட்டு 1-12-1979-ல் வெளிவந்த இதழில் 'திருமதி இந்திராகாந்தியின் எதிர்காலம்' என்ற தலைப்பில் பாராளுமன்றத் தேர்தலில் 300 இடங்களுக்கு மேல் பெற்று இந்தியாவின் பிரதமர் ஆவார் என்று உறுதியாகவும் திடமாகவும் வெளியிட்டுத் தமிழ்நாடு காங்கிரஸ் (I) சர்ட்டிபிகேட் வாங்கிய பிரபல ஜோதிடர் தாழ்மையுடன் வெளியிடும் விண்ணப்பம்.

வாழ்க்கை, வித்தை, விவாகம், புத்திர பாக்கியம், புகழ், ஆயுள், தெய்வசித்தி, வீடு, வாகன யோகம், பணம் வரும் காலம், கோர்ட்டு விவகாரங்களில் வெற்றி, காதலில் வெற்றி, உடல் நலம் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளலாம்,

செய்வினை, ஏவல், பில்லி, பேய், துர்மரணம், கெட்ட கனவு, உடல் ஊனம், கிரகப் பாதிப்புகளிலிருந்து நிவர்த்தி பெறலாம். ஜாதகம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் 5 கேள்விகளுக்கு ரூ. 10 M. O. மூலம் அனுப்பித் தெளிவாகப் பதில் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ராஜகுரு

107, வாழைப்பழக்கடை தெரு, சிவகாசி-626123

விவரங்கட்கு உடன் தொடர்பு கொள்ளவும் :

வீணா கொடி பிலிம்ஸ் அளிக்கும்

"முன் வீணை"

கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், டைரக்ஷன் & தயாரிப்பு ;

எம். ராஜகுரு

D. சங்கர்
44, ஸ்ரீராம்பேட்டை
சி.ஐ.டி. நகர்
சென்னை-600 035.

வசதியுள்ள புதுமுக நடிக, நடிகையர் மட்டும் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

மனசு போல...

கடிச்சிக்க மாம்பிஞ்சி—ஒரு
கலயம் நெறயக் கஞ்சி
குடிக்சிக்க நீரோடை—மச்சான்
குந்திக்கப் பூமேடை.
என்ன குறைமச்சான்—கடவுள்
எதிலே குறைவச்சான்?

அலையடிக்கும் ஆத்தங்கரையில் காந்திருந்தாய்;—மச்சான்
சிலையடிச்சாப் போலிருந்து பார்த்திருந்தாய்;
தலைகுனிஞ்சு நடந்துவாரேன் புரிஞ்சுக்கோ;—உன்
தாலிக்குத்தான் கழுத்திருக்கு; தெரிஞ்சுக்கோ.

உலைநெறஞ்ச சோறு ஆசைபொங்குது;—உன்
ஒருத்தனுக்கென் உடம்பில் உசிருதங்குது;
இலைமறைவு காய்மறைவே இல்லையே;—அன்பு
எல்லாருக் கும்மணக்கும் வெள்ளை முல்லையே.

சும்மா தூற்றும் கூட்டம் சந்தைக்கூட்டமே;—நாம்
சொக்குவதோ தேன்விழும் வண்டாட்டமே;
இம்மாம் பெரிய லோகம் சிறுத்துமாறுமா—நம்
இருவருக்கும் இடமில்லாமே தீருமா?

என்ன குறை மச்சான்—கடவுள்
எதிலே குறைவச்சான்?

— மின்னூர் சீனிவாசன் —

விந்தை ஒன்று

தரையில் பாப்பா தவிழ்ந்திடுது;—அது
சாய்ந்தே ஆடி மகிழ்ந்திடுது;
கரையும் இனிப்பும் வாய்வழியே—சுவைக்
கரும்பாய் வழியச் சிரித்திடுது.

தவழ்ந்த பாப்பா அமர்ந்திடுது;—அது
தானே நிற்கப் பார்த்திடுது;
பவழம் போன்ற கைகளை ஊன்றிடுது;
பரபரப் புடனே நின்றிடுது.

நின்ற பாப்பா நடந்திடுது;—அந்த
நிலையாப் பட்டுக் கால்களுடன்
சென்று சுவரைத் துணையாக்கி—மேலும்
செல்லப் பாதை தேடிடுது.

நடந்த பாப்பா ஓடிடுது;—தனது
நடையை மறந்தே நளினமுடன்
தடமும் முழுக்க அழுத்திவிட்டுக்—காலம்
சடுதியில் ஓடி மறைந்திடுது.

நானும் அந்நிலை கடந்திட்டேன்;—உருவில்
நன்றாய் அழகாய் வளர்ந்திட்டேன்;
ஆனால் இன்னும் பெரியோர்போல்—வாழ
ஆசை மிகவும் கொண்டுள்ளேன்.

விந்தை ஒன்றைக் கேளுங்கள்;—பெரியோர்
விருப்பம் குழந்தை ஆகிடவே
எந்த விதமென ஏங்குகிறார்;—அதற்(கு)
ஏற்ற வழியெதும் காணாது.

— மதிஒளி —

அழகிற்கு ஓர் அழைப்பு

எத்தனை நாளாய் உயிர்வளர்த்தேன்?—அடி
எப்படி நீஒரு நொடியினிலே
கொத்திவிட் டாய்எனைப் பார்வையினால்;—வெறும்
கூடாக நான்இங்கே தவிக்கின்றேன்.

முகபடாம் கொண்ட குதிரையைப்போல்—ஒரு
முனைப்பில் பலநாள் சென்றிருந்தேன்;
அகத்தில் தைத்ததே உன்நயனம்;—ஆ
அடுத்த கணம்நான் விண்பயணம்.

பாலையாய்க் கிடந்த இந்தமனம்;—உன்
பார்வை விதைகள் விழுந்தவுடன்
சோலையாய் மாறிய நந்தவனம்;—உள்
சொல்லிக் கொண்டதே அந்தத்தினம்!

தழுவிக் கொள்எனை உன்கையினால்;—மேனி
தணலாய்க் கொதிக்குது வியர்வையினால்;
மழைபொழி இருவிழிப் பார்வையினால்—என்
மயல்தவிர் இனிஉயர் போர்வையினால்.

மதிவண்ணன்

சம் (Sam) மணல் குன்றின் எழில் தோற்றம்.

தார்ப் பாலைவனத்தில் ஒரு தங்கக் கோட்டை

லக்ஷ்மி ரமணன்

இறைவனின் சிருஷ்டி அற்புதமானது. பல விசித்திரங்கள் நிறைந்தது. எதிரெதிரான சக்திகளை உலகில் படைத்து, அவை ஒருங்கே இருந்து இயங்கும்படியாக அமைத்திருப்பது இறைவனின் திருவிளையாடல்.

சோலையைப் பார்க்கையில் பாலைவனமும் நினைவுக்கு வராமல் போகாது. இந்தப் பாலைவனத்தைத் தேடி நாம் பரதேசம் போகவேண்டும் என்பதில்லை. நம் நாட்டிலேயே இராஜஸ்தானில் இதைப் பார்க்க முடியும். தார்ப் பாலைவனம் என்று இதை அழைக்கிறார்கள். பார்மீர், ஜய்சல்மீர், பிகானீர் மாவட்டங்கள் இந்தத் தார்ப் பாலைவனப் பகுதிகளில் அமைந்துள்ளன.

இராஜஸ்தானிலேயே மிகப் பெரிய மாவட்டமான ஜய்சல்மீர் சுமார் 16,000 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது. இந்த ஒரு மாவட்டமே அளவில் கேரள மாநிலத்தைவிடப் பெரியது.

இங்கே அதிக நிலப்பரப்பு மனித சஞ்சாரம் அதிகம் இல்லாத தார்ப் பாலைவனம். மணல் குன்றுகளும், மேடுகளும், முட்புதர்களும் நிறைந்த பொட்டல் பிரதேசம். மழைக் காலங்களில் மட்டுமே சில இடங்களில் பசுமை பூத்து நிற்கும்.

இங்கே வசிக்கிறவர்களில் பாதிப் பேர் நாடோடிகள் தாம். இவர்கள் அவ்வப்போது பசுமையைத் தேடிக் கால் நடைகளுடன் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குக் குடி பெயருகிறார்கள்.

இந்தப் பாலைவனத்தில் ஒரு பகுதியிலாவது நிரந்தரப் பசுமையை ஏற்படுத்த இராஜஸ்தான் மாநில அரசு முயன்று வருகிறது. பஞ்சாபில் பாயும் சட்லெஜ் நதியிலிருந்து இராஜஸ்தான் கால்வாய் மூலம் நீரை எடுத்து 'ராம்கர்' பகுதிவரை கொண்டு வர முயன்று வருகிறார்கள். இத்திட்டம் முழுவதும் நிறைவேறும் போது பல்லாயிரக் கணக்கான ஹெக்டேர் நிலங்கள் பசுமையில் பூத்துக் குலுங்கவும், அதை அடுத்துள்ள பிரதேசங்களில் குடியிருப்புகள் தோன்றவும் வாய்ப்பிருக்கிறது. இப்போதைக்குத் தேவையான குடிநீர் அங்கங்கே உள்ள ஏரிகளிலிருந்து கிடைக்கிறது.

ஜய்சல்மீர், ஜோத்புரிலிருந்து 285 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இதற்கு 'வள்ளமண்டல்' என்றும் 'மத்தாரா' என்றும் பெயர்கள் உண்டாம்.

ராவ் ஜய்சால் என்கிற இராஜபுத்திர அரசரால் தோற்றுவிக்கப்பட்டதால் இந்தப் பெயரை அடைந்தது. ஜய்சால் மேரு என்பதற்கு 'ஜெய்சாலின் கோட்டை' என்று பொருள்.

இந்த நகர் தோன்றுவதற்கு முன் லோதர்வா என்கிற இடம் பாட்டி ('Bhati) பரம்பரையினரின் தலைநகராக இருந்தது. கி.பி. 1178-இல் கோரி முகம்மது வட இந்தியாவில் படையெடுத்தபோது ஜய்சால் அரசர், முன்னவரின் உதவியுடன் பாட்டி அரசரைத் தோற்கடித்து ஜய்சல்மீரைத் தலைநகராக்கி இங்கே குடியேறினார்.

இந்த அரச பரம்பரையினர் கிருஷ்ணபரமாத்மாவின் வழித்தோன்றல்களாம். பாரத யுத்தத்துக்குப் பிறகு யாதவ குலத்தினர் சிதறிப் பரவி இந்தப் பகுதிகளில் குடியேறியிருக்கலாம் என்பது சரித்திர ஆசிரியர்களின் அனுமானம்.

1949-ஆம் ஆண்டு இந்திய சுதந்தரத்துக்குப் பிறகு இராஜஸ்தான் மாநிலம் உருவானபோது, ஜய்சல்மீர், சில ஜோத்புர் சம்ஸ்தானப் பகுதிகளுடன் இணைந்து ஒரு. தனி மாவட்ட அந்தஸ்தைப் பெற்றது. இந்த மாவட்டத்தின் மேற்கு - வடமேற்கு எல்லைகளில் பாகிஸ்தான் உள்ளது.

1968-ஆம் ஆண்டுவரை ஜய்சல்மீருக்கு ரெயில் போக்குவரத்து இல்லாமல் இருந்தது. அப்போது போக்ரன் என்கிற இடம்வரை ரெயிலில் சென்று அங்கிருந்து ஜீப்பிலோ, பஸ்ஸிலோ தான் ஜய்சல்மீரை அடைய முடியும். இப்போது ரெயில் இணைப்பு ஏற்பட்டுவிட்டதுடன், டில்லியிலிருந்து புறப்பட்டு ஆக்ரா,



லோதர்வா ஜைனர் கோயில் நுழைவாயில்

ஜயபுர், ஜோத்புர் வழியாக 'பாலஸ் ஆன் வீல்ஸ்' எக்ஸ்பிரஸ் வாரம் ஒரு முறை ஞாயிறன்று இங்கே வருகிறது.

ஊருக்குள் கோட்டையும், கோட்டைக்குள் ஊரும் அமைந்தது ஜய்சல்மீர் நகரம். கோட்டைக்குள் குறுகலான வீதிகளும், பள்ளிக்கூடங்களும், அலுவலகங்களும் இன்றைய நாகரிகத்தினால் பாதிக்கப்படாத பழங்கால வீடுகளும், திவான்களின் ஹவேலிகளும் உள்ளன.

99 வெளிப்புற வளைவுகளைக் கொண்ட ஜய்சல்மீர்க் கோட்டை மன்னர் மகாராவல் ஜய்சாலினால் கி.பி. 1212-இல் கட்டப்பட்டதாம். கோட்டைச் சுவரும், அதிலுள்ள அரண்மனைகளும், கோவில்களும், ஹவேலிகளும் இங்கேயே கிடைக்கும் ஒருவிதத் தங்க நிறப் பளிங்குக் கற்களால் (Sand Stone) கட்டப் பட்டுள்ளன. அருணோதயத்திலும் மாலை நேரத்திலும் சூரிய ஒளி இவற்றின்மீது விழும்போது பொன்னைப் போல் தகதகவென்று மின்னுவதால் இதை, 'சோனார் கிலா' (தங்கக் கோட்டை) என்று குறிப்பிடுகிறார்கள்.

பிரபல திரைப்பட இயக்குநர் சத்யஜித் ராய், இந்தக் கோட்டையைப் பின்னணியாக வைத்து, 'சோனார் கிலா' என்கிற திரைப்படத்தை வங்காளியில் எடுத்திருக்கிறார்.

இந்தப் பொற்கோட்டை பல படையெடுப்புகளுக்கு ஆளானபிறகும் அழகும், மிடுக்கும் குறையாமல் கம்பீரமாக நிற்கிறது.

கோட்டைக்குள் நுழைய பல வாயில்கள் உள்ளன. ரங்க மகல், மோதி மகல், கஜவிலாஸ் அரண்மனைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயத்தில் கட்டப்பட்டவை. சுவர்களிலும், மேல்கூரைகளிலும் தெரியும் சித்திரங்கள் அந்தக் காலத்திலேயே இந்தப் பகுதிகளில் சிறந்து விளங்கிய ஓவியக் கலையின் பெருமையை நமக்கு விளக்குகின்றன.

கோட்டைக்குள் நாம் பார்ப்பதுதான் பழைய ஜய்சல்மீர். இங்கு நான்கு விஷ்ணு கோயில்களும், எட்டு ஜைனர் கோயில்களும் உள்ளன. மிகவும் புராதனமான ஆதிநாதர் கோயில் ஜய்சால் மன்னர் காலத்தில் கட்டப்பட்டது.

ஜைனர் கோயில்கள் எல்லாமே பார்சுவநாதர் கோயில்கள். இவற்றில் மிகப் பழமையானது என்று தோற்றுவது கி.பி. 1332-இல் கட்டப்பட்டதாம். தோரணவாயிலுடன் கோயில் துண்களிலும், மேல் கூரையிலும் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள் மிகவும் நுட்பமானவை. தாமரை மலரும், சக்கர வடிவத்தில் வெவ்வேறு அமைப்புகளும், அப்சரஸ் பெண்களும், பட்சியினங்களும், சிவனும் உமையும் —



கோட்டையிலுள்ள பார்சுவநாதர் கோயில் சிற்பங்கள்.

விஷ்ணுவின் அம்சமான குரு பாபா ராம்தேவ்

எல்லாமே பொன்னிறப் பளிங்கில் 'பளிச்' சென்று தெரிகின்றன. இவற்றில் படிந்து போகும் தூசியை அவ்வப்போது நீரினால் அலம்பி விடுவார்களாம். தண்ணீர் பட்டதும் இதன் பளபளப்புக் கூடுதலாகித் தெரிகிறது.

'க்யான் பண்டார்' என்கிற புராதன நூல் தொகுப்பொன்றை இங்கே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். இந்தப் பனைஓலைத் தொகுப்புகளில் மருத்துவம், வேதாந்தம், இலக்கியம், மதம், வானசாஸ்திரம் ஆகியன பற்றிய குறிப்புகள் இருக்கின்றனவாம். இவை தவிர, ஒன்பது மீட்டர் நீளமுள்ள சுவடியொன்றும் இங்கே உள்ளது. அர்த்த சாஸ்திரம்பற்றிய விமரிசனம் கூட அதில் உள்ளதாம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இஸ்லாமியப் படை எடுப்புக்களிலிருந்து இவற்றைப் பாதுகாக்க, குஜராத்திலிருந்து இங்கே இவற்றைக் கொண்டு வந்து கோயிலுக்கடியிலுள்ள சுரங்க அறையில் மிகவும் பாதுகாப்பாகக் கண்ணாடியிட்ட மேஜைகளிலும் அலமாரிகளிலும் வைத்துள்ளார்கள். அறையை அடைத்துக் கொண்டிருக்கும் உறுதியான இரும்புக் கதவு இவை எத்தனை விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

கோட்டைக்குள் இருக்கும் பழங்கால திவான்களின் (பிரதம மந்திரிகள்) மாளிகைகளை 'ஹவேலிகள்' என்கிறார்கள். வெளியிலிருந்து பார்க்கையில் இவற்றின் ஜன்னல்களிலும் பால்கனியிலும், ஒரு மாடியையும் மற்றொன்றையும் பிரிக்கும் விளிம்புகளிலும் உள்ள நுட்பமான 'ஜாலி' வேலைப்பாடுகளைக் காணும்போது கல்லில் இத்தனை நுணுக்கமாக வடிவங்களை எப்படிச் செதுக்க முடிந்தது என்று நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இவை மரவேலைப்பாடோ என்று எழும் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள அருகில் போய்த் தொட்டுப் பார்க்கிறோம். சுண்டு விரல்கள் கூட நுழையாத அளவுக்குச் சிறிய துவாரங்களை இணைத்துப் பலவித வடிவமைப்புகளைச் சிருஷ்டித்திருக்

கிறார்கள். ஓரிடத்திலாவது வேலைப்பாட்டில் சிறிதளவு கூடப் பிசிர் இல்லை. அவற்றைப் பார்க்கப் பார்க்க நமக்குள் எழும் பிரமிப்பு அடங்காததாக இருக்கிறது. இத்தனை சிறிய அளவில் நுட்பமான வேலைப்பாட்டை அதுவும் இத்தனை அழகுடன் வேறு எங்கும் காண்பது சிரமம். அவ்வளவு அற்புதம்! புகைப்படத்தில்தான் பாருக்களேன்!

திவான் சாலிம் சிங்கின் வீடு ஆறு அடுக்கு மாடிகளைக் கொண்ட மாளிகை. மன்னன் மூல்ராஜின் காலத்தில் பிரதம மந்திரியாக இருந்த சாலிம் சிங், தம் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அரசரையும், மக்களையும் தம் மனம் போனபடி ஆட்டிவைத்தாராம். தம் இல்லத்திலிருந்து கோட்டை வரை மேம்பாலம் ஒன்றைக் கட்டுவித்து இரண்டையும் `இணைக்க வேண்டும் என்று திட்டமிட்டராம். அதைத் தவிர்க்க, மன்னர் கோட்டையின் அந்தக் குறிப்பிட்ட பகுதியில் ஒரு சிறிய கோயிலைக் கட்டி அதற்கு மேலாகப் பாலம் எழுப்ப முடியாமல் செய்து விட்டதாகக் 'கைட்' சொன்னார். சாலிம்சிங்கின் அக்கிரமங்களைப் பொறுக்க முடியாமல் ஒரு நாள் அவரை யாரோ கொலை செய்கு விட்டார்களாம்.

கோட்டையைப் பார்க்க வருகிற வெளிநாட்டுப் பயணிகள் என்ன நினைப்பார்கள் என்றாவது சுற்றுப்புறச் சூழலில் கவனம் செலுத்தக்கூடாதா?

கோட்டை வாயிலில் வரிசையாக நடைபாதைக் கடைகள் இருக்கின்றன. விவரப் புத்தகங்கள், புகைப்படக் கார்டுகள், விநோதப் பொருள்கள், சாவிக்கொத்து வளையங்கள், ராஜஸ்தானி உடைகள், பாசிமணி நகைகள், வண்ணத் துணியால் செய்த நடைவாயில் தோரணங்கள்—பார்த்துக் கொண்டே நடக்கலாம்.

பாட்டி இராஜபுத்திரர்களின் தலைநகராக இருந்த லோதர்வா, ஜய்சல்மீரிலிருந்து பதினாறு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது.

வழியில் அங்கங்கே 'சத்ரிகள்' எனப்படும் சிறிய சலவைக்கல் மண்டபங்கள் பார்க்க வெகு அழகாக



லோதர்வா ஜைனர் கோயில் வெளிப்புற அமைப்பு.

பட்வாகீ ஹவேலியில் வெளியில் காணப்படும் நுட்ப வேலைப்பாடுகளுடன், உள்ளேயும் கூரைச் சுவர்களில் தங்க ரேக்குப் பூசப்பட்ட ஓவியங்கள் நம்மைக் கவர்கின்றன. வெளியே தெரியும் மாடிகள் மட்டுமின்றி, பூமிக்கடியிலும் மூன்றடுக்கு கட்டிடமாவது இருக்கும் என்றார்கள். அவற்றில் தானியங்களையும், நகை, வெள்ளிப் பாத்திரங்களையும் பத்திரப்படுத்தி முன் காலத்தில் வைப்பார்களாம். இப்போது இதை அரசு உடைமையாக்கிக் கொண்டுவிட்டது.

அழகுக்கு நடுவில் அவலம் என்பதுபோல், கோட்டைக்குள் வீதிகளில் அங்கங்கே பெருக்கெடுக்கும் சாக்கடைத் தண்ணீரும், குவிக்கப்பட்டிருக்கும் அசுத்தங்களும் நம்மை வேதனைக்குள்ளாக்குகின்றன.

இந்த அசுத்தமான சூழ்நிலைக்கு வேறு யாரையும் பொறுப்பாளியாக்கிக் குற்றம் சாட்ட முடியாது. 'நாம் சுத்தமாக இருக்க வேண்டும்' என்கிற உணர்வு ஒவ்வோர் இந்தியக் குடிமகனுக்கும் இயல்பாகவே ஏற்பட்டாலொழிய இந்த நிலைக்கு விமோசனமே இல்லை.

இருக்கின்றன. முன் காலத்தில் உயர் மட்டக் குடும்பங்களில் சாவு ஏற்பட்டால், இப்படி நினைவுச் சின்னங்களை எழுப்புவார்களாம். இறப்பையும் அழகுணர்வோடு பார்ப்பது இராஜஸ்தானியர்களின் குணம் போலும்!

லோதர்வா இப்போது மிகவும் சிதைந்து போன நிலையில் உள்ளது. சிதிலமடைந்த கோட்டைச் சுவர்களுக்கும், அரண்மனைகளுக்கும் நடுவில் இன்று கட்டியதைப் போன்று புத்தம் புதியதாகப் பார்சுவநாதர் கோயில் விளங்குகிறது.

தோரண நுழைவாயிலை அடுத்துத் தெரியும் கோயிலைக் கண்டு ஒரு கணம் பிரமித்துப் போய் நிற்கிறோம். கீழிருந்து குறுகலாகவும் மேலே போகப் போக அகலமாகியும் கேரள பாணிக் கோயிலை நினைவுறுத்தும் வடிவம். சுவர்களில் 'ஜாலி' வேலைப்பாடுகள் அமைந்த நுட்பமான சதுரங்களை இணைத்தாற் போன்ற 'ஸ்க்ரீன்களை' நெருங்கி உற்றுப் பார்க்கையில் நம் பிரமிப்பு அதிகமாகிறதே தவிர, குறையவில்லை. கல்லில் இத்தனைவித நுணுக்கமான வடிவமைப்புகளை எப்படிச் செதுக்க

முடிந்தது, ஒரே அளவாக? இதைக் கட்டிமுடிக்க எத்தனை ஆண்டுகளாகியிருக்கும்?

உள்ளே அதே பொன் நிறப் பளிங்கில் பார்சுவ நாதரின் திரு உருவச்சிலை உள்ளது. அதைச் சகஸ்ர நாகம் ஒன்று காத்து வருகிறதாம். அபூர்வமாகத்தான் அது மக்களின் கண்ணில் படுமாம். கோயிலுக்குப் பக்க வாட்டில் தெரியும் துவாரத்துக்கு அருகில் மண் கல யங்களில் பால் வார்த்து நாகத்தை வழிபடுகிறார்கள்.

கோயிலுக்கு வெளியில் இடது பக்கமாக உயர்ந்த கல்ப விருட்சம் உள்ளது.

கோயிலுக்கு வெகு அருகிலேயே ராஜகுமாரி மூமல் வாழ்ந்த அரண்மனையின் சிதைவுகள் உள்ளன. அமர்கோட்டையைச் சேர்ந்த அரசகுமாரன் மகேந்திர னிடம் மனத்தைப் பறிகொடுத்து, சந்தர்ப்பக் கோளாறி னால் மனத்தாபத்துக்கு ஆளாகி, காதல் நிறைவேறா மலேயே உயிரை மாய்த்துக் கொண்ட மூமல்-மகேந் திரனின் கதையை இன்றும் மக்கள் இங்கு நினைவுகூர் கிறார்கள். லைலா - மஜ்னு, ஹீர் - ராஞ்ஜா, அம்பிகா பதி - அமராவதி கதைகளைப் போல் மூமல் - மகேந் திரனின் காதல் கதையும் அமரத்துவம் பெற்று விளங்கு கிறது. இந்தக் கதை மார்வாரி மொழியில் நாட்டுப் பாடலாகப் பின்னப்பட்டு, இந்தப் பிராந்தியத்தில் அவ்வப்போது தெருக்கூத்துக்களிலும் இடம் பெறுகிறது.


பட்வாவின் மாளிகை ஜன்னல் வேலைப்பாடு.

ஜய்சல்மீரிலிருந்து எழுபத்தைந்து மைல் தூரத்தில் தன்னோத் உள்ளது. லோதர்வாவுக்கு முன் தனுக் கோட்டா என்கிற தன்னோத் இப்பிரதேச இராஜ புத்திரர்களின் தலைநகராக இருந்ததாம். மதாமாதேசு வரி தன்னோத் தேவி அரச பரம்பரையினரின் குல தெய்வமாம். எல்லை காத்த தேவி என்றும் இந்தக் கோயிலைச் சிலாகித்துக் குறிப்பிடுகிறார்கள்.

1971-ஆம் ஆண்டு நடந்த இந்திய-பாகிஸ்தான் போரின்போது பாக். ராணுவத்தினர் தன்னோத்தைச் சுற்றியுள்ள எல்லைக் காவல் நிலையங்களைக் கைப்பற்றி ஆக் கிரமித்துக் கொண்டனராம். ஆனால் கோயிலைச் சுற்றி யுள்ள இடங்களில் அவர்கள் எறிந்த குண்டுகள் ஒன்றுகூட வெடிக்கவில்லையாம். இரவு நேரத்தில் வெள்ளைப்புடைவை அணிந்த தேவதையொருத்தி அவர்களுக்குத் தெரிந்து தன்னைத் தொடர்ந்து வரும்படி அழைத்தமாதிரி இருந் ததாம. பாக். வீரர்களுக்கு, தாங்கள் திசைமாறி வேறு எங்கோ வந்துவிட்டோமோ என்கிற பயம் ஏற்பட்டுத் திரும்பிப் போய் விட்டார்களாம்.


சாலிம் சிங்கின் மாளிகை.

வெடிக்காத குண்டுகளின் கூடுகளை எடுத்து இங்கே பார்வைக்காக வைத்திருக்கிறார்கள். எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தேவியின் கோயிலைப் புதுப்பித்துக் கட்டி ஒரு வெற்றி ஸ்தூபமும் எழுப்பி யுள்ளார்கள். மிகவும் சிறிய உருவ அமைப்புக் கொண்ட வெள்ளைச் சலவைக் கல்லில் தன்னோத் தேவியை மிகவும் நேர்த்தியாக அலங்கரித்துள்ளார்கள்.

தன்னோத் - ஜய்சல்மீர் சாலையில் கோட்டாறு என்கிற இடத்துக்குக் கொஞ்சம் மாற்றுப் பாதையில் போக வேண்டும். இங்குள்ள கோட்டையை 1965-இல் இந்தோ - பாக் போரின்போது, பாகிஸ்தானிகள் ஆக்கிரமித்துக் கொண்டனராம். சண்டை நிறுத்தப் பட்டு இவர்கள் திரும்பிப் போக நேர்ந்தபோது கோட் டையின் சில பகுதிகளைக் குண்டு வைத்துத் தகர்த்து விட்டுப் போயிருக்கிறார்கள். இங்கிருந்து பாக் எல்லை இருபத்தைந்து கிலோ மீட்டர் கூட இருக்காதாம். இதற்கு அருகிலேயே லோங்கோவாலா என்கிற இடம் உள்ளது. 1971 போரில் பாகிஸ்தானிய டாங்குகள் இதுவரை வந்து விட்டனவாம். நம் விமானப்படை யினர் விரைந்து செயல்பட்டு அவற்றை அழித்த அடையாளங்களாக அழிந்த டாங்குகள் இன்றும் இங்கே உள்ளன.

ஜய்சல்மீரிலிருந்து பதினெட்டு மைல் தொலைவில் சம் (Sam) என்கிற இடத்தில் பசுமை இல்லாத பெரிய மணல் குன்றுகள் உள்ளன. பாலைவனத்தின் உண்மை உருவத்தைப் இங்கே பார்க்க முடிகிறது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும், பம்பாய் படத் தயாரிப்பாளர்களையும் ஈர்க்கும் இடம் இது.

லைலா-மஜ்னு, அப்துல்லா, புதிய மீரா ரஜியா சுல்தான் போன்ற படங்களில் வரும் பாலைவனக் காட்சிகள் இங்கேதான் படமாக்கப்பட்டன. மணல் மேடுகளில் அலை பாய்கிற காற்று சின்னச் சின்ன வரிகளாய்க் கோலமிட்டுப் போக, தூரத்தில் பூமிக்குள் இறங்கும் சூரியன் ஓவியமாய் நம் மனத்துள் பதிகிறது. ஒட்டகச் சவாரி செய்யபத்து ரூபாய்க் கட்டணம் வாங்குகிறார்கள். இராஜஸ்தானியக் குழல் வாத்தியங்களையும், 'டோலக்' என்கிற முரசையும் வாசித்துச் சுற்றுலாப் பயணிகளைக் குஷிப்படுத்துவதில் சில கலைஞர்கள் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். அவர்களை விதவிதமான கோணங்களில் புகைப்படமெடுக்க வெளிநாட்டு விருந்தினர் ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஜய்சல்மீரில் தங்க, மூமல் பயணிகள் பங்களாவில் முன்கூட்டியே தெரிவித்தால் வசதிகள் செய்து தருகிறார்கள். நவீன வசதிகளுடன் குடிசைகளை அமைத்து அவற்றையும் வாடகைக்கு விடுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் பாலைவன விழா மார்ச் மாதம் நடத்தப்படுகிறது.

கடை வீதியைச் சுற்றிப் பார்க்காமல் எந்தப் பயணமும் முழுமை பெற்றதாகாது. ஜய்சல்மீர், கம்பளி உடைகள் பிரசித்தமானவை. கம்பளியில் சுங்கடிச் சால்வைகள் இங்கே தயாராகின்றன. கண்ணாடி, பதித்த வேலைப்பாடுகள் கொண்ட பாவாடை, சட்டைத் துணிகள், பைகள், குஷன் உறைகள் எல்லாம் இங்கே கிடைக்கின்றன.

ஜய்சல்மீர் மாவட்டத்தில் போக்ரனுக்கு அருகிலுள்ள பாலைவனப் பிரதேசத்தில் தான் பல ஆண்டுகளுக்கு முன் அணு வெடிப்புப் பரிசோதனை நிகழ்த்தப்பட்டது.

வழியில் பதின்மூன்று கிலோ மீட்டர் மாற்றுப் பாதையில் ராம்தேவ்ரா இருக்கிறது. இராஜபுத்திரர்களின் குரு பாபா ராம் தேவ் உயிரோடு சமாதியடைந்த இடம் இதுவாம். சுமார் 550 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இவர் விஷ்ணுவின் அவதாரம் என்று நம்பப்படுகிறது. பல அற்புதங்களை நிகழ்த்தி, ஏழை மக்களுக்கு ராம்தேவ் உதவினாராம். ஷீரடி சாயிபாபாவைப் போல் இராஜஸ்தானியர்களில் பலர் இவரைக் குருவாக எண்ணி வழிபடுகிறார்கள். ஆண்டுக்கொரு முறை திருவிழாவும் அன்னதானமும் இங்கு நடக்கின்றன.

ஜய்சல்மீரைச் சுற்றிப் பார்க்க வருகிறவர்கள் முன்கூட்டியே மாவட்ட அதிகாரியின் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பித்துக் கொண்டால் அங்கு வேலை பார்க்கும் திரு பிரிஜ் ரத்தன் ஓஜா என்பவர் வழிகாட்டியாக நம்மைச் சுற்றிக் காட்ட வருகிறார். இங்கேயே பிறந்து வளர்ந்த இவர் இதன் சரித்திரத்திலும், கலாசாரத்திலும் ஊறித் திளைத்திருக்கிறார். அடிக்கடி மார்வாரிப் பழமொழிகளையும், நாட்டுப் பாடல்களையும் உதிர்த்து அவற்றுக்கு விளக்கமும் தந்து நம்மை ஆச்சரியப்பட வைக்கிறார். ஜய்சல்மீருக்கு வருகிற பிரமுகர்கள் அனைவருக்குமே இவர்தாம் வழிகாட்டி.

ஊரைச் சுற்றிக் காட்டி விளக்கிவிட்டு, ''எங்கள் ஊரைப் பற்றிப் பார்த்துத் தெரிந்து கொண்டு விட்டீர்கள். உங்கள் அபிப்பிராயத்தை இங்கே எழுதிக் கொடுங்களேன்'' என்று நாட்குறிப்புப் புத்தகம் ஒன்றையும் நம்மிடம் நீட்டுகிறார்.

அதன் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் போது, ராஷ்டிரபதி ஜைல்சிங், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள், மத்திய அரசு மந்திரிகள், வெளி நாட்டுத் தூதுவர்கள் என்று பெரிய பிரமுகர்களின் பெயர்கள் வரிசையாகக் கண்ணில் படுகின்றன.

''ஜய்சல்மீரைச் சுற்றிப் பார்ப்பது மிகவும் சுவையான அநுபவம். இதன் கோட்டையையும், நுணுக்கமான சிற்ப அமைப்புக் கொண்ட கோயில்களையும், மணல் குன்றுகளின் அழகையும் மறக்கவே முடியா. பாலைவனத்தில் கலைஞன் கண்ட அற்புதக் கனவின் தடங்கள் இவை..'' இன்னும் என்ன எழுதலாம் என்று யோசிக்கையில் வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடுகிறோம். ✳

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹேடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்!
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

சரும நோய்களுக்கு
வயப்படுபவரா ?



சுகம்தரும் லிச்சென்ஸா சருமக் களிம்பு
தீங்கில்லாத, துரிதமான நிவாரணம் அளிக்கும்

தீவிரமில்லாத, நம்பகமான லிச்சென்ஸா களிம்பு 6 சக்தி வாய்ந்த மருந்துப் பொருட்களைக் கொண்டது. இவை, வெட்டுக்காயம், ஊமைக் காயம், இரணங்கள், முகப் பருக்கள் போன்ற எந்த விதமான சரும நலன் கேடுகளிலிருந்தும் உடனடி நிவாரணம் கொடுக்கும்.

சரும நோய்களின் முதல் அறிகுறியிலேயே லிசென்ஸா உபயோகியுங்கள். தீங்கில்லாத துரிதமான நிவாரணம் பெறுங்கள்.

6 TMMR



லிச்சேன்ஸா
சருமக் களிம்பு

தீபாவளி வாழ்த்துக்கள்

ஸ்பென்ஸர்ஸ்

பழரச பானங்கள்

அன்னாசி, திராட்சை,
மாம்பழம்

ஸ்பென்ஸர்ஸ்

ஸ்பென்ஸர் கன்சூமர் பிராடக்ட்ஸ் அண்ட் சர்வீசஸ் லிமிடெட்.,
சென்னை மற்றும் கிளைகள்

FAME/S/1048 A

பேரொளியின் பேரெழில்

இந்த நாளில் பல மருத்துவத் துறை நிபுணர்களும் ஒப்புக் கொள்ளும் ஒரே விஷயம் தியானம். பல துறையினருக்குள்ளே சிறு சதவீத அளவு வித்தியாசம் தெரியலாம். இந்திய யோகிகளும், யோகாசன நிபுணர்களும் உலகம் முழுதும் யோகாசனம், தியானம் இரண்டின் பெருமையைப் பரப்பி வருகிறார்கள். யந்திர மயமான வாழ்க்கையை அநுபவிக்கும் மக்களும், பல வகையான தியான முறைகளை ஆர்வத்துடன் மேற்கொள்கின்றனர். தியானத்தில் அவரவர்கள் வகுத்துக் கொண்டுள்ள, சங்கீதத்தில் 'பாணி' என்று சொல்வது போல், பல முறைகள் இருக்கின்றன. கண்களை மூடிக் கொண்டு அரை மணி நேரம் உட்கார்ந்து பழகினால், அந்தச் செயலே பல நன்மைகளை அளிப்பதாக உணர்ந்து மகிழ்பவர்களும் இருக்கிறார்கள். அதுவும் ஓரளவு உண்மைதான்.

ஐந்து வயதிலிருந்தே யோகப் பயிற்சியும் சாஸ்திரப் படிப்பும் மேற்கொண்ட, இன்று தொண்ணூற்றாறு வயதான முதியவர் யோகாசார்யா கிருஷ்ணமாசாரியா அவர்கள், பதஞ்சலி யோக சூத்திரத்தையும் மற்ற யோக நூல்களையும் கரைகண்டவர். அவருடைய புதல்வர் திரு டி.கே.வி. தேசிகாசார், தம் தந்தையின் பெயரால் கிருஷ்ணமாசாரியா யோக மந்திரம் என்ற அமைப்பை நிறுவி, நம் முன்னோர்களின் அநுபவச் சேகு ஏறிய யோக முறைகளைப் பலருக்குக் கற்பித்து வருகிறார். தியானத்தைப் பற்றி அவர் கூறும் கருத்துக்கள் இவை.

''தியானம் (மெடிட்டேஷன்) என்பது பற்றிக் கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்.''

''மனசு நிலைப்பட உதவுவது தியானம். இதைப் பற்றிப் பதஞ்சலி, யோக சூத்திரத்தில் மிக விளக்கமாகக் கூறியிருக்கிறார். யமம், நியமம் போன்ற எட்டு அங்கங்களில் ஒன்று தியானம். முதலாவதாக, 'தேசபந்த: சித்தஸ்ய தாரணா' என்கிறார் பதஞ்சலி. சிதற அடிக்காமல், ஒரு பொருளின்மேல் மனத்தைச் செலுத்தப் பழக வேண்டும். அந்தப் பொருள் ராஜஸ, தாமஸ குணம் இல்லாததாக இருக்க வேண்டும். அழியும் பொருள்களின் மேலேயோ, ஆடம்பர வாழ்க்கையின் மேலேயோ நமது சிந்தனை வயப்பட்டால், அந்தப் பொருள் அழியும் காலத்தில் நமது சிந்தனை லயிப்பும் பாழாகிவிடும்.

நம்மைச் சிருஷ்டித்து, இந்தப் பூவுலகத்தையும் பல இயற்கை வசதிகளையும் அளித்துள்ள இறைவன்தான் சாசுவதமானவன். அதனால் அவன் மேல் மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானம் செய்வதுதான் சாசுவதமான பலனைத் தர முடியும். சகுண உபாசனை இல்லாமல் மனத்தை ஒருமுகப்படுத்த இயலாது. ஒரு நாமம், ஓர் உருவம் அவசியம் வேண்டும். அந்த உருவமும் சாந்தமூர்த்தியாக, அலங்கார மூர்த்தியாக இருக்க வேண்டும் என்கிறது உபநிஷத்துக்கள். பூர்ண சந்திரன், உதிக்கும் செங்கதிர் இவையும் தியானத்துக்கு உரிய பொருள்கள் தாம்.

''தியானத்தினால் என்ன என்ன பயன்கள் உண்டாகும்?''

''முதலிலேயே சொல்லியபடி, தொடக்க நிலைகளை அநுஷ்டித்துப் படிப்படியாக முன்னேறிச் செல்வதுதான் முறை. உடல், உள்ளம், சூழ்நிலை முதலியவற்றைச் சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும். பொய் பேசாமை, காமவிகாரம் அற்றிருத்தல், ஆசையைக் குறைத்தல், களவாடாமை போன்ற நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றை அப்யசித்து வந்தால், விரும்பிய பொருளின் மேல் மனத்தை ஒருமுகப்படுத்தும் 'தாரணம' என்ற நிலை சித்திக்கும். இதற்குப் பிராணாயாமம் பெரிதும் உதவும்.

''கற்றுத் தேர்ந்த அளவுக்குத் தேர்வில் மதிப்பெண்கள் கிடைக்கின்றன. அதைப் போல இந்தப் பயிற்சிகளை எல்லாம் முறையாக மேற்கொண்டால், அந்தப் பயிற்சிகளே நம்மையும் நம் மனத்தையும் பக்குவப்படுத்தி, அடுத்த உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும். முறையான தியானம், நம்மையும் இறைவனையும் ஒன்றாக்கி ஐக்கியப்படுத்தும். இறைவனின் பேரொளிப் பேரெழிலில் நாம் இரண்டறக் கலந்து விடுவோம். இதைத்தான் சமாதி நிலை என்கிறார் யாக்ஞவல்கியர்.

''இந்த நிலைக்கு முதலில் கூறியபடி பல படிகளைத் தாண்டிப் பக்குவப்பட்டு மேலே மேலே முன்னேற வேண்டும். நாம் முயன்று முன்னேறுவது என்பது அல்ல. முறையான நமது சாதனையே மேலே மேலே இட்டுச் செல்லும். 'தத்ர ப்ரத்யய ஏகதானதா த்யானம்' என்கிறார் பதஞ்சலி. யோக நியமங்களையும் பிராணாயாமத்தையும் முறையாக மேற்கொண்டு நம்மை நாம தயார் செய்துகொள்ள வேண்டும். 'மனம் ஒருமித்தல்' என்ற மிக உன்னத நிலைக்கு, படிப்படியாக நம்மைத் தயார்



ஒருமுகப்படுத்தும் பயிற்சி: மனத்தைச் சத்தான பொருளில், (ஆ-இறைவன் திருவுரு அல்லது நாமம்) செல்லத் தூண்டுதல். அ, இ, ஈ சாசுவதம் இல்லாத உலகியல் பொருள்கள்.



சிந்தனை முழுவதையும் 'ஆ' பொருளின் மேல் ஒருமுகப்படுத்துதல்.

செய்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்து வந்தால் தியானம் கை கூடும்; அடுத்த பேரின்ப நிலையாகிய ஆத்ம—ஜீவாத்ம ஐக்கியம் என்ற சமாதி நிலைதானே வந்தடையும். இறைவனுடன் இரண்டறக் கலப்பதை விடப் பேரின்ப நிலை என்ன இருக்கிறது? தியானத்தின் முக்கிய நோக்கமே இந்தப் பேரொளியின் பேரெழிலில் ஐக்கியமாவதுதான். இந்திரியங்கள் எதுவும் செயல்படாமல், ஆத்மாவே இறைவனுடைய ஆனந்த அநுபூதியில் திளைத்திருக்கும். நம் பண்டைய மகான்கள், இந்தப் பேரின்ப நிலையில்தான் பல சாஸ்திரங்களைக் கண்டறிந்து கூறியிருக்கிறார்கள். ஒருவித ஆவேச நிலை இது.

''நீங்கள் கூறுவதைப் பார்த்தால் இந்தக் காலத்தில் யாரும் தியானம் செய்ய முடியாதுபோலத் தோன்றுகிறதே!''

''அப்படிப் பயப்படவேண்டாம். காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றுக்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டும் என்றே சொல்கிறார் பதஞ்சலி. ஜாதி, தேசாதி கால, சமய, அனவச்சின்னா: ஸார்வபௌம: மஹாவ்ரதம்' என்கிறார். இதேபோல் அவரவர்களின் தேக ஆரோக்கியத்தையும் கவனிக்க வேண்டும் என்கிறார். முதிர்ந்த தீர்க்கதரிசனத்துடன் பதஞ்சலி கூறியிருக்கிறார்.

''ஒரு மனிதனுடைய சூழல் அவனுடைய மனத்தைப் பல விதங்களில் அலைக்கழிக்கிறது. நிம்மதியில்லாமல் தடுமாறுகிறான். அப்பேர்ப்பட்ட மனிதன் அன்றாடம் அரை மணி நேரம் உட்கார்ந்து பழகினாலும், சில மாதங்களில் கொஞ்சம் நிம்மதியைக் காண்கிறான். கசப்பு மருந்தை இனிப்பு உறையிலிட்டுக் கொடுப்பதைப் போலத்தான் இது. ஒவ்வொரு படியாக முன்னேறினால் தான் பலன் கிடைக்கும் என்றால், யாரும் அருகில் கூட வரமாட்டார்கள். 'அன்றாடம் அரை மணி நேரம் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்து பழகு; முடியுமானால் மனத்துக்குள் விருப்பமான இறைவனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிரு. சில மாதங்களானதும் அப்படி உட்காரும் நேரத்தைச் சிறிது அதிகப்படுத்திக்கொள்' என்று சொல்லி, அவர்களும் அப்படிப் பழகத் தொடங்கினால், சிறிது காலத்தில் அவர்களுக்கே அதில் ஒரு பிடிப்புத் தோன்ற ஆரம்பித்துவிடும்.

''இதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். வெகுநாட்களாக உபயோகப்படுத்தாமல் ஒரு செப்புப் பாத்திரத்தைப் பெட்டி அடியில் போட்டு வைத்திருக்கிறோம். செப்புப் பாத்திரத்தை உபயோகப்படுத்திப் பூசை செய்தாலோ, அதில் நீர் அருந்தினாலோ நல்லது என்று கேள்விப்படுகிறோம். உடனே அந்தப் பாத்திரத்தை



மற்றச் சிந்தனையே இல்லாமல் 'ஆ' பொருளில் ஒருமித்தல்.

எடுத்துப் புளி; சோப்புப் போட்டு நன்றாகத் தேய்த்துக் கழுவுகிறோம். பல ஆண்டுகளாய் ஏறியிருந்த களிம்பு ஒரே நாளில் போய் விடுமா? இருந்தாலும் தேய்த்த அளவுக்கு அங்கங்கே கொஞ்சம் பளிச்சென்று காணும். இதைப் போல்தான் காலத்துக் கேற்ற மாற்றத்துடன் செய்யப்படும் தியான முறைகளும் பலன் அளிக்கும். இந்த முறைகளையும் தொடர்ந்து மேற்கொண்டால் நாளடைவில் சுடரொளி போன்ற ஞானத்தைக் காணமுடியும். ஒரு விள்ளல் அல்வாவைத் தின்று ருசித்தவன், அதிக அளவு அல்வாவைத் தின்ன விரும்புவதைப் போன்ற அவா ஏற்படும். இந்த அளவுக்கு இந்த நவீன முறைகளால் பலன் ஏற்பட முடியும்.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் முழுப் பலன் ஏற்பட முடியாது என்று தோன்றுகிறதே?''

''முழுப்பலன் என்று நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்? சமாதி நிலையைத்தானே? சாஸ்திர முறையை ஒட்டி முறையாகச் செய்தால்தான் பேரொளியில் ஐக்கியமாகும் சமாதி நிலை சித்திக்கும். ஆனால் இறைவன் நாமத்தை ஸ்மரித்தபடி மனத்தை ஒருமுகப்படுத்தப் பழகினால், பழகின அளவுக்கு மன நிலையில் மாற்றம் காணும், நம்மால் முடியாது என்று எண்ணி ஒதுங்குவதைவிட, முடிந்த அளவு தியானத்தை மேற்கொள்வது சிறந்தது என்று நிச்சயமாகக் கூறுவேன்.

''கீதையில் கண்ணனே கூறுகிறான்: 'ஸ்வல்பம் அப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்' என்று. தங்கள் சக்திக்கும் சூழலுக்கும் ஏற்றாற் போல், சொல்பமாகச் செய்தாலும் அதற்கேற்ற பலன் உண்டு.

''தியானம் என்றால் என்ன? 'த்யை ஸ்ந்தாயாம்.' மனத்தை ஒரே விஷயத்தில் சிந்தனைப் படச் செய்தல் எனலாம். பல கேளிக்கைகளில் சிந்தனை தடுமாறாமல், உள்ளம் ஒன்றும் நிலையைப் பிரதிபலிப்பதே தியானம் என்று சொல்லலாம். முறையாகவும் தீவிரமாகவும் எந்த அளவுக்கு ஈடுபடுகிறீர்களோ, அந்த அளவுக்கு மனம் அலைபாயாது. சினிமாவுக்கோ, அல்லது ஏதாவது கேளிக்கைக்கோ போகவேண்டும் என்ற ஆர்வத்தைவிட, 'கோயிலுக்குச் செல்ல வேண்டும், இறைவனைத் தரிசிக்க வேண்டும், ஸத் சங்கத்தில் கலந்து கொள்ளவேண்டும், இறைவன் நாம பஜனை செய்ய வேண்டும்' என்ற எண்ணங்கள் உத்வேகமாகச் செயற்பட்டு நம்மை இட்டுச் செல்லும். காலக் கிரமத்தில், மனத்தைத் தன் விருப்பம் போல் நடத்திச் செல்லும் திறன் சாதகனிடம் உருவாகும்.

''இந்த நாளைய யந்திர வாழ்க்கைக்கும் சொகுசு மனப்பான்மைக்கும், மனத்தை முடிந்த அளவு தன் விருப்பம் போல் திருப்பும் சாதனையின் உயர்வையும் ஆனந்தத்தையும் அநுபவத்தின் மூலந்தான் உணரமுடியும். ஒரு கேளிக்கைக்குப் போய் அநுபவிக்கும் ரசனையைவிட, இந்த லயிப்பில் உள்ளார்ந்த மகிழ்ச்சியும் சொல்லொணாத இன்பமும் நாடி நரம்பெல்லாம் பாய்ந்து பரவுவதை உணர்ந்து, மெய்ம்மறக்க முடியும். இந்த நிலை உலகியல் இன்பம் எதிலும் கிட்ட முடியாத ஒன்று.

''யோகாசனம், பிராணாயாமம் இரண்டும் உடலைச் சீர்படுத்துகின்றன; தியானம் உள்ளத்தைச் செம்மைப் படுத்துகிறது, என்பது சரியா?''

''மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் சரி என்று சொல்லாம். பதஞ்சலியின் எட்டு அங்கங்களில் ஒன்று யோக ஆசனம். அதன் கடைசி அங்கம் சமாதி; இறைவனுடன் இரண்டறக் கலக்கும் உன்னத நிலை. இந்த நிலையை அடையப் படிப்படியாகச் சில நியதிகளையும் ஆசனங்களையும் கூறியிருக்கிறார். முறையாகப் பிராணாயாமப் பயிற்சிகளை மேற்கொண்டால், தாரணம் என்ற நிலையை எளிதில் அடைய உதவியாக இருக்கும் என்கிறார் பதஞ்சலி. தாரணம் என்பது தியானத்துக்கு முந்தியது. மனத்தைப் பக்குவப்படுத்தும் நிலை. தியானம் கைகூடினால் சமாதி. பேரின்பப் பெருவெள்ளத்தில் ஐக்கியமாகும் நிலை. இப்படி மனிதன் படிப்படியாக முன்னேறி, ஆனந்தத்தில் திளைக்க வேண்டும் என்றே பதஞ்சலி இந்த யோக முறைகளை வகுத்திருக்கிறார்.

''அந்த அந்த முறைகளை ஒழுங்காக மேற்கொண்டால் நன்மைகள் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை; ஆனால்

உன்னதத் தூய்மை பாதுகாப்பான சலவை



அடித்துத் துவைப்பது துணிகளுக்கு நல்லதல்ல

தரக்குறைவான எரிச்சலூட்டும் வாஷிங் பவுடர்கள் துணிகளுக்கும் கைகளுக்கும் கெடுதலானவை

உங்கள் துணிகளின் நன்மைக்கென்றே உருவானது,
புதிய ஸ்டார் டிடர்ஜெண்ட் சலவைக் கட்டி—
துணிகளின் உன்னதத் தூய்மைக்கு, பாதுகாப்பான சலவைக்கு

ஷா வாலஸின்
தரமான தயாரிப்பு

Shaw Wallace

ACIL/0830/84

பதஞ்சலியின் கருத்துப்படி, உடலைச் சீர்படுத்தும், உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் என்ற அளவில் இவற்றை எடுத்துக் கொள்ளக் கூடாது. வாய்க்காலில் ஓடும் நீர் வழியிலுள்ள புல்லுக்கும் ஆங்கே பொசிவதுபோல், உடல், உள்ளம் எல்லாம் செம்மைப்படுகின்றன என்றே சொல்லவேண்டும்.

''இந்த உடல், உள்ளம் என்ற நிலைக்கு மேலே போவதே குறிக்கோள். இறைவனுடன் ஐக்கியமான பிறகு தனியாக உள்ளம் ஏது? மனித சமூகத்தின் நன்மையைக் கருதி அமுத சாகரமாகிய யோக சூத்திரத்தில், உள்ளம்-உடல் மேம்பாட்டுக்கான சில முத்துக்களை வாரி வழங்கியிருக்கிறார் பதஞ்சலி. அவற்றைப் பெற்று, அந்தச் சிறிய மகிழ்ச்சியுடன் நாம் திருப்தி பெற்றுவிடக் கூடாது; மேலே மேலே முன்னேற வேண்டும். சுடரொளியைக் கண்டு பழகியவன் பேரொளியைக் காணத் தன்னைத் தயார் செய்து கொள்ளவேண்டும். குறிக்கோள் உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதாக இருந்தால்தான் மனித வாழ்க்கைக்கே பொருள் உண்டு.''

''நினைப்பு மட்டும் நல்ல பலன்களைக் கொடுத்துவிட முடியுமா?''

'' 'நாம் இந்த நல்ல காரியத்தைச் செய்கிறோம். நல்லதே விளையும்' என்ற நினைப்புடன் செயலாற்றினால், நிச்சயம் நன்மையே விளையும். மனத்தின் செயல்திறனுக்கு அபரிமிதமான சக்தி உண்டு. மனத்தின் சுபாவமான எண்ணங்களுக்கு ஏற்பவே, நம் செயல்கள் பரிணமிக்கின்றன. மனத்தின் தன்மையைப் பற்றி மநு ஸ்மிருதியில் இப்படிக் கூறியிருக்கிறது: 'மன ஏவ மனுஷ்யாணும் காரணம் பந்த மோக்ஷயோ:'-நாம் உபயோகப்படுத்தும் முறைக்கு ஏற்ப மனமானது, பந்தத்தையோ மோட்ச சுகத்தையோ அளிக்கவல்லது.

''வேதங்களையும், சாஸ்திரங்களையும் கண்டறிந்து கூறிப் போந்த நம் முன்னோர்கள் சிறந்த மனோதத்துவ நிபுணர்கள். 'யமம், நியமம் போன்ற நியதிகளை மேற்கொள்கிறோம், தாரணை, தியானம் முதலியவை கைகூடும்' என்ற எண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் பயிற்சிகள், எண்ணிய பலனை, அளவுக்கு அதிகமாகவே அளிக்கும் என்பது உறுதி. அப்படி நினைக்கும்போதே, நம் உள்ளமும் பயிற்சி முறைகளில் ஒன்றிவிடுகிறதல்லவா? மனம் சிதறாமல், ஒரு பொருளில் ஒன்றப் பழக்குவதுதானே நம் நோக்கம்? அதனால் ஒருமுகமான நினைப்பும் பலன் பெறுவதைத் துரிதமாக்க உதவுகிறது. ஆனால் நினைப்புடன் முறையான பயிற்சியும் மிகவும் அவசியம் என்பதை மறந்து விடக் கூடாது.

''இந்த நினைப்பு, பயிற்சி முறை இரண்டையும் வழுவறக் கற்பிக்க ஒரு குரு அவசியம் வேண்டும். குருமூலமாகக் கற்றுக் கொண்டால்தான், சிஷ்யனின் மனநிலை, ஆகார நியதி, சூழ்நிலை ஆகியவற்றை உணர்ந்து அவற்றுக்கேற்பப் பயிற்சி முறைகளை வகுத்துக் கொடுப்பார். 'எல்லாரும் எதையும் மேற்கொள்ளலாம், பலன் கிடைக்கும்' என்பது அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை. அப்படிப் பார்த்தால் இந்த நாளில் ஒவ்வொரு 'காஸெட்டும்' ஒரு குருதான்! ஜடப் பொருளைக் குருவாக மதித்துப் போற்றுவதா நம் பாரதப் பண்பு? ஏகலைவனும், அர்ஜுனனும், கிருஷ்ணனும் தங்கள் குருமார்களைப் போற்றிப் புகழ்ந்த நிகழ்ச்சிகள் எத்தனை? நமக்கெல்லாம் ஆதி குருவாக விளங்குபவரே, கல்லாலின் கீழ்ச் சின் முத்திரை காட்டி விளங்கும் பேரொளிப் பிழம்பின் சொரூபமாயிற்றே?

பேட்டி : 'ஜஸ்தம்'

கிரகங்களின் ஆற்றல்

கேவியெஸ்





கிரகங்களின் ஆற்றல் மனிதனின் செயல்பாட்டுடன் தொடர்பு உடையது. பஞ்ச பூதங்களின் ஒருவிதக் கலவை 'பிரபஞ்சம்.' மனிதனும் அப்படியே. 'விராட்' புருஷனில் பிரபஞ்சம் அடக்கம்; ஜீவ புருஷனில் பூதாம்சம் அடக்கம். சூரியன் சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி முதலிய கிரகங்கள் ஆன்மா, மனம், ரத்தம், பேச்சு, அறிவு, வீர்யம், துன்பம் ஆகியவை வாயிலாக மனிதச் சிந்தனையில் தம் ஆற்றலைப் பிரதிபலிக்கச் செய்கின்றன. ராகு, கேது என்ற இருண்ட இரண்டு கிரகங்களுக்கும் சிந்தனையை மாறுபட வைப்பதில் பங்கு உண்டு.

'கர்மவினையை ஒட்டி மதி செயல்படும்' என்பது முனிவர்களது வாக்கு. (புத்தி:கர்மாநுஸாரிணீ) வினையோடு இணைந்து மதியைத் தூண்டிவிடுகிறது, அவற்றின் ஆற்றல். 'மதியை நல்ல வழியில் செயல்படத் தூண்ட வேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்திப் பிரபஞ்ச ஆன்மாவான சூரிய கிரகத்தை வேண்டிக் கொள்கிறோம்.

சூரிய ஆத்மா ஜகதః

பால், வடிவம், மொழி, நிறம், ஜாதி, குணம், பிணி, திக்கு, ரத்னம், தான்யம், புஷ்பம், சமித்து, உலோகம், தேவதை, வஸ்திரம், கோத்ரம் முதலிய பொருள்களில் அவர்களது சக்தி வெளிப்படுகிறது என்ற விளக்கம், பிரபஞ்சப் பொருள்களில் அவர்களது ஆற்றல் ஊடுருவிச் செயல்படுவதை உறுதிப்படுத்துவதாகக் கருதலாம். பௌர்ணமியில் கடல் அலை அதிகமாக எழுவதும், அமாவாசையில் மனநோய் அதிகரிப்பதும் கண்கூடு.

கிரகங்களின் நட்பு, பகை, இடம், பார்வை, பாகுபாடு ஆகியவை மனித சிந்தனையில் அவ்வப்போது ஏற்படும் மாறுபாட்டின் தன்மையை முன்னமேயே தெரிந்துகொள்ள ஏற்படும் நம்பகமான தடயங்களாகக் கருதலாம்.



சந்திரன்

உருவ அமைப்பும், ஆராதனை முறைகளும், நம்மில் அடங்கியிருக்கும் கிரக அம்சங்களோடு இணைந்து விழிப்புறச் செய்து ஆற்றலைப் பெருக்குவதற்குப் பயன்படுகின்றன. தாய் - தந்தை, தனயன் - பெண், கணவன் - மனைவி, மாமன், தாத்தா - பாட்டி, வேலையாள் - எஜமானன் முதலியவர்களின் அந்நியோந்நியமும் கிரகங்களின் ஆதிக்கத்தால் மாறுபடுகிறது என்ற ஜோதிட சாஸ்திரத் தகவலும், வாழ்க்கையோடு கிரக ஆற்றலின் பிணைப்பு நிரந்தரமானது என்பதற்கு அத்தாட்சி.

மனிதனுக்கும் கிரகங்களுக்கும் அகண்ட இடைவெளி இருக்கிறது என்பது உண்மை. ஆனால் சுழன்று கொண்டிருக்கும் தறுவாயில் அவற்றின் ஆற்றல் மனிதனின் செயலில் மாறுதலை விளைவிக்கிறது. உதாரணமாக, செவ்வாயின் ஆதிக்கம் மனித ரத்தத்தோடு இணைந்து மூளையை எட்டிச் சிந்தனைப் பாகுபாட்டை விளைவிக்கிறது. மற்றக் கிரகங்கள் தங்களுக்குரிய ஆதிக்கப் பகுதியோடு தொடர்பு கொண்டு சிந்தனையை எட்டுகின்றன. அண்டவெளியில் கிரகச் சுழற்சியின் மாறுபாட்டுக்கு இணையாக, மனிதனிலும் மாறுபாடு தென்படுவதால் தன்னைப் புரிந்துகொள்ள, கிரகங்களின் தன்மை நமக்குப் பாடமாக அமைந்திருக்கிறது.



கிரகங்களுக்கு நமஸ்காரம்

சனி: நட்சத்திரங்களுக்கு அடுத்தபடியாகப் பூமியிலிருந்து வெகு தூரத்தில் இருப்பது சனி. சூரியனிலிருந்து சனியன் தொலைவு 88,72,00,000 மைல். தனது சுழற்சியை ஒரு தடவை முடித்துக் கொள்ள ஏறக்குறைய முப்பது வருடங்கள் ஆகின்றன. சூரியனை ஒரு தடவை சுற்றி வருவதற்கு ஆகும் காலம் இது. ஒரு ராசியில் சனி இரண்டு வருடம்-5மாதம், 16 நாட்கள் தங்குகிறான். 5 மணி பகலும் 5 மணி இரவுமாக 10 மணி நேரம் இந்தக் கோளின் ஒரு நாள்.

தனது வீட்டிலிருந்து 4, 7, 10, 2, 12, 1 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும் வேளை, மனிதன் நிதானமாகச் செயல்பட வேண்டிய காலம் என்று ஜோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன. 3, 6, 11-இல் நல்ல பலனை அநுபவிக்கும் காலம்.

பூமி



வியாழன்: சூரியனிலிருந்து மிகத் தொலைவில் இருக்கும் கிரகம் வியாழன். சனிக் கிரகத்துக்குக் கீழே, தனி வட்டப் பாதையில் சுற்றி வரும் கிரகம் இது. சூரியனைத் தவிர, மற்றக் கிரகங்களைவிட இது உருவில் பெரிது. சூரியனிலிருந்து இதன் தூரம் சுமார் 48,39,00,000 மைல். ஏறக்குறைய ஒரு சுற்றை 11 வருஷம் 10 மாதம் 10 நாளில் முடிக்கிறது. இரவு பகல் முறையே ஐந்து மணிகளாக ஒரு நாள் பத்து மணி நேரத்தையுடையது. தனது வீட்டிலிருந்து 2, 7, 9, 11 ஆகிய ராசிகளில் வியாழன் சஞ்சரிக்கும் போது நல்ல காலமாகக் கருதப் படுகிறது. 12, 1, 8, 6 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும்போது நிதானமாகச் செயல்பட வேண்டும் என்று ஜோதிட சாஸ்திரம் குறிப் பிடுகிறது.

புதன்

செவ்வாய்: குருவுக்கு அடுத்தபடியாகத் தொலைவிலிருக்கும் கிரகம் செவ்வாய். சூரியனிலிருந்து ஏறக்குறைய 14,10,00,000 மைல் தொலைவு. செவ்வாய், ஒரு தடவை தன் நீள்வட்டப் பாதையில் சுற்றிவர 587 நாட்கள் ஆகின்றன. ஒரு ராசியில் 48 நாள் தங்குகிறான். 12½ மணி இரவும், 12½ மணி ராத்திரியுமாக ஒரு நாளைக்கு 24½ மணி நேரம் செவ்வாயில்.

3, 6, 11 ஆகிய ராசியில் செல்லும் போது நாம் கவனமாகச் செயல்பட வேண்டும் என்று சொல்கிறது ஜோதிட சாஸ்திரம்.

சூரியன்: பூமியிலிருந்து 9,30,00,000 மைல் தூரத்தில் சூரியன் இருக்கிறான். செவ்வாய்க்கு அடுத்தது. பூமி ஒரு தடவை சூரியனைச் சுற்றி வருவதற்கு 365¼ நாட்கள் ஆகின்றன. பூமியைச் சூரியன் சுற்றுகிறான் என்ற கோட்பாட்டிலும் நாட்கணக்கில் அதிக மாறுதல் இல்லாத படியால் பலன் சொல்லும் விஷயத்தில் எந்தவித மாறுபாடும் காணப்படுவதில்லை. பூமி ஒரு தடவை சுற்றி முடிக்க 24 மணிநேரம் தேவைப்படுகிறது. அதைச் சூரியன் பூமியைச் சுற்றுவதாக வைத்துக் கணக்கெடுப்பதும் உண்டு. நவக்கிரகத்தில் ஒளிமயமான கிரகத்தில் இதுவும் ஒன்று. 3,6,11 முதலிய வீடுகளில் சஞ்சரிக்கும்போது அவனது ஆற்றல் நற்பயனை விளைவிக்கிறது. மற்ற இடங்களில் எதிர்பார்த்த பலனை அளிப்பதில்லை.

சுக்கிரன்

செவ்வாய்

புதன்: சூரியனுக்கு அடுத்தபடியாகப் புதன். சூரியனிலிருந்து இது 36,30,000 மைல். 88 நாட்களில் இந்தக் கிரகம் ஒரு சுற்றை முடிக்கிறது. 2,7,9,11 ஆகிய இடங்களில் நற்பயனை அளிப்பான்.

சுக்கிரன்: சூரியனிலிருந்து கீழே ஏறக்குறைய 6,72,40,000 மைல் தூரத்தில் சுக்கிரன் இருக்கிறது. பிரகாசமான கிரகம் இது. பாரதத்தைச் சேர்ந்த ஜோதிடர்கள் புதனுக்குக் கீழே இருக்கிறது சுக்கிரன், மேலே அல்ல என்று சொல்வதுண்டு. சுக்கிரன் தன் பாதையில் ஒரு தடவை சுற்றிவர 225 நாட்கள் ஆகின்றன. 15 நாள் பகலும், 15 நாள் இரவுமாக அங்கே இருக்கும். 2,7,11-இல் சுக்கிரன் சஞ்சரிக்கும் காலத்தில் நன்மையை எதிர்பார்க்கலாம்.

சந்திரன்: சுக்கிரனுக்குக் கீழே சந்திரன் இருக்கிறான். பூமியிலிருந்து 2,38,850 மைல்கள். இருண்ட கிரகமானாலும் சூரிய ஒளியினால் ஒளி பெற்ற கிரகமாகவே சொல்லப்படுகிறது. பூமியை ஒரு தடவை சுற்றுவதற்கு 27 நாட்கள் தேவை. 14¾ மணிநேரம் பகலும் 14¾ மணி நேரம் இரவுமாக அங்கே ஒரு நாள் இருக்கிறது. 354 நாட்களில் சந்திரன், ஒரு சுற்றை நிறைவு செய்கிறது. எட்டாவது (பூமி) வீட்டில் சஞ்சரிக்கும் வேளை மிகவும் குழப்பமான சூழ்நிலையை உருவாக்கும்; 11-இல் இருக்கும்பொழுது மிக நல்ல காலம்.

சந்திரனுக்குக் கீழே நாம் வாழும் பூமி இருக்கிறது. சூரியனிலிருந்து பூமிக்கு உள்ள தொலைவு 93,00,000 மைல்கள். பூமியை அசையாத கிரகம் என்றும், சூரியன் அசைவதாகவும் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. 'அசையாத கிரகம்' என்ற தத்துவத்தில் அதைக் கிரகமாகக் கணக்கில் சேர்க்கப்படுவதில்லை.

ராகு—கேது:

வேதகாலத்திலேயே கிரகங்கள் வரிசையில் ராகு கேதுக்கள் இடம் பெற்றிருக்கின்றன, அதர்வ வேதத்தில் அவர்களைப் பற்றிய தகவல் இடம் பெற்றிருக்கிறது (சம்னே க்ரஹா: சாந்த்ர நமஸா: சமாதித்ய: சராஹு ணா). அவர்களுக்கு ராசி சக்கரத்தில் தனி இடம் இல்லை என்றாலும் ஜாதகத்தில் அவர்களுக்குத் தனி இடம் உண்டு. மேஷம், விருஷபம், மிதுனம், கடகம், விருச்சிகம், கும்பம் ஆகிய ராசிகளில் ராகு பலம் பொருந்தியிருப்பான். விருஷபம், கன்னி, மீனம் தனுசுவின் பிற்பகுதி ஆகிய இடங்களில் கேது பலம் பெற்றிருப்பான். இரவில் ஜனித்தவர்கள் சூரியன், சந்திரன், இவர்களோடு ராகு சேர்ந்திருந்தால் மிகுந்த பலசாலியாக விளங்குவார்கள். 1,47,10இலோ அல்லது 5, 9இலோ, அந்த வீட்டுக்கு

குரு



சனி

ராகு

உடையவர்களோடு இவர்கள் இருந்தால் யோக காரகனாக மாறிவிடுவார்கள் இவர்கள். ராகு ஒரு சுற்றை முடித்துக் கொள்ள 18 வருடங்கள் ஆகின்றன. கணிதம், ஜாதகம், தர்ம சாஸ்திரம், புராணம் ஆகியவற்றில் ராகுவின் தன்மை விளக்கப்பட்டிருப்பதால் நமது வாழ்க்கையோடு மற்றக் கிரகங்களைப் போல் இதுவும் சம்பந்தப்பட்டிருக்கிறது. தலை அசையும்போது இணைந்தபடி உடலும் அசைவதால் ராகுவும் கேதுவும் நேர்க் கோட்டிலேயே நகருகிறார்கள். தலையின் அசைவைக் கணிக்கும் போது உடலின் அசைவு தானாகத் தெரிய வருவதால் கணிதத்தில் கேதுவுக்கு இடம் இல்லை. முகூர்த்த சாஸ்திரத்திலும் கேதுவுக்கு இடம் இல்லை. ஆனால் ஜாதகத்தில் மற்றக் கிரகங்களுக்குரிய நிலை இவற்றுக்கும் உள்ளது.

ராகு இருண்ட கிரகம்; கேதுவும் அப்படியே. சந்திரனின் சஞ்சாரத்தின் போது நீண்டு தென்படும் இருண்ட இடைவெளி ராகு-கேதுவாகச் சொல்லப்படுகிறது. எப்போதுமே இவ்விரு கிரகங்களும் மற்றக் கிரகங்களுக்கு எதிரிடையாகச் சுழன்று கொண்டிருக்கின்றன. சனி, செவ்வாய் என்ற இரு கிரகங்களுக்கு ஒத்தவாறு பலன்களைச் சொல்ல வேண்டுமென்று ஜோதிடம் சொல்லுகிறது.

3-6-11 ஆகிய வீடுகளிலும், சில சமயங்களில் 10லும் இவை அதிருஷ்டத்தை விளைவிக்கும்.

சென்னை, சம்ஸ்கிருதக் கல்லூரி முதல்வர்:

கே. வி. சேஷாத்திரிநாதன்

ஓவியம் : **சரஸ்பாபு**

கேது

படங்கள்:

பார்ட்னர்கள்: C. வீராசாமி போன்: 3126 V. ஜனார்த்தனன் போன்: 4455

ஆபீஸ்: 167, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் - 626001

எங்கேயோ ஓர் இருண்ட குகையிலிருந்து வெளிவரும் உணர்வு பளிச்சென்ற ஒளி மிக்க பள்ளத்தாக்கை அடைந்துவிட்டது போன்றதொரு பிரமிப்பு. மெள்ள மெள்ள மேலே பறந்து நீல வானத்தை எட்டி நடந்தது போன்ற திகைப்பு. என்ன சத்தம் இது?

லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தார் விநாயகம்.

புகைப்படத்துக்குள் தெரிவது போல் வெள்ளைச் சீருடையில் ஓர் இளம் பெண் அறைக்குள் இங்குமங்கும் நடப்பது தெரிந்தது. அந்தச் சத்தம் அவளுடைய பாதணிகள் எழுப்பிய ஓசை.

பார்வையில் தெளிவும் மூளையில் சுறுசுறுப்பும் ஏற்பட்டபோதுதான் அவருக்கு விஷயம் புரிந்தது.

அவர் ஓர் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்துக் கிடக்கிறார். நோயாளிகளைக் கவனிக்க உள்ளே வந்த நர்ஸ் இங்குமங்கும் நடந்து கொண்டிருக்கிறாள்.

அப்படியென்றால்?

அன்று குளியலறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு குளிக்க ஆரம்பித்தபோது அறையே ஒரே இருட்டாகி அவர் மயங்கி விழுந்து விட்டிருக்கிறார்.

ஆமாம், இதென்ன நெற்றி ஓரத்தில்? மெல்லக் கையால் தடவிப் பிளாஸ்திரித் துண்டொன்று ஒட்டியிருப்பதை உணர்ந்தார்.

ஒரு சிறு காயம் ஏற்பட்டு விட்டிருக்கிறது. கீழே விழுந்த வேகத்தில் சுவரில் முட்டிக் கொண்டாரோ அல்லது அண்டா விளிம்பு பட்டு நெற்றியில் காயமோ? ஆமாம், எத்தனை நாளாக இங்கே கிடக்கிறார்? இது தனியார் மருத்துவமனையா, அரசு ஆஸ்பத்திரியா?

தனியார் மருத்துவமனைதான், சந்தேகமே இல்லை. சுவரில் காகிதப் பூச்சு அலங்காரமும், வெளேர் என்ற விரிப்பும், அருகில் உறவினர் உட்கார ரெக்ஸின் உறை போட்ட மெத்தென்ற சோபாவும் இருக்கின்றனவே! இவை போன்ற வசதிகள் தனியார் மருத்துவமனையில் தானே கிட்டும்?

ஒரு சிறிய அறையின் நடுவே துணித் திரையால் தடுத்து இரண்டு நோயாளிகளை அங்கே அனுமதித்திருக்கிறார்கள்.

தது? சுவரில் உள்ள காலண்டரைப் பார்த்தால் அவர் நேற்றுத்தான் மயங்கி விழுந்திருக்கிறார் என்று தெரிகிறது.

''இப்போ எப்படி இருக்கு?'' என்று கேட்டபடி அருகில் புன்னகையுடன் குனிந்த செவிலியிடமிருந்து டெட்டால் மணம் முகத்தில் மோதியது.

''உடம்பு தேவலை. நான் இப்போ எங்கே இருக்கேன்? இது காலையா, மாலையான்னு சொல்ல முடியுமா?''

''ஆனந்தா நர்ஸிங்ஹோமில் இருக்கீங்க. நேற்றுக் காலையில் அனுமதிக்கப்பட்டீங்க. இப்போ காலை பத்து மணி. டாக்டர் ஒரு முறை வந்து பார்த்திட்டுப் போயிட்டாங்க. மறுபடி பகல் பன்னிரண்டு மணிக்கு வருவாங்க. நீங்க கண்ணை விழிச்சுப் பேசும் சக்தியை அடைஞ்சா, உங்களுக்கு நீராகாரம் தரச் சொல்லியிருக்கார் டாக்டர்.''

''பல் தேய்க்கிறீங்களா? முகத்தைக் கழுவித் துடைச்சு விடறேன். இப்படித் தலையணை மேலே சரிஞ்சு நிமிர்ந்து உட்கார முடியுமா?.''

அவள் ஊசிப் பட்டாசுகளைப் போல் படபடத்தாள்.

தீபாவளி வரை

-லக்ஷ்மி-

விநாயகத்துக்கு அப்போதுதான் நினைவு வந்தது.

தீபாவளிக்கு இன்னும் சில நாட்கள் தானே இருக்கின்றன? பாவம், முரளி, அவர் மகன் மிகவும் பயந்து போயிருப்பான்.

தாத்தா வீட்டில் இல்லையே என்று பேரன் கார்த்திக் மிகவும் தவித்துப் போயிருப்பான். பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் தாத்தாதான் அவனுடைய சீருடையைக் களைந்து வீட்டில் உபயோகிக்கும் பாண்ட், சட்டைகளைப் போட்டு உதவ வேண்டும்.

''தாத்தா, ஷூவைக் கயட்டி விடுங்கோ!''

''தாத்தா, நீங்களே சாதத்தை ஊட்டி விடுங்கோ, தாத்தா! இன்னிக்கு அந்தக் குருவிக் கதையைச் சொல்லுங்க.'' விடமாட்டான், பொடியன். பாவம், மருமகள் ராஜி என்ன செய்வாள்?

வீட்டில் வேலைக்காரி சமையலுக்கும் மற்றக் காரியங்களைக் கவனிக்கவும் இருந்தாலும் மனைவியை இழந்த மாமனார்க் கிழம் வீட்டையும், கார்த்திக்கையும் நன்றாகப் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் வேலைக்குப் போய் வந்தாள்.

முரளியும் அவளும் சம்பாதித்தும் செலவுகளைச் சமாளிக்க முடியவில்லை.

வீட்டுக்கு வந்தால் தோள் பையைப் போட்டுவிட்டுத் தொப்பென்று நாற்காலியில் விழுவாள்.

''அம்மா வந்திருக்காங்க! டீயும் பலகாரமும் எடுத்துவா'' என்று அவர் குரல் கொடுத்தால் தான் வேலைக்காரி முத்துநாகம் நகர்வாள். தானே எடுத்து உபசரிக்கத் தெரியாத மக்குப் பிறவி அவள்.

செவிலி கொடுத்த கஞ்சியைக் குடித்துவிட்டு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தார் விநாயகம்.

''படுக்கையிலிருந்து இறங்கி நிக்காதீங்க. இன்னும் ஒரு நாள் உங்களைக் கவனிக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார். அவசரமாக் கழிவு அறைக்குப் போகணும்னா, இந்தப் பித்தானை அழுத்துங்க. நாங்க யாராவது வந்து உதவி செய்வோம். உங்க மகன் காலையிலே கொண்டுவந்து உங்க கைப் பிரம்பை வச்சுட்டுப் போயிருக்கார். நீங்க எழுந்து நிற்க முயன்றால் அதை ஊன்றிக்கொண்டு நின்று பாருங்க; நடக்க முயலாதீங்க.''

''என் மகன் வந்திருந்தானா?''

''நேத்து முழுவதும் உங்க வீடே இங்கேதான் இருந்தது. உங்க மருமக ராத்திரி முழுதும் கண்ணை விழிச்சுக்கிட்டுத் தூங்காம உட்கார்ந்திருந்தது. வேலைக்குப் போற பெண்ணுமே? நான்தான் விடிகாலையிலே வீட்டுக்கு அனுப்பி வச்சேன். உங்க வீட்டு வேலைக்காரி, ஒரு பருமனான அம்மா, விசிச்சு அழ ஆரம்பிச்சுட்டாங்க. டாக்டர் கோவிச்சுக்குவாரேன்னு முதல்லே அவங்களை வெளியிலே அனுப்ப நான் பட்டபாடு?''

விநாயகத்துக்குக் கேட்கப் பெருமையாகத்தான் இருந்தது. முரளியின் பொருளாதாரத்துக்குக் கொஞ்சம் மீறிய இடந்தான் அந்த மருத்துவ மனை. ஆனாலும் தந்தையின் உடல் நிலைதான் முக்கியம் என்று நினைத்து அங்கே சேர்த்திருக்கிறான். பாவம், ராஜி! இரவு முழுவதும் தூங்காமல் அவரைக் கண் காணித் திருக்கிறாளே?

''என் பேரன், பொடிப் பயல்! அவன்கூட வந்திருப்பானே?''

''நாங்க சின்னக் குழந்தைகளை, நோயாளியைப் பார்க்க அனுமதிப்பதில்லை. குழந்தை வராந்தாவில் நின்று அழுது கொண்டிருந்தான். எனக்கு மனம் சங்கடப்பட்டது. தொற்று நோய் கேஸ் அல்லவே! அதனால் உள்ளே விட்டேன். பெரியவரே! உங்க பேரனுக்கு உங்க மேலே எத்தனை ஆசை! 'தாத்தா, விழிச்சுப் பாருங்கோ, 'தாத்தா' என்று சொல்லிக்கொண்டு குழந்தை உங்க கன்னத்தை வருடினதைக் கண்டு என் மனம் கரைஞ்சு போச்சு.''

விநாயகம் நெஞ்சு நெகிழ்ந்து போனார். இன்னும் என்னவோ கேட்க அவர் வாயைத் திறக்கு முன் செவிலி வேகமாக வெளியேறி விட்டாள். உள்ளே வந்த உதவிப் பையன் நடுவில் தொங்கிய திரையை ஒரு பக்கமாக ஒதுக்கிவிட்டுப் போய் விட்டிருந்தான்.

பக்கத்துப் படுக்கையில் கிடந்தவரை பரிதாபமாகப் பார்த்தார் விநாயகம். மழிக்கப்படாத நரைத்த முடி முள்ளம்பன்றி போலத் தெரிந்தது. கண்களை மூடிக் கொண்டு கிடந்த கிழவர் கைமடக்கில் குளூகோஸ் திரவம் சொட்டுச் சொட்டாக ஏற, ரப்பர்க் குழாயில் ஊசியுடன் பொருத்தப்பட்டிருந்தது. அத்துடன் ரப்பர்க் குழாய் வழியே பிராணவாயு மூக்குக்குள் செலுத்தப்பட்டிருந்தது. மயக்க நிலையில், தம்மையும் அறியாமல் குழாயை இழுத்து விடாதிருக்க, பிளாஸ்திரித் துண்டு ஒன்று குறுக்கே குழாயைக் கவ்விக் கொண்டிருந்தது. கொஞ்சம் நிமிர்ந்து பக்கத்துப் படுக்கையில் கிடந்த நோயாளியை உற்றுப் பார்த்தார்.

திடுக்கிட்டுப் போய் ஆயாசத்துடன் தலையணைமீது சாய்ந்து கொண்டார். ''அட பாவி! இங்கே கூடவா நீ எனக்குப் போட்டியா வந்துட்டே?'' ஆத்திரத்தை அடக்க மாட்டாமல் உரத்த குரலில் முணுமுணுத்தார்.

பெரிய தொழில் நிறுவனத்தை நடத்திக்கொண்டு வாழாது வாழும் நமச்சிவாயத்தை ஒரு தனி அறையில் அல்லவா அநுமதித்திருக்க வேண்டும்? உறவினர் யாராவது காத்துக்கொண்டிருக்க வேணுமே!

''சாதாரண அந்தஸ்துடைய விநாகத்தை அனுமதித்திருக்கும் அந்தச் சிறு அறையிலேயே அவனைக் கொண்டு வந்து போட்டிருக்காங்களே?'' அவருடைய கேள்விக்குப் பதிலளிப்பது போல உள்ளே வந்த ஆயா, கழிவறையைச் சுத்தப்படுத்தி விட்டு, வார்டு பையனிடம் வம்பு பேசத் தொடங்கினாள்.

''அவசரமா நேத்து இவரைக் கொண்டு வந்து போட்டப்போ இந்த அறையே கிடைச்சது அதிர்ஷ்டம்னு சொல்லணும். பணக்காரனா இருந்தா என்னப்பா? நோயும் சாவும் பணக்காரன், ஏழைன்னு வித்தியாசம் பாக்குதா? எங்கப்பாவுக்குத் தனி அறை வேணும்னு இவர் மகன் வந்து அலட்டிக்கிட்டார். தனியறை காலியில்லே. வேறே வழியில்லாமே இதிலே அனுமதிச்சுட்டாங்க.''

கண்களை மூடிக்கொண்டு இறுக நமச்சிவாயத்தைப் பற்றி நினைத்தார்.

அமைதியாகக் கிடந்ததினால் அடங்கிவிட்ட அவருடைய ரத்த அழுத்தம் குபீரென்று மேலே ஏறிவிட்டது. முகம் முழுவதும் நெருப்பாகி நெஞ்சம் வேகமாகத் துடித்தது.

'பாவி, நமச்சிவாயம்! அவர் வாழ்வில் எத்தனை முறை போட்டியாகக் குறுக்கிட்டு அவரைக் கீழே தள்ளிவிட்டு முன்னேறியிருக்கிறான்!

இருவரும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பள்ளிக்கூட நாட்களில் விநாயகம் புத்திசாலியான மாணவன் என்ற பெயர் எடுத்தது உண்மை. ஆனால் வகுப்பில் முதல் மாணவன் என்ற பரிசை ஆண்டு விழாக்களின்போது தட்டிக்கொண்டு போனவன் நமச்சிவாயம். எல்லாம் ஒரு மதிப்பெண் வித்தியாசத்தில் தான். அதை நினைத்து அவர் வயிறு எரிந்த நாட்கள் எத்தனை? அந்தத் தோல்வியை இன்னமும் மறக்கமுடியவில்லையே? பள்ளிப் படிப்புக்குப் பிறகு அவருடைய பெற்றோர்கள் சென்னைக்கு வந்து குடியேறி விட்டனர். கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்த அன்றே அவருக்குப் பெருத்த அதிர்ச்சி.

அதே கல்லூரியில் நமச்சிவாயமும் சேர்ந்திருந்ததோடு அவர் எடுத்துக் கொண்டிருந்த அதே பாட முறைகளை அவனும் தேர்ந்து எடுத்துக் கொண்டிருந்தான். கல்லூரியிலும் அவனுடன் ஓட்டப் பந்தயம். எத்தனை பாடுபட்டுப் படித்தும், பாவி நமச்சிவாயந்தான் முதல் மாணவன் என்ற தகுதியையும் பரிசுகளையும் பெற்று அவர் மனத்தை நொறுக்கி விட்டான்.

பி.ஏ. பட்டத்துக்குப் பிறகு வேலைதேடும் படலம். கல்லூரிவரை போட்டி போட்டுக் கொண்டு பரம எதிரியாக, நெஞ்சில் நெருஞ்சி முள்ளாக உறுத்திக் கொண்டிருந்த நமச்சிவாயத்தை இத்துடன் உதறி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் ஒரு கணக்கர் வேலைக்கு நேர்முகத் தேர்வுக்கு சென்று வரிசையில் உட்கார்ந்த விநாயகம் திணறிப் போனார்.

அவருக்கு மூன்றாவதாக, அதே வேலைக்கு நேர்முகத் தேர்வுக்காக நமச்சிவாயமும் வரிசையில் உட்கார்ந்திருந்தான். ஐம்பது பேர்களை வரச் சொல்லியிருந்தது அந்த நிறுவனம். முடிவில் நமச்சிவாயத்தைத் தேர்ந்தெடுத்து வேலைக்கு அமர்த்திக்கொண்டது. வேலை தேடும் இடத்தில் கூடவா இவன் போட்டி போட்டு வெற்றியடைய வேண்டும்? ஆத்திரமும் பொறாமையும் அடக்க முடியாது அவர் அழுதேவிட்டார்.

அதற்குப் பின் அலுவலகங்களின் படியேறி, வெயிலில் அலைந்து, முடிவில் ஒரு சாதாரண அலுவலகத்தில் குறைந்த சம்பளத்தில் ஒரு கணக்கர் வேலையைத் தேடிக் கொண்டார். அங்கேதான் நளினியைச் சந்தித்தார். நமச்சிவாயத்தினால் புண்ணாகிவிட்ட மனத்துக்கு மருந்து போல அவளுடைய பேச்சும் புன்முறுவலும் அன்பும் அவருக்கு ஆறுதலாக இருந்தன. இருவரும் ஒருவரையொருவர் விரும்பினர். திருமணம் செய்துகொண்டு நிறைவோடு வாழப் போகிறோம் என்று அவர்கள் கண்ட கனவுக்குப் பெருத்த அதிர்ச்சி.

நளினி திடீரென்று வேலையினின்று விலகிக் கொண்டாள். ஒரு சில நாளில் அவர் அலுவலக முகவரிக்குத் திருமண அழைப்பிதழ் ஒன்று வந்தது. என்ன அநியாயம்! நளினிக்கும் நமச்சிவாயத்துக்கும் கல்யாணமாமே! மனம் சுக்கலாக உடைந்து போய்ப் பித்தம் பிடித்தவர் போலாகி விட்டார்.

பிறகுதான் தெரிந்தது. நமச்சிவாயம் அவளுடைய தூரத்து உறவினரின் மகன்; நல்ல வேலையில் இருக்கிறான் என்று பெற்றோர் வற்புறுத்தவே மீற முடியாமல் நளினி அவனுக்கு மாலையிட்டு விட்டாள்.

வாழ்க்கை தொடர்ந்தது. சாதாரண கணக்கர் என்ற நிலையிலிருந்து விநாயகம் தலைமைக் கணக்கர் பதவிக்கு உயர்ந்தார். திருமணம் செய்து கொண்டார். குழந்தைகள் பிறந்தன. அவர்களை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பில் நமச்சிவாயத்தைப் பற்றியே மறந்து போனார்.

மெள்ள உழைப்பின் படிகளில் ஏறி அவர் உதவி மானேஜர் பதவியை ஏற்று, உண்மையாக உழைத்து, நல்ல பெயருடன் ஓய்வடைந்தபோது ஓர் ஓட்டு வீடு அவருக்குச் சொந்தமாகியிருந்தது. மனைவியை இழந்து போன வீட்டின் வெறுமையை மருமகள் நிறைத்தாள். பேரன் கார்த்திக் பிறந்தான். காலம் ஓடியது.

ஒரு நாள் அண்ணாசாலையில் பஸ்ஸிலிருந்து இறங்கி ஒரு கதைப் புத்தகம் வாங்க அவர் பாதையோரத்தில் வெயிலில் நடந்தபோது, சர்ரென்ற சப்தத்துடன் அவருக்குச் சற்றுத் தொலைவில் நின்ற பென்ஸ் காரைப் பார்த்தார். அதிலிருந்து நவீன அலங்காரத்தில் பேரனைக் கையில் பிடித்துக் கொண்டு நமச்சிவாயம் இறங்கினார். அதே புத்தகக் கடைக்குள் நுழைவதைக் கண்டு விநாயகம் வியப்புடன் நின்று விட்டார்.

பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்த நமச்சிவாயமா அது? விசாரித்த போது உண்மை தெரிந்தது. ஒரு சிறு தொழிலை ஆரம்பித்து, அவன் அதை விருத்தி செய்து இப்போது ஒரு பெரிய நிறுவனத்தின் தலைவனாகப் பெரும் பணக்காரனாக, பிள்ளை, மருமகள், பேரன் என்று தடபுடலாக வாழ்கிறான்.

வாழ்க்கையின் முன்னேற்றத்தில் கூட நமச்சிவாயம் அவரைத் தோற்கடித்து வெகுதூரம் போய் விட்டானே?

ஆத்திரத்துடன் பொருமையும் நெஞ்சைக் கப்பிக் கொள்ள அவர் புத்தகம் வாங்காமல் வீடு திரும்பி விட்டார்.

இதுவரை அவருடன் போட்டியிட்ட நமச்சிவாயம் இப்போது மரணத்துக்காக அவருடன் போட்டியிடுகிறானா? பேஷாகப் போட்டியிட்டு அவருக்கு முன்னால் கிளம்பட்டும். அந்த ரப்பர்க் குழாயை இழுத்து விட்டால்? மூச்சு அடங்கிப் போகுமாமே? அதைச் செய்தால் பாவி தொலைந்து போய்விடுவான்.

திரையை விலக்கிக் கொண்டு யாரும் பாராத சமயம் பிரம்பின் வளைவான தலைப்பாகத்தை நீட்டி, அந்த ரப்பர்க் குழாயை இழுத்து அகற்றிவிட்டால்?

பிராணவாயு போவது நின்றுவிடும்; பாவியின் உயிர் போய்விடும். நெஞ்சு பக் பக்கென்று அடித்துக்கொள்ள அவர் மெள்ளப் படுக்கை மீது எழுந்தார்.

நமச்சிவாயத்தின் மேல் தொடக்கக் காலம் முதல் ஏற்பட்டிருந்த பொருமை இப்போது ஒரு கொலை வெறியாகி விட்டது. கைப் பிரம்பை அவர் எடுக்கு முன்பே அது சரிந்து கீழே விழுந்து விட்டது. நிற்கப் பிரயாசைப்பட்ட போது தலை சுற்றி மூச்சுத் திணறியது. பயந்துகொண்டு படுக்கை மீது சரிந்தார்.

அறைக்குள் பலர் நுழையும் காலடிச் சத்தம் கேட்கவே கண்களை இறுக மூடிக் கொண்டார்.

''இன்னும் நினைவே திரும்பலையே? தீபாவளி வரையாவது இழுத்திட்டுக் கிடந்தா போதும்!'' சலிப்பாக ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''உன் மாமனாருக்கு எப்பவுமே இதே தொழில்! ஒரு நல்ல நாள் அதுவுமா தலைவலி காய்ச்சல்னு படுத்துக்கிட்டு வீட்டையே கலக்கி விடுவார். வயசு ஆக ஆக அவருக்கு நோயும் அதிகமாயிட்டது. தீபாவளி நெருக்கத்திலே இப்படி ஒரு சங்கடமா?'' கரகரப்பாக இன்னொரு பெண்ணின் குரல். நமச்சிவாயத்தின் சம்பந்தியம்மாளின் சலிப்புப் போலும்!

'ஆசைப்பட்டுக் குழந்தை பட்டாஸ் நிறைய வாங்கி வச்சிருக்கான். காஞ்சிபுரத்துக்கே போய் நான் ஒரு அழகான புடைவை எடுத்து வச்சிருக்கேன். எல்லாத்திலுமே மண்ணை வாரி இரைச்சுடுவார் போல் இருக்கு இவர்?'' முன்னால் பேசிய இளம் பெண்.. நமச்சிவாயத்தின் மருமகள் போலும். கோபத்துடன் அடிக்குரலில் கசந்து கொண்டாள்.

''தொழிற்சாலைக்கும், வீட்டுக்கும், ஆஸ்பத்திரிக்கும் ஓடி என் தலையே சுத்துது. போகிறவர் பொக்னு பே யிட்டா எல்லாருக்கும் நிம்மதி!'' வெறுத்துப் பேசியவன் நமச்சிவாயத்தின் ஒரே ஆசை மகன்!

''தீபாவளி சாயங்காலம் நம்ப வீட்டிலே ஒரு பார்ட்டின்னு ஏற்பாடு பண்ணியிருக்கேன். என் தோழிகளைக் கூப்பிட்டிருக்கேன் டாடி! தாத்தா அதுக்குள்ளாரச் செத்துட்டா என் பார்ட்டி பாழாகிடுமே?'' செல்லமாகச் சிணுங்கிய நமச்சிவாயத்தின் பேத்தியின் கீச்சுக்குரல் நன்றாகக் கேட்டது.

''நர்ஸ் எப்படி இருக்கு நிலைமை?'' சற்று முன் பேசிய கனத்த ஆண் குரல் அதட்டலாகக் கேட்டது.

''இன்னிக்கு ராத்திரியைத் தாண்டினாலே அதிசயம்னு டாக்டர் சொல்றார். எதுக்கும் நீங்க தலைவரைக் கண்டு பேசறது நல்லது.''

''அட சட்'' என்று இகழ்ச்சியாக உறுமினான் நமச்சிவாயத்தின் செல்வமகன்.. விநாயகத்தின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. முகத்திலே வேர்வை பூத்தது.. எமன் செய்யப் போகிற அந்த வேலையை அவர் செய்ய நினைத்தாரே! என்ன முட்டாள்தனம்?.

திரையைத் தாண்டிக் கட்டிலருகே மெல்லிய காலடி ஓசை கேட்கவே, கண்களைத் திறந்து பார்த்தார்.

''மாமா, இன்னிக்கு நானும் உங்க மகனும் லீவு போட்டு விட்டிருக்கோம். நான் காலை முழுதும் உங்களைக் கவனிச்சுக்கிட்டு இங்கே இருக்கப் போறேன். உங்க மகன் பகல் பொழுது முழுதும் இருப்பார். ராத்திரிக்கு நம்ம நாகம் பார்த்துக்கறதா ஒப்புக் கொண்டிருக்கா. நாளைக் காலைப் பத்து மணிக்கு உங்களை வீட்டுக்கு அனுப்பி விடுவார்களாம். மிக மகிழ்ச்சியா இருக்கு!'' உற்சாகமாகப் பேசிய மருமகள் ராஜியையும் பின்னால் முறுவலித்தபடி நின்ற மகனையும், இருவரையும் தாண்டிக் கொண்டு, ''தாத்தா! தீபாவளிக்கு எனக்குப் பட்டாசு விட்டுக் காட்டணும். வீட்டுக்கு வந்ததும் குருவிக் கதை சொல்லணும்'' என்று தன் பிஞ்சு விரலால் முகத்தைத் தடவிய பேரனையும் கண்டு அந்த அன்பு வெள்ளத்திலே திணறிப் போனார்.

நமச்சிவாயம் அவரைப் பல போட்டிகளில் தோற்கடித்து விட்டான். ஆனால் இப்படி ஓர் அன்பான குடும்பத்தை உருவாக்குவதில் அவரிடம் அவன் எப்படித் தோற்று விட்டிருக்கிறான்?

''நமச்சிவாயா, போ! மரணத்திலும் என்னோடு போட்டி போட்டுக் கொண்டு முன்னால் போ. நான் என் அன்பான குடும்பத்தின் அரவணைப்பில் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்துவிட்டு வருகிறேன்.''

''போடா போ.''

''என்ன தாத்தா பேசுறீங்க?'' குழந்தை குனிந்து மெல்லிய குரலில் கேட்ட போது உடல் சிலிர்த்துப் போனார்.

''அந்தக் குருவிக் கதையை ஞாபகப்படுத்திக்கிறேண்டா கண்ணு.''..அவனது பிஞ்சு விரல்களைப் பற்றி, தன் கன்னத்தோடு பொருத்திக் கொண்டார். மனத்திலே மண்டிக் கிடந்த தோல்வி மனப்பான்மையின் கசப்பு மாயமாகிவிட்டதே! என்ன அதிசயம்? நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார் விநாயகம். *



இரும்பு கனிந்தது!

மீ.ப.சோமு

சிற்பியின் கையிலிருந்த அந்தச் சிற்றுளி திண்மையோடு சிந்தனை செய்ய ஆரம்பித்தது. உளியல்லவா? அதனுடைய கூர்மையான முனை வேகமாக வேலை செய்யத் தொடங்கியது.

கடந்த இருபது ஆண்டுகளாக அந்த உளி செய்து முடித்துள்ள மாபெரும் கலைப் படைப்புக்களை, அரிய பெரிய சாதனைகளை மனத் திரையில் ஓடவிட்டு, அந்தக் காட்சியிலேயே உவகை அடைந்துகொண்டிருந்தது அந்த இரும்பு உளி.

எத்தனை அற்புதமான சிலைகளை, காலத்தை வென்று நிற்கக் கூடிய எத்தனை கலை மாண்புகளைத் தன்னுடைய படைப்பாற்றலினால் இந்த மண்ணுலகிலே நிலைபெறச் செய்திருக்கிறது. தன் இயக்கத்தினால் எப்படிப்பட்ட உன்னத வடிவங்களெல்லாம் வெறும் பாறையின் உயிரற்ற கல்லிடமிருந்து உயிர் பெற்று எழுந்து வந்து கண்முன் நிற்கின்றன! உளி எண்ணிப் பார்த்தது.

தான் படைத்து நிறுத்திய கன்னியர்கள் எத்தனை பேர்! இளமையின் ஒய்யாரமும், வயதின் மிடுக்கும் மேனி முழுதும் உல்லாச அலைகளை மோதவிடுகிற எழிலரசிகளின் இங்கிதச் சிற்பங்கள் எத்தனை ஆயிரம், தனது படைப்பாற்றலிலே உருவாகி வந்திருக்கின்றன? வனப்பு என்ற சொல்லுக்கு நிகண்டு பொருள் கூறுகிறது. உளி நினைத்தது-தான் அப்படியா? தன்னுடைய மகிமை வெறும் பொருளைக் கூறுவதா? இல்லை, அந்தப் பொருளையே கண்ணிலே காட்டுவது அல்லவா!

மேலும் எண்ணியது அந்த அறிவுக் கூர்மையுள்ள சிற்றுளி; எழில் என்ற ஒரு சொல்லை எடுத்து அதை விளக்குவதற்காகப் புலவர்கள் ஒரு சொல்லுக்கு ஓராயிரம் சொற்களைப் புனைந்து வனைந்து செய்யுள் முடைகிறார்கள்! தான் அப்படியா? கண்ணுக்கு முன்னால் ஒரு கருங்கல்லிலே கூரிய முனையை விளையாடவிட்டு, நீளம் அகலம் திட்பம் ஆகிய மூன்று பரிமாணங்களோடு எழில் என்ற தத்துவத்துக்கே வடிவம் கொடுத்து விட முடியுமே! காணும் கண்ணுக்குக் காட்டும் திறன் எது? தன்னுடைய படைப்பு வல்லமையே! சொல்லை விடக் கல்லுக்கு அத்தனை மகிமை கிடைப்பது தன்னாலன்றோ! கல்லான ஒரு கல்லுக்கு மெய்யான ஒரு மெய்யை வழங்குவது தானேதான்!

இந்தச் சிற்றுளியேதான்! சந்தேகம் என்ன?

இவ்வாறு எண்ணிப் பார்த்தது அந்தச் சிற்பியின் சிற்றுளி. சிற்பியை மறந்துவிட்டு, அந்த உளியானது தன்னைப்பற்றிய ஒரு குதூகலத்திலேயே மேலே மேலே எவ்வியது!

'வயது பதினாறு இருக்கும் இளவயது மங்கை' என்று கவிஞன் பாடி விட்டான். ஆனால் அந்த இளவயது என்னும் பருவத்துக்கு, முகமும் விழியும் கையும் காலும் கொடுத்து, உயிரற்ற பாறையை உயிரோட்டம் உள்ள சிலையாக வடித்து நிறுத்தும் போதுதானே மனிதகுலம் அதைக் கண்டு மெய்ம்மறந்து நிற்கிறது. அது மட்டுமா? தான் செய்கிற படைப்புக் கலையை அநுபவிப்பதற்கு இலக்கிய இலக்கணத் தொல்லைகளே வேண்டாமே!

பண்டிதனுக்கும் கண் உண்டு. பாமரனுக்கும் கண் உண்டு. கல்வி

இருக்கலாம், இல்லாது போகலாம். ஆனால் இரண்டு பேருடைய கண்களுக்கும், உள்ளத்துக்கும், ஒருமித்த கலை விருந்தைப் பரிமாறுவது உளியா அல்லது மொழியா? சொல்லுக்கு இல்லாத சர்வ மனித சமரசம் என்பது, தான் படைக்கிற சிலைக்குத்தான் இருக்கிறது! சொற்சிற்பம் என்பது, கல்வி கற்ற மாந்தருக்கு மட்டுமே; ஆனால் கற்சிற்பமோ என்றால் மனித சமுதாயம் முழுமைக்கும்.

'ஆம்; எத்தகைய ஏற்றத் தாழ்வும் இல்லாத வகையிலே கலைப் படைப்பைச் செய்வது மொழியில்லை, உளிதான்' என்று தனக்குத் தானே சொல்லிப் பூரித்துக் கொண்டது, சிற்பியின் கையிலே இருந்த ஒரு சிறிய சிற்றுளி.

சோழர் காலத்திலே உருவாகி எழுந்து நின்ற ஒரு மாபெரும் கோவிலுக்குப் புனரமைப்பு வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான சிற்பிகள் அங்கே பணி செய்தவண்ணம் இருந்தார்கள். அந்த நூற்றுக்கணக்கான சிற்பிகளிலும் தலைமையான நாயகச் சிற்பியின் கையிலே இருந்த உளிதான் இப்படியெல்லாம் சிந்தனை செய்து பொங்கிப் பொங்கி உடல் பூரித்தது.

எங்கே பார்த்தாலும் 'டங், டங்' 'டிங், டிங்' என்று கல்லிலே உளிகளின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. எந்த ஓசையுமே உளியின் சிந்தனைச் செருக்கின் ஓசையைச் சற்றும் குறைக்கவில்லை.

கருவறையிலே மூலவர் அமர்வதற்குரிய பீடத்தின் ஆதாரச் சிற்பத்தை, 'ணங்' 'ணங்' என்று தட்டி உருவாக்கிக் கொண்டிருந்தான், அந்த மாபெரும் கலைஞனான தலைமைச் சிற்பி.

சிந்தனையின் வேகத்திலே இரும்பினாலான உளிக்கு இரத்த அழுத்தம் அதிகமாயிற்று. தலையிலே சூடேறிச் சூடேறி உளிக்குக் கிறக்கம் கொடுத்தது. அந்த மண்டைக் கிறக்கத்திலே உளிக்குக் கண்கள் சுழல ஆரம்பித்தன.

சிற்பியின் கைச் சுத்தியல் மீண்டும் மீண்டும் உளியின் கொண்டையிலே அடித்தது. அடித்துக்கொண்டே இருந்தது. கற்கள் சிதறச் சிதற ஒரு சிற்பம் உளியிலிருந்து உதயமாகி மலர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த உளியோ?

சுத்தியலின் ஒவ்வோர் அடியும் உளியின் இரத்த வேகத்தை 'விர்' 'விர்' என்று மண்டைக்கு ஏற்றியது.

'கடவுள் மனிதனைப் படைத்தான் என்கிறது உலகம். ஆனால் அந்தக் கடவுளையே படைத்தது நான் அல்லவோ!'

இவ்வாறு உளி நினைத்ததோ இல்லையோ, பாதக் கூர்மையிலே இயங்கி வந்த உளியின் இரத்தம் முழுவதும் அதன் உளிக் கொண்டையிலே பாய்ந்து சுழன்றது. உளியினுடைய கண்ணிமைகள் இப்போது மூடின.

ஆம்; உளிக்குத் தலை சுற்றியது. கண் இருண்டது. அதன் விளிம்பிலே இருந்த ஜீவன் இப்போது தடம் புரண்டு ஓடியது.

'ணங்', 'ணங்' 'டணார்' சிற்பியினுடைய சுத்தியல் வலிமையோடு பாய்ந்து, அந்த உளியின் கொண்டையிலே ஒரு போடு போட்டது.

'டணார்' என்று மறுபடியும் ஓர் ஓசை. மழுக்கலாகிவிட்ட உளி, சிற்பியினுடைய கையிலிருந்து தெறித்துக் கீழே விழுந்தது.

தலைமைச் சிற்பி திரும்பிப் பார்ப்பதற்குள், அவனுக்கு அருகிலே நின்று கொண்டிருந்த மாணவச் சிற்பி, தன் குருநாதனுடைய சிருஷ்டி வெறி முறிந்து விடாதபடி, மின்னல் வேகத்திலே ஒரு புதிய உளியை எடுத்து நீட்டினான்.

பணி தொடர்ந்தது. 'ணங், ணங்' என்று ஓசையுடன் புதிய உளி தன் வேலையைத் துவங்கியது, சிற்பியின் கைக்குள் முற்றிலும் அடங்கிக் கொண்டே!

''அட மழுக்கு உளியே, கீழே விழுந்து விட்டாயே! இன்னும் சற்று நேரம் நீ ஆணவம் இல்லாமல் வேலை செய்திருந்தால், பக்தர்களின் பால் அபிஷேகமும், தேனபிஷேகமும் குடம் குடமாக நீ வடித்த மேனியில் பொழிந்திருக்குமே! கருவறையிலே கரங் கூப்பிய அஞ்சலியும் தீபாராதனையும் மூலவரோடு சேர்த்து உனக்கல்லவா கிடைத்திருக்கும்! அத்தனையும் வீணடித்துக் கீழே, மண்ணிலே, விழுந்து விட்டாயடா! அட மழுங்கல் உளியே, அட இரும்பே! அட இரும்புத் துண்டே!''

இவ்வாறு சொல்லிக் கொண்டே பக்கத்துத் தூண் ஒன்றிலே வந்து உட்கார்ந்தது ஒரு கோபுரப் புறா.

''இப்போது என்ன குடி முழுகிப் போய்விட்டது?'' என்று அந்தப் புறாவைப் பார்த்துக் கேட்டது, அகங்காரம் இன்னும் மழுங்காத அந்த உளி!



''இரு, இரு, பொறுத்திருந்து பார்! உன்னையும் உன்னோடு சேர்ந்த வேறு மழுங்கல்களையும் திரட்டி, இரும்புத் துண்டுகளோடு சேர்த்துக் கோணியிலே கட்டிக் கொண்டுபோய், கொல்லன் உலைக்களத்து நெருப்பிலே, மறுபடி மறுபடி போட்டு, மறுபடி மறுபடி உருக்கி, மீண்டும் மீண்டும் சம்மட்டியால் அடித்து, மறுபடியும் தீயிலே போட்டு, கண்ணீரிலே, அதாவது தண்ணீரிலே நனைத்து, மறுபடியும் தண்ணீரிலே முக்கி, மறுபடியும் சம்மட்டியினால் அடித்து, மறுபடியும் மீண்டும்; மறுபடியும், மீண்டும்; மீண்டும்—''

இப்படி 'மீண்டும் மறுபடியும்' என்று அடுக்கிக் கொண்டே போன புருவை இடைமறித்தது அந்தச் சிற்றுளி.

''நெருப்பா! சம்மட்டியா! தீயா! உலைக்கூடமா!''

ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு ஆச்சரியக் குறி போட்டுக் கேட்டது உளி. அது ஆச்சரியக் குறியா அல்லது இதயத்தின் வேதனைக் குறியா? அது உளிக்கே தெரியாது.

''தம்பீ! நெருப்பையும் சம்மட்டியையும் மறந்து போய் விட்டாயே தம்பீ! எத்தனை காலம் நெருப்பிலே தவமிருந்து நீ ஒரு சிற்பியின் சிற்றுளியாக மாறிய இரும்பு நீ! அதெல்லாம் மறந்து போய் விட்டதே அப்பனே! உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை. நீ சேர்ந்த இடம் அத்தனை உன்னதமானது-காலினால் மிதித்து நடக்கிற பாறையைத் தலையாலே வணங்கும் தெய்வமாக உருவாக்குகிற ஒரு மேதைச் சிற்பியின் கையல்லவா அது?

கையின் சிறப்பு அநதக் கையிலே உள்ள உளிக்கு ஏறினால், மாறினால், அதற்கு முடிவு உலைக் கூடந்தான்!'' என்றது புரு.

இரும்பு உளிக்கு இப்போது உடம்பு முழுவதும் தீ பரவியது. அதன் மன உலகிலே சம்மட்டியின் அடி 'படீர் படீர்' என்று ஓங்கி ஓங்கி விழுந்தது.

இந்த உரையாடலை இதுவரை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சுத்தியல் இப்போது பேசிற்று:

''தம்பிகளே! இந்தச் சொற்சண்டை எதற்கு? இங்கே நடந்து கொண்டிருக்கிற கற்சண்டைக்கு நடுவிலே, இப்படி ஒரு சொற்சண்டை ஏன்? தீ என்றும், நெருப்பு என்றும் அஞ்சாதீர்கள்! தங்கத்தை உருக்குகிற நெருப்பு என்ன காரணத்துக்காக அந்த நெருப்பென்னும் வேதனைக்கு அதை உள்ளாக்குகிறது? ஆணவமாக வளையாமல், இளகாமல் கடினப்பட்டுக் கிடந்த தங்கத்தை உருக்கி இளக்கி வளைத்துச் சுத்தியினால் அடித்து, நெருப்பிலும் நீரிலுமாக மாற்றி மாற்றி வதைப்பது எதற்காக? ஒரு தெய்வத்தின் கழுத்திலே சென்று அணிகலனாக அது ஜொலிக்க வேண்டும் என்பதற்குத்தானே? இரும்பைத் தீயிலே போட்டுச் சம்மட்டியினால் அடித்து ஒரு சிற்பியின் படைப்புக்குரிய சிருஷ்டி ஆயுதமாக அல்லவா அதை, இரும்பை உருவாக்குகிறது, அந்த நெருப்புத் தவம்! தீட்டித் தீட்டிக் கூர்மை சேர்ப்பது எதற்காக? கல்லைக் கடவுளாக்குவதற்காக! அது உலைக்கூடம் இல்லை, கலையின் மகத்தான வேள்விக்கூடம். யாகசாலை!'

இவ்வாறு சொல்லி நெருப்புக் கடவுளுக்கு, தீயெனும் தேவனுக்கு' அஞ்சலி செய்தது சுத்தி, சுத்தியல்! அதுவும் ஒரு காலத்தில் வெறும் இரும்பாக இருந்ததுதான்; இப்போது உளியை அடிப்பதற்கான ஒரு சுத்தியலாக உருவெடுத்திருக்கிறது.

''தம்பிகளே! தீயே நமது தெய்வம். நெருப்பே நமது தந்தை. அவன் நமக்கு மேன்மைகள் தருகிறான். உயர்வுகள் நல்குகிறான். அவனை வணங்குவோம். அவன் நமக்கு மாண்புகள் தருவான். அவனைப் போற்றுவோம். அவன் நமக்கு உயர்நிலைகள் அருள்வான், அக்கினியை வழிபடுவோமாக!''

மாலை கவிந்தது. உளிகளின் ஓலம் அடங்கியது. கோவில் முழுதும் விளக்குகள் எரிந்தன. உளி என்ற இரும்பின் உள்ளம் கனிந்தது! அது சொல்லிற்று:

''நெருப்பு என் ஆணவத்தைப் பொசுக்கும். சம்மட்டி என்னை என்ன செய்யும்? உருவை உருவாக்க என்னை உருவாக்கும். உலைக் கூடத்தின் நெருப்பே என் அறிவுச் சுடர். அந்தக் கனல் வேள்வியே எனது தீபாவளி!'' ❋

Dr. A. மதுரம் குரு மருந்துகள்

100 வருடங்களுக்கு மேல் புகழ் பெற்றது

விரைவில் குணமடையச் சக்தி வாய்ந்த

குரு தைலம் குரு பல்பொடி

பிளாஸ்டிக் டப்பாக்களில் விற்பனைக்குக் கிடைக்கிறது

Dr. B. மதுரம் & சன்ஸ்

குரு மருந்துசாலை திருச்சிராப்பள்ளி-17.

— நாகசுந்தரம்

அடடா! கையிலே என்ன கட்டு?
தெருவில் போறு கண்ட கண்ட கழுதைக 'மேடம், மணி என்னன்னு கேட்கிறதுகள்.
ஒவ்வொரு மாதமும் முதல் தேதி உன்னிடம் பிக்பாக்கெட் அடிக்கிற ஆசாமி நான்தான்னு உனக்குத் தெரியுமில்லே! இப்ப வேறு எவனிடமோ போனஸ் பணத்தை, பிக்பாக்கெட்டா தொலைச்சுட்டு வந்து நிக்கறியேடா, பாவி!
"வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கச் சொன்னாங்களே! நான் ஆல மரம் வளர்க்கப் போறேன்... நீ?"
"வேப்பமரம்! மாமியார் பிசாசு, நாத்தனார் பிசாசுகள் ஆட ஆரம்பிச்சா வேப்பல கொத்துக்கு அலைய வேண்டாம் பார்!"
"ஆபீசுக்கான ஸ்டேஷனரி சாமான்கள் வாங்கும் போது சோப்பு சீப்பு கண்ணாடி ஒரு செட் வாங்கிடுங்க."
"அது எதற்கு?"
"மொத மொதலா நம்ம ஆபீசுக்கு ஒரு பொம்பளே வேலைக்கு வரப் போறாளாம்"
ரெண்டு கர்ச்சீஃப் எதற்கு வாங்கினீங்க?
நாலு ஜாக்கெட் தைக்கணும், துணி வாங்கிட்டு வாங்கன்னு நீ சொன்னியே! மறந்துட்டியா?
"என் ரத்தத்தின் ரத்தமே! என் சதையின் சதையே! என் எலும்பின் எலும்பே! என் நரம்பின் நரம்பே! என்று உன் கணவர் யாரிடம் கொஞ்சுகிறார்? உன் குழந்தையையா?"
"ஊஹும்! தன் உடம்பையே கண்ணாடிலே பார்த்துண்டு பேத்தறார்..."

மோக உதயம்

மவ்ரி



மேலைக் கடல்அலைமேல் வானவிளிம்பில்
மாயச் சிவப்புநிறம் முகழ்த்திருக்கும்;—ஒரு
நீலக் கடல்முழுதும் ரத்தக்குளமாய்
நெளிந்து வளைந்துவந்தே அலறிவிழும்.—வந்து
வானக் கலைமகளின் விந்தைமுகமேல்
வண்ணத் திரைகவிழ்ந்தே யிருள்மயக்கும்;—பல
மோனங் கலைத்துப்பல் புள்ளின்வரிசை
மோகனத் திரைகளுக்குக் கரையமைக்கும்.—அந்த
முந்தும் கணங்களிலே மாற்ற முடனே
மாயமாயத் தாரிகைகள் வண்ணமிழைக்கும்—பல
உந்தும் கிழக்கினிலே கறுத்திருக்கும்
ஓங்கு வெளிநிழலின் தோற்றமளிக்கும்.—பொருள்
வேழ மெனநகரும் மேகமந்தையோ
வேடிக்கை நிழல்தந்து மாற்றியமைக்கும்.—இருள்
போமும் இருள்கவிழ் நேரமிதிலே
பொற்பும் அணைவதுவாய் நிறம்அடங்கும்.—தீயின்
மலைத்து மலைத்துவரும் அந்திமகளின்
மனத்தை மயக்குமோர் இருள் முயக்கம்;—வரல்
கலைகுறை பிறைதெரியும் நாட்களுமுண்டு;
கடலில் தோன்றுகின்ற வெள்ளித் தட்டமுமுண்டு.—அங்குக்
நேற்று நிகழ்ந்தவையே இன்றிராமலே
நெட்டைக் கனவுகளாய் தினம்மிதக்கும்.—பல
ஏற்றிடும் அந்தியாம் நேரமிதிலே
இணைந்தே திரிந்தலுத்த மனிதர்எல்லாம்,—அன்று
முந்தித்தம் வீடடைந்தே மாதர்முகமேல்
மோகன முறுவலிலே மனம்கிறங்கும்.—எழும்
சிந்தும் சிரிப்புடனே காதற்கண்களில்
தேக மிளிர்வதனல் கிளர்ச்சிமிகும்.—அவர்

குயிலோசை

அதிகாலை நேரத்துப் பூபாளமோ?
அலைபோலத் தவழ்கின்ற தேன்ஓசையோ?
எதில்உன்றன் குரலோசை தான்சேருமோ?
ஏன்நீயும் மறைந்தேதான் தினம்கூவுவாய்?
இளந்தென்றல் உனைத்தேடி அசைந்தோடுமா?
எழிற்சோலை அரங்கந்தான் இசைகூட்டுமோ?
நலம்காண நீவாழ்த்து நவில்கின்றாயோ?
நாள்தோறும் நீபாடிப் பயில்கின்றாயோ?
நீயும்உன் அக்காளும் இளம்பெண்களாம்;
நீராடும் போதக்காள் மறைந்தே போனாள்.
வாயாலே நீதேடித் தினம்கூவுவாய்.
வரலாற்றை இதுஎன்பார்; பதில் கூறுவாய்;
நாள்தோறும் உன்ஓசை நான்கேட்கிறேன்;
நவில்வாய்நீ உன்ஆசை எனப்பார்க்கிறேன்.
யாழ்போன்ற இசைஓசை குயிலோசையே;
என்றென்றும் இனிக்கின்ற குரலோசையே.

நெல்லை ஆ. கணபதி



எனக்கேது பண்டிகை?

ஊரனைத்தும் ஒளிவெள்ளத்திலே!—இந்த
ஒண்டிக் கட்டை இருள்வெள்ளத்திலே!
பாரனைத்தும் இன்பப் பண்டிகையாம்!—இதைப்
பார்த்து மகிழவும் கண்களில்லை!
வெள்ளிச் சரிகையில் சேலைகளாம்!—பல
விதவித மானசிற் றுண்டிகளாம்!
உள்ளத்தி லேயின்ப ஊற்றுக்களாம்!—இதை
ஓர்ந்து ரசிக்கவும் கண்களில்லை!
சீறும் மத்தாப்புப் பட்டாசுகளின்—ஒலி
செவியில் நிறைகையில் ஏழையென்றன்
நாறும் உடலில் நலிந்திருக்கும்—ஆடை
நாற்றத்தைப் போக்க வழியுமில்லை!
திக்கற்ற வர்க்கேது தீபாவளி?—கண்கள்
தீய்ந்த எனக்கேது தின்பண்டங்கள்?
பக்கத்தில் வந்தெனைப் பார்க்கவும் கூசிடும்
பாவி எனக்கென்ன பண்டிகையோ?
ஊனமுற் றோர்க்கிங்கு உதவிகளாம்!—இதை
ஊரே உரைத்திடக் கேட்டேனம்மா!
தானம் பெறவும் தகுதி வேண்டும்—எனில்
தலைவிதி யன்றிவே றென்றுளதோ?

வி. துரைசாமி

எது முக்கியம்?

உஷா சுப்பிரமணியன்



வாசுதேவன் படியிறங்கும்போது சாப்பாட்டு மேஜையில் லதாவும், ரவியும், கலாவிடம் ஏதோ சொல்ல, உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்தனர். வாசுதேவனின் செருப்புச் சத்தம் கேட்டவுடன் மூவரும் சிரிப்பை நிறுத்திவிட்டுக் கடுமையான முகபாவத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்தனர்.

''வணக்கம்!''

''என்ன சமாசாரம்? பலத்த சிரிப்பு, என்ன விஷயம் சொல்லுங்க?''

''சாதாரண விஷயந்தான்.''

''என்ன சாதாரண விஷயம் சொல்லுங்களேன். நான் தெரிந்து கொள்ளக்கூடாதா?''

''ஒண்ணுமில்லே.'' மூவரும் குற்ற உணர்வுடன் சங்கடமாக நெளிந்தனர். இதற்கு மேலும் வற்புறுத்த வாசுதேவனுக்கு மனம் இல்லை.

இன்று புதன்கிழமையா? பூரி மசாலா, ரவா தோசை. இந்த வீட்டில் சிற்றுண்டியை வைத்தே கிழமையை அறிந்து கொண்டு விடலாம்.

அசாதாரணமாக நிலவிய அமைதியை உடைக்கும் பொருட்டு, ''கல்லூரி எல்லாம் எப்படியிருக்கு ரவி?'' என்று கேட்டார்.

''விசேஷமா ஒண்ணுமில்லே.''

''நடன வகுப்புக்குப் போகிறாயா லதா?''

''ம்ம்.''

''இப்போ என்ன கத்துக்கறே?''

''வர்ணம்.''

''நல்லது. ஒரு நாள் ஆடிக் காட்டு.''

''ம்.''

மௌனத்தில் இன்னும் சில நிமிடங்கள்.

''லதா, இன்று உனக்கு என்ன வேலை இருக்கு?''

''வழக்கம் போலத்தான். ஒன்பது மணிக்கு யோகப் பயிற்சி இருக்கு. அங்கிருந்து நேரே மஸாஜ் பார்லருக்கு. அப்புறம் வீட்டுக்கு வந்து குளித்துச் சாப்பிட்டுவிட்டு, மத்யான்னம் ஒரு மலர்க்கண்காட்சி ஏற்பாட்டுக்குப் போகணும். அதற்கப்புறம் திருமதி தயாள் வீட்டிலே விருந்து.''

சாப்பாடு முடிவதற்குள் வாசற்கதவின் அருகில் கதவைத் திறக்கத் தயாராக காரோட்டி நின்றான். உதவியாளர் மாடி அறையிலிருந்து அவர் கைப்பெட்டியை எடுத்துக் காரில் வைத்திருந்தார். கலா எழுந்து வந்து அவர் தோளை அணைத்துக் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினாள்.

''நல்லது, வர்றேன்!''

அவர் காரில் ஏறும் சமயம் மறுபடியும் மூவரும் சேர்ந்து பேசிக் கலகலவெனச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

வாசுதேவனுக்குச் சடாரெனக் கோபம் வந்தது. திரும்பி உள்ளே சென்று, 'என்ன என்னைக் கேலியா செய்கிறீர்கள்?' என்று கத்தலாம் போல் இருந்தது.

அவர் நண்பர்கள், சக தொழிலதிபர்கள் அவரிடம் அடிக்கடி சொல்லுவார்கள். ''வாசுதேவன், நீங்கள் அதிர்ஷ்டசாலி. தொழிலில் நீங்கள் தொட்டது எதுவும் பொன்னாக விளங்குகிறது. எந்த நெருக்கடியும் உங்களை நெருங்கவே பயப்படுகிறது. நம்மைப் போல் தொழிலதிபர்களுக்குத் தேவை எது? வீடு திரும்பினால் நிம்மதியான குடும்ப வாழ்க்கை. அந்த விஷயத்திலேயும் நீங்க உண்மையிலேயே ரொம்ப அதிர்ஷ்டசாலி.''

''நம்ம வீட்டில் ஒரு நாளைக்குக் கொஞ்சம் அசைவம் செய்ன்னு, இன்று பூஜை, புரஸ்காரம் என்று முதலிலேயே எதிர்மறை'' என்று ஒருவர் முணு முணுப்பார்.

''அதுவே தேவலை போல் இருக்கிறது, இந்த நாகரிகத்துக்கெல்லாம் பழக்கி வைத்தது, இப்போது என் மனைவியை மாதத்துக்கு ஒருமுறை கூட நான் வீட்டில் பார்க்க முடிவதில்லை. என்னைப் பார்த்துப் பேசக்கூட அவளுக்கு நேரம் இல்லை.''—இப்படி ஒருவர்.

''குழந்தைகள் என்றால் வாசுதேவன் குழந்தைகள் போல் இருக்க வேண்டும், பையனைப் பாருங்கள், ஐ.ஐ.டி.யில் பி.டெக். முதல் வகுப்பு. எம். பி. ஏ.விலும் ஏற்கெனவே முதல் மாணவன் என்று பெயர். இந்த வயசுக்கு ஒரு கெட்ட பழக்கம், பெரிய மனிதர்கள் வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து ஊர் சுற்றல் என்று எதுவும் இல்லை. என்ன மனமுதிர்ச்சி, அறிவு, அடக்கம்!''

''பெண் லதா மட்டும் என்ன, படிப்பு, பாட்டு, டான்ஸ் என்று எல்லாவற்றிலும் முதல். அத்தனை இருந்தும் அப்பா, அம்மாவுக்கு அடங்கின பெண். சிநேகிதிகள், சினிமா, பொழுதுபோக்கு என்று அப்பா அம்மாவுக்கு ஒரு தொந்தரவும் கிடையாது. வாசுதேவன் வாழ்க்கையில் முன்னேறக் கேட்பானேன்?''

இந்த உண்மையைக் கட்டாயம் வாசுதேவனால் மறுக்கத்தான் முடியாது. குடும்பத் தொல்லை என்பது அவர் அறியாத ஒன்று. மனைவியாலோ, குழந்தைகளாலோ அல்லது குடும்ப நிர்வாகத்திலோ சிக்கல் என்றோ, பிரச்னை என்றோ, அவர் என்றுமே உணர்ந்தது இல்லை.

ஆனால், இந்தக் குடும்பம் அவர் எதிர்பார்ப்பதை அவருக்கு அளிக்கிறதா? குடும்பம் என்பது என்ன? நாலில் கட்டிய, நெருக்கமான பூமாலை அல்லவா அது? அவர் வீட்டிலோ லதாவும், ரவியும் அம்மாவுடன் சகஜமாகப் பேசிச் சிரிக்கிறார்கள். அவர் வந்ததும் மரியாதையான உபசரணையுடன் நின்று விடுகிறார்கள்.

ஏன் இப்படி? அவர் மேல் ஏதாவது தவறா? கட்டாயம் அதற்கு வழியில்லை. அவர் குழந்தைகளைத் திட்டியதோ, அடித்ததோ, ஏன் கடிந்து கொண்டதோகூட இல்லை. வாய்ப்பு இருந்தால்தானே அதற்கெல்லாம்? எல்லாமே எதிர்பார்ப்பது போல் நடக்கும்போது ஏச்சுப் பேச்சுக்கு இடம் ஏது?

அவரை ஏன் யாரோ வெளி மனிதன் போல ஒதுக்கி வைக்கிறார்கள்? அவர் அவர்களுக்கெல்லாம் என்ன குறை வைத்திருக்கிறார்? தம் சுய தேவைகளையெல்லாம் பின்னுக்கு ஒதுக்கி, மாடாக உழைப்பதால்தானே வீட்டில் எல்லாரும் இத்தனை வசதிகளுடன் வாழ

முடிகிறது? ஏன் அதை நினைத்தாவது இவர்கள் அவரை நெருங்கி அணைக்கக் கூடாது? அன்பாக இரண்டு வார்த்தை பேசக் கூடாது?

குழந்தைகளாவது வேறு மாற்றுப் பறவைகள். அவர் மனைவி! இருபத்தேழு ஆண்டுகளாக அவருடன் வாழ்வை இணைத்துக் கொண்ட கலா, வேறு யாரும் அல்ல; அவருடைய நெருங்கிய உறவினள். அவள் கூட அல்லவா அவர் யாரோ போல நடத்துகிறாள்? அவர் ஏதோ ஓர் இயந்திரம் போலவும், அது சரியாக ஓட வேண்டும் என்பதற்காக வாரம் ஒருமுறை எண்ணெயிட வேண்டும் என்பது போலவும் அல்லவா நடந்துகொள்கிறாள். மனைவியா இவள்?

இருபது வருஷத்துக்கு முன் இப்படியா இருந்தாள் இவள்? 'கலா' என்று அழைக்குமுன் அப்படியே துவண்டு, குழைந்து விடுவாளே? ஐந்து வருஷம் முன்வரைகூடக் காலேச் சிற்றுண்டி முடிந்து எழும்போது மெல்ல அவர் தோளை அழுத்திக் கண்ணோடு கண் பார்த்துச் சிரிப்பாள். திடீரென எல்லாருக்கும் என்னதான் வந்தது? கலாவும் ஏன் சேர்ந்து மாறிப் போனாள்?



வாசுதேவனின் கோபத்தின் உச்சத்தில் மண்டைக்குள்ளே பூச்சி பறந்தது. படபடப்பில், குளிர்பதனம் செய்த காரின் உள்ளும் வேர்த்தது. 'கலா, உனக்கும், குழந்தைகளுக்கும் நான் யார் என்பதைப் புரியவைக்கப் போகிறேன்.'

அந்த வெளிநாட்டுக் கார் வழுக்கிக்கொண்டு நின்றது. வாயிற் காப்பாளன் காரின் கதவைத் திறக்க, ஒரு பணியாள் அவர் அலுவலகப் பெட்டியை எடுத்துச் சென்றான். வழி நெடுகப் பயமும் மரியாதையும் கலந்த வணக்கங்கள்.

இவர்கள் எல்லாருமே நடிக்கிறார்கள். இந்த வணக்கம், கும்பிடு எல்லாம் வெளி வேஷத்தோடு சரி. இந்த முக்கால் கிழவன் மண்டையைப் போடமாட்டானா என்றே ஒவ்வொருவரும் காத்திருக்கிறார்கள். இவன் போனால் என்ன, என்ன லாபம் நமக்கு என்று கணித்துக் கொண்டிருப்பார்கள். எல்லாம் வேஷம்.

அலுவலகத்தினுள் நுழையப் போனவர் சட்டென்று நின்றார். விறுவிறுவென்று வெளியே வந்து மறுபடியும் காரில் ஏறி அமர்ந்தார். ''டிரைவர், அகவுண்டன்டைக் கூப்பிடு.''

காரோட்டி ஒன்றும் புரியாமல் உள்ளே ஓடி, கணக்காளருடன் வெளியே வந்தான்.

''ஸார், எனக்கு உடனே இருபதாயிரம் ரூபாய் பணம் வேண்டும். அத்துடன் பத்து நாளைக்குக் கடிதங்கள், பில்கள் எல்லாவற்றிலும் எனக்குப் பதிலாக நீங்களே கையெழுத்துப் போட அனுமதி கொடுக்கும் அத்தாட்சிக் கடிதமும் எழுதிக் கொண்டு வாருங்கள்.''

அவரைப் பயத்துடன் நிமிர்ந்து பார்த்தார். ''ஸார், ஏதாவது தப்பா..''

''நான் சொன்னதைச் செய்யுங்கள்.'' வாசுதேவன் இருக்கையில் சாய்ந்து கொண்டார். கணக்காளர் ஐந்தே நிமிடத்தில் பணத்துடனும், கடிதத்துடனும் வந்தார்.

பணத்தை வாங்கிப் பெட்டியில் வைத்துக் கொண்டார். கடிதத்தை ஒப்பமிட்டார். ''டிரைவர், என்னை விமான தளத்தில் இறக்கிவிட்டு நீ வீட்டுக்குப் போ'' என்று ஆணையிட்டார்.

காலை விமானத்திலேயே டில்லிக்கு இடம் கிடைத்தது. டில்லியில் சில மணி நேரமே தங்கினார். அதுவும் கன்னாட் ப்ளேசில் சில உடைகள் வாங்கமட்டுமே. டில்லியிலிருந்து குளிர்பதனம் செய்த டாக்ஸி அவரைச் சிம்லாவுக்குச் சுமந்து சென்றது.

வாசுதேவன் ஏறக்குறைய முப்பது ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு டாக்ஸியினுள் சுதந்தரமாக விசிலடித்தார். சளசளவென்று தாம் அறிந்த ஓட்டை இந்தியில் சர்தார்ஜி காரோட்டியிடம் ஓயாமல் பேசினார்.

திருமதி டி.. சில்வா, வாசுதேவன் ஏன் நிர்வாகக் குழுக் கூட்டத்துக்கு வரவில்லை என்று புரியாமல் வீட்டுக்குப் போன் செய்தபோது, மஸாஜ் பார்லரில் முரட்டு நேபாளிப் பெண் ஒருத்தி, கலாவுக்கு எண்ணெய் தடவி நீவி விட்டுக் கொண்டிருந்தாள். காரியதரிசி, சமையற்காரன், காரோட்டி என்று கேள்விகள் மாற்றி, மாற்றிப் பறந்து முடிவில், ''முதலாளி விமான கூடத்தில் இறங்கிக்கொண்டு காரைத் திருப்பி அனுப்பி விட்டார்'' என்ற செய்தி கிடைத்தது. எந்தக் கூட்டத்தை தள்ளிப் போடுவது, எதை ரத்துச் செய்வது என்று புரியாமல் டி.. சில்வா குழம்பிக் குதித்துக் கொண்டிருந்தாள். அரை மணிநேரம் அலுவலகம் ஸ்தம்பித்தது. பின் வழக்கமாகச் செயல்படத் துவங்கியது.

வாசுதேவன் சஹானா ராகத்தை நீட்டி முழக்கி ஆலாபனை செய்தவாறு படகைத் துடுப்புப் போட்டார். முதல் இரண்டு நாள் வலியாக வலித்த தோள்பட்டை இன்று ஆரோக்கியமாகத் துடுப்பை வலித்தது. படகைக் கரை ஓரமாக நிறுத்தியவர், படக்குக்காரனின் அழுக்குப் பல் சிரிப்புக்காக இரண்டு ரூபாயைக் கூட்டிக் கொடுத்துவிட்டுப் புல்தரையில் எகிறிக் குதித்தார். அவர் அரை நிஜாரின் பின்புறம் ஒட்டியிருந்த சேற்றைப் பற்றிக் கவலைப்படாமல் வெறுங்காலுடன் நடந்தார்.

''ஸாஹப், ஸாஹப்'' என்று மூன்று நாள் பரிசயமான பூக்காரப் பையன் அவர் பின்னால் பூங்கொத்துடன் ஓடி வந்தான். அவனிடம் பிடிபடாதவாறு வாசுதேவன் வேடிக்கையாக ஓடினார். அந்தக் குழந்தைப் பையனும் விளையாட்டாகத் துரத்தினான். திடீரென நின்ற வாசுதேவன் பூச்செண்டு பிடித்திருந்த பையனையே அலாக்காகத் தலைக்கு மேல் தூக்கிச் சுழற்றினார். அவன் குலுங்கக் குலுங்கச் சிரித்தான். சேர்ந்து சிரித்த வாசுதேவன் அவன் கையிலிருந்த அத்தனை பூச்செண்டையும் பறித்துக் கொண்டார். சுலபமாக வியாபாரம் முடிந்த மகிழ்ச்சியில் பையன் அவருடன் சேர்ந்து குதித்து நடந்தான்.

வாசுதேவன் மனசு மிகவும் லேசாக இருப்பதை உணர்ந்தார். இந்தச் சுதந்தரம் மிகவும் சகஜமாக இருந்தது. உலகம் அழகாக இருந்தது. அவர் எல்லாருக்கும் வேண்டியவராக இருந்தார். பொழுது மங்கிய பிறகு அவர் தங்கியிருந்த நடுத்தர வர்க்க ஓட்டலில் மது அருந்தினார். அங்கே குடிக்க வந்த முந்நூறு நானூறு சம்பளம் வாங்கும் ஓட்டைக் கோட் அணிந்த பள்ளி ஆசிரியர்களும், அரசாங்க எழுத்தர்களும் தந்த நட்பு இனிமையாக இருந்தது.

சில சமயங்களில் கலாவுக்குக் காட்டமாக ஒரு கடிதம் எழுதலாம் என நினைப்பார். ஒரு பெரிய கூட்டமே கலாவின்

தலைமையில் அவரைத் தேடிக் கொண்டிருக்கும். கலா கவலையிலேயே இளைத்திருப்பாளா? கணவன் யாரிடமும் சொல்லாமல் ஓடிவிட்டான் என்றால் அது மனைவிக்கு எவ்வளவு பெரிய சமுதாயத் தலைகுனிவாக இருக்கும்? கலாவுக்கு நன்கு வேண்டும். அவரை ஒதுக்கி, குழந்தைகளின் வாழ்க்கையிலிருந்தும் அப்புறப்படுத்தியதற்கு நன்கு அநுபவிக்கட்டும். பத்து நாள் கழித்தும் அவர் வீடு திரும்பப் போவதில்லை.

''நான் எத்தனை சந்தோஷமாக இருக்கிறேன்' என்று கடிதம் எழுதிக் கலாவைக் குரூரமாக வதைக்கப் போகிறேன். என் உழைப்பையும், சம்பாத்தியத்தையும் உறிஞ்சிக் கொண்டு, என்னை மதிக்காமல் இருக்கும் அந்தத் திமிர் பிடித்த கழுதை நன்கு அநுபவிக்க வேண்டும்.' கடிதம் எழுதும் எண்ணத்தை இன்னும் சில நாட்களுக்கு ஒத்திப்போட்டார்.

வாசுதேவன் கன்னங்கள் உப்பி, முகத்தில் சோபை கூடி இருந்தது. சிம்லாவின் அக்கம்பக்கம் இருந்த பிரதேசங்களையெல்லாம் நடந்தும், பஸ்ஸில் சென்றும் பார்த்தாகிவிட்டது. மட்டக் குதிரையைத் தாமே ஓட்டிச் செல்லக் கற்றுக்கொண்டு விட்டார். 'ஹலோ' சொல்லுமளவு நிறைய நண்பர்கள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தம் குடும்பத்தாரைப் பழி தீர்த்துக் கொண்டு விட்டோம் என்ற எக்காளம்.

அன்று படகைத் துடுப்புப் போட்டுக் கொண்டு கரையை நெருங்கிய போது, தூர தெரிந்த முகம் பரிசயமானதாக இருந்தது.

அருகே நெருங்க, நெருங்க அவர் தொழிலகங்களின் கண்காணிப்புக்கென அமர்த்தியிருக்கும் தனிப்பட்ட துப்பறியும் நிபுணர் அல்லவா இவர்! இவர் சென்னையிலிருந்து எங்கே சிம்லாவுக்கு வந்தார்? இவர் கண்ணில் படாமல் தப்பித்துக் கொள்ள வேண்டுமே!

வாசுதேவன் படகிலிருந்து இறங்கும்போதே அவர் வந்து கைகுலுக்கினார். ''சிம்லாவில் விடுமுறை சௌகரியமாக இருக்கிறதா?'' என விசாரித்தார். வாசுதேவன் அவரை அலட்சியமாகத் தவிர்த்து ஹோட்டலுக்குச் சென்றார்.

ஹோட்டல் வாசலில், கலா சாவதானமாகக் காரிலிருந்து இறங்கினாள். அவளுடன்கூட ஒன்றிரண்டு பரிசயமான முகங்கள். டாக்டர் தேவநேசன், அவர்கள் குடும்ப டாக்டர். இவர்களை எல்லாம் ஏன் இங்கே அழைத்து வந்திருக்கிறாள்?

கலா ஓடிவந்து அவர் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். வாசுதேவன் தம்மையறியாமலேயே அவள் முடியை வருடினார். ''ஏன் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி வந்துட்டீங்க?'' அவள் புலம்பினாள்.

டாக்டர் தேவநேசன் புரிந்து கொண்ட பாவனையில் சிரித்தார். ''பரவாயில்லை வாசுதேவன். உங்களைப் போல வாழ்வில் உழைப்பும், பரபரப்பும் இருப்பவர்களுக்கு இது சகஜந்தான். ஆனால், உங்கள் மனைவியிடமாவது ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்திருக்கலாம். பாவம், அவர் ரொம்பக் கஷ்டப் பட்டார்.''

வாசுதேவன் கலாவைப் பார்த்தார். உடல் துவண்டு, கண்களில் கருவளையமிட்டிருந்தது. நிறையவே கவலைப்பட்டிருப்பாள் போல் இருக்கிறது? வேண்டும் அவளுக்கு.

''வாசுதேவன், காரிலே உட்காருங்கள். பாக்கியையெல்லாம் மற்றவங்க பார்த்துக் கொள்வாங்க.'' அவர் தள்ளாத குறையாகக் காரில் ஏற்றப்பட்டார். அதன்பிறகு பலவந்தமாக டெல்லி, சென்னை. இப்போது இந்த நாளைக்கு ஆயிரம் ரூபாய் அறையில் தாமே டைரக்டராக உள்ள மாபெரும் மருத்துவமனையில் பலவந்த உபசரிப்புகளுக்கு நடுவில் கைதிபோலப் படுத்திருப்பதும் உண்மை.

கலா, இரவு பகலாக அவர் அருகில் உட்கார்ந்திருந்தாள். லதாவும், ரவியும் சோகமான முகத்துடன் காலையும் மாலையும் வந்துபார்த்தனர்.

அனைவர் வாயிலும் ஒரே சொல் தான். ''மனிதன் இப்படி அளவுக்கு மீறி உழைத்ததால்...பாவம், படுத்து விட்டார்.''

அவருக்கு என்ன வியாதி என்று எல்லாரும் இப்படி அமர்க்களப் படுத்துகிறார்கள்? சிம்லாவில் மணிக்கணக்கில் துடுப்புப்போட்டுக்கொண்டு மைல் கணக்கில் நடந்து கொண்டிருந்தவருக்கு வியாதியா? கலாவிடம் உரத்தே கேட்டுப் பார்த்தார். அவள் பதில் கூறாமல், ''அலட்டிக் கொள்ளாதீர்கள். உங்ளுக்குப் பூர்ண ஓய்வு தேவை'' என்று கூறி அவர் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அன்று டாக்டர் வந்த போது, ''கதவை மூடுங்கள்'' என்று ஆணையிட்டார். கலாவிடம் கேட்ட அதே கேள்வியை அவரிடமும் கேட்டார்.

''உங்களுக்கா வியாதி? எதுவுமில்லை வாசுதேவன். உங்களுடைய நிலை இருக்கே, அதிக உழைப்பு, அதிக அயர்ச்சி, தன் தேவையும், முக்யத்துவமும் குறைந்து வருகின்றன என்ற எண்ணம். அதன் பலனாகச் சில விபரீத நடவடிக்கைகள். அதன் பெயர் தான் நரம்புப் பலவீனம். பத்தே நாள் ஓய்வு. உங்கள் நரம்புகள் பலம் பெற்றுப் புது மனிதனாகி விடுவீர்கள். சரிதானே?''

''எனக்காவது நரம்பு பலவீனமாவது? இல்லவே இல்லை.''

''அமிதாப்பச்சன் கூட அப்படித்தான் சொன்னாராம்.''

பத்து நாள் கழித்து வாசுதேவன் நாகரிக உடை அணிந்து அலுவலகம் கிளம்பிய போது தாமாகக் கலாவின் கன்னத்தை நிமிண்டினார். லதாவின் காதில் அவளுடன் மாலையில் டென்னிஸ் விளையாடப் போவதாக ரகசியம் சொன்னார். ''வா, அப்பா ரவி, ஆபீசுக்குப் போகலாம்'' என்று ரவியைத் தோளில் கைபோட்டு அழைத்தார்.

நண்பர்கள் கூட்டத்தில் பலமாகச் சிரித்தார். ''பத்து நாள் படுப்பதற்குள் என்ன அமர்க்களம் பாருங்கள்! என் மனைவியும், குழந்தைகளும், படும் கஷ்டம் தாங்காமல் படுக்கையிலிருந்து எழுந்துவிட்டேன். நம்மைப் போன்ற தொழிலதிபர்களுக்கு எது முக்கியம்? வீடு திரும்பினால் நிம்மதியான குடும்ப வாழ்க்கை. அந்த விஷயத்தில் நான் ரொம்பவே அதிர்ஷ்டசாலி. குடும்பத் தொல்லை, வீட்டு நிர்வாகப் பிரச்னை என்று என்னை எதுவுமே அணுகுவதில்லை. அதுதானே முக்கியம்?'' ✳

''சினிமாப் படத் தயாரிப்பாளருங்க யாராவது வந்து, என்ன படிச்சிருக்கேன்னு கேட்டா முழிக்காதே! 'ஹோலி ஏன்ஜல்ஸல எம்.ஏ. முடிச்சுட்டு, அப்பால ஸ்டெல்லாவில மெட்ரிக் முடிச்சேன்னு தைரியமா அடிச்சுப் பேசு!''



அன்னையைத் தரிசித்த அருளாளர்

காற்றிலே மிதந்து வந்தது, மென்கீதம். கேட்டோர் உள்ளத்தைப் பிணைத்தது; இன்பத்தை வழங்கியது. அன்னை பராசக்தியின் பேரெழில் திறத்தில், துயர் துடைக்கும் சீர்மைக் கோலத்தில், தாய்மை ததும்பும் கருணைப் பிரவாகத்தில், தேனில் நனைந்த பலாச் சுளையாக, அந்தப் பாடல்கள் வெளிவந்தன.

''ரூப ஸாகர் டுப் தியே, அரூப ரதன் பேயேசி.''

'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரந் திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ?' என்று பாடுகிறார் மணிவாசகப் பெருமான். 'அருவமான இறைவனை உணர, உருவ வழிபாடு ஏணிப்படி' என்கிறார் ஆதிசங்கர பகவத் பாதர்கள்.

இந்த மகானும் 'உருவக் கடலில் குளித்தே அருவ ரத்தினம் பெற்றேன்' என்று பாடுகிறார். மொழியில்தான் வேற்றுமை. பக்திப் பெருக்கில், இறைவனை அடையத் துடிக்கும் தவிப்பில் வேற்றுமையே இல்லை. இதுதான் பாரதத்தின் தனிச் சிறப்பு. இமயம் முதல் கன்னியாகுமரி வரையில் இந்தப் பக்தி உணர்வு ஊடும் பாவுமாக வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் புனிதப் பண்பு இதுதான்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸரை அன்னையின் அருமைச் சேயாக்கியது இந்த மகானின் பாடல்களே. இவர் தாம் ராமப்பிரசாதர் என்ற வங்க பக்தர். 1723—இல் பிறந்தவர். எண்பது ஆண்டுகள் வாழ்ந்தவர். பராசக்தியாகிய காளி மாதாவையே துதித்துப் பாடி மகிழ்ந்தவர். தீபாவளித் திருநாளன்று அன்னையின் பாத கமலத்தை அடைந்தவர்.

கல்கத்தாவிலிருந்து வடக்கே சுமார் முப்பது மைலில் ஒரு கிராமம். இருபத்துநாலு பர்காணாக்கள் மாவட்டத்தைச் சேர்ந்தது. கும்ஹார ஹட்டா என்பது கிராமத்தின் பெயர். கற்றுத் தேர்ந்த அறிஞர்கள்

வாழ்ந்த மூதூர் இது. முன்னாளில் நவத்துவீபத்தில் பல்துறை மேதைகள் வாழ்ந்ததாகக் கூறுவார்கள். அங்கேவிடவும் படித்த மேதைகள் இங்கே அதிகமாம். ஸ்ரீசைதன்ய மகா பிரபு பிறந்த புண்ணிய மண்.

இந்த ஊரின் பெருமையை விளக்க ஒரு கதை சொல்வார்கள். சாஸ்திர விசாரம் செய்ய நவத்துவீபத்துப் பண்டிதர்கள் இங்கே வந்தார்கள். இதை அறிந்த, இவ்வூர்ப் பண்டிதர்கள், மண் பானை வனையும் தொழிலாளி ஒருவரை, பெண் வேடத்தில் முன்னோடியாக அனுப்பினார்கள். அந்தப் பெண்ணும் ஒரு சிறுவனுடன் போய், நவத்துவீபத்துப் பண்டிதர்கள் தங்கியிருந்த வீட்டில் வேலைக்காரியாக அமர்ந்தாள். அந்தச் சிறுவனிடமும் அவளிடமும் சில விஷயங்களைச் சொல்லி அனுப்பியிருந்தார்கள், கிராமத்து அறிஞர்கள்.

பொழுது விடிந்தது. வேலைக்காரி, தன் வேலைகளில் மூழ்கியிருந்தாள். பொழுது புலர்ந்ததும், காகங்கள் கரைந்தன. வேலைக்காரியுடன் சென்ற சிறுவன், ''அம்மா, ஏன் இந்தக் காகங்கள் இப்படிக் கத்துகின்றன?'' என்று கேட்டான்.

''எனக்கு எப்படி அப்பா தெரியும்? சாதாரண வேலைக்காரி நான். நவத்துவீபத்திலிருந்து வந்திருக்கும் பண்டிதர்களைப் போய்க் கேள்'' என்றாள் வேலைக்காரி.

அந்தப் பையன் ஓடிப் போய்ப் பண்டிதர்களைக் கேட்டான்.

''காலைப் பொழுதானதால் காகங்கள் கரைகின்றன. இதில் என்ன ஆச்சரியம்?'' என்றனர் அவர்கள், பதிலுக்கு.

அவர்கள் பதில் பையனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. மீண்டும் தாயிடம் ஓடிப் போய், காகங்கள் கத்தும் காரணத்தை விளக்கும்படி தொந்தரவு செய்தான். வேலைக்காரி பதில் கூறினாள்.

'திமிரா ரிஸ்தமோ ஹந்தி சங்காகுலித மானஸ;
வயம் காகா: வயம் காகா! இதி ஜல்
பந்தி வாயஸா:

('கதிரவன் இருளை அழிக்கிறான்.
கறுப்பாக இருப்பதனால் தாங்களும்
அழிக்கப்பட்டு விடுவோமோ என்று
'நாங்கள் காகங்கள், நாங்கள் காகங்கள்'
என்று கத்துகின்றன.')

வேலைக்காரி கூறிய இந்தச் சம்ஸ்கிருத சுலோகத்தைக் கேட்ட பண்டிதர்கள் திடுக்கிட்டார்கள். வேலைக்காரியே இவ்வளவு அறிவாளியாக இருந்தால், கிராமத்துப் பண்டிதர்கள் எவ்வளவு மேதையாக இருப்பார்கள்? அவர்களிடம் மாட்டிக் கொண்டு அவமானப்படக் கூடாது என்று நவத்துவீபத்துப் பண்டிதர்கள் ஓட்டம் பிடித்தார்களாம்!

இந்தப் பெண்ணின் சாதுர்யத்தைப் பாராட்டிக் கிராமத்து அறிஞர்கள், கும்ஹாரஹட்டா என்று பெயரிட்டார்கள். 'கும்ஹார்' என்றால் வங்க மொழியில் மண் பானை வனைபவர் என்று பொருள். 'ஹட்டா' என்றால் சந்தை கூடும் இடம்.

இவ்வளவு பெருமையுள்ள ஊரில் ராமபிரசாதர் 1723—இல் பிறந்தார். தகப்பனார் பெயர் ராம்ராம் ஸென். தாயார் பெயர் சித்தேசுவரி. இரண்டாம் தாரம் இந்த மங்கை.

ஸென் சிறந்த ஆயுர்வேத மருத்துவர். வேதங்களையும் சாஸ்திரங்களையும் அறிந்தவர். இரண்டாம் தாரத்தின் மூலம் இவருக்கு நான்கு குழந்தைகள்: அம்பிகா, பவானி, ராமபிரசாத், விசுவநாத்.

கிராமத்துப் பள்ளியில் படித்தார் ராமப்பிரசாதர். பள்ளியில் வெகு சூடிகையான மாணவர் இவர். இவருடைய அறிவுக் கூர்மை யாவரையும் கவர்ந்தது. தம்மைப் போலவே பிள்ளையும் ஆயுர்வேத மருத்துவராக விளங்க வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டார், ராம்ராம் ஸென். ஆயுர்வேத மருத்துவத்தில் சிறந்து விளங்க சம்ஸ்கிருத அறிவு உதவும் என்பதை உணர்ந்த ஸென், தம் பிள்ளைக்கு வியாகரணம் காவியம் எல்லாம் கற்றுக் கொடுத்தார். ஆனால் ராமப்பிரசாதர் மருத்துவத் துறையில் ஆர்வம் காட்டவில்லை.

அப்போது வங்கம் முஸ்லிம் ஆட்சியில் இருந்ததால் பாரசீக மொழியும் ஹிந்தியும் கற்றுக் கொண்டால், பிள்ளை பெரிய அதிகாரியாக விளங்க முடியும் என்று எண்ணி, அந்த மொழிகளைக் கற்க ஏற்பாடு செய்தார்.

ராமப்பிரசாதருக்குப் பதினெட்டு வயது நிரம்பியது. பிற இளைஞர்களைப் போல் அற்பக் கேளிக்கைகளில் ஈடுபடாமல், பெரும் பொழுது மௌனமாக இருந்தார். இரவு நேரங்களில் வானத்தை அண்ணாந்து பார்த்திருப்பார், இந்த மனநிலையைக் கண்ட பெற்றோர், பிள்ளைக்குத் திருமணம் செய்து வைத்தால், மாறி விடுவான் என்று எண்ணித் திருமண முயற்சியில் இறங்கினர். ராமப்பிரசாதர், ஸர்வாணி என்ற மங்கையை இருபத்திரண்டாம் வயதில் மணந்தார். பரமேசுவரி, ஜகதீசுவரி, ராம்துலால், ராம்மோகன் என்று நான்கு குழந்தைகள் பிறந்தன.

பரம்பரை வழக்கப்படி, குடும்பத்துக் குரு ஒருவர், இல்லற தர்மங்களைப் போதித்தார். குழந்தைகளும் பிறந்தன. இருந்தாலும் அவர் மனம் நாளுக்கு நாள் உள்முகச் சாதனையில் ஆழ்ந்தது. ஆற்றங்கரையில் போய் மணிக்கணக்கில் உட்கார்ந்திருப்பார். 'அம்மா, பராசக்தி, பராசக்தி, பராசக்தி' என்று முணுமுணுப்பார்.

இந்தச் சமயத்தில் கற்றறிந்த மேதையும், தாந்திரிக வழிபாட்டு நிபுணருமான ஆகமவாகீசர் என்பவர் கும்ஹாரஹட்டிக்கு வந்தார். இவருடைய ஆன்மிக நலத்தைப் பாராட்டி மக்கள் படையாகத் திரண்டு போய் உபதேசம் பெற்றனர்.

ஒரு நாள், ராமப்பிரசாதர், இந்த மகானைத், தனிமையில் குளக்கரை அரச மரத்தடியில் சந்தித்தார். 'இவர் சக்தி உபாசனையில் தேர்ந்தவர். அன்னையின் 'அருட்செல்வர்' என்று ராமப்பிரசாதரைப் பார்த்தவுடன் மகானுக்குத் தோன்றிவிட்டது.

தொடர்ந்து சில நாட்கள், யாருக்கும் தெரியாமல், ராமப்பிரசாதருக்குத் தாந்தரிக வழிபாட்டு முறைகளைப் போதித்தார் ஆகமவாகீசர். இந்தப் போதனையின் பலன் அதிகமான பொழுது சாதனையிலும் நிஷ்டையிலுமே கழிந்தது. மணிக் கணக்கில் கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்திருப்பார்.

இறை வழிபாட்டில் நம்பிக்கை உள்ள ராம் ராம்ஸென், தம் மகனின் இறை வழிபாட்டைத் தடுக்க விரும்பவில்லை. ஆனால் குடும்பத்தைக் கவனிக்காமல், யோகத்திலும், நிஷ்டையிலும் இருப்பதும், தனிமையில் நேரத்தைக் கழிப்பதும் பிடிக்கவில்லை. 'தமக்குப் பின் இந்தக் குடும்பம் கவனிப்பாரற்றுச் சீரழியுமே' என்று கவலைப்பட்டார். இந்தக் கவலையே அவருக்கு எமனாக வாய்த்தது.

தந்தை காலமானதும் குடும்ப பாரம் ராமப்பிரசாதரின் மேல் விழுந்தது. குடும்பச் சொத்தும் அதிகமாக இல்லை. சாஸ்திர ஞானமும் பல் மொழி அறிவும் இருந்தும், அவற்றை உபயோகித்து வாழ்வை வளமாக்கிக் கொள்ளத் தெரியவில்லை, ராமப்பிரசாதருக்கு.

'லோகமாதா காப்பாற்றுவாள்' என்றே அவர் திடமாக எண்ணினார். அளவற்ற வசதியைக் கொடுத்துச் சோதிக்கும் எம்பெருமாட்டி, பல சமயங்களில் தாங்காத துயரங்களைக் கொடுத்தும் பக்தர்களைச் சோதிக்கிறாள்.

குடும்பச் சுமை அதிகமாக அழுத்தியது; திணறித் திணறிச் சமாளித்துப் பார்த்தார், முடியவில்லை.

வேறு வழியின்றி ராமப்பிரசாதர், பணி தேடிக் கல்கத்தா சென்றார். பல இடங்களில் அலைந்து, கடைசியில் முப்பது ரூபாய்க்கு ஒரு வேலை கிடைத்தது. துர்க்கா சரண் மித்ரா என்ற தனியார் நிறுவனத்தில் வேலைக்கு அமர்ந்தார். இந்த வேலையாவது கிடைத்ததே என்று மகிழ்ந்தார்.

'காளி தாயே, உன் அருளே அருள்! பேரருள் பெருமாட்டியே!' என்று உள்ளம் நையக் கசிந்து துதித்தார். நிறுவனச் செலவை எல்லாம் எழுத வேண்டிய கணக்குப் புத்தகத்தில், 'காளிமாதா பிரபாவத்தை, பேரருள் சௌந்தர்யத்தைக் கவிதையாக்கி எழுதினார். நிறுவன மேலாளர் ஒரு நாள் இதைப் பார்த்தான். ''அட முட்டாள்! நோட்டுக்களை இப்படிப் பாழாக்கி விட்டாயே?'' என்று கத்தினான். முதலாளியிடம் போய்ச் சொன்னான். ''எங்கே அனுப்பு'' என்றார் முதலாளி.

ராமப்பிரசாதர், தாம் எழுதிய கணக்குப் புத்தகங்களுடன் முதலாளியின் அறைக்குப் போனார். முதலாளி, துர்க்காசரண் மித்ரா பக்கங்களைப் புரட்டிப் பார்த்தார்.

'ஊதியம் இல்லாத வேலைக்காரன் நான்!
உன் பாத தூளிதான் நான் வேண்டும்
ஊதியம்; தாயே!'

இந்த வரிகளைப் படித்த முதலாளி, புகார் செய்தவரையே திட்டிவிட்டு, ராமப்பிரசாதரை எதிரில் அமரச் சொன்னார்.

''அப்பா, அன்னையின் அருட்செல்வன் நீ. இந்த உலக வாழ்வுக்காக நீ பிறவி எடுக்கவில்லை. அன்னையின் திருவடிகளைப் பற்றிச் சாதனை செய். கணக்குப்புத்தகத்தில் நீ எழுதியுள்ள பாடல்களைப் பெருந்தனமாக எண்ணிப் போற்றிக் காப்பேன், என் சந்ததிகளையெல்லாம் காப்பாற்றச் செய்வேன். உன் வாழ்நாள் முழுதும் மாதம் முப்பது ரூபாய் உன்னைத் தேடி வரும். போய் வா, மகனே!''

விலையுயர்ந்த பல பரிசுப் பொருள்களுடன் ராமப்பிரசாதரை, வீட்டுக்கு அனுப்பி வைத்தார், துர்க்காசரண் மித்ரா.

வீட்டுக்கு வந்ததும், ''அம்மா கேட்டாயா? பராசக்தி, உனக்காக மாதம் முப்பது ரூபாய் கொடுக்கப் போகிறாள். என்னை இனிமேல் தொந்தரவு செய்யாதே. அவளைத் தேடிப் போகிறேன்'' என்றார் ராமப்பிரசாதர்.

குடும்ப பாரமும் குறைந்ததும், ராமப்பிரசாதர் அசுர சாதனையில் மூழ்கினார். கங்கைப் பிரவாகத்தில் கழுத்தளவு நீரில் நின்று கொண்டு, காளி-மாதாவை நோக்கிப் பாடுவார். படகில் போவோரும் வருவோரும் இந்தப் பாடலைக் கேட்டு மகிழ்வர்.

இந்தப் பாடல்களை 'ஹிருதய கங்கா' என்று அழைக்கிறார்கள். கங்கையின் பிரவாகம் போல, இந்தப் பாடல்கள், அவர் உள்ளத்தில் பொங்கிப் பிரவகித்தன!

ஒரு நாள் ஸாலிஸஹரின் மன்னன் கிருஷ்ண சந்திரன், கங்கையைப் படகில் கடக்கும் போது, இந்தப் பாடல்களைக் கேட்டுப் பிரமித்தான். மன்னன் நல்ல ரசிகன்.

அவனுடைய சபையில் பல துறை விற்பன்னர்கள் இருந்தனர். ராமப்பிரசாதரின் பாடல்கள் அவன் மனத்தைக் கவர்ந்தன. அவரையும் தன் சபைக்கு வருமாறு அழைத்தான். மன்னன் அழைப்பைப் பெருநிதியாக எண்ணி மகிழாமல், இடி விழுந்ததைப் போலத் தவித்தார் ராமப்பிரசாதர். 'அன்னையின் பாத தூளிக்கு ஈடு ஆகுமா அரண்மனை வாசம்?' மறுத்துவிட்டார் ராமப்பிரசாதர். பக்தரின் மனப்பக்குவத்தை அறிந்து மன்னன் வணங்கி விடைபெற்றான்.

சொந்தச் செலவுக்காக ஸ்ரீராமகிருஷ்ண

பரமஹம்ஸருக்கு, லட்சுமி நாராயண மார்வாரி என்ற செல்வர், பத்தாயிரம் ரூபாய் டிரஸ்டாகப் போடுவதாகக் கூறியதைக் கேட்டதும், பரமஹம்ஸர் அப்படியே மயங்கி விழுந்து விட்டாராம். காளி மாதாவின் கருணைக்கு முன் பத்தாயிரம் ஒரு பொருளா?

இந்த இளம் ஆன்மிக பக்தருக்கு ஏதாவது உதவி செய்யாமல் போகக் கூடாது என்று தீர்மானித்த மன்னன், 'நூறு பிகா நிலத்தை மான்யமாகத் தருகிறேன். உங்கள் குடும்பம் வாழும்' என்று ராமப்பிரசாதரின் காலில் விழுந்து கெஞ்சினான். ஏற்க வேண்டும் என்று கையெடுத்து வேண்டினான். 'காளிமாதா விரும்புகிறாள், செய்' என்றார் ராமப்பிரசாதர். இந்த உதவிக்கு நன்றியாக, பின்னாளில் 'வித்யா சுந்தர்' என்ற காவியத்தை மன்னனுக்குக் காணிக்கையாக்கினார் ராமபிரசாதர்.

பல நாள், மன்னனின் படகில் அமர்ந்து பாடி மகிழ்வார். கங்கையைக் கடக்கும் பிரயாணிகள், அதைக் கேட்டு மெய் சிலிர்ப்பார்கள்.

ஒரு நாள் மாலை நேரம்.

காற்றில் மிதந்து வந்த இவருடைய இன்னிசையைக் கேட்டு, வங்காள நவாபு சிராஜ் உத் தௌலா மெய்மறந்தார்.

பாடலின் பொருளும், அன்னைத் தத்துவமும் விசித்திரமாகத் தெரிந்தன, 'அந்தப் பாடகர் யார்?' என்று படகோட்டிகளை விசாரித்தார் நவாபு. அவர்கள் ராமப்பிரசாதரின் பெருமைகளை எடுத்துச் சொன்னார்கள். காளிமாதாவின் கருணைக்கும் பாத்திரமான மகான் என்றார்கள்.

ராமப்பிரசாதரின் பெருமையைக் கேட்ட நவாபு, அவரைத் தக்க மரியாதையுடன் அழைத்து வரும்படி ஆட்களை அனுப்பினார். வணக்கத்துடன் வரவேற்ற நவாபு, அருட்பாடல்கள் சிலவற்றைப் பாடச் சொல்லி வேண்டினார்.

ராமப்பிரசாதர், முதலில் ஹிந்துஸ்தானியில் சில 'கஜல்களைப் பாடினார்.' ஆனால் நவாபு, "நீங்கள் காளி மாதாமேல் பாடிய அந்தப் பாடலை, அந்த மெட்டை, எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதைப் பாடிக் காட்டுங்கள்" என்று வேண்டினார்.

மிக உருக்கமாகப் பாடினார் ராமப்பிரசாதர். மீர் ஜாபர் போன்ற துரோகிகளோடு சேர்ந்த ஆங்கிலேயர்கள், நவாபுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து பல இன்னல்களை விளைவித்த காலம் அது. இந்தச் சூழ்நிலையில் அமைதியின்றி வாழ்ந்த நவாபுக்கு அந்தச் சில மணிநேரம் என்றும்





கிட்டாத மனநிம்மதியைக் கிட்டச் செய்தது. கண்களில் கனிவும் கண்ணீரும் சுரந்தன. ராமப்பிரசாதருக்கு நிறைய வெகுமதிகள் அளித்துக் கௌரவித்தான் நவாபு.

குடும்பப் பொறுப்புக்களை இப்படி விலக்கி, மேலும் பக்தனைத் தன்னிடம் ஆகர்ஷித்துக் கொண்டாள் அன்னை, எம்பெருமாட்டி.

தம் வீட்டுக்கு அருகிலுள்ள பஞ்சவடிச் சோலையில், (அசுவத்தம், வில்வம், ஆமலகம், அசோகம், வாதம் என்ற ஐவகைத் தருக்கள் கொண்டது) தாந்திரிக முறைப்படியான பஞ்சமுறை ஆசனத்தை மேற்கொண்டார். மூலாதாரத்திலிருந்து ஸகஸ்ராரத்துக்கு உயிர்ச்

சத்தை ஏற்றும் ஆசனமுறை. வீட்டுக்குப் போவதையும் துறந்தார். வாரத்துக்கு ஓரிரு முறை செல்வார். அன்னத்தைக் குறைத்தார். ஏகாதசி, பூர்ணிமை, அமாவாசை போன்ற நாட்களில் பஞ்சமுறை ஆசனத்தில், உலக நினைவு மறந்து, ஆயிரம் இதழ்த் தாமரையில் எழுந்தருளியிருக்கும் அன்னையின் பேரெழில் அமுதத்தைப் பருகிப் பேரானந்தப் பெருவெளியில் திளைத்திருப்பார்.

''அம்மா, இப்படியே என்றுமிருக்க அருள்வாய் தாயே!''

''செக்குமாடு போல், கவலை ஏற்ற மாடுபோல் சுற்றிச்சுற்றி வரச் செய்யாதே, தேவி''

''ஓம், சங்கரி! உன்னையன்றி வேறு யார் எனக்கு? நீதான் நான். நான்தான் நீ! தாயே!''

ஒளிவடிவமாக அன்னை தரிசனம் அளித்தாள் ஒரு நாள். சோலையில், தம் உடம்பில் தகித்த ஒளியின் தீட்சண்யத்தை உணர்ந்தார் பக்தர் ராமப்பிரசாதர்.

இதற்குப் பிறகு இவருடைய வாழ்க்கையில் அன்னை நிகழ்த்திய அருட் செயல்கள் அனந்தம்.

ஒரு நாள் காலையில் ராமப்பிரசாதர் தம் வீட்டு வேலியைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார். வேலிக் கம்பியைக் கட்டும் துண்டுக் கயிற்றை, அடுத்த பக்கத்தில் வாங்கி, வளைத்துத் திருப்பிக் கொடுத்து உதவினள், அவர் பெண் ஜகதீசுவரி. ஆனால் சற்றைக்கெல்லாம் தாய் அழைக்கவே, ஜகதீசுவரி

உள்ளே ஓடிவிட்டாள். ஆனால், துண்டுக் கயிற்றை வாங்கி வளைத்துக் கொடுக்கும் பணி தடை இல்லாமல் நடந்தது. திரும்பி வந்த பெண் ஜகதீசுவரி இதைப் பார்த்து மிகவும் அதிசயப்பட்டாள்.

''நான் உள்ளே போயிருந்தபோது, யார், அப்பா துண்டுக் கயிற்றை மறு பக்கத்தில் வாங்கி, வளைத்துக் கொடுத்தது?'' என்று கேட்டாள் ஜகதீசுவரி.

''அப்போ நீ இல்லையா அது?'' என்றவர், 'அன்னையை அழைத்தால் அபயம் தாராளோ!' என்று பாடத் தொடங்கிவிட்டார்.

மற்றொரு நாள் அவர் குளிக்கப் புறப்படும் போது ஓர் இளம் பெண் வந்து, ''அப்பா, உன் பாட்டைக் கேட்க வேண்டும் என்று வந்திருக்கிறேன். பாடு'' என்றாள்.

''ஒரு நிமிஷம் பொறுத்திருங்கள்.
ஸ்நானம் செய்து விட்டு வந்து விடுகிறேன்''
என்று கூறிக் குளிக்கப் போனவர்,
திரும்பி வந்து பார்த்தார். அங்கே அந்த
இளம் பெண்ணைக் காணவில்லை.

'நான் அன்ன பூரணி, உன் பாட்டைக்
கேட்பதற்காகவே வந்தேன். என்னால்
காத்திருக்க முடியாது. காசிக்கு வந்து என்
சந்நிதியில் பாடு.'

சுவரில் எழுதியிருந்த இந்த வரிகளைப் படித்தார்
ராமப்பிரசாதர். எல்லையில்லாத
ஆனந்தத்தில் திளைத்ததுஅவர் மனம்.

உடனே காசிக்குப் புறப்பட்டார். ஆனால்
போகும் வழியில், ஒரு நாள் இரவு கண்ட
கனவில், 'அந்த இடத்திலிருந்தே பாடலாம்'
என்று எம்பெருமாட்டியின் ஆணை பிறக்கவே,
'அன்னபூரணே, அவனியைக் காக்கும் தாயே!'
என்ற பாடல், அந்த நடுநிசியில் அந்தப்
பிராந்தியத்தையே அருள் மயமாக்கியது.

இப்படிப் பல அற்புதங்கள். அன்னையின் அருள
தெளிய ஆரம்பித்ததும், ராமப்பிரசாதரின்
சாதனை முறைகளும் மிகக் கடுமையாயின.
சுடுகாட்டில் சடலத்தின் மேல் அமர்ந்து
வழிபாடு இயற்றிக் காளி தரிசனம் பெற்றார்.

இப்படித் தாந்திரிக சாதனையிலேயே மூழ்கியிருந்த
ராமப்பிரசாதருக்கு, மாற்றாக அமைந்தது,
பக்கத்து வீட்டுக்காரரான அஜு கோன்ஸாய்
என்ற வைஷ்ணவரின் பரிச்சயம்.
இரண்டு பேரும் சில சமயங்களில் சாஸ்திர
விசாரம் செய்வார்கள். கர்மாவைப் பற்றி
இருவரும் விவாதிப்பார்கள்.

''என்ன தான் காளி அருள் இருந்தாலும்
கர்மாவிலிருந்து தப்ப முடியாது'' என்பார்
அஜு கோன்ஸாய். ''அன்னையின் அருளில்
கர்மா செயலற்றுப் போகும்'' என்று
உதாரணங்களுடன் மறுத்துக்
கூறுவார் ராமப்பிரசாதர்.

'பஞ்ச'ம 'காரங்கள்' என்ற தாந்திரிக முறைச்
சாதனையில் ராமப்பிரசாதர் வெகுவாக
முன்னேறி, மூலாதாரத்துச் சக்தி தத்துவ
மாகிய குல குண்டலினியை எழுப்பி, ஆத்யசக்தி
என்ற சக்தி சொரூபமான பிரம்மத்தை அறிய
முனைந்தார்.

ராமப்பிரசாதர், தாந்திரிக சாதனையில்
ஈடுபட்டு முன்னேற, அவர் மனைவி சர்வாணியே
முக்கியக் காரணம். கணவன் வீட்டுக்கு
வரும்போது, வீட்டுக் கஷ்டத்தை அவர்
கண்ணில் படவிடமாட்டார்.
ஆசாபாசங்களை எல்லாம் துறந்த
சந்நியாசியைப் போல் தன் மனத்தைப்
பக்குவப்படுத்தியிருந்தாள் சர்வாணி.
'சகதர்மிணி' என்ற வார்த்தைக்கு உத்தம
உதாரணமாக விளங்கினாள்.

அவருடைய இறுதிக் காலத்தில், வங்காளத்தில்
பெரும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள், பசி
பட்டினியால் மடிவதைக் கண்ட ராமப்பிரசாதர்,
எம்பெருமாட்டி அன்னபூரணியின் மேல்
பாடிய பாடல் மிகவும் புகழ் பெற்றது.

'அன்னம்தா, அன்னம் உலகுக் கன்னே!
என்னதான் தவறுநான் செய்தாலுமே
பெற்றவள் அல்லவோ பிழை பொறுப்பாய்!
பற்றியே எரியுமெம் பசித் தீயை
இன்னருள் கூர்ந்தே தணித் திடுவாய்!
அன்னம்தா! அன்னம் உலகுக் கன்னே!'





இதே மாதிரி, தமக்கு முதலில் நூறு பிகா நிலத்தை மான்யமாக அளித்த கிருஷ்ணசந்திர மன்னனையும் ராமப்பிரசாதர் மறக்கவில்லை. மன்னன் பஞ்சவடி, வருவான்; அல்லது இவர் போய்ப் பார்ப்பார். மன்னன் மரணப் படுக்கையில் இருந்த போது, பக்கத்தில் இருந்து ஆத்ம போதனை செய்தார் இவர்.

மன்னன் மறைந்தது ராமப்பிரசாதரின் வாழ்வையே மாற்றியது. முற்றுந் துறந்த அன்னையின் அருள் செல்வராகிவிட்டார்.

'அருவமானவள் என் அன்னை, அழைக்கிறாள்! உருவத்தை விட்டொழித்தால், அருவத்தில் ஐக்கியம் பேரானந்தம்.'

இப்படிப் பாடியபடி, நாட் கணக்கில் சித்தாசனத்தில் அமர்ந்திருப்பார்.

தீபாவளி நாள். ஒளித் திருநாள். அன்னை காளியின் திருவுருவைத் தம் கையாலேயே செய்து, இரவு முழுதும் பூசித்து, மறுநாள் காலையில் கங்கையில் விஸர்ஜனம் செய்வது வழக்கம். இரவு பூசையைக் காண இரு கண் போதாது. காளி உருப்பெற்று வந்து பேசுவாள் செல்வனிடம். கண்ணீர் மல்கும் அவருக்கு. அவள் திருப்பாதத்தை எடுத்துத் தம் சிரசில் வைத்துக் கொண்டு பாடுவார், ஆடுவார், கரம் குவிப்பார், குழந்தை போலச் சிரிப்பார். தெவிட்டாத இந்தக் காட்சிகள், பக்தர்களை மெய்மறக்கச் செய்யும். ஆண்டுதோறும் நடக்கிற நியதி இது.

1803-ஆம் ஆண்டு தீபாவளி; அசுவின் மாதத்துச் சதுர்த்தி. இரவு பூசை முடிந்தது. காளி மாதா, அருட்செல்வனை அழைத்துச் செல்ல அருட்கரம் நீட்டி விட்டாள். அவ்வளவுதான்.

ராமப்பிரசாதர், எம்பெருமாட்டின் திருவுருவை அவள் திருவடியாக எண்ணித் தம் சிரசில் தாங்கிக் கொண்டு கங்கையில் இறங்கினார். இடுப்பு, கழுத்து, மூக்கு, நெற்றி-கங்கை பிரவாகம் ஏறிக் கொண்டே போகிறது. அதோ சிரசுக்கும் மேலே.. ராமப்பிரசாதர் அருள்மோகன ஜோதியில் ஒன்றிவிட்டார்.

காளி பக்தர் ராமப்பிரசாதர் அப்போது பாடிய இறுதிப் பாடல் இது என்கிறார்கள்.

''இம்மையின் ஆட்டம் முடிந்ததுவே
(இன்னும் சற்று நேரத்திலே)
அம்மையின் மடிதனை அடைந்திடுவான்,
ஆவினை நாடும் கன்றெனவே-
வெம்மை தணித்திடத் தண்ணளி நீ
மைந்தன் தனக்குப் புரிந்திடுவாய்!
செம்மை கொண்ட தாயே!-இது சேயின்
இறுதி வேண்டுதலாம்''

'மீனலோசனி பாசவிமோசனி' என்று அன்னை மீனாட்சியைப் பாடியபடி தான் முத்துசாமி தீட்சிதரும் தீபாவளித் திருநாள் அன்று அன்னையின் அருளில் கலந்தார்.

தியாகையரை போன்றும் துக்காராமைப் போன்றும் பக்த மீராவைப் போன்றும் வங்கத்தில் ராமப்பிரசாதரின் கீதங்கள் லட்சக் கணக்கான மக்களை அன்னையின் காளி மாதாவின் அருட்சேய்களாக மாற்றி வருகின்றன. —ஹஸ்தம்

யதார்த்த ஞானம்

வாஸந்தி



ஜன்னலைப் பார்த்தபடி இருந்தது அவன் நாற்காலி. ராமசாமிக்கு யதேச்சையாகக் கிடைத்த இடம் இது. மூலையாகவும் ஒதுக்குப்புறமாகவும் இருந்தது. ஆனால்வெளியுலகத்தைப் பார்த்தபடியும் இருந்தது. வேலையில் உற்சாகம் இழந்தால் ஜன்னலுக்கு அப்பால் சுவாரசியமான அலுப்புத் தட்டாத உலகம். வேலைப் பளு அதிகமாக இருக்கும் வேளையிலும் வெளியே அலையத் துடித்த பார்வையை அவன் சுண்டியிழுக்க வேண்டியிருந்தது.

அப்படியொன்றும் சதா பரபரப்பாக இருக்கும் தெரு இல்லை அது. வானுக்கும் பூமிக்குமாய் நிச்சிந்தையாய்ப் படர்ந்த குல்மொஹர் மரம் ஒன்று பிரதானமாய் இருந்தது. அதன் நிழலில் ஒரு சாயாக் கடை. கடை வாசலில் ஒரு பழைய பெஞ்சு. அதன் நான்காவது கால் மற்றவற்றைவிடக் குட்டை. கடைக்காரச் சர்தார்ஜி தினமும் காலையில் நினைவாக அதன் அடியில் மரத் துண்டு ஒன்றை அரை நாழிகை போட்டு வைப்பான். காலை எட்டு மணிக்குத் தன் நாற்காலிக்கு வந்துவிடும் ராமசாமிக்கு இந்தக் காட்சியைப் பார்க்காவிட்டால் அன்றைக்கான ரிப்போர்ட்டைத் தயாரிக்க மனசுக்குச் சுறுசுறுப்பு ஏற்படாது.

சர்தார்ஜியின் இத்தனை மெனக்கிடையும் மீறிக்கொண்டு சில சமயங்களில் மரத்துண்டு திசை மாறி நான்காவது காலை அம்போ என்று அந்தரத்தில் நிறுத்திவிடும். பெஞ்சில் உட்கார்ந்திருக்கும் நோஞ்சான் ஆசாமிகள் நிலைகுலைந்து 'ஸீஸா' ஆடுவதை, ராமசாமி தன் வேலையை விட்டு விட்டுச் சுவாரசியத்துடன் பார்ப்பான்.

சர்தார்ஜிக்கு எதிலும் பதற்றமில்லை. ஆர அமர மறுபடி வந்து மரக்கட்டையைப் பொருத்தி வைப்பான். ஆர அமர டீ போடுவான். சாவதானமாக அரசியலை அலசுவான்.

இங்கே நிருபர்கள் காலையில்லை மாலையில்லை என்று சேதி சேகரிக்க ஆலாய்ப் பறக்கிறார்கள், இந்தச் சர்தார்ஜிக்கு, ஒரு பெஞ்சைச் செய்யக்கூடத் துப்பில்லாத, இருந்த இடத்தில் இருக்கும் ஒருத்தனுக்கு உலக விஷயமெல்லாம் தெரியுமாம். வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருக்கும் அவனைப் பார்க்க ராமசாமிக்குச் சிரிப்பு வரும். இரண்டாவது மாடி மூலை ஜன்னலிலிருந்து பார்க்கும்போது வார்த்தைகள் காதில் விழாத நிலையில் அவன் கையும் தலையும் அசைவது வேடிக்கையாக இருக்கும். சர்தார்ஜி தேநீர் போடுவதில் மும்முரமாக இருக்கும் சமயங்களில், ராமசாமியின் பார்வையைக் கவர வேறு காட்சிகளும் உண்டு. ரத்தச் சிவப்பாய்க் குல்மொர்ப் பூக்கள். மேலேயிருந்து பார்க்கும்போது அதன் அழகே அலாதியானதாகத் தோன்றும் ராமசாமிக்கு.

சாயாக் கடைக்கு நேர் எதிரே ஆதி காலத்து வீடு ஒன்று இருந்தது. மாடி வீடு, மாடிக் கைப்பிடிச்சுவரில் எல்லாம் நளினமான 'ஜாலி' வேலைப்பாடுகள் காரையில் செய்யப்பட்டிருந்தன. மொகலாய சாம்ராஜ்யத்தின் கடைசி நினைவுச் சின்னங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் இந்த வீடு. பல இடங்களில் காரை பெயர்ந்திருந்தது. மாடிப் படிகள் சர்தார்ஜியின் பெஞ்சை விட மோசம். அதிலாவது ஒரு வழியாகச் சமம் செய்து உட்காரலாம். இதில் ஒரு முறை ஏறிப் போனவர்கள் திரும்பி வருவதற்குப் படிகள் இருக்குமா என்பது சந்தேகம். ஆனாலும் அதில் வசிக்கும் ஜனங்களுக்குக் குண்டு தைரியம். குழந்தைகளும் பெரியவர்களும் படிகளைச் செப்பனிட வேண்டும் என்கிற பிரக்ஞையே இல்லாதவர்களாய் ஏறிக்கொண்டும், இறங்கிக் கொண்டும் இருப்பார்கள். பன்னிரண்டு மணி நமாசுக்குச் சடக்கென்று மொட்டை மாடியில் ஜமுக்காளத்தை விரித்துக்கொண்டு மண்டியிட்டுப் பிரார்த்தனையில் ஆழ்ந்து போவார்கள். அவர்களுக்கு இருக்கும் பலமெல்லாம் ஆன்மிக பலமாக இருக்க வேண்டும் என்று ராமசாமி நினைத்துக் கொள்வான்.

மர ஃபர்னிச்சர் வியாபாரம் செய்யும் முஸ்லிம் குடும்பம் அது என்று சாயாக்கடை சர்தார்ஜியிடமிருந்து ராமசாமி தெரிந்து கொண்டிருந்தான்.

அவனுக்கு அந்த விஷயம் வேடிக்கையாக இருந்தது.

''பின்னே அவங்க வீட்டு மச்சுப்படி மரத்தினாலே ஆனதுதானே? அதை முதல்லே ரிப்பேர் பண்ணக் கூடாதோ?'' என்றான்.

சர்தார்ஜி சிரித்தான்.

''அப்புறம் அந்த வீட்டுப் பாத்திரத் தன்மையே போயிடும். இப்ப எங்கிட்ட காசு இல்லையா? நாயேன்

செய்யாம இருக்கேன்? எனக்கு இது பழகிப் போச்சு. அதை ரிப்பேர் செய்துட்டா, தினமும் அந்த மரத்துண்டை அதுக்கு அடியிலே செருகற சந்தோஷம் குறைஞ்சிடும்.''

நல்ல 'வாதம்' இவனுடையது என்று ராமசாமி மௌனமாகச் சிரித்தபோது சர்தார்ஜி தன்னுடைய சளசளப்பைத் தொடர்ந்தான்:

''வேற எத்தனையோ சுவாரசியமான விஷயங்கள் அங்கே இருக்கும்போது அந்தப் படிகள்தாம் உங்க கண்ணுலே படுதா?''

'வேற எத்தனையோ' என்கிற மிகைச்சொல் ஓர் ஆளில் சங்கமித்திருந்ததைச் சர்தார்ஜி மறைமுகமாகச் சொல்கிறன் என்று ராமசாமிக்குத் தெரியும். அவன் மழுப்பலாகச் சிரிப்பான். ''அப்படியெல்லாம் புத்தியை அலையவிட்டா என்னுடைய வேலையை அப்புறம் யார் செய்யறது?''

''உங்களைச் சுத்திப் பார்க்கலேன்னு நீங்க என்ன செய்தி நிருபர்? செய்திக்கு எங்கிட்ட வாங்க. உக்காந்த இடத்திலேந்து சொல்வேன். ஏன்னு என் பார்வை அவ்வளவு கூர்மை!''

சர்தார்ஜியின் ஊக்குவிப்பினுல் அவன் அடுத்த இரண்டு நாட்கள் பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு அந்தப் பழுதடைந்த மரப்படிகளில் இறங்கி ஏறும் 'சல்மா'வைச் சர்தார்ஜியின் பாராட்டுக்குப் பாத்திரமான, சுவாரசிய விஷயத்தைப் பார்த்து ரசித்ததில் ப்ரூஃப் ரீடிங்கிலும் செய்தியிலும் ஏகத் தகராறு ஆகி, நிர்வாக ஆசிரியர் சாவ்லாவிடம் பேச்சுக் கேட்க நேர்ந்தது.

ஆனுல் அந்தச் சாவ்லாவே தம் அறை ஜன்னல் வழியாகச் சல்மாவைக் கவனிப்பதை அவன் பலமுறை கவனித்திருக்கிறன். இந்தப் பிரஸ் கட்டிடத்தின் எல்லா ஜன்னல்களின் ஊடுருவலுக்கும் தான் ஆளாகி இருப்பதை உணராத ஓர் அலட்சியத்துடன் சல்மா மேலும் கீழுமாக மார்பு குலுங்க ஏறி இறங்குவாள். தெருவில் இறங்கும்போது பதவிசாகத் துப்பட்டாவினுல் தலையை முக்காடிட்டுக் கொள்வாள். கல்லூரியில் அவள் படிப்பதாக, சர்தார்ஜி தகவல் சொல்லியிருந்தான். ராமசாமி அச்சகத்துக்கு வருவதற்கு முன்பே, அவள் கல்லூரிக்குக் கிளம்பி விடுவாள். மத்தியான்னம் அவள் வீடு திரும்பும்நேரம் நிர்வாக ஆசிரியர் சாவ்லாவிலிருந்து வேலைக்காரன் விஜயசிங் வரை அற்றுப்படி.

சற்றுத் தொலைவிலிருந்த பஸ் நிலையத்திலிருந்து ஏற்கெனவே சிவந்த நிற ரோஜாப் பூவாய், அசைந்து வரும் புஷ்பக் கொடியாய் அவள் நடந்துவருவதை எத்தனை கண்கள் உணவை உட்கொள்ளும் பசியுடன் சேர்த்துப் பார்க்கின்றன என்று அவளுக்குத் தெரியாது. அவள் எந்தக் கவலையும் இல்லாமல் ,யார் பார்த்தால் எனக்கு என்ன என்கிற திமிரோடு வருவதற்கும், மாடிப்படி ஏறி இறங்குவதற்கும காரணம், அவளைச் சுற்றிப் படர்ந்த வேலியைப் போல் (முள்வேலி என்று சர்தார்ஜி சொல்வான்) இருந்த அவளுடைய அண்ணன்கள் என்று சாயாக் கடையில் வம்பளந்து விட்டு, சொல்லி ஒரு மணி நேரம் கழித்து வரும் டீயுடன் விஜய்சிங் சொல்வான்.

இன்று ராமசாமிக்குப் பொழுது போகவில்லை. ஆந்திரா பிரச்னை கூட. ஓய்ந்துபோன நிலையில்சுறுசுறுப்பாக மூளையை இயக்கும்படியான பரபரப்பூட்டும் செய்தி எதுவும் பிரஸ் அறையில் செவியில் படவில்லை.

''இந்த வாரம் சுவாரசியமா ஒரு கதையும் கொடுக்கமுடியாதுபோல் இருக்குடா கண்ணு!'' என்றுன், நேர் வலது மூலையில் டெலிபிரின்ட்டருக்கு எதிரில் உட்கார்ந்திருந்த கணேசன். திருச்சிராப்பள்ளியிலிருந்து டில்லி வந்து சேர்ந்தவன். இன்னும் பாலக் கரையின் ஞாபகம் விடாதவன். தமிழன் என்கிற சொந்தத்தில், இரண்டு வயது பெரியவன் என்கிற உரிமையில் வரும் 'டா'வை ராமசாமி பொருட்படுத்துவதில்லை.

''ஒரு தூக்கம் போட்டா என்னன்னு பார்க்கறேன்.''

''போட்ரு கண்ணு. ஆனு அந்தச் சல்மா வீட்டுப் பக்கம் பார்வை வெச்சுக்காதே. வருகிற தூக்கமும் போயிடும்.''

அதற்குப் பதில் சொல்லக்கூடச் சோம்பல் பட்டுக் கொண்டு ராமசாமி புன்னகையுடன் மேஜை மேல் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு கண்களை மூடிக் கொண்டான். மூடிய விழிகளுக்குள் சல்மா வந்தாள். கொடி போல் அசைந்து வந்து கிறங்கடித்தாள்.

''துலுக்கப் பெண்ணை உங்கம்மா ஏத்துப்பாளாடா கண்ணு?'' என்று கணேசன் பரிகாசம் பண்ணினுன்.

''அம்மாவை நரகத்தில் கொண்டு தள்ளு. சாதியைக் குப்பையில் தூக்கி எறி. மொழியைத் தூர ஒதுக்கிவை.

''ராமசாமி! ராமசாமி! ''உலுக்கி எடுக்கப்பட்டமாதிரி அவன் கண்களைத் திறந்தான்.

உதவி ஆசிரியர் திவாகரன் நின்றிருந்தான்.

கண்ணைத் திறந்தவனின் முதுகில் ஒரு ஷொட்டு பலமாகக் கொடுத்தான். ''எந்தா சாரே! இன்னிக்கு ஜன்னல் வழியா வெளியே பார்க்கற வேலைகூட இல்லையா? எழுந்திரு, சாவ்லா சார் கூப்பிடறுர்!'' என்றுன்.

ராமசாமி விடுக்கென்று எழுந்தான். கண்களைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டு விரைந்தான்.

சாவ்லா எந்தப் பத்திரிகையையோ மிகத் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''வணக்கம், ஸார்!''

''ஆ, ராமசாமி!' என்றுர். மேம்போக்கான புன்னகையுடன், ''திங்கட்கிழமை நோட்ஸ் காலத்துக்கு எதுவும் சுவாரசியமா இல்லே. பல்கலைக் கழகம் பக்கம் போய் வாயேன். இப்ப மாணவர் சங்கத் தேர்தல் நடக்கிறது. ஏதாவது சுவாரசியமான கதை கிடைக்கலாம்.''

''சரி ஸார்!'' என்றுன் அவன்.

''உன் ஆங்கில நடை எனக்குப் பிடிச்சிருக்கு. பார்வையும் உனக்குக் கூர்மை. மத்தவன் கண்ணுக்குப் படாதது உனக்குப் படலாம்.''

அவனுக்கு உற்சாகம் கரை புரண்டது.

''நன்றி, ஸார்! இப்பவே கிளம்பறேன்.''

''நல்ல கதை ஒன்று கொண்டு வா!''

''நிச்சயமா தர்ரேன் ஸார்.''

அவன் உடனடியாகக் காமெராவைத் தூக்கிக்கொண்டுகிளம்பினான். வழக்கம் போல் சர்தார்ஜி, பெஞ்சில் உட்கார்ந்து சாயா'வுக்காகக் காத்திருந்த இரண்டு ஏமாளிகளிடம் அரசியலை விவாதித்துக் கொண்டிருந்தான். சல்மாவின் வீடு மௌனமாக இருந்தது. அவள் அருகில் சென்று இரண்டு வார்த்தைகள் பேச முடிந்தவன் அதிர்ஷ்டசாலி என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அவன் பல்கலைக் கழகம் பக்கம் விரைந்தான்.

அங்கே விழாக் கோலம் பூண்டிருந்தது. பல வண்ணத் தோரணங்களும் பெரிய சுவரொட்டிகளும் திரும்பிய இடமெல்லாம் காட்சி அளித்தன. முடிச்சு முடிச்சாக மாணவ மாணவிகள். காரசாரமாக விவாதங்கள். ஆண் பெண் வித்தியாசம் தெரியாத உடைபாவனை. ஒரு பெண் ஜீன்ஸ், டீ ஷர்ட் உடையும், ஒட்ட வெட்டிய 'பாப்' தலையுமாகச் சிகரெட் ஊதியபடி உணர்ச்சி வசப்பட்டு எந்தக் கட்சிக்காகவோ பிரசாரம் செய்து கொண்டிருந்தாள்.

ராமசாமி மளமளவென்று சில ஷாட்டுக்கள் எடுத்தான். ஊர் உலக அரசியல் எல்லாம் ஜனிப்பதாகப் பிரமை ஏற்பட்டது. ராமசாமி நம்பிக்கையுடன் தன்னைச் சுற்றிப் பார்த்தான். பத்திரிகை வேலைக்குச் சேர்ந்த இந்த நான்கு வருஷங்களில் நிறைய அரசியல் கூட்டங்களைக் 'கவர்' செய்திருக்கிறான். அரசியல்வாதிகளைப் பேட்டி கண்டிருக்கிறான். கூட்டத்துக்கும் பேட்டிக்கும் காட்டும் முகத்துக்கும், அவர்

களின் உண்மை முகத்துக்கும், இருக்கும் வித்தியாசங்களைப் பல சந்தர்ப்பங்களில் கண்டு அதிர்ந்திருக்கிறான்.

சமீபத்தில் ஒரு பெரிய ஊழலில் ஒரு மந்திரி சம்பந்தப்பட்டிருந்ததை வீராவேசத்துடன் எழுதி, சாவ்லாவிடம் காண்பித்த போது அவர் அதைப் பாராட்டியதோடு சரி. செய்தித் தாளில் போடவேயில்லை. திவாகரனும் மற்றவர்களும் வாயே திறக்கவில்லை. அதற்குப் பதிலாய்த் தேநீர்க்கடை சர்தார்ஜி தான் இட்கணியைப் போல் கிசுகிசுத்தான். ''மந்திரி வீட்டிலே சாவ்லா ஸாருக்கு நேத்துப் பெரிய விருந்து தெரியுமா?',

வெகு நாட்களுக்கு ஏமாற்றமும் ஆத்திரமும் அடங்கவில்லை அவனுக்கு' வேறு பத்திரிகைக்கு வேறு பெயரில் எழுதி அனுப்பினால் என்ன என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் சாவ்லா அவனைக் கூப்பிட்டனுப்பினார்.

''இதப் பார் ராமசாமி. உனக்குச் சின்ன வயது. நிறைய லட்சியங்கள் மனசுலே இருக்கும். அநியாயத்தைக் கண்டு ஆத்திரம் பொங்கும். என் வயசுக்கு நீ வரும்போது உன் ஆத்திரமெல்லாம் எத்தனை அர்த்தம் இல்லாதது என்று புரியும். அந்த ஊழல் சமாசாரத்தைப் பத்தி மறந்துவிடு. அதை நீ வெளியிடுவதினாலே இந்த உலகம் மாறப் போறதில்லே.''

அவன் அவசரமாகக் குறுக்கிட்டான்: ''நாம சுதந்தரமான பத்திரிகையாளர்கள் சார், ஊழல்களை நாம வெளியிடல்லேன்னா..''

''ஒண்ணும் குடிமுழுகிப்போகாது. தவிர இந்த மந்திரியாலே நமக்குப் பல தயவுகள் நடக்கணும். எந்த மனிதனும், எந்த அமைப்பும் சுதந்தரமாக இருக்க முடியாது. ஒருத்தர் தயவு இன்னொருத்தருக்குத் தேவை என்கிற நிலையிலே யோசிக்காம எந்த வேலையும் செய்யக் கூடாது. எந்த ஊரில் அல்லது தேசத்திலே அரசியல் சுத்தமாக இருக்கிறது, சொல்லு?''

''பத்திரிகைத் தர்மம்னு ஒண்ணு இருக்கு சார். அரசியல் அசுத்தத்தைச் சுட்டிக் காட்டத்தான்..''

''ஆ, அதெல்லாம் அசட்டுப் பேச்சு. எதை வெளியிட்டா அபாயமில்லையோ, அதைத்தான் வெளியிடலாம். பத்திரிகையும் பிழைக்கணும் ஐயா! சமூகத்தைச் சீர்திருத்தரது நம்ம வேலையில்லை. எழுத்து நமக்குப் பிழைப்பு!''

அவனுக்குப் பல நாட்களுக்கு வெறுத்துப் போயிருந்தது. 'எத்தனையோ உயர் மட்டத்து அதிர்ச்சி தரும் வண்டவாளங்களை அலுங்காமல் நிலுங்காமல் கேட்டு மெத்தனமாகச் சிரிக்கும் அலுவலக நிருபர்களைக் கண்டு ஆத்திரம் வரும். இவர்களுக்கெல்லாம் இரத்தம் கொதிப்பதில்லையா?'

இப்பொழுது இந்தக் கல்லூரி மாணவர்களை அவன் சந்தோஷத்துடன் பார்த்தான். இவர்கள் நிச்சயம் வித்தியாசமானவர்கள். லட்சிய வெறி கொண்டவர்கள். அதனால்தான் இப்படிப்பட்ட போர்முழக்கம். 'ஜீன்ஸ்' பெண்ணின் உணர்ச்சி ததும்பும் பேச்சை ஒரு சிறிய மாணவக் கும்பல் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு சிகரெட் முடிந்ததும் இன்னொன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, மாணவ சமுதாயத்துக்கும் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கும் இழைக்கப்படும் அநீதிகளைப் பிட்டுப் பிட்டு வைத்தாள்.

''எங்கள் கட்சியை ஆதரியுங்கள். தர்மத்தையும் நியாயத்தையும் நிலை நாட்டுவோம்!'' என்று முடித்தாள்.

ராமசாமி அவசரமாக அவள் அருகில் சென்றான்.

''நான் பத்திரிகையாளன்'' என்று கார்டை நீட்டினான். ''ஒரு சின்னப் பேட்டி வேணும்'' என்றான்.

'ஜீன்ஸ்' கடிகாரத்தைப் பார்த்தாள். ''எனக்கு 12 மணிக்கு வேறு ஜோலி இருக்கு'' என்றாள்.

''ஐந்தே நிமிஷம்!'' என்றான் ராமசாமி.

''சரி'; என்றாள், 'ஜீன்ஸ்' புகை வளையத்தை ஆகாசத்துக்குச் செலுத்தியபடி.

''தேசிய அரசியல் மாதிரி இருக்கிறது இங்கே! உங்களுக்கெல்லாம் படிப்பு கிடையாதா?'' என்றான் துணிந்து, வேண்டுமென்றே.

அவள் கண்களில் சுர்ர் என்று கோபம் தெறித்தது.

''படிப்பதற்கும் படிப்பிப்பவர்களுக்கும் சரியான சூழ்நிலை வேண்டாமா? பாரழுட்சமே நியதியாகி விட்ட இடத்தில் எந்த மாதிரி படிப்பு இருக்கும்?''

''நிலைமையைச் சரி செய்ய வேறு வழி இல்லையா? இத்தனை அரசியல் மாணவர்களுக்கு அவசியமா?''

''மிக மிக அவசியம். அரசியல் பிரக்ஞை இல்லாத மாணவர்கள் எல்லாரும் தேசத் துரோகிகள். டில்லியில் உட்கார்ந்து கொண்டு வெள்ளைக் காலரை அணிந்து கொண்டு ஆளும் கட்சி சார்பாகச் சலாம் போட்டுப் பத்திரிகை நடத்துகிற உங்களுக்குத் தேசத்தின் அவலங்கள் கண்ணுக்கு எங்கே படும்? ஏழை, பணக்காரன் என்கிற பாகுபாடு எல்லாத் துறைகளிலும் எத்தனை கேவலமாக நம் தேசத்தைப் பலிவாங்கிக் கொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரிந்தால் இப்படிப்பட்ட முட்டாள்தனமான கேள்வியைக் கேட்க மாட்டீர்கள். இன்றைய மாணவ சமுதாயம் நாளைய ஆட்சியாளர்கள். நினைவு வைத்துக்கொள்ளுங்கள். வெறும் இஞ்சினியர்களையும் டாக்டர்களையும் உருவாக்கும் தொழிற்சாலை இல்லை இது. அப்படி ஆக நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.''

ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகிற மாதிரி சம்பந்தம் இல்லாமல் பேசிக் கொண்டு போனாள். அவனுடன் பேசுவதற்குள் மூன்று சிகரெட்டைத் தீர்த்தாள்.

ஒரு தாடிக்காரன் அவள் தோளில் கை வைத்து, ''நேரமாகி விட்டது லீனா!'' என்றான்.

லீனா ராமஸ்வாமியைப் பார்த்து முதல் முறையாகப் புன்னகைத்து, ''நேரமாகி விட்டது!'' என்று சொல்லி விட்டு, தாடிக்காரன் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளில் அவனைத் தழுவியபடி விரைந்தாள்.

வேறு யாரைப் பிடிக்கலாம் என்று கண்கள் அலைந்தபோது அவன் சட்டென்று நின்றான். சற்றுத் தொலைவில் ஒரு சர்தார்ஜியின் தோளைப் பற்றியபடி சல்மா.



தாடைகள் கீழே விழுந்து விட்டாற் போல் அவன் உணர்ந்தான். அவள் எந்தவிதக் கூச்சமும் இல்லாமல் அந்த சர்தார்ஜியுடன் ஒட்டியபடி அமர்ந்திருந்தாள். சாதாரண சிநேகிதத்துக்கும் மேலான நெருக்கம் நிச்சயமாய்.

தன்னையறியாமல் ஒரு 'ஷாட்டை' எடுத்தான் ராமசாமி.

இவளை அவன் தினசரி பார்த்துக் கொண்டிருப்பதும், அவள் வீட்டு எதிர்த்த கட்டிடத்தில் அவன் வேலை பார்ப்பதும் அவளுக்கு நிச்சயம் தெரியா என்கிற தைரியத்தில் அவன் அவளுடைய காதலனைப் பார்த்துச் சிரித்து, ''ஹலோ'' என்றான்.

''நான் ஒரு பத்திரிகையாளன். உங்களிடம் சில கேள்வி கேட்கலாமா?''

பளீரென்று தன் பல் வரிசையைக் காட்டியபடி சர்தார்ஜிப் பையன் சிரித்தான்.

''ஓ! கேளுங்கள்'' என்றான்.

சல்மா சிரித்த முகத்துடன் உற்சாகமானாள்.

''படிப்பு முடிந்ததும் என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?''

''அரசியல்வாதியாகப் போகிறேன்!''

''அது ஒரு பிழைப்பா?''

''அதில்தான் பிழைப்பு. அதில் தான் பணம் பண்ண முடியும்.''

இத்தனை வெளிப்படையாக ஒருத்தன் பேசுவானா என்று ராமசாமிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''பணம் செய்வதுதான் உங்கள் குறியா? லட்சியமா?''

''ஆமாம். ஏன் கூடாது? பணம் பண்ணும் குடும்பத்தில் பிறந்தவன் நான். எப்படி ஏமாத்தினால் எப்படிப் பணம் பண்ணலாம் என்கிற பேச்சுக்களுக்கு நடுவில் வளர்ந்தவன். அரசியலில்தான் பிடிபடாமல் பணம் பண்ணலாம்.''

''தேச சேவை என்பதெல்லாம் இரண்டாம் பட்சமா?''

சர்தார்ஜி கடகடவென்று சிரித்தான்.

''அந்த வீணா உளறினதையெல்லாம் கேட்டுவிட்டு என்னிடம் வருகிறீர்களா? அவள் பெரிய மோசடிக்காரி. வெளிநாட்டு ஜீன்ஸ் போட்டுக் கொண்டு இப்போ இங்கிலீஷ் சினிமா பார்க்கப் போயிருக்கிறாள். அவள் வேலைகளைச் செய்ய அவள் வீட்டில் பத்து வேலைக்காரர்கள். அவள் தொழிலாளர் வர்க்கத்தைப் பத்திப் பேசுவாள். நான் வேஷதாரி இல்லை. தேசத்தைச் சீர்திருத்தப் போறேன்னு சொல்லலே. என் அப்பாவும் தாத்தாவும் செஞ்சதைத்தான் நானும் தொடரப் போறேன்.''

ராமசாமி சிறிது ஏமாற்றத்துடன், 'இவனா உன் காதலன்?' என்கிற பார்வையுடன் சல்மாவைப் பார்த்தான்.

''அதாவது, நல்லதோ கெட்டதோ, அதையே பின் பற்றப்போகிறீர்கள்!''

''நிச்சயமா. நான் ஏன் மாறணும்? தேச சேவை என்கிறதெல்லாம் வேஷம. இந்தத் தேசம் இப்படியே தான் இருக்கும். நான் எங்கப்பா மாதிரி இருப்பேன். என்பிள்ளை என் மாதிரி இருப்பான், எனக்கு லாபமா இருந்தால் ஒழிய நான் ஏன் வித்தியாசமா இருக்கணும்?''

சல்மா நிர்விசாரமாய்ச் சிரித்தாள். அவனை அணைத்த நிலையில் காதருகில் ஏதோ கிசுகிசுத்தாள். இவளுடைய அண்ணன்கள் இவளை இந்த நிலையில் பார்த்தால் இந்தச் சர்தார்ஜியைக் கண்டம் துண்டமாய் வெட்டிப் போடுவார்கள் என்கிற கற்பனையில் அவன் இருந்தான்.

''ஒரு விஷயம், என்னுடைய மூதாதையர் செய்யாத ஒரு காரியத்தை நான் செய்யப் போறேன். நான் ஒரு சீக்கியன், ஒரு முஸ்லிமைக் கல்யாணம் செய்துக்கப் போறேன்.'' என்றான் அவள் நண்பன்.

ராமசாமி ஒரு விநாடி அந்த அழகுப் பொட்டலத்தைப் பார்த்தான். 'கடைசியில் இந்த அயோக்கியனிடம் வியர்த்தமாகப் போகிறாயா?' என்கிறமாதிரி.

''உங்களுக்கு ஏதாவது ஆட்சேபமா?'' என்றான் சீக்கியப் பையன் கொழுப்புடன்.

சல்மா வாய்விட்டுச் சிரித்தாள்.

''அந்த ஆளை விடு சர்தார்ஜி!''

ராமசாமி சட்டென்று சுய நினைவு வந்தவனாய் விறைத்துக் கொண்டான்.

''எனக்கென்ன ஆட்சேபம்? உங்களுக்கு என் வாழ்த்துக்கள்'' என்றபடி நகர்ந்தான்.

திடீரென்று ஓர் ஏமாற்றம் அவனை ஆக்ரமித்தது. சல்மாவை இந்தப் போக்கிரியுடன் பார்த்த அதிர்ச்சி மட்டும் அதற்குக் காரணம் இல்லை என்று தோன்றிற்று. வேறு யாரையும் பார்க்கவோ பேசவோ சுவாரசியம் இல்லாமல் போயிற்று சற்று நேரம் மூலைக்கு மூலை முடிச்சு முடிச்சாய்க் கட்சிப் பிரசாரம் செய்து கொண்டு காரசாரமாய் வாதாடிக் கொண்டிருந்த குரல்களை அலங்க மலங்க நின்று கேட்டான்.

காமெராவின் லென்ஸை மூடி உறைக்குள் போட்டு அலுவலகத்தை நோக்கிப் பயணம் செய்வதில் பத்து வயது கூடிவிட்ட மாதிரி இருந்தது.

அண்டை கொடுக்கும் கட்டை நமுவிய சாயாக்கடை பெஞ்சைப் போல், எதிர்பாராமல் பாலன்ஸ் குலைந்த மாதிரி மனசு நிலை குலைந்திருந்தது.

பிரஸ் கட்டிடத்தை அடையுமுன் சாயாக்கடை முன் ஸ்கூட்டரை நிறுத்தி, ''ஒரு ஸ்ட்ராங், சூடான டீ சர்தார்ஜி!'' என்றான்.

''சூடான டீயுடன் சூடான சேதி சொல்லவா?'' என்று சர்தார்ஜி சிரித்தான்.

''என்ன சேதி? எந்தச் சேதியிலேயும் இப்பல்லாம் வித்தியாசம் இல்லே சர்தார்ஜி!''

''சில விஷயம் பரபரப்பாக இருக்கும். நம்ம எல்லாருக்கும் டிமிக்குக் கொடுத்துவிட்டு எதிர்த்த வீட்டுப் பெண் எங்க ஜாதிப் பையனைக் கல்யாணம் செய்துக்கப் போறா!''

ராமசாமி வியப்புடன் அவனைப் பார்த்தான். இவன் என்ன ஸி.பி.ஏ. ஏஜெண்டா? எப்படிச் செய்தி சேகரிக்கிறான்?

''பெரிய புரட்சிகரமான செய்தி இல்லே?''

சல்மாவின் கடைக்கண் என் மேல் பட்டிருந்தால் நானும் புரட்சி செய்திருப்பேன் என்று நினைத்தபடி, ''அவளுடைய அண்ணன்கள் சும்மா இருப்பாங்களா?'' என்றான்.

''கண்டுக்கமாட்டாங்க'' என்றான் சர்தார்ஜி. ''இந்தப் பையன் கொழுத்தப் பணக்காரன்.''

அப்படியும் இன்னும் பணத்துக்கு அலைகிறானா?

''ஏன் ஸாப், கலப்புத் திருமணம் முற்போக்கானதில்லையா?''

''யார் இல்லேன்னது? பணந்தான் இவங்க சம்மதத்துக்குக் காரணம்னா அது முற்போக்கான சம்பந்தம் இல்லே!''

''அட, என்ன ஸாப்! இந்த டில்லி பட்டணத்திலே இருந்துண்டு இப்படி ஞான சூன்யமா இருக்கிங்களே? உலகத்தை ஆட்டிப் படைக்கிறது இரண்டே விஷயம்: பணம், பதவி இதைத் தவிர வேற விஷயம் இருக்கா சரித்திரத்திலே!''

ராமசாமி லேசான புன்னகையுடன் எழுந்தான்.

''நன்றி, சர்தார்ஜி, டீயோட ஞானத்தையும் கொடுத்ததுக்கு.''

ஸ்கூட்டரில் ஏறுமுன் சல்மாவின் வீட்டைப் பார்த்தான். உடைந்த கைப்பிடிச் சுவரும் நைந்த மரப் படிகளும் பளிச்சென்று தெரிந்தன.

திடீரென்று சிரிக்க வேண்டும் போல் இருந்தது. இந்த வீட்டுக்கும் நமது சமூக, அரசியல் அமைப்புக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்று தோன்றிற்று. எல்லாருக்கும் எல்லாம் பழகிவிட்டது. சர்தார்ஜிக்கு அவனுடைய உடைந்த பெஞ்ச் பழகிப் போனதைப் போல, அவன் சொன்னது போல் இதையெல்லாம் செப்பனிட முனைந்தால் அதன் பாத்திரத்தன்மையே மாறிப் போகும்.

''நான் ஏன் வித்தியாசமாயிருக்கணும்? அதானே!'' என்று ராமசாமி தனக்குள் ஒத்துப் பாடினான். ''உங்களைச் சுற்றி இருக்கும் உலகம் ஒரு வகையில் இருக்க அதில் இருக்கும் நீங்கள் மட்டும் வேறு வகையில் எப்படி இருப்பீர்கள்?''

ஒரு முழுமையின் ஓர் அங்கம் மட்டும் வித்தியாசமாக இருக்கும் என்று எதிர்பார்த்ததும் ஏமாந்ததும் என்னுடைய ஞானசூன்யத்தால்தான்.

அலுவலகக் கட்டிடத்தின் படிக்கட்டுகளை ஏறும்போது தன்னையே உசுப்பிக் கொண்டான்.

''எழுத்து என் பிழைப்புக்காக. சமூகத்தைத் திருத்தறது நம்ம வேலையில்லே!''

சல்மாவின் நினைவு வந்தது; சட்டென்று அதை அமுக்கியபடி அவன் முன்னேறினான். ✻

ஸ்வர்ணவின் பண்டிகை அளிப்பு

SECURITY · SWARNA · SAFETY

வட்டி **22%** சம்பாதிப்பதுடன்
கவர்ச்சிகரமான பரிசுகளும் உண்டு

கனகதார டிபாஸிட் திட்டம்

சாதாரண வட்டி விகிதம்			அதிகரிக்கப்பட்ட வட்டி விகிதம்
1 வருடம் 17%	17	1	18%
2 வருடங்கள் 18%	18	1	19%
3 வருடங்கள் 19%	19	2	21%

5 வருடங்கள் 22%

ஸ்வர்ண
ஸவர்ண பைநன்ஸ் அண்டு இன்வெஸ்மென்ட்

ப்ளூ-மூன் தியேட்டர் காம்ப்ளெக்ஸ்
66. எம்.ஜி ரோடு பெங்களூர்-560 001
தொலைபேசி 579620.

இந்தச் சலுகை 1—31ம்
அக்டோபர் 1984 வரை மட்டும்தான்

எங்களுடைய மற்ற கிளைகள்: பெங்களூர், பம்பாய், கல்கத்தா, கோயம்புத்தூர் எர்ணுகுளம், குடிவாடா, ஹைதராபாத், உப்ளி காகிநாடா, கர்நூல், சென்னை மதுரை மைசூர், மங்களூர், புது தில்லி, நிஸாமா பாத், நெல்லூர், பாண்டிச்சேரி திருச்சி திருநெல்வேலி திருவனந்தபுரம், விஜயவாடா, விசாகபட்டிணம்,

Masscom

MADRAS - 3rd Floor, No.4, Kondichetty Street,
Madras - 600 001. Phone:29674

MADURAI - Door No.287, 1st Floor, West Masi Street,
Madurai - 625 001. Phone: 25226

COIMBATORE - 533, 1st Floor, 'Fatima Manzil'
Dr. Nanjappa Road, Coimbatore - 641 016.

PONDICHERRY - 12, Lalbahadur Sastry Street,
Pondicherry - 605 001.
Phone:3482

TRICHY - C-44, 1st Floor, 9th Cross,
Western Extension, Thillainagar,
Triuchy - 620 018.

TIRUNELVELI - 101-A, Madurai Road Junction,
Tirunelveli.

வைர மூக்குத்தி

கோவி. மணிசேகரன்

சூரியனுக்கு விடை தரும் முகாந்திரமாக மாலை, மேற்கு வானத்துக்கு மாலை அணிவித்துக் கொண்டிருந்தது.

அந்தப்புரத்தை ஒட்டியிருந்த அந்த மதில் சுவருக்கு ஓரமாக நின்றும், ஒதுங்கியும், மறைந்தும் தன்னை யாரும் கவனித்து விடக்கூடாதே என்கிற இதயத் துடிப்புடன் காணப்படுகிறான் மல்லையா.

மதுரையை ஆளும் திருமலை நாயக்க மன்னனின் படைக் கூடத்தில் ஒரு பகுதிக்கான வீரர் தலைவன் அவன்.

எந்தப் பெண்ணும் ஒரு கணமேனும் நின்று ரசிக்கவல்ல ஆண்மை மிக்க அழகன்.

திரண்ட தேகம், திடகாத்திரமான தோற்றம், கம்பீரமான உயரம்.

அவன்மீது அந்தப்புரத்துப் பதுமை ராணிகளுள் ஒருத்தியான நரச செல்லம்மா ஆசை வைத்ததில் தவறு என்று சொல்லிவிட முடியாது.

சூழ்ந்திருந்த மரங்களில் வந்து அடங்கிய புள்ளினங்களின் கூச்சல் அந்த மாலைப் போதின் செவிப் பறையைப் பிளந்தது.

மல்லையா மரங்களின் கீழே நிற்காமல் மதில் ஓரமாக ஒதுங்கிக் கொள்கிறான்.

ஒரு நாழிகைகூடத் தேவையில்லை. அரை நாழிகைப் போது மரத்தடியில் அவன் நிற்பானேயானால் உடல் முழுவதும் பட்சிகளின் எச்சம் சுண்ணாம்புத் திருமுழுக்காய்ச் செய்துவிடும்.

இருள் மெல்ல மெல்லக் கவிந்து வருகிறது.

நரச செல்லம்மா அந்தப்புரத்திலிருந்து யாரும் அறியாவண்ணம் பதுங்கிப் பதுங்கி வருகிறாள்.

எவரேனும் பார்த்து விட்டால் நடப்பதே வேறு!

அவள்தான் என்ன செய்வாள்?

அந்த மதுரை நாயக்க அந்தப்புரத்தில் திருமலை நாயக்க மன்னருக்கென நூறு மனைவிமார்கள். பல மொழிக்காரிகள் அவர்களில் இருந்தனர்.

பட்டத்தரசிகளான ருத்திராபதி தேவியாருடம் தொலியம்மாளும் தவிர, ஏனைய தொண்ணூற்றெட்டுப் பதுமை ராணிகளுக்கு எப்போதாவது ஒரு முறை மணியடிக்கும்; என்றோ ஒரு நாளைக்கு அழைப்பு வரும். அவர்கள் தாம் என்ன செய்ய முடியும்?

'திருமலை நாயக்க மன்னரின் தசைமலை போன்ற உருவத்துக்கும் தொந்திக்கும் இது தேவையா?'

என்று அவர்களுள்ளும் விமர்சித்துக் கொள்வர்.

பலரும் புழுங்கி, வயதை எண்ணி வந்தாலும், சிலர் துணிந்து வாலிபத்தை எண்ணத் தொடங்குவது இயல்புதானே?

அடுத்தவர் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு இருட்டு ஆட்சிக்கு வந்துவிட்டது.

மல்லையாவைக் கண்ட நரச செல்லம்மா கிறங்கி விட்டாள்.

அன்றாடம் நடக்கும் தேர்த் திருவிழா என்றால் இப்படியான கிறக்கம் ஏற்பட வழியில்லை.

அன்றாடமா? நினைத்துப் பார்க்க முடியுமா?

மாதத்துக்கு ஒரு நாள்; பௌர்ணமி நிலவு போல! ஆனால் அவர்கள் சந்திப்பது அமாவாசை இருட்டில்.

அன்றும் அமாவாசை.

முதலில் அமாவாசை பூஜை முடிந்து விட்டது.

நரச செல்லம்மாளுக்கும் ஒரு சந்தேகம்.

மல்லையா ஏதோ சுரத்தையில்லாமல் காணப்படுகிறான். ஏதோ மனக் கவலையில் இருக்க வேண்டும்.

இரு நாழிகைப் போதில் அவர்கள் தங்களைச் சரிசெய்து கொண்டனர்.

"மல்லையா, ஏன் சுரத்தையில்லாமல் இருக்கிறாய்? சுரத்தையில்லாமல் என்றுதான் கேட்டேன்; சுரணையில்லாமல் என்று கேட்டுவிடவில்லை."

தெலுங்கு மொழிக்கே உரிய தென்புடன் நரச செல்லம்மாவின் நாவு அசைகிறது.

அவனும் தெலுங்கில் சொன்னான்!

"இளையராணி, வீட்டில் குழப்பம், உங்கள் உதவி தேவை."

"என்ன தேவை?"

"வீட்டில் நிறைமாதக் கர்ப்பிணி என்பது உங்களுக்குத் தெரியும். நாளை அவளைத் தாய் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். கையில் பணம் இல்லை."

என்ன செய்வாள் நரச செல்லம்மா?

மீண்டும் பணத்துக்கு ஏற்பாடு செய்து, மல்லையாவுக்குச் சொல்லியனுப்பி அவன் வந்து பெற்றுச் செல்ல வேண்டும். நடக்கிற காரியமா?

ஒரு யோசனை உதயம் கண்டது.

மூக்கில் இருக்கும் வைரமூக்குத்தி என்ன செய்யப் போகிறது?

எல்லாப் பதுமைகளுக்கும் வைர மூக்குத்திகள் உண்டு. இதில் குறைச்சல் கிடையாது.

நம்மிடம் இருப்பது வைரமா? சாதாரணமா என்கிற விஷயம் யாருக்குத் தெரிந்து விடப்போகிறது?

"மல்லையா, நான் என் மூக்குத்தியைக் கழற்றித் தருகிறேன், நீ உடனடியாக ஒரு பொற்கொல்லரிடம் கொடுத்து, இதே மாதிரி ஒரு மூக்குத்தி செய்யச் சொல். நீ இந்த வைர மூக்குத்தியை விற்றுப் பணமாக்கிக் கொள். சாதாரண கல்வில் செய்கிற மூக்குத்திக்கு உரிய பணம் போக மீதியை நீ எடுத்துக் கொள். இன்றைய மூன்றாம் நாள் மூக்குத்தியை அதோ தெரியும் மதில் வெடிப்பில் வைத்துவிட்டுப் போய்விடு. நான் எடுத்துக்கொள்கிறேன்."

மல்லையா மௌனமாகக் கவனிக்கிறான்.

"ஒரு விஷயம் மல்லையா! உன் மனைவி நிறை மாதக் கர்ப்பிணி. நான் மூன்றாம் மாதம்!" என்று கூறிய நரச செல்லம்மா, மூக்குத்தியைக் கழற்றி அவனிடம் நீட்டினாள்.

அவள் காணும் சுகத்துக்கு, அந்த மதுரையே அவள் பேரில் இருந்தால், அதையே தானம் செய்து விடுவாளே!

மல்லையா அவ்விடத்தை விட்டு அகன்றான்.

மூன்றும் நாள். அந்த மதில் வெடிப்பில் கைவிட்டுப் பார்க்கிறாள் நரச செல்லம்மா.

அங்கே மூக்குத்தியைக் காணோம். நான்காம் நாள். ஐந்தாம் நாள். நரச செல்லம்மா புறப்படும்போது திருமலை நாயக்க மன்னரே வந்துவிட்டார்.

அயர்ந்து போகிறாள் நரச செல்லம்மாள்.

ஆ! மன்னர் பிரான் தன்னைத் தேடி வருகிற பாக்கியம்!

பகலில் வருவானேன்?

இரவில் எங்கே நேரம்?

அந்தப் பட்டத்தரசி ராட்சஸிகளுக்குப் பயந்து பகலில் வருகை தந்திருக்கிறாரோ?

''வாருங்கள், மன்னர் பிரானே!''

''நலமா நர்சம்மா?''

மன்னர் திருமலை நாயக்கர் அவளை அப்படித்தான் அழைப்பார்.

அவளுடைய பொங்கி வந்த பூரிப்புச் சிரிப்பு மௌனமாகத் தலையசைக்கிறது.

மஞ்சத்தில் அமருகிறார் மன்னர்.

ஓ! இந்த மஞ்சத்தில் அவர் வந்தமர்ந்து, சரியாக ஆறு மாசம் நான்கு நாட்கள் ஆகின்றன.

''நரசம்மா, மூக்கில் எங்கே மூக்குத்தியைக் காணோம்?''

அப்போதுதான் அவளுக்கே அந்த நினைவு வந்தது. மன்னர் வந்த தெம்பில் மறந்து போனாள்.

சமாளிக்கிறாள்:

''பிரபோ! காலையில் குளிக்கிற போது கழன்று விழுந்து விட்டது. தேடிப் பார்த்தேன், காணவில்லை.''

''காலையில்தானா?''

அவள் மென்று விழுங்கித் தலையசைக்கிறாள்.

''கோதண்டா?''

குரல் ஓங்கி ஒலிக்கக் கேட்டு, ஒருவன் வந்து அடிபணிந்து நிற்கிறான்.

''எங்கே அந்த மூக்குத்தி?''

அவன் மூக்குத்தியை எடுத்துத் தருகிறான்.

''மூக்குத்தியை வைத்திருந்த மல்லையாவை என்ன செய்தீர்கள்?''

''சிறையில் இருக்கிறான் பூபதி.''

''நீ போகலாம்.''

அந்தக் கோதண்ட வீரன் மீண்டும் வணங்கி விடை பெற்றுச் சென்று விட்டான்.

அந்த வைர மூக்குத்தியை நரச செல்லம்மாவிடம் நீட்டிய திருமலை நாயக்க பூபதி, ''நரசம்மா, காலையில்தான் காணோம் என்றாய்! இது முந்தா நாள் பிடிபட்டிருக்கிறது. ஒரு நகைக்கடையில் விற்கப் போகிற போது பிடிபட்டிருக்கிறது. இது சின்னப் பொருள்தான். இதனுள்ளும் அரசாங்க சமிக்ஞை ஒளிந்து கொண்டிருப்பதை நீ அறிய மாட்டாய்!'' என்று கூறியவர், ''யார் அங்கே?'' என்று குரல் கொடுக்கிறார்.

வீரன் வந்து பணிந்து நிற்கிறான். கண்களால் சமிக்ஞை செய்தார். வீரன் பணிந்து விடை பெற்றுச் சென்று, சற்றைக்கெல்லாம் திரும்பினான்.

அவனுடைய கையில் ஒரு தட்டு: அதன் மீது ஒரு வெள்ளிக் குவளை. அவற்றை வைத்துவிட்டு அந்த வீரன் வணங்கி விடைபெறுகிறான்.

''என்ன இது?''

பயமறைந்து போன நரச செல்லம்மா இப்போது பூதமே அறையப் போகிற மாதிரி மருண்டு போய்க் கேட்கிறாள்.

''என்னதுன்னு புரிகிறதா நரச செல்லம்மா?''

அவள் மேலும் மருண்டு தலையசைக்கிறாள்.

''என்ன சொல்?''

மன்னரின் அதட்டலுக்கு அதிர்ந்து போன நரச செல்லம்மா, ''விஷம்'' என்றாள்.

அலட்சியத்தில் கோபத்தைத் திணித்து நோக்கிய மன்னர் திருமலை நாயக்கர், ''ஆமாம், விஷம்! ஆனால் நரசம்மா, இது உன்னைக் கொல்லாது. உன் வயிற்றில் ஓர் உயிர் இருக்கிறதல்லவா? அதனைக் கொன்றுவிடும். இது முதல் மன்னிப்பு. அடுத்து நீ உனது போக்கில் ஏதேனும் கவனக் குறைவாக நடப்பாயேயானால் உனது உயிருக்கு விஷம் வரும்! எடுத்துக் குடி.''

மன்னர் கட்டளைக்கு மீறாமல் உடனே எடுத்துக் குடித்து விட்டாள்.

அவளுக்கே விஷம் தந்தாலும் குடித்துத் தானே தீர வேண்டும்?

குடித்து முடித்த நரச செல்லம்மா, கண்ணீருடன் கால்களில் விழுந்தாள்.

''மன்னியுங்கள் மகாராஜா!''

''எழுந்திரு! அரச கௌரவத்தை முன்னிட்டு இதனை ரகசியமாக நானே நடத்த நேர்ந்தது. மன்னிக்கவும் நேர்ந்தது. மூக்குத்தியை அணிந்து கொள்,''

அந்த வைர மூக்குத்தியை அவள் அணிந்து கொண்டிருந்த போது திருமலை நாயக்க மன்னர் எழுந்து சென்று கொண்டிருந்தார். ❋

மார்த்தா கிராமும் பரத நாட்டியமும்

—சுதாராணி ரகுபதி

கலையும் அதை நுகரும் ரசனை உணர்வும் எந் நாட்டினருக்கும் பொதுவான உணர்ச்சி. கலையின் தரத்தையும், கலைஞரின் அநுபவ மெருகையும் பயிற்சி நுணுக்கத்தையும் அநுசரித்து ரசிக உணர்வு அமையும். அதனால் கலையை ரசிப்பது என்பது அவரவர்களின் மனப்பக்குவத்தை ஒட்டிய விஷயமாகும். அந்நிய நாட்டுக் கலை ஒன்றைக் கற்ற என் அநுபவத்தை இங்கே சொல்கிறேன். முதலில் எந்த ஒரு நாட்டியக் கலைஞரைக் குறித்தும் குறிப்பிட விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாண்டுகளுக்கு மேல் பரதநாட்டியக் கலையில் நான் ஒரு மாணவியாக இருக்கும் காரணத்தினால், ஒரு புதிய நாட்டிய வடிவத்தைக் கற்க அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மேலும், நான் கற்க நேரிட்ட அந்தப் புதிய நாட்டிய வடிவம் அல்லது நடைமுறை, ஏற்கனவே எனக்கு அறிமுகமாகியுள்ள நாட்டிய முறைக்கு முற்றும் மாறுபட்டதாகும். இந்தப் புதிய நாட்டிய வடிவத்தின் அணுகுமுறை வழக்கத்துக்கு மாறுபட்டதாக இருந்தாலும் இந்த நாட்டியத்தின் சிறந்த சித்தாந்தங்கள் ஒப்பற்றவையாகும். இந்நாட்டிய நடையை, நான் இதற்கு முன்னர் பார்த்ததில்லை. இந்த நிகழ்ச்சி 1964-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. நான் இங்கே குறிப்பிடும் நாட்டிக் கலை வடிவம், உலகப் புகழ் பெற்ற மார்த்தா கிராமின் நவீன நாட்டிய நுட்பமாகும். பரதநாட்டியத்துக்கும், மார்த்தா கிராம் நவீன நாட்டியத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றி இங்கே விமரிசிக்கவில்லை. பரதக் கலையை எவ்வாறு மார்த்தா கிராமின் நாட்டிய நுணுக்கங்களுடன் அணுகலாம் என்பதைக் குறித்தே இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இதனை ஆராய, நாம் மார்த்தா கிராமின் நாட்டிய நடையின் நுணுக்கத்தைச் சிறிதளவாவது புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எழுகின்றது. அமெரிக்க நாட்டுக் கலை வரலாற்றில், ஒரு புதிய இயக்கத்தை உருவாக்கி, நவீன நாட்டியக் கலைக்கு வித்திட்ட ஒரு சில முன்னோடிகளில், மார்த்தா கிராமும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நடனம் ஒருவிதக் குலுக்கோ நடுக்கமோ அல்லது 'ராக்-இன்-ரோலோ' அல்ல. இந்தக் கலை ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நாட்டியக் கலையின் வடிவமாகும். எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள் ஆகியவற்றைப் பகட்டான அசைவுகளின் வாயிலாக எடுத்துக்காட்ட இந்த நாட்டிய வடிவத்தில் போதிய சுதந்தரம் உள்ளது. இந்தக் கலை ஒரு வெளிப்பாட்டின் விளைவேயன்றி, ஒரு புதிய கற்பனையோ, அல்லது கண்டுபிடிப்போ அல்ல. அந்த வெளிப்பாடானது எண்ணங்களையும் மற்றும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த உடல் என்ன செய்யும் அல்லது செய்ய இயலும் என்பதைப் பொருத்துள்ளது.

திருமதி கபிலா வாத்ஸ்யாயன், 'சித்திரங்களில் நடனம்' என்ற நூலில் இந்தக் கருத்தினையே மிக அழகாகக் கூறியுள்ளார். மனித வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் குகைவண்ண ஓவியங்களில் இருந்த நாட்டிய அசைவுகளைக் குறித்தும், மற்றும் நாட்டியக் கலை எங்ஙனம் வெளிப்பாட்டின் நடைமுறை வாயிலாக உருவாகியுள்ளது என்பதைப் பற்றியும், பண்டைய கால ஓவியம் முதல் நவீன கால ஓவியம் வரை அவர் நூலில் விவாதிக்கும்போது, இந்தக் கருத்தினையே வலியுறுத்தியுள்ளார்.

நவீன நாட்டியக் கலையில் எத்தகைய நவீனமும் இருப்பதாகப் புலப்படவில்லை. உண்மையில் அது ஓர் அடிப்படை நடனமாகும். 'உயிர் ஆதாரமான எந்த ஒரு நாட்டிய வடிவமும் நவீனமாகவே உருவாகியுள்ளது' என்று ஓர் ஆசிரியர் கூறுகின்றார். அந்தக் கலை, கால வளர்ச்சியின் தூண்டுதலினால் வளராமல் இருந்திருந்தாலும், அந்நாட்டிய வடிவம் ஊக்குவிக்கும் தன்மையுற்றதாகவும், எவ்வித நோக்கமற்றதாகவும் இறுதியில் நீட்சி கூறுபாடு அற்றதாகவும் இருந்திருக்கும். ஆதிகால மனித இனத்தின் புனிதமான சடங்குகளின் அடிப்படையில் அமைந்த நாட்டியம், நாட்டிய நாடகம் மற்றும் 'ராக்-இன்-ரோல்' நடனம் ஆகியவை ஒரே பொருளின் பல்வேறு நிலைகளின் வளர்ச்சித் தோற்றங்களாகும். அதாவது,

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இதுவே மார்த்தா கிராமின் நாட்டிய நுட்பத்தின் சித்தாந்தம் அல்லது நியமமாகும். இந்தக் கலையைப் பயிலும் மாணவ — மாணவிகளுக்கு முதற்கண் தரை உடற் பயிற்சி அளிக்கப்படுகிறது. தரையில் அமர்ந்தும் நின்று கொண்டும் பலவித உடற் பயிற்சிகளைச் செய்ய நேரிடுகிறது. பாலே நடனங்களில் கையாளப்படும் காற்று மண்டல அசைவுகளைத் தவிர்த்து, மற்ற ஐந்துவித நிலைகளும் கற்றுத் தரப்படுகின்றன.

இந்த நாட்டிய நுட்பங்களை அறிந்துகொள்ளும் சமயத்தில் தான், அவற்றை நான் கற்றிருக்கும் பரதக் கலையில் கையாள முடிந்தது.



பரதமும் மார்த்தா கிராம் நடனமும்

அவை உலகின் பல பகுதிகளில் நிலவிவரும் அடிப்படை நாட்டியத்தின் பல்வேறு நாட்டியப் பிரிவுகளாகும். எல்லாக் காலங்களுக்கும், கலாசார மரபுகளுக்கும் உகந்ததாகும். எனவே, நவீன நாட்டியம் என்பது பழமையான கலை வளர்ச்சியின் விரிவாக்கமாகும்.

இந்த நூற்றாண்டில் சிறந்து விளங்கும் நாட்டிய மேதைகளில் ஒருவரான மார்த்தா கிராம் 'உள்ளுணர்ச்சிகளின் உந்துதலால் நிகழும் விளைவே நாட்டியமாகும்' எனக் குறிப்பிடுகிறார். எனவே அந்த நாட்டிய மேதை, மனித உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் நாட்டிய வடிவில் உருவாக்கினார். கிரேக்க புராணங்கள், தத்துவ மேதை பிளேட்டோவின் ஆழமும் அழுத்தமும் மிக்க சித்தாந்தங்கள் ஆகியவை அவரை மிகவும் கவர்ந்தன. புராணம் அல்லது பழங்கதைக் கோவை பிரிதொரு கால கட்டத்தின் உளநூல் என்ற கருத்துக்கு உந்தப்பட்ட அம்மேதை, அந்தக் காலகட்டத்துக்கே சென்று ஆராய்ந்தார். இன்றைய மக்களின் மனப்போக்கிற்கும், நடத்தைக்கும் உரிய உண்மைக் காரணங்களை அறிவதற்குக் கிரேக்கப் புராண நூல்களும் பிளேட்டோவின் தத்துவங்களும் துணைபுரிந்ததோடு அவையே காரணமாகவும் இருந்தன.

அவருடைய நாட்டியத்தில் தேவையற்ற எந்தவித அசைவுகளும் இராது. மேலும் அந்நாட்டியம் மாசு மறுவற்றதாகும். மிக்க வலிமையுள்ளதாகும். தம் நம்பிக்கைக்கு உட்படாதவற்றை நாட்டிய வடிவில் கொண்டுவர அவர் சிறிதும் சம்மதிக்கவில்லை. உள் அவயவங்களில் துள்ளி எழும் உணர்ச்சிகளின் தூண்டுதலுக்கேற்ப இயற்கையாக நாட்டியமாடுவதையே அவர் விரும்பியதோடு பேருவகையும் எய்தினார். அதனையே தம் நவீன நாட்டிய இயக்கமாகக் கடைப்பிடிக்கலானார். நரம்புகள் மீதும் நரம்பமைப்பு மீதும் தம் அழுத்தமான நம்பிக்கையையும் கவனத்தையும் செலுத்தலானார். மனித உடம்பில், நரம்பியக்க மையத்திலிருந்து உணர்வுகளின் எழுச்சியால் எழும் சக்தி, அவரைப் பெரிதும் கவர்ந்தது. அவையே உடம்பினுள் நிகழும் சுருக்கங்கள் அல்லது குறுகல்கள் என்று உணரலானார். இந்தச் சுருக்கங்களையும் குறுகல்களையும் இயற்கையான சுவாசத்தின் மூலம் உணர்ந்து, அதற்கு நாட்டிய முறையில் வடிவம் அமைத்தார். அதாவது ஒரு நாட்டியக் கலைஞர் மூச்சுவிடும்போது அவரது உடல் சுருங்குகிறது. மூச்சு உள்ளிழுக்கும்போது, அவரது உடல் விரிவடைகிறது. அவருடைய எல்லா அசைவுகளும் இந்த அடிப்படையில்தான் அமைந்துள்ளன. சில சமயங்களில் நாட்டிய அசைவுகள் பின்பக்கத்தில் எழும் உணர்ச்சிகளின் உந்துதலால் விளைகின்றன.

சுவாச ஒழுங்கு முறை: இது ஓர் இன்றியமையாத நிலை அல்லது முறையாகும். சுவாசத்தின் மீது எத்தகைய கட்டுப்பாடற்ற அதிகாரம் அல்லது ஆட்சி இல்லையேல், எந்த நாட்டியக் கலைஞரும் நடனமாடுவதற்குத் தேவையான சக்தியும் வலிமையும் பெற இயலாது. பிராணாயாமத்தின் மகத்துவத்தை நாம் அறிந்துள்ளோம். யோகத்தின் முதுகெலும்பே பிராணாயாமமாகும். பரதநாட்டியக் கலையில் ஒரு கலைஞர் தம் இடுப்பைச் சுற்றி ஒரு துணியினால் இறுக்கமாகக் கட்டிக்கொள்ளும் வழக்கத்தை ஏன் கையாளுகிறார் என்று சற்றுச் சிந்திக்க வேண்டும். வயிற்றின் உள் உறுப்புக்களைக் கட்டுப்பாட்டு நிலையில் வைத்து, இருதயத்திலிருந்து மூக்கின் வாயிலாக மூச்சை ஒழுங்குபடுத்துவதற்காகவே இந்த வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த உண்மை நிலையை அறிந்துகொண்டால் எந்த நாட்டியக் கலைஞருக்கும் மேல்மூச்சு வாங்கவும் எளிதில் களைப்படையவும் சாத்தியமிராது. இதுவே உடம்பில் நிகழும் சுருக்கங்களுக்குக் காரணமாகும். சுருக்கங்கள் அல்லது குறுகல்கள் ஆகியவற்றின் சுவாபத் தன்மையை அறிந்துகொண்டு நாம் கையாளாவிட்டாலும், அதுவே நம் சுவாசிப்பு ஒழுங்கு முறையின் ஒரு பகுதியாக விளங்குகின்றது.

பின் உடம்பின் உபயோகம்: —பரத நாட்டிய அடவுகளில் நாம் பின்னுடம்பைப் பயன்படுத்த நேரிடுகிறது. நாம் நிமிர்ந்து நிற்குங்கால் நம் உடம்பின் பின்பகுதியில் எவ்விதக் கூன் அல்லது குனிவு இல்லாத நிலை ஏற்பட்டு, ஓர் உண்மையான நிமிர்ந்த தோற்றத்தை உருவாக்க இது சாத்தியமாகிறது.

அசைவுகளின் நிறுத்தி வைப்பு: நாட்டியக் கலையில் இது ஒரு முக்கியமான கோட்பாடாகும். உதாரணமாக 'உட்புத' அடவில், காற்று மண்டலத்தில் அல்லது அந்தரத்தில் ஒரு நொடிப்பொழுது நிற்க நேரிடும். எந்தவிதத் தோற்றத்தையோ அல்லது நிலையையோ நடனத்தில் உருவாக்கினால் ஒரு கலைஞர் அசைவின் நிறுத்தத்தைக் காண முடியும். இந்தத் தோற்றம் அல்லது காட்சியானது பார்வைக்குப் பழக்கம் இல்லாத ஒருவித மாயையை அல்லது மருட்சியைத் தோற்றுவிக்கிறது. இதுவே நம்மை நாட்டியத்தின் எழிலுக்கு அழைத்துச் செல்கிறது.

எழில் அல்லது பாங்கு என்பது இடைவிடாத அசையா நிலையைக் குறிப்பிடுவதல்ல. அதனை, ஒரு கண நேர அசையா நிலைத் தோற்றத்துடன் தொடரும் அசைவுகளின் இயற்கையான ஓட்டம் என்று வருணிக்கலாம். இந்த அநுபவ நிலை நீண்ட வருடப் பழக்

கத்துக்குப் பிறகே அமையப் பெறும். இதனைக் கரடு முரடான ஓரங்களைச் சரிசமன் அல்லது சீராக்கும் செயலுக்கு ஒப்பிடலாம்.

இந்தத் தருணத்தில் இசை மேதை அரியக்குடி ராமானுஜ ஐயங்காரின் சங்கீதத்தை நினைக்கத் தோன்றுகிறது. அம்மேதையின் அனைத்து இசைக் கச்சேரிகளைக் கேட்டபோது, நாம் எல்லையிலா இன்பத்தையும் மன நிறைவையும் பெற முடிந்தது. மன உளைச்சலால் விளையும் சோர்வை அவருடைய சங்கீதம் அகற்றுவதோடு, மாபெரும் மன நிம்மதியையும் அளிக்கவல்லது. அவர் கையாண்ட வார்த்தை காலப் பிரமாணப் பாங்கினை அவருடைய கச்சேரிகளில் உணர முடிகிறது. பிரமாணம் என்பது உண்மை. காலப் பிரமாணத்தை ஓர் அளக்கும் கருவி என்று கொள்ளலாம்.

பிறகு நாம் கலையின் ஐக்கியம் அல்லது உண்மையான ஈடுபாட்டுக்கு வருகிறோம். உண்மையான ஈடுபாடு அல்லது உழைப்பு இல்லையேல் நாம் உள்ளபடியாக நாட்டியமாட முடியாது. மேலும் அங்க அசைவுகள் மற்றும் முகபாவங்களின் மூலம் நாம் எத்தகைய எண்ணங்களை அல்லது உணர்ச்சிகளை வெளிப்படுத்த எண்ணியுள்ளோம் என்பதைத் தெளிவாக்குவது கடினம். நிருத்யத்திலும் அபிநயத்திலும் இத்தகைய உண்மையான ஈடுபாடும் ஊக்கமும் அவசியம் இருத்தம் வேண்டும்.

உண்மையான ஈடுபாடு என்று குறிப்பிடும்போது, அசைவுகளின் உண்மை நிலையை உணர்த்துவதிலேயே தான் அடங்கியுள்ளது. ஒரு நடனக் கலைஞர் கால், கை ஆகியவற்றினால் தெரிவிக்கும் ஒவ்வோர் அசைவைக் குறித்தும் அவர் கவனமாகவும் விழிப்புடனும் இருத்தல் வேண்டும். இறுதியில் அந்தக் கலைஞர் அசைவுகளின் அப்பாற்பட்ட நிலைக்கு உயர்வடைவதுடன் அழகான ரசங்களை உருவாக்கும் ஒப்பற்ற பணியில் ஈடுபடுகிறார்.

மேடை தந்திரக் கலையையும் ஒரு நாட்டியக் கலைஞர் நன்கு அறிந்திருக்க வேண்டும். நாட்டிய நிகழ்ச்சியில் பிரதம பாத்திரமான நடனக் கலைஞரின் மீது நம் கவனம் அல்லது பார்வை அவசியம் இருக்க வேண்டும். அபரிதமான மேடை அலங்கரிப்பு, பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகள், மற்றும் ஏனைய கண் கவர் சீன்கள் ஆகியவை நடனக் கலைஞரின் மீதுள்ள பார்வையையும் கவனத்தையும் குறைக்க நேரிடலாம்.

ஒவ்வொரு நாட்டிய நிகழ்ச்சியும் அழகும் சமனும் ஒருங்கிணைந்த அற்புதக் காட்சியைத் தோற்றுவிப்பதாக அமையப் பெற வேண்டும். மேலும் ஒரு நாட்டியக் கலைஞர் சுற்றுப்புறச் சூழ்நிலைமையுக்குக் கட்டுப்படாமல், நாட்டியத்தை மட்டும் கட்டுப்படுத்தி நடனமாடுவதிலேதான் அவருடைய முழுத்திறமை பொதிந்துள்ளது.

—

அறிஞர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்: ''துன்பம் அல்லது வன்முறை ஏற்படும் சமயங்களில் இயல்பாகக் கலைகளின்பால் எதிர்த்தாக்கம் ஏற்படுகிறது. மரபுவழியின் தூய்மையும், ஒருங்கிணைந்த இசை, நடனக் கலவையும் கண்களுக்குப் புலப்படும் தோற்றம், ஆடை அணிகலன்கள், காட்சி ஜோடனைகள் ஆகிய அனைத்தும் மிகுந்த ஒற்றுமையும் மன நிறைவினையும் அளித்து, தற்கால கடும் வாழ்க்கையின் உண்மை துயரத்தைத் துடைக்கவல்லது.''

வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், நாட்டியம் என்பது ஆனந்தம், மகிழ்ச்சி, நிர்மலமான சூழ்நிலை, அமைதி, கவர்ச்சி ஆகியவற்றின் மையமாகும்.

❋

மதுரை,

லதா ஜுவல்லர்ஸ்

வழங்கும் மாபெரும்

தீபாவளிப் பரிசு!

எங்களிடம் மூன்று வருடங்களுக்கு ரூ 2000-(ரூபாய் இரண்டாயிரம்) டெபாசிட் செய்பவர்களுக்குப் பின்வரும் சலுகைகளும் பரிசுகளும் வழங்கப் பெறுகிறது!

❋ ரூ 2000 - டெபாசிட் கட்டிய உடனேயே அன்பளிப்பாக 125 கிராம் எடை வெள்ளிக் குத்துவிளக்கு 1ம், வட்டிக்காக ரூ 500-க்கு GIFT CHEQUE-ம் தரப்படும்.

❋ ரூ 2000 - டெபாசிட் செலுத்திய ஒவ்வொருவருக்கும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒரு கூப்பன் தரப்படும். கூப்பனில் தேர்வு பெறுபவர் ரூ 5001 பெறுமான பரிசுப் பொருள்கள் பெற வாய்ப்பு உண்டு. திட்ட காலத்தில் மொத்தம் 12 முறை இம்மாதிரி வெற்றி வாய்ப்பு உண்டு. முதல் போட்டியில் தீபாவளிக்காக ரூ 10,001 பெறுமான பரிசுகள் வழங்கப்படும்.

❋ டெபாசிட் செய்யும் ரூ 2000-ம் மூன்று வருடங்கள் முடிந்தவுடன் ACCOUNT PAYEE செக் அல்லது டிராப்ட் ஆகப் பெற்றுக் கொள்ளலாம்.

❋ ஒரு நபரே ரூ 2000 - வீதம் பல டெபாசிட்டுகள் செலுத்தலாம்; அவைகளுக்குரிய பரிசுப் பொருட்கள் மற்றும் பலன்களும் அடைய உரிமையுண்டு.

இத்திட்டம் 10-9-84 முதல் 10-11-84 முடிய மட்டும் நீடிக்கப்பட்டுள்ளது!

அரிய சந்தர்ப்பம்! இன்றே விரைவீர்!!

ரூ 2000 - டெபாசிட் செய்து பயன் அடைய அழைக்கிறோம்!

மேலும் விபரங்களுக்கு அணுகுங்கள்:

லதா ஜுவல்லர்ஸ்

M. V. பாஸ்கர நாடார்

வைர நகைகள் & தங்க நகைகள் வியாபாரம்,

104, தெற்காவணி மூல வீதி,

மதுரை-625001.

தொலைபேசி: 31386

சென்டெக்ஸ்

தயாரிப்பாளர்கள் அண்ட் ஏற்றுமதியாளர்கள்

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள்,
அலங்காரத் துணிகள், டவல்கள், டெர்ரி டவல்கள், மற்றும்
திரைச் சேலைகள், சீர்சர்க்கர் முதலியன

எங்கள் பிரத்யேக ஷோ ரூம்கள் :

உம்மிடியார் அங்காடி மையம்,
எல்.ஐ.சி. எதிரில்,
811, அண்ணா சாலை,
சென்னை-2.

நீலகிரிஸ் டெக்ஸ்டைல்ஸ்
நீலகிரிஸ் பில்டிங்ஸ்,
11, பிரிகேட் ரோடு,
பெங்களூர்.

சென்டெக்ஸ் ஷோ ரூம்
ராஜாராம் மோகன்ராய் ரோடு, எம்.ஜி.சி.
மார்க்கெட் எதிரில்,
சிராளா (ஆந்திரப் பிரதேசம்)

சென்டெக்ஸ் ஷோ ரூம்
13, மேல சித்திரை வீதி,
மதுரை.

சென்னிமலை நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை, தமிழ்நாடு

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ.,பி.எல்.
தலைவர்

திருச்சிமாநகரில்
பெண் மக்களின் பெரு நம்பிக்கையையும்,
ஆடவர்களின் ஆதரவையும் ஒருங்கே பெற்ற
பொன்விழாக் கண்ட
மலைவாசல் பாத்திரக்கடை

A. P. அருணாசலம் செட்டியார் சன்ஸ்

செம்பு, பித்தளை, ஈயம், எவர்சில்வர் பாத்திரங்களைப்
பொறுக்கிக் குவித்திருக்கும் ஓர் ஸ்தாபனம்

தன் பணியில் ஐம்பத்தோர் ஆண்டுகள் முடித்து ஐம்பத்திரண்டாவது ஆண்டில்
பீடுநடை போடுகிறது. தொடர்ந்து உங்களது ஆதரவு கோருகிறோம்.

P. B. No. 347
Phone: 24088

A. P. Arunachalam Chettiar Sons

MALAIVASAL PATHIRAKADAI, TIRUCHIRAPALLI-620 002.

A. P. அருணாஜலம் செட்டியார் சன்ஸ்

மலைவாசல் பாத்திரக்கடை. திருச்சிராப்பள்ளி-620 002.

பச்சைக்கிளியின் சபதம்

விக்ரமன்

அம்மன் கோயில் பூசாரி கர்ப்பூர ஆரத்தி காட்டி ஒரு கையால் மணியோசையை எழுப்பிக் கொண்டிருந்தார்.

அந்த நெடுஞ்சாலையில் சுற்றுப்புறத்தில் வீடுகளே இல்லாத காட்டுப் பகுதியில் அந்தச் சின்னஞ்சிறு அம்மன் கோயில் காட்சியளித்தது. கோயில் மிகச் சிறியது. கருவறை, முன்னே ஒரு கீற்றுக் கொட்டகை. சிறிய சூலம். ஓர் உண்டிப் பெட்டி. பச்சைக்கிளி அம்மன் திருக்கோயில் என்று கோணல் மாணலான எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. சாலையில் செல்லும் லாரிகள் அந்தக் கோயில் எதிரே நின்றன. காரோட்டிகள் உண்டியலில் சில்லறை போட்டு, 'துன்னூறு குங்குமம்' வாங்கிப் பூசிக் கொண்டு பக்தியுடன் சென்றனர்.

எங்கள் கார் அங்கே நிற்கவில்லை. நண்பர் ஜனநாதனும் அந்தப் பகுதி ஒரு காலத்தில் சிறந்த நகராக இருந்ததைப் பற்றியும், கால வெள்ளத்தில் பாழடைந்து விட்டது பற்றியும் சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

பழம் பெருமைகளைப் பற்றிப் பேசியவாறு செல்ல ஆரம்பித்ததால் எங்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. பச்சைக்கிளி அம்மன் கோயிலைத் தாண்டியவுடன் டமார் என்ற சப்தம் கேட்டது. கார் டயர் ஒன்று பஞ்சர்! கார்ரோட்டி காரை மூன்று தரம் வலம் வந்து உதட்டைப் பிதுக்கினார்; கையைப் பிசைந்தார். என்ன செய்வது? அருகே உள்ள ஒரே சரணாலயம், அம்மன் கோயில்தான்.

''என்னங்க! கார் நின்னு போச்சா?'' என்று தெரிந்த விஷயத்தைத் தெரியாதது போல் கேட்டார் பூசாரி.

''அப்படித் தாங்க. அம்மன் துன்னூறு வாங்கிக்காம, கோயில் எதிரே நிற்காமப் போனா அம்மன் நிக்கவச்சிடுவாங்க'' என்று சொன்னார். பிறகு மாற்று டயரைப் பெறப் பதினைந்து கி. மீ. தொலைவில் உள்ள ஊர் பெயரைச் சொல்லி, அங்கே வந்து நின்ற லாரியிலும் ஏற்றி விட்டார்.

அம்மன் கோயில் முன் கொட்டகையில் சம்மணம் கட்டிப் பிரார்த்தனை செய்யும் பக்தர்கள் பிரசாதத்துக்கு எதிர்பார்த்திருப்பது போல் உட்கார்ந்து கொண்டோம். அவ்வப்போது கர்ப்பூர ஒளியில் தேவியின் எழிற் கோலம் மெய் சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்தது.

''கோயிலைப் பார்த்தால் பழமையாக இல்லை; ஆனால் அம்மன் சிலை ஆயிரம் வருடத்தியதாயிருக்கலாம்'' என்று என் கருத்தை நண்பரிடம் தெரிவித்தேன்.

பூசாரியும் எங்கள் அருகே வந்து உட்கார்ந்து கொண்டார்.

''அம்பாள் ரொம்ப சக்தி வாஞ்சவங்க. வரப்பிரசாதிங்க'' என்று ஆரம்பித்தார் பூசாரி.

அந்தக் கோயில் சோழ ராஜாக்கள் காலத்திலிருந்து இருப்பதையும், அந்தக் கோயில் இருக்குமிடம் ஊரின் எல்லை என்றும் பூசாரி வரலாறு கூறத் தொடங்கினார்.

சோழ ராஜா என்றால் எந்தச் சோழ ராஜா என்றும், ஊர் என்றால் ஊரின் பெயர் என்னவென்றும் கேட்க வேண்டும் என்றும் எனக்குத் துறுதுறுத்தது. கதை சொல்லும் போது நடுவே தடை செய்ய வேண்டாம் என்று ஆவலை அடக்கிக் கொண்டேன்.

* * *

அந்தக் கிராமத்தில் பொழுது இன்னும் புலரவில்லை. கீழ்வானத்தில் விடிவெள்ளி முளைக்கவில்லை. இளங் குளிர்க் காற்று இதமாக வீசி, உறங்கும் மக்களின் போர்வையை மேலும் இழுத்து மூடச் செய்தது.

அந்த நேரத்தில் பச்சைக்கிளி எழுந்து விடுவாள். தன் மீது தவழ்ந்து அணைத்திருக்கும் அன்புக் கணவன் இளங் கண்ணனின் கரங்களை மெல்ல விலக்கிவிட்டு, பாதத்தைத் தொட்டு வணங்கி, அவன் முகத்தருகே குனிந்து இதழ் முத்திரையை அளித்துவிட்டு எழுந்து விடுவாள். அதற்குப் பிறகு நாள் முழுவதும் அவளுக்கு ஓயாத வேலை. வீட்டுவாயிலில் சாணம் தெளித்து விட்டு மாட்டுக்குத் தீவனம் போட்டுவிட்டுப் புறப்பட்டுவிடுவாள்.

அவள் பணி அதற்குப் பிறகு உதயன் வீட்டில்தான்.

அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் உதயன் செல்வாக்கு மிகுந்தவர். அவரும் அவர் மனைவியும் நடத்தும் ஒற்றுமையான வாழ்க்கையைக் கண்டு ஊர் உலகமே அதிசயப்படும். பிறருக்கு உதவுவதில் முன் நிற்பார். பிறர் பசி பொறுக்க மாட்டார். அந்தக் குடும்பத்தோடு குடும்பமாக இருந்து அந்த வீட்டின் எல்லாக் குற்றேவல்களையும் செய்து வந்தாள் பச்சைக்கிளி.

காலையில் அவள் அந்த வீட்டில் பணியைத் தொடங்க நுழையும் போது, அந்த வீட்டுத் தலைவி குழல்மொழியும் அவரும் உறங்கிக் கொண்டிருப்பார்கள். தாளிடப்படாத கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் பச்சைக்கிளி, அந்தத் தம்பதியரின் இணைபிரியா அன்பை, பாசத்தை எண்ணி வியப்படைவாள். குழந்தைச் செல்வம் இல்லாத குறையை அவர்கள், தாங்கள் ஒருவரோடு ஒருவர் அழுத்தமான அன்பைப் பொழிந்து கொள்வதன் மூலம் நிறைவேற்றிக் கொள்வார்கள்.

அவள் விஷயத்திலும் அப்படித் தானே! திருமணமாகிப் பத்து வருடங்கள் மறைந்து விட்டன. இளங் கண்ணனுக்குக் குழந்தை இல்லாத குறை தெரியவில்லை. ஆனால் பச்சைக் கிளிக்கு ஏக்கம் ஏற்படும்?

''உனக்கு நான் குழந்தை; எனக்கு நீ குழந்தை. இருவரும் ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்வோம். பாசத்தைப் பொழிந்து கொள்வோம். அன்புக் கயிற்றால் கட்டுண்டு என்றும் இப்படியே வாழ்வோம்'' என்று கண்ணன் அவளைத் தேற்றுவான். பச்சைக் கிளியின் கண்கள், உணர்ச்சி மிகுதியால் பளபளக்கும். அதில் மழைக்காலத் தடாகம் போல் நீர் ததும்பி நிற்கும்.

''நிச்சயமாகவா கண்ணு?'' என்று அவன் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கேட்பாள். அவன் அவள் கூந்தலை வருடி, ''இதில் என்ன சந்தேகம், என் செல்லக்கிளியே! என்றும் இப்படியே நாம் வாழ்வதைத் தடுக்க யாரால் முடியும்?'' என்று கண்ணன் கேட்பான்.

''இருவரால் முடியும்?''

''யார் அவர்கள்?''

''காவலன்; காலன், இவர்கள் இருவரும்.''

''காவலன்! யாரைச் சொல்கிறாய், நமது ராஜேந்திர சோழ சக்கரவர்த்தியையா? அவர் ஏன் நம் வாழ்வில் குறுக்கிடுகிறார்? நாட்டு மக்கள் சௌக்கியமாக வாழ வழி செய்வது ஒன்றையே தம் நோக்கமாகக் கொண்டிருக்கிறார். அவர் எப்படி நமது இன்ப வாழ்க்கையைக் கெடுப்பார்?''

''போர் ஒன்று வரப்போகிறதாம்!''

''வரட்டுமே!''

''ஊருக்கு ஊர், வீட்டுக்கு ஓர் ஆள் படை திரட்டப் போகிறார்களாம்.''

''திரட்டட்டும், போருக்குப் பயப்படலாமா?''

இப்போது பச்சைக்கிளி உடல் குலுங்க விம்மி அழுதாள். விம்மலுக்கிடையே, ''அத்தான், போர்க்களத்துக்கு வீரத்திலகமிட்டு அனுப்புவது தமிழ்ப் பெண்களின் கடமை. ஆனால், அந்தப் போர்க் களத்தில் ஒரு வேளை..'' என்று கூறி, ஓவென்று அழுதாள்.

இப்போது கண்ணன் ஏதும் பேசவில்லை. அவளை மேலும் சமாதானப் படுத்த எண்ணி, ''பச்சைக் கிளி, வீணாகப் பயப்படாதே! ஒரு நாளும் உன்னைப் பிரியும்படி நேரிடாது'' என்றான்.

பச்சைக் கிளி திடீரென்று எழுந்து உட்கார்ந்து, ''வீணாகப் பயப்படவில்லை. சாவுக்கு நான் அஞ்ச மாட்டேன். நாட்டுக்காக உயிர் விடுவது மகத்தான பெருமை. எனக்கு அந்தக் கவலையும் இல்லை. என் கவலை, பயம் எல்லாம் பிரிவுத் துயர்தான். அந்தப் பிரிவாற்றாமையையும் வெல்ல ஒரு வழி கண்டிருக்கிறேன்'' என்றபோது கண்ணன் அது என்ன வழி என்று ஆவலுடன் கேட்டான்.

''நெருப்பு என்றால் வாய் வெந்து விடாது. அதனால் நன்றாகப் பேசுவோம். எனக்கு எப்படியும் புகழ் ஏற்படப் போகிறது. போரில் வென்றால் வீரமானியம். இல்லாவிடில் வீர மரணம். நடுகல் நட்டுக் காலமெலாம் என்னைப் போற்றுவார்கள். அரசு மானியத்திலிருந்து நீ வாழ் நாளெல்லாம் பசியின்றி வாழலாம்.''

பச்சைக் கிளி பத்திரகாளியானாள். ''என்ன சொன்னாய்? நீ இறந்த பிறகும் நான் இந்தச் சாண் வயிற்றுக்காக உயிர் வாழ வேண்டுமா? முடியாது, முடியாது. நீ இறந்த அந்தக் கணமே நான் உயிரை விட்டு விடுவேன். இது சத்தியம்.''

இளங்கண்ணன் உடல் சிலிர்த்தது. ''பச்சைக் கிளி, பச்சைக் கிளி இது என்ன அசட்டுச் சபதம்?'' என்று கூறினான்.

''அசட்டுச் சபதம் இல்லை; புத்தி பூர்வமான சபதம். உங்களுடன் ஒரே சிதையில் நான் உயிர் நீத்து விடுவேன். என் முதலாளியம்மாவால் முடியுமென்றால் என்னால் மட்டும் முடியாதா?'' என்று பச்சைக் கிளி குரலில் அமைதியை வரவழைத்துக் கொண்டு பேசினாள்.

''குழல் மொழியும், உடன் சிதை ஏறுவதாக முடிவு செய்திருக்கிறாளா?'' என்று கண்ணன் கேட்க, பச்சைக் கிளி அதைப் பற்றி விவரித்தாள்.

ஒரு நாள் விடிகாலையில் வழக்கம் போல், பச்சைக் கிளி வீட்டு வேலைகளைச் செய்ய குழல்மொழியின் வீட்டுக்குச் சென்ற போது, அந்த நேரத்தில் அறைக்குள் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

குழல்மொழியும் அவள் கணவரும் இணை பிரியாத தம்பதிகள் என்பதை ஊர் உலகம் அறியும். என்றும் இல்லாதபடி அவர்கள் இன்று மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர். வீடு மனை, ஆஸ்திகளைப் பற்றிப் பேச்சு வந்தது. குழல்மொழி உறுதியுடன் பேசுவதும் காதில் விழுந்தது.

''இதோ பாருங்க! நான் எப்போதும் சொல்வது போல் இன்றும் வற்புறுத்திச் சொல்கிறேன். என் பிரார்த்தனை எல்லாம் சுமங்கலியா இந்த உலகை விட்டுச் செல்ல வேண்டும் என்பதுதான்.''

''குழலி, இதென்ன நியாயம்? நீ போய் நான் இந்த உலகில் திண்டாடுவதா? முடியவே முடியாது'' என்றார் அவள் கணவர்.

''அதற்கு நான் என்ன செய்வது? மனைவியுடன் கணவன் உடன் கட்டை ஏறினான் என்று எங்காவது கேள்விப் பட்டதுண்டா? மனைவி உடன்கட்டை ஏறுவதுதான் முறை'' என்றாள் குழலி.

''சோழ நாட்டில் அந்த வழக்கம் இப்போது இல்லை; அரசரும் அனுமதிப்பதில்லை என்பது உனக்குத் தெரியாதா?''

''வழக்கமும், சட்டமும் இருக்கட்டும். என் எண்ணம், முடிவு அது. நான் மாற்றிக் கொள்ள மாட்டேன். என்னை யாராலும் மாற்ற முடியாது.''

குழல் மொழியின் இந்த முடிவைக் கேட்டதிலிருந்து பச்சைக்கிளியின் மனத்துள் துளிர் விட்டுக் கொண்டிருந்த உறுதி விசுவரூபம் எடுத்தது. தன் சபதத்திலிருந்து என்றுமே மாறுவதில்லை என்று மீண்டும் சபதம் செய்தாள்,

இராசேந்திர சோழனின் படை வீரர்கள் போரில்லாத நாட்களில் தங்கள் தங்கள் ஊர்களில் பயிர்த் தொழிலும் நெசவுத் தொழிலும் செய்து கொண்டிருந்தனர்.

கங்கை கொண்ட சோழபுரம் புதிதாக உருப் பெற்றது: கோட்டைக்கு வெளியே புதிய வீடுகளும், தெருக்களும், மாடிகளும், சேரிகளும் உருப் பெற்றன. கங்காபுரியின் அழகைப் பார்க்கச் சுற்றிலுமுள்ள ஊர்களிலிருந்து மக்கள் வந்து சென்று கொண்டிருந்தனர்.

''நாமும் ஒரு நாள் கங்காபுரிக்குப் போக வேண்டும்'' என்று பச்சைக் கிளி தன் கணவனைக் கேட்டாள்.

''உம்; இன்னும் இரண்டு நாட்களில் போக நேரலாம்'' என்றான் கண்ணன்.

''அரண்மனையிலிருந்து அழைப்பா?'' பச்சைக்கிளி கேட்டாள். திடீரென்று படை திரட்டும் உத்தரவு கிடைத்து, கண்ணன் போருக்குப் புறப்பட்டு விடுவானோ என்ற கவலை அவளுக்கு.

''நமது படைத் தலைவர் இராசராச பிரும்ம மாராசரைச் சந்திக்குமாறு செய்தி வந்திருக்கிறது. மாட்டு வண்டியை ஒழுங்குப்படுத்தச் சொல்லியிருக்கிறேன்'' என்றான் கண்ணன்.

''அம்மா, நாங்க கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறோம். இரண்டு நாட்களில் திரும்பி வந்து விடுவோம்'' என்று குழல்மொழியிடம் சொல்லச் சென்றாள், பச்சைக்கிளி.

''ஓ! உன் கணவருக்கும் அழைப்பு வந்திருக்கிறதா? நமது மன்னருக்குக் கவலை தரும் ஒரு செய்தி வேங்கியிலிருந்து வந்திருக்கிறது. நமது இராசேந்திர சோழ மகராசன் தன் அருமை மகள் அம்மங்கைக்காக வேங்கை நாட்டு அரசியலில் பல முறை தலையிட்டது உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''எனக்கு அதெல்லாம் தெரியாதுங்க. நமது மன்னரின் மகள் வேங்கை நாட்டு அரசி என்பது மட்டும் தெரியும்'' என்று தன் அறியாமையைத் தெரிவிப்பதில் பச்சைக்கிளி வெட்கப்படவில்லை.

''அம்மங்கையும், அவருடைய கணவர் வேங்கை அரசர் இராசராச நரேந்திரனும் கங்காபுரிக்கு வந்து ஒரு மாதமாகிறது. வேங்கை நாட்டு அரியணையை விசயாதித்தன் கவர்ந்து விட்டான். மருமகனுக்கு அரசப் பதவி பறிபோய் விட்டதென்றால் நமது மன்னர் பார்த்துக் கொண்டு மௌனமாக இருப்பாரா? தம் மருமகனை மீண்டும் சிங்காசனத்தில் உட்கார வைத்துப் பார்க்காமல் விடுவாரா?''

இளங் கண்ணன் எதிர்பார்த்தது போல் வேங்கை நாட்டை மீட்டுத் தம் மருமகன் இராசராச நரேந்திரனுக்கு அளிக்க, பெரும் படை திரட்ட இராசராசன் உத்தரவிட்டார். ஒவ்வொரு குறுநில மன்னருக்கும், ஒவ்வொரு சிற்றூரி

விருக்கும் முக்கியஸ்தர்களுக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது.

புதிய நகரமான கங்காபுரியைத் தன் மனைவி பச்சைக்கிளிக்குச் சுற்றிக் காட்ட அழைத்துச் சென்ற சின்னக் கண்ணன், படைத் தலைவர் இராச ராச பிரம்மாராயரிடமிருந்து போருக்குப் புறப்பட உத்தரவு பெற்ருன்.

பச்சைக்கிளி மனம் கலங்கினுலும் போர்க்களத்தே வெற்றியுடன் திரும்பிவர, தன் கணவருக்கு வீரத் திலகமிட்டு வழியனுப்பினுள். புறப் படும் முன்பு, பச்சைக்கிளியைத் தழுவி அவளது செழுமையான கன்னங்களில் முத்தமிட்ட இளங் கண்ணன், ''பச்சைக்கிளி, விரைவில் வெற்றியுடன் திரும்பி வருவேன். திரும்பியவுடன் கங்காபுரிக்கே நாம் புதிய வீடு கட்டிக் கொண்டு குடி யேறுகிருேம்'' என்ருன்.

விழிகளில் நிறைந்த நீர்த்துளிகளை மெல்லத் துடைத்துக் கொண்ட பச்சைக்கிளி, ''என்னையும் போர்க் களத்துக்கு அழைத்துச் செல்ல சேனாதிபதியிடம் உத்தரவு பெறக் கூடாதா?'' என்று கேட்டாள்.

''எதற்கு?'' என்று மெல்ல அவளை அணைத்தவாறு கேட்டான் கண்ணன்.

''உங்கள் வீர தீர சாகசங்களை நேரில் கண்டு மகிழ. அதே சமயம், யுத்த பூமியில் தங்களுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் அங்கேயே உங்களுடன் வீரசுவர்க்கம் அடைய'' என்ற பச்சைக்கிளியின் கன்னத்தை மெதுவாகத் தட்டி, ''பேதைப் பெண்ணே! என்ன வார்த்தை இது? வெற்றியுடன் வந்தாலும் உனக்கு இங்கே மிகப் பெருமை; ஒருவேளை வீர மரணம் அடைந்தாலும் இரட்டிப்புப் பெருமை. உனக்குப் போர் வீரன் மனைவி என்ற சிறப்பு; அரச மரியாதையும் பரிசுகளும் கிடைக்கும்'' என்றான்.

''உங்களைப் பிரிந்த பிறகு விருதுகளும் பரிசுகளும் எனக்கு எதற்கு? தங்களுடன் அமர உலகம் அடைந்து மகிழ்வுடன் வாழ்வதைவிட வேறு புகழ், பரிசு, வெகுமதியா? கனவில் கூட நினைக்க மாட்டேன். என் சபதத்தை நானே மறக்கலாமா?'' என்றாள்.

''போருக்குப் புறப்படும்போது அந்தப் பேச்செல்லாம் எதற்கு? முழுமன நிறைவுடன் விடை கொடு'' என்று கூறி இளங்கண்ணன் வாளேந்திப் புறப்பட்டான்.

குழல்மொழியின் கணவன் உதயனும் புறப்பட்டான்.

வேங்கிக்கு அருகிலுள்ள கரிதித்தி என்ற இடத்தில் சோழப் படைகளுக்கும் வேங்கை நாட்டைக் கவர்ந்திருந்த விசயாதித்தன் படைகளுக்கும் கடும்போர் நடைபெற்றது. மீண்டும் இராசராச நரேந்திரன் இழந்த அரியணையை மீட்டு அமர்ந்தான். ஆனால், அவனை மீண்டும் அரச பீடத்தில் அமரச் செய்யக் கடும்போர் புரிந்த படைத் தலைவர் இராசராச பிரம மாராயரும், மற்றும் முன்னணிப் படை வீரர்களும் போர்க் களத்தே வீர மரணம் எய்தினர்.

கங்காபுரிக்கு வெற்றி வாகை சூடி வந்த வீரர்களை வரவேற்கப் பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

குழல்மொழியின் கணவர் உதயன் வெற்றியுடன் திரும்பினார். ஆனால் போர்க்களத்தே ஏற்பட்ட பலத்த அதிர்ச்சி அவரைப் படுத்த படுக்கையாக்கி விட்டது. சின்னக்கண்ணன் திரும்பி வரக் காணவில்லை.

''என் கணவர் எங்கே? அவருக்கு என்ன நேர்ந்தது?'' என்று பச்சைக்கிளி கதறி அழுதாள்.

''வருத்தப்படாதே பச்சைக்கிளி. உன் கணவர் என்ன ஆனார் என்பதை அரசு அதிகாரிகள் விசாரிப்பதற்காக வேங்கி சென்றுள்ளார்கள். நல்ல செய்தி விரைவில் வரும் வரையில் என் வீட்டில் என்னுடனேயே இரு. என்னுடைய அவல நிலையைப் பார்த்தாவது மனத்தைத் தேற்றிக் கொள். வெற்றியுடன் என் கணவர் திரும்பி வந்தும் என்ன பயன்? தம் நினைவில்லாமல் படுத்துக் கிடக்கிறார்'' என்று கூறி, குழல்மொழி பச்சைக்கிளியைத் தேற்றினாள். ஆனால் இரண்டு நாட்களில் உதயன் இறந்து விட்டார். தன் முடிவுப்படி குழல்மொழி கணவரது சிதையில் பாய்ந்து உயிர் நீத்தாள்.

பச்சைக்கிளிக்குப் பெரும் அதிர்ச்சி. தன் அன்புக் கணவரைப் பற்றிச் செய்தி தெரியாத நிலை; உயிர்போல் நேசித்த குழல்மொழி உடன்கட்டை ஏறி உயிர் நீத்தது இரண்டும் சேர்ந்து அவளைப் பித்துப் பிடித்தவள் போலாக்கி விட்டன.

''குழல் மொழி அமர லோகம் சென்று விட்டாள். நான் இந்த உலகத்தில் இருந்தும் ஒன்றுதான், இல்லாது இருந்தும் ஒன்றுதான்'' என்று வாய்விட்டுப் புலம்பினாள்.

கடைசியில் அந்தச் செய்தி கங்காபுரியை வந்தடைந்தது. வேங்கி போரில் காணாமல் போன சில வீரர்களில் இளங் கண்ணனும் ஒருவன். பகைவர்கள் அவர்களைச் சிறைப் பிடித்துச் சென்று நடுக்காட்டில் கொன்று உடலை அங்கேயே விட்டுச் சென்று விட்டனர்.

''அடுத்த மாசம் ஆறும் தேதிலேருந்து, நீங்க என்னைத் 'தண்டச் சோறு'ன்னு திட்ட முடியாது, அப்பா!''

''ஏண்டா, வேலை கீலை கெடச்சுடுத்தாடா?''

''இல்லை. அன்னிலிருந்து ஐயா மாமனார் வீட்டோட தங்கப் போறார்!''

''ஐயோ! என் அன்பே! நாடு விட்டு நாடு சென்று, அநாதையாக இறந்து விட்டீர்களே? பாவிகள் உங்களைச் சித்திரவதை செய்தபோது எப்படித் துடிதுடித்தீர்களோ? உங்கள் உடலைப் புதைத்து அங்கே உங்களுக்கு நினைவுக் கோயில் எழுப்பியுள்ளார்களாம். கடைசியாக உங்கள் உயிரற்ற உடலைக் கூடப் பார்க்க முடியவில்லையே? நான் உயிர்ச் சமாதியாக உலவுகிறேன்'' என்று ஓலமிட்டாள்.

அவளைத் தேற்றி மன அமைதிப்படுத்த இரு பணிப் பெண்களை அரச மாளிகையிலிருந்து அனுப்பியிருந்தார்கள். அவர்களால் பச்சைக்கிளியைச் சமாதானப்படுத்தமுடியவில்லை. இரவு பகல் என்று பாராமல் காடு மேடெல்லாம் சுற்றி வந்தாள். ''என் கணவரிடம் செல்ல வேண்டும்; வழி சொல்லுங்கள். என்னை அங்கே அனுப்பி வையுங்கள்'' என்று புலம்புவாள், கூவுவாள், பிச்சிபோல் பேசிச் சிரிப்பாள்.

''என் சபதம் என்னவாயிற்று? குழல்மொழி தன் சபதத்தை நிறைவேற்றிவிட்டாள். நான் கணவனைப் பிரிந்து இன்னும் உயிர் வாழ்கிறேனே?'' என்று ஊரறியக் கூவுவாள். யார் என்ன சமாதானப்படுத்தினாலும் அவளைத் தேற்ற முடியவில்லை.

பூசாரி சொல்லி முடித்தார். டயரைப் பஞ்சர் ஒட்டி எடுத்துக் கொண்டு எங்கள் காரோட்டியும் வந்து கொண்டிருந்தார்.

''அப்புறம் பச்சைக்கிளி என்ன ஆனாள் பூசாரி? இராசராச சோழர் பச்சைக்கிளிக்கு வெகுமதி, வீரமானியம் எல்லாம் கொடுத்துப் பெருமைப் படுத்தினாரா?'' என்று நான் ஆவலுடன் கேட்டேன்.

''அவற்றை எல்லாம் பச்சைக்கிளி தூசுபோல் மதித்தாள். அவளுக்கு வேண்டியது அவளுடைய அன்புக் கணவர். அவளைக் கணவரிடம் சேர்ப்பிக்க யாரால் முடியும், இல்லையா பூசாரி?'' என்று ஜனநாதன் பெருமை முகத்தில் பொங்கக் கேட்டார்.

''ஆமாம் ஐயா; அந்த அருமைப் பெண் தான் செய்த சபதத்தை நிறைவேற்றிக் கணவனை அடைந்தாள்'' என்றார் பூசாரி.

''கணவனையா? அது எப்படி அடைய முடியும்?'' நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

''இந்தப் பக்கம் பெரிய மூங்கில் காடு இருந்ததுங்க. மூங்கில் காடு ஒரு நாள் இரவு பற்றிக் கொண்டது. காட்டுத் தீ என்று சொன்னார்கள். ஆனால் பச்சைக்கிளிதான் மூங்கில் காட்டுக்குத் தீ வைத்திருக்கிறாள். தீயில் பச்சைக்கிளி பாய்ந்து கருகிவிட்டாள்.''

''ஆ!'' என்று நான் கூறி வியந்தேன்.

''ஆமாங்க, பச்சைக்கிளிக்கு அந்த வழியை விட்டால் வேறு ஒன்றும் வழியில்லைங்க. தன் கணவருடன் தேவலோகம் சென்று அவளும் சாமியாகி விட்டாள். பிறகு செய்தி அறிந்த சோழராசா, இங்கே பச்சைக்கிளிக்கு நடுகல் நட்டு, கோயில் கட்டி, சிற்பியை அழைத்துச் சிலை செய்யச் சொல்லி வணங்கினார். பச்சைக்கிளியும் அம்பிகையும் அம்சமாகி, தன்னைப் பூசிப்பவர்களுக்குக் காலம் காலமாக அருள் புரிந்து கொண்டிருக்கிறாள்.''

கர்ப்பூர ஆரத்தியில் பச்சைக்கிளி அம்மன் விழிகள் ஜொலித்தன. தன் சபதத்தை நிறைவேற்றிய வீரப் பெண், கம்பீரமாக அந்தச் சிறிய கோயிலில் குடிகொண்டு பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். ❋

ஓர் இரவு நேரத்துப் பயணத்தில்

-வாசவன்-

இடுப்பில் ஒன்று. கையில் ஒன்று. தோள் உயரத்தில் ஒன்று. நெஞ்சளவில் ஒன்று என்று ஏழெட்டுகளுடன் மல்லுக்கு நின்றுகொண்டிருப்பது போதாதா?

இப்போது வயிற்றைக் குமட்டுகிறதே! நெஞ்சைக் கரிக்கிறதே! தொண்டைக் குழியில் வாந்தி புரள்கிறதே!

மழமழவென்று குழைந்த வயிற்றில் கையை அழுத்திப் பிசைந்துகொண்டிருந்த சீதா, குடலே வெளியே வந்துவிடுகிற மாதிரி பரபரத்த உணர்ச்சியில் உந்தப்பட்டவளாய் வெளியே ஓடினாள்.

வாசல் நிரம்பி விட்டது.

''என்னடி சீதா, வாந்தி எடுத்துக்கிட்டு இருக்கே?'' என்று நீட்டலாய் அவள் பக்கலில் வந்து நின்ற, 'எட்டாம் நம்பர்' கமலா, வேர்த்த மூக்கைத் துடைத்துக் கொண்டாள்.

அடுத்த வீட்டுச் சங்கதி என்றால் எப்படியோ மூக்கு வேர்த்துவிடுகிற இந்தக் கமலாவுக்கு முதல் பரிசைக் கொடுப்பது என்றால், இரண்டாம் பரிசைப் பத்தாம் நெம்பர் வீட்டுக்காரி பத்மாவுக்குக் கொடுத்தாக வேண்டும்!

பத்மா அப்போதுதான் அசைந்து அசைந்து வந்து கொண்டிருந்தாள். அவளுக்குக் கமலாவைப் போல முந்திக்கொண்டு வர மூக்கு முட்டும் ஆசைதான். ஆனால் சதை போட்டுவிட்ட பெரிய சரீரத்தைத் தூக்கிக்கொண்டு அத்தனை வேகமாக வர முடிகிறதோ?

''என்னடி சீதா பதிலைக் காணோம்? ஏன் வாந்தி எடுத்துக்கிட்டு இருக்கே?'' என்று மேலும் துளைத்த கமலா, 'எனக்கா தெரியாது? எல்லாம் தெரிந்து கொண்டுதான் கேட்கிறேன்' என்ற தோரணையில் குத்தலான பார்வையால் சீதாவை ஊடுருவினாள்.

பத்மாவும் தன் பங்குக்குச் சொல்ல நினைத்து சீதாவின் அருகே வந்து நின்றாள்.

புண்ணாய் நெருடிய தொண்டைக் குழாயைத் தடவி விட்டுக்கொண்டே, பாக்கு வெட்டியின் இறக்கைகளைப் போலத் தன் இரு பக்கங்களிலும் வந்து நின்ற அவர்களை ஆத்திரத்துடன் இரண்டுவார்த்தைகள் பேச நினைத்தும் முடியாமல், ''சும்மாதான்!'' என்று எச்சிலை விழுங்கினாள் சீதா.

''சும்மா இல்லேடி சீதா, நீ சுமந்துக்கிட்டு இருக்கே! என்னடி பத்மா?'' என்று கேட்டுவிட்டுச் சிரிப்பாய் வழிந்தாள்.

''எனக்கு என்னடி தெரியும்?'' என்று நீளமாகப் பெருமூச்சு விட்டாள் பத்மா.

''உங்கிட்டே போய்க் கேக்கிறேன் பாரு. நான் ஒரு மூடம். கனியாகப் பழுத்துக் குலுங்கிற மரத்தைப் பற்றி,' காய்க்கத் தெரியாத மலட்டு மரத்திடம் நான் கேட்கலாமோ?''

பத்மாவின் நெஞ்சில் பாய்ச்சப்பட்டது சற்றுக் கூர்மையான முள்தான். அவள் அதைப் பிடுங்கி எறியும் வெறியோடு மோதினாள்: ''ஏண்டி, கமலா, நீ மட்டும் ரொம்பக் காய்ச்சுக் குலுங்கின மரமோ?''

''பிறகு இல்லியோ? உன் மாதிரி நான் ஒரேயடியாவா மலட்டு மரமாப் போயிட்டேன்? பிறந்ததைத் தூக்கி வச்சுக் கொஞ்சுகிற பாக்கியம் வேணுமான்னு எனக்கு இல்லாமப் போயிடுச்சு! 'அது எப்போப் பிறக்கும்?'னு என் பிரசவ அறையிலே காத்துக்கிட்டிருந்த யமன், குழந்தை பிறந்து கீழே விழுந்தவுடனே கொண்டு போயிட்டான். நான் காய்க்காத மரம் இல்லேடி பத்மா!' காய்ச்சு வீணாப் போன மரம் வாழைமரம்'' என்று குமுறி வெடித்தாள் கமலா.

அடுத்த கணமே 'பேச்சு திசை மாறிப் போகிறது' என்பதை உணர்ந்தவளாய், ''நமக்குள்ளே எதுக்குடி வீண் வாதம்? நாம தாவை மறந்துட்டுக் குடுமியைப் பிடிச்சுக்கிட்டா எப்படி? விஷயத்துக்கு வருவோம். இவ வருஷம் தவறினாலும் வாந்தி எடுக்கத் தவறுகிறாளோ?'' என்று நையாண்டி மேளம் கொட்டினாள்.

அவமானத்தால் கூசிக் குறுகிப் போன சீதா, வீட்டுக்குள் வந்து விழுந்தாள்.

நல்ல வேளை! பெரிய பெண் அருணா வீட்டில் இல்லை. கமலாவிடமிருந்தும், பத்மாவிடமிருந்தும் கூடத் தப்பி விடலாம். ஆனால் அருணாவிடமிருந்து அத்தனை சுலபமாகத் தப்பிவிட முடியாது. அவளுக்கு வயது பதினைந்துதான். அதற்குள் அவள் உலகத்தை எவ்வளவு அநியாயமாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறாள்?

மூன்று வருடங்களுக்கு முன்பு என்று ஞாபகம். அப்பொழுது ராணி கைக்குழந்தை. சீதாவின் இடுப்பை விட்டு இறங்காத ஒட்டுப் புல் அது. அப்போது அடுப்பில் போட்ட ஏதோ ஒன்று கருகித் தீய்கிறது. குழந்தையோ இடுப்பைவிட்டுஇறங்க மாட்டேன்என்று அடம் பிடிக்கிறது. சீதாவுக்கு ஆத்திரம். குழந்தையை நாலு மொத்து மொத்திக் கீழே இறக்கிப் போட்டுவிட்டு, ''சனியனே பீடையே!'' என்று கத்திக் கொண்டே அடுப்புக் காரியத்தைக் கவனிக்க ஓடுகிறாள் அவள்.

அப்போது அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அருணா, பெற்றவளைச் சுட்டுப் பொசுக்குகிறாள், ஒரு பார்வையின் மூலம்.

அந்தச் சமயத்தில் சீதாவுக்கு அந்தப் பார்வையை விலக்கி விட்டால் பிரிந்து போகிற குளத்துப் பாசியைப் போலத்தான் இருந்தது. அடுப்புக் காரியத்தைக் கவனித்து விட்டு முகத்தில் வேர்வையும், உடம்பில் களைப்புமாய்த் திரும்பிய அவள், அழுத குழந்தையை எடுத்துத் தோளில் சாய்த்துத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த அருணாவைப் பார்க்கிறாள். அவளும் பார்க்கிறாள்.

அந்தப் பார்வை குளத்துப் பாசியைப் போல விலகிப் போகாமல், குறிவைத்து எய்த அம்பாய் சீதாவின் மனத்தில் தைக்கிறது. ''என்னடி அப்படிப் பார்க்கிறே?''

தோளில் வழிந்து கிடந்த குழந்தையைத் தொட்டுக் காட்டி, வாழ்ந்து சலித்த பாட்டிக் கிழவியைப் போல அலுப்போடும், விவகாரச் செறிவோடும் சிரித்து, ''பாவத்தைப் பார்க்கிறேன்'' என்றாள் அருணா.

''பாவமா? எது பாவம்?''

''நீதான்!''

''நானாடி?''

''ஆமா. நீ குழந்தையைச் 'சனியன்' 'பீடை', என்றெல்லாம் கரிச்சுக் கொட்டினே! பாவத்துக்குத்தானே சனியும், பீடையும் பிறக்கும்?'' என்று பொரிந்து கொட்டிவிட்டு, அதற்கு மேல் எதுவும் பேச விரும்பாத பெரிய மனுஷித்தோரணையுடன் வாசலுக்குப் போய் விட்டாள் அருணா.

ஒரு கணம் பொறி கலங்கிய மாதிரி எதுவும் புரியாமல் இருளின் அடியாழம் வரையில் போய் விட்டுத் திரும்பிய சீதா, நெஞ்செல்லாம் கலகலத்துப் போன களைப்பில் தூணில் சரிந்து உட்கார்ந்தாள்.

பெற்ற பெண்ணிடமே பதில் பேச முடியாத குற்றவாளியாகத் தான் பிடிபட்டு நின்றதையும் அடிக்கடி குழந்தை பிறப்பதற்கு அந்தரங்கக் காரணமாக அமையும் இதய பலவீனத்தைச் சூட்டுக் கோலால் சுட்டுக் காட்டுவதைப் போல, 'நீயே ஒரு பாவம்' என்று அசாத்திய விவகார சாமர்த்தியத்துடன் அருணா கூறிவிட்டுப் போனதையும் நினைத்து, உருகிக் கரைந்து போனாள் சீதா. 'இந்தத் சிருஷ்டி விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்' என்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

விபத்தைத் தேடிப் போக வேண்டாம். அதுவே தேடி வரும். அப்படிப்பட்ட ஒரு விபத்துக்கே மறுபடியும் ஆளானாள் சீதா. ஒவ்வொன்றுக்கும் அவள் உடல் கரைகிறது; உயிர் போகிறது. இத்தனைக்கும் மேலாக அவள் கணவரின் கூடாத வருமானம். ஆனால் கூடிவரும் குடும்பப் பெருக்கு.

தலைக்கு மேல் போய்விட்ட அந்த வெள்ளத்தைப் பற்றிக் கூட அவள் கவலைப்படவில்லை. அருணாவுக்குத் தான் அவள் பயந்து செத்தாள். தான் பெற்ற பெண்ணுக்கே பயந்து சாகிற கேவலத்தை எண்ணிக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அருணா இந்தச் சமயத்தில்தான் மிகப் பெரிய மனுஷியாக நடந்து கொண்டாள். அம்மாவைப் பார்வையால் குத்தாமல், பேச்சால் சுடாமல், அவள் அல்லாடும் காரியங்களைத் தானே அள்ளிப் போட்டுக் கொண்டு செய்தாள். அதற்காகச் சீதாவின் பயம் விலகவில்லை. தன் பெண் செய்த உதவி, ஒரு பாவ மன்னிப்பாகத்தான் அவளைப் பயமுறுத்தியது.

ஒரு வழியாக எட்டாவது பிறந்தது. அதுவரை மௌனமாக இருந்த அருணா, வாயைத் திறந்து எண்ணி இரண்டே வார்த்தைகள் தாம் சொன்னாள்: ''எட்டாவது சனியன்!''

அதைக் கேட்டபோது சீதாவுக்கு இந்த விலாவிலிருந்து அந்த விலா வரைக்கும் ஈட்டி பாய்ந்த மாதிரி இருந்தது. 'இந்த ஈட்டியைத் தீட்டத்தானா இவ்வளவு காலமும் இந்தப் பெண் ஊமையாக இருந்தாள்?' என்ற ஒரு கேள்வியைத் தனக்குத்தானே கேட்டுக் கொண்ட போது, வயதுக்கு மீறி வாயை வளர்த்துக் கொண்டிருக்கிற அந்தப் பெண்ணை ஓங்கி அறைய வேண்டும் போன்ற பரபரப்பு அவள் உள்ளத்தில் ஊறிக் கிளர்ந்தது.

அப்படி அவளை அறைந்து, பல்லைக் கடித்து ஓர் அற்ப ஆறுதலை வேண்டுமானால் தேடிக் கொள்ளலாமே தவிர, அவளுடைய குற்றச்சாட்டை எந்த ஒரு நியாயத்தின் நிழலில் நிறுத்தி மறுக்க முடியும்?

'இனிமேல் இந்தக் குற்றத்தைச் செய்யக் கூடாது' என்று கண்டிப்பாகத் தீர்மானித்துக் கொண்டாள் சீதா.

ஆனால் விபத்து மறுபடியும் நேர்ந்திருக்கிறது. இதோ ஒன்பதாவது அபாய அறிவிப்பு. அருணா எங்கிருந்தோ பல்லைக் கடிப்பதைப் போல இருந்தது. சீதாவுக்கு வேர்த்துக் கொட்டியது.

''பாச்சி..'' என்று சிணுங்கிக் கரைந்தது 'எட்டாவது.'

'குற்றச் சாட்சியத்துக்குப் பாலா?'

குரோத உணர்வு வெள்ளம் போலப் பெருக, ஒட்டி வந்து நின்ற எட்டாவதை, ''போ, சனியனே!'' என்று எட்டித் தள்ளினாள் சீதா.

குழந்தை கீழே சாய்ந்து கதறித் துடித்தது.

அந்தக் குழந்தையின் அவஸ்தையை அற்பமான திருப்தியோடு சற்று நேரம் ரசித்த அவள், அடுத்த கணம் அதைப் பார்க்கப் பிடிக்காதவளாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சுடர் விட்டு எரிந்த நெருப்பு சட்டென்று அணைந்தது போலக் குழந்தையின் அழுகை அடங்கித் தூற்றலாகப் பொருமுகிறது. அதற்கு என்ன காரணம்? சீதா திரும்பிப் பார்த்தாள்.

அவளுடைய கணவன் ராமசாமியின் தோளில் குழைந்து கிடக்கிறது குழந்தை.

அவரா? இந்த நேரத்திலா? தினசரி இரவு எட்டு மணி வரையில் 'வேலை' என்ற பெயரில் ஒரு செங்கல் சூளையில் வேகும் அவர், இன்று அதிசயமாய் நான்கு மணிக்கே வீடு திரும்பி இருக்கிறார்.

மற்றச் சமயமாக இருந்தால் அதைப் பற்றி ஆயிரம் கேள்விகளை அவரிடம் கேட்டுத் துளைத்திருப்பாள். இப்பொழுது அவளால் கேட்கமுடியாது. ஏனெறால் அவள் மனமே ஒரு சூளையாக எரிந்துகொண்டிருந்தது.

''சீ..தா!..'' அவசரம் இல்லாத அமைதியான நீட்டலுடன், உணர்ச்சிகள் பொங்கி நுரைத்துக் கொண்டிருந்த அவள் முகத்தைப் பார்க்கிறார் ராமசாமி.

அவருடைய அமைதிக்குப் பிடிவாதம் அதிகம். எந்தப் புயலுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் கம்பீரம் அதற்கு உண்டு. வறுமையிலும், வாழ்க்கையின் இடிபாடுகளிலும் கொஞ்சம் கூடத் தேயாமல் சுத்தமான நாணயத்தைப் போல ஒளி வீசும் அவருடைய அமைதியில் சீதாவுக்கு இருந்த மயக்கம் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த மயக்கத்தின் காரணமாக, ஒவ்வொரு தடவையும் ஒட்டு மொத்தமாகத் தேடிக் கொண்ட வினைகளை எல்லாம் இந்த ஒரு கணத்தில் தான் உணர்ந்து கொண்டவளைப் போலச் சிலிர்த்தும்

வெறித்தும் அவரைப் பார்த்தாள்.

அவர் அந்தப் பார்வைக்கு ஆற்ற மாட்டாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை. தன்னைச் சந்திக்க வருகிற அநியாயத்தைக் கூட நேருக்கு நேர் நின்று வரவேற்கக் கூடிய நேர்மை அவருக்கு உண்டு. தனக்கு எதிரான போர்க்கொடி ஒன்றை இத்தனை காலத்துக்குப் பிறகு தாங்கிப் பிடிக்கத் தயாராகி விட்டிருக்கிறாள் சீதா என்பதை அவள் தோற்றத்தாலும், பார்வையாலும், உணர்ந்த அவர், அவளுக்காக அனுதாபப்படுவதைப் போலச் சிரித்தார்.

'எவ்வளவு பெரிய மனிதத்தனமான பொய்ச் சிரிப்பு அது?' என்று தனக்குள் வெடித்துக் கொண்டாள் சீதா.

பெரிய மனிதத் தனத்தை இந்த ஒரு சந்தர்ப்பத்துக்காக யாரிடமிருந்தும் அவர் இரவல் வாங்கி வரவில்லை. அதுவேதான் அவர். அவரே தான் பெரிய மனிதத்தனம். நேர் வகிடும், காதோரங்களில் வெள்ளி நரையும், நெற்றிப் பொட்டும், நிமிர்ந்த பார்வையும், அமைதியான வாக்கும், போக்கும் நிறைந்த அவரைப் பார்ப்பவர்களுக்குக் கை எடுத்துக் கும்பிடத் தோன்றும். வாழ்க்கையின் கனவுகள் நிறைவேறாத காரணத்தால், கண் முன்னால் காட்சி தருகிற சௌந்தர்யங்களை ஏசியும் பேசியும் காலத்தை ஓட்டுகிற சராசரி மனிதர்கள் வாழும் இந்தச் சந்தைக் கடைத் தெருவிலிருந்து, அவர் அலுவல் செய்கிற செங்கல் சூளை வரையில் தன்னை வணங்க வைத்துக் கொண்டே கம்பீரமாகவும், கோபுரமாகவும் வாழ்பவர் அவர். அவருடைய அந்தக் கம்பீரமே ஒரு கவர்ச்சியாய் ஆகி, சீதாவின் வாயை ஒவ்வொரு முறையும் கட்டி, அபாய அறிவிப்புக் கொடுக்கும் ஒன்பதாவதில் வந்து முடிந்திருக்கிறது.

தன்னுடைய முட்டாள்தனத்தை எண்ணிக் குமைந்து, அப்படி ஒரு முட்டாள்தனத்தைச் செய்யத் தூண்டிய தன் கணவருடைய கம்பீரத்தையும், அமைதியான சிரிப்பையும் ஏறிட்டுப் பார்க்கப் பிடிக்காமல், ''சிரிக்காதீங்க!'' என்று சீறினாள் சீதா.

வலை போட்டாலும் அடங்காத அலைபோல அவளுடைய சீற்றத்தையும் மீறிக் கொண்டு அவர் உதடுகள் பூத்தன. ''சீதா, சிரிக்காமல் என்னை என்ன செய்யச் சொல்றே? அழுதாலும் உன்னிடம் இரக்கத்தை எதிர்பார்க்க முடியாது போலிருக்கே. கீழே விழுந்த கண்ணனுக்கே நீ பால் கொடுக்கலியே!'' என்று கூறிக் கொண்டே, கத்திக் களைத்துத் தோளில் தூங்கிப் போன குழந்தையைத் தொட்டிலில் போட்டு விட்டுத் தலை நிமிர்ந்தார்.

அவருடைய செய்கை அவளை ஒரு பாணம் போலத் துளைத்தது.



''இந்தப் பெரிய மனுஷத்தனத்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. 'ஏண்டி முண்டமே குழந்தையை எட்டி உதைச்சே?' ன்னு ஒரு சாதாரணக் கணவன் மாதிரி என்னை நீங்க அதட்டமாட்டீங்க. சாதாரண மனுஷங்களுக்குள்ள கோபதாபங்களை நீங்க அலட்சியப் படுத்தலாம். ஆனா நான் அதுகளை விரும்புறேன். விருப்பு, வெறுப்புகளுக்குக் கட்டுப்படாம ஆகாயத்திலே போய் நின்னுக்கிட்டு, பாவ மன்னிப்பு மாதிரி கருணை காட்டி ரட்சிக்கிற உங்க பெரிய மனுஷத்தனத்தைப் பார்க்கிறப்போ எனக்கு பத்திக்கிட்டு வருது.''

சிறுமை புரிய சீதா ஒரு சந்தர்ப்பம் கொடுத்தும்கூடத் தன் பெரிய மனிதத்தனத்தை நழுவ விடாமல் அமைதியாகச் சிரித்தார் ராமசாமி.

''சிரிக்காதீங்க'' என்று ஆத்திரத்தோடு வெடித்தாள் சீதா.

''இரண்டாவது தடவையாகவும் நீ இப்படிச் சொல்றே'' என்று இரண்டு விரல்களை நீட்டிக் கொண்டு சிரித்தார் அவர்.

''இன்னம் இரண்டாயிரம் தடவைகூடச் சொல்லுவேன். நீங்க இப்படிச் சிரிச்சுச் சிரிச்சே என் கழுத்தை அறுத்திட்டீங்க.''

'இதென்ன அநியாயம் சீதா? எப்போ நான் உன் கழுத்தை அறுத்தேன்?''

''கேள்வி வேறயா கேக்கறீங்க? பாதி ஜாமத்திலே, குழந்தைப்பட்டாளத்துக்கு நடுவிலே நான் சுருண்டு கிடப்பேன். அப்போ நீங்க என் தலைமாட்டிலே வந்து நின்னுக்கிட்டு, 'சீதா'ன்னு என் காது ஓரமாக் கிசுகிசுத்து, நான் திடுக்கிட்டுக் கண் முழிக்கறப்போ நீங்க அமைதியாச் சிரிச்சது எல்லாம் கழுத்தறுப்பு இல்லையா?''

சுற்று முற்றும் பார்த்தார் ராமசாமி. தூங்கும் குழந்தையைத் தவிர மற்றக் குழந்தைகள் வீட்டில் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட பிறகு, ''இப்போ அதுக்கு என்ன?'' என்று கேட்டார்.

''மறுபடியும் வினை முளைச்சிருக்கு.''

''ஒன்பதாவதா?'' என்று கேட்ட போது அவர் முகத்தில் அதுவரை கொலு இருந்த அமைதி, பட்டென்று பனியாய் உடைந்தது. ஆனால் வேகமாகச் சுதாரித்துக் கொண்டு தன் அமைதிக் கோட்டையை மீண்டும் பிடித்தவராய், ''அது முருகனோட பிரசாதம்!'' என்று தம்மையும் அவளையும் தேற்றுகிற மாதிரி கூறினார்.

''முருகன் பாவத்தைப் பிரசாதமாக் கொடுக்க மாட்டான். உங்க பலவீனத்துக்கு நொண்டிச் சமாதானம் தேவை இல்லே'' என்று படபடத்தாள் சீதா.

''இதிலே உன் பலவீனம்னும் ஒண்ணு இல்லியா சீதா?''

''ஏன் இல்லே? நான் ஒவ்வொரு தடவையும் பயந்து செத்தாலும் கூட, வாய் திறக்காம உங்களுக்குப் பணிஞ்சு போனது என் பலவீனந்தானே?''

''பலவீனம் என்கிறதைப் புரிஞ்சுக்கிட்டே பணிஞ்சு போறது ஒரு வகைச் சாமர்த்தியம். தப்பிச்சுக்கிற தந்திரம். இப்போ வாயைத் திறந்த நீ அப்போ ஏன் திறக்கலே?''

''திறந்திருக்கலாம். ஆனா பயம் என் வாயைக் கட்டிப் போட்டிருச்சு.''

''என்ன பயம்?''

''உங்க பெரிய மனுஷத்தனத்தைக் கண்டு பயம். உங்க அமைதியைக் கண்டு பயம். உங்களுக்கு என்ன? நீங்க என்ன செஞ்சாலும் உங்களைக் கும்பிட்டு விழறதுக்கு ஒரு கூட்டமே இருக்கு. நான்தான் ஒவ்வொரு தடவையும் ஒரு குற்றவாளி மாதிரி பிடிபட்டு நிக்கறேன். அருணா எனக்கு மகள் இல்லே. நான் ஒவ்வொரு தடவையும் குற்றத்தைச் சுமந்து நிக்கறப்போ, என்னை வேட்டையாடிப் பிடிக்கிற போலீஸ்காரி அவ. இனிமே நான் அவ கண் எதிரே பெற்றுப் பெற முடியாது. நீங்க செய்த பிழைக்கு நான் இந்தத் தடவை அசட்டுத்தனமாக் காரணங்களைச் சொல்லிக்கிட்டிருக்க மாட்டேன். கமலாவும், பத்மாவும், இந்த உலகமும் என்னைப் படுத்துற அவமானத்தை இனி நான் ஏற்றுக் கொள்ளத் தயாரா இல்லே.''

தன் இத்தனை வருடத்திய தாம்பத்திய வாழ்க்கையில் ஆவேசமாகத் தூள் பரப்பும் பெண்மையை இதுவரை அவர் சந்தித்ததில்லை. புயலின் நடுவே ஒரு புதிய சந்திப்பு. 'அந்தக் கணத்தில் அவர் அமைதியை இழந்துதான் போனார். ஆனால் நிதானத்தை இழக்கவில்லை.

''சீதா! நீ ஏற்றுக்காமே என்ன செய்யப் போறே? வினையே ஆனாலும் விதைச்சது விளையத்தானே செய்யும்?''

''விளைய விடமாட்டேன்.''

''அப்படீன்னா?''

''குழந்தை பிறக்காது!''

''எப்படிப் பிறக்காமே இருக்கும்? கருவானது உருவாகித்தானே தீரும்!''

''கருவையே அழிச்சுட்டா?''

''சீதா, அது பாவம்!'' என்றார் பரிதாபமாக, ராமசாமி.

''பாவமாவது, புண்ணியமாவது! தலை நரையோடி வரும் வயசிலே சுமந்து பார்த்தாத்தான் உங்களுக்கு அந்தக் கேவலம் புரியும். நான் அதைப் பிறக்க விடமாட்டேன். அழிச்சே தீருவேன்.''

ராமசாமி பேசவில்லை. பழிகளை எல்லாம் அவர் தலையில் போட்டுவிட்டு, ஓர் அரசியல்வாதியின் சாமர்த்தியத்துடன் தப்பித்துக் கொள்ளப் பார்க்கும் சீதாவிடம் என்ன பேசுவது?

''நான் இன்னிக்கு விழுப்புரத்திலே இருக்கும் எங்கக்கா வீட்டுக்குப் புறப்படப் போறேன். அங்கே போய் ஒரு லேடி டாக்டருக்கிட்ட காட்டி..''

''அதாவது அழிச்சு ..''

''அப்படித்தான். நான் திரும்புகிறதுக்குக் கொஞ்ச நாளாகலாம். எட்டாவது சனியனை நான் தூக்கிட்டுப் போறேன். மற்றதுகளை நான் வரும்வரைக்கும் நீங்க கட்டிக்கிட்டு அழுங்க. அருணாவும் உங்களுக்கு உதவியா இருப்பா. என்னைப் பயமுறுத்திறதிலேதான் அவ பூச்சாண்டி. மற்றபடி குடும்பத்தை இழுத்துப் போர்த்திக் கிட்டுப்போறதிலே அவ பாட்டிக் கிழவி. ரெயில் செலவுக்கு இருபது ரூபா வேணும். உங்ககிட்ட இருக்கா? இல்லே, இருக்கிறதை எடுத்துக்கிட்டு நான் மார்வாடிகிட்டே போகவா?'' என்று தெளிவோடு நிதானமாக ஒலித்தது சீதாவின் குரல்.

அவரிடமிருந்த தெளிவைத் தான் எடுத்துக்கொண்டு, தன்னிடமிருந்த குழப்பத்தை அவரிடம் கொடுத்து விட்டாள் அவள்.

''சீதா! நீ ஊருக்குப் போய்த்தான் தீரணுமா?'' என்று பரிதாபமாகக் கேட்டார் ராமசாமி.

''ஆமா. நான் இங்கே இருந்துகிட்டு என்ன செய்ய முடியும்? பொழுதுக்கும் போலீஸ் வேலையைச் செய்துக்கிட்டிருக்கிற அருணா, நாக்காலேயே என்னைக் குத்திக் கிழிப்பாளே! அவளுக்குப் பயந்துகிட்டுத்தான் நான் வீட்டை விட்டு ஓடுகிறேன்.''

''இதிலே என் அபிப்ராயம் தேவை இல்லையா சீதா?''

''எட்டைப் பெறும் 'வரையிலே உங்க அபிப்பிராயத்துக்கு நான் பணிஞ்சு நாசமாப் போனது போதாதா? ஒன்பதாவதுக்கு முழுக்க முழுக்க என் அபிப்ராயந்தான். அது பிறக்க கூடாது.''

ராமசாமி காதைப் பொத்திக் கொண்டார். ''சீதா, சண்டை போட்டு ஒரு உண்மையைக் காப்பாத்த முடியாது. அது மாதிரி கூச்சல் போட்டு ஒரு தீமையை விலக்கவும் முடியாது. நான் உன்னைத் தடுக்கலே. ஏன்னா, நான் என்னையே தடுத்துக் கொள்ளும் சக்தி இல்லாதவன். உன் வயித்திலே உருவாகி வரும் ஒன்பதாவது, 'நான் எவ்வளவு பலவீனமானவன்' என்கிறதுக்கு ஒரு வெளிப்படையான உதாரணம். இந்த விஷயத்திலே நான் பலவீனமானவனாக இருந்ததுக்கு நீயும் ஒரு காரணம். உன் தலை நரைச்சுக்கிட்டு வருவதைப் பற்றி நீ பல முறை கவலைப்பட்டு இருக்கே. இளமையிலே ஆசையுள்ளவங்கதானே நரையைக் கண்டு பயப்படுவாங்க? அந்த வகையிலே உன்னை நோக்கி வந்த முதுமையை ஏற்றுக் கொள்ளவும், இளமையை விட்டுப் பிரியவும் நீ பயந்தே. உன் பயத்தைப் போக்கி, 'நீ என்னிக்குமே இளமையானவதான்' என்கிற நம்பிக்கையை உனக்கு நான் ஊட்ட முற்பட்ட போதுதான் ஏழு எட்டாகி, இப்போ ஒன்பதாவதிலே வந்து நிக்குது. இப்போ அதைப் பற்றி என்ன? நீ போவதாக முடிவு

எடுத்த பிறகு நான் குறுக்கே நிற்கலே. நீ மார்வாடி கிட்டே போக வேண்டாம். ஏதோ அதிசயமா எங்கிட்டே இருபது ரூபா இருக்கு. தர்றேன். வாங்கிட்டுப் போ.''

அப்போது அவர்களுடைய இரண்டாவது பெண் பார்வதி வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.

அவர்கள் பேச்சுக்குத் திரை விழுந்தது.

பொழுதைச் சுருட்டி மடக்கிக் கொண்டிருந்த அந்தி வேளையில், வயிற்றில் இருக்கும் ஓர் உண்மையைப் பொய்யாக்கி விடும் ஆவேசத்தில் புறப்பட்டுக் கொண்டிருந்த சீதாவைக் கண் கலங்கப் பார்த்தாள் அருணா.

சட்டென்று உணர்ச்சி வசப்படத் தெரியாத மரக்கட்டை. எதற்காக இப்படிக் கண்ணைப் பிழிகிறாள்?

''அருணா! என்னடி இது? கண்ணைத் துடைச்சுக்க. நான் போனேன், வந்தேன்னு சீக்கிரமா வந்துடறேன்.''

''நான் அழறதுக்கு அது இல்லேம்மா காரணம். நீ எங்களை ஏமாத்திட்டு எதுக்காகவோ போறே? நீ ஊருக்குப் போறதுக்குச் சொன்ன காரணங்கள்லே ஒண்ணுகூட நம்பக் கூடியதா இல்லே. நாங்க எல்லாம் நம்புற மாதிரி ஒரு காரணத்தைச் சொல்லிட்டு நீ ஊருக்குப் போகக் கூடாதா அம்மா?''

இப்படிச் சூட்சுமமாகப் பேசுபவளா குழந்தை? உண்மையைத் துருவித் தேடுகிற அவளுடைய கூர்மையைக் கண்டு வெலவெலத்துப் போன சீதா, எதைப் பேசினாலும் வாயும் பொய்யுமாகப் பிடிபட்டு விடுவோம் என்று பயந்து, அவசரம் அவசரமாக வீட்டைவிட்டுக் கிளம்பி விட்டாள்.

இரவுக்குக் கிழடு தட்டி விட்டது.

குழந்தைகள் காற்றில் உதிர்ந்த பன்னீர்ப் புஷ்பங்களைப் போலத் தலை மாடு கால்மாடாகக் கிடந்தன. மல்லாந்து படுத்துக் கொண்டிருந்த அருணாவின் நெஞ்சில் ஒரு குழந்தை ஒட்டிக் கொண்டு கிடந்தது. எண்ணிக்கையில் அதற்கு ஆறாவது ஸ்தானம். ஆனால் அது கடைக் குட்டியைப் போல எப்போதும் சீதாவை ஒட்டிக் கொண்டிருக்கும். இன்று அதற்குத் தன் தாயின் அரவணைப்புக் கிடைக்கவில்லை. குறையை அருணாவிடம் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது.

இவற்றை எல்லாம் எவ்வளவு சுலபமாக உதறி எறிந்துவிட்டு ஒரு ராட்சச வெறியுடன் போய் விட்டாள் சீதா?

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த ராமசாமி, பெருமூச்சில் கலகலத்தார்.

'தட, தட, தட்..'

''யார் கதவைத் தட்டுகிறார்கள்?''

ராமசாமி எழுந்து போய்க் கதவைத் திறந்தார்.

வாசலில் சீதா! அவள் வலது இடுப்பிலே 'எட்டாவது'; இடது இடுப்பிலே இன்னொரு குழந்தை.

வியப்பில் விரிகிறார் ராமசாமி. ''என்ன சீதா இது? நீ எங்கேயோ புறப்பட்டு எதையோ அழிக்கப் போனே! ஆனா புறப்பட்டுப் போன நான்கு மணி நேரத்துக்குள்ளே ஒரு புதுக் குழந்தையோட வந்து நிக்கறியே? நீ அழிக்கிறதுக்கு முன்னாலேயே இந்தக் குழந்தை அடம் பிடிச்சுக்கிட்டுப் பிறந்துட்டதா?''

''இல்லே'' என்று வெட்கத்துடன் தலை அசைத்த சீதா தொடர்ந்தாள்: ''ரெயிலிலே போய்க்கிட்டிருந்தேன். திடீர்னு கக்கூஸிலே இருந்து ஒரு குழந்தையோட அழுகைச் சத்தம் வந்தது. போய்ப் பார்த்தேன். இந்தக் குழந்தை அலறித் துடிச்சுக்கிட்டுக் கிடந்தது. எந்த நெருக்கடியிலே இந்தக் குழந்தையைப் பெத்துப் போட்டாளோ ஒரு கடங்காரி? புரியுது. தன் மனசைக் காவல் காக்காமே கண்டவனுக்குப் பொண்டாட்டியா இருந்து பெற்றெடுத்த இந்தக் குழந்தையை 'என் குழந்தை'ன்னு உலகறியச் சொல்ல முடியாத ஒரு சண்டாளி, ரெயிலிலே போட்டுட்டுப் போயிட்டா. எட்டுக் குழந்தைகளைப் பெத்து எடுத்த பெரு வயித்துக்காரியான நான், அந்தக் கொடுமையைப் பார்த்த பிறகு எப்படிக் கண்ணை மூடிக்க முடியும்? அடுத்த ஸ்டேஷன்லே வண்டி நின்னபோது இந்தக் குழந்தையைத் தூக்கி எடுத்துக்கிட்டு இறங்கி, பஸ்ஸைப் பிடிச்சு வீட்டுக்கு வந்துட்டேன்.''



மானேஜர்: ஏம்பா, இந்த மாதிரி மூணுமாச வேலைய செய்யாம பாக்கி வைச்சிருக்கியே? நானும் உனக்கு மூணுமாசச் சம்பளத்தைக் குடுக்காம இருந்தா சும்மா இருப்பியா?

குமாஸ்தா: அப்பவே கேட்டு இருப்பேன் சார்! இப்படி மூணு மாசம் முடியற வரைக்கும் முட்டாளதனமா காத்திருக்க மாட்டேன்!

''சீதா! நீ ஒன்பதாவதை அழிக்கிறதுக்காகப் போனே. ஆனா ஒன்பதாவதா ஏதோ ஒண்ணை எடுத்துக்கிட்டு வந்து நிக்கறே! இது எந்த வகையிலே நியாயம்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் ராமசாமி.

''இது அநியாயமாகவே இருந்துட்டுப் போகட்டும். என் குழந்தைகளுக்கு மட்டும் இல்லே, எந்தக் குழந்தைக்கும் என்னாலே தாயாகத்தான் இருக்க முடியும். மற்றவங்க என்னைக் கேலி செய்தப்போ, அதனாலே கலவரப்பட்ட நான், தாய்மையை வெளியே காட்டப் பயந்தேன். அதை அழிக்கவும் நினைச்சேன். ஆண்டவன் அதுக்குத் தண்டனை கொடுத்துட்டான். ஆமா. இனிமே நான் பெறாத இந்தக் குழந்தையையும் சுமக்கப் போறேன்.

''எனக்குத் தெரியும் சீதா! தாய்மைக்குக் கொள்ளத்தான் தெரியும்; கொல்லத் தெரியாது. நீ அதுக்கு மாறான ஒரு புதுச் சரித்திரத்தைப் படைக்க நினைச்சே. தோற்றுப் போனே. சில தோல்விகளிலே நன்மை விளைவதுண்டு. நீயும் அப்படிப்பட்டதொரு நன்மையாகி வந்திருக்கே. உன் புதிய குழந்தையை இப்படிக் கொடு'' என்று கையை நீட்டி அந்தக் குழந்தையை வாங்கி அணைத்துக் கொண்டார் ராமசாமி.

''அதை எங்கிட்டே கொடுங்க அப்பா'' என்று கூவிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்து வந்தாள் அருணா!

''இன்னம் நீ தூங்கலியா அருணா?'' என்று வியப்புடன் கேட்டாள் சீதா.

''இல்லே. இதுவரை நான் தூங்கலே. இனிமே நான் நிம்மதியாத் தூங்குவேன். பெற்றுக் கொள்றதுக்கு முன்னாலே அணை போடலாம். பெற்றுவிட்ட பிறகு அணை போடக் கூடாது. குழந்தைங்க தாமாகவே பிறக்கிறதில்லே. அதுகளோட பிறப்புக்கு அதுக காரணம் இல்லாதபோது, அதுகளை, 'சனி, பீடை'ன்னு கரிச்சுக் கொட்டறதிலே நியாயமே இல்லே. அதனாலேதான் உன் மேலே எனக்குக் கோபம். நீ வெளியே உப்பாகக் கரிச்சாலும் உள்ளே கரும்பாத்தான் இருந்திருக்கே. இல்லேன்னா ஓர் அநாதைக் குழந்தைக்கு நீ அம்மாவாகி இருப்பியா?''

''பெரிய மனுஷி பேசுறா!'' என்று சிரித்தார் ராமசாமி.

''அதிலே சந்தேகம் என்ன? அருணா என்னை விடப் 'பெரிய மனுஷி'தான்'' என்றாள் வெட்கத்துடன் சீதா. ✳

மகிழ்ச்சி பொங்கும் இந்நாளில் எழுச்சி மிக்க சில எண்ணங்கள்....

நவீன வாழ்க்கை முறைகள்.... அவற்றிற்கு இன்றியமையாத பல பெட்ரோலியப் பொருட்கள் — எரிபொருட்கள், பிளாஸ்டிக்குகள், மருந்துகள், துணிமணிகள், உரங்கள், மெழுகுப் பொருட்கள்...

இந்தப் பெட்ரோலியப் பொருட்கள் க்ரூட் ஆயிலை சுத்திகரிப்பதன் மூலம் கிடைக்கின்றன. இப்பணிமூலம் உங்கள் வாழ்வினை நவீனமயமாக்க மதருஸ் ரிஃபைனரீஸ் உதவுகிறது.

இத் தீபாவளித் திருநாளில் நீங்கள் எல்லா நலமும் பெற்று இன்பமாய் வாழ்ந்திட வாழ்த்துகிறோம்.

மதருஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
மணலி, சென்னை.



SAA/MRL/2130



பொன் மாடத்துக் கன்னி மான்

தவனமும் மருவும் மல்லிகையும் சம்பங்கியும் மரு தோன்றிப் பூவும் சேர்த்துக் கட்டிய கதம்பம் மணத்துடன் மனத்துக்கு மகிழ்வும் தரவல்லது. அதைப் போல நூல் வகைகளில் கலம்பகம் கவர்ச்சியுடன் பல துறைச் செய்திகளையும் தன்னகத்தே கொண்டு படிக்கப் படிக்கப் பரவசமூட்டக் கூடியது. மதங்கம், அம்மானை, குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல் போன்ற பதினெட்டு உறுப்புக்களைக் கொண்டது கலம்பகம்; வஞ்சிப்பா, ஆசிரியப்பா என்ற பலவகைப் பாவகைகளும் விரவிவருவது.

தொல்காப்பியத் தேவர் இயற்றிய திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்தது. கன்னிவனம் என்பதும இத்தலத்தின் பெயர் களுள் ஒன்று. பொன் மாடங்கள் வேயப்பெற்ற சிறப்புப் பெற்ற தலம் இது. இறைவனையும் இறைவியையும், நாயக நாயகி பாவத்தில் வைத்துப் பாடியிருக்கிறார் கவிஞர்; தலத்தின் பெருமையையும் பாடல் பெற்ற சீர்மையையும், தவமுனிவர்கள் லிங்கத் திருமேனிக்குப் பூசித்துப் பேறு பெறும் புனிதத்தையும் முதலில் கூறி, தன் நாயகனை அடைய, தலைவி இறைவனைக் கைகூப்பி வேண்டிக்கொள்ளும் பக்தி பாவத்தை, மிக அழகாய்ப் பாடுகிறார். ''தடமுலை துன்ன நினைந்தே, தளர்வுறும் என் னுயிர்க்கோர் சரண் உளது என்ன உரைப்பீர்'' என்று (இறைவனை) நாயகனை வேண்டிக்கொள்கிறாள் தலைவி.

நாயகனைக் காணாத தலைவியின் வருத்தத்தை அறிந்த



தோழிகள், அவளது மனத்துயரை ஆற்ற வேண்டி, அம்மானை ஆட அழைக்கிறார்கள். ''நீ காணத் துடிக்கும் நாயகனை ''கன்னிவனத்திடையே காணலாம் அம்மானை'' என்றும், ''அவனைக் கண்டபின் பிறிதொரு வனையும் காணவேண்டாம்'' என்றும் கூறுகின்றனர். தோழிகளின் நெருக்கத்தில், அம்மானை ஆடும் திறத்தில், தலைவியின் மனம் கொஞ்சம் தெளிவடைகிறது.

அம்மானைக் காய் மேலே போகும்போது, காயுடன் அவள் பார்வையும் போகிறது. ஆடிக் களைத்த உடல், தென்றல் வீசும் நந்தவனத்தை நாடுகிறது. தலைவியை அதில் இருத்தி, தோழிப் பெண்கள் ஊசலை வேகமாக ஆட்டி விடுகிறார்கள். ''திருப்பாதிரிப்புலியூர்ச் செல்வர் ஈந்த நேசக் கழல் பாடி யாமாடீர் ஊசல்'' என்று தாலாட்டுப் போல் பாடியபடி ஊசலை ஆட்டிவிடுகிறாள் தோழி.

வீணை கானத்தில் மயங்கக் கூடியவன் இறைவன். நந்தவனத்தின் ஒருபால் உள்ள கொன்றை மரத்தின் நிழலில் அமர்ந்து ஒரு மங்கை மிக அழகாக வீணை வாசித்துக்கொண்டிருக்கிறாள். அந்தச் சுரநாதம் தலைவியின் உடலினுள் சென்று உள்ளத்துள் புகுந்து நாயகன் வாசம் செய்யும் இதயத் தாமரையைப் போய் அசைக்கிறது. தலைவி கானத்தில் மெய் சோர்கிறாள்.

தூரத்திலே திருக்கோயில் ஒன்று தெரிகிறது. அந்தி வேளையில் சில பெண்கள், சந்நிதியில் விளக்கேற்றி



மாலைகள் சாத்த, பூக்குடலையுடன் செல்கின்றனர். கள்வெறி ஏறிய ஒருவன் தள்ளாடிக்கொண்டு பித்தனைப் போல் செல்கிறான். அந்தப் பெண்கள் அவனைத் திரும்பிப் பார்த்தபடி செல்கின்றனர். ''உங்கள் இறைவனும் பித்தன்தான்; 'பித்தா பிறைசூடி' என்று சுந்தரர் பாடவில்லையா?'' என்பதுபோல அவர்களைப் பார்க்கிறான் கள்வெறியன். ''சாமாதி வேதமிலை வாமாகத்திலுள தத்வப்ர சித்தியிதுவே'' என்கிறான்.

வரிசையோடு வந்து மன்னனின் ஆட்கள் வேடர் தலைவனின் மகளை மன்னனுக்குக் கேட்கின்றனர். மகளை, மன்னன் கேட்கிறான் என்று மகிழாமலும், மறுத்தால் மன்னன் சீறுவான் என்று பயப்படாமலும் வேடர் தலைவன், ''கன்னிவனத்து அண்ணலுக்கன்றி அவள் ஆட்படாள்; போங்கள்'' என்று மறுமொழி அளிக்கிறான். வீரத்தையும் இறையுணர்வையும் காட்டி மறத்தைப் பேணுகிறார் புலவர் பெருமான்.

மனத்தைக் கவர்ந்த நாயகனைத் தேடிப் புறப்படுகிறாள் தலைவி. அவன் விட்டுச் சென்ற கால் தடத்தை அடையாளம் கொண்டு, செவிலித்தாய் அவளைத் தேடிப் போகிறாள்.

கருத்தைக் கவரும் தருக்கள் மிகுந்த சோலை. கண்ணாடி போல் தெள்ளத் தெளிந்த நீரோடைகள். மாலை நேரம். குளிர் காற்று இதமாக வீசுகிறது. இறக்கமாக மேகங்கள் தவழ்கின்றன; மேகத்தைக்

கண்ட மயில்கள் தோகைகளை விரித்தாடுகின்றன. அன்னப்பறவைகள் ஓடைநீரில் அமுதத்தைப் பெற்று மகிழ்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் நாயகனின் மனம்மட்டும் வருந்துகிறது. தலைவியைக் காணாமல் தலைவன் தவிக்கிறான். காற்றுப் போக்கில் விர்ரென்று செல்லும் மேகங்களை அழைத்து, தான் படும் நரக வேதனையைத் தலைவியிடம் கூறி அழைத்துவரும்படி வேண்டுகிறான். மயில்களை அழைக்கிறான்; அன்னங்களை அன்போடு கூப்பிட்டுச் சொல்கிறான்.

இதே மனநிலையில் மருகி உருக்குலைந்து வருகிறாள் தலைவி. செவிலியும் தோழிகளும் தலைவியின் மேனிப் பசலையைக் கண்டு வருந்தி, குறத்தியை அழைத்து, தலைவியின் கையைப் பார்த்துக் குறி சொல்லும்படி கேட்கிறார்கள். ''மையல் மருந்து கன்னி வனத்துளது'' என்கிறாள் குறத்தி; மேலும், ''பொன் மாடத்துக் கன்னி வனநாதர் கைத்தலம் பற்றப் போகிறார்'' என்றதும், தலைவியின் முகம் நாணத்தால் சிவக்கிறது. சிவகாமசுந்தரியாக, மலையரசன் மகளாகத் தன்னைப் பாவித்துக்கொள்கிறாள். ஆடவல்லான் அருங்காட்சி தந்து, அழகி தன்னை ஏற்கிறான்.

'மதியொரு பாக முடித்த சடையினர் பாதியிடத்து மலைதரு பாவை'யாக மங்கைநல்லாள் மாண்பு பெறுகிறாள். —— கலைமகள்—தீபாவளி மலர், 1984

தேசிய வளர்ச்சியில் வங்கிகளின் பங்கு

— பி.பி. ஸ்ரீனிவாசன்



ஒரு நாடு பூர்ண சுதந்தரத்துடன் விளங்கினால்தான், வளர்ச்சிப் பாதையில் முன்னேற முடியும் என்ற கூற்றுக்கு இந்திய வங்கிகளின் வளர்ச்சிக்குச் சான்றாகக் கூறலாம். தொழில்துறையும் ஓரளவு செல்வர்களும் வாழ்ந்து வரும் நகரப் பகுதிகளில்தான் முன்பெல்லாம் வங்கிகள் செயல்பட்டு வந்தன. முன்பிருந்த வங்கிகள் தாம் இப்போதும் செயல்பட்டு வருகின்றன. ஆனால் பாரதம் சுதந்தரம் பெற்ற பிறகு, இந்திய வங்கிகளின் வளர்ச்சி மகத்தானது. சமூக நலனையும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற நோக்கத்தையும் கொண்டு, சில வங்கிகளைத் தேசிய மயமாக்கிய பிறகு, இந்த வளர்ச்சி வேகம் மிகவும் துரிதமடைந்திருக்கிறது.

தொழில் துறை போல் லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கம் இரண்டாம் பட்சமாகி, நாட்டின் மூலை முடுக்கெல்லாம் வங்கிகளின் கிளைகள் செயற்படுகின்றன. வங்கிகளின் சேவைகள் பல விதங்களில், பல நோக்குகளில் பெருகி வருகின்றன. சேவை பெருகி வருவதுபோல் வங்கிக் கிளைகளும், கிராமப் புறங்களில் அதிகமாகத் திறக்கப்பட்டு வருகின்றன.

நமது நாட்டின் முதுகெலும்பான விவசாயத் துறை மேம்பாட்டுக்கு வங்கிகள் செய்துவரும் உதவிகளும் ஆலோசனைகளும், குறைந்த வட்டியில் நிதி உதவி அளிப்பதும் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. விதைப் பாதுகாப்பு, பயிர்ச் செலவு, உழவு மாடு வாங்குதல், அறுவடைச் செலவு ஆகிய எல்லா நிலைகளிலும் வங்கிகள் அளிக்கும் நிதி, விவசாயப் பெருங்குடி மக்களின் மனத்தில் மகிழ்ச்சியை ஊட்டி வருகிறது. ‘பணம் எங்கே கிடைக்கும்; வட்டி கொடுத்துக் கட்டுபடியாகாதே’ என்று அலமலந்து நிற்காமல், வங்கிகளின் உதவியால், நிம்மதியாகத் தங்கள் தொழிலில் ஈடுபட முடிகிறது.

இந்தியப் பொருளாதாரத்தின் செழுமையைக் காட்டிடும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் வளர்ச்சியைக் கண்டு பல பொருளாதார நிபுணர்கள் வியக்கிறார்கள். அதுவும் கடந்த பதினைந்து ஆண்டுக் கால வளர்ச்சி உலகில் வேறு எங்கும் காண முடியாதது. அனைத்திந்திய மக்களின் டெபாஸிட் தொகையில் தொண்ணூறு சதவீதம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடையே உள்ளது. இதிலிருந்து இந்த வங்கிகளின் சேவையுணர்வு மக்களை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறது என்பது புலனாகும்.

1969-ஆம் ஆண்டில் 65,000 மக்கள் தொகைக்கு ஒரு வங்கிக் கிளை என்ற வீதத்தில் செயல்பட்டு வந்தது. ஆனால் இந்த நிலை மாறி' இப்போது 15,000 மக்களுக்கு ஒரு கிளை என்ற அளவில் பெருகியிருக்கிறது. இன்றுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் 4452 வங்கிக் கிளைகளில் முக்கால் பங்குக்குமேல் கிராமப்புறங்களில்தான் செயற்படுகின்றன. மொத்தம் 170 வங்கிகள், 9040 கிளைகளுடன் கிராமப்புறங்களில் செயற்பட்டு வருகின்றன. தேசிய வருமானத்தில் வங்கிகளிலுள்ள டிபாஸிட் தொகை 32 சதவீதமாக அமைந்துள்ளது. இதே மாதிரி 1951-இல் 2647 கோடி ரூபாயாக இருந்த டிபாஸிட் தொகை, 1969-இல் 4646 கோடியாக உயர்ந்தது. ஆனால் இந்த ஆண்டு 65,229 கோடியாக, பிரம்மாண்டமான வளர்ச்சி அடைந்திருக்கிறது.

1936-ஆம் ஆண்டுக்கு முன் ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட வங்கி நடவடிக்கைகளை, இந்தியாவில் இயங்கி வந்த ஐரோப்பிய வங்கிகளே கையாண்டு வந்தன. பல நாட்டு நாணயங்களில் குறிப்பிட்ட வர்த்தகப் பட்டியல்களை இந்திய நாணயத்துக்கு மாற்றுவதே இந்த ஐரோப்பிய வங்கிகளின் முக்கியப் பணியாக இருந்து வந்தது. அப்போது; கிழக்கு ஆசிய நாடுகளில் ஏராளமான இந்திய வர்த்தகர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தியாவுடன் இந்த நாடுகள் நடத்தும் ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரத்துக்குரிய வங்கி நடவடிக்கைகளை ஓர் இந்திய வங்கியே மேற்கொள்ள வேண்டும் என்ற உன்னதக் குறிக்கோளுடன் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் 1936, நவம்பர் மாதம் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்திய வங்கிகளில் பெரும்பாலானவை அந்நியச் செலாவணிக் கணக்குகளை மேற்கொண்டு வருகின்றன. வங்கிகள் உருவான நோக்கத்தையும் அதன் முக்கியக் கடமையுமான நாணய மாற்றுதல் பணியைச் செய்து வருவதையும் குறிப்பிடவே இதைச் சொன்னேன்.

தேசிய மயமாக்கப்பட்டதிலிருந்து அரசு அவ்வப்போது கொண்டு வரும் முற்போக்குத் திட்டங்களைச் செயலாக்குவதில் இந்திய வங்கிகள் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன. இப்போதும் பார்க்கலாம். ஏழை எளிய மக்கள், சொந்தமாகத் தொழில் தொடங்கி நடத்த, ஊனமுற்றோர் மறுவாழ்வு என்றெல்லாம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவிகளை அளித்து வருகின்றன. இந்தச் செயல் பெரிய விழாவைப் போலவே நடக்கிறது. வங்கியின் மொத்த டிபாஸிட்டில் ஒரு சதவீதம் வேலை கிடைக்காத பட்டதாரிகள் சொந்தத் தொழில் நடத்த கடனாக அளிக்கப்படுகிறது.

விரிவடைந்து வரும் வங்கிகளின் சேவையும் உதவிகளும் கிராமப்புற மக்களையும் எட்ட வேண்டும் என்ற கருத்தில் மாவட்ட அளவில் வங்கிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு வங்கியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு, அந்த வங்கி, அம்மாவட்டத்தின் 'வழிகாட்டி வங்கி'யாகச் (Lead Bank) செயல்படுகிறது. அந்த மாவட்டத்தில் வங்கிக் கிளைகள் திறப்பதற்கு ஏற்ற இடங்களை ஆய்வுசெய்து தேர்ந்தெடுத்து எந்த வங்கி அங்கே கிளை திறப்பது என்று முடிவு செய்வதும், அம்மாவட்டத்தின் கடன் தேவைத் திட்டத்தை வடிவமைத்து, எந்த எந்த வங்கிகள் எந்த எந்த அளவில், வகையில் அந்தத் தேவைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்று நிர்ணயிப்பதும், அவ்வாறு நிர்ணயமான இலக்குகளை அடைவதில் ஏற்படும் தடைகளை நீக்கி, வங்கிகளால் மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு வகை செய்வதும் இந்த மாவட்ட அளவிலான வங்கிக் குழுக்களின் நோக்கமாகும்.



கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ்க் கிராம மக்களுக்கு உதவி

இவையன்றி, மாநில அளவிலும், பிராந்திய அளவிலும் இத்தகைய குழுக்கள் செயல்பட்டு அந்த அந்த நிலையில் முன்னேற்றப் பணிகளுக்கு உதவுகின்றன. இந்தப் பணியில் வங்கிகள் தாங்களாக மட்டுமே செயல்படாமல் பல்வேறு அரசுத் துறை அதிகாரிகளையும் ஈடுபடுத்தி, ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில், வங்கிப் பணிகளை வழிப்படுத்திச் செயல்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வங்கிகள் திரட்டும் சேமிப்பில் (டிபாஸிட்) ஒன்பது சதவீதம் ரிசர்வ் வங்கியில் வைப்புப் பணமாக வைத்திருக்கவேண்டும். அதில் மூன்று சதவீதம் நிதி வட்டி ஈட்டுவதில்லை. மீதமுள்ள ஆறு சதவீதச் சேமிப்புப் பாக்கிக்கு ரிசர்வ் வங்கி ஒன்பது சதவீத வட்டி அளிக்கிறது.

இதுவன்றி, மொத்த டிபாஸிட்டுகளில் 35 சதவீதம் நிலுவைப் பணமாக (Statutory Liquidity) மத்திய—மாநில அரசுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களில் முடக்கப்படுகிறது. அவ்வகை ஒதுக்கீட்டுப் பணத்தில் சுமார் ஏழரைச் சதவீத வட்டி வங்கிகளுக்குக் கிட்டுகிறது. மேலும் இந்திய உணவுக் கார்ப்பொரேஷனின் தானியச்சேகரிப்புத் தேவைகளுக்காகவும் மற்றும் அதன் சில்லறைப் பணிகளுக்காகவும் வங்கிகளின் மொத்தச் சேமிப்பில் 11 லிருந்து 12 சதவீதம் அளிக்கப்படுகிறது.

இத்தகைய ஒதுக்கீடுகள் போக மீதம் இருப்பதே பல்வேறு துறைகளுக்குக் கடனுதவியாக அளிக்கப்பட்டு வருகிறது. அதிலும் நாற்பது சதவீதம் முன்னுரிமைத் துறையினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயம், சிறுதொழில், சிறுஅளவிலான நில, நீர்ப் போக்குவரத்து, சிறு வர்த்தகம், அலுவலர்கள் மற்றும் சொந்தத் தொழில் செய்வோர், கல்வி மற்றும் நலிந்த பிரிவினரின் கடன் தேவைகள் இந்த முன்னுரிமைத் துறையில் அடங்குவன.

மேற்சொன்ன ஒதுக்கீடுகளால் அபிவிருத்திக்கு உதவுவது மட்டுமின்றி, விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வங்கிகள் தங்கள் பங்கை ஆற்றி வருகின்றன. வங்கிகளின் மொத்தச் சேமிப்பில் 54 சதவீதம் (சேமிப்பில் 9 சதவீதம், நிலுவைப் பணம் 35 சதவீதம், அட்ஹாக் டிபாஸிட் 10 சதவீதம்) ரிசர்வ் வங்கியில் காப்பு டிபாஸிட்டாக வைத்திருக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. போதிய உற்பத்தி இல்லாமல் பணப் புழக்கம் மட்டும் அதிகமாக இருந்தால், பொருள்களின் விலை உயரத்தானே செய்யும்? அதனால் இந்த முறையாலும் விலையுயர்வு ஓரளவு கட்டுப்படுத்தப்படுகிறது.

நாட்டுடைமை ஆக்கப்பட்டதிலிருந்து இந்திய வங்கிகள் தரத்திலும் எண்ணிக்கையிலும் அடைந்துள்ள வளர்ச்சிக்கு ஈடு இணை இல்லை. நமது ரிசர்வ் வங்கியும் மற்ற எந்த நாட்டிலுமுள்ள மத்திய வங்கியைப் போல் அல்லாமல் தேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் வங்கிகளை ஈடுபடுத்துவதிலும் முனைப்பாயுள்ளது. அதே மாதிரி கண்காணிப்பிலும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது.

நாட்டின் பசுமையிலும், வெண்மைப் புரட்சிகளின் வெற்றியிலும் வங்கிகளின் பங்கு மகத்தானது. தொழில் துறையிலும், பிற்பட்ட பகுதிகளில் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கு வங்கிகள் தாராளமாகக் கடனுதவி அளிக்கின்றன. இத்தகைய பணிகளினால், வங்கிகளின் லாபநோக்கம் சற்றே பின் தள்ளப்பட்டுச் சேவை நோக்கமே மேலோங்கியிருக்கிறது.

வெளிநாட்டில் பணி புரியும் இந்திய மக்களைக் கவர்ந்து, இந்திய வங்கிகளில் முதலீடு செய்யத் தூண்டும் திட்டங்கள் பல செயற்பட்டு வருகின்றன. வெளிநாட்டு இந்தியப் பிரஜைகளின் சேமிப்புக்கு இரண்டு சதவீத வட்டி அதிகம் தரப்படுகிறது.

இப்படிப் பல வழிகளிலும் வங்கிகளின் பணி விரிவடைந்து வருவதற்கேற்ப, வங்கித் துறைக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்வதிலும் புதிய முறைகள் புகுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களிடம் அன்பாக நடந்து கொண்டு மலர்ந்த முகத்துடன் பணியாற்ற வேண்டி ஊழியர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்தியா மேலும் பொருளாதார நிலையில் முன்னேறவும் வங்கிகள் ஆற்றவேண்டிய பணி இன்னும் நிறைய இருக்கிறது. அதற்கேற்ப வங்கிகளின் செயல்திறன் உயரவேண்டும். மனித உழைப்புடன் யந்திர உதவியும் செயல்திறனை உயர்த்த உபயோகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த முறையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மத்திய நிர்வாகம் சிந்தனை செய்து செயல்படத் தொடங்கியிருக்கிறது.

வங்கிகளின் வளர்ச்சியைக் காட்ட இந்தக் கட்டுரையில் மேலும் பல புள்ளிவிவரங்களைக் காட்ட முடியும்? அவற்றுக்கெல்லாம் தலையாயது ஏழை எளிய மக்களும் வங்கிகளைத் தங்கள் நண்பனாக எண்ணிப் பாராட்டுவதேயாகும்.

*

மாசிலா மேனி

மாசிலா மேனியெழில் பெற நீங்கள் மனதில் முடிவெடுத்தால் போதும்.

தினமும் உங்களுக்கெனச் சிறிது நேரம் ஒதுக்குங்கள். கூடவே கொஞ்சம் லாக்டோ-காலமைனும் எடுத்துக்கொள்ளுங்கள்.

லாக்டோ-காலமைன் மாசுமறுக்களை அகற்றுகிறது. உங்கள் மேனியை மென்மையாகவும் மாசற்றதாகவும் வைத்திருக்கிறது.

லாக்டோ-காலமைன். ஒப்பனைத் திரையிட்டு மறைக்கவே விரும்பாத உன்னத எழிலைத் தருவது.

ஆம், எழிலான மேனியில் மறைக்க எதுவுமே இல்லை!

லாக்டோ-காலமைன்

Sista's-DIL-13/84 TAM

சொந்தம் கொண்டாடி பறந்திடுவீர் வெளிநாட்டிற்கு!



நீங்கள் அறிந்தவரோடு பறந்திடுதல் அறிவார்ந்த செயல். ஏர்-இந்தியா, நீங்கள் அறிந்ததே. உங்களை வரவேற்றுபசரிக்கும் ஏர்லைன். இந்திய மரபினின்று வழுவாத உபசரிப்பின் உன்னதம் உங்களை வரவேற்கிறது. நமது விமான பணிப்பெண்கள்—உங்கள் மொழி பேசி, உங்கள் தேவையுணர்ந்து பணியாற்றும் பாங்கு; உங்கள் குழந்தைகளையும், முதியோரையும் சிறப்புடன் கவனிக்கும் கனிவு; நாச்சுவைக்கு விரும்பியவாறு சைவ, அசைவ உணவுகள். வீட்டை விட்டகன்றதாகவே உணரமாட்டீர்கள். சொந்த மனிதரோடு பறக்கும் உணர்வுகள் உங்களுக்கு.

ஏர்-இந்தியா, பறக்கப் பரம சுகம். ஏனென்னில், உங்களைப் புரிந்துகொள்ள எங்களால் மட்டுமே இயலும்.

ஏர்-இந்தியா

AIR-INDIA

ஐம்பெருங் கண்டங்களினூடே அரும்பெரும் இந்திய உபசரிப்பு

கரூர் வைஸ்யா வங்கியின் தீபாவளி வாழ்த்துக்கள்

தீபாவளி—விளக்குகளும் வண்ணச் சுடர்களும் பிரகாசிக்கும் திருநாள். மனமகிழ்ச்சியையும் பொருள் வளத்தையும் வரவேற்கும் கொண்டாட்ட தினம்.

கரூர் வைஸ்யா வங்கியினர், இவ்விழாக்கால குதூகலத்தில் உங்களுடன் பங்குகொண்டு, இந்நாளின் மகிழ்ச்சி உங்கள் இல்லத்தில் எந்நாளும் தங்கவேண்டும் என்று வாழ்த்துகிறார்கள்.

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

பதிவு & மத்திய அலுவலகம்: கரூர்-639 002

அன்னியச் செலாவணியில் வர்த்தகம் புரிய அங்கீகாரம் பெற்றவர்கள்

சேர்மன்:
G. வெங்கடேசம்

பெருமை மிகு மரபு - அத்துடன்
புதுமை மிகு கண்ணோட்டம்

CO M84.28

தெய்மணம்

நா. பார்த்தசாரதி

முத்துரங்கத்தை நான் முதல் முதலாகச் சந்தித்தது பாண்டி பாஜாரில் ஒரு வெற்றிலை பாக்குக் கடை அருகில். ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்து ஒரு மாலைத் தினசரி வாங்கிக் கொண்டு நான் கடைக்காரனிடம் பாக்கிச் சில்லறைக்காகக் காத்து நின்றபோது, ''வணக்கம் சார், எப்படியிருக்கீங்க? இப்போ 'மணி மலர்'ல வர தொடர்கதை ரொம்ப நல்லாயிருக்கு சார்'' என்று புன் முறுவலோடு அருகே வந்தார், அந்த நடுத்தர வயது மனிதர். பாகவதர் கிராப். படர்ந்த முகம். நெற்றியில் குங்குமப் பொட்டு.

எனக்கு முதலில் குழப்பம். அப்புறம் தயக்கம். ''வணக்கம்! நீங்க யார்னு தெரியலியே? 'மணிமலர்'ல நான் இப்போ தொடர்கதை எதுவும் எழுதலியே?''

''நீங்க எதிலே எழுதினாலும் உங்க கதைகள்னு எனக்கு உசிர் சார்.''

''அது சரி! நீங்க யார்னே சொல்லலியே?''

''நடிகமணி முத்துரங்கம்னு கேள்விப்பட்டிருப்பீங்களே? சின்ன வயசிலே பாஸ்கரதாஸ் பால விநோத சபா நாடகக் கம்பெனியிலே இருந்தேன். அப்புறம் சினிமாத் துறைக்கு வந்து கே. கே.வி. நிறுவனப் படங்களிலே சில்லறை வேஷங்களைப் பிரமாதமாப் பண்ணினேன்.''

''அப்பிடியா? ரொம்ப மகிழ்ச்சி.''

''இப்பக்கூட ஏழரை மணிக்குத் தரணி ஸ்டூடியோவில படப்பிடிப்பு இருக்கு. நான் போயாகணும்.''

மனிதர் விடாமல் கூடவே நடக்கிறார். மணிபர்சை மூடுகிறேன் நான்.

''அடடே மணியாச்சே?''

''அப்போ நாம இன்னொரு நாள் பார்க்கலாமா?''

''ஒரு சின்ன உதவி. ஒரு கலைஞனோட கஷ்டத்தை இன்னொரு கலைஞன்தான் புரிஞ்சுக்க முடியும்.''

''சொல்லுங்கோ.''

''நான் இப்போ வீட்டிலே இருந்தேன்னு பட நிறுவன வண்டி வந்து அழைச்சிண்டு போகும். இப்போ இங்கே இருக்கிறதாலே என் செலவில நான்தான் போயாகணும். நம்மாலே படப்பிடிப்பு நின்னுடப்பிடாது.''

''நியாயந்தான்.''

''ஒரு பத்து ரூபாய் குடுத்தீங்கன்னு ஆட்டோவில் போயிடுவேன். வீட்டிலேருந்து கிளம்பறப்போ எடுத்துக்க மறந்துட்டேன். கலைஞர்களுக்கு ஞாபகமறதி கூடவே பிறந்த வியாதி. நீங்களும் அநுபவப்பட்டிருப்பீங்களே?''

''பக்கத்திலே எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் கடையிலே டெலிஃபோன் பண்ணிப்பேசி இங்கே நீங்க இருக்கிற தகவலைத் தெரிவிச்சுக் கார் அனுப்பச் சொல்லலாமா?''

''அது கஷ்டம் சார்! டைரக்டர், தயாரிப்பாளர், மானேஜர்லாம் செட்ல இருப்பாங்க அங்கே. ஃபோன் கிடையாது.''

''டாக்ஸியிலே போய் ஸ்டூடியோவில அவங்களையே டிஸ்போஸ் பண்ணி வாடகை குடுக்கச் சொல்லிடலாமே!''

''அது நல்லா இருக்காது சார்.''

நான் தயங்கி நின்றேன்.

''நீங்க நாளைக்குச் சாயங்காலம் பேப்பர் வாங்க வரப்ப ஒரு பத்து ரூபா நோட்டோடு இங்கே காத்திண்டிருப்பேன்.''

தயங்கித் தயங்கி ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினேன். வாங்கிக்கொண்டு நன்றி சொல்லி வணங்கிவிட்டுப் புறப்பட்டார் அவர். அதற்குப் பின் சொல்லியபடி மறுநாள் அந்தப் பத்து ரூபாயைத் திருப்பிக் கொடுக்க அவர் வரவுமில்லை. அவர் வரவுக்காக நான் காத்திருக்கவுமில்லை. நாளடைவில் எனக்கு அது மறந்தும் போயிற்று.

ஆறு மாதம் கழித்து உஸ்மான் ரோட்டில் சிவாவிஷ்ணு கோயில் எதிரே ஒரு சீவல் கடையில் நான் வெற்றிலை சீவல் வாங்கிக்கொண்டு நின்ற போது, ''அண்ணா, வணக்கம். முந்தா நாள் உங்களை டி.வி. யிலே பார்த்தேனே? செய்தி மலர்லே ராஜபார்ட் மாதிரி ஜம்னு பேசினீங்களே?'' என்று பின்புறம் ஒரு குரல் ஒலித்தது. திரும்பினால் முத்துரங்கம்.

''உங்க தயவுலே ஐம்பது கிராம் சீவலும் எட்டணா வெத்திலையும் வாங்கிக்கறேன்'' என்று என் இசைவுக்குக் காத்திராமலே மேற்படி அயிட்டங்களைக் கடைக்காரனிடம் வாங்கி முடித்து விட்டார் முத்துரங்கம். கேட்டதைவிட அதிகப்படியாக ஒரு பாக்கெட் பன்னீர்ப் புகையிலையும் வாங்கிக் கொண்டிருந்தார்.

''என்ன ரொம்ப நாளாய்த் தட்டுப்படவே இல்லையே! வெளியூர் போயிருந்தீங்களா?''

''அதையேன் கேட்கறீங்க அண்ணா? ஒரே வெளிப்புறப் படப்பிடிப்பு மயம். ஏழெட்டுப் படத்தில் மாட்டிக் கிட்டிருக்கேன். முந்தா நாள் ஊட்டி, நேத்து செஞ்சிக் கோட்டை, நாளைக்கு வைகை டாம்னு அலைச்சல்.''

இத்தனை வெளியாகிற படங்களிலே நடித்தும் இந்த மனிதருக்கு ஏன் இத்தனை பண வறட்சி என்ற திகைப்பு ஏற்பட்டது. நான் சினிமாப் பார்க்கிற ஆள் இல்லை. சினிமா இதழ்களையும் அதிகமாக இலட்சியம் செய்து படிக்கிற பழக்கமும் எனக்குக் கிடையாது. அந்த வகையில் நான் ஒரு ஞான சூன்யம்.

அதனால் முத்துரங்கம் ஏற்கெனவே நடித்ததாகக் கூறிய பழைய படங்களையும் நான் பார்த்திருக்கவில்லை. நடிக்கப் போகிற புதிய படங்களையும் பார்க்க நேரப் போவதில்லை. ஆனால் மனிதர் ஏன் கொஞ்சமும் சுயமரியாதையோ மானரோஷமோ இன்றித் தெருவில் பிச்சைக்கு அலைகிறார் என்று வியப்பும் ஆத்திரமும் அடைந்தேன். ஒரு வேளை பல சினிமாக்காரரர்கள், நாடக நடிகர்களைப் போல் இவருக்கும் இரண்டு மூன்று சம்சாரங்களும் ஏகப்பட்ட குழந்தை குட்டிகளும் இருக்குமோ? அவர் மேல் பரிதாபமாகவும் இருந்தது, ஆத்திரமாகவும் இருந்தது.

அந்த அந்த நேரங்களில் முத்துரங்கம் என்னைப் பற்றி நல்லதாக இரண்டு வார்த்தைகள் புகழ்ந்து சொல்லிவிட்டு ஏதாவது கேட்டால், தட்டாமல் உதவி வந்தேன். பலவீனந்தான்! கடவுளே தோத்திரப்பிரியர் என்கிறார்கள். பாமர மனிதனான நான் எந்த மட்டும்?

மூன்றாவது முறையாக ஆடிக் கிருத்திகை தினத்தன்றோ அல்லது வேறு ஏதாவது ஒரு நாளிலோ, சரியாக ஞாபகம் இல்லை, அதிகாலையில் விரதமிருந்து பட்டினியோடு வடபழநி கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்துவிட்டு வந்தேன். தினம் முழுவதும் பசியாயிருந்து திரும்பும்போது ஓர் ஓட்டலில் புகுந்து இட்லி வடைக்கு ஆர்டர் சொல்லிவிட்டுக் காத்திருந்தபோது முத்துரங்கம், திடீரென்று உதயமாகி எதிர் நாற்காலியில் உட்கார்ந்தார்.

‘‘முந்தா நாள் ராஜாஜி ஹால்லே பாரதி விழாவிலே பிரமாதமாப் பேசினீங்க. ‘பாரதியைக் காலச் சிமிழில் அடைக்க முடியாது. அவன் நம் தலைமுறைக்கு மட்டுமின்றி, வரப்போகிற பல தலைமுறைகளுக்கும் யுகபுருஷனாக விளங்குவான்’னு நீங்க வெண்கலக் குரல்லே முழங்கினப்போ கிளம்பின கரகோஷத்திலே இரண்டு கைகள் என்னோடது ஸார்.’’

‘‘பாரதி விழாவுக்கு நீர் வந்திருந்தீரா?’’

‘‘அண்ணா பேசறதா தெரிஞ்சதும் நான் எப்பிடி வராம இருக்க முடியும்?’’

‘‘இன்னும் ஒரு பிளேட் இட்லி வடை கொண்டுவாப்பா’’ என்று நானே முந்திக்கொண்டு முத்துரங்கத்துக்காகவும் சேர்த்து ஆர்டர் செய்தேன்.

இட்லி வடையைச் சாப்பிட்டுக் கொண்டே, ‘‘இந்த ஹோட்டல்லே நெய் ரோஸ்ட் ரொம்ப நல்லா இருக்கும்’’ என்று என்னிடம் புகழ்ந்துவிட்டு, ஸர்வரைக் கூப்பிட்டு இரண்டு நெய் ரோஸ்ட்டுக்கு ஆர்டரும் கொடுத்து விட்டார் முத்துரங்கம்.

சாப்பிட்டு முடித்ததும் பன்னிரண்டு ரூபாய் எண்பது காசு பில் கொடுத்தேன். என்னிடம் இருந்ததே பதினைந்து ரூபாய்தான்.

‘‘அண்ணா மன்னிக்கணும்! உங்க கிட்ட ரெண்டு வார்த்தை நின்னு பேசக் கூட எனக்கு இப்ப நேரம் இல்லே. மூவிடோன் ஸ்டூடியோவில் ரஜனிசாரோட ஒரு ரோல் பண்றேன். அவசரமாய்ப் போகணும். அப்புறம் பார்க்கலாம்’’ என்று மின்னலாய் மறைந்து விட்டார் முத்துரங்கம். நல்ல வேளை, ‘ஆட்டோவுக்குப் பத்து ரூபாய் கொடு’ என்று கேட்காமல் அந்த மட்டில் விட்டாரே என்ற மகிழ்ச்சியில் நான் படியிறங்க இருந்த போது, ‘‘சார், ஒரு நிமிஷம்’’ என்று குரல் கேட்டுத் திரும்பினேன். ஹோட்டல் பணப் பெட்டியில் அமர்ந்திருந்தவர் தாம் கூப்பிட்டார்.

திரும்பிப் போனேன்.

‘‘உங்க செல்வாக்கிலே யாரிட்டவாவது சிபாரிசு பண்ணி இந்த மனுஷனுக்கு ஒரு வேலை வாங்கி வைக்கப்படாதா? இப்படிப் பைத்தியமா அலைகிறானே?’’

‘‘யாரைச் சொல்றீங்க?’’

‘‘இப்போ உங்க செலவிலே டிபன் சாப்பிட்டுட்டுப் போறானே, முத்துரங்கம், அவனைத்தான்.’’

‘‘ஏன்? அதான் நிறைய சினிமாவிலே நடிச்சுண்டிருக்காரே?

‘‘மண்ணாங்கட்டி! அதை எல்லாம் நீங்க நம்பறீங்களா? சினிமாவும் இல்லை; தெருப் புழுதியுமில்லை; நானும் முத்துரங்கமும் ஒரே நாடகக் கம்பெனியிலேதான் இருந்தோம். கம்பெனி கலைஞ்சு போனதும் இனிமே யோக்கியமா வேற ஏதாவது தொழில் செஞ்சுதான் வாழணும்னு நான் கடனை உடனை வாங்கி இந்த ஓட்டலை வச்சேன். அவன் சினிமாவிலே சான்ஸ் தேடி அலைஞ்சான். இன்னிக்கி வரை எதுவும் கிடைக்கல்லே. ஏமாற்றத்திலும், விரக்தியிலும் ‘மனநோயாளியா’ மாறி, ‘இன்னிக்கி அங்கே, நாளைக்கி இங்கே படப்பிடிப்பு, நேத்திக்கி பெங்களூர் போயிருந்தேன்னு’ பார்க்கிறவங்க கிட்ட எல்லாம் பொய் சொல்லிக்கிட்டு முடிவிலே, ‘ரெண்டு ரூபா கைமாத்துக் குடுங்க’ன்னு முடிக்கிறது வழக்கம். இப்பல்லாம் பல பேர் இவன் தலையைப் பார்த்தாலே ஓட ஆரம்பிச்சுடறாங்க.’’

‘‘ஐயையோ. அப்படீன்னா இவரோட குடும்பம்?’’

‘‘குடும்பமா? இவனுக்கு ஏது குடும்பம்? தனிக்கட்டை சார்! அந்த நாளிலே நாடகக்காரனை நம்பி எவன் பெண் கொடுத்தான்?’’

‘‘நீங்களே இங்கே இந்த ஓட்டல்லே ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்து உட்கார்த்தி வைக்கப்படாதோ?’’

‘‘அதெல்லாம் ஏற்கெனவே செய்து பார்த்தாச்சு. இங்கேயே உட்கார்த்திப் பார்த்தேன். வர்ற வாடிக்கையாளரை எல்லாம் நிறுத்தி வச்சு, ‘உங்களுக்குத் தெரியுமோ, சினிமாவிலே கேரெக்டர் ரோல் எல்லாம் பண்ணியிருக்கேன். இதோ இப்பக் கூடத் தரணி ஸ்டூடியோவில படப்பிடிப்பு இருக்கு. உடனே போயாகணும்னு’ சொல்லுவான். தொந்தரவு தாங்காமப் போச்சு. முத்துரங்கம் நல்ல கலைஞன்தான். ஆனா விரக்தியும் ஏமாற்றமும் அவனை மன நோயாளியாவே ஆக்கிடிச்சு!’’

‘‘அவரைப்பத்தி இவ்வளவு தெரிஞ்சும் என்னைக் கூப்பிட்டு அவருக்கு வேலை கொடுக்கச் சொல்றீங்களே?’’

‘‘ஒரு நல்ல வேலையாப் பார்த்துக் கொடுத்து, உங்களை மாதிரி ஒருத்தர் படிப்படியா அறிவுரை கூறி மெல்ல மெல்ல மனசை மாத்தினீங்கன்னா, முத்துரங்கத்தோட பைத்தியத்தைத் தெளியப் பண்ணிடலாம்னு நெனைக்கிறேன்.’’

‘‘அவர் எவ்வளவு காலமா இப்பிடி இருக்கார்?’’

‘‘பத்து வருஷத்துக்கு மேலேயே இருக்கலாம். சொந்தமாப் பாடத் தெரியும். சங்கீத ஞானமும் உண்டு.’’

‘‘பத்து வருஷக் காலமாகத் தேய்ந்துபோன ஒரு கலையுணர்ச்சியை இனிமேல் சரிப்படுத்த முடியுமான்னு எனக்கே சந்தேகமாகத்தான் இருக்கு.’’

‘‘நீங்க படித்தவர். எழுத்தாளர். மனித மனங்களின் நுணுக்கங்களை அறிந்தவர். உங்க முயற்சி ஒருவேளை பயன் அளிக்கலாம். என்னாலே முடியாதது ஒருவேளை உங்களாலே முடியலாம். ஒரு நல்ல கலைஞன் வீணாப் போயிடக் கூடாதுங்கறதுதான் என்னோட கவலை.’’

‘‘பார்க்கலாம். முயற்சி செய்யறேன்’’ என்று அவருக்கு உறுதி கூறிவிட்டுத் திரும்பினேன்.

என் அதிர்ஷ்டமோ, அல்லது துரதிர்ஷ்டமோ தெரியவில்லை. பனகல் பூங்கா அருகே அடுத்த வாரமே முத்துரங்கத்தை நான் சந்திக்க நேர்ந்தது. சாலையோரத்துக் கரும்பு ஜூஸ் வியாபாரியிடம் கரும்புச் சாறு கேட்டுவிட்டு, அவன் பிழிந்து தருவதற்காகக் காத்திருந்தபோது, ‘‘அண்ணா வணக்கம்! பூம்பொழில்லே அந்தச் சிறுகதை, ஜமாய்ச்சிருக்கீங்க’’ என்ற குரலுடன் முத்துரங்கம் உதயமானார்.

‘‘நான் பூம்பொழில்லே கதை எதுவுமே எழுதலியே முத்துரங்கம்.’’

‘‘நீங்க எதிலே எழுதினாலும் எழுதாவிட்டாலும் உங்க கதைன்னா எனக்கு உசிர் சார்.’’

இன்னொரு கிளாஸ் கரும்புச் சாறுக்குச் சொல்லிவிட்டு அருந்தி முடித்த பின், ‘‘முத்துரங்கம், உங்க கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும். எங்கூட ஒரு பத்து நிமிஷம் பார்க்குக்கு வரமுடியுமா? அவசரம் ஒண்ணும் இல்லியே உங்களுக்கு?’’ என்று ஆரம்பித்தேன்.

‘‘அவசரந்தான். பார்க்கவி ஸ்டூடியோவில நவபாரதி மூவீஸாரின் படத்திலே தகப்பனாரா நடிக்கிறேன். மகன் யார் தெரியுமா? சிவாஜிதான். அதாவது படத்திலே. பரவாயில்லே, வாங்கோ. உங்களோட பேசிட்டு அப்புறமாப் போறேன்.’’

பார்க்கில் கூட்டம் அதிகம் இல்லாத ஒரு மூலை பெஞ்சாகப் பார்த்து அமர்ந்தோம். நான் இதமான குரலில் ஆரம்பித்தேன்:

‘‘இதோ பாருங்க, முத்துரங்கம்! உங்களுக்கும் வயசாச்சு. நீங்க இன்னும் சின்னக் குழந்தை இல்லே. இப்படிச் சுத்தறது உங்களுக்கே நல்லா இருக்கா? உங்களுக்குத் தெரிஞ்ச சங்கீத ஞானத்

திலே நாலு குழந்தைகளுக்குச் 'சங்கீதம்' சொல்லிக் கொடுத்தாக் கூட மாசம் நானூறு ஐந்நூறு சம்பாதிக்கலாம். சினிமா இசை உங்களைப் பைத்தியமாக ஆக்கி விட்டதைப் பத்தி நீங்களே வருத்தப்படணும். நீங்க மனசு மாறி நல்லபடி வர்றதா இருந்தா, நானே நாலு டியூஷனுக்கு ஏற்பாடு பண்றேன்.''

''என் மேலே பொறாமையிலே, யாரோ என்னைப் பத்தி உங்க கிட்ட தப்பாச் சொல்லியிருக்காங்க. டியூஷனாவது ஒண்ணாவது? எனக்கு அதுக்கெல்லாம் எங்கே நேரம் இருக்கு? இன்னிக்கி நவபாரதி மூவீஸ்ல படப்பிடிப்பு இருக்கு. நாளைக்கி சாந்தி]சினிடோன்லே, நாளன்னிக்கி ஆர். கே. வி. பிக்சர்ஸ்ல ஒரு நிமிஷம் கூட மிச்சமில்லே. இதோ பார்க்கவி ஸ்டூடியோவுக்குக் கிளம்பிண்டேயிருக்கேன்'' என்று எழுந்திருந்தார் முத்துரங்கம்.

''இந்தாங்க, இதை வச்சுக்குங்க. ஆட்டோவுக்குத் தேவைப்படும்'' என்று அவர் கேட்பதற்கு முன் நானாகவே பத்து ரூபாயை நீட்டிவிட்டு விடை பெற்றுக் கொண்டேன். வழக்கம் போல் முதலில் ஆத்திரமும் பின்பு பரிதாபமும் ஏற்பட்டன.

என்றுமே இனிமேல் திருத்த முடியாத மனத்தளவுக்குத் தேய்ந்து போனபின் ஒரு கலைஞனின் மனத்தை மீண்டும் மறுமலர்ச்சியும் முழுமையும் பெறச் செய்ய முடியாதென்று என்னுள் ஒரு தீர்மானமான முடிவே ஏற்பட்டிருந்தது. கொஞ்ச நஞ்சம் இல்லை. பல வருஷத் தேய்மானம்.

முத்துரங்கத்தை அவருடைய சொந்தக் கற்பனைகளிலும் சுகமான பொய்களிலுமே தொடர்ந்து வாழ விடுவதைத் தவிர வேறு' வழியில்லை என்பதை அவருடைய நண்பரான வடபழநி ஓட்டல் உரிமையாளருக்கு டெலிபோன் செய்து கூறினேன்.

எந்தப் படத்திலுமே நடிக்காத முத்துரங்கம் என்னளவில் இன்னும் கூட ஒரு சூப்பர் ஸ்டாராகவே தோன்றினர். ✱

மாபெரும் சக்திகள் பெற்றிட
மாந்திரீகக் கலை கற்றிடுங்கள்

மாந்திரீகப் பயிற்சி

தபால் வழி போதனுமுறை

மனித சக்தியை ஒன்று குவித்தால் - மானிலத்தில் ஆகாத காரியம் ஏதுமில்லை - அதுதான் மாந்திரீகப் பயிற்சியின் - தத்துவம். எவராலும் தன்னைத் துன்புறுத்தி விடாத ஒரு அசாத்திய நிலையை அடைந்திட மாந்திரீகப் பயிற்சி துணை நிற்கும். தீயோரைத் திருத்தி நல்வழிப்படுத்துவது - பில்லி சூன்யம், ஏவல், பேய் பிடித்தல், மோகினியாட்டம், செய்வினை, முனியோட்டம் என்ற தீய வகைகளால் தன்னைத் தீண்டி, தீது செய்துவிட முடியாத ஒரு தென்றல் நிலை பெற்றிடலாம், இவ்வித இழி நிலைகளால் இன்னல் வழிபட்டாரைக் கைகொடுத்துக் காப்பாற்றிக் கரை சேர்க்கலாம். வியாபார நலிவு ஏற்பட்டு விசனமுற்ருரைத் தேற்றுதல், முனி பிடித்து முடங்கியோரைக் குணம் செய்து காப்பது, மன நோய் கொண்டார்க்கு மந்திரித்த நீர் தெளித்துக் குணநலம் பெறச் செய்வது, கல்வியில் கசடு பட்டாரை நறுவழி தேற்றுதல், பதவி பட்டத்திற்காகக் காத்து நிற்பார்க்கு-கனிவான நலம் செய்விப்பது, விவாக தாமதங்களைத் தடுத்து - விரைவான விவாகங்களைச் செய்விப்பது, எண்ணிய காரியம் எதுவாயினும் ஈடேற்றிக் கொள்ளும் ஈடில்லா சக்தி பெறுவது, ஆகிய வழி அதிசய சக்திகளைப் பெற்றிட இந்த அரிய கலை வழி தவிர வேறெதுவும் இகமதில் இல்லை, இல்லை.

அன்றைய மாமுனிகள் அரிய இந்தக் கலைதனை அனைவருக்கும் கற்றுத்தர முன் வந்து நிற்கவில்லை - மூடி வைத்துக் காத்தனரே அல்லாது - அற்புத சக்திகளை அயல வரை அறிந்திட விட்டாரில்லை. கடுஞ் சோதனைகள் வழியாக - கரை தேறிய சிலருக்கே கற்பித்து மறைந்தனர். எல்லோரும் இன்புற்றுத் திளைக்கவேண்டும் - இது கலையால் இனியவைகள் பெற வேண்டும் என்ற நோக்கில் கற்றுத்தர முன் வந்து நிற்கின்ருேம். வந்திடுக. கற்றிடுக. வளமதைப் பெற்றிடுக. காலையிலோ மாலையிலோ - கடவுளைத் தொழுகின்ற வழக்கமது இருக்கவேண்டும். பெண், ஆண் என்ற பேதமின்றிக் கற்றிடலாம். அரிய சக்தி பெற்றிடலாம்.

தமிழ் மொழிப் பாடங்கள், தமிழில் மந்திரங்கள் - தங்கு தடையறக் கற்றிடும் எளிய நல்ல பயிற்சி முறைகள். எவரும் ஏற்றிடத் தக்க விளக்கங்கள். இப்போது 'இ' பிரிவில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சேரும் முறை, செலுத்தும் கட்டணம் அறிந்திட உங்கள் விலாசத்தைத் தெளிவாக எழுதி மனுச் செய்து கொள்ளுங்கள்.

குறிப்பு :—வெளிநாட்டு அன்பர்களும் மனுச் செய்து கொள்ளலாம்.

பிரபல ஜோதிடர் ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா யோகி

ராஜயோகி பயிற்சியாளர்

பிளாட் நெ. 204, கதவு எண் - 5,

அண்ணு நகர், மதுரை - 625 020,

போன்: 26312

கோமளா வாதன்

நம்பிக்கைகள் நசிப்பதில்லை



திடீரென்று கூச்சல் ஆரவாரம் குழப்பம். விர்விர்ரென்று கற்கள் பறந்தன. தெரு விளக்குகள் கண்ணுடிச் சில்லுகளாய்ச் சிதறின: தெருவோர ஜன்னல்கள், பெயர்ப் பலகைகள் அலங்கோலப்பட்டன. கதவுகள் அறைந்து மூடப்பட்டன. ஷட்டர்கள் பர்பர்ரென்று இழுபட்டன. ஸ் த ம் பி த் துப் போன ஜனங்கள் உணர்வு பெற்று விழுந்தடித்துக் கொண்டு ஓட, மாணவர் பட்டாளம் படையாய் ஆரவாரித்து வருகிறது.

''ஏதோ சொல்லித் தராத பாடத்திலே கேள்வி கேட்டுட்டானும் பரீட்சையிலே.''

''ஹூம்; யாரோ ஒரு பையனைச் சட்டைக் காலரைப் பிடிச்சு இழுத்துட்டாராம் டீச்சர்.''

''ம், நாமெல்லாம் வெயில்ல முட்டிக்கால் போட்டு மணிக் கணக்கிலே உக்காந்திருந்திருக்கமே!''

''அதெல்லாம் இல்லே; தவருன நடத்தைக்காக ஒரு மாணவனைப் பள்ளியிலிருந்து சஸ்பண்ட் பண்ணிட்டதால...''

சரியாய்ச் சொல்வார் இல்லை.

'அட, காரணம் எதுவாக வேண்டுமானுலும் இருக்கட்டுமே, இப்படியா பொதுச் சொத்துக்கு நாசம் விளைவிப்பது?' பொறுக்கவில்லை அண்ணுசாமிக்கு. குறுக்கே புகுந்து ஓடுகிருர்.

''வே ண் டா ண் டா, வேண்டாண்டா'' என்று ஒவ்வொருத்தனுய்க் கெஞ்சுகிருர்.

''எங்கப்பன் வீட்டுச் சொத்தா பாழாப் போவுதுன்னுதிங்கடா. உங்கப்பன் எங்கப்பன் எல்லார் வீட்டுச் சொத்துந்தாண்டா. அவங்கள்ளாம் கட்ற வரிப்பணந்தானேடா? இல்லாட்டாக் கவர்மெண்ட்லே எவனுனு, சொந்தப் பணத்தையாடா செலவு பண்ணி விளக்குப் போடருன்?''

''அப்பிடியா ஸார்? எங்கப்பாரு வரியே கட்றதில்லே. அதனுல் நான் அடிக்கலாம். குட்ரு கல்லை.'' கொல்லென்ற சி ரி ப் பி னு ா டே கலீரென்று கண்ணுடியின் சிலிர்ப்பு.

''இதெல்லாம் இன்னு த்ரில்லுனு இந்த ஸாருக்கு எப்படிடா தெரியும்?''

''சரிதான் அவரை விட்டுட்டு இப்படி வாங்கடா. முக்குலே பஸ் வருது பாரு.''

''பஸ்ஸா? பாட்டில் எங்கடா?'' தடிமாடு போல் வளர்ந்தும் இன்னும் ஸ்கூலை விட்டு நகராத பையன் கேட்டான்.

''அட பாவிங்களா, டேய், டேய்'' எ ன் று அண்ணுசாமி பதறினுர்.

தயார்ராய் வைத்திருந்த ஒரு பாட்டிலை விவரம் புரியாமல் அந்தப் பக்கம் வந்துவிட்ட பஸ் ஒன்றின் மீது வீச, குப்பென்று அது பற்ற, உள்ளிருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு இறங்கி ஓடினர்.

போலீஸ் வரும்போது எல்லோரும் தலை மறைவாகியிருக்கிருர்கள். கண்ணுடித் துண்டுகள் கீறி ரத்தம் வடியும் கால்களுடன் என்னவோ அவர்தாம் கலாட்டாவுக்குத் தலைமை தாங்கின மாதிரி, சிதறல்களின் நடுவில் ஓடாமல் நிற்கிருர் அண்ணுசாமி.

விடுவாரா? குடைந்து தள்ளுகிருர் இன்ஸ்பெக்டர்.

''சுத்தப் போக்கத்த ஆளாயிருக்கிங்களே ஸார். அடாவடிப் பசங்களைப் போய்க் கெஞ்சிட்டு நின்னீரே: ஆரம்பத்திலேயே போலீசைக் கூப்பிடணும்னு தோணலே.

''என்ன உத்தியோகம் பார்த்தீங்க? ஹை ஸ்கூல் டீச்சராயிருந்து இப்பதான் ரிடையராணிங்களா? என்னு வாத்தியார் வேலை? எத்தினி வருசம் பார்த்து என்னு பிரயோசனம் ஸார்? எவ்வளவு நஷ்டம் பார்த்திங்களா? ம்! பண்ணிட்டு அத்தனை பயலுவளும் தப்பிச்சு ஓடிட்டாங்க. கொஞ்சம் முன்யோசனையா, அவங்க கால்ல வுழறதுக்குப் பதிலா எங்களுக்கு ஒரு போன் அடிச்சிருந்திங்க, அத்தனை பயலுவளையும் அடைச்சுட்டுப் போயிருப்பேன். பஸ்ஸும் எரிஞ்சியிருக்காது.''

தலையெழுத்து. அத்தனையும் கேட்டுக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் வாக்கு மூலமும் கொடுத்துவிட்டு வரும்போது; கலாட்டா நடந்த இடத்தை விட்டுக் கால் நகர மறுக்கிறது. தள்ளாடி நிற்கிருர்.

சுற்றி நாசத்தின் விளைவுகள். கண்ணுடித் துண்டுகள் வெயிலில் மினுமினுக்கின்றன. சாலை முழுதும் அந்த மினுமினுப்புப் பாய் விரித்திருக்கிறது. சிதறல்களின் நடுவே சிறிதும் பெரிதுமாய்க் கற்கள். ச ற் று த் தள்ளி, சரிந்து ஒரு சடலத்தைப் போலப் பரப்பிக் கொண்டு கிடக்கும் பஸ்ஸைக் காணக் கண்ணீரே வ ந் து விடுகிறது. கற்பழிக்கப்பட்ட பெண்ணைப்போலச் சதுக்கத்தின் அலங்கோலம், குபுகுபுவென்று நெஞ்சில் ஆயாசத்தை நிரப்ப, நிற்கவும் திராணி இல்லாததுபோல் அருகிலிருந்த சுவரில் சாய்ந்து கொள்கிருர்.

கலிங்கப் போரின் முடிவில் மாமன்னன் அசோகன் போர்க்களத்தை இப்படித்தான் பார்வையிட்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட மனநிலையில்தான் இருந்திருக்க வேண்டும்.

என்ன நாசம், எத்தனை பாழ்!

யாருடையதாயிருந்தாலும் அது ஒரு சொத்து; உபயோகப்படும் ஒரு வஸ்து. அதை உடைப்பதிலோ, எரிப்பதிலோ நஷ்டந்தானே! ஈடு செய்யும் வரைக்கும் எல்லாருக்கும் கஷ்டந்தானே? ஏன் தெரியமாட்டேனென்கிறது. எப்படித் தெரியும்? அவர்கள் வளரும் சூழ்நிலை தெரியும்படியாகவா இருக்கிறது? எங்கே திரும்பினாலும் யாரைப் பார்த்தாலும் சுயநலம், சுயநலம், உன்னாலே எனக்குக் காரியம் ஆகணும்னுத்தான் நீ இருக்கிறதையே கவனிப்பேன். இல்லாட்டா நீ இருக்கிறதும் இல்லாததும் எனக்கு ஒண்ணுதான். இதற்கு விமோசனம் எங்கே?''

''ஐயையோ, இதென்ன கண்ராவி?'' என்று வரவேற்கிறாள் காமாட்சி. இத்தனை வருஷமும் அவரையொட்டி, அவர் கொள்கைகளுக்காகவும் நம்பிக்கைகளுக்காகவும தன் கொள்கைகளையும் அவற்றோடு சுக துக்கங்களையும் ஈடுவைத்து வாழ்ந்து பழகி விட்டவள்.

கீறின இடங்களில் பர்னால் தடவி, இன்னும் ஏதாவது கண்ணாடித் துண்டு பொத்துக் கொண்டிருக்கிறதா என்று விரலால் நிரடிப் பார்க்கும் அவளைப் பார்த்துக் கொண்டே ஒரு குரல் புலம்பித் தீர்க்கிறார் அண்ணுசாமி. ''எங்கேடி போய் நிக்கப் போறோம் நாம்?''

''இன்னமும் ஸ்கூல் பசங்களுக்குத் தலை முழுகலியா நீங்க? அவங்க கலாட்டாவிலெல்லாம் நடுவிலே பூரலாமா? இசகு பெசகா அடிபட்டிருந்தா? தலையிலே ஒருகால் ஒரு கல் விழுந்திருந்தா?''

''காலுக்குப் பதிலாத் தலைக்கு மருந்து தடவிக் கட்டுப் போட்டிருப்பேடி.''

''போதும், போதும். ஸ்கூல்லதான் பசங்ககிட்டக் கெஞ்சிக் கெஞ்சி முப்பது வருஷம் மாரடிச்சுண்டாச்சு. ஓய்வு பெத்த பிறகு கூடவா தொங்கணும்னு தலையெழுத்து? காலையிலே என் தம்பி வந்திருந்தான். இனிமே சம்சார வண்டி எப்படி அக்கான்னான். இத்தனை நாள்தான் அத்திம்பேர் ஆதர்ச வாத்தியாரா இருந்துட்டாரே. இனிமேயானா, பிஸினஸ்லே சேரலாமோல்லியோ? எங்களுக்கும் நம்ம ஆள்னு ஒருத்தர் வேணும்னான். நான் பதில் சொல்லலே. என்ன செய்யலாம்?''

அவர் யோசனை அவளுக்குள் சிறியதாய் நம்பிக்கையை நுழைக்கிறது. ''ஒண்ணும் இப்பவே தலையாட்டிடணும்னு இல்லே. யோசிச்சுச் சொன்னாப் போதும். நம்ம கேஸையும் பார்த்துக்கணும் இல்லே.''

''பாத்துக்கத் தெரியாத ஆள்னு இன்னுமா நீ தெரிஞ்சுக்கல்லே? இருபது வருஷம் முன்னாடியே நடேசையர் சொல்லியிருக்காரேடி.''

நடேசையர் அதே தனியார் பள்ளியில் சக ஆசிரியர். ஒரு தரம் யாரோ பையனுக்குப் பரீட்சைக்குப் பணம் கட்டமுடியாத நிலை. வீட்டில் அரிசிக்காக நடேசையரிடமிருந்தே கடன் வாங்கி வைத்திருந்த பதினைந்து ரூபாயைச் சொல்லாமல் கொள்ளாமல் கொண்டு போய் அந்தப் பையன் பேரில் கட்டிவிட்டார் அண்ணுசாமி. விஷயம் தெரிய வந்ததும் சொல்லிச் சொல்லிக் காட்டினார் நடேசையர்.

''பாரு'' என்றார் பையனிடம். ''கர்ணன், குமணன் இவங்கள்ளாம் ஏதோ பாடத்திலே வர்றவங்கன்னு நெனைக்காதடா. இப்பவும் இருக்காங்க, வள்ளல் பரம்பரையிலே வந்தவர் நம்ம அண்ணுசாமி. ஸாருக்கு ஒரு சிலை எடுத்திடுடா. அப்பத்தான் நன்றிக் கடன் தீரும்.''

எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனையோ பேர். ஆனால் அண்ணுசாமி அசையாத சாமிதான். எதற்கும் கோபப்பட்டதில்லை. ஒருத்தர் பொருளுக்கு ஆசைப்பட்டதில்லை. ஆனாலும் அவர் ஜாதகவாசியோ என்னவோ, யாரும் அவரைப் புகழ்ந்ததில்லை; பிழைக்கத் தெரியாதவர் என்பார்கள்.

''நடேசையராட்டம் நாலாயிரம் பேர் சொல்லியிருக்கா. நமக்கும் காலம் ஆச்சு. உலகமும் மாறியிருக்கறதைப் பாத்தாவதுக் கத்துக்கணும்.''

''கத்துக் குடுக்கறதே தொழில், கடவுளுக்கு அர்ப்பணம்னு இருக்கேன். என்னையே கத்துக்கச் சொல்லறே நீ. அப்போல்லாம் ஸ்கூல்லே எப்படிக் கத்துக் குடுப்பா, தெரியுமோ? அடுத்த தலைமுறையை வளர்க்கறோம், நாளைய சமுதாயத்துக்கு அஸ்திவாரம் போடறோம்னு அக்கறையாச் சொல்லிக் குடுப்பா. அன்பே சிவம், ஆறுவது சினம்னு ஆரம்பப் பாடத்தைத் தொடங்கினா, சின்னப் பசங்களுக்குக் கள்ளமில்லாத மனசிலே பசுமரத்தாணியாப் பதிஞ்சுது. ஆயுசுக்கும் நினைவிருந்தது. கோபமும் துவம்சமும் குறையப் பண்ணித்து. இப்ப? ஆப்பிள், ஆட்டம் பாம்னு இங்கிலீஷ்லேயும் நர்ஸரி ரைம்லேயுந்தானே ஆரம்பிக்கிறோம்! உடனே அவன், அடிடா, உதைடா, உடைடா, எங்கிறான். வாத்தியார்களும், கூலிக்கு மாரடிக்கறவன்களாப் போயிட்டான்.''

''ஏன், உங்களைப் போல உதாரண புருஷாளைப் பார்த்து உருப்படலாமே! நேத்திக்கு வரையிலே வருஷமும் வாத்தியாராதானே குப்பை கொட்டியிருக்கீங்க? போறது. நடேசையர் சொன்ன மாதிரி சிலை வெச்சிருந்தாலும் பரவாயில்லைங்கலாம். க்கும்.'' நொடிப்பைக் குரலில் காட்டி விருட்டென்று உள்ளே மறைகிறாள் காமாட்சி.

பிரமித்துப் போகிறார் அண்ணுசாமி. 'காமாட்சியா? காந்திக்குக் கஸ்தூர்பா போல் தமக்குக் காமாட்சியென்றிருந்தாரே. இல்லாமையா, இயலாமையா? இல்லை அவள் தம்பி வந்து நினைவூட்டி விட்டுப் போன எதிர்காலப் பத்திர உணர்வா? காலையில் அந்த இன்ஸ்பெக்டரோ, போக்கத்த ஆள் என்கிறார். பையன்களோ, 'இவருக்கென்னடா தெரியும் 'திரில்' என்கிறார்கள்.'

'அப்படியென்ன அவர் பிரயோசனமில்லாத விஷயங்களாகவா சொல்கிறார்? என்னவோ திடீரென்று அவர் பிடிவாதமாய் நம்பிக்கை வைத்திருந்த கொள்கைகளெல்லாம் பயனற்றுப் போய் விட்டன போலவும் அவரே அநாதையாகி விட்டது போலவும் உலகில் அத்தனை பேரும் ஒரு கட்சி, அவர் மட்டும் தனித்து விடப்பட்டிருக்கிறார்' என்ற பயங்கரமான தனிமை ஒன்று உணர்வு எழுந்தது.

மனத்து எண்ணங்களை உதறிவிட்டு வெளியில் புறப்பட்டார். கொஞ்சம் நடந்ததும் களைப்புத் தெரிகிறது. 'மில் காம்பவுண்டைத் தாண்டிக் கொஞ்சம் போய்க் கிழக்கே திரும்பினால் ஒரு குளம் வரும். அதன் அருகில் புதர் புதராய்ச் செடியும் பெரிய ஆலமரங்களும் இருக்கும். அதிகம் ஆள் நடமாட்டம் இருக்காது' என்று தீர்மானித்து மெள்ள நடக்கிறார். மூச்சிரைக்கிறது. அப்படியே ஒரு மரத்தடியில் உட்காருகிறார்.

என்ன செய்யலாம் திடுதிப்பென்று வீட்டை விட்டு வந்து விட்டாரே! தேடுவார்களோ? தேடினால் தேடட்டும் என்றுதான் தோன்றுகிறது. கோவில் மண்டபத்தில் படுத்துக்கொண்டு விநியோகத்தை வாங்கிச் சாப்பிட்டாலும் போயிற்று. ராமகிருஷ்ண மடம், அது, இதென் இந்த நாளில்தான் எத்தனையோ இருக்கின்றனவே!

அருகில் ஒரு செடி மறைவில் சலசலப்புக் கேட்கிறது. வெள்ளையாக ஏதோ அசைவது போல் இருக்கிறது.

முயலா?

சட்டென்று எழுந்து போய்ப் பார்க்கிறார். முதலில் சரியாய்த் தெரியவில்லை. அப்புறம் கிளையை விலக்கிப் பார்த்தால் ஒரு பையன். ஏழெட்டு வயசிருக்குமோ? கையைப் பின்னால் வைத்திருந்தான். அண்ணுசாமியைக் கண்ட மாத்திரத்தில் கண்களில் பீதி.

''என்னடா பண்றே இங்கே?''

பதில் இல்லை.

''இத்தனை நாழிக்கு என்ன பண்றே இங்கே?''

வாய் திறக்க வேண்டுமே! தலையைக் குனிந்துகொண்டு அசங்காமல் அப்படியே நிற்கிறான் பையன்.

''நீயும் எங்கேயானு எத்தையானுத் துவம்சம் பண்ணிட்டு இங்கே வந்து ஒளிஞ்சிண்டிருக்கியா? ஏண்டா?''

சட்டென்று அந்த இளமுகம் நிமிருகிறது. தலை வேகமாக ஆடுகிறது.

''இங்கே என்ன வேலை உனக்கு?''

திடீரென்று ஒரு தாவுத் தாவி அவரைத் தாண்டிக் கொண்டு ஓட எத்தனிக்கிறான். கையை நீட்டிக் கப்பென்று பிடித்து விடுகிறார். அவன் நகர்ந்த இடத்தில் செடியடியில் கறுப்பாகத் தெரிந்தது. அவனைப் பிடித்த பிடியை விடாமலே குனிந்து பார்க்கிறார்.



சின்ன நாயொன்று, கறுப்பாக முடங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது.

''யாருதுடா?''

மௌனம்.

''யாருதையானும் திருடிண்டு வந்துட்டியா?''

''ம்ஹூம்.'' தலை வேகமாக ஆடுகிறது.

''பின்னே உன்னுதா?''

அதற்கும் தலை மறுப்புத் தெரிவிக்கிறது.

''பின்னே யார்துடா சொல்லு.''

''யார்தும் இல்லே. தோ, அங்கே எங்க பேட்டையிலே வந்து சுத்திட்டிருந்திச்சி. மத்த பசங்கள்ளாம் கல்லால அடிச்சாங்க.''

நாயைப் பார்க்கிறார். நாட்டு நாயோடு கலப்புப் போலிருக்கிறது.

''ஐயோ பாவம்!''

அந்த அநுதாப வார்த்தைக்கு உடனே பலன் தெரிகிறது. பையனிடம் வார்த்தை வருகிறது.

''அல்லாரும் அடிச்சாப் பாவம் இல்லையா?'' அதனால்தான் இங்கே மறைவாகத் தூக்கி வந்தேன். ஆரிட்டவும் சொல்லல்லே. இங்கியும் வந்து அடிச்சுட்டாங்கன்னா. வலிக்கும்ல?''

''பலேடா ராஜா! ''

தட்டிக்கொடுக்கிறார் அண்ணாசாமி.

''நீ ஸ்கூலுக்குப் போறியோ?''

''ம்ஹூம். இஸ்கோலுக்குப் போயிட்டா அப்பாரு கூட யாரு கிருஷ்ணாயில் வண்டி தள்ளிட்டுப் போவாங்க?'' எதிர்க் கேள்விப் போடுகிறான்.

''வாஸ்தவந்தாண்டா; எனக்குத் தோணலே பாரு. உங்கப்பாக்குக் கெரோசின் வியாபாரமா?''

''ம். காலைல போயிட்டு அப்பாரும் நானும் இப்பத்தான் வந்தோம். அம்மா ரொட்டி சுட்டுக் கொடுத்திச்சு. நான் ரெண்டு துண்ணுட்டு ஒண்ணை ஜேபிலே போட்டுட்டு வந்துட்டேன். நாய்க்குப் பசிக்காது?''

அவன் நாயைப் பார்த்த பார்வையில் கருணை பொதிந்திருந்தது. அவருக்குப் புல்லரித்துப் போகிறது.

பிரதிபலனே எதிர்பாராமல் உபகாரம் செய்ய, இதோ ஒருத்தன் இருக்கிறானே! சமுதாயத்தில் ஈரம் அடியோடு வறண்டு விடவில்லையென்று தான் தோன்றுகிறது.

மணலடி நீராய் அன்பு ஊற்று இருக்கத்தான் செய்கிறது.

பையனை அணைத்துக்கொள்கிறார்.

''ரொம்ப சமத்துடா நீ. ஆமா, உனக்கு ஸ்கூலுக்குப் போகணும், படிக்கணும்னெல்லாம் இல்லியா?''

''இருக்கு. ஆனா, சாயங்கலாமா இந்நேரத்துக்கு இஸ்கோலு கிடையாதே?''

யோசிக்கிறார்; ஒரு நொடிதான்.

''சாயங்காலத்திலே இருக்கற ஸ்கூல் எனக்குத் தெரியும். நான் கூட்டிண்டு போறேன், வர்றியாடா?''

அவன் அவரை ஏறிட்டுப் பார்க்கிறான்.

''நிஜமாத்தாண்டா. தினம் இந்நேரத்துக்கு வந்துடு. புதுசா ஸ்லேட்டு, நோட்டுப் புஸ்தகமெல்லாங்கூட அங்கேயே குடுப்பாங்க. நான் காட்றேன். வா.''

அவன் கையிலிருந்த ரொட்டியை வாங்கிப் பிட்டு நாயிடம் போட்டுவிட்டு, தட்டியும் கொடுக்கிறார். அவன் கையைப் பிடித்துக் கொள்கிறார்.

''நீன்னா இருக்கு. சொல்லாமக் கொள்ளாமப் போயிட்டா, வீட்டிலே இருக்கறவ கவலைப்படுவாளேன்னு ஒரு துளி இருக்க வேண்டாம்?'' படிக்கட்டிலேயே பிடித்துக்கொள்கிறாள் காமாட்சி.

''இது யாரு இது?''

அண்ணாசாமி பையனைத் திரும்பிப்பார்க்கிறார். கன்னங்கரேலென்ற முகத்தில் வெள்ளையாய் இரண்டு விழிகள். மனசும் வெள்ளைதான்.

''புது மாணவன்டி. நீ வாடா ராஜா!'' அவனை அலாக்காய்த் தூக்கித் திண்ணைமேல் உட்கார வைக்கிறார்.

''புது மாணவனா?''

''புது மாணவன். இத்தனை நாள் மாரடிச்சுண்டதெல்லாம் விழலுக்கிறைச்ச நீர். இவன்தான் விளைநிலமாக் கெடைச்சிருக்கான். சமுதாயத்தில் ஈரம் அடியோட வத்திப் போயிடலே. இன்னும் லேசு பாசா இருக்குங்கறதுக்கு உதாரணம். உலர்ந்து போயிடாமப் பாத்துக்கணும். இப்படி இன்னும் எங்கெங்கோ ஈரப் பசை ஒட்டிண்டிருக்குன்னு தேடிக் கண்டு பிடிக்கணும். கண்டுபிடிச்சுக் கடைதேத்தணும். ரொம்பப் பெரிய வேலை காத்துண்டிருக்குடி. இதான் ஆரம்பம். நீ சொல்லுடா ராஜா. அன்பே சிவம், ஆறுவது சினம்.'' கணீரென்று ஆரம்பிக்கிறார் தமிழ் வாத்தியார் அண்ணாசாமி. ❋

புத்தர் பூனை

எல் ஏகே

புலிக்குப் பிறந்தது பூனை ஆகாது. ஆனால் பூனைக்குப் பிறந்தது பூனைதானே? அதுதான் இல்லை.

அசல் பூனை அப்பா- அம்மாவுக்கு அருமையாகப் பிறந்த மணிகண்டன், பூனை மாதிரியே நடந்து கொள்ளவில்லை. ஐயப்பசாமிக்கு வேண்டிக்கொண்டு, விரதமெல்லாம் இருந்து, பிறக்குமா என்று பிறந்த ஒரே ஆண் வாரிசு ப்ரமசாதுவாய்க் காட்சியளித்தது.

பட்டை பட்டையாய் விபூதி பூசிக்கொண்டது. துளசி மணி மாலையோ ருத்திராட்ச மாலையோ அகப்பட்டால் கழுத்தில் போட்டுக் கொண்டது. கண்ணை மூடிக்கொண்டு ஜபமும் தியானமும் பழகிற்று. அதைப் பார்க்கப் பார்க்க அப்பா - அம்மாப் பூனைகளுக்கு வயிறு 'பகீர்' என்றது.

சின்ன வயதில் பூனைகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். வயதானால் பூனையாய் லட்சணமாய் எலி வேட்டை ஆட வேண்டாமா?

வெறுமே பாலைக் குடித்துக் கொண்டு, அங்கணத்திலோ, அடுப்படியிலோ குளிர் காய்ந்தபடி கொண்டு சோம்பிக் கிடந்தால் என்ன அர்த்தம்?

நாளாக ஆக மணிகண்டன் நன்றாகப் புஸ¬ புஸ¬ என்று வளர்ந்து பருத்தது. அதன் கண்களும் மீசையும், "அட என் ராஜாக் குட்டி!" என்று தூக்கி மடியில் போட்டுக் கொஞ்சும்படி இருந்தன. ஆனாலும் சுபாவத்தில் அது ஒரு பூனையாகவே இருக்கவில்லை.

அம்மா-அப்பாப் பூனைகளைப் பெருத்த கவலை பிடித்துக் கொண்டது. அவற்றின் கவலையை அதிகப்படுத்துவது போல் வேறு பல சங்கதிகளும் நடக்கத் தொடங்கின.

மணிகண்டன் பூனையை மூஞ்சூறுகளோ சுண்டெலிகளோகூடச் சட்டை செய்யவில்லை. ஏன், அதை ஒரு பூனையாகவே அவை நினைக்கவில்லை.

இரவு இல்லை, பகல் இல்லை; எலிகளும் பெருச்சாளிகளும், வீடெங்கும் புகுந்து கொட்டம் அடித்தன.

மணிகண்டனோ அவையெல்லாம் தன் ஜன்மவிரோதிகள்; தனக்கு இரையாகித் தீர வேண்டிய பிராணிகள் என்றே எண்ணவில்லை.

அது கழுத்தில் ஜபமாலையோடு கண்ணை மூடி உட்கார்ந்திருக்கும். சுண்டெலிகளும், குண்டெலிகளும் அதைச் சுற்றிச் சுற்றி வந்து நமஸ்காரமும் பண்ணும்.

இது என்ன விசித்திரம்! ஒருவேளை மணிகண்டன், புத்த பகவானின் மறுபிறப்போ என்றுகூட அம்மா-அப்பாப் பூனைகள் எண்ணமிட்டன. தங்களது அருமைக் குட்டி உள்ளபடியே ஒரு பூனையாக விளங்க என்ன வழி என்று அல்லும் பகலும் யோசித்தன.

இதற்கிடையில் அன்றாடம் மணிகண்டனை அணுகி வலம் வந்து போகிற ஒரு வயல்எலிக்கும் மணிகண்டனுக்கும் சிநேகம் அதிகமாயிற்று. பொழுது சாய்ந்ததும் சாயாததுமாய் வந்து மணிகண்டனை அழைத்துக் கொண்டு வயல்காட்டுக்குப் போயிற்று.

அங்கங்கே வளைகளிலும் வங்குகளிலும் பாஷாணம் கலந்த பட்சணங்களோ பண்டங்களோ வைத்திருக்கும். மணிகண்டனை ஆசை காட்டி அவற்றையெல்லாம் ருசி பார்க்கச் சொல்லிற்று. அது மட்டுமா?

மணிகண்டனை வலுக்கட்டாயமாக அழைத்துக் கொண்டு எல்லா வகை எலிகளோடும் அதற்கு அறிமுகம் செய்து வைத்தது.

"இது யார் தெரியுமா? மணிகண்டன்! பூனைகளின் வருங்கால ராஜா! ஆனாலும் புத்தர் போல என்ன சாந்தமான குணம்! இல்லாவிட்டால் நானும் அவனும் இப்படி உயிர் நண்பர்களாக இத்தனை காலம் இருக்க முடியுமா?" என்று கேலியாகப் புகழ்ந்தது.

நாளுக்கு நாள் மணிகண்டனோடு எலிகளின் சகவாசம் அதிகரித்து வந்தது. தங்கள் ஜன்மப் பகையான பூனைகளில் ஒன்றைத் தங்களோடு வளைத்துப் போட்டுக் கொள்வதில் அவை போட்டி போட்டன.

அன்று மாலை மயங்கியதும் வழக்கம்போல் அந்த வயல்எலி மணிகண்டனை வெளியே உலாவி வர அழைத்தது. மணிகண்டனும் ஏதோ சொக்குப் பொடி போட்டது போல் அந்த எலி பின்னே ஆவலோடு கிளம்பிற்று.

"எங்கேடா கிளம்பறே?" என்று அதட்டியது அப்பாப் பூனை.

"சும்மா, இப்படி வெளியே...." என்று மென்று விழுங்கிற்று மணிகண்டன்.

"இதெல்லாம் உனக்கே நன்றாய் இருக்கா? பொழுது விடிஞ்சா உனக்குப் பிறந்த நாள். வேளை கெட்ட வேளையில் அங்கே இங்கே திரிஞ்சா நண்டோ பாம்போ உன்னைத் தீண்டும்; உன் உயிருக்கே ஆபத்தானாலும் ஆகும்!" என்றது அப்பாப் பூனை.

"போதும் போதும், உங்களுக்கு எப்போ பார்த்தாலும் இதே புலம்பல். எனக்கு என்ன வயதாகவில்லையா? என்னைப் பார்த்துக்கொள்ள எனக்குத் துப்பில்லையா?" என்று கத்திற்று மணிகண்டன்.

வயல் எலி குறுக்கே புகுந்து சொல்லிற்று: "அடடா! மணிகண்டனை நீங்க என்னன்னு நினைச்சீங்க? அதுவும் பூனைகளான உங்களுக்கெல்லாம் ஒரு உயிர் இல்லை; ஒன்பது உயிர்னு சொல்வாங்க! உங்க மணிகண்டனுக்கு-சேசே-எங்க மணிகண்டனுக்கு எதுவும் ஆபத்தும் வராது. அப்படி ஏதும் ஆபத்துன்னா நாங்க சும்மா பார்த்துக்கொண்டிருப்போமா? அந்தக் காலத்திலே ஒரு சுண்டெலி சிங்க ராஜாவையே ஆபத்திலிருந்து காப்பாத்தலையா?"

"வயல் எலி சொல்றது நூத்துக்கு நூறு உண்மை. பொழுது விடிஞ்சா நம்ம மணிகண்டனுக்குப் பிறந்த நாள் இல்லையா? அதுக்கு முன்கூட்டி ஒரு விருந்து வைக்கலாம்னு ஏற்பாடு செய்திருக்கோம்" என்றது அடுத்தாற் போல் ஒரு சுண்டெலி, கீச்சுக் குரலில்.

''நகருங்க! நகருங்க!'' என்று கூச்சல் கேட்டது. மேலும் ஒரு பெருச்சாளி வந்து குதித்தது.

''கண்ணு, மணிகண்டா! உனக்குப் பிறந்த நாளாடா? வாடா இங்கே! திருஷ்டி சுத்தறேன்!'' என்றது.

''உன் பெயருக்கு ஏத்தபடி உன் கழுத்திலே ஒரு மணி கட்டிப் பார்க்கணும். இது எங்களோட ரொம்ப நாளைய ஆசை. நாங்க எல்லா எலிகளும் சேர்ந்து உனக்காக அழகான ஒரு மணி வாங்கி வெச்சிருக்கோம். ஹிஹிஹி!'' என்று இளித்தது.

''என்னது, எலிகள் எல்லாம் சேர்ந்து பூனை கழுத்திலே மணி கட்டப் போறீங்களா? நல்ல கூத்து, அதெல்லாம் கூடாது!'' என்று கத்திற்று அம்மாப் பூனை.

''எல்லாம் ஏற்பாடான பிறகு இப்படிக் கல்லைத் தூக்கிப் போட்டால் எப்படி? நம்ம மணிகண்டனையே ஒரு வார்த்தை கேட்போம்'' என்றன மற்ற எலிகள்.

''ஏண்டா மணிகண்டா? என்னடா சொல்றே? எலிகளெல்லாம் சேர்ந்து உன் கழுத்திலே மணி கட்டறதாமே! உன்னோட அழகுக்கு அது ஒண்ணுதான் குறைச்சல்!'' என்றன அம்மா - அப்பாப் பூனைகள்.

''மிய்யாவ் .. மிய்யாவ்!'' என்றது மணிகண்டன்.

''மிய்யாவ் என்னடா, மிய்யாவ்?'' என்றது அப்பாப் பூனை.

''அப்பா! நான் கழுத்திலே மணி கட்டிக்கத்தான் போறேன்; அழகான வெள்ளி மணி; அதுதான் மிய்யாவ்!'' என்றது மணிகண்டன்.

''சரி, சரி. மணியை வாங்கிக் கட்டிக்கிட்டு அந்த எலிகளுக்கு அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்துட்டு அங்கேயே விழுந்து கிடக்காதே! நிசி நேரத்துக்குள்ளே வீடு வந்து சேரு!'' என்றது அப்பாப் பூனை.

''என்ன நீங்க, நம்ம பயலுக்கு நல்லது கெட்டது தெரியுமா? அவன் ஏது சொன்னாலும் உடனே சம்மதிக்கிறீங்களே?'' என்றது அம்மாப் பூனை.

''அதிலே ஒரு தப்பும் இல்லே. உங்க மணிகண்டனோட அருங்குணத்தைப் பாராட்டத்தானே அவன் கழுத்திலே மணி கட்டறோம். ஊர் உலகத்திலே வேறே எந்தப் பூனைக்காவது இந்த அதிர்ஷ்டம் ஏற்பட்டிருக்கா? ஏதோ நல்ல காரியம் நடக்கட்டும், தடை பண்ணாதீங்க!'' என்றது வயல்எலி.

முன்பு ஒரு சமயம் எலிகளெல்லாம் சேர்ந்து பெரிய மாநாடு கூட்டின.

இந்தப் பூனைகளெல்லாம் அவற்றுக்கு ஜன்மப் பகையாக இருக்கின்றன; அவற்றில் ஒரு பூனையையாவது அவை வசப்படுத்த வேண்டும். அதன் மூலம் இரண்டு இனத்துக்கும் இடையே ஒரு சமாதானம் ஏற்பட முயல வேண்டும் என்று தீர்மானித்தன.

பூனைகள் நடமாடுவதே ஒரு தனி விதம். சந்தடியில்லாமல் வந்து சரேலென்று பாய்ந்து எலிகளை வேட்டையாடுகின்றன. அவற்றின் கழுத்தில் கிண்கிணியோ, காலில் சலங்கையோ கட்டினால் எலிகளுக்கு எச்சரிக்கையாக இருக்குமே!

''ஆமாம். நல்ல யோசனைதான். ஆனால் அதைச் செய்து முடிப்பது யார்?''

அப்போதுதான் வயல்எலி அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டது. தான் எப்படியாவது ஒரு பூனையைப் பிடித்து வந்து அதன் கழுத்தில் மணி கட்டுவதாகச் சபதமும் போட்டது. அதன்படி அது மெள்ள மெள்ளப் பழகி மணிகண்டனைச் சரி கட்டியது.

மணிகண்டன் ஓர் ஏமாளிப் பூனை: அதன் கழுத்திலே ஒரு மணியையும் கட்டி விட்டால் அது ஒரு கோமாளிப் பூனையாகிவிடும்; தன் சபதமும் நிறைவேறும் என்பது வயல் எலியின் எண்ணம்.

மணிகண்டனை அழைத்துக் கொண்டு எல்லா எலிகளும் வயல் காட்டுப் பக்கம் புறப்பட்டன.

போகிற வழியில், ''எலிக்காதுக் கீரை என்று வயல் வரப்பில் முளைச்சிருக்கும், பார்த்திருக்கியோ?'' என்று மணிகண்டனைக் கேட்டது வயல்எலி.

''ஓ! நிறையப் பாத்திருக்கேன். என்னோட அம்மா காண்பிச்சிருக்கா!'' என்றது மணிகண்டன்.

''மிகவும் சத்துள்ள கீரை அது: மசியல் பண்ணிச் சாப்பிட்டால் காது மந்தம் குணமாகும்: பொதுவாய் உடம்புக்கும் நல்லது'' என்றது வயல்எலி:

''சே சே! கீரை கோரையெல்லாம் எனக்குப் பிடிக்காது. பால்கோவா, பால் பாயசம், பர்பி

பண்ணினால்தான் பிடிக்கும்!'' என்றது மணிகண்டன்.

''ஆகா! பூனைன்னா உன்னைப் போல இருக்கணும். மற்றப் பூனைகளும் இருக்கே, எலிகளைக் கண்டதுண்டம் பண்ணிக்கிட்டு. சே!'' என்றது வயல்எலி.

''ராத்திரி விருந்துக்குப் பால் பாயசந்தான் செஞ்சிருக்கோம்; வேண்டிய மட்டும் சாப்பிடலாம்!'' என்றது இன்னொர் எலி.

நல்ல நிலா. ஆற்றை அடுத்த களத்துமேட்டில் தான் எலிகளின் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. மணிகண்டனை அழைத்துக்கொண்டு அந்த வயல்எலி வந்ததும், எல்லா எலிகளும் சேர்ந்து வரவேற்புக் கீதம் பாடின.

''யானைக்கொரு காலம் என்றால்
பூனைக்கொரு காலம்;

புலிகளுக்கோர் காலமென்றால்;
எலிகளுக்கோர் காலம்;

எங்களுக்கும் காலம் வரும்.
எங்களுக்கும் காலம் வரும்!"

எல்லா எலிகளும் பாடின கோரஸ், மணிகண்டன் காதுக்கு நாராசமாக இருந்தது.

எலிகளுக்கோர் காலமா? இது என்ன பிதற்றல்?

தலைமைப் பெருச்சாளியே மணிகண்டனுக்குச் சந்தனம் பூச்செண்டு வழங்கி எதிர்கொண்டது. இன்னொரு பெருச்சாளி அதற்கு ரோஜாமாலை போட வந்தது. அதைத் தடுத்த வயல்எலி, ''மணிகண்டன் கழுத்துக்கு மணி கட்டின பிறகுதான் மாலை போடணும்!'' என்றது.

''பூனைகளின் வருங்கால ராஜா, ஒரே பிரதிநிதி. மணிகண்டன்..''

''வாழ்க வாழ்க!''

எல்லா எலிகளும் தாறுமாறாய்க் கூச்சல் போட்டன.

மணிகண்டன் திரும்பிப் பார்க்கையில் எலிகள், முதுகுக்குப் பின்னால் அதைக் கேலி பேசிக் கோணல் வலிப்பது கண்ணில் பட்டது.

அதன் கவனத்தைத் திருப்ப வயல்எலி ஒரு கோப்பை நிறையப் பால் பாயசத்தை மணிகண்டனிடம் கொடுத்தது. அதில் புதினா போல் ஏதோ தனி மணம் வந்தது. ஆனாலும் வாய்க்கு வெகு ருசியாக இருந்தது.

''நீங்க எல்லாம் பாயசம் குடிக்கலையா?''

''நீதானே விருந்தாளி! நீ குடிச்ச மிச்சம் மீதிதான் எங்களுக்கு!'' என்று கண்ணைச் சிமிட்டியது வயல்எலி.

மணிகண்டன் பாயசம் குடிக்கும்போதே அதன் கழுத்தில் கட்டுவதற்கான சிறிய வெள்ளிமணியைக் கொண்டு வந்தது ஒரு குண்டெலி.

''ஆகா! எப்படி, பிரமாதமாயில்லே!'' என்றது வயல் எலி.

''மணியை என் கையிலே கொடுத்துடுங்க. நான் வீட்டிலே போய் அம்மா - அப்பா கையாலே கட்டிக்கிறேன்'' என்றது மணிகண்டன்.

''நாங்க ஆசை ஆசையாய்ச் செய்து வெச்ச மணியை நாங்களேதான் கட்டுவோம்'' என்றது தலைமைப் பெருச்சாளி.

''சரிதான். சீக்கிரம் கட்டுங்க. எனக்குத் தூக்கம் தூக்கமா வருது. நான் நிசி நேரத்துக்குள்ளே வீடு போய்ச் சேரணும்.''

''இதோ ரெண்டே நிமிஷம்.'' சபதம் செய்திருந்த வயல் எலி கையில் மணியோடு நெருங்கியது.

மணிகண்டனுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது. அது சகஜமாய் வருகிற தூக்கம் இல்லை; பால் பாயசத்தில் கலந்திருந்த மருந்தின் மயக்கம்.

வயல் எலி மணிகண்டன் கழுத்தில் மணியைக் கட்டியது. கயிற்றின் முடிச்சை இறுக்கி இழுத்து விட்டது தலைமைப் பெருச்சாளி. அதற்குள் மணிகண்டனுக்கு நன்றாக மயக்கம் போட்டுவிட்டது. காரியம் முடிந்துவிடவே, சுற்றியிருந்த எலிகளெல்லாம் அதன் அதன் வங்கு வளைகளில் போய் முடங்கிக் கொண்டன.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

நடுநிசி ஆகியும் மணிகண்டன் வீடு திரும்பாததால் அம்மா-அப்பாப் பூனைகள் கவலைப்பட்டுத் தவித்தன.

இனிமேலும் சும்மா இருந்தால் சரிப்படாது என்று தீர்மானித்தன. இரண்டு பூனைகளும் ஆற்றை அடுத்த களத்துமேட்டுப் பக்கம் விரைந்தன. அங்கே மணிகண்டன் தன் நினைவில்லாமல் மயங்கிக் கிடந்ததைக் கண்டன.

அதன் கழுத்திலே மணி கட்டிய கயிறு இறுக்கமாக முடிச்சிட்டிருந்தது. அக்கம் பக்கம் ஓர் எலிக் குஞ்சையும் காணவில்லை; ஆற்றங்கரைப் பிள்ளையாரின் மூஞ்சூறு தவிர.

ஓடிப் போய் மணிகண்டன் கழுத்திலிருந்து கயிற்று முடிச்சைத் தளர்த்திற்று, அப்பாப் பூனை. அம்மாப் பூனை மணிகண்டனுக்கு மூச்சு நல்லபடி வருகிறதா என்று சோதித்துப் பார்த்தது.

இரண்டும் ஆற்றங்கரைப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டு மணிகண்டனை வீட்டுக்குத் தூக்கி வந்தன. மணிகண்டன் மருந்து மயக்கத்தில் அயர்ந்து கிடந்தது.

பொழுது விடிந்ததும் வயல்எலி மணிகண்டனைத் தேடி அதன் வீட்டுப் பக்கம் வந்தது.

''மணிகண்டன், மணிகண்டன்!''

''யார் அது? வயல் எலியா? வா வா!'' என்றது அப்பாப் பூனை.

''அவனை ஏன் அழைக்கறீங்க? மணிகண்டனுக்கு ராத்திரி முதலே உடம்பு சரியில்லை: அசந்து தூங்கறான் குழந்தை!'' என்றது அம்மாப் பூனை.

''அப்படியா!'' என்று கட்டது வயல் எலி.

''ஆமாம். ராத்திரி விருந்திலே அவனுக்கு என்ன கொடுத்தீங்க எல்லாரும்?''-திடீரென்று குரலை எழுப்பிக் கத்திற்று அப்பாப் பூனை.

''ஏன், நல்ல அருமையான பால்பாயசந்தான் கொடுத்தோம். நாங்க எல்லாருங்கூடச் சாப்பிட்டோமே!'' என்றது வயல் எலி.

''நல்ல அருமையான பாயசமா? அது சரி, பின்னே ஏன் எல்லாரும் எங்க மணிகண்டனைத் திடலிலே தனியே விட்டுட்டு ஓடிப் போயிட்டீங்க?'' என்று இரைந்தது அம்மாப் பூனை.

''அதை ஏன் கேக்கறீங்க? நாங்க மணிகண்டன் கழுத்திலே மணி கட்டுறபோது எங்கிருந்தோ ஒரு காட்டுப் பூனை வந்து குதிச்சுது. எல்லாப் பூனைகளும் உங்க பிள்ளையைப் போல் புத்தர் பூனையாய் இருக்குமா? அதுதான் எலிகளெல்லாம் விழுந்தடிச்சு ஓடிட்டோம்.''

வயல்எலி ஏதோ கதை விட்டது.

''இனிமேல் எங்க மணிகண்டன் உங்களோடெல்லாம் சகவாசமே வெச்சுக்க மாட்டான். தெரிஞ்சுக்க. அவனோட சிநேகித எலியாச்சேன்னு உன்னை இப்போ உயிரோட விடறோம். ஆமா!''

அப்பா - அம்மாப் பூனைகளின் இரைச்சல் கேட்டு மணிகண்டன் எழுந்து வாசலுக்கு வந்தது. அப்போது அதன் தூக்கம் கலைந்து, மயக்கமும் தெளிந்திருந்தது.

வயல் எலியைப் பார்த்ததும் புலிபோல அதன் மேல் பம்மிப் பாய்ந்தது.

திடுக்கிட்டுப் போன வயல் எலி, ''என்ன மணிகண்டன், விளையாடறியா? நான் உன் உயிர் நண்பன்டா!'' என்றது.

''ஆமாம், உயிர் நண்பன்தான். யார் இல்லேன்னது? உயிரை எடுக்கிற நண்பன். உன் வண்டவாளமெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா? என் முதுகுக்கு பின்னாலே உங்க ஆளுங்க என்னைக் கேலி பண்ணிக் கோணல் வலிச்சது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா? இனிமே எனக்கும் உங்களுக்கும் ஒரு சிநேகிதமும் இல்லே. இந்தா, நீங்க எல்லாரும் சேர்ந்து என் கழுத்திலே கட்டி இறுக்கின மணி. எடுத்துக் கொண்டு கண்காணாமல் தொலை. இல்லேன்னா நான் உன்னைத் தொலைச்சிடுவேன்!'' என்று மணியைக் கழற்றி அதன் முகத்தில் விட்டெறிந்தது.

''என் ராஜாக்குட்டி, தங்கக்கட்டி!'' என்று அப்பா - அம்மாப் பூனைகள் மணிகண்டனைக் கட்டிப் பிடித்துக் கொஞ்ச வந்தன.

*

கழுதைப் பால்



லெமன்

அழுதபிள்ளை சிரிக்குதப்பா;
கழுதைஒண்ணு வேணும்.
கழுதையின்னு கழுதைஇல்லே;
கழுதைப்பாலு வேணும்.

பழுதைஒண்ணு கிடக்குதப்பா;
கழுதைஎங்கே மேயும்?
கழுதைஏதும் கண்ணில்பட்டால்
கவலைகொஞ்சம் ஒயும்.

குட்டிச்சுவரில் ஒளிஞ்சுநின்னு
குட்டிக்(கு)ஊட்டும் கழுதை;
எட்டிப்பிடிச்சுக் கட்டிஇழுத்தால்
இடக்குப்பண்ணும் கழுதை.

'வட்டுத்தொண்டை வாணி' ஆச்சே;
வாலைப்பிடிச்சுக் கெஞ்சி
முரட்டுக்குட்டியின் வெள்ளிமூக்கை
முத்தமிட்டுக் கொஞ்சி....

கழுதைஅடங்கி நிக்குதப்பா;
கடவுள்செயல்; ஆமா,
பழுதையாலும் கட்டிவிட்டோம்;
பால்கறக்க லாமா?

கட்டுப்பாடாய்த் துஷ்டக்கழுதை
கறக்கவிட்டால் தானே?
குட்டிதானும் மடியில்முட்டிக்
குடிக்கவிட்டால் தானே?

எட்டிஎட்டி உதைக்குதப்பா;
ஏதும் விளங்கவில்லே.
கட்டுக்கட்டாய்த் தீனிவெச்சும்
கழுதை திங்கவில்லே!

கழுதைஇனிமேல் தேஞ்சுதேஞ்சு
கட்டெறும்பாய் மாறும்;
கழுதைஎறும்பு கடிச்சபிள்ளை
கண்ணில்ஜலம் ஊறும்.

அழறபிள்ளை சிரிக்கலேன்னு
அழகுமூஞ்சி கோணும்;
அழுதபிள்ளை சிரிச்சுதானு
கழுதைப்பாலு வேணும்!



"என் குழந்தைகளைப் பொறுத்தவரை நான் நம்பும் ஒரே வாட்டர் ஹீட்டராகும்... வீலைன்!"
வீலைனில் மட்டுமே எஃகினு லான விசேஷ விட்ரியஸ் எனமல் செய்த டாங்க உள்ளது. வெடிப்பு நேருவதை இது தடுக்கிறது. இது பல ஆண்டுகளுக்குப் பாதுகாப்பானதாகும்!
வீலைன் வாட்டர் ஹீட்டர் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அவர்கள் எதிர்பார்ப்பதை எல்லாம் அளிக்கிறது.
நீண்டகால உழைப்பு: உள்ளிருக்கும் கலம் விட்ரியஸ் எனமல் செய்யப் பட்டுள்ளதால் இது அரிப்பை முற்றும் எதிர்ப்பதாகும்.
பாதுகாப்பு: இதில் மூன்று பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன. ஒரு ப்ரெஷ்ஷர் ரிலீஸ் வால்வ், ஒரு தர்மோஸ்டாடிக் டெம்பரேச்சர் கண்ட்ரோல், மற்றும் அளவுக்கு மீறி டெம்பரேச்சர் ஏறுவதைத் தடுக்க உருகக்கூடிய ஒரு ஃப்யூஸிபிள் ப்ளக்.
பொருத்தும் வசதி: இடமிருந்து வலமாகவோ, மேலிருந்து கீழாகவோ பொருத்த வசதியானவை.
உங்கள் தேவைக்கேற்ற ஸைஸ்கள். 5 முதல் 70 லிட்டர் வரை.
வீலைன் வாட்டர் ஹீட்டர்கள். பாதுகாப்பானவை, நம்பகமானவை, நீண்ட காலம் உழைப்பவை...பல ஆண்டுகளுக்கு! இருவழிகளிலும் இயங்குபவை.
CLARION/V/9/203 TAM
விற்பனைக்கு விடுப்போர்:
வோல்டாஸ் லிமிடெட்
அப்ளையன்ஸெஸ் டிவிஷன்
19, ஜே.என். ஹெரெடியா மார்க்,
பலார்ட் எஸ்டேட்,
பம்பாய் 400 038.
வோல்டாஸ்
வீலைன்
நம்பகமான வீட்டுபயோக சாதனங்கள்



1

திருக்குறளின் மூலம் யோகப்பயிற்சி

கல்லை. தே. கண்ணன்.

தமிழ் மறை தந்த தவச்சீலர்

திருக்குறளை வாழ்க்கை நூல் என்பார்கள். உலகப் பொது மறை என்ற புகழும் இதற்கு இருக்கிறது. வாழ்க்கையின் எல்லா அம் சங்களையும், 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி' என்பது போல் அற முறைகளை எல்லாம் தொகுத்து அளித்துள்ளார்.

மனிதன் பெறும் எல்லாச் செல் வங்களிலும் நோய் நொடியின்றிச் சுகமாக வாழ்வதே மேலானது. அதற்கு உடலும் உள்ளமும் சீர்மை யாக விளங்க வேண்டும். பதஞ்சலி முனிவர், தம் 'யோக சூத்திரத்'தில் உள்ளத் தூய்மைக்கும் உடல் உரத்துக்கும் உகந்த யோக, தியான முறைகளை வகுத்து அளித்திருக் கிறார். சீரிய இந்த யோக முறைகளை மேற்கொண்டு, நம் முன்னோர் பல்லாண்டுகள் சுகவாழ்வு வாழ்ந் திருக்கிறார்கள். நெறியான வாழ்வு முறையை மேற்கொண்டவர்கள் அவர்கள்.

அந்த யோக பரம்பரையில் வந்த மகான் திருவள்ளுவர், சிறந்த யோகியும் ஆவார். கீழ்க்காணும் குறட்பாக்கள், திருவள்ளுவர் ஞானி மட்டும் அல்ல, சித்தருங்கூட என்பதை வலியுறுத்துகின்றன.

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு
(குறள் 269)

தவச்சேகு ஏறியவர்களால் எமனையும் வெல்ல முடியும் என்பது வள்ளுவர் வாக்கு. தவம் வேறு, யோகம் வேறு அல்ல. தவம் செய்பவனே யோகி ஆகமுடியும். யோகமும் மெய்ப்பொருளும் ஒன்றோடு ஒன்று இணைந்தவையே. இதனை வள்ளுவரே,

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்"
(குறள் 359)

என்று குறட்பா மூலம் வலியுறுத்துகிறார். மெய்ப் பொருளை அறிந்து பற்று நீங்குமாறு ஒழுகுபவனைத் துன்பங்கள் சேரமாட்டா என்ற யோக நிலையை எத்தனை அழகாக நமக்கு வள்ளுவர்ப் பெருந்தகை அளித்திருக்கிறார்! 'பற்றற்றான் பற்றினைப் பற்றுக பற்று விடற்கு' என்று இறையருளைப் பெற மக்களுக்கு உணர்த்திய பெருமகனாராயிற்றே!



4

திருக்குறளில் சிறந்த புலமை பெற்றவர் திருக்குறளார் கலைமாமணி திரு வி. முனுசாமி அவர்கள். திருக்குறளை இவர் ஒரு தனி இயக்கமாகவே பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்பி, கடந்த ஐம்பது ஆண்டுகளாக அரிய சேவை செய்து வருகிறார். சமீபத்தில், திருக்குறள், நெறி பரப்பும் இயக்குநராகத் தமிழக அரசால், இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். திருக்குறளாரின் அன்புக்குப் பாத்திரமான சிஷ்யர் யோகி இராமபத்திரன் அவர்கள்.

திருக்குறள் வகுப்புக்களைப் பாரதீய வித்யாபவன் அரங்கில் நடத்தி வருகிறார். இவர் திருக்குறளில் காணும் வாணிப மேம்பாட்டுக் கருத்துக்கள் பற்றித் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றும் சிறப்பாக நடத்தினார். திருக்குறளில் சிறந்த பயிற்சி பெற்றவர் இந்த அன்பர்.

சிறுவர்களும் திருக்குறளை மனனம் செய்து, உடல் உள்ளச் செம்மையுடன் வாழ வேண்டும் என்ற கருத்துடன் ஒரு முறையை இவர் வகுத்திருக்கிறார். இந்த முறையில் திருக்குறளையும் லகுவாக மனனம் செய்ய முடியும். இளம் சிறுவர்கள் ஆர்வத்துடன் குறட்பாக்களைப் படித்து மனனம் செய்வதற்கு ஏற்ற முறைதான் 'உடற்பயிற்சி மூலம் குறள்பயிற்சி' என்பது. திருக்குறளை மனனம் செய்வது புதிது ஒன்றும் அல்ல. அபௌருஷேயமான வேதங்களை முன்காலத்தில் நூல்களாக எழுதி வைக்காமல் முறையாக மனனம் செய்தே வாழையடி வாழையாகக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். குறிப்பாக, இளைஞர்கள் மனனம் செய்யும் பயிற்சியையும் கல்வி பயிலும் காலத்தில் மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த அடிப்படையில் சென்ற மார்ச் மாதம் பத்தாம் தேதி வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற பழங் கலைப் பண்பாட்டு இயக்க விழாவில் ஒரு புதுமையைத் திரு இராமபத்திரன் நிகழ்த்தினார். பத்மா சேஷாத்திரி பள்ளிப் பிள்ளைகளில் ஐம்பது பேருக்கு மேல் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நல்ல முறையில் உடற்பயிற்சி மூலம் குறள் பயிற்சி அளித்திருக்கிறார் திரு இராமபத்திரன். யோகப் பயிற்சியுடன் திருக்குறளை மனனம் செய்யும் முறை இது. அந்தச் சிறுவர்கள் குறளைச் சொல்லிய வண்ணம் உடற்பயிற்சியையும் மேற்கொண்டார்கள்.

இந்த முறையில் சிறுவர்களும் கல்லூரி மாணவர்களும் குறட்பாக்களை மனனம் செய்வது எளிதாகிறது. உடல் நலத்தையும் குறள் பயிற்சி பெறுவதையும் ஒரே சமயத்தில் நடத்திக் காட்டினார்.

நிதி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களும், கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களும், திருக்குறளார் திரு முனுசாமி அவர்களும், திரு அவ்வை நடராசன் அவர்களும்



5



இந்தப் பயிற்சி முறையைக் கண்டு பெரிதும் பாராட்டினார்கள்: இந்த முறையில் பள்ளிச் சிறார் முதல் கல்லூரி மாணவர்கள் வரை குறள் பயிற்சி அளிக்கப் பரிந்துரைத்திருக்கின்றனர்.

உடற்பயிற்சி மூலம் குறளைப் பரப்பும் யோகி இராமபத்திரனின் முறையைத் தமிழக அரசு, தமிழகம் எங்கும் செயல்படுத்தப் போகிறதாம்.

யோக சக்தியால் பயன் பெறுவது சாதனையைப் பொறுத்திருக்கிறது. அதை மதிப்பீடாக வைத்துத்தான் ஒரு சிலரை 'யோகி' என்று அழைக்கிறோம். ஐம்புலன்களை அடக்கியவன் மட்டுமே யோகியாக மாட்டான். இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டே யோக சாதனையைச் செய்யும் ஒரு சிலரே யோகி என்று போற்றப்படுவார்கள்.

"இயல்பினான் இல்வாழ்க்கை
வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை"

என்று, துறவறத்தைவிட இல்லறத்தைப் போற்றுகிறார் திருவள்ளுவர்.

இந்த முறையில் கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாக யோக சாதனையை நெறியுடன் மேற்கொண்டு வருகிறார் திரு இராமபத்திரன். அவர் தினசரி செய்யும் யோக ஆசனங்களையும்





அவர் அநுபவத்தில் கண்ட நன்மைகளையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

வாழ்க்கைக்குத் தேவையான ஒரு சில ஆசனங்கள் செய்தால் போதும் என்பது இவருடைய துணிபு. முனிவர் பதஞ்சலி எழுதிய எல்லா ஆசனங்களையும் சாதாரண மக்களால் செய்ய முடியாது. எளிய ஆறு ஆசனங்களை எல்லா மக்களும் மேற்கொண்டு பயன்பெறும்வகையில் இவர் வகுத்திருக்கிறார். இந்த ஆசனங்கள், இருதயம், ஈரல், வயிற்று உறுப்புக்கள், மார்பகம் முதலிய உறுப்புக்களுக்கு வலுவையும் மனச் செம்மைக்குத் தியானம் என்ற முறையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அன்றாடம் இருபது நிமிடங்கள் செய்தால் புத்துணர்ச்சி பெறலாம்.

இதற்கான யோக முறைகள்: 1. சிரசாசனம், 2. மத்ஸ்யாசனம், 3. உக்த் ஆசனம் 4. பத்ம மயூராசனம், 5. விபரீதகரணி அல்லது (ராம கரணி). மேலும் அன்றாடம்



ஐந்து நிமிஷங்கள் மனத்தை ஒரு நிலைப்படுத்தல் (தியானம்) என்ற முறையைப் பின்பற்றினால் வியாதிகள் இன்றி நிச்சயம் வாழலாம் என்பது இவருடைய கருத்து. விபரீதகரணி என்ற ஆசனம் மிகச் சிறந்தது என்று கூறுகிறார் திரு இராமபத்திரன்.

இந்த ஆசனத்தை முறையாகச் செய்தால் அதிசயத் தக்க விளைவுகள் உண்டாகும். முகத்தில் வயதான சுருக்கங்கள் விழா, புத்துணர்ச்சியுடன் துடிப்பு நிறைந்திருக்கும். உடல் கட்டுத் தளராமல் காட்சியளிக்கும். ஆரோக்கியத்தின் அடித்தளமே விபரீதகரணி ஆசனந்தான் என்று உறுதியாகக் கூறுகிறார்.



கலைமாமணி திருக்குறள் வி. முனுசாமி அவர்களும் யோகி திரு இராமபத்திரனும்.

அடுத்து, பத்ம மயூராசனம் என்பது எல்லாராலும் எளிதாகச் செய்ய இயலாது. இருந்தும் இதன் பலன்கள் ஏராளம் என்கிறார். சளி, மூக்கடைப்பு இல்லாத சுக வாழ்வு எய்திட இந்த யோகாசனம் பெரிதும் உதவுகிறது.

(இதைப் படித்து, ஆசனப் படங்களையும் பார்த்து யாரும் ஆசனப் பயிற்சியை மேற்கொள்வது சரியாகாது. ஆசனப் பயிற்சியை மேற்கொள்ள சில நியதிகள் இருக்கின்றன. அவரவர்களின் உடல் நிலைக்கு ஏற்பப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தகுந்த ஆசிரியரின் மேற்பார்வையில் பயிற்சியைத் தொடங்குவதே சிறந்தது.)

திரு இராமபத்திரன் செய்யும் பல ஆசனங்களை அடுத்துக் கீழே காணலாம். இவற்றை முறையாக மேற்கொண்டால் மனநிறைவும் நிரந்தர நல்வாழ்வும் பெறலாம்.

1 மத்யாசனம்:

மீனைப் போன்ற துடிப்பான ஆசனம் இதை இடைப்பட்ட ஆசனமாக ஒவ்வோர் ஆசனத்துக்கும் பின்பும் செய்வது மிகவும் அவசியம். இது பாதுகாப்பு ஆசனமாகக் கருதப்படுகிறது. கவுன்டர் போஸ் (Counter Pose) என்று ஆங்கிலத்தில் கூறுவர்.

2 கோ முகாசனம்:

முதுகெலும்புக்கு வலுவும் வனப்பும் தருகிறது. இளமைத் தோற்றத்தைப் பெற இது ஒரு சிறந்த யோகாசனம். கூனல் இல்லாத வாழ்வும் பெறலாம்.

3 உக்த் ஆசனம்: (Camel Pose)

இரத்த அழுத்தமும் மூல நோயும் வராமல் தடுக்கும் அரிய ஆசனம். மலச்சிக்கலும் தவிர்க்கப்படும்.

4 சிரசாசனம்:

இது நாற்பது வயது வரை எல்லாரும் எளிதில் செய்யக்கூடியது. மறதியற்ற வாழ்வையும் இளமைத் துடிப்பையும் என்றும் மாறாத இளமைத் தோற்றத்தையும் பெறலாம். முகத்தில் சுருக்கங்கள் விழா. இது ஓர் அரிய ஆசனம் என்பர்.

5 யோக முத்ரா :

சிறந்த ஆசனம் இது: டயாப்ரம் விரிந்து மார்பகம் வலு அடையும். ஆஸ்துமா போன்ற வியாதிகள் வரா.

6 பத்ம சர்வாங்காசனம் :

இது சர்வ ரோக நிவாரணி. இதனால் ஆயுட்காலம் நீடிக்கும். வியாதிகள் அணுகா. இருதய நோய்கள் இல்லாத சுகவாழ்வு பெறலாம்.

7 சிரசாசனத்தில் வேறு முறை :

மூளை நரம்புகள் வலுப் பெற்று இரத்த அழுத்த வியாதி வராமல் தடுக்கவல்லது. சீரான இரத்த ஓட்டத்துக்கும் உதவுகிறது.

8 மயூராசனம் :

சளி, ஜலதோஷத்தைச் சுலபமாகத் தவிர்த்து, டயாப்ரம் விரிந்து கொடுக்க இந்த ஆசனம் பெரிதும் உதவும்; மனம் உல்லாசமாக இருக்கும்.

9 பத்ம மயூராசனம் :

இதன் மூலம் எல்லையற்ற இன்பம் பெறலாம். இருதய வேகத் துடிப்பு, சளி, ஆஸ்துமா போன்ற வியாதிகள் வரவே வரா; இதைச் செய்வது அவ்வளவு எளிது அல்ல. தொடக்கத்தில் தலையணைகளின் உதவியுடன் செய்வது நல்லது.



எஸ்.வி.ரமணி

நெருப்பு மஞ்சம்

காட்சி—1

[மிகப் பெரிய குளம். சர்யணாவத் என்று பெயர். தருக்களின் தண்ணிழல். ஸ்தானிவீகரத்து மன்னன் கேலனும் விச்பலா என்ற அழகியும் குளக்கரையில் அமர்ந்து பேசுகின்றனர்.]

விச்பலா: மன்னா, இன்னும் எத்தனை காலம் இப்படிச் சந்திப்பது? எப்போது ஊரறிய உலகமறிய அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்ளப் போகிறீர்கள்?

கேலன்: கண்ணே, விச்பலா! கவலைப்படாதே. அந்தப்புர வாழ்க்கையில் இப்போது இல்லாத சுகம் என்ன புதிதாகக் கிடைத்துவிடப் போகிறது?

விச்பலா: அரசி என்ற அந்தஸ்து, கௌரவம், என் கணவர் இந்நாட்டு மன்னர் என்ற புகழ்.

கேலன்: விச்பலா! அந்த அந்தஸ்தைக் கொடுக்கத்தான் தீர்மானித்திருந்தேன். ஆனால்..?

விச்பலா: ஆனால்? என்ன மன்னா? சீக்கிரம் சொல்லுங்கள்.

கேலன்: என்னத்தைச் சொல்ல? போர் முரசம் கொட்டிவிட்டான், ரதனீயன். அந்த முழக்கு உனக்குக் கேட்கவில்லையா, விச்பலா?

விச்பலா: பிரம்மாவர்த்தத்து மன்னன் ரதனீயனா?

கேலன்: ஆம், கண்ணே! அந்தப்புரத்தில் மற்றவர்களைச் சம்மதிக்க வைத்தேன். குலகுரு அகஸ்தியரையும் மணநாள் பார்க்கச் சொன்னேன். அதற்குள்..

விச்பலா: ரதனீயன் போர்க் கொடி உயர்த்தி விட்டான்; அப்படித்தானே?

கேலன்: ஆம். அதேதான், கண்ணே!

விச்பலா: போர்க் கொடி உயர்த்தினால் என்ன, மன்னவா? என் கழுத்தில் மங்கல சூத்திரத்தைக் கட்டுங்கள். பிறகு.. பிறகு..!

கேலன்: பிறகு? மகாராணியான பின் போர்க்களத்துக்குத் தேரோட்டி வருவாயா? அவமானம்! கேலனுக்குத் தேரோட்டத் தளபதி இல்லை! மனைவியையே இழுத்து வந்துவிட்டான் என்ற இழிசொல். வேண்டாம், விச்பலா! வேண்டவே வேண்டாம்.

விச்பலா: மனைவி தேரோட்டி வரக்கூடாது என்று எந்தச் சாஸ்திரம் தடுக்கிறது மன்னவா?

கேலன்: சாஸ்திரம் தடுக்காது, விச்பலா! அரச அந்தஸ்து தடுக்கும்; சமூகத்திலே கௌரவம சரியும்.

விச்பலா: ஓகோ, அப்படியா? மன்னருக்கு ஒரு நியாயம், மனத்துக்கினியாளுக்கு ஒரு நியாயமா?

கேலன்: வாக்குவாதம் செய்யாதே, விச்பலா! என் கண்ணே! ரதனீயனை முறியடித்துத் திரும்பியதும் அரசவையிலே அரசியாகச் சிம்மாசனத்தில் வீற்றிருப்பாய். இது நிச்சயம்.

விச்பலா: என் ஆடலையும், பாடலையும், போர்ப் பயிற்சியையும்—ஏன், என் உள்ளத்தையும், உடலையும் உங்களுக்கே சொந்தமாக்கி ஈராண்டு உருண்டுவிட்டன, மன்னா! ஆனால்..?

கேலன்: அந்தப்புரத்தில் இடம் கிடைக்கவில்லை. அதுதானே! விச்பலா, அந்தப்புரம் என்பது சிறை, தொழுவம், பட்டமகிஷி என்ற பேர்தான். ஆனால் அவர்களை நான் பார்த்து எத்தனை மாதங்கள் ஆகியிருக்கின்றன தெரியுமா? நிறை மதியைப் போன்ற உன் எழிலில் மயங்கிக் கட்டுண்டு கிடக்கிறேன். தேன் ஊறும் உன் அதரபானத்துக்கு அருந்தவம் செய்கிறேன். கண்ணே, விச்பலா! அந்தப்புர வாழ்க்கை சுகபோகமல்ல. அப்படி வீண் கனவு காணாதே!

விச்பலா: அப்படி என்றால் ஆயுள் முழுவதும் இப்படியே இருந்துவிடச் சொல்கிறீர்களா, அன்பரே!

கேலன்: அப்படிச் சொல்லவில்லை, விச்பலா. மட்டற்ற சுகத்தைத் தட்டில்லாமல் அநுபவிப்போம். அப்புறம் இருக்கவே இருக்கிறது, அந்தப்புர வாழ்க்கை.

விச்பலா: ஊரில் பேசிக்கொள்வதைக் கேட்டால் அப்படியே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போல் இருக்கிறது எனக்கு!

கேலன்: அப்படி என்ன பேசிக் கொள்கிறார்கள்? யார் பேசுவது? பேரைச் சொல், இப்போதே..

விச்பலா: அரசன் கேலனுக்கு..

கேலன்: காதலி என்றுதானே?

விச்பலா: இல்லை, மன்னா! இல்லை. சொல்லவும் நாக் கூசுகிறது!

கேலன்: அப்படியென்றால்?

விச்பலா: ஆசை நாயகியாம்!

கேலன்: ஓஹோஹோ! சபாஷ்! சரியாத்தான் சொல்கிறார்கள்.

விச்பலா: புத்தி பேதலித்து விட்டதா உங்களுக்கு?

கேலன்: ஆம், கண்ணே, விச்பலா. உன் மதிவதனத்தில் என் மதி மயங்கிவிட்டது.

விச்பலா: விளையாட்டு வேண்டாம். கோபம் பொல்லாதது, மன்னவா!

கேலன்: ஆஹாஹா! கோபம்! ஹாஹா! உனக்குக் கோபம்கூட வருமா கண்ணே, விச்பலா?

விச்பலா: பெண்மைக்கு இழுக்கு நேர்ந்தால் பின்னே என்ன வருமாம்?

கேலன்: கண்ணைத் தாழ்த்திச் செருகி நோக்கும் உன் பார்வையில், விச்பலா, நான் இல்லை, நம் குலகுரு அகஸ்தியரே மயங்கி விடுவார். ஆமாம்!

குரல்: ஜய விஜயீ பவ!

கேலன்: யாரது, குலகுருவா? வர வேண்டும் வரவேண்டும், குருதேவா!

விச்பலா: தவச்ரேஷ்டரே! அடிமை தங்கள் பாத கமலங்களை வணங்குகிறேன்.

அகஸ்தியர்: எழுந்திரு, மகளே! உன் பராக்கிரமத்தைக் காட்டும் நேரம் வந்துவிட்டது, மகளே! மன்னனுடன் காதல்மொழி பேசிக் களித்தது போதும். சுதுத்ரி நதிக் கரையில் முகாம் போட்டு விட்டான் ரதனீயன். புறப்படு, மகளே!

கேலன்: தென் பொதிகைத் தவச் சீலரே! மன்னிக்க வேண்டும், சுவாமி. காதல் மொழிப் பேசிக் களிக்க வரவில்லை. போர் நெருக்கடியைக் கூறி விச்பலாவை அழைத்துச் செல்லவே வந்தேன், குருவே! வந்த இடத்தில் கொஞ்சம்..

அகஸ்தியர்: பேசிச் சல்லாபம் செய்தாயோ?

கேலன்: அப்படி இல்லை, சுவாமி. விச்பலாதான்..

அகஸ்தியர்: ஓஹோ, திருமணம் நடந்தால்தான் சாரத்தியம் செய்வேன் என்றுளா?

(விச்பலாவும் கேலனும் பிரமித்துப் பார்த்துக்கொள்கின்றனர்.)

விச்பலா: அப்படிச் சொல்ல வில்லை, குருதேவா!

அகஸ்தியர்: பின்னே எப்படிச் சொன்னுய்? எல்லாம் எனக்குத் தெரியும், மகளே. சங்கம் ஒலிக்கிறது, முரசம் கொட்டுகிறது அங்கே. நீ சாரத்தியம் செய்தால்தான், மன்னனுக்குப் புத்துணர்ச்சியும் புதுத் தெம்பும் உண்டாகும். வெற்றி தேடி வரும். ஏறி உட்கார், ரதத்தில்!

விச்பலா: அப்படியே! தங்கள் கட்டளை என் பாக்கியம்.

அகஸ்தியர்: மன்னு! ஜய விஜயீபவ! வெற்றித் திருவை அணிந்து வா. போய் வா! போர்க்களத்துச் செய்தியை உடனுக்குடன் எனக்குத் தெரியப்படுத்து. விச்பலா, உனக்குத் தேரோட்டியாகத்தான் வருகிறுள், நினைவு கொள் கேலா, மறந்து விடாதே!

கேலன்: புரிகிறது, முனிவர் பிரானே! போர்க்களத்தில் தடுமாற மாட்டேன். வணங்குகிறேன். வாழ்த்தி விடை கொடுங்கள், குருதேவா!

விச்பலா: தங்கள் திருவடித் துணையுடன் செல்கிறேன், பிரபு. இந்த அபலையை வாழ்த்துங்கள்.

அகஸ்தியர்: குழந்தாய் விச்பலா! அரச போகமும் இளவயது மோகமும் மட்டும் வாழ்க்கை இல்லை, அம்மா. நீயே புரிந்து கொள்வாய். சென்று வா, மகளே!

காட்சி—2.

[அந்திக் கதிரவன் சாய்கிற வேளை. அந்தச் செவ்வண்ணத்தில் படுகளச் செந்நீரும் கலந்து யமுனை-சுதுத்ரி நதி தீரத்தைக் குங்குமமாக்கியுள்ளது. (சுதுத்ரி-இன்றைய சட்லெஜ்) போர் வீரர்கள் பாசறையுள் உடல் புண்களையும், உள்ளத் தினவையும் மறக்கக் குடி போதையில் சொர்க்கத்தைக் காண்கின்றனர். தளபதிகளுடன் கேலன் மறுநாள் போர்த் திட்டத்தை வகுக்கிருன். குலகுரு கூறியபடி தேரோட்டி விச்பலா தனிக்கூடாரத்துள் படுக்கை கசந்து உலா வருகிருள்.)

குரல்: (மிக மெல்லிய குரலில்) அம்மா, அம்மா, நான் ..

விச்பலா: யாரது?

குரல்: நான் தான் சம்பங்கி.

விச்பலா: சம்பங்கியா? இன்னும் நீ படுக்கப் போகவில்லை?

குரல்: இல்லை, அம்மா. திடீரென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.

விச்பலா: என்ன விஷயம்? ஆ! சம்பங்கியா நீ? யார் நீ? எங்கே வந்தாய்?

குரல்: இந்த நிசிப்போதில் சத்தம் போடாதே, விச்பலா! நான்தான்.. இதோ பார்..

விச்பலா: யாரு? நீங்களா? ரதனீயரா? பிரம்மாவர்த்தத்து மன்னர் ரதனீயரா?

ரதனீயன்: ஆம், கண்ணே! ரதனீயனேதான்!

விச்பலா: என்ன சொன்னீர்கள்? ஒரு நாள் போரிலேயே பயம்கொண்டு விட்டீர்களா? காலையில் வந்து மன்னரிடம் சமாதானம் பேசியிருக்கலாமே! இந்த வேளையில், அதுவும் என் சேடிப் பெண் வேஷத்தில்..

ரதனீயன்: விச்பலா! பதறாமல் கேள். உன்னைக் கண்டதிலிருந்து என் உள்ளம் என்னிடம் இல்லை. உன்னை அடைய வேண்டும் என்ற அவா பெருந் தீயாகி என்னைச் சுடுகிறது, கண்ணே! அந்த வெப்பம் தாங்காமல்தான், எதிரியின் பாசறைக்கு ஓடோடிவந்தேன், கண்ணே!

விச்பலா: ஓஹோ! அந்தச் சூட்டைத் தணிக்கத் தண்ணிழல் நாடி வந்தீர்களா?

ரதனீயன்: அதேதான், விச்பலா. நீ அழகிமட்டும் இல்லை, மிகுந்த புத்திசாலி. நீ மட்டும் என்னுடன் வந்துவிட்டால் .. இந்தப் போரும் பாசறையும் எதற்கு? இந்த இரவே, இப்பவே, இப்படியே புறப்பட்டு விடு, விச்பவா. அரசபோகம் அழைக்கிறது, விச்பலா. இணற்றடிக் கதலி போன்ற உன் மேனியை இந்தப் பாசறை மஞ்சத்திலா கிடத்துவது? அக்கிரமம்! கேலன் ஒரு முட்டாள். அழகை ஆராதிக்கத் தெரியாத அறிவிலி!

விச்பலா: ஒரு நாளிலேயே நன்ருக எடை போட்டுவிட்டீர்களே! மகா புத்திசாலிதான் நீங்கள்!

ரதனீயன்: விச்பலா, என் கண்ணே! நேரத்தை வீணடிக்காதே. என்னுடன் புறப்படு, கண்ணே!

விச்பலா: எங்கே அழைக்கிறீர்கள்?

ரதனீயன்: என்னுடன், என் நாட்டுக்குத்தான்.

விச்பலா: அங்கே வந்தால்..?

ரதனீயன்: என் நாட்டையே உன் காலடியில் சமர்ப்பிப்பேன். நீதான் எல்லாம்!

விச்பலா: உங்கள் அந்தப்புரத்தில் எத்தனை ராணிகள்?

ரதனீயன்: அதைப்பற்றி உனக்கு என்ன கவலை, விச்பலா? எல்லாம் கிழங்கள்; தனி மாளிகை கட்டி, தரணி மெச்சும்படி உன்னை வாழ வைக்கிறேன், விச்பலா,

விச்பலா: திருமணம் செய்து கொள்வீர்களா?

ரதனீயன்: திருமணமா? இம்ம். அது வெறும் சடங்கு. எதற்கு அது உனக்கு, விச்பலா? இந்த ரதனீயன், தன் உள்ளத்தில் நவரத்தின சிம்மாசனம் அளிப்பான் உனக்கு. போதுமா?

விச்பலா: ஊஹூம். நவரத்தின சிம்மாசனம் போதாது!

ரதனீயன்: வேறு என்ன வேண்டும், விச்பலா? தயங்காமல் உடனே சொல். தட்டின்றி நிறைவேற்றி வைக்கிறேன்.

விச்பலா: சொல்லட்டுமா?

ரதனீயன்: சொல்லு, சீக்கிரமாக, விச்பலா!

விச்பலா: ஆசைநாயகியா, அருமை நாயகியா..

ரதனீயன்: ஆஹாஹா; அருமை! அருமை! என் மனசில் இருப்பதை அப்படியே சொல்லிவிட்டாயே, விச்பலா! ஆஹாஹா! இந்த மரகதச் சிலையை அப்படியே வாரி எடுத்து..ஆஹாஹா!

விச்பலா: ச்சீ. தொடாதே! நகர்ந்து போ! ஆசைநாயகியாம்! ஆசையைப் பாரு! அயோக்கியன்!

ரதனீயன்: விச்பலா, என் கோபத்தைக் கிளறாதே. கேலன் மட்டும் உன்னைப் பட்டமகிஷியாக்கி இருக்கிறானே? அவனைவிட வயசில் சிறியவன், அழகிலே மிஞ்சியவன், புத்தியில் மிகுந்தவன், நாட்டு வளத்திலே உயர்ந்தவன் நான். கசக்கிறதா உனக்கு, விச்பலா?

விச்பலா: கசக்கவில்லை, தித்திக்கிறது. போடா வெளியே! உன்னை அடித்து விரட்ட வீரர்களை அழைக்க மாட்டேன். நானே உன்னை, இந்தக் காலால் எட்டி உதைத்தால், ஒரு காததூரத்தில் போய் விழுவாய்! ஆசை நாயகியாக வாழப் பிறந்தவளில்லை, இந்த விச்பலா. போடா! ஆண்மையிருந்தால் காலையில் போர்க்களத்தில் உன் வீரத்தைக் காட்டு. போடா, வெளியே!

ரதனீயன்: ராட்சசி, உதைத்து விட்டாயா என்னை? இதோ அந்தக் காலை..

(சதக்கென்று விச்பலாவின் வலக்கால் துடைப் பகுதியுடன் துண்டித்து விழுகிறது, கணப் போதில்)

விச்பலா: ஐயோ, அப்பா! குரு நாதா!

காட்சி—3.

(சத்தம் கேட்டுப் பலர் ஓடி வருகின்றனர். கேலன் விஷயம் அறிந்து பதறிக்கொண்டு ஓடி வருகிறான்.)

கேலன்: கண்ணே, விச்பலா? இது என்ன அநியாயம்? யார் இந்தப் பாதகச் செயலைச் செய்தது? சொல்லு, அவனை இப்பவே துண்டம் துண்டமாய்..

விச்பலா: மன்னா, இந்தப் பாசறைக்குள் புகுந்து என் காலைத் துண்டிக்க யாருக்குத் தைரியம் வரும்? அத்தனை தைரியசாலி உங்கள் நாட்டில் இருக்கிறானா? வாளை உறைக்குள் போடுங்கள் முதலில். உடனே குலகுருவுக்குச் சொல்லியனுப்புங்கள்.

கேலன்: முடியாது, விச்பலா, முடியாது. உன் காலைத் துண்டித்தவன் தைரியசாலி அல்ல, கோழை. ஒரு பெண் தனியாக இருக்கும் கூடாரத்துக்குள் புகுந்து இந்த அக்கிரமத்தைச் செய்தவன் யார் அந்தக் கோழை, சொல் விச்பலா?

விச்பலா: வேதனையில் துடியாய்த் துடிக்கிறேன், மன்னா! கேள்வி கேட்டு மேலும் என்னை வதைக்காதீர்கள்.

கேலன்: முடியாது, யார் அங்கே? பிடித்து வாருங்கள் அந்த நயவஞ்சக நரியை. ஓடுங்கள், திக்குகள் எட்டும். இன்னும் இரண்டு நாழிகைப் போதில் அந்தக் கோழை என் எதிரில் நிற்க வேண்டும். அவன் கால்களை, கைகளை, உடலை ஒவ்வொன்றாகக் கூறு போடுவேன். அந்த முண்டங்கள் துடிப்பதைக் கண்டு களிப்பேன். இம், ஓடுங்கள்.

விச்பலா: யாரும் போக வேண்டாம். நில்லுங்கள் அப்படியே! மன்னா, படுக்கையிலிருந்து உருண்டு விழுந்துவிட்டேன். கீழே கிடந்த அந்த வாள் முனை புரண்டு என் காலைத் துண்டித்துவிட்டது.

கேலன்: உண்மையாகவா, விச்பலா?

விச்பலா: ஆம், மன்னா!

கேலன்: நம்பவே முடியவில்லை என்னால்.

விச்பலா: உண்மை! முக்காலும் உண்மை, மன்னா! உங்கள் ஆசை நாயகி விச்பலாவை அவ்வளவு கேவலமாகவா நினைத்துவிட்டீர்கள்? அவள் பாசறைக்குள் பிறர் நுழைந்து இந்த அக்கிரமத்தைச் செய்துவிட்டு, உயிருடன் தப்பிச் செல்ல முடியுமா, மன்னா?

கேலன்: ஆம். உண்மை. விச்பலா. உன் தோழமை இல்லாத நான் நாளை எப்படிப் போர்க்களம் போவேன்? நினைத்தாலே குலை நடுங்குகின்றதே! தோள்கள் துவளுகின்றனவே! இறைவா! என் கண்மணிக்கு இப்படியா நேரவேண்டும்?

விச்பலா: வருந்திக்கொண்டிருப்பதில் பயன் இல்லை, மன்னவா! உடனே குலகுருவை வரவழையுங்கள் இங்கே. அவர் ஏதாவது உபாயம் சொல்வார்.

கேலன்: ஆமாம். யார் அங்கே? உடனே போய் விஷயத்தைக் கூறிக் குலகுருவை அழைத்து வாருங்கள். ....விச்பலா! வலியைக் கொஞ்சம் பொறுத்துக் கொள், கண்ணே. இதோ வந்துவிடுவார் அகஸ்திய மகரிஷி.

காட்சி—4

(குலகுரு அகஸ்தியர் ஓர் இரும்புக் காலுடன் பாசறைக்குள் நுழைகிறார். அவர் கையில் பலவித மூலிகைகளும் வேர்களும் இருக்கின்றன.)

கேலன்: முனிசிரேஷ்டரே! என் கண்மணி விச்பலாவுக்கு இந்த அநீதி ஏற்பட்டுவிட்டதே! குணமாக்க முடியுமா தங்களால்? அவள் சாரத்தியம் செய்யாத தேரில் இருந்து நான் என்ன செய்யப் போகிறேன், குருதேவா?

அகஸ்தியர்: பதறாதே, கேலா! பகவான் உதவுவார். மந்திர உரு வேற்றி அசுவினி தேவர்களை வரவழைக்கிறேன். இந்த இரும்புக் காலைப் பொருத்திவிடுவார்கள். இந்த வேர்களால் (சமூலம்) கட்டி மூலிகைச் சாற்றைப் பிழிந்தால், விச்பலா முன்னினும் பன்மடங்கு விரைவாகத் தேரோட்டுவாள்.

கேலன்: உண்மையாகவா, குருதேவா!

விச்பலா: தவச் சீலரே! காலைப் பொருத்தியதும் முதல் சாஷ்டாங்க நமஸ்காரம் உங்களுக்குத்தான். என்னைக் காப்பாற்றிவிடுங்கள், பெருமானே!

அகஸ்தியர்: கவலைப்படாதே, விச்பலா. தசையினால் ஆன அந்தக் கால் போகட்டும். இரும்பாலான இந்தக் காலைப் பொருத்துகிறேன்.

(வெட்டுண்ட ஜங்கைக்குக் கீழே - முழங்காலுக்குக் கீழே - இரும்புக் காலைப் பொருத்தி மூலிகைச் சாற்றைப் பிழிந்து கட்டுகிறார். அவர் உதடுகள் முணுமுணுக்கின்றன. கண்கள் அடிக்கடி விண்ணைப் பார்க்கின்றன.)

அகஸ்தியர்: மருத்துவத்தில் தேர்ந்த அசுவினி தேவர்களே! உங்களை வேண்டி, இந்த இரும்புக் காலைப் பொருத்தியிருக்கிறேன். எதிரியின் தாக்குதலிலிருந்து நாட்டைக் காப்பது மன்னன் கடமை. என்னைக் குருவாகக் கொண்ட கேலன், இந்தப் போரில் வெற்றி பெறவேண்டும். அதற்கு இந்தப் பெண்ணின் உதவி அவசியம் தேவை. நாளைக்கு இவள் தேரோட்டிச் செருக்களம் செல்ல வேண்டும். அசுவினி தேவர்களே! உங்களை நமஸ்கரித்துத் துதித்து இந்தச் செயலைச் செய்திருக்கிறேன். நீங்கள் அருள்மழை பொழிந்து, விச்பலாவின் துடையில் இந்த இரும்புக் காலைச் சாசுவதமாகப் பொருந்தச் செய்ய வேண்டும், கருணை காட்டுங்கள். மருத்துவத் தேவதைகளே! ஓம் சாந்தி, ஓம் சாந்தி!

(விண்ணைப் பிளந்து செல்லும் மின்னலைப் போல் ஓர் ஒளிப்பிழம்பு பாசறையில் ஒளி விடுகிறது. அகஸ்தியர் அந்த ஒளிப்பிழம்பை வாழ்த்தி வரவேற்கிறார். அந்த ஒளியின் பிரகாசத்தைத் தாங்காமல் . கேலனும் விச்பலாவும் கண்களை இறுக மூடிக் கொள்கின்றனர்.)

ஃ ஃ ஃ

அகஸ்தியர்: விச்பலா! ஜாமக் கோழி கூவுகிறதே! காதில் விழவில்லை! எழுந்திரு.

விச்பலா: ஐயா, ஐயா! நானா? விச்பலாவா நான்! நன்றாக நிற்க முடிகிறதே! புதிய வாழ்வைக் கொடுத்த மகானே, முதல் நமஸ்காரத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

அகஸ்தியர்: எழுந்திரு, மகளே! இரண்டு கால்களுக்குள் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா, மகளே, உனக்கு?

விச்பலா: இல்லை, இல்லவே இல்லை மகாப்ரபு. உங்கள் தவ வலிமை மகத்தானது. அமுதினும் இனிய தமிழை அளித்த குறுமுனியே! தாழ்ந்த தென்னகத்தை வடபுலத்துக்குச் சமமாக்கிய தங்கள் தவ வலிமையைக் கண்ணாரக் காணும் பேறு பெற்றேன். நானே அதிர்ஷ்டசாலி!

அகஸ்தியர்: அதிகமாகப் புகழாதே, மகளே! புது வாழ்வே மலரப்போகிறது உனக்கு, விச்பலா! கால்களுக்குள் உள்ள வித்தியாசத்தை நீ உணர மாட்டாய். ஆனால் இரும்பு பொருத்திய உன் வலக் கால் வஜ்ராயுதம் போன்றது. சமயம் அறிந்து உபயோகப்படுத்து, மகளே!

விச்பலா: ஆசீர்வாதம் செய்யுங்கள், தபோதனரே!

அகஸ்தியர்: ஆசி வழங்கத்தான் போகிறேன், மகளே! ஆனால்..

விச்பலா: ஆனால் என்று நிறுத்துகிறீர்களே, பிரபு? ஆம், உங்கள் ஆசிக்கு நான் தகுதியில்லாதவள் தான், புரிகிறது!

அகஸ்தியர்: தவறு செய்பவன் மனிதன்; ஆனால் அதை உணர்ந்து திருந்தி நல்வழிப்படுபவன் மாமனிதன். நீயும் அப்படி ஆவாய் என்று என் உள்மனம் கூறுகிறது, மகளே!

விச்பலா: புரிகிறது, தேவதேவா! இந்த அபலைக்கு அப்படியே ஆசி வழங்குங்கள், ஐயனே!

அகஸ்தியர்: வெற்றி உனக்கே, மகளே! நாளையே இந்தப் போருக்கு ஒரு முடிவு கட்டு. பெண் நினைத்தால் பெற முடியாதது ஒன்றும் இல்லை. போய் வருகிறேன், மகளே! ஜய விஜயீ பவ!

காட்சி—5.

(மறுநாள் இரவு. விதஸ்தா (ராவி) நதி தீரம். அந்தி மயங்கி, நடு நிசி நெருங்குகிறது. பாசறையில் வியப்

பும் திகைப்பும் மிகுந்து உறக்கம் பிடிக்காமல் கலங்கி நிற்கிறான் ரதனீயன்.)

குரல்: ஓம் சக்தி. பராசக்தி! ஜயத்தை அருளட்டும்.

ரதனீயன்: யார் அது? குலகுரு காலவ மகரிஷியா?

காலவர்: ஆம், ரதனீயா? உன் மனம் படும் சஞ்சலம் அறிந்தோம். உடன் இங்கே எழுந்தருளினோம். ஓம் சக்தி. சக்தியின் திருவருளும் திவ்ய தரிசனமும் உனக்கு இப்போது கிட்டப் போகின்றன.

ரதனீயன்: என்ன சொல்கிறீர்கள், மகரிஷி! ஒன்றும் புரியவில்லையே! சக்தியா?

காலவர்: ஆமாம். சக்தி சொரூபிணி, அர்ஜுனனுக்கு வரம் அளித்த துர்க்காபரமேசுவரி, ஜகன் மாதா.

ரதனீயன்: உங்கள் பேச்சைக் கேட்டால் புதுமையாக இருக்கிறது, குருதேவா. காண்பதெல்லாம் கனவாக இருக்கிறது, மகரிஷியே!

காலவர்: அப்படி என்ன கனவு கண்டாய், ரதனீயா?

ரதனீயன்: தசையும் நிணமும் கொண்ட காலை இழந்த ஒருத்தி, இன்று புதுக்காலுடன் அமர்க்களத்தில் அமர்க்களப்படுத்திவிட்டாள், மகரிஷியே! எப்படி முடியும் இது?

காலவர்: ஓ! அதுவா? ஏன் முடியாது? இதோ பார்! (வேஷம் கலைகிறது)

ரதனீயன்: நீயா? விச்பலாவா? உண்மையாக நீயா? ஒரு கால் இல்லாத நீ....எப்படி இப்படி?

விச்பலா: உங்களைப் பெயர் சொல்லிக் கூப்பிட மனம் வரவில்லை, மன்னா: நானேதான்; விச்பலாவேதான். இறைவன் அருளால் எனக்குக் கால் கிடைத்துவிட்டது. இதோ பாருங்கள். முன்னைவிட வழுவழுப்பாக, பளபளப்பாக இல்லை! பாருங்களேன்! என்ன இது? ஆச்சரியமாக இருக்கிறது. அருகில் வரவே பயந்து பின்னால் போகிறீர்களே? தொட்டுத்தான் பாருங்களேன்;

ரதனீயன்: விச்பலா, உண்மையாகவா பேசுகிறாய் நீ?

விச்பலா: பயப்படாதீர்கள், மன்னவா! அந்தக் கிழவனைவிட நீங்கள் எத்தனையோ மடங்கு தேவலை. பேதலித்த புத்தி தெளிவடைந்துவிட்டது. அதனால்தான் நானே உங்களைத் தேடி இரவில் வந்துவிட்டேன். வாருங்கள், மன்னா, அருகில் வாருங்கள். மஞ்சத்தில் உட்கார்ந்து பேசி மகிழ்வோம்.

ரதனீயன்: விச்பலா, நம்பலாமா உன்னை?

விச்பலா: உங்களை நம்பி வந்துவிட்டேன், மன்னவா! என்னை ஏற்றுக்கொள்வதும் மறுப்பதும்...

ரதனீயன்: மறுப்பதா? தேடி வந்த செல்வம் நீ? ஆனால்..

விச்பலா: ஆனால்? நேரம் கழிகிறது, மன்னா, யோசிக்க நேரம் இல்லை. வாருங்கள். மஞ்சத்தைப் பார்க்கப் பார்க்க என் மனம் துடிக்கிறது.

ரதனீயன்: ஆஹா, என்னைப் போன்ற அதிர்ஷ்டசாலி உலகத்திலேயே இல்லை, விச்பலா! குலகுரு காலவர் வேஷத்தில் எவ்வளவு தத்ரூபமாய்... என்னையே நம்ப வைத்துவிட்டாயே?

விச்பலா: ஓகோ, வேஷம் போடுவதிலும் கெட்டிக்காரி என்கிறீர்களா, மன்னா, என்னை?

ரதனீயன்: ஆம், கண்ணே! வி..ச்ப....லா....

விச்பலா: என் கண்ணா! மணிவண்ணா! வாருங்கள் மஞ்சத்துக்கு. கடைசி ஜாமப்போது நழுவுகிறது. மேலும் தாமதித்தால்... அப்பா...

ரதனீயன்: கண்மணியே, விச்பலா. ஆஹா! கண்ணே, கற்கண்டே, கற்பகமே! உன் அழகுக் காலை முத்தமிடலாம் போல...

விச்பலா: ஹாஹா! மன்னருக்கு மதி மயக்கம் அதிகமாகிவிட்டது. சரி; சரி, வாருங்கள், அருகில் நெருங்கி அமருங்கள்.

ரதனீயன்: ஆ ஆ! விச்பலா, விச்பலா! மூச்சு முட்டுகிறதே? ஏன் இப்படிக் கழுத்தைக் காலால் கட்டி நெரிக்கிறாய்? தாங்க முடியவில்லையே?

விச்பலா: தாங்கமுடியவில்லையா? இன்னும் ஒரு விநாடிதான்! நீ வெட்டின காலே உனக்கு எமனாக இதோ, உன் தலைமேலே விழுகிறது பார்! இரும்புக் கால் உனக்குக் கபால மோட்சத்தை அளிக்கிறது, ரதனீயா!

ரதனீயன்: ஐயோ! அப்பா!

காட்சி—6.

[பொழுது புலர்கிறது. மன்னன் ரதனீயன், தன் பாசறையில், மண்டை பிளந்து மரணமுற்றுக் கிடக்கிறான் என்ற செய்தி பரவுகிறது. ரதனீயனின் படைகள் மன்னன் மாண்டதை அறிந்ததும் திரும்ப ஓட்டம் எடுக்கின்றன.]

கேலன்: கண்ணே, விச்பலா! வெற்றி, வெற்றி! ரதனீயன் தொலைந்தான்; நமக்கே வெற்றி!

விச்பலா: எதற்கு இப்படிக் குதிக்கிறீர்கள்?

கேலன்: குதிக்கிறேனா? இறைவனே நம் பங்கில் இருந்து வெற்றியை அளித்துவிட்டான். தொலைந்தான் ரதனீயன்! யாரோ அவன் மண்டையைப் பிளந்து போட்டு விட்டார்கள், விச்பலா. வாயேன்! கொஞ்சம் வெளியே. உல்லாசமாகச் சுதுத்ரி நதியில் பரிசலில் போய்விட்டு வரலாம், கண்ணே!

விச்பலா: வெற்றியை நீங்கள் மட்டும் கொண்டாடுங்கள் போதும்.

கேலன்: நீ என்ன சொல்கிறாய், விச்பலா? ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?

விச்பலா: இந்த வெற்றியே எனக்குப் பிடிக்கவில்லை.

கேலன்: ஏன்?

விச்பலா: இது வெற்றியே இல்லை உங்களுக்கு.

கேலன்: ஓஹோ, அப்படிச் சொல்கிறாயா?... புரிகிறது, புரிகிறது. உன் வெற்றிதான் இது.

விச்பலா: ஆமாம். முழு வெற்றி கிடைக்கவில்லை. இன்னும் பாதி இருக்கிறது. சரி, போகட்டும்! ரதனீயன் தொலைந்தான் என்ற மகிழ்ச்சியில் ஓடோடி வந்திருக்கிறீர்கள். பாவம், களைத்திருப்பீர்கள். இந்தாருங்கள், இதைப் பருகுங்கள் முதலில்.

கேலன்: என்ன இது விச்பலா! கொஞ்சம் கசப்பாக இருக்கிறதே?

விச்பலா: இனிப்பாக இருந்தால் மட்டும் போதுமா? கசப்பும் வேண்டும். அதுதான் உடலுக்கு நல்லது.

கேலன்: அடி நாக்கெல்லாம் கசக்கிறதே! போகட்டும். வா, உல்லாசமாக ஒரு நாள் போதை இந்தச் சுதுத்ரி நதி தீரத்திலேயே கழிக்கலாம். மித மிஞ்சிய மகிழ்ச்சியில் என் உடலும் மனமும் பரபரக்கின்றன. உன்னை அப்படியே எடுத்து மாம்பழத் துண்டம்போல்...

விச்பலா: சுவைத்தது போதும் கேலா!

கேலன்: கேலனா?

விச்பலா: ஆமாம்; உன்னைவிட உயர்ந்துவிட்டேன் நான். ஆசைநாயகியாம் ஆசைநாயகி! மன்னர்களின் மஞ்சத்தை நினைத்தாலே நெருப்பாய் எரிகிறது! அப்படி நீ என்னை ஆண்டதனால்தானே, 'கண்ட கண்ட சுவானமும் என்னைத் துரத்திக் கொண்டு வந்தது! நீயும் ஒரு சுவானந்தான். ஒன்றை ஒழித்துவிட்டேன். உன்னை என்ன செய்வது?

கேலன்: அடி பாதகி! நானா சுவானம், என்னையா நாயென்று சொல்கிறாய்? எனக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டாயா வஞ்சகி?

விச்பலா: இல்லை. சில ஆண்டு உன்னோடு வாழ்ந்திருக்கிறேனே! அந்த நன்றிக்காக உனக்கு விஷம் தரவில்லை. என்னைப் போல் எந்தப் பெண்ணையும் ஆசைநாயகியாக உன் ஆயுள் முழுதும் கொள்ளமுடியாது. உன்னைக் கொல்லாமல் உன் ஆண்மையைக் கொன்றுவிட்டேன்!

கேலன்: ஆண்மையைக் கொன்றுவிட்டாயா? படுபாவி! என் பட்ட மகிஷிகளின் கதி?

விச்பலா: தீவளிக்குத் தீவளி கிடைக்கும் இன்பம் என்றுமே அவர்களுக்குக் கிடைக்காமல் போகட்டுமே!

கேலன்: வஞ்சகி! பெண்ணுருவில் உலாவும் பேயே! உன்னை என்ன செய்கிறேன், பார்.

விச்பலா: கேலா, இனிமேல் கத்தியை உருவாதே. புத்தியை உருவாக்கு! போய் வா! குலகுரு அகஸ்திய முனிவரிடம் விச்பலா தபஸ்வினியாக மாறிவிட்டாள் என்று சொல்; மைத்ரேயியும் கார்க்கியும் எனக்கு வழிகாட்டிகளாக இருப்பதாகச் சொல். போய் வா, கேலா! ஓம் சாந்தி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி:

(கதைக் கரு: ரிக் வேதம்-மண்டலம் 1, ஸர்க்கம் 17; சூக்தம் 116, ரிக் 15.)

" தீபாவளி வாழ்த்துக்கள் "

★

For Quality Plywoods and Cormica

CONTACT

Sree Krishna Plywood Agencies

81, Madurai Road

TIRUCHIRAPALLI-620 008

PHONE 25330

R. Nagasundaram

உருவக அறுவைச் சிகிச்சை முறை

பேராசிரியர் இரா. வேங்கடசாமி

பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை என்பது இன்றோ நேற்றோ உருவான அறுவைச் சிகிச்சைப் பிரிவு அல்ல. கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றியதொரு கலை இது எனச் சொல்லலாம்.

சுச்ருதர் என்ற வேதகாலத்து அறுவைச் சிகிச்சை நிபுணர் நம் நாட்டைச் சேர்ந்தவர் என்பது அனைவரும் அறிந்ததே. கி.மு. 500 ஆம் ஆண்டிலேயே அவர் அறுந்து போன மூக்குகளை, நெற்றியிலிருக்கும் சருமத்தை எடுத்துச் சரி செய்துள்ளார். ''இந்திய முறையில் மூக்கைச் செப்பனிடும் முறை'' (Indian Rhinoplastry) என்று இன்று எங்கும் பிரபலமாக இந்த முறை சொல்லப்படுகிறது.

எனவே இந்திய நாடு இந்தத் துறையில் உலகுக்கே முன்னோடியாக விளங்கியது என்பதுபற்றி நாம் பெருமை கொள்ளலாம். இன்னும் கூறப்போனால் நம் இதிகாசத்திலேயே இந்த அறுவைச் சிகிச்சை இடம் பெற்றுள்ளது. விநாயகப் பெருமானின் கழுத்தில் யானையின் தலையை வைத்து ஒட்ட வைத்தது பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை தான். எந்தக் காரியத்தைத் தொடங்கும்பொழுதும் விநாயகப் மானை வழிபடும் இந்துக்களுக்கு இந்தப் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையும் அவருடன் ஆரம்பமாயிற்று என்று எண்ணும்போது மிகவும் பெருமையாக இருக்கும்.



ஸர் ஹெரால்டு கில்லிஸ்

'எதனால் இந்தத் துறைக்குப் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை என்ற பெயர் ஏற்பட்டது?' 'பிளாஸ்டிகா' என்ற வார்த்தை கிரேக்க மொழியைச் சார்ந்ததாகக் கூறுகிறார்கள். இதன் பொருள் உருவத்தைச் செப்பனிடுவது எனவும் கூறுகிறார்கள். இந்தப் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மூலம் சேதமுற்ற பகுதிகளைச் செப்பனிட்டு, உருவமும் செயலாற்றும் திறனும் கொடுப்பதால் இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிளாஸ்டிக் சர்ஜரி என்ற பெயர் வந்திருக்கிறது.

கிறிஸ்துவுக்கு முன்னரே நம் நாட்டில் தோன்றிய கலை என்னவாயிற்று? தெரியவில்லை. எத்தனையோ கலைகளைப் போல இதுவும் தேய்ந்து மறைந்தது.

ஆனால் 18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தில் இக்கலை மீண்டும் தோன்றி வளர ஆரம்பித்தது. எப்படி, எங்கே தோன்றியது என்பன போன்ற முழு விவரங்கள் தெரியவில்லை. இந்தியக் கண்டத்திலிருந்தும் சென்றிருக்கலாம். குறிப்பாக, தாக்லியா சோஸி என்ற இத்தாலிய நாட்டு அறுவைச் சிகிச்சை நிபுணரை இங்கே குறிப்பிட வேண்டும். அவர் அறுக்கப்பட்ட மூக்குகளைக் கரத்திலிருந்து எடுக்கப்பட்ட சருமத்தின் மூலம் மிக அழகாகச் செப்பனிட்டு இருக்கிறார்.

குறிப்பாக, தேகத்தின் எந்தப் பகுதியில் இந்த அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

வெளிப்புறத்தில் இருக்கும் குறைகளைச் செப்பனிடுவது இந்த அறுவைச் சிகிச்சையின் முக்கிய நோக்கமாகும். புதிய சருமத்தை வைத்துக் குறைகளைச் செப்பனிடுவது இந்த அறுவைச் சிகிச்சையின் முக்கிய அம்சம். உதாரணமாக, ஒரு பகுதியில் பிறப்பாலோ, விபத்தாலோ குறை ஏற்பட்டால் அந்தப் பகுதிக்கு வேறோர் இடத்திலிருந்து சருமத்தை எடுத்துப் பொருத்த வேண்டும். அப்படிச் செய்தால் அந்தக் குறையை நிவர்த்தி செய்யலாம். இதற்கு ஆங்கிலத்தில் ''ஸ்கின் கிராஃப்டிங்'' எனச் சொல்வார்கள். 17ஆம் நூற்றாண்டில் தியர்ஷ் (Thiersh) என்பவர் இந்த முறையை முதல் முதலாகக் கொணர்ந்தார்.

தொடையிலிருந்து சருமத்தைச் சீவி எடுத்துப் புதிய இடத்தில் பொருத்திக் காண்பித்தார். அவர் காலத்தில் சிறிய அளவு சருமத்தைப் பல இடங்களிலிருந்து எடுத்துப் பொருத்தினர். இன்று மிகப் பெரிய அளவுக்கு 10'' — 8'' அளவு கூட ஒரே பாளமாகச் சருமத்தை எடுக்கக் கருவிகள் உள்ளன. அப்படியே எடுத்துப் புதிய இடத்தில் பொருத்தலாம்.

சுருங்கச் சொன்னால், இந்தத் துறையில் சருமத்தை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குக் கொண்டு சென்று, அந்தப் பகுதியில் சேதப்பட்ட பகுதியைச் செப்பனிடுவதுதான் முக்கிய அம்சமாகும்.

ஒருவர் உடலில் எடுத்த சருமத்தை அவருக்கே உபயோகித்துப் பொருத்துவது ஆட்டோகிராஃப்ட் எனப்படும். மற்றவரிடமிருந்து சருமத்தை எடுத்துப் பொருத்தினால் அதற்கு ஹோமோகிராஃப்ட் எனப் பெயர். அம்மாதிரியான சருமம் மற்றொருவரின் உடலில் பொருந்தி நிலைத்திருக்குமா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

இன்றைய நிலையில் மற்றவரின் சருமம் பொருந்தி நிலைத்திருக்க முடியாது. தாற்காலிகமாக ஏழிலிருந்து பத்து நாட்கள் வரை இருக்க முடியும். அதன் பின்னர் அந்தப் புதிய சருமம் நம் உடலால் ஒதுக்கித் தள்ளப்படும்.

நம் சருமத்தில் புரதச்சத்து மிகுந்திருக்கிறது. இதை ஆன்டிஜன் என்பார்கள். இன்னொருவர் சருமத்



கட்டுரையாசிரியர்

சிகிச்சைக்கு முன்

சிகிச்சைக்குப் பிறகு

தை எடுத்துப் பொருத்தும்போது, இந்த ஆண்டிஜன் என்ற புரதச் சத்து மாற்றார் சருமத்தை ஏற்றுக் கொள்ளாது. இந்தப் புதிய சருமத்தை ஏற்று அப்புறப்படுத்தத் தேவையான எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கும், 'ஆண்டபாடீஸ்' என்ற இந்த எதிர்ப்புச் சக்தி, மாற்றார் சருமத்தைப் பொருந்தச் செய்யாமல் தள்ளிவிடும். இயற்கையாகவே இந்தப் பாதுகாப்பு முறை நம் உடலில் அமைந்திருக்கிறது. இல்லாவிட்டால் பல நுண்கிருமிகள் மனித சமூகத்தையே வாழவிடாமல் செய்துவிடுமே!

உடல் முழுவதும் இருக்கும் காயங்களைத் தாற்காலிகமாக ஆற்றுவதற்கும் ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளைக் காப்பாற்றவும் மற்றொருவரின் சருமம் உதவியாக இருக்கும்.

இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் சருமம் மட்டும் அல்ல, உடலில் இருக்கும், எலும்பு, குறுத்தெலும்பு, தசை, நரம்பு முதலிய அவயவங்களை ஓரிடத்திலிருந்து எந்த அளவும் எடுத்து மற்றோர் இடத்தில் லகுவாகப் பொருத்தலாம்.

ஒருவருடைய மூக்கு சப்பையாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தச் சப்பை மூக்கைச் சரிப்படுத்த மூக்கின் மேற்புறத்தில் எலும்பு வைக்க வேண்டும். இதை உடலின் பல பாகங்களிலிருந்து எடுக்கலாம். அப்படி வைக்கப்படும் எலும்பு அவ்விடத்தில் நிலையாக இருக்கும். இந்த உதாரணத்தை மேலே உள்ள படத்தில் காணலாம்.

அடுத்து, இந்தத் துறையின் வளர்ச்சியைச் சற்றுப் பார்ப்போம்.

இந்தத் துறை இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வேகமாக வளர ஆரம்பித்தது. முதலாவது இரண்டாவது மகா யுத்தங்களும் தொழிற் புரட்சியும் ஏராளமான மக்களைச் சேதப்படுத்தின. சேதப்பட்ட வெளிப்புறப் பகுதிகளைச் செப்பனிட்டுத் திரும்பவும் அந்தப் பகுதிகள் சீருடன் இயங்க வைக்க இந்தத் துறையால்தான் முடியும்.

இந்தத் துறையை முன்னோடியாக இருந்து வளர்த்த பெருமை ஸர் ஹெரால்டு கில்லிஸ் என்பவரைச் சாரும். இவர் நியூசிலாந்தில் பிறந்து இங்கிலாந்தில் வளர்ந்தவர். இன்றைக்கும் இவரைப் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைப் பிரிவின் தந்தை என்பார்கள். உலக மகா யுத்தங்களின்போது இவர் செய்த சேவை போற்றுதற்குரியது. நூற்றுக் கணக்கான அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் இந்தத் துறையில் ஆர்வம் கொள்ள இவர் தூண்டுகோலாக இருந்தார்.

இந்தத் துறை துரிதமாக முன்னேற ஆரம்பித்து இன்று உலகில் எல்லாப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. நம் நாட்டில் இத்துறை 1950க்குப் பிறகே வளர ஆரம்பித்தது. கேரளத்தைச் சேர்ந்த டாக்டர் பாலகிருஷ்ணன், பம்பாயைச் சேர்ந்த டாக்டர் ஆண்டியா, பிகார் மாநிலத்தைச் சார்ந்த டாக்டர் சின்ஹா முதலியோர் முன்னோடிகளாக இருந்து இந்தத் துறையை நம் நாட்டில் வளர்த்தார்கள்.

இன்றைக்குப் பரவலாக எல்லா மாநிலங்களிலும் இத்துறை வளர்ந்து வருகிறது. சுமார் 250 பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் உள்ளார்கள். பல இடங்களில் இந்தத் துறைக்குப் பயிற்சி நிலையங்களும் உள்ளன.

தமிழ்நாடு இந்தத் துறையில் நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. சென்னை, மதுரை, தஞ்சை, கோவை, வேலூர் முதலிய நகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இப்பிரிவு செயல்படுகிறது. மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவமனைகளில் மட்டுமே இந்தப் பிரிவு இப்போது இயங்கி வருகிறது. இதுதவிர, தனிப்பட்ட நிபுணர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் வெளித் தோற்றத்தில் உள்ள குறைகளைச் சீர்படுத்தி அந்தப் பகுதிகளுக்குச் செயலாற்றும் திறனை உண்டுபண்ணுகிறார்கள்.

உருவம் அல்லது சருமத்தை அழகுபடுத்துவதுதான் இந்தத் துறையின் முக்கிய நோக்கம் என்ற ஒரு கருத்து மக்களிடையே பரவலாக உள்ளது. இயற்கை அளித்த மூக்குகளை, மார்பகங்களைச் செப்பனிடுவதும் இந்தத் துறைதான். முதுமையால் ஏற்படும் முகத்துச் சுருக்கங்களை நீக்கவும் இவ்வறுவைச் சிகிச்சை உதவுகிறது. இந்தச் சிகிச்சையை மேற்கொண்டு பலர் அழகிய உறுப்புக்களைப் பெற்றிருக்கின்றனர். ஆனால் அழகுபடுத்துவதுதான் இந்தத் துறையின் முக்கிய நோக்கம் என்பது தவறான கருத்து. ஒரு சிறிய சதவீதந்தான் இம்மாதிரியான அழகுபடுத்தும் துறையில் ஈடுபடுகிறது. பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு மறு வாழ்வு அளிப்பதே லட்சியம்.

மேல்-கீழ்: காதைச் சீராக்கும் சிகிச்சை

உடலில் வெளிப்புறத்தில் ஏற்படுகிற ஊனங்களைச் சரிப்படுத்தி, கைகளுக்கும் கால்களுக்கும் திரும்பவும் எல்லாப் பணிகளையும் செய்ய வாய்ப்பு அளிப்பதுதான் இந்தத் துறையின் முக்கிய நோக்கம்.

வருங்காலத்தில் இந்தத் துறை மேலும் வளர்ந்து மக்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ✻

காணிக்கை



ஏ.நடராஜன்

"முடியாது! நான் செய்த முடிவை யாருக்காகவும் மாத்துவதற்கு நான் தயாராக இல்லை.'' நாயன மேதை ராஜப்பாவின் குரல் உச்சஸ்தாயியில் ஒலித்தது.

அவர் எதிரே உட்கார்ந்திருந்த சபா நிர்வாகி மணி, எப்படியும் ராஜப்பாவை இணங்கச் செய்து விட வேண்டும் என்பதைக் குறியாகக் கொண்டு வந்திருக்கவேண்டும். அதனால்தான் இடத்தைவிட்டு அசையாமல், செயற்கையான சிரிப்புடன் ராஜப்பாவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பிரம்மாண்டமான அந்தப் பங்களாவின் முன் அறையில் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். வாசலிலிருந்த வேப்பமரத்தின் காற்று இதமாக அவர்கள் பக்கம் வீசியது. ''வனஜா, வனஜா'' என்று உள்பக்கம் பார்த்து அழைத்தார்.

அடுத்த சில நொடிகளில் வனஜா, கையில் காபிக் குவளையுடன் வந்தாள்.

''ம்ம்: சாப்பிடுங்கள் மணி!'' என்று உபசரித்தார் ராஜப்பா. அவர் முகத்தில் கடுகடுப்பு மறைந்து லேசான சிநேகபாவம் பளிச்சிட்டது.

விரைவாகக் காபிக் குவளையை எடுத்துக் கொண்ட மணி, மெல்ல வாயால் ஊதி அதன் சூட்டைக் குறைத்துக் காபியைச் சுவைக்கத் தொடங்கினார்.

''வித்வானுடைய காபி வாசிப்பைப் போலவே வீட்டுக் காபியும் மணக்கிறது'' என்று சொல்லி உரக்கச் சிரித்தார் மணி.

இவரைப் போன்று எத்தனை விதமான நபர்களை ராஜப்பா பார்த்திருப்பார்! மணியின் புகழுரைக்கு ராஜப்பாவின் முகத்தில் எந்தச் சலனமும் ஏற்படவில்லை.

ராஜப்பா புகழ் பெற்ற நாகசுரக் கலைஞர் மட்டும் அல்ல. தன்மானத்தில் தன்னிகரில்லாத சிங்கம். ஒரு தனவந்தரிடம், அவர் வீட்டுத் திருமணத்துக்குப் பத்தாயிரம் ரூபாயில் ஒரு பைசாக் குறையாமல் கறாராகப் பேசிப் பணத்தை வாங்கிடுவார். அதே நேரத்தில் தன் மீது அன்பு வைத்திருக்கும் நண்பர் வீட்டுத் திருமணத்துக்குப் பைசா வாங்காமல் தம் செலவிலேயே கச்சேரி செய்து விட்டு வருவதும் உண்டு. ராஜப்பா புரிந்துகொள்ள முடியாத புதிர் என்று பலர் சொல்லுவார்கள்.

கலைஞர்களின் சொர்க்க பூமியான தஞ்சை மாவட்டத்தில், காவேரிக் கரையில் அமைந்த ஒரு சிற்றூரில் இசைக் குடும்பத்தில் பிறந்தவர் ராஜப்பா. மிக எளிய குடும்பத்தில் பிறந்த ராஜப்பாவுக்கு இயற்கையிலேயே இசை ஆர்வம் அதிகமாக இருந்தது. பத்து வயதில் தம் பெற்றோர்கள் இருவரையும் இழந்து, தாய்மாமனின் ஆதரவில் வளர்ந்த ராஜப்பா, அதிகமாகப் படிக்க முடியாத சூழ்நிலை.

'வாய்ப்பாட்டு, வீணை, நாகசுரம் என்று அவர்முன் மூன்று வாய்ப்புகள் தலைநீட்டின.

நாகசுரத்தின் மீது அவருடைய ஆர்வம் அதிகமாக இருந்தது. சில வருடங்களிலேயே பளிச்சென்று வெளியே தெரியும் அளவுக்கு முன்னுக்கு வந்துவிட்டார். அடுத்து வந்த ஆண்டுகள் அவருடைய இசை வாழ்க்கையில் வசந்த காலமாகும்.

ஐந்தரை அடி உயரம், செக்கச் சிவந்த மேனி, கரிய சுருள்முடியைத் தழையத் தழைய வாரிவிட்டாலும் நெளிநெளியாகச் சுருண்டு கவர்ச்சியாய் இருக்கும். பரந்த நெற்றி, நிறைய விபூதி, நடுவே சந்தனப் பொட்டு. காற்றிலே சலசலக்கும் சலவை செய்த பட்டாடைகள். வயிறுவரை நீண்டு தொங்கும் டாலர் கோத்த தங்கச் சங்கிலி. இவை யாவும் அவருடைய புறச் சின்னங்கள்.

ஆஜானுபாகுவான ஆகிருதி என்றாலும், குழந்தையைவிடக் கனிந்த உள்ளம், எளிதில் உணர்ச்சி வசப்பட்டு விடுவார்.

மேடையில் அமர்ந்துவிட்டால் இசையோடு ஒன்றிப் போய்விடுவார். ராகங்கள், 'என்னைக் கொஞ்சம் கையாளு' என்று கெஞ்சிக்கொண்டு வரிசையாக நிற்கும். ஆனந்த பைரவியும், சகானாவும், தோடியும், பைரவியும் அவருடைய முத்திரை பதித்த ராகங்களாகும்.

ராஜப்பா அமர்ந்திருந்த நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த வனஜாவைப் பார்த்து, ''என்னம்மா, நீங்களாவது வித்வானுக்குச் சொல்லக் கூடாதா? நீங்க சொன்னா நிச்சயம் தட்ட மாட்டார்'' என்று சொன்னார் மணி.

முகத்தில் சலனம் ஏதும் இல்லாமல் தன் கணவனைப் பார்த்தாள் வனஜா.

வனஜாவை ராஜப்பா திருமணம் செய்து கொண்டதையே ஒரு கதையாகச் சொல்லுவார்கள்.

அப்போது ராஜப்பாவுக்கு இருபது வயதிருக்கும்.

உடன்குடியில் தெப்பத் திருவிழா. முதல் முறையாக அங்கே கச்சேரி செய்வதற்கு ராஜப்பாவுக்கு அழைப்பு வந்தது. முதல் தரமான கலைஞர்களை மட்டுமே அங்கு அழைப்பது வாடிக்கை. இசையில் பெரிய ஜாம்பவான்கள் கொடிகட்டிப் பறக்கும் இடம் உடன்குடி. அங்கு வாசித்துத் திறமையைக் காட்டி விட்டால் பிறகு எந்த இடத்திலும் சமாளித்து விடலாம்.

அங்கே கச்சேரி செய்வதற்காக மாலை நேரத்தில் வாடகைக் கார் எடுத்துச் சென்றார். அதுவரை அந்த ஊருக்கு வந்த கலைஞர்கள் அனைவரும் பஸ், ரெயில் என்று பொது வாகனங்களில்தான் வருவது வழக்கம். வாடகைக் காரில் ஆடம்பரமாக வந்து இறங்கிய இளைஞனை விரோத பாவத்தோடு பார்த்தார்கள், உடன்குடி வாழ் இசைக் கலைஞர்கள்.

இரவு பத்து மணிக்கு இறைவன் திருவீதி உலா.

சுந்தரேச குருக்களின் மலர் அலங்காரம் மிகவும் பிரசித்தமானது.

ஒளி வெள்ளத்தில் இறைவன் ஜொலித்துக் கொண்டிருக்கிறான். பொது மக்களும், இசைவாணர்களும் திரளாகக் குழுமியிருக்கிறார்கள்.

முதல் மல்லாரி முடிகிறது. களை கட்ட ஆரம்பித்து விட்டது.

இரண்டாவது மல்லாரி திஸ்ர கதியில் முழங்குகிறது. லயத்தோடும் இணைந்த சங்கதிகள் அவுட்டு வாணங்களாகப் பீரிடுகின்றன. துரித கதியில் பிர்க்காக்கள் கோவையாக விழுந்து குழுமியிருப்பவர்களைப் பிரமிக்க வைக்கின்றன. கரவொலிகள் குபீரென்று கிளம்பி ராஜப்பாவை மகிழ்விக்கின்றன. அடக்கத்தோடு அதை ஏற்றுக் கொண்டு அடுத்த அயிட்டத்துக்குப் போகிறார்.

நறுக்காக நாலு கீர்த்தனைகள், ஸ்வரப் பிரயோகங்கள் முடிந்ததும் ஊர்வலம் அடுத்தத் தெருவுக்கு நகர்கிறது.

''ஏதோ கீர்த்தனைகள் வேகமாக வாசித்து ஜாலம் செய்கிறான். ராகம் வாசிக்கட்டும், அவனுடைய உண்மையான திறமையைக் கண்டு பிடித்து விடலாம்'' என்று மூத்தவர்கள் தங்களுக்குள், சற்றே பொருமையுடன் பேசுகிறார்கள்.

ஊர்வலம் நகரும்போதே ராஜப்பாவின் அருகில் வந்து, காதைக் கடித்தான் சுடலை. மிகுந்த எதிர்ப்பையும் சமாளித்து ராஜப்பாவின் கச்சேரியை ஏற்பாடு செய்த சுடலை, மிகுந்த கவலையோடும் இருந்தான். ஒரு நல்ல இளம் கலைஞனை மூத்தவர்கள் அவமானப் படுத்தி விடக் கூடாதே என்ற பதற்றம் அவனிடம் இருந்தது.

''அடுத்து உங்களுடைய ராக ஆலாபனைக்காகக் காத்திருக்காங்க. கவனமாகப் பார்த்து வாசியுங்க. நீங்க எப்போது சறுக்குவீங்கன்னு காத்துக்கிட்டிருக்காங்க'' என்று ரகசியமாக ராஜப்பாவை எச்சரித்துவிட்டுக் குடிப்பதற்காகச் சூடாக டம்ளரில் பாலை ஊற்றிக் கொடுத்தான்.

தவில் வித்வான் நடைச் சொல்லை வாசித்துக் கொண்டுவர, லய ரசிகர்கள் ஆர்வமாய்க் கையில் தாளம் போட்டு ரசிக்க, ராஜப்பா பாலைச் சுவைத்துக் கொண்டே ஊர்வலத்தோடு ஊர்வலமாய் நகர்ந்தார்.

அடுத்தத் தெருவில் கச்சேரி மீண்டும் தொடங்கியது.

சீவாளியை உதட்டில் வைத்துப் பதப்படுத்திவிட்டு, கெண்டைக் குச்சியால் அதைப் பிரித்து, நாயனத்தில் பொருத்துவதைக் கூட ஆர்வமாய் மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''என்ன தேஜசான முகம்!''

''வாசிக்கும்போது கூட முகம் மலர்ந்தாற்போல இருக்கிறதே தவிர, வாசிப்பதற்குச் சிரமப்படுவதாகத் தெரியவில்லையே?''

''இயல்பாக, எளிதாக அலட்டிக் கொள்ளாமல் வாசிக்கிறாரே?'' என்று பொதுமக்கள் தங்களுக்குள் வியக்கத் தொடங்கினார்கள்.

ராக ஆலாபனை தொடங்கியது. மிகவும் விஸ்தாரமாக மேடை அமைப்பதைப் போல, ராக ஆலாபனை அமைந்தது. விளம்ப காலம், தெளிந்த நீரோடையைப் போல இருந்தது. மத்திம காலம் இதமான தென்றல் போல வீசியது. ராகத்தின் அனுசரங்களில் ஒன்றை மட்டும் மாற்றி ஆலாபனை செய்ததில் இசை வல்லுநர்களே அது என்ன ராகம் என்று புரியாமல் திணறத் தொடங்கினார்கள். ஒருவர் மற்றொருவர் முகத்தைப பார்க்கத் தொடங்கினார்கள்.

பிர்க்காக்கள் பளிச் பளிச்சென்று மின்னின. ஸ்வரக் கோவைகள் மத்தாப்பூக்களைப் போலப் பொறி வீசின.

இரண்டு மணி நேரம் போனதே தெரியவில்லை. பிரமிப்பு நீங்குவதற்கு வெகு நேரமாயிற்று.

அப்போது விடிகாலை மணி நான்கு. நாயனத்தை அருகிலிருந்த சுருதி போடும் கலைஞரிடம் கொடுத்து விட்டுச் சுடலையின் வீட்டின் முன் ஹாலில் சிரம பரிகாரம் செய்து கொள்ளச் சென்றார்.

கூடவே ரசிகர்கள் கூட்டம் முண்டியடித்தது.

''கொஞ்சம் காபி வேண்டும்'' என்று ராஜப்பா சுடலையிடம் கேட்டார்.

வயதில் முதியவர்கள் சிலர் தாமாக முன்வந்து, ''ராஜப்பா, உண்மையிலேயே வாசிப்பதில் நீ ராஜாதான், சந்தேகமே இல்லை. மகராஜனாய் நீ விளங்க வேண்டும்'' என்று வாழ்த்தினார்கள்.

''தப்பாக நினைத்துக் கொள்ளாதே! நீ வாசித்த ராகம் என்னவென்றே எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது. தயவு செய்து என்ன ராகம் என்று சொல்ல இயலுமா?''' என்று கேட்டார்கள்.

ராஜப்பா புன்முறுவலுடன், ''நான் சற்று முன்பு கேட்டேனே அதுதான்'' என்று சொன்னார்.

''ஓ காபி ராகமா!'' என்று பலரும் அதிசயித்தார்கள். வாசித்த முறையைப் பவ்யமாக விளக்கிக் காண்பித்தார் ராஜப்பா.

அப்போது அங்கு மின்னலடித்தாற்போல ஒரு பெண், காபியைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

வஞ்சிக்கொடி போல் இருந்தாள். கரும் பச்சை நிறத்தில் சேலை அவளுடைய எலுமிச்சை நிற மேனிக்கு மேலும் கவர்ச்சியை ஊட்டியது. எடுப்பான மூக்கு, வரிசை தவறாத பற்கள், கச்சிதமான நெற்றி, தழையத் தழைய வாரிப் பின்னலிட்டு, மணக்கும் மல்லிகையைப் பந்தாகத் தலையில் வைத்திருந்தாள். விடியல் நேரத்துப் பூபாளமாகச் சுடர்விட்டாள்.

''என் மகள் வனஜா'' என்று சுடலை ராஜப்பாவுக்கு அறிமுகப் படுத்தினான்.

அந்த இன்ப அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு ராஜப்பாவுக்கு வெகு நேரமாயிற்று.

வயதான, சங்கீதம் தெரிந்த ஒரு பெண் ராஜப்பாவின் அருகில் வந்து அவருடைய கன்னங்களை வருடி, ''அப்பா ராஜப்பா, அடுத்த தெருவில் ஹேமவதி ராகம் வாசிச்சியே, மெய் சிலிர்த்துப் போனேன். அந்த இடத்தில் ஹேமவதிங்கிற பொண்ணு சர்வ அலங்காரங்களுடன் அப்படியே காட்சி தர்ற மாதிரி எனக்குப் பிரமை ஏற்பட்டுப் போச்சு'' என்றாள்.

'இந்த வனஜாங்கற தேவதைக்கு முன் என் ஹேமவதியெல்லாம் எம்மாத்திரம்?' என்று மனத்தில் எண்ணிய ராஜப்பா, கச்சேரி முடிந்த பிறகும் இரண்டு நாட்கள் தங்கி வனஜா விருப்பத்தை அறிந்து, பிறகு அடுத்த திருமண நாளிலேயே அவளை மணந்து கொண்டார்.

அன்று முதல், அவருடைய முதல் ரசிகை வனஜாதான்.

அவர் கிழித்த கோட்டைத் தாண்டியது கிடையாது. அவர் மன நிலையைத் துல்லியமாகப் பிரதிபலிக்கும் கண்ணாடி வனஜா.

மணியின் வார்த்தைக்குப் பலன் ஏதும் கிடைக்கவில்லை. ராஜப்பாவிடம் ஏதும் சொல்ல இயலாதவளாய் வீட்டுக்குள் சென்று மறைந்தாள்.

ராஜப்பா மீண்டும் மணியைப் பார்த்துச் சொன்னார். ''இதோ பாருங்க, மணி! தனிப்பட்ட ராஜப்பாவுக்காக நான் ஏதும் பேசவில்லை. என்னை வாழ வைக்கும் கலைக்காகத்தான் போராடுகிறேன். என்னுடைய பிர்காக்களைக் கேட்டுச் சங்கீதம் கற்றுக் கொண்டவர்களுக்கு உங்கள் சபையில் மாலை நேரக் கச்சேரி, நாகசுரத்துக்கு மட்டும் இரவு நேரக் கச்சேரியா? இது என்ன நியாயம்?''

''ராஜப்பா சார், வருஷா வருஷம் நடத்துவர்ற மாதிரிதான் இந்த ஆண்டும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கோம்.''

''நான் உங்க சபாத் தலைவரிடம் டெலிபோனிலேயே சொன்னேன். இந்த ஆண்டு மாலை நேரக் கச்சேரி என்றால்தான் வருவேன்; இல்லாவிட்டால் முடியாது என்று தெளிவாகச் சொன்னேன். அப்படியும் நீங்க இரவு நேரக் கச்சேரியாகப் போட்டால் என்ன அர்த்தம்?''

''இசை விழாவிலே, இரவு நேரத்தில் நாகசுரத்தைக் கேட்டுப் பழகிப் போய்விட்டோம் அதனால்தான்.''

ராஜப்பாவுக்குக் கோபம் பீரிட்டது.

''அதென்ன சம்பிரதாயம்? நீங்களாகக் கற்பனை செய்து கொள்கிறீர்கள். மற்ற நேரங்களில் மாலையில்தானே சபாக்களில் வாசிக்கிறோம்? ஆண்டு விழாவின்போது மட்டும் ஏன் இந்தப் பாகுபாடு?''

''இந்த ஆண்டு பத்திரிகையில் பெயர் போட்டாகிவிட்டது. அடுத்த ஆண்டு நீங்க சொன்னபடி செய்யலாம். இன்று காலைப் பத்திரிகைகளில்கூட விளம்பரம் வந்துவிட்டது. இதுவரை எங்கள் சபையின் நிகழ்ச்சிகளில் எந்த மாற்றமும் நிகழ்ந்ததே இல்லை. உங்களுக்கும் தெரியும். ரேடியோவில் வேறு அஞ்சல் செய்கிறார்கள். தயவுசெய்து மறுத்துவிடாதீர்கள்.''

''மன்னிக்கணும் மணி சார்! இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறேன் என்று தப்பாக நினைக்க வேண்டாம். என் மறுப்பைத் தெரிவிக்கவே இந்த முடிவை எடுத்துள்ளேன். அதோடு, எந்த முன்னணி நாகசுரக் கலைஞரும் எனக்குப் பதிலாக இன்று உங்கள் சபாக் கச்சேரிக்கு வரமாட்டார்கள். வேறு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். ரசிகர்களுக்கும் காரணம் புரியட்டும்'' என்று சொல்லிவிட்டுச் சடக்கென்று எழுந்து உள்ளே போய்விட்டார்.

''ராஜப்பாவிடம் பேசிச் சம்மதிக்க வைக்கிறேன்'' என்று சவால் விட்டுவந்த மணி ஏமாற்றத்துடன் திரும்பினார்.

மணி ஓர் அசகாய சூரர். சபா நிர்வாகத்தில் பெரிய பெரிய கலைஞர்களையெல்லாம் கவர்ந்தவர். பேச்சில் தேன் ஒழுகும், சங்கீதம் என்றால் என்னவென்றே தெரியாமல் சபா நடத்துபவர். தம்முடைய படாடோபப் பேச்சிலேயே பலரை வென்றவர். தம்முடைய தோல்வியை ஜீரணிக்க அவரால் இயலவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்பதை விரைவாகச் சிந்தித்தார். ராஜப்பாவுக்கு அடுத்த இடத்தில் இருப்பது யார்?

வடிவேலு!

டிரைவரிடம் சொன்னார்: ''வண்டியை வடிவேலு வீட்டுக்கு விடு.''

ராஜப்பா இதை அறிந்தவர் போல வடிவேலுவுக்கு டெலிபோன் செய்தார், ''உடனே இங்கே வா'' என்று.

மணியின் கார் வடிவேலுவின் வீட்டுக்குப் போவதற்குள் வடிவேலு ராஜப்பாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

சங்கீதத்துக்குச் சம்பந்தமே இல்லாத மாவட்டத்துக்கு ஒரு கச்சேரிக்காகச் சென்றிருந்தார் ராஜப்பா.

மாலையில் அவருடைய கச்சேரி.

கல்யாண வீட்டில் சிறுசிறு காரியங்களுக்கு உள்ளூர் மேளமாக ஓர் இளைஞன் வாசித்துக் கொண்டிருந்தான்.

அந்த வாசிப்பின் சுத்தம் அவரைப் பிரமிக்க வைத்தது.

அழைத்து வரச் சொன்னார்.

நடுங்கிக் கொண்டே வந்தான் இளைஞன். நாகசுரத்துக்கு ராஜாவான அவர் முன்பு நிற்பதற்கே சங்கோசப்பட்டான்.

கனிவோடு அவனைப் பார்த்துக் கேட்டார்.

''உன் பெயர் என்ன?''

''வடிவேலுங்க.''

''திருமணமாகி விட்டதா?''

''இல்லைங்க.''

''என்னோடு சென்னைக்கு வந்துவிடுகிறாயா?''

கரும்பு தின்னக் கசக்கவா செய்யும்!

ராஜப்பா ரெயில் ஏறியபோது ஒரு சிறிய பையுடன் வடிவேலுவும் அவருடன் பயணமானான்.

எத்தனையோ செல்வங்களை வாரி வழங்கிய இறைவன் ராஜப்பாவுக்குப் புத்திர செல்வத்தை மட்டும் தரவேயில்லை.

அந்தக் குறையை நீக்கும் வகையில் வடிவேலு வந்து சேர்ந்தான்.

அடிப்படை ஞானம் அவனுக்கு இருந்ததால், ராஜப்பா அதிகம் சிரமப்படாமல் கலை பயிற்றுவித்தார்.

''வடிவேலு! நாயனம் ஒரு ராட்சஸ வாத்தியம், கையாளுவதற்கு லாகவம் தேவை. சீவாளி இடைஞ்சல் செய்து ஒரு சிறிய பிசிர் விழுந்தால் கூட இனிமை மாறிப் போய்விடும். ஒவ்வொரு கச்சேரியும் ஒரு பரீட்சை மாதிரி நமக்கு. ராகங்களை இனிமையாக்க கமகங்களைச் சேர்த்துக் கொள். ஆனால் அளவோடு இருக்கட்டும். கதி விலகக் கூடாது. பாசாங்கு ராகம் வாசிக்காதே. மத்தியமாவதி வாசித்தால் அது மத்தியமாவதியாகத்தான் இருக்க வேண்டும். ஒரு ஸ்வரம் மாறினாலும் சுத்த சாவேரியாகிவிடும். கம்பிமேல் சர்க்கஸ் செய்வது போன்றது இந்தக் கலை'' என்று அவ்வப்போது சொல்லுவார்.

''நாகசுரக் கலைஞர்கள், சிரமப் பரிகாரத்துக்காக லாகிரி வஸ்துக்கள் சாப்பிடுவார்கள் என்ற அவப் பெயர் உண்டு. அதை மாற்றிக் காண்பிக்க வேண்டியது உன் கடமை, ஒழுக்கத்தோடு இருந்தால் உன் திறமை மேலும் பிரகாசிக்கும்'' என்று கண்டிப்போடு சொல்லுவார்.

ராஜப்பா எதிர்பார்த்தது போலவே வெகு சீக்கிரத்தில் வடிவேலு முன்னுக்கு வந்துவிட்டார்.

பல கச்சேரிகளில் குருவும் சிஷ்யனும் சேர்ந்து வாசித்தார்கள்.

வடிவேலுவுக்குத் திருமணம் செய்வித்து, மகிழ்ந்த நேரத்தில் வடிவேலுவின் பெற்றோர்கள் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

தனி வீட்டுக்குப் போகும்போது' காலில் விழுந்து வணங்கிய வடிவேலுவை ஆசீர்வதித்து, ''இதோ இந்த வீட்டிலிருந்து, உனக்கு என்ன வேண்டுமோ அதை எடுத்துச் செல்'' என்றார் உணர்ச்சி பொங்க.

வனஜாவின் கண்கள் பனித்தன.

வடிவேலு, ''விலை மதிப்பற்ற கலைச் செல்வத்தை எனக்குத் தந்திருக்கிறீர்கள், இதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்?'' என்று உணர்ச்சி பொங்கக் கூறிவிட்டு, ''எனக்கு எவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறீர்கள்? அவற்றிற்கு இந்த ஜன்மம் இல்லை, அடுத்த ஜன்மத்திலும் கடன் பட்டிருக்கிறேன். உங்களுக்குக் குருதட்சிணையாக, காணிக்கையாகத் தருவதற்கு ஏதாவது பிரியப்படுகிறேன்'' என்று சொல்லி நிறுத்திய வடிவேலுவைப் பார்த்து, ''ஓ, குருதட்சிணை, காணிக்கை!'' என்று உரக்கச் சிரித்தார்.

வனஜாவைப் பார்த்து, ''அம்மா, நீங்களாவது ஐயாகிட்டே சொல்லுங்க'' என்றான் வடிவேலு.

''நீ நிறைந்த புகழோடு, ஐயா மாதிரி உயரணும்பா. அதுவே நீ ஐயாவுக்குத் தர காணிக்கை.''

''அம்மா, ஐயாவோட கற்பனைகள் சங்கீத ஞானத்துக்கும் வரம்பே கிடையாது. அந்த அளவுக்கு என்னால உயரமுடியாது. ஆனாலும், அவருடைய புகழுக்குப் பங்கம் வராம நடந்துக்குவேன்'' என்றான் தழுதழுக்கும் குரலில்.

''அது போதும் போய் வா'' என்று வடிவேலுவை அனுப்பி வைத்தார் ராஜப்பா.

வடிவேலு படிப்படியாக முன்னேறினார். இசையுலகில் புதிய நம்பிக்கை நட்சத்திரம் என்று பத்திரிகைகள் பாராட்டின. அவருடைய உயர்வைப் பார்த்து மனமார மகிழ்ந்தார் ராஜப்பா.

டெலிபோனில் சொன்னபடி சடுதியில் வந்து நின்ற வடிவேலு ராஜப்பாவைப் பார்த்து வணங்கினார். சற்று அமைதியிழந்தவராகப் படபடப்பாக அவர் இருப்பதை உணர்ந்த வடிவேலு, உள்ளே சென்று வனஜாவிடம் என்ன விஷயம் என்பதைத் தெரிந்துகொண்டார்.

''இந்தச் சபாக்காரர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதற்காகவே இன்றைக் கச்சேரியை மறுத்துள்ளேன். அடுத்ததாக உன்னிடந்தான் வருவார்கள். தெரியாமல் ஒத்துக் கொண்டு விடாதே! அதுதான் நீ எனக்குத் தரும் காணிக்கை'' என்றார்.

''உங்கள் பேச்சை மீறுவேனா, ஐயா?'' என்று பவ்யமாகச் சொன்ன

வடிவேலு வழக்கம் போலக் குருநாதரின் அருகில் அமர்ந்து அவருடைய கால்களை இதமாகப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தார். குருவும் சிஷ்யனும் பல்வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கடிகாரம் ஒன்பது மணியானதைக் காட்டியது.

வனஜா வெளியே எட்டிப் பார்த்து, ''மணி ஒன்பதாகி விட்டது. வள்ளி காத்துக் கொண்டிருப்பாள். வடிவேலுவை வீட்டுக்குப் போகச் சொல்லுங்கள். நீங்களும் சாப்பிட வாருங்கள்'' என்றாள்.

வடிவேலு வணங்கி விடை பெற்று வெளியே வந்தார். வண்டி அந்தத் தெரு முனையைத் தாண்டியது.

கையை ஆட்டி வண்டியை நிறுத்தச் செய்த மணி, விரைவாக வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டார். அப்போது மணி ஒன்பது பத்து.

வடிவேலுவின் கையைப் பிடித்துக் கொண்ட மணி, ''உன் குரு எல்லா விஷயத்தையும் உன்னிடம் சொல்லியிருப்பார். எங்களுக்கும் இது கௌரவப் பிரச்னை.''

வடிவேலுவைப் பேசவிடவில்லை: ''உன் வீட்டுக்குப் போய் உன் மாமனாரிடம் கலந்து பேசிவிட்டு இங்கு வந்து காத்திருந்தேன், டிரைவர், சபாப் பக்கம் வண்டியைத் திருப்பு'' என்று கட்டளையிட்டார்.

''என்ன சார் இது?'' என்று பதறினார் வடிவேலு.

''இதோ பார்! யதார்த்தமாகச் சிந்தித்துப் பார். ராஜப்பா ஒரு வாழ்ந்து முடிந்த கலைஞர். புதிதாக அரும்பியிருக்கும் மொட்டு நீ.

இப்போதே எங்களைப் போன்றவர்களின் வெறுப்பை ஏற்றுக் கொண்டு முன்னேற முடியுமா? சுயமாகச் சிந்தித்துப் பார், இந்த ஆண்டு இப்போது நீ வாசித்தால் அடுத்த ஆண்டு உனக்கு மாலை நேரக் கச்சேரி மட்டுமல்ல; சபாவின் ஆண்டு விழாவில் கலைஞர்களுக்கு அளிக்கப்படும் விருதும் உனக்குத்தான். உன் குருநாதருக்குக் கிடைக்காத அந்தஸ்து உனக்குக் கிடைக்கப் போகிறது. உன் மாமனார் உன்னுடைய குழுவினருடன் இந்நேரம் சபாவுக்கு வந்து காத்திருப்பார். எனக்காக இதைச் செய்ய வேண்டாம். உன் ஒளிமயமான எதிர்காலத்துக்கு இன்றை நிகழ்ச்சி உத்தரவாதமாக அமைய வேண்டும்'' என்று வடிவேலுவின் மனத்தில் சலனத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

''ஐயா பேச்சை எப்படிங்க மீற முடியும்?'' என்று வடிவேலு சொல்லிக் கொண்டிருந்த போது சபாவின் வளாகத்தில் வண்டி நுழைந்தது. அப்போது மணி ஒன்பது இருபது.

ராஜப்பா சாப்பிடவில்லை. நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். காலடியில் வனஜா. அவளுடைய காதுகள், கூர்மையாக வானொலி நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தன.

மணி ஒன்பது முப்பது. வானொலியில் சிறு மௌனம். ராஜப்பாவின் இதயம் அளவுக்கு மீறிப் படபடத்தது.

வானொலி முழங்கியது.

''ஆல் இண்டியா ரேடியோ, இசை விழா, சபா அரங்கிலிருந்து இப்போது வடிவேலுவின் குழுவினருடைய நாகசுரக் கச்சேரியை அஞ்சல் செய்கிறோம்.''

ராஜப்பாவுக்குத் தம் காதுகளையே நம்ப முடியவில்லை.

வானொலிப் பெட்டியிலிருந்து சுருதியின் ஓசையும், தாள ஒலியும் தவில் கலைஞரின் எடுப்பும் முன்னே கேட்க நாகசுர இசை ஓசை ஒலிக்க ஆரம்பித்தது.

ராஜப்பாவின் உதடுகள், ''துரோகி, கலைக்குத் துரோகம் செய்த பாவி'' என்று முணுமுணுத்ததைக் கேட்ட வனஜா, ''பரவாயில்லைங்க. இதெல்லாம் உலகத்து வாடிக்கை! உங்களுக்குத் தெரியாததா?'' என்று உடைந்த உள்ளத்தோடு கணவனைத் தேற்றியவளாய், ''சாப்பிடலாம் வாங்க'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

ராஜப்பாவின் தலை நாற்காலியில் சாய்ந்திருந்தது.

''என்னங்க?'' என்று வனஜா எழுப்பிய அரற்றல் அந்தத் தெரு முழுவதும் எதிரொலித்தது.

ஒரு சங்கீத சகாப்தம் முடிந்து விட்டிருந்தது.

*

தொழில் முனைவர்களுக்கோரு நற்செய்தி!
தொழில் துவங்க 'டிட்கோ' அழைக்கிறது.

TIDCO

தமிழ் நாட்டில் பெரிய, நடுத்தர தொழில்கள் உருவாக உறுதுணையாக செயல்படுவது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம். ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட முதலீடு தேவைப்படும் தொழில்களை, பொதுத்துறையிலும் கூட்டுத் துறையிலும் இது உருவாக்கி வருகின்றது.

இரசாயனப் பொருள்கள் முதல் மின்அணுவியல் கருவிகள் உள்ளிட்ட பற்பல பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. இதன் பயனாக சுமார் 15,600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் புதிய பெருந்தொழில்களைத் தோற்றுவிப்பதற்கு 'டிட்கோ' பாடுபடுகிறது.

தொழில் முனைவர்கள் அணுகுவதற்கு முகவரி:

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

(தமிழக அரசு நிறுவனம்)

735, அண்ணா சாலை, சென்னை—600 002.

DIPR/209/84(R)

அவள்



அவள்தரும் எண்ணங்கள்
அன்புக் கவிதையின் சந்தங்கள்!
அவள்தரும் எண்ணங்கள்
அமுதம் ததும்பிடும் கிண்ணங்கள்.
அவள்தரும் எண்ணங்கள்
அழகிய ஓவியச் சின்னங்கள்.
அவள்தரும் எண்ணங்கள்
அற்புதச் சோலையின் அன்னங்கள்.

அவள்தரும் எண்ணங்கள்
அகிலம் வியந்திடும் வண்ணங்கள்!
அவள்தரும் எண்ணங்கள்
ஆருயிர் போற்றிடும் சொந்தங்கள்.

அவள்தரும் எண்ணங்கள்
அலைகடல் தாங்கிடும் முத்துக்கள்;
அவள்தரும் எண்ணங்கள்
ஆவல் வளர்க்கின்ற வித்துக்கள்.

அவள்தரும் எண்ணங்கள்
ஆலய வாசலின் கோலங்கள்;
அவள்தரும் எண்ணங்கள்
ஆற்றல் பிறந்திடும் மூலங்கள்.

அவள்தரும் எண்ணங்கள்
அண்டத்தின் உச்சியில் சேர்த்துவிடும்;
அவள்தரும் எண்ணங்கள்
ஐம்பது வேங்கையை மாய்த்துவிடும்!

கோ. மோகனரங்கன்

வேதா மாதா நீயே!

மயிலையில் வாழும் கயிலையின் மயிலே!
வெயிலொளி மரகதக் கற்பகக் காவே!

மாதவத் தவர்க்கும் மாதவம் ஆகி
வேதச்சோ றளிக்கும் மாதா நீயே!

வேள்வி நெருப்பாய் விளங்கும் தவமே!
கேள்வி ஞானமாய்க் கிடைக்கும் அமிழ்தே!

காலைக் கதிரொளி கலக்கும் கடலின்
கோல அழகுக் கூத்தின் வடிவே!

கண்ணின் மணியே! பண்ணின் கனிவே!
விண்ணின் வியப்பே! மண்ணின் பயப்பே!

கல்விக் கடலின் சொல்விளை முத்தே!
வல்வினை கொல்லும் நல்வினை மருந்தே!

பால்தரும் தயிர்மோர், வெண்ணெய் நெய்போல்
நற்மறை வேதம் நல்குமுன் அருள்விழி;
காயினைக் கனியாய் ஆக்கும் மரம்போல்
நோயினை நீக்கும் மருத்துவர் போலப்
பவவினை நீக்கிப் பதந்தந் தருளும்
தவப்பயக் கற்பகத் தாயே! வருக!

தமிழ்முடி

கல்

கல்லுக்குள் பல்வேறு வகைதா னுண்டு;
கல்லுக்குள் வைரக்கல் மன்ன னாகும்;
கல்லுக்குள் கருங்கல்லே உறுதி யாகும்;
கனலுக்குள் மண்வெந்தால் செங்கல் லாகும்;
கல்லுக்குள் சலவைக்கல் வெள்ளையாகும்;
கல்லுக்குள் வண்ணக்கல் அணிகட் காகும்;
கல்லுக்குள் மாக்கல்லில் பாண்ட மாகும்;
கல்வகையின் ஆய்வென்றால் சிக்கல், சிக்கல்.

கல்லோடு கல்லுரைசிச் செய்தே அந்தக்
காலத்து மக்களவர் தீயைக் கண்டார்;
கல்லாலே கருவிகளைச் செய்தே தம்மைக்
காக்கின்ற வழிகண்டு நலமே கொண்டார்;
கல்லாலே உருவான பொருள்தா னிங்கே;
காலத்தால் அழியாத கல்லே யாகும்;
கல்லாலே முன்னோரின் வாழ்வை ஆய்ந்தார்;
கல்லாலே காலத்தை முடிவு செய்தார்.

கல்யானை ஒன்றுக்கே கரும்பைத் தந்த
கனிவான வரலாறொன் றுண்டே அந்நாள்;
கல்கிட்டாத் தஞ்சையிலே கோயில் கட்டி
காட்சியினைத் தந்தானே இராசராசன்.
கல்லணையைக் காவிரியில் கட்டச் செய்தே,
கழனிக்கே நீர்தந்தான் கரிகாற் சோழன்.
கல்லுக்கே தம்விழிகள் ஈந்தார் அந்தக்
கண்ணப்பர் இறையன்பைக் கண்டோம் நாமே.

கல்தோன்றி மண்தோன்றாக் காலம் தந்த
கனித்தமிழின் பாலன்பு கொள்ளல் வேண்டும்;
கல்போன்ற உறுதியுடை நெஞ்சங் கொண்டு
கவித்தமிழுக் குயர்தொண்டே ஆற்றல் வேண்டு;
கல்மழைதான் பெய்யும்முன் கார்மே கத்தை
கருக்கல்பார் எனவிழிப்பர் சிற்றூர் மக்கள்;
கல்லுக்கே உயிர்தந்தார் சிற்பம் செய்வோர்;
கல்மேலே வரலாற்றை அடித்துச் சென்றார்.
கல்லளையில் கள்வரெலாம் வாழ்வார்; அன்றிக்
கானகத்து வரிப்புலியும் ஆங்கே வாழும்.
கல்கொண்டு முடிகின்ற ஊர்கள் தம்மைக்
கண்டீரா? திண்டுக்கல் குண்டக் கல்லே.
கல்செய்யும் நன்மைதனை எண்ணும் போது
கல்நெஞ்சம் உருகிடுமோ சொல்வீர்! சொல்வீர்!
கல்சொல்லும் கதைகேட்கக் காலம் இல்லை;
கணக்கிட்டால் நாமெல்லாம் கல்லே. கல்லே.

ஆற்றலரசு

கண்ணனுக்குக் கோதை சூட்டிய நாமங்கள்

பாரதிகாவலர் கே. ராமமூர்த்தி

பக்தி இலக்கியங்களில் சிந்தையைச் செலுத்தி இடையறாத ஈடுபாட்டுடன் அதிலேயே தோய்ந்தவர்களுக்கு ஸ்ரீ ஆண்டாளின் ஏற்றமும் அதற்கான தன்மைகளும் தெளிவாகவே விளங்கும். மானிடர்க்கு வாழ்க்கைப்பட மாட்டேன் என்று பேசிய மனப்பக்குவமும் அதன் ஊடே பொதிந்துள்ள தெய்விக தாத்பரியமும் மிக விரிவாக அறியப்பட வேண்டிய விஷயம்.

பக்திப் பரவசமூட்டும் பாடல்களாகவும் இலக்கியச் செழுமை பரவிக் கிடக்கும் கவிதைகளாகவும் காண்கிற திருப்பாவையின் உள்ளார்ந்த எழில் வண்ணக் காட்சிகளும், வியாக்கியானங்களாக விரிக்கின்றபோது எழுந்து நின்று புலப்படுத்துகின்ற வேதாந்தக் கருத்துப் புதையல்களும் நினைத்து நினைத்து அநுபவிக்க வேண்டியவை என்பதில் சற்றேனும் ஐயம் இல்லை.

ஒன்பதாம் பாட்டிலே வருகிற இறுதி அடிகளான 'நாமம் பலவும் நவின்றேலோரெம்பாவாய்' என்கிற ஸ்ரீ ஆண்டாள் சாற்றியுள்ள இதய தாகத்தை முப்பது பாடல்களிலும் காண முற்படுவதும் கண்டு இன்புறுவதும் அந்த நாமங்களிலே நம்மை நாமே மறந்து லயித்து ஈடுபடுவதும் மிகுந்த பேரானந்தம். ஆண்டாள், கண்ணனை எவ்வாறெல்லாம் மனத்தாலே எண்ணுகிறாள் என்பதும் அந்தக் கண்ணனுக்குப் பூமாலை சூட்டியதோடு நின்று விடாமல், நாம கரணங்கள் சூட்டியுள்ள பாங்கும் அதன் பரிமளிப்பும் யார் மனத்தைத்தான் கொள்ளை கொள்ளாமல் போகும்? எத்தனை நாமங்கள்! கதைகள் போலக் கண்ணன் உருவைக் காட்டத்தான் எத்தனை நாமங்கள்! கண்ணனின் காட்சிகளைக் கருத்தில் நிறுத்தி வைக்கத்தான் எத்தனை நாமங்கள்! அப்பப்பா! சொல்லிச் சொல்லி அந்தச் சுடர்க்கொடி சலித்தாள் இல்லை. சார்ந்து விடத் துடித்த அந்தத் தூயவள் கண்ணன்மீது கொண்ட பிரேமையால் பிறப்பித்துள்ள நாமங்கள் ஒன்றா இரண்டா? அப்பப்பா எத்தனை?

முப்பது பாடல்களிலே ஐம்பதுக்கு மேற்பட்ட நாம உச்சாடனங்கள். அந்த நாமங்களிலே பளிச்சிடும் பொருள் சிறப்பு, சரித்திரச் சான்றுகள், புராணச் செய்திகள், வரலாற்று உரையாடல்களாக அமைந்த காட்சிகள், உண்மைகளை விளக்க எழுந்த கோலங்கள், அந்தக் கோல எழில்களிலே குடிகொண்டுள்ள அழகு நேர்த்திகள்; இலக்கியத் தேன் சொட்டும் சுவைத் துளிகள்; ஆக, இவற்றையெல்லாம் தீர்க்கமாக அணுகி ஆய்ந்து நோக்கத் தோன்றுகிறதல்லவா? இப்படித் தோன்றுகிற ஆய்வுணர்வுத் தூண்டுதலால் நாம் பெறுகிற சாசுவத நெஞ்ச சுகம் அளப்பரியதாகும் என்று சொல்லத் தேவையில்லை.

ஸ்ரீ ஆண்டாள், ஒன்பதாவது பாவைப் பாட்டில் விடுத்துள்ள அழைப்பு அந்த நாமம் பலவும் நவில்கின்ற நயங்களைக் காண முற்படும் இத்தகைய ஆய்வுக்கு வழி செய்கிறது. அவ்வாறு அமைந்துள்ள அமரவரிகளின் அழியாத காவிய அழகுகள் நம்மை மயக்குகின்றன. மனத்தினை ஈர்த்திழுக்கின்றன. நாமங்களோடு நம்மையும் பிணைத்துக் கொள்ளவும் செய்கிறது. என்ன விந்தை இது!

ஒவ்வொரு வகையாகப் படைத்துள்ள நாமங்களையும் அதற்கான அடிப்படைகளையும் அவை இடம் பெற்றுள்ள இடங்களையும், அங்கங்கே அவை நடம்புரியும் கீர்த்திகளையும் விளிப்பு முறையின் பல நிலைகளையும், அவற்றுக்குத் தக்கதாயும் ஒத்ததாயும் இயல்புடைத்தாயும் இணைந்து பிணைந்துள்ள சிறப்புக்களையும் ஒருசேர ஆழ்ந்து நோக்கும் போதுதான் ஸ்ரீ ஆண்டாளின் ஒப்பில்லா மாட்சியும் அச்சுடர்க் கொடியாளின் சொல்லாட்சியின் தன்னேரில்லாச் சிறப்பு அம்சமும் தெற்றெனத் தெரியும். கூடவே இன்ப அநுபவ சாகரத்தில் நாம் திளைப்பதையும் உணர்வோம்.

'அளவு' என்பதே ஒரு தனி நியதியின் தோற்றுவாயிலிருந்து பிரிந்ததாகும். எல்லாராலும் எக்காலத்திலும் எல்லாவற்றையும் அளந்துவிட முடியாது. சிறிய பொருள்களை அளப்பதே கடினமாகும். உலகை யாரால் அளந்துவிட முடியும்? அளந்துவிடும் காரியமா அது? அது ஸ்ரீ ஆண்டாளுக்கே சாத்தியம். இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே அதைத்தான், 'அன்றிவ் வுலகம் அளந்தாய்' என்று கூறி, அவன் அடி போற்றுகின்ற பாங்கினை என்ன என்பது! அவ்வாறு கூறியும் திருப்தியில்லை. 'அம்பரம் ஊடறுத் தோங்கி' உலகளந்த என்று கூறி நிறுத்தாமல், அதற்கும் மேலேயும் சிறப்பு ஏற்றி 'உம்பர் கோமானே' என்று விளிக்கிற உயர்வை எண்ணி எண்ணி மகிழ்வுண்டாகிறது.

அந்த உம்பர் கோமான் யார் தெரியுமா? ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்காம். ஆலின் இலையாம், ஆழிமழைக் கண்ணனும். பார்த்தீர்களா, பாவை பாடியவள் படம் பிடித்துக் காட்டும் விதங்களை. மேலும் ஆற்றல் படைத்தவன் மகனுனதால் 'இறைவா' என்று இறைஞ்சி 'உந்து மதகளிற்றன், ஊழி முதல்வன்' என்கிருள்.

கண்ணனை ஏற்றம் உடையவனுகச் சதா காண்பதால் 'ஊற்றம் உடையாய்' என்று விளித்து, ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கத்தை மீண்டும் 'ஓங்கி உலகளந்த உத்தமன்' எனச் சாதிக்கிருள்.

''ஓடாத தோள் வலியன், கப்பம் தவிர்க்கும் கலியாகவும் வந்து காக்கிருன். ஒரு பெரும் கதையையே உள்ளடக்கி, கண்ணன் 'கன்று குணிலா எறிந்தாய்' எனப் பேசும் போது ஆண்டாளின் சொற் சிக்கனத்தைக் கையாளும் திறம் வியந்து நிற்கிரேம். அவன் முகத்தை நமக்குக் காட்டும் பொருட்டு, 'கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்' என்ற இலக்கியச் செழுமை சார்ந்த வார்த்தைகளை அடுக்கி, அவனடி பணிவதற்காக 'குறையொன்றும் இல்லாத கோவிந்தன்' என்று சந்தேகம் கொள்ளாத நிலைக்குத் தளம் அமைத்துக் கவி சமைக்கும் ஆண்டாளின் சமத்காரம் நம் சிந்தையை ஆட்கொள்கிறது.

மழை பொழிந்த நாளில் நடந்ததென்ன? அந்தக் கதையை 'குன்று குடையாய் எடுத்தாய்' என்று நாமகரணம் சூட்டும்போது குன்றினைக் குடைபோல எடுத்ததாகப் பாவிப்பதிலிருந்தே பரமனின் பராக்கிரமத்தை அந்த வரிகள் பறைசாற்றவில்லையோ! காவிய நிகழ்ச்சிகளின் பான்மைகள், பாட்டு வரிகளாக வந்து பாலிக்கிற உண்மைகளை அறிந்து நாம் பிரமிக்கிரேம். அந்தப் பராக்கிரமம் படைத்தவன் வேறு யாருமல்ல 'கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்' என்றும் சொல்லுகிருள்.

''இவ்வாறெல்லாம் நாமங்கள் கூறியும் மனத்தில் திருப்திபெருமல் ''கூடாரைவெல்லும் சீர்கோவிந்தா, கேசவா. கொம்பனுர்க் கெல்லாம் கொழுந்தே!'' என்று நெக்குருகி, நெஞ்சுருகிப் பாடுகிறதைப் பார்க்கிரேம்.

ஆண்டாள் காணும் கண்ணன் சங்கொடு சக்கரம் ஏந்திய தடக் கையனுக, செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலாகக் காட்சி தருகிருன். இலங்கை சென்று, நிகழ்ந்ததனைக் குறிக்கவே' சென்றங்கு தென்னிலங்கை செற்ருய்' எனப் பேசுகிருன். நந்தகோபாலன் 'தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன்' என்பதை நினைவுபடுத்தி, 'தோற்றமாய் நின்ற சுடரே' என்று ஏற்றிப் போற்றுகிருள். இதோ பாருங்கள். இன்னொரு விதமான படைப்பு.

செற்ருர்க்கு வெப்பம் கொடுக்கும் விமலனுன அதே கண்ணன் நெருப்பன்ன நின்ற நெடுமாலாம். இப்படியே பங்கயக் கண்ணன் என்று ஒரு பாட்டில் வரும். மற்ருேரிடத்தில் 'பாழியந் தோளுடைய பத்மநாபன், பாற்கடலில் பையத்துயின்ற பரமன்' என்று பாடுவாள். பாடுவாள் என்ரேனு? இல்லை, இல்லை; பாத்தொடுத்துப் பூமாலை சூட்டி இன்புறுவாள்.

'புள்ளின் வாய் கீண்டான்', அந்தக் கண்ணன். அவனைப் பாவால் அர்ச்சிக்க பூவை, பூவண்ண பெரியாய் என்றெல்லாம் நாமம் சொல்லிவிடுவாள். வீரமும் தீரமும் மிக்கவன் என்பதைக் கணமும் மறக்காமல் கண்ணனின் சரித்திரச் சாதனைகளை வரிசைப்படுத்தும் ஆர்வத்தில் 'பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை, பொன்றச் சகடம் உதைத்தாய், போற்றப் பறை தரும் புண்ணியனுய், மல்லரை மாட்டிய தேவதேவனை'' என்று வீரப் பட்டயங்கள் அணிவித்தழைக்கும் பொலிவார்ந்த வீரக் காட்சி மறக்கற்பாலதோ!

மனத்துக்கு இனியவனை மாயவனை, அந்த வடமதுரை மைந்தனை, மாமாயனை, மணிவண்ணனை, முகில்வண்ணனை, மாவாய் பிளந்தானை, வங்கக் கடல் கடந்த மாதவனை என்று இன்னும் எவ்வாறெல்லாம் தான் அழைப்பாளோ அந்தப் பூங்கொடியாள். யமுனைத் துறைவனை, வெள்ளத் தாவில் துயிலமர்ந்த வித்தினை, வைகுந்தனை, என்று நெஞ்சார நாவார, எத்தனைமுறைதான் அழைத்தாலும் நினைத்தாலும் நெருங்கினுலும் ஆண்டாள் திருப்திப்பட்டவளாகவே தோன்றவில்லை.

நம்மாழ்வார் கண்ணன் கழலிணைகளை நண்ணுகிற மனமுடையவர்கள் எண்ணுகிற திருநாமம் நாரணமே என்று சாற்றியவண்ணமே— நம்மாழ்வார் பாட்டு வழியே நம் நாச்சியாரும் நிற்காமல் வேறு எவ்வழி சென்று விட முடியும்?'

ஆண்டாளுக்கு எத்தனையோ வகைகளில் ஏற்றமுண்டு. பாவைப் பாட்டில் பல அடைமொழியிட்டு, பாட்டலங்காரம் செய்யும் இலக்கிய ஆபரணங்கள் பூட்டியும் காட்டியுள்ள திவ்ய தரிசனங்கள், நம் சிந்தனையில் மீட்டுகிற மெய்சிலிர்ப்பின் இன்ப அலைகளாக விரியும். அந்த இன்ப ஒலி அலைகள் ஊட்டுகிற உணர்ச்சிப் பிரவாகங்களே கண்ணனுக்கு, கோதை சூட்டிய நாமங்களாகின்றன. கலை மகளே கோதையாக வந்து கண்ணனுக்கு நாமகரணமாக இப்படி ஒரு நவ ஆபரணத்தைச் சூட்டி மகிழ்கிருள் போலும்!

குற்ருல அழகு

தென்றல் தவழ்ந்தே இசைபாட—மலர்
தேனைப் பொழிந்தே மகிழ்ந்தாட
குன்றில் குதித்தே நடந்துவரும்—எழில்
கூட்டும் அழகு மலையருவி.

விண்ணையும் மண்ணையும் ஒன்ருக்கி—உயர்
விந்தை புரியும் மலைக்கூட்டம்
பண்ணமுத வெள்ளம் பொங்கிவர—இசை
பாடும் அருவியின் பால் வெள்ளமே.

உச்சி மரங்களை முத்தமிட்டு—முகில்
ஒய்யார மாக உலாவி வர
கச்சித மாகவே குட்டிகளை—ஏந்திக்
காணுங் குரங்குகள் தாவிடுமே.

மேகம் தெளிக்கும் தண்ணீர்த் துளிகள்—வந்து
மிதக்கும் அழகின் ஒளித்துளிகள்
தாகத்தைப் பேரழ கால்ஊட்டி—நெஞ்சைத்
தாவென்னும் குற்ருல மாமலையே!

—இளங்கம்பன்

தந்தி வந்தது

தில்லைநாதன்

"இனிமேல் வரன் ஒன்று வந்திருக்கிறது என்று ஜாதகம் எதையேனும் தூக்கிக்கொண்டு வந்தால் அதைக் கிழித்துக் குப்பையில்தான் போடுவேன்; ஜாக்கிரதை!'' என்று எச்சரிக்கை செய்தாள், அந்தக் கல்யாணமாகாத பெண் சீதா.

'ஏன், அவளுக்கு ஏதேனும் பைத்தியமா?' என்று கேட்டுவிடாதீர்கள். எந்த விஷயமானாலும் அப்படித்தான் அவள் வெட்டி எறிவாள். அவ்வளவு பொல்லாத்தனம்!

சீதா பிராட்டிக்குப் பொறுமை அதிகம் என்பார்கள். ஏன்? எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டாள். பூமிதேவியின் மகள் அல்லவா அவள்! அதனால்தான் போலும்! 'அப்படிப் பிராட்டி என்ன கஷ்டப்பட்டு விட்டாள்?' என்று இந்தக் காலத்துப் பெண்கள் கேட்கலாம்.

இலங்கையிலே ராவணனின் அசோகவனத்தில் தங்க நேர்ந்ததற்காக முதலில் அக்கினிப் பிரவேசம்! அதற்குப் பிறகும் அயோத்தியிலே பாமரன் ஒருவனின் பேச்சைக் கேட்டுக் கொண்டு மீண்டும் பத்து மாசக் கர்ப்பிணியைக் காட்டிலே கொண்டு விடச் சொல்லுகிறார் ராமபிரான். அதையும் பொறுத்துக் கொள்கிறாள் சீதை.

பொறுமைக்கும் எல்லை உண்டு அல்லவா?ராமர் சந்நிதியிலே ராமாயணம் அரங்கேறுகிறது. லவகுசர்கள் கானம் செய்து முடிக்கிறார்கள். கடைசியிலே அங்கே வால்மீகி முனிவர் சீதா தேவியையும் அழைத்து வந்து, ''லவகுசர்கள் உன்னுடைய குமாரர்கள்தாம்! இதோ, பிராட்டியும் வந்திருக்கிறாள். ஏற்றுக் கொள்!'' என்று ராமரைப் பிரார்த்திக்கிறார்.

'மீண்டும் அயோத்தியிலே ஓர் அக்கினிப் பிரவேசம் நடக்கட்டும். அப்போதுதான் பாமர மக்களின் பழிச் சொல் தீரும்' என்கிறார் ராமபிரான்.

அப்போதுதான் பொறுமை இழக்கிறாள் பிராட்டி. ஏன், பூமிதேவிக்கே அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மகளின் பிரார்த்தனைக்கிணங்க பூமி வெடிக்கிறது. அப்படியே தாயின் மடியிலே தாவிக் குதிக்கிறாள் பிராட்டி.

எங்கள் வீட்டுச் சீதை அதற்கு நேர் மாறானவள். அவள் முதுநிலைப் பட்டதாரி. படித்து ஆண்டு உருண்டனவே தவிர அவளுக்கு ஒரு வேலை கிடைக்கவில்லை. அவள் தாய்க்கு, மகள் வேலை தேடுவது கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவளுடைய கல்யாணத்தையாவது முடிப்போமே என்றாள் மகனிடம்.

மும்முரமாக ஜாதக வேட்டை நடந்தது. பட்டதாரிப் பெண்ணுக்கு வரன் கிடைப்பது லேசாகவா இருக்கிறது.

கன்யா வரயதே ரூபம், மாதா
வித்தம் பிதா ச்ருதம்
பாந்தவா: குலம் இச்சந்தி ம்ருஷ்
டான்னம் இதரே ஜனா:

அந்தக் காலத்துப் பெண் கணவனுக்கு அழகான ரூபம் இருந்தால் போதும் என்று நினைப்பாள். தாயார், மகள் கஷ்டப்படாமல் இருக்கச் சொத்து இருக்கிறதா என்றுதான் கேட்பாள். தகப்பனார், மாப்பிள்ளை படித்திருக்கிறானா என்று பார்ப்பாராம். படிப்பு இருந்தால் நாலு காசு சம்பாதிக்காமல் போகமாட்டான் என்ற தைரியம் அவருக்கு. பந்துக்கள், 'நல்ல ஜாதி; குலம் என்றால் பெண்ணைக் கொடு' என்பார்கள். மற்றவர்கள் எந்தக் கல்யாண வீட்டில் நல்ல சாப்பாடு கிடைக்கும் என்றுதான் தேடுவார்களாம். இது அந்தக் காலம்!

இந்தக் காலத்தில் மாப்பிள்ளை வீட்டாரைத் திருப்தி செய்வதுதான் மிகவும் முக்கியம். எங்கள் வீட்டுச் சீதாவுக்கு பாங்க் ஒன்றில் வேலை பார்க்கும் பையன் ஒருவன் வந்தான். எல்லாம் பிடித்திருந்தது. நிச்சயம் ஆகும் சமயத்தில், 'பெண்ணுக்கு வேலை வாங்கிக் கொடுங்கள். அப்புறம் செய்து கொள்கிறேன்' என்று சொல்லி விட்டான் பிடிவாதமாக.

வேறொரு வரன் வந்தது. தெரிந்த இடந்தான். எல்லாம் பேசி முடித்து நிச்சயம் செய்ய ஏற்பாடும் ஆகி விட்டது. 'திடீரென்று மாமியாருக்கு வயதான கிழவிதான், உடல்நலம் சரியில்லை. அப்புறம் ஆகட்டும்' என்று சொல்லி விட்டார்கள். அது அத்துடன் முடிந்தது. இந்த மாதிரி இன்னும் சில.

இப்படி வேலையும் ஆனபாடில்லை; கல்யாணமும் முடிந்தபாடில்லை. இந்த நிலையில்தான் பெண் சீதை 'ஜாதகத்தையே இனி கிட்டே கொண்டு வராதே!' என்று சீறினாள். கல்யாணம் வெறுத்துப் போய் விட்டது அவளுக்கு.

'கல்யாணமே வேண்டாம்! ஐந்தாயிரம், பத்தாயிரம் செலவழிந்தாலும் சரி. எந்தப் பாடு பட்டாகிலும் வேலை வாங்கிக் கொடு, எனக்குப் போதும்' என்பது அவளுடைய பிடிவாதம்.

''இனி இந்த வீட்டில் என்னால் இருக்க முடியாது. எப்படியாவது அவள் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்தால் போதும்! எத்தனை நாளைக்குக் கல்யாணமாகாத பெண்ணை வைத்துக்கொண்டு கட்டிக் காப்பது? கொஞ்சங்கூட அடங்க மாட்டேன் என்கிறாளே!'' என்று தாய் கங்கணம் கட்டிக் கொண்டு மாப்பிள்ளை தேடினாள்.

''இவர்கள் தொல்லை தாங்க முடியவில்லை. இரவு படுத்தால் தூக்கம் வரவில்லை. கல்யாணம் ஆகும்போது ஆகட்டும், முதலில் எவ்வளவு பணம் செலவழிந்தாலும் ஏதேனும் ஒரு வேலையை வாங்கிக் கொடுத்து அவளை வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்'' என்று முனைந்தான் அண்ணன்காரன்.

ஏதோ கொஞ்சம் வசதி படைத்த குடும்பந்தான் அது. கொஞ்சம் நிலம் இருந்தது. ஒரு வீடும் இருந்தது. இதில் எதை விற்க நேர்ந்தாலும் சரி, அதற்குத் தகப்பனார் தயாராக இருந்தார். கல்யாணம்

நடந்தாலும், வேலை கிடைப்பதாய் இருந்தாலும் பணத்துக்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தார். வீடு ரகளைப்பட்டது.

வரன்தான் முந்திக் கொண்டது. பையன் எஸ்.எஸ்.எல்.ஸி.தான். ஆனால் நல்ல பாங்க் உத்தியோகம். சுருக்கெழுத்தாளன். ஏறக்குறைய ஆயிரம் ரூபாய் சம்பளம். அது போதும்! மேற்கொண்டு காமராஜ் பல்கலைக் கழகத்தில் தபால் மூலம் படிக்கப் போவதாக வேறு சொல்லிக்கொண்டிருந்தான். எப்படியும் இந்த வரனை முடித்து விடத் துடித்தார்கள், பெண் வீட்டார். ஆனால் அவனும் ஒரு நிபந்தனை போட்டான்.

''இந்த நாளிலே ஆண் மட்டும் சம்பாதித்தால் குடும்பம் நடத்தவே முடியாது. எனக்கு வேலை பார்க்கும் பெண்தான் வேண்டும். படித்த பெண்ணுக்கு வேலைதானா கிடைக்கவில்லை! மூன்று மாசத்துக்குள் அரசாங்க வேலை வாங்கிக் கொடுப்பதாக இருந்தால் நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன். அப்புறம் ஏமாற்றக் கூடாது. வேலை வாங்கிக் கொடுப்பது உங்கள் பொறுப்பு!'' என்றான்.

பெண்ணுக்குச் சொந்தக்காரர் ஒருவர், ''நான் வேலை வாங்கித் தந்து விடுகிறேன். அது என்னால் முடியும்!'' என்று உறுதியாகச் சொன்னார். பெண்ணும், கல்யாணமானாலும் மாப்பிள்ளை நிபந்தனை போட்டிருப்பதால், எப்படியோ நிச்சயம் வேலை கிடைக்கப்போகிறது என்ற எண்ணத்தில் மறுப்பு ஏதும் சொல்லவில்லை. எப்படியோ கல்யாண வேளை வந்துவிட்டது. 'ஜாம் ஜாம்' என்று கழுத்திலே தாலி ஏறிவிட்டது.

மாப்பிள்ளை வீட்டாருக்கும் பரம திருப்தி, கல்யாணத்தைச் சிறப்பாக நடத்திக் கொடுத்ததில். எப்படியோ நிலத்தை விற்றுக் கல்யாணம் நடந்தாலும் பெண் புக்ககம் சென்றதில் பெற்றவர்களுக்குச் சற்று நிம்மதிப் பெருமூச்சு.

ஆனால் இந்த நிம்மதி நீடித்ததா? மூன்று நாட்கள் போலத் திரும்பிப் பார்ப்பதற்குள் மூன்று மாசங்கள் ஓடிவிட்டன. அதற்கு மேலேயும் மூன்று மாசங்கள் கழிந்தன. தலை தீபாவளி நெருங்கியது. ஒரு மாதந்தான் இருந்தது. மாப்பிள்ளையின் முரட்டுத்தனம் அப்போதுதான் வெளிப்பட்டது.

''கல்யாணம் ஆகிவிட்டது. இனி மேல் என்ன என்ற தைரியம் உங்களுக்கு. ஏமாற்றி விட்டீர்கள். வேலைக்கு உறுதியளித்த உங்கள் உறவுக்காரர் வாய் கிழியப் பேசினாரே! என்ன செய்து விட்டார்? தீபாவளிக்கு முன்பே நீ பிறந்த வீட்டுக்குப் போய்விடு. அதற்குள் வேலையோடு வந்தால்தான் தீபாவளி. இல்லாவிட்டால் நான் வரமாட்டேன். நீயும் வர வேண்டாம்!'' என்று மனைவியை ரெயிலேற்றி விட்டார் மாப்பிள்ளை.

உறுதியளித்த உறவுக்காரர் அப்போதும் சோர்ந்து விடவில்லை. ஓடிவந்தார். சட்டசபை உறுப்பினர் ஒருத்தர் மூலம் மந்திரிவரை சென்று வேலைக்குச் சிபாரிசு செய்திருப்பதை மாப்பிள்ளையையும் நேரில் அழைத்துப் போய் நிரூபித்தார். இரண்டே மாதத்தில் வேலை கிடைத்து விடும் வாய்ப்பு இருப்பதாக உத்தரவாதமளித்தார்.

தலை தீபாவளியைக் குறை வைக்காமல் மாப்பிள்ளையை அழைத்து, எப்படியோ சமாளித்துக் 'காமா சோமா' என்று நிறைவேற்றி விட்டார்கள். மனமின்றியே மனைவியை அழைத்துக் கொண்டு தீபாவளிச் சீரோடு கையில் மோதிரம் பளபளக்க வீடு வந்து சேர்ந்தார் மாப்பிள்ளை. இங்கேயும் அக்கம் பக்கத்தில் கேட்பவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமே! வீட்டு விவகாரம் வெளியில் தெரியக் கூடாதே என்ற அவமான உணர்வு வேறு அவரை உள்ளூர உறுத்தியது.

கண் இமைக்கும் போதிலே நாட்கள் உருண்டோட உத்தரவாதம் தீர்த்தவாரியாகிவிட்டது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்று சிந்தித்தார் மாப்பிள்ளை. வீட்டிலே வாய்ச்சண்டை வலுத்தது. அவளும் படித்த பெண் ஆயிற்றே! தன் வீட்டாரைச் சொன்னால் ரோஷம் பொத்துக்கொண்டு வரும். பதிலுக்குத் திருப்பிக் கேட்டு விடுவாள். அவன் கையை ஓங்கி விடுவான்! அதையும் சமாளித்தாள் அவள். ஆனால் தாய் வீடு செல்ல மறுத்துவிட்டாள். சென்ற தடவை மனைவியைத் தனியாக ரெயிலேற்றிவிட்டது குற்றமாகப் பட்டுவிட்டது மாமியாருக்கு. தீபாவளியின் போது அவள் சூட்டோடு சூடாகக் குற்றஞ்சாட்டிக் குத்திக் காட்டியது நினைவுக்கு வந்தது. இந்தத் தடவை என்ன செய்வது? எப்படி அவளைத் தாய் வீட்டுக்கு அனுப்புவது? ஆபீசிலும் வேலை ஓடவில்லை.

கணவன் கடும் ஜுரத்தில் படுத்திருப்பதாகவும் உடனே உதவிக்கு வரும்படியும் மனைவி கொடுத்தது போல் தந்தி பறந்தது மாமனார் வீட்டுக்கு.

தந்தி கிடைத்ததும் மாமியாருக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. மனம் பதைபதைத்தது. வீட்டைப் பார்த்துக் கொள்ள ஒருத்தர் வேண்டுமே! மாடும் கன்றும் மற்றத் தொல்லைகளும் வீட்டைப் பூட்டிக்கொண்டு செல்ல முடியாது. அவள் புருஷன் வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தார். மகனும் ஊரில் இல்லை. அதற்கு மேல் யோசிக்க நேரமில்லை. மகள் இருக்குமிடத்துக்குக் கிளம்பிவிட்டாள் அவள்.

மறுநாள் காலை இங்கே ஊர் வந்து சேர்ந்து வீட்டுக்குள் நுழைந்தால் எதிரிலேயே குத்துக்கல் போல் மாப்பிள்ளை உட்கார்ந்திருக்கிறார். ஓர் உடம்பும் இல்லை. எதிர்பாராமல் தன் அம்மாவைக் கண்டதும் மகளுக்கு ஒரே வியப்பு! மறுகணம் கவலையும் தோன்றியது. ''ஊரில் எல்லாரும் சௌக்கியந்தானே!'' என்று கேட்டாள்.

''நீங்கள் யாராவது வருவீர்கள் என்று எதிர்பார்த்துத்தான் ஆபீசுக்கும் லீவு போட்டுவிட்டுக் காத்திருக்கிறேன். நான் என்ன இளிச்சவாயன் என்று எண்ணிக் கொண்டீர்களா? மத்தியான்ன வண்டிக்கே மகளை ஊருக்கு அழைத்துச் செல்லுங்கள். வேலை வாங்கிக் கொடுத்ததும் கொண்டு விடுங்கள். இதற்காகத்தான் பொய்த் தந்தி கொடுத்தேன்!'' என்றார் மாப்பிள்ளை சற்றும் தாட்சிண்யமின்றி.

தாயும் மகளும் எவ்வளவு சமாதானம் சொல்லியும் பயன் அளிக்கவில்லை. பகல் உணவு முடித்து இருவரும் ஊர் வந்து சேர்ந்தார்கள். மகளுக்கும் சற்றுப் பிரிந்து இருந்தால் போதும் என்றுதான் வெறுப்பாக இருந்தது.

ஆனால் ஊரிலும் சற்று நிம்மதியாக மனைவியை உட்கார விடமாட்டார் மாப்பிள்ளை. ஒரு வாரம் கழிந்தால் போதும். 'அம்மாவும், அண்ணிக்குப் பிரசவ நேரம், அதனால் வர முடியாது என்று சொல்லிவிட்டாள். எனக்கு ஓட்டல் சாப்பாடு வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. உடனே கிளம்பி வா' என்று கடிதம் மேல் கடிதம் ராமபாணம் போல் பறந்து கொண்டிருக்கும். அதற்கும் மசியாவிட்டால், 'வேலைக்கு ஓர் இண்டர்வ்யூ வந்திருக்கிறது. உடனே வா' என்று எழுதுவார். அதுவும் பயனில்லை என்றால், நண்பன் பெயரைப் போட்டு 'மாப்பிள்ளை ராமசந்திரனுக்கு உடம்பு சீரியஸ். உடனே வரவும்' என்று தந்தி பறக்கும். 'இப்படி அங்கும் தங்கவிடாமல் இங்கேயும் இருக்க விடாமல், மனைவியைப் பந்தாடினால்தான் உடனே வேலை வாங்கிக் கொடுப்பார்கள்' என்ற எண்ணம் மாப்பிள்ளைக்கு.

அப்படித்தான் ஒருமுறை தந்தி வந்தது மாமனாருக்கு. கடிதமாக இருந்தால், மாப்பிள்ளை எழுதியது என்று தெரிந்தால் போதும். படித்துக்கூட யாரும் பார்க்க மாட்டார்கள். உடனே கிழித்துக் குப்பையில் போட்டு விடுவார்கள். தந்தி வந்தால் அப்படிச் செய்யமுடியுமா? மகளுக்கும் அதற்குமேல் தாய் வீட்டில் இருக்கப் பிடிக்காது. கிளம்பி வந்துவிடுவாள். சில சமயம் உண்மை தெரிந்து கொண்டு போகலாமென்று மாப்பிள்ளை வீட்டுக்குப் பக்கத்துத் தெருவில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு 'டிரங்க் கால்' போட்டுக் கேட்பார்கள். அவர் மாப்பிள்ளை ஆபீசுக்குப் போன் செய்வார்.

''ஹலோ! ராமசந்திரன் இருக்கிறாரா?''

''ஒரு நிமிஷம் லைனில் இருங்கள், பார்க்கிறேன்!''

கொஞ்ச நேரத்தில்—

''ஹலோ!''

''ஹலோ ராமசந்திரனா?''

''இல்லையே, என்ன விஷயம் சொல்லுங்கள்,''



''என்ன இல்லையே! பேசுவது ராமசந்திரன்தான் என்று குரல் நன்றுகக் காட்டிக்கொடுத்து விட்டதே! இப்படித்தான் தந்தி கொடுப்பதா? நாங்க எவ்வளவு கவலைப்பட வேண்டியிருக்கிறது. ஊரிலிருந்து அவர்கள் 'டிரங்க் கால்' போட்டுக் கேட்கிறுர்கள்.''

''போடும் கடிதங்களுக்கெல்லாம் பதிலே இல்லையென்ருல் என்ன செய்வதாம்?''

''என்ன பதில்? அவளேதான் (சீதை) காலையிலே கிளம்பி வந்து கொண்டிருக்கிருளாம். கிளம்பிய பிறகு தந்தியும் போயிருக்கிறது!''

''தந்தி கிடைத்த பிறகுதான் கிளம்பியிருப்பாள்! அவர்கள் பொய் சொல்கிருர்கள்! வேலை விஷயத்திலும் இதேபோல்தான் ஒண்ணரை வருஷமாக என்னை ஏமாற்றுகிருர்கள்!''

மாலை ஒரு மணி நேரம் 'பர்மிஷன்' போட்டுவிட்டு முன்னதாகக் கிளம்பி வீடு சென்று மனைவி வந்து விட்டாள் என்று தெரிந்ததும் 'வேலை கிடைத்து விட்டதா?' என்று பழைய பல்லவியை ஆரம்பித்தார்,

இந்த அழகில் மனைவி கர்ப்பமாக இருக்கிருள் என்றும் தெரிய வந்தது. தாய் வீட்டுக்குச் செல்லும் போதே சந்தேகமாக இருந்தது. இப்போது மூன்று மாசம் என்று தெரிந்து கொண்டார்.

இப்படிக் கணவனும் மனைவியும் எலியும் பூனையுமாக இருந்தால் என்ன செய்வது? கர்ப்பம் தரித்திருக்கும் சமயத்தில் பெண்களுக்குச் சற்று மன நிம்மதி வேண்டும். இல்லாவிட்டால் பல தொல்லைகள் தாம். இதெல்லாம் கட்டின கணவனுக்குத் தெரிய வேண்டும். தெரியா விட்டால் .. ? தெரிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பம், சோதனை வரும்போது, தானுகத் தெரிகிறது.

காலையில் ஆபீசுக்குக் கிளம்பும் நேரத்தில் மனைவியின் உடல்நிலை சரியில்லை. கர்ப்பச் சிதைவு ஆகிவிடும் நிலை. இப்போது ஒத்தாசைக்கு யாரைக் கூப்பிடுவது? தவித்துத் தண்ணியாகி விட்டார் மாப்பிள்ளை. ஏதோ அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் இந்தச் சமயத்தில் தாமாகவே உதவிக்கு வந்து மருத்துவ மனையில் சேர்த்து விட்டுப் போய் விட்டார்கள். அப்புறம்? முன் அநுபவம் இல்லாததால் என்ன ஆகுமோ, ஏதாவது ஆகக் கூடாதது ஆகி விட்டால் என்ன செய்வது என்ற தவிப்பு. தந்தி, தபால், போன் கால் என்று வேண்டியவர்களுக்கெல்லாம் தகவல் பறக்கிறது. ஆனுல் யார் இதை நம்புவார்கள்? 'எப்படியோ இனி அபாயம் இல்லை. கவலைப்பட வேண்டாம். வேண்டிய ரத்தம் ஏற்றியிருக்கிறேம்!' என்று டாக்டர்களின் ஆறுதல் வார்த்தைகள் கிடைத்த பிறகு, உண்மை நிலை என்ன என்று அறிய வேண்டி, நெருங்கிய உறவினர், மனைவி வீட்டார் சிலர் தலை காட்டினுர்கள்.

இப்படி ஒரு நெருக்கடி வந்த போதுதான் மாப்பிள்ளை தாம் செய்த தவறு என்ன என்பதை உணர்கிருர். மேலும் கொஞ்ச நாட்களாக மனைவிக்கு வேலை கிடைக்கத் தாமும் முயற்சி எடுத்துக் கொண்டபோதுதான் உண்மை நிலை புரிகிறது.

இந்தக் காலத்தில் வேலை கிடைப்பது கஷ்டந்தான். ஆனாலும் தீவிரமாக இறங்கினால் தன்னால் தன் மனைவிக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து விட முடியும் என்ற எண்ணம் மாப்பிள்ளைக்கு இருந்தது. இனி அவர்களை நம்பிப் புண்ணியமில்லை என்ற முடிவுக்கு வந்தார். அவருக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் கூறிய யோசனை சரியாகப்பட்டது. இந்தக் காலத்தில் லஞ்சம் இல்லாமல் எக்காரியமும் நடக்காது.

மறுநாள் ஆபீசுக்கு லீவு போட்டு விட்டுக் குறிப்பிட்ட ஆசாமியைப் பார்த்துச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை முறைப்படி செய்து முடித்த பின்னரே வீடு திரும்பினார்.

''உங்க அப்பாவும் அண்ணனும் கையாலாகாதவர்கள். வாயால் பேசிக் கொண்டிருந்தால் காரியம் நடந்து விடுமா? அதற்கு யாரைப் பிடிக்கவேண்டும்? என்ன செய்ய வேண்டும் என்று என்னைக் கேட்டிருந்தால்கூடச் சொல்லியிருப்பேனே! இன்னும் மூன்றே மாசத்தில் வேலை உன்னைத் தேடி வருகிறது, பார்! அதற்கு வேண்டியதை நானே செய்து விட்டு வந்திருக்கிறேன்'' என்று தன் மனைவியிடம் பெருமையடித்துக் கொண்டார்.

மூன்று மாசம் என்ன, மாப்பிள்ளை சொல்லி வைத்து முப்பது நாட்கள் கூட ஆகவில்லை. அதற்குள் வேலைக்கான உத்திரவைத் தபால்காரர் கொடுத்து விட்டுச் சென்றார்.

வேலை கிடைத்துவிட்டதில் அனைவருக்கும் சந்தோஷமே! ஆனால் மாப்பிள்ளை தம்மால்தான் வேலை இவ்வளவு சீக்கிரம் கிடைத்தது என்று சொல்லி வெளியே பெருமைப் பட்டுக் கொண்டாலும் உள்ளூர அவருக்குச் சற்று உறுத்திக்கொண்டுதான் இருந்தது.

அவர் போய்ப் பார்த்த பெரிய மனிதர் அதற்கு மறுநாளே ஊருக்குச் செல்லவிருப்பதாகவும் ஒரு மாசம் கழித்து வந்து விடுவார் என்றும் எப்படியும் உடனே கவனிப்பதாகவும் தான் சொல்லிப் போனார். அவரோ இன்னும் ஊரிலிருந்து வந்தபாடில்லை. அப்படியிருக்கும்போது—

பெண் வீட்டார் தாங்கள் இரண்டு ஆண்டுகளாகச் செய்த முயற்சியின் பலன்தான் இப்போது வேலை கிடைத்திருக்கிறது என்று நிச்சயமாக நம்பினார்கள். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. மாப்பிள்ளையால்தான் வேலை கிடைத்தது என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள்.

முன்போலில்லாமல் இப்போதெல்லாம் பெண்— மாப்பிள்ளையின் வாழ்க்கை சுமுகமாக ஓடிக் கொண்டிருந்ததில் அனைவருக்கும் சந்தோஷமே!

சமயம் வரும்போது அந்தப் பெண் சீதா, ''அவசரப்பட்டு அவசியமின்றிப் பாழ் போவது போல் வேலைக்காகப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு வந்தீர்களே, அந்த மாதிரி ஏதேனும் முந்திரிக் கொட்டை போல் செய்து வைக்காதீர்கள்'' என்று அன்பாகக் கடிந்து கொள்வாள் கணவனை. மாப்பிள்ளையும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் குற்ற உணர்வு குறுகுறுக்கப் பேசாமல் போய் விடுவார்.

பேறுகால விடுப்பு எடுத்துக் கொண்டு பிரசவத்துக்காகத் தாய் வீடு சென்றிருந்தாள் சீதா. ஒரு நாள் தந்தி வந்தது மாப்பிள்ளைக்கு, அவருக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதாக. இப்போதெல்லாம் மாப்பிள்ளை மிடுக்கு எல்லாம் எங்கோ மறைந்து விட்டது.

ஒரு பெண் குழந்தைக்குத் தகப்பனாகி விட்டோம் என்ற பொறுப்பும் காரணமாக இருக்குமோ! ✱

21850

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் நல்வாழ்த்துக்கள்!

தாஜ்மஹால்

சூப்பர் பைன்

மணநிறைவு தருவது

தரத்தில் சிறந்தது

ஸ்பெஷல் புகையிலை

உரிமையாளர்கள்:

மீ. ந. அ. முகம்மதுசூல்தான் & சன்ஸ்

போன்: 528 :: தபால் பெட்டி எண்: 29

புதுக்கோட்டை 622 001 :: தமிழ்நாடு.

CAS SACL 20 84-B TAM

எல்லா பண்டிகைகளுக்கும்
திருமணங்களுக்கும்
பொருத்தமானவை சாரதா'ஸ்
பட்டுப் புடவைகள்
எண்ணற்ற வண்ணங்களிலும், கற்பனைக்கு
எட்டாத டிசைன்களிலும் சிறந்த பட்டுப்
புடவைகளை உங்களுக்கு நியாயமான
விலையில் அளிப்பதில் பெருமை
கொள்கிறது சாரதா'ஸ்.
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 871
N.S.B. ரோடு
திருச்சி-620 002